திருமூலர்

அருளிய

திருமந்திரமாலை முந்நூறு

(உரையும் — விளக்கமும்)

சித்தாந்தப்புலவர் வித்துவான்
திரு ந. சிவப்பிரகாச தேசிகர்

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
1930

திருமூலர்

அருளிய

திருமந்திரமாலை முந்நூறு

(உரையும்—விளக்கமும்)

சித்தாந்தப் புலவர் வித்துவான்

திரு. ந. சிவப்பிரகாச தேசிகர்

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

1990

முதற் பதிப்பு – 1976

இரண்டாம் பதிப்பு – 1990

© அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

திருப்பனந்தாள் நிதிய வெளியீடு

திருமூலர் அருளிய திருமந்திரமாலை முன்நூறு

Thirumular Arulia Thirumanthiramalai Munooru

விலை: Rs. ரூபாய் இருபது

அச்சிட்டோர்

சபாநாயகம் பிரிண்டர்ஸ்,

கீழவீதி சிதம்பரம்

அணிந்துரை

டாக்டர் ஆறு. அழகப்பன்,
இந்திய மொழிப் புல முதன்மையர்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

'மறைமொழிதானே மந்திரம் என்ப' என்னும் வழக்கு மந்திரம் என்பது மறைத்துப் பேசப்படுவது என்னும் பொருளைத் தரும். கி. பி. ஐந்தாம் நூற்றாண்டவராகக் கருதப்பெறுபவர் திருமூலர். இவர் இயற்றிய நூலைத் தமிழ்மாலை மூவாயிரம் எனச் சேக்கிழார் குறிப்பிடுவதால் தமிழ் என்னும் பெயர் தாங்கிய ஒரே நூல் திருமந்திரமே என்பது மனங்கொள்ளத்தக்கது. திருமந்திரம் மூவாயிரம், முந்நூறு, மூன்று என்று வேறுபாட்டுடன் கூறப்படினும், இம்மூன்றையும் திருமூலர் ஒருவரே செய்தார் என்பது முடிந்த முடிபாக அறிஞர் பெருமக்களால் ஏற்றுக்கொள்ளப்பெற்றுள்ளது.

'திருமந்திரம் முந்நூறு' என்னும் தொகை கொண்ட பகுதியே அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீட்டுத் துறையில் மறு பதிப்பாக வெளிவருகின்றது. இதன்கண் எட்டுவகை அமைப்புக்கள் விளக்கப்பட்டுள்ளன. அவை (1) வசிப்பு வினை, (2) மயக்க வினை, (3) கட்டுவினை, (4) போக்குவினை, (5) அழைப்புவினை, (6) பகைப்புவினை, (7) மாற்றுவினை, (8) கொல்லுதல் வினை என்பவை. இவற்றைச் செய்வதற்குரிய மந்திர, தந்திர, யந்திரங்களை இந்நூல் விரிவாகப் பேசுகின்றது. இத்தகைய நூல்களைப் பதிப்பிப்பதற்குத் தகுதியுடைய ஒருவரைக் காண்பது இப்போது அரிதாகும். அவர் தமிழும், வடமொழியும், மந்திரங்களும் அறிந்தவராக இருத்தல் வேண்டும். அத்தகைய ஒருவர் அமரர் ந. சிவப்பிரகாச தேசிகர் அவர்கள். இவர் கற்றுத் துறைபோயவர் என்பதை, இந்நூலின் பல இடங்களிலும் அறியலாம். எந்த ஒரு செய்தியையும், தம் புலமைதோன்றக் காட்டியுள்ள இவர் திறம் போற்றற்குரியதாகும். சுருங்கக் கூறினால் தமிழ் மக்கள் செய்தவப்பயனால் அறிஞர் சிவப்பிரகாச தேசிகர் இந்நூலைப் பதிப்பிக்க நேர்ந்தமையாகும். விளக்கம்தர வேண்டிய இடங்கட்குத் தம் பரந்துபட்ட இலக்கிய, இலக்கண, மந்திரப்புலமையால் இவர் கூறியுள்ளமை அறிஞர் உலகம் நினைந்து பாராட்டற்குரியவை.

சுமார் இருபது ஏடுகளை ஒப்பு நோக்கியும், உரைவகுத்தும், உரிய இடங்களில் கட்சபுடம், கட்சபுட தந்திரம் போன்ற வடமொழி மந்திரநூல்களில் கூறப்பெற்ற கருத்துக்களை ஒப்புமை காட்டியும் இவர்கள் இந்நூலுக்குப் பதிப்புத் திறம் காட்டியுள் ளார்கள். ஏடு பதிப்பிப்போர்க்கு இந்நூல் ஒரு முன்மாதிரியாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. மந்திரம் வல்லார்கள் இந் நூலைப் பெரிதும் வரவேற்கின்றனர். எனவே இதன் மறுபதிப்பு இன்றியமையாததாயிற்று.

திருப்பனந்தாள் காசிமடத்து நிதியத்திலிருந்து இந்நூல் முன்பு வெளியிடப்பெற்றது. இப்பொழுது வருகின்ற இம்மறு பதிப்பும் அந்நிதியத்திலிருந்தே வெளியிடப்படுகின்றது என்பது மகிழ்தற்குரியது. அவ்வகையில் அம்மடத்து அதிபர் தவத்திரு. முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகட்கு என் வணக்கமும் நன்றியும் உரியதாகும்.

தமிழைத்தம் மூச்சாகவும், தமிழிசையைத் தம் பேச்சாகவும் போற்றிய பெருங்கொடைவள்ளல் அரசர் அண்ணாமலையார்க்குத் தமிழ் மக்கள் சார்பில் என் நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

தமிழிசை தழைக்கத் தலைநகர் மட்டிலும் மன்றம் போதாது, தமிழ் மதுரையும் வேண்டுமெனக் கருதி மன்றம் நிறுவிய அரசர் முத்தையா அவர்களின் பெருமையினை நினைந்து அவர்கட்கு என்நன்றியை உரித்தாக்குகிறேன்.

உள்ள நலத்துடன் உடல் நலமும் பேணப்படவேண்டும் என்னும் நோக்கோடு மருத்துவத்துறைகள் பலவற்றையும், நினைந்து வளர்த்துவரும் மாண்பமை இணைவேந்தர் டாக்டர். எம். ஏ. எம். இராமசாமி அவர்கட்கும் என் நன்றியைக் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்வளர்ச்சிக்கு மாண்பமை துணைவேந்தர் டாக்டர். தி. சி. மோகன் அவர்கள் உற்றுழி எல்லாம் உதவுகின்ற இயல் புடையவர்; அவர்கட்கும் என் நன்றி உரித்தாகும்.

பிழைதிருத்தம் செய்தும், முதற்குறிப்பகராதி போன்ற வற்றைத் தொகுத்தும் அளித்த இணைப்பேராசிரியர் டாக்டர். சு. சாமிஐயா அவர்கட்கு என் பாராட்டுதல்கள்.

அண்ணாமலைநகர்
16—8—90

ஆறு. அழகப்பன்

முதற்பதிப்பின் பதிப்புரை

மந்திரம் என்பது தொல்காப்பியம் கூறும் எழுவகைச் செய்யுட்களுள் ஒன்று ஆதலின் இதன் தொன்மையும் தமிழ்த் தோற்றமும் பரந்த வழக்கும் பெறப்படும். மந்திரம் என்பதன் பொருளை,

> நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
> மறைமொழி தானே மந்திரம் என்ப (1422)

என்ற நூற்பாவால் தொல்காப்பியம் விரித்துக் காட்டியுள்ளது. பாட்டு உரை முதலான ஏனைச் செய்யுட்களைச் செய்வார்க்கு உரிய தகுதியை இந்நூல் சுட்டவில்லை என்பதும் மந்திரம் ஒன்றிற்கே அதனை மொழிவார் நிறைமொழி மாந்தராக இருப்பார் எனத் தகுதி சுட்டுகின்றது என்பதும் நினையத்தகும். இதனைத் தழுவியே திருவள்ளுவர் 'நிறை மொழிமாந்தர் பெருமை' என மொழிகுவர். இம்மந்திரங்களை நிறைமொழி யாளர்களே என்றும் கூற வேண்டுவதில்லை; அவர் தம் ஆணை பெற்ற வழியினரும் கூறலாம் என்ற கோட்பாடும் இந்நூற்பா வினாற் போதரும். பண்டைக்காலத்து மந்திரம் எழுதாக் கிளவி யாக இருந்தது; வழி வழி குரு மாணாக்கன் முறையில் கற்பிக்கப் பட்டு வந்தது. ஆதலின் மந்திரத்தை 'வாய்மொழி' (1336) என்ற வேறொரு பெயரானும் தொல்காப்பியம் கூறும். வாய்மொழி என்பது வாய்வழக்காக வரும்மொழி என்ற பொருளோடு பரிமேலழகர் எழுதியதுபோல, அருளிக் கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வப்பொருளைத் தரும் தப்பாத மொழி என்ற பொருளையும் தருதல் உணரப்படும்.

மந்திரம் என்றால் நினைப்பவரைக் காப்பது எனப் பொருள் கூறுவர். இப்பொருட் குறிப்பைத் தொல்காப்பியரும் திருவள்ளுவரும் 'மறைமொழி' என்ற தொடரால் சுட்டக் காணலாம். மறை என்ற சொல் புறத்தார்க்குப் புலனாகாமல் மறைத்தல் என்ற பொருளோடு, இடையூறு நீக்கிக் காத்தல் என்ற பொருளையும் தரும். இதற்கு 'மறைக்குவன் பெரும' என்ற (புறம் 290) தொடரும், 'குற்றம் மறைப்பான் உடம்பு' (திருக்குறள் 1029) என்ற தொடரும் சான்றாவன.

'பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முதுசொலோ டவ்வேழ் நிலத்தும்
வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பெயர் எல்லை அகத்தவர் வழங்கும்
யாப்பின் வழிய தென்மனார் புலவர்' (1336)

என்ற நூற்பாவினால் ஏனைய ஆறும் போல வாய்மொழி எனப் படும் மந்திரச் செய்யுளும் தமிழ் நிலத்திற்கு உரியது என்பது தெளிவு. 'மறைமொழி தானே மந்திரம் என்ப' என்னும் தொடரில் 'தானே, என்ற ஏகாரம் பிரிநிலைப் பொருள் தருவது எனவும் இவை தமிழ் மந்திரம் ஆம் எனவும் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் துணிவு செய்திருப்பக் காண்கின்றோம். இவ்வுரையாசிரியர் எல்லாம் மந்திரத்தின் தன்மையை எழுதாமல் இவை வல்லார் வாய்க் கேட்டுணர்க என்று ஒருமுகமாகக் கூறுவ திலிருந்து மந்திரச் செய்யுளின் மேன்மை பெறப்படும். இவை இலக்கண இலக்கியப் புலமையுடையோர் அறியும் தரத்தனவல்ல என்பது கருத்து. எனினும் தமிழ்க் காப்பியங்களில் மந்திரம் பற்றிய குறிப்புக்களும் அவற்றின் வியத்தகு பயன்களும் தொலைக்கல்போல ஆங்காங்கு வருகின்றன. கோவலன் பாய் கலைப்பாவை மந்திரம் அறிந்தவன் எனச் சிலப்பதிகாரமும் மணிமேகலை மூன்று மந்திரங்களை அறிந்தவள் என மணிமேகலைக் காப்பியமும் கூறுகின்றன. மந்திரம் பற்றிய கல்வி யறிவு தமிழ் நூல்களில் சிலவிடங்களை நன்முறையில் விளங்கிக் கொள்ளத் துணை செய்யும். ஆதலின் இவ்வறிவு இலக்கியம் கற்பார்க்கும் ஓரளவு வேண்டும் என்பது தானே போதரும்.

தொல்காப்பியத்துக்கு முன்பிருந்தே வாய்மொழியாக எழுதாக் கிளவியாக இருந்த தமிழ் மந்திரத்தை முதற்கண் கலிவிருத்தத்தால் எழுதித் தமிழ் மண்பதைக்கு நிலையாக வழங்கிய அருளாளர் திருமூலரேயாவர்.

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே

என்கிற திருமந்திரத்தால் இவ்வுண்மை புலனாம்.

கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் திருமந்திரங்களைத் திருமூலர் செய்யுள் வடிவில் எழுதிப் போந்தமையாற்றான் இடைக் காலத்தில் தோத்திர சாத்திர நூல்கள் பல்வேறு வளம் பெற்றன என்ற இலக்கிய வரலாற்றை நாம் உணர வேண்டும்.

இவ்வகையில் திருமூலர் சமய இலக்கியத் தந்தை என்ற பாராட்டுக்கு உரியவர் ஆகின்றார். ஏனைய திருமுறைகளும் மெய்கண்ட நூல்களும் இத்தமிழ்த் திருமந்திர மாலையின் வழி வந்தவை என்ற கோட்பாட்டினை ஆசிரியர் வெள்ளை வாரணனார் பரந்து விரிந்த தம் பன்னிரு திருமுறை வரலாற்று ஆராய்ச்சியில் ஒப்புமைகள் காட்டி நிறுவியிருத்தமையும் காண்க.

மூலன் உரைசெய்த மூவா யிரந்தமிழ்
மூலன் உரைசெய்த முந்நூறு மந்திரம்
மூலன் உரைசெய்த முப்பது உபதேசம்
மூலன் உரைசெய்த மூன்றும் ஒன்றாமே

என்ற ஒரு திருமந்திரச் செய்யுளால் (3046) திருமூலர் 3000, 300, 30 என்று மூன்று நூல்கள் செய்தனர் எனவும்; அவை எண்ணிக் கையில் மூன்றாயினும் பொருளால் ஒன்று எனவும் அறிகின்றோம். திருமந்திர மூவாயிரத்தில் உள்ள 'ஐந்து கரத்தனை' என்ற விநாயக வணக்கச் செய்யுளே இந்நூலுக்கும் கடவுள் வாழ்த்தாக இருப்பதனால் இம்மூன்று நூலும் ஒன்றே என்ற உண்மை வலுப் படுமாறு அறியலாம். இவை மூன்றும் திருமந்திரமாலை என்ற பொதுப்பெயரால் வழங்கப்படுதல் உண்டு. இவற்றுள் நடுவண தாகிய திருமந்திர முந்நூறு இப்போது முதற் பதிப்பாக அரிய நுண்ணிய குறிப்புக்களோடு வெளியிடப்படுகின்றது. மந்திரநூல் வல்லாரிடத்தும் அருகி மறையும் நிலையிற் கிடந்த இத்திரு மந்திரத்தைக் கிடைக்கும் ஏட்டுச் சுவடிகளொடு ஒப்பிட்டுப் பல்கலைக் கழகப் பதிப்பாக வெளியிட வேண்டும் என்ற விருப்பம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் திரு தி. மூ. நாராயணசாமி பிள்ளை அவர்களின் உள்ளத்தே தோன்றியது. திருமந்திரநூலில் வழிவழி ஈடுபாடு கொண்ட மரபில் வந்தவரும் சிதம்பரம் உலகமூர்த்தி தேசிகர் திருமடத்தின் ஆசிரியருமான சித்தாந்தப் புலவர் வித்துவான் ந. சிவப்பிரகாச தேசிகர் இப்பணிக்கெனத் தமிழாராய்ச்சித் துறையில் விரிவுரையாளராக அமர்வு பெற்றனர். தேசிகர் அவர்கள் மகாமகோபாத்தியாய உ. வே. சாமிநாதையரவர் களின் மாணாக்கர் என்பது குறிப்பிடத்தகும்.

தேசிகர்தம் மாமனார் திருப்பூர் இராசுதேசிகர் என்னும் குமார சுவாமி தேசிகரிடமிருந்த நிறைவான ஏட்டுச்சுவடி இரண்டினையும் கையெழுத்துப் படியினையும் அடிப்படையாகக்

கொண்டு தஞ்சை சரசுவதிமால் சென்னை அரசினர் கையெழுத்து நூல்நிலையம், அடையாறு சாமிநாதையர் நூல்நிலையம், கடலூர் தேவராச முதலியார், சிதம்பரம். அம்பலத்தாடுமையர் மடம், கொற்றவன்குடி முதலிய இடங்களிற் கிடைத்த பல சுவடிகளையும் ஒப்புநோக்கி இந்நூல் பதிப்பிக்கப் பெறுகின்றது.

திருமந்திரம் முந்நூறு என்ற இந்நூல் தந்திரகலை, மந்திர கலை, உபதேசகலை என்ற முக்கூறுபாட்டில் தந்திரகலைப் பகுதியைச் சார்ந்தது. தெய்வவழிபாட்டிற்குரிய கன்மங்களையும் நான்கு நெறிகளுள் சரியை கிரியை என்ற இரண்டினையும் கூறுவது தந்திரகலையாகும். இக்கலை மந்திரம் இயந்திரம் தந்திரம் என மூன்று பாகுபாடு பெறும். இந்நூல் 372 செய்யுட் களும் மூன்று தந்திரங்களும் (தந்திரம் உட்பிரிவு) உடையது. முதல் ஐந்து செய்யுட்களில் கடவுள் வாழ்த்தும் மூலமந்திரமும் நூல் நுதல் பொருளும் கூறப்பெற்றுள. 6-62 எண்ணுள்ள செய்யுட்கள் 1. வசிப்புவினை, 2. மயக்கவினை 3. கட்டுவினை, 4. போக்குவினை, 5. அழைப்புவினை 6. பகைப்புவினை, 7. மாற்றுவினை, 8. கொல்லுதல்வினை என அட்டகன்மம் எனப்படும் எண்வகை வினையேவல்களையும், அவற்றிற்குரிய சக்கரங்களை வரையும் முறையினையும் துருவ அறைகளையும் தெய்வங்களையும் நாள்கோள்களையும் எழுத்துக்கள் உடலில் உறுப்புக்களாகப் பொருந்தியிருக்கும் முறையினையும் விரித்துரைக் கின்றன.

அகராம் திருமுடி ஆகாரம் நெற்றி
இகராம் வலக்கண் ஈகாரம் இடக்கண்
உகாரம் வலச்செவி ஊகாரம் வாமம்
ருகாரம் வலமூக்கு ரூகாரம் வாமமே

என்பது 51 ஆவது திருமந்திரம். 51 எழுத்துக்கள் உறுப்புக்களில் இடம் பெற்றிருக்கும் முறையைக் கூறத் தொடங்கும் திருமந்திரச் செய்யுளின் எண்ணும் 51 ஆக இருப்பது மகிழ்ச்சி தருகின்றது.

இரண்டாம் தந்திரம் 63-332 செய்யுட்களைக் கொண்டது. இதன்கண் எட்டு ஏவல் வினையின் 45 வகைகளும் 323 விரிவு களும் அவற்றின் இலக்க எண்களும் இயந்திரம் வரைதற்குரிய பொருள்களும் பொதுமந்திரங்களும் சிறப்பு மந்திரங்களும் விரிவாக மொழியப்பட்டுள,

பொதுவியல் எனப்படும் மூன்றாம் தந்திரம் 333-373 செய்யுட்கள் உடையது. எண்வகைக் கன்மங்கட்கு உரிய இறைவியின் மேனி நிறங்களும் தியானத்துக்குரிய சிவபெருமானின் திருவுருவமும் எட்டுச் சக்திகளின் தியானத் திருவுருவங்களும் அவர்களின் செயல்களும் இறைவி இறைவனின் சக்கரத்தன்மைகளும், இயந்திரங்களைத் தியானிக்கும் முறைகளும் பூசைப் பொருள்களும் இயந்திரத்தைச் சுற்றிப் பிணிக்கும் நூலிழைகளின் எண்ணிக்கையும் முத்தியளிக்கும் மந்திரத்தின் பயனும் வரன் முறையாக இந்தப் பொதுவியலில் சொல்லப்பட்டுள.

தமிழ்த் திருமந்திரங்களை அறிவாரும் அறிய முயல்வாரும் அறிவிப்பாரும் அருகிவரும் இத்தமிழகத்தில், நிழலில் நீளிடைத் தனி மரம்போல நம்மிடை வாழ்ந்துவரும் சைவசமயப் பெரியவர் சிவப்பிரகாச தேசிகர் அவர்கள் வழிவழிப் பயிற்சியானும் ஆழ்ந்த இலக்கண இலக்கிய சமய நூற்பயிற்சியானும் யாவரும் மந்திர அடிப்படைகளைப் புரிந்து கொள்ளும் வண்ணம் ஒவ்வொரு மந்திரச் செய்யுட்கும் விளக்கம் தந்திருப்பது நன்றிக்குரியதாகும். முதலிரண்டு செய்யுட்கும் எழுதிய விரிவுரை 175 பக்கம் உடையது. இப்பகுதியில் தமிழ் மந்திரங்களின் வரலாறு, சிறப்பு, மந்திர வகைகள், இயந்திர வகைகள், தந்திரகலையின் எட்டு வினைகள், வித்தைகள், சிதம்பரத்தின் பெயர்கள் என்ற அடிப்படைக் கூறுகளையும் அவற்றிற்கு வடமொழி நூல்களிலிருந்தும் தொல்காப்பியம் முதலாகத் தமிழ் நூல்களிலிருந்தும் அளவிறந்த மேற்கோள்களையும் தந்துள்ளனர். இப்பொதுவறிவு திருமந்திரங்களைக் கற்பார்க்கு எளிமையும் துணைமை செய்கின்றது. பல சுவடிகளைப் பார்த்துப் பாடபேதங்கள் தந்து மூலத்தையும் மந்திரங்களையும் செம்மைப்படுத்தியிருப்பதும் ஒவ்வொரு செய்யுட்கும் தலைப்பு கருத்து குறிப்புரை விளக்கம் மேற்கோள் எழுதியிருப்பதும் தேசிகரின் தனிப்புலமையை வெளிப்படுத்துவதோடு கற்பவரைத் தன்பால் ஈர்க்கும் தன்மைத்தாகவும் உள்ளது. 'ககராதி ஓரைந்தும் காணிய பொன்மை' என்ற திருமந்திரந்தான் முதல் திருமந்திரமாக இருத்தல் வேண்டும் எனவும் 'முடிந்த இம்மந்திரம்' என்ற செய்யுள் பல சுவடிகளில் முதலாவதாக இருப்பினும் அது இரண்டாவதாக இருப்பதுவே பொருத்தம் எனவும் பொருளியையும் தொடையியையும் நோக்கித் தேசிகர் ஐயா செய்திருக்கும் மாற்றம் ஏற்புக்குரியது. இதற்கு 11-ஆம் எண்ணுடைச் சுவடி சான்றும் ஆகும். பெருமைப்படக்

கூறின், தேசிகர் விரிவுரையொடு கூடிய இம்மந்திரப் பதிப்பு இலக்கியம் படிப்பது போன்ற உணர்வை பயக்கின்றது என்று சொல்லலாம். ஆதலின் தமிழறிஞர் உலகம் தேசிகர் ஐயாவுக்கு மிகவும் நன்றிக்கடப்பாடுடையது.

திருப்பனந்தாள் அருள்மிகு காசிமடத்தின் தலைவர் தவத்திரு. காசிவாசி சாமிநாதத்தம்பிரான் சுவாமிகள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நிறுவியுள்ள அறக்கட்டளையின் உதவியினால் இத்திருமந்திர நூல் வேண்டுவார்க்கெல்லாம் எளிய விலையில் கிடைக்கும்படி வெளியிடப்பெறுகின்றது. சைவப்பயிர் வளர்வான் அறக்கட்டளை நிறுவிய தவத்திரு தம்பிரான் சுவாமிகட்கும் அவர்கள் வழி வந்து அருட்பணிபுரியும் தவத்திரு காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கட்கும் பல்கலைக்கழகத்தின் வணக்கம் உரியதாகும்.

பல்துறையில் தமிழ் வளம் பெருகத் தனித்த பெருங்கொடையில் பல்கலைக்கழகத்தை நிறுவிய வள்ளல் அண்ணாமலை அரசர் அவர்கட்கும் தந்தைபோல் தமிழின்பாலும் தமிழ்ப் புலவோர் பாலும் பற்றும் மதிப்பும் உடைய இணைவேந்தர் அரசர் முத்தைய செட்டியார் அவர்கட்கும் தமிழ் மக்களின் நன்றி பெரிதாகும். இத்திருமந்திர நூல் தமிழ் நிலத்தில் பதிப்புடம்பு பெற்று மக்கள் கைக்கு அணியாக விளங்கும் வண்ணம் ஏற்பாடுகள் செய்த முன்னாள் துணைவேந்தர் உயர்திரு. தி.மு. நாராயணசாமி பிள்ளை அவர்கட்கும் பதிப்புச் செம்மைக்கும் விளக்கத்திற்கும் தேசிகர் அவர்கட்கு உறுதுணையாக இருந்த தமிழ்த்துறை ஆசிரியர் திரு. க. வெள்ளைவாரணன் அவர்கட்கும் நம் உளமார்ந்த நன்றி.

அண்ணாமலைநகர்

1—4—1976

வ. சுப. மாணிக்கம்

தமிழ்ப்பேராசிரியர்,

உள்ளுறை

பக்கம்

1,	மங்கல வாழ்த்து	1
2.	தோற்றுவாய்	2
3.	தந்திர கலைப்பகுதி	4
4.	திருமந்திர மாலை	6
5.	மந்திர வகைகள்	19
6.	இயந்திர வகை	37
7.	திருமூலர் திருமந்திர யாப்பு	52
8.	சித்திகளின் வகை — எண்கருமம்	69
9.	ககராதி மூவித்தை	90
10.	சிதம்பரத்தின் வேறு பெயர்கள்	128
11.	தில்லைத் திருச்சிற்றம்பலக்கூத்து	140
12.	நூல்நுதல் பொருள்	168
13.	முதலாம் தந்திரம் - மந்திர யந்திரவியல்	175—274
14.	இரண்டாம் தந்திரம் - எண்வினை ஏவல் இயக்கவியல்	274—848
15.	மூன்றாம் தந்திரம் - பொதுவியல்	849—940
	செய்யுள் முதற் குறிப்பகராதி	941

திருமூல தேவநாயனார் திருவடிப் மலர்ந்தருளிய
தந்திரகலைப்பகுதி ஆகிய

திருமந்திர மாலை

முந்நூறு

மூலமும் உரையும்

முதல் தந்திரம்

1. மந்திர இயந்திர இயல்.

முதல் அதிகாரம் – பாயிரம்.

மங்கல வாழ்த்து

விநாயகர் காப்பு.

மூலம் – மூல பாடம்.

கொச்சக ஒருபோகு.

திருச்சிற்றம்பலம்.

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

பாடபேதம் – பிரதிபேதம்

[எண்கள் – அடிகளின் எண்களைக் குறிக்கும்]

தலைப்பு: திருமந்திரம். திருமூலத்தம்பிரான் திருவடிகளே சரணம்

1. அய்ந்து கரத்தனை; அய்ந்து நிறத்தனை; அந்தி நிறத்தனை; ஐந்து முகத்தனை; அய்ந்து சிரத்தனை; ஆனை.
2. இந்து விளம்பிறை; இந்து மிளம் பிறை; இந்தி ளம்பிறை.
3. ஞானக் கொழுந்தனை; நாதக் கொழுந்தினை.
4. புந்தி வைத்தடி. போற்றுகின்றோமே; போற்றுவன் யானே; போற்றுவேன் நானே; போற்றுவம் யாமே; போற்றுவம் நாமே; போற்றுவோம் யாமே.

தோற்றுவாய்

திருக்கயிலை மலையில் வீற்றிருந்தருளும் **திருநந்திதேவர்** பாற் பெற்றருளிய அருமறை ஆகம முதனூல்களிற் பரந்தும், இலைமறைகாய்கள்போற் கரந்தும் உள்ளனவாகிய விழுமிய பொருள்கள் எல்லாவற்றையும் சில்வாழ் நாட் பல்பிணிச் சிற்றறிவினராயுள்ள மக்கள் பொருட்டுத் **தொகுத்து**, நான் பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம் என்றெழுந்த பெருங் கருணையினாலே, தாம் பெற்ற பேற்றை இவ்வுலகமும் பெற்று உய்வான்வேண்டி அம்முதல் நூலின் பகுப்பு முறைமையே போல (1) **தந்திர** கலை (2) **மந்திர** கலை (3) **உபதேச** கலை என மூன்றாக வகுத்து, முறையே அவற்றின் பயனான (1) **கன்மசித்தி** (2) **யோகசித்தி** (3) ஞானசித்தி எனப்படும் (1) **எண்கருமம்** (2) **எண்பெருஞ்சித்தி** (3) எண்குணம் ஆகிய மூவகைச் சித்தி களையும் **விரித்துச்** செவியறிவுறுத்துவான் புக்க ஆசிரியர் **திருமூலதேவர்**, "சித்தவிகற்பங் களைந்து தெளிந்த சிவயோகந் தலைநின்று, பூவலரும் இதயத்துப் பொருளோடும் உணர்ந்திருந் தார்" எனப் போற்றப் பெற்றவராதலினாலே அத்தகைய நின்மல துரியாதீத மென்னும் சாக்கிராதீத நிலையிற் பரம் பொருளுடன் நீக்கமின்றி நிற்குந் தமக்கு மூவகையால் வரும் இடையூறுகளுள் ஒன்றும் அணுகாமையை உணர்ந்தவராயினும் ஆன்றோர் ஆசாரம் பாதுகாத்தற் பொருட்டும், இந்நூல் நின்று நிலவுதற் பொருட்டும், மாணாக்கர்க்கு அறிவுறுத்தற் பொருட் டும் தாம் முதற்கண் அகத்தே செய்துகொண்டதாகிய இடையூறு நீக்குதற்குரிய கடவுளின் வணக்கத்தைத் தெரிவிப்பதாயுள்ள **மங்கல வாழ்த்தைச்** செய்யுளாற் கூறுகின்றார்.

குறிப்புரை (தலைப்புக்கள்)

திருமூலதேவ நாயனார்

ஈண்டு ஒரு சுவடியின் தலைப்பில், "திருமூலத் தம்பிரான் திருவடிகளே சரணம்" என்னுந் தொடர் காணப்படுகின்றது. இவர் தம் பெயரின் முன்னரும், பின்னரும் பல வகைப்பட்ட அடைமொழிகளுடன் கூடியும், கூடாமலும் வெவ்வேறிடங்களில் பலவாறாக இவருடைய திருப்பெயர் காணப்படுகின்றது. அவற்றுட் சில வருமாறு:-

(1) மூலர் (2) மாமூலர் (3) திருமூர் (4) திருமூல தேவர் (5) திருமூல நாதர் (6) திருமூலதேவ சிவாசாரியர் (7) திருமூல நாயனார் (8) ஸ்ரீமூலர் (9) ஸ்ரீமூல தேவர் (10) ஸ்ரீமூல தேவ சிவாசாரியர் (11) ஸ்ரீமூல தேவ நாயனார் (12) ஸ்ரீமூல நாதர் (13) ஸ்ரீமூலதேவ நாதர் (14) சதாசிவ தேவர் (15) சதாசிவ முனிகள் (16) சதாசிவதேவ சிவாசாரியர் முதலியனவாம்.

மேற்கோள்

மூலர்: "ஆரிடம் என்பது, உலகியற் செய்யுட்கு ஓதிய உறுப்புக்களில் மிக்கும் குறைந்தும் கிடப்பன எனக்கொள்க...... அவ்வாரிடச் செய்யுள் பாடுதற்குரியார் ஆக்குதற்குங், கெடுத்தற்கும் ஆற்றல் உடையராகி இம்மை, மறுமை, முக்காலப் பண்பும் உணர்ந்த இருடிகள் எனக்கொள்க... அவராவார் பொய்கையார், குடமூக்கிற்பகவனார், பூதத்தார், காரைக்காற் பேயார் மூலர் முதலியோர்.

—யாப்பருங்கலவிருத்தி-சூ93

இலைநல வாயினும் எட்டி பழுத்தால்
குலைநல வாங்கனி கொண்டுண லாகா விளையாண்
முலைநலங் கண்டு முறுவலிக்கின்ற
வினை (லை) யுடை நெஞ்சினை வேறுகொ ளீரே

—திருமந்திரம் 204,

இம்மூலர் வாக்கு மிக்கு வந்தவாறு கண்டு கொள்க-

மாமூலர் : யோகிகளாய் உபாயங்களான் முக்காலமும் உணர்ந்த **மாமூலர்** முதலியோர் **அறிவன்**றேயத்து அனைநிலை வகையோராவர்... கலச யோனியாகிய **அகத்தியன்** முதலி யோரும் அறிவர் என்று உணர்க.''

தொல். பொருள், 75. நச்

திருமூலநாதர்:''நந்தி அருளாலே **நாதனாம்பேர்** பெற்றோம்''

திருமந்திரம், 68

சதாசிவதேவர் : சதாசிவ தேவ சிவாசாரியர், **சதாசிவ** முனிகள்:-

நந்தி அருளாலே **சதாசிவன்** ஆயினேன்.

—திருமந்திரம் 92

சதாசிவதேவர் : ஞானாவரண விளக்க மாபாடியம்.

திருமூலதேவ சிவாசாரியர்

—முத்தி நிச்சயம் பாட்டு 1. பேருரை

திருமூல தேவர்க்குச் **சதாசிவ முனிகள்** என்றும் பெயர். முத்தி நிச்சயம் பாட்டு 2. பேருரை. என்பனவும் பிறவுங் காண்க.

தந்திர கலைப் பகுதி

தந்திரகலை : என்பது, தந்திர சாஸ்திரம். அதாவது, தெய்வ வழிபாட்டிற்குரிய மந்திர தந்திரங்களைப் பற்றிக் கூறும் கர்ம காண்டமாகும். இது, முதனூலின் கூறு பாடுகள் மூன்றனுள் முதலாவதாகும். **தந்திரம்**, கிரியை கன்மம் வினை என்பன ஒருபொருட் சொற்கள். **கலை**-சாஸ்திரம், நூல் ஈண்டுத் தந்திரம் என்றது, கன்மசித்தியின் பேறாயுள்ள வசியம் முதலான எண்வினை (அட்டகன் மங்) களைக் குறித்து நின்றது. தந்திரமாகிய ஆகமங்களுட் கூறப்படும் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய 4-பாதங்களுள் முதல் 2-பாதங்களும் இத் தந்திரகலையில் அடங்கும். ''தன்னை அடைந்தோரைக் காப்பதும், தத்துவ மந்திரங்களின் பொருள்களைக் விளக்குவதும்

தந்திரம் ஆகும்'' என்று ஆகமங்களில் இச்சொல்லிற்கு விளக்கம் கூறப்பட்டுள்ளது. இஃது **அதர்வண வேதத்தின்** உபவேதம் ஆகும் என்று **சுக்கிர நீதியிற்** சொல்லப்பட்டு உள்ளது. 64–**கலைகளில் தந்திரபேதம்** என்பதும் ஒன்று. அஃது, ஓரிடத்தும் வெளிப்படாத மந்திரத்தை வெளிப்படச்'செய்வது என்பர்.

—சௌந்தரியலகரி உரை

மேற்கோள் :

தநோதி விபுலாந் அர்த்தான் தத்வ மந்திர சமாசிரு தாந் – த்ராணஞ்ச குருதே யஸ்மாத் **தந்த்ரமித்** யபி தீயதே.

—காமிகம் தந்த்ராவதாரப் படலம்

உபாசிக்கப்படும் கடவுளரின் உபாசன முறைமைகளைத் தெரிவிக்கும் வேதம் **அதர்வணம்** ஆகும்... உபாசித்தற்குரிய பலவகை மந்திரங்களின் உபசங்காரத்தோடுங்கூடிய 6–வகைப் பிரயோகங்களும் அவற்றின் தரும நியமங்களோடும் சிறந்த வேறுபாடுகளோடும் எதன்கட் கூறப்பட்டுள்ளனவோ அஃது **அதருவ வேதத்தின் உபவேதமாகிய தந்திரம்** என்று கூறப்படும். (6-வகைப் பிரயோகங்களாவன: 1. சாந்தி 2. வசீகரணம், 3. தம்பனம், 4. வித்துவேடணம், 5. உச்சாடனம், 6. மாரணம் என்பன)

— சுக்கிரநீதி 4, 3 : 27, 4

மந்திர**தந்திர** வழுக்கள் வந்தவோ

—பிரபு. மாயைகோலாகல. 16.

தந்திரம் எவற்றினுஞ் சிறந்தது **சைவ தந்திரம்** எனும் அருணந்தி

— 22 : 60

இந்திரன் பிரமன் அங்கி எண்வகை வசுக்களோடும்
மந்திர மறைய தோதி வானவர் வணங்கி வாழ்த்தத்
தந்திரம் அறியாத் தக்கன் வேள்வியைத் தகர்த்த ஞான்று
சந்திரற் கருள்செய் தாருஞ் சாய்க்காடு மேவி னாரே.

— தேவாரம் 4791

இலை நவின்ற பொருள்கள் எலாம் கலங்கிடும்

— திருவாசகம் 267

என்பன காண்க. இவற்றால் இத்தந்திர கலையின் சிறப்பும் பயனும் இன்றியமையாமையும் நன்கு விளங்கும்.

திருமந்திரமாலை:

இப்பெயர் சுவடிகளில் 1 மந்திரம் 2 திருமந்திரம் 3 திருமந்திரம் முந்நூறு 4 மந்திரம் முந்நூறு 5 திருமந்திர புவனை 6 திருமூலர் புவனை 7 புவனை திருமந்திரம் 8 புவநேசுவரி சதகம் 9 புவநேசுவரி கக்ஷபுடம் 10 புவனை கட்கம் 11 புவனை கக்கிசம் 12 புவனைகச்சபுடம் 13 மந்திரக் கக்கிசம் 14 கக்கிசப் படலம் 15 புவனை மந்திரம் 16 திருமூலர் மாலை 17 திருமூலம் 18 அடங்கல் திருமந்திர மாலை 19 திருமூலர் திருமுறை 20 மூலர் முறை 21 திருமூலர் தந்திரம் எனப் பலவாறாகக் காணப்படுகின்றது. கக்ஷபுடம் – ஒருவகை மந்திர சாஸ்திரம். இதில் மந்திர கக்ஷபுடம், யந்திர கக்ஷபுடம், மூலிகா கக்ஷபுடம் என 3 வகைகள் உள்ளன என்பர். நாகார்ச்சுன கக்ஷபுடம் முதலியவற்றையும் நோக்குக.

மந்திரம்:

என்றது, ஈண்டுத் தமிழ் மந்திரச் செய்யுளின் மேற்று அஃதாவது, அருளிக் கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வச் சொற்களின் பொருண்மை யாண்டும் என்றுங் குறைவின்றி நின்று அவ்வப்பயன்களை அவ்வப்பொழுதே பயக்கத்தக்க சொல்லாற்றலையுடைய தோலாநாவின் மேலோராய அறிவர் தம் ஆணையினாலே கிளக்கப்பட்டுச் சொல்விளங்கிப் பொருள் புறத்தார்க்கு எளிதிற் புலனாகாமல் அரிதில் உணருமாறு மறைத்துக் கூறப்படுஞ் சொற்றொடரா னியன்ற செய்யுள். இவ்வியல்பு, ஆசிரியர் திருமூலதேவர் மாட்டும் அவரருளிய இத்திருமந்திரத்தின் கண்ணும் பெரிதும் அமைந்திருத்தல் நோக்கத்தக்கது. ஆளுடையபிள்ளையார் முதலான ஆன்றோரால் அருளப்பட்ட திருமுறைகளும் இதன் பாற்படும்.

மேற்கோள்

மந்திரப் பொருள்வயின் ஆஅ குநவும்.—தொல் 931

அவை, கூறப்பட்ட எழுவகை வழுவிற்றீர்ந்து வருக என்ற கடப்பாடில என்றவாறு. அவை, திரிதிரிசு சுவாகா. கன்று கொண்டு, கறவையும் வத்திக்க சுவாகா. என்றாற்போல வரும்.
—இளம்

என்றது, மந்திரப் பொருட்கண் அப்பொருட்குரித் தல்லாச் சொல் வருவனவும் என்றவாறு. இதற்குதாரணம் **மந்திர நூல் வல்லார் வாய்க் கேட்டுணர்க.** அவ்வனைத்தும் வழங்கிய வாறே கொள்வதல்லது இலக்கணத்தால் யாப்புறவுடையவல்ல.
—சேனா

மந்திரத்தை உடைய தெய்வங்களிடத்தே அம்மந்திரமாய் வருஞ்சொற்களும். மந்திரச் சொல், மந்திர நூல்களிற் கேட்டு உணர்க.
—நச்

மந்திரம் என்பது, பிறரறியாமல் தம்முள்ளார் அறிய மறைத்துக் கூறுஞ்சொல்.

மண்ணைச்சுமந்த வன்றானும் வரதராசன் மகன்றானும்
எண்ணிய வரகாலி மூன்றும் இரண்டு மரமும் ஓர் யாறும்
திண்ணம் அறிய வல்லார்க்குச் சிவகதியைப் பெறலாமே

இதனுள், மண்ணைச் சுமந்தவன்-ந. வரதராசன் மகன்-ம. வரகாலி மூன்று-சி. இரண்டு மரம்-வா ஓர்யாறு-ய, எனக்கூற, நமசிவாய எனப் பொருளாயிற்று.
—தெய்வச்

என்பது, மந்திரத்தையுடைய தெய்வங்களிடத்தே அதற்குரிய வல்லாத சொற்களாய் வருவனவும் என்றவாறு. இதற்கு உதாரணம் **மந்திர நூல் வல்லார்வாய்க் கேட்டுணர்க.**
—**இலக்கண விளக்கம்.** 370 உரை

பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே — தொல். 1336
எனவே யாப்பர்வது:- பாட்டியாப்பு, உரையாப்பு, நூலியாப்பு,

மொழியாப்பு, பிசியாப்பு, அங்கதயாப்பு, பழமொழி யாப்பு என ஏழுவகைப்படும்.

—இளம்

பாட்டும், உரையும், நூலும், வாய்மொழியும் — என்று சொல்லப்பட்ட அவ்வேழு நிலத்தும் வடவேங்கடந் தென் குமரியாயிடை (பாயிரம்) நாட்டார் நடத்துகின்ற செய்யுளின் பெயரே தனக்குப் பெயராகவும் உடைத்து மேற்கூறிய யாப்பு என்றவாறு...இப்பகுதிதாந் தமிழ்நாட்டின் மர பாகலின்.

—பேர்

பாட்டுக்களும், உரைகளும், நூல்களும், மந்திரங்களும், பிசிகளும், அங்கதமும், முதுசொல்லும் எனப்பட்ட அவ்வேழு பொருளிடத்தும் ... மலைமண்டலம் சோழ மண்டலம், பாண்டிய மண்டலம், தொண்டை மண்டலம் என்னும் நான்கு பெயரை யுடைய தமிழ்நாட்டார் நடாத்தும் செய்யுளின் பெயர் தனக்குப் பெயராகவும் உடைத்து 'மேற்கூறிய யாப்பு எ-று' என்றது — பாட்டுச் செய்யுள், நூற்செய்யுள், மந்திரச் செய்யுள் எனத் தமிழ் நாட்டார் வழங்கியவாறே பெயர் பெறும் என்றவாறு எனவே, அந்நாட்டார் வழங்கும் யாப்புப் பகுதி கூறினாராயிற்று.

—நச்

மறைமொழி கிளந்த மந்திரத்தான —தொல் 1422

வாய்மொழி, எனினும் மந்திரம், எனினும் ஒக்கும். —இளம்

மறைத்துச் சொல்லுஞ் சொல்லாற் கிளந்த மந்திரத்தின் கண்ணவும்.

—பேர்

மறைத்துக் கூறுஞ் சொல்லாற் கூறிய மந்திரத்தின் கணாவனவும்

—நச்

நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப —தொல் 1435

என்-எனின் மந்திரம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் நிறைந்த மொழியையுடைய மாந்தர் தமதாணை யாற் சொல்லப்பட்ட மறைந்த சொல் மந்திரமாவதென்றவாறு. அது, வல்லார்வாய்க் கேட்டுணர்க. —இளம்

இது, மந்திரச் செய்யுள் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: நிறைமொழி மாந்தர் என்பது, சொல்லிய சொல்லின் பொருண்மை யாண்டுங் குறைவின்றிப் பயக்கச் சொல்லும் ஆற்றலுடையார் எ-று அவர், ஆணையாற் கிளக்கப்பட்டுப் புறத்தார்க்குப் புலனாகாமல் மறைத்துச் சொல்லுஞ் சொற் றொடரெல்லாம் மந்திரம் எனப்படும் எ-று

அவை வல்லார் வாய்க் கேட்டுணர்க. 'தானே' என்று பிரித்தான், இவை தமிழ் மந்திரம் என்றற்கும், பாட்டாகி அங்கதம் எனப்படுவனவும் உள அவை நீக்குதற்கும் என உணர்க —பேர்

இது, மந்திரச்செய்யுள் கூறுகின்றது. இ-ள். சொல்லிய சொல்லின் பொண்மை யாண்டுங் குறைவின்று பயக்கச் சொல்லு மாற்றலுடையார், அவ்வாணையாற் கிளக்கப் பட்டுப் புறத் தார்க்குப் புலனாகாமை மறைத்துச் சொல்லுஞ் சொற்றொட ரெல்லாம் மந்திரம் எனப்படும். எ-று அவை, வல்லார்வாய்க் கேட்டுணர்க. தானே என்று பிரித்தார் இவை தமிழ் மந்திரம் என்பதற்கும், மந்திரந்தான் பாட்டாகி அங்கதமெனப் படுவன வுமுள, அவை நீக்குதற்கு மென்றுணர்க. —நச்

இது, மந்திரச்செய்யுள் ஆமாறு கூறுகின்றது. இ-ள்:- அருளிக் கூறினும், வெகுண்டு கூறினும் அவ்வப்பயன்களைப் பயக்கும் நிறைந்த மொழியையுடைய குரவர், தாம் அனுப வத்தான் அறிந்த பொருளைப் பிறர்க்கு உணர்த்தலாகாமை யான் அவர்க்குப் பயப்பாடு நோக்கி ஆக்கினையான் மறைந்த பொருளைக் கூறப்பட்ட சொற்களே மந்திரச்செய்யுள். எ-று.

செய்தலினாற் சொல்லுஞ் செய்யுளாதல் பெற்றாம். சொல்லெனவே ஓரெழுத் தொருமொழியும், ஈரெழுத் தொரு

மொழியும், தொடர்தொழியுங் கொள்க. அவை மந்திர மொழி வல்லுநர்வாய்க் கேட்டு உணர்க.

இலக்கணவிளக்கம். 906 உரை

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

—திறக்குறள். 28

நிறைமொழி-அருளிக் கூறினும், வெகுண்டு கூறினும் அவ்வப் பயன்களைப் பயந்தேவிடும் மொழி. மறைமொழி காட்டி விடும்-அவாரணையாகச் சொல்லிய மந்திரங்களே கண்கூடாகக் காட்டும். காட்டுதல்-பயனான் உணர்த்துதல்.

—பரிமேலழகர்

இது, அவர் ஆணை நடக்கும் என்று கூறிற்று.

—மணக்குடவர்

கண்டபெரு மந்திரமே மூவர் பாடல் கைகாணா
மந்திரங்கண் ணுதலோன் கூறல்

—திருமறைகண்ட புராணம் 13.

மந்திரங்கள் எழுகோடி ஆதலினால் மனனுமவர்
இந்தவகை திருமுறைகள் ஏழாக எடுத்தமைத்துப்
பந்தமறு மந்திரங்கள் பதினொன்று மாதலினால்
அந்தமுறை நான்கினொடும் முறைபதினொன் றாக்கினார்.

—28.

என்பன காண்க. திருமந்திரமாலை தந்திரம்-9. அதிகாரம் 227. சூனிய சம்பாஷணை என்னும் மறைபொருட் கூற்றிலும், பிறவற்றிலும் உள்ள திருமந்திரச் செய்யுட்களையும் நோக்குக.

அன்றியும்,

இலைநல வாயினும் எட்டி பழுத்தாற்
குலைநல வாங்கனி கொண்டுண லாகா விலை (ளே) யான்

முலைநலங் க(கொ)ண்டு முறுவலிக் (முறுவல் செய்)கின்ற வினை (லை)யுடைய நெஞ்சினை வேறுகொ(வெய்துகொள்)ளீரே.

இம் மூலர் வாக்கு (திருமங்-204) மிக்கு வந்தவாறு கண்டுகொள்க. யா.வி. 93

வச்சிரம் வாவி நிறைமதி முக்குடை (முக்கோணம்)
நெற்றிநேர் வாங்கல் வில(ய)ங்கறுத்தல்
உட்சக் கரவ(ட்)டத் துட்புள்ளி என்பதே
புட்கனா.ர் கண்ட புணர்ப்பு.

இது, மந்திர நூலிற் புட்கரனார் கண்ட எழுத்துக் குறி வெண்பா. இஃது, இரண்டாம் அடி குறைந்து வந்தது.

செந்தமிழ் ஆதி தெளிந்து வழிபடு
நந்தி இதனை நவமுரைத் தானே. — திருமந்திரம் 1089

செந்தமிழர் தெய்வமறை நாவர்செழு நற்கலை தெரிந்த அவரோடு

அந்தமில் குணத்தவர்கள் அர்ச்சனைகள் செய்ய அமர்கின்ற அரனூர். –தேவாரம் 3660

கொன்றைச் சடையற் கொன்றைத் தெரியக்
கொஞ்சித் தமிழைப் பகர்வோனே. - திருப்புகழ் 19

மந்திரச் செந்தமிழ் ஏடு – திருவால 38 : 53

மன்னியவித் தமிழ்க்கிளவி மந்திரங்கள் கணித்து
– காஞ்சி தழுவக் 245

என்பனவும் ஈண்டு நோக்கத்தக்கன. இவற்றால் தமிழ்மந்திரச் செய்யுளின் இயல்பும், செந்தமிழ்த் தெய்வ மந்திரத்தின் மாண்பும் புலனாகும்.

ஆண்ண - ஆற்றல், சக்தி. **மந்திரம்** - மறை, மறைமொழி, மனு, மெய்ம்மொழி, மொழிப்பொருள்தெய்வம், பொருண் மொழி, வாய்மொழி என்பன ஒரு பொருட் கிளவிகள்.

மேற்கோள்

நின்வலத் தினதே - நின் **ஆணைக்** கண்ணது -பரிபா 5 : 27

தொல் **ஆணை** நல்லாசிரியர் -மதுரைக் காஞ்சி 761

ஆணையாஞ் சிவத்தைச் சார -பெரிய 752

ஆணையின் - நீக்கமின்றி நிற்கும் **ஆணை** என்னும் பரியா யப் பெயருடைய துணைக் காரணமாயுள்ள தனது **சிற்சத்தி**
-சிவ போதம் சூ 2 மாபாடியம்

ஆணையின் அமர்ந்து செல்ல — ஆணையின் - தனது **ஆக்கினை** ஆகிய **கிரியாசத்தி**யினாலே - **சித்தி** - சுபக் 91
— மறைஞானசம்பந்தர்

பொருள்சேர்புகழ் புரிந்தார் மாட்டு — **பொருள்சேர் புகழ்** - **மெய்ம்மை** சேர்ந்த புகழ். புரிதல் - எப்பொழுதுஞ் சொல்லுதல்,
-திருக்குறள் 5 பரிமே.

அருமறை சோரும் அறிவிலான் - பெறுதற்கரிய **உபதேசப்** பொருளைப் பெற்றாலும் உட்கொள்ளாது போக்கும் புல்லறி-வாளன் -841

வெருளின் **மெய்ம்மொழி** வானிழல் கூறிய **பொருளின்** ஆகும். -பெரிய.

மொழிப்பொருட் டெய்வம் வழித்துணை யாகென - மொழிப் பொருட்டெய்வம் - மொழியாகிய தெய்வம்; **பொருண்மொழி** - உபதேச மந்திரம். பொருண்மொழியாகிய தெய்வம். – சிலப், 10, 100 அரும். அடியார்க்கு என்பன காண்க.

இனி, **நித்தியாதந்திரம்** என்னும் வடநூலில் 10 முதல் 20 வரை உள்ள எழுத்துக்களான் இயன்றவை **மந்திரம்** எனப்பெயர் பெறும் என்றும், 20-க்கு மேற்பட்ட எழுத்துக்களான் இயன்றவை **மாலாமந்திரம்** எனப்பெயர் பெறும் என்றும் சொல்லப்பட்டுள்ளவாறே, இந்நூலின்கண் உள்ள செய்யுட்கள் ஒவ்வொன்றும் பெரும்பாலும் 12 - எழுத்துக்களானியன்ற 4 - அடிகளை உடையனவாய், 20-க்கு மேற்பட்ட எழுத்துக்களைக் கொண்டிருத்தலினாலே மந்திரம் என்றும் மந்திரமாலை என்றும் பெயர் பெற்றது எனினும் அமையும். **மந்திரமாலை** என்பதனை வடநூலார் **மாலாமந்திரம்** என்பர்.

மாலை

என்பதன் முதற்பொருள் ஒழுங்கு, வரிசை என்பனவாகும். பொன், பூ, மணி, சொல் முதலியவற்றால் ஒழுங்குபடத் தொடுத்து யாக்கப்படுவனவும் மாலை எனப்படும். இந்நூலின் கண் உள்ள செய்யுட்கள் யாவும் ஒரே வகையான யாப்பான் இயன்றனவாயும், அந்தாதித் தொடையான் அமைந்தனவாயும், முதலும் முடிவும் மண்டலித்தும் இருத்தலினாலே **திருமந்திர மாலை** எனப்பெயர் பெற்றது. **திருமூலர் மாலை** என்றும் வழங்கும்.

இஃது இறைவனுக்குரிய 1. அங்கம் 2. பிரத்யங்கம் 3. சாங்கம் 4. உபாங்கம் ஆகிய நால்வகை அங்கங்களுள் **உபாங்க**மாகும். இஃது, இறைவனைவிட்டு நீங்காமல் அவனருகில் இருப்பது. உப-சமீபம். இதன் வகை 7. அவை: 1. உடை 2. புரிநூல் 3. **மாலை** 4. சாந்து 5. அணிகலன் 6. இருக்கை—ஆசனம் 7. ஆவரணம் என்பன.

மேற்கோள்

மாலை வெண்பற் றாலிநிறை பூட்டி : மாலை-ஒழுங்கு
— சிலப் 12:28 அரும்

மாலை வண்டினம் மாலைக்கண் கொண்டவே. — சீவக:2397.

திருமந்திர மாலை

மறப்பிலர் நெஞ்சினுள் மந்திர மாலை — திருமந்திரம் 86

ஞானமுதல் நான்குமலர் நற்றிருமந் திரமாலை — பெரிய 3594

முன்னியவப் பொருண்மாலைத் தமிழ்மூவா யிரஞ்சாத்தி
— பெரிய 3596

சத்தியின்ற சதாசிவம் என்பதறிக. இது திருமந்திர மாலை
தக்க—77 உரை

திருமூலதேவர் சந்தான நூலாக இக்காலத்தும் அடுத்து வழங்குவது திருமந்திர மாலையாம்.
— முத்தி நிச்சயம் 2 பேருரை

மந்திரமா லிகைசொலும் மூலகுருவே
— தாயுமான அடிகள்

மந்த்ரமாலிகைசொலும் இயமநிய மாதியாம் மார்க்கத்தில் நின்றுகொண்டு — தாயுமான அடிகள்

திருமூலர்மாலை எனுந் தெப்பத்தைப் பற்றி
சிவஞானவள்ளலார் சித்தாநந்த தரிசனம் 9

திருமந்திரமே சிறந்த உபாங்கம். திருமந்திரம்-3074

ஆடை முந்நூல் – மாலிகைசந் தாபரணமும் சொற்ற உபாங்கம் இவை. — அத்துவித வெண்பா

வஸ்த்ரோப வீத மாலாச கந்தமா பரணந்தா
ஆசநா வரணஞ் சைவ உபாங்கஞ் சேத் கீர்த்திதம்மிதி
என்பனவுங் காண்க. — வாதுளம்

முந் நூறு

300 - க்கு மேற்பட்டும் 400 - க்கு உட்பட்டும் உள்ளன வாகிய 372 - செய்யுட்களையும், 320 - பிரயோகங்களையும்

கொண்டுள்ள இந்நூலிற்குத் திருமந்திரம் முந்நூறு எனப் பெயர் போந்தமை தலைமையும் நிறைவும் பெற்று முடிந்து நிற்குந் தொகையாஞ் சிறப்புப் பற்றி என்க.

இவ்வாறே, 1000–என்னுந் தொகையைப் பெற்றுள்ளன வாயும், **நாமமாலாமந்திரம்** எனப்படுவனவாயும், அருச்சனை வழிபாட்டிற்குரியனவாயும் உள்ள **நாமாவளிகளான** மந்திர நூல்களிற் பல அத்தொகையின் மேற் சில நாமங்கள் கூடியும் குறைந்தும் இருக்கவும் அவை **சகஸ்ர** (ஆயிரம்) நாமம் என்றே பெயர் வழங்கப் பெற்றிருத்தலும் அறிக:–

திருவாசகத் திருமுறையில் உள்ள திருப்பாடல்**களின்** தொகை 600–க்கு மேலாகவும் அதனைக் குறித்து:

திருச்சதகம் முதலாகச் சிறந்த தொகை அறுநூறும்,
— *திருவடிகள் தாவூரபுராணம்*

தேனூறும் வாசகங்கள் அறுநூறும் திருக்கோவை—
நானூறு மமுதூற மொழிந்தருளும் நாயகனை
— *செவ்வந்திப்புராணம்*

எனக் கூறப் பெற்றிருத்தலும் ஈண்டு நோக்கத்தக்கது.

மேற்கோள்

மூலன் உரை செய்த முந்நூறு மந்திரம்
— **திருமந்திரம் 3046**

மாரண மீறாய் வசிய முதலான
காரண கன்மம் கலந்தவகை எட்டுந்
தோரண மாகத் தொகை யொற்றிப் பார்த்திட
ஏரண முந்நூற் றிருபதாய்ச் சார்ந்ததே
— திருமந். 300. 334

என்பன அறிக. அன்றியும், **மூலமந்திரத்திரிசதீ**, **உருத்திரத் திரிசதீ**, சார்த்தத்திரிசதீ முதலாயுள்ள **மந்திர தந்திரங்களின்** நூற்பெயர் வழக்கும் ஈண்டுக் கருதத்தக்கது. திரிசதம்—முந்நூறு.

மந்திரம் — மந்திர நூல். தந்திரம் — ஆகமம். [சார்த்தத்திரிசதீ காலோத்தரம், திரிஸஹஸ்ரகாலோத்தரம் என்னும் ஆகமங்கள்- 2-ம் முறையே 300-ம் 3000-ம் ஆகிய சுலோகங்களை உடையன வாக இருத்தலும் கருதத்தக்கது]

முதல் தந்திரம்

அஃதாவது, இந்நூலில் முதலாவதாயுள்ள பெரும் பிரிவு என்பதாம். **தந்திரம்** — முதன்மை, பிரதானம், தலைமைப் பொருள், **ஆகமநூலின் பெரும் பிரிவு.** இஃது, ஈண்டு இந்நூலின் பெரும், பிரிவைக் குறித்து நின்றது.

தந்திரம், இயல், அதிகாரம் என்பன முதலாக மேல்வருந் தலைப்புக்கள் யாவும் இந்நூற் **சுவடி** சிலவுற்றிலும், திருமந்திர மாலை மூவாயிரத்திலும், வேறு சில நூல்களிலுங் காணப்படும் சில குறிப்புக்களையும் நூலொழுங்கின் அமைப்பையும் பொரு ளமைதியையும் பின்பற்றி விளக்கத்திற்காக அமைத்துக்கொள்ளப் பெற்றவைகளே ஆகும்.

மேற்கோள்

தந்திரம் ஒன்பது சார்பு மூவாயிரம் — **திருமந்திரம் 101**

இது, திருமந்திர மாலையில் திரோதசத்தி **அதிகாரத்து** உள்ளது.
— முத்தி நிச்சயம்-1, 3, 16 பேருரை

"**இதி காமிகே** பிரதிஷ்டா **தந்த்ரே** கிரியா **பாதே** மந்த்ர தந்த்ர யந்த்ரோத்தார படலோர்ந்நாமத் விதிய **படல**" — **காமிகம்.** என்பனவுங் காண்க.

மந்திர இயந்திர இயல்

அதாவது, மந்திரம் இயந்திரம் ஆகியவற்றின் தன்மை களைப்பற்றிச் கூறும் பிரிவு என்பதாம். இயல் – இலக்கணம்,

—நூற்பொருளின் பாகுபாடு. இஃது ஈண்டு இந்நூலின் சிறு பிரிவைக் குறித்து நின்றது.

மந்திரம்

மந்திரம் என்பது, நினைப்பவனைக் காப்பது எனப்பொருள் படும். மந்—நினைத்தல்—அறிதல், திரம்—காத்தல். இறைவனுக் குரியவடிவம் மூன்று. அவை தூலம் சூக்குமம் அதிசூக்குமம்என்பன. அவற்றுள் தூலவடிவம்-மந்திரவடிவ மாகும். சூக்குமவடிவம் — உயிர்க்குயிராயிருத்தல். அதிசூக்குமவடிவம் — உண்மையறிவா னந்த மயமான சிற்சத்தி வடிவமாகும். இம்மூன்றனுள் முன்னைய இரண்டும் இறைவனுக்குரிய தடத்த இலக்கணம் எனப்படும் பொதுவியல்பாகும். பின்னையது சொரூப இலக்கணம் எனப்படும் சிறப்பியல்பாம்.

சொல்லும் பொருளுமான இருதிறப்பட்ட இவ்வுலகினுக் குரிய முதற்காரணங்கள் 3. அவை: 1. சுத்த மாயை 2. அசுத்த மாயை 3. பிரகிருதிமாயை என்பனவாம். அவற்றுள் சுத்தமாயை யானது மேலானது; சுத்தமானது: மயக்கஞ் செய்யாதது; அறிவை விளக்குவது; சிவசத்தி பதியப்பெற்றது; இறைவனுக்கு வைப்புச் (பரிக்கிரக) சத்தியாயு முள்ளது. மந்திரங்கள் யாவும் இத்தகைய சுத்தமாயையினின்றும் தோன்றியனவாகும். இச்சிறப் பினாலும் அச்சிவசத்தி சாதகராயுள்ளாரைக் கணிக்கும் வண்ணம் செலுத்திக் கணித்த பின்னர் பயன் கொடுத்தற் பொருட்டு அவற்றை வாயிலாகக் கொண்டு, அவருக்குப் புத்தி சித்தி முத்திகளை அருளும் பயனும் பற்றி ஆகமங்களில் எல்லாம் இறைவனுக்கு இம்மந்திர வடிவம் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது. 64—கலைஞானங்களில் மந்திர சாத்திரமும் ஒன்றாகும்.

மேற்கோள்

மந்திரம் என்பது எல்லாவற்றையும் அறிதலையும் உயிர் களுக்கு அருள் புரிதலையுஞ் செய்வது; நினைப்பவனைக் காப்பது எனப் பொருள்படும், மனனம் – (யாவற்றையும்)

அறிதல், திராணம் – (உயிர்களைக்) காத்தல். இந்த இரண்டு தன்மைகளையும் உடைமையால் மந்திரம் எனப்பெயர் பெற்றது.

இப்பெயரானது, உண்மையில் சிவசத்தியையும் அவரருளைப் பெற்றோரையுமே குறிக்கும். ஆயினும் உபசார வழக்காய் சிவன் முதலிய பொருள்களைக் குறிக்குஞ் சொற்களும் மந்திரம் எனப் படுவதாயிற்று.

—காமிகம்–தந்திராவதாரப் படலம். அஷ்டப் பிரகரணம்.

கடவுளருக்கு உவகையை விளைவிப்பன வாயுள்ள செபம் ஓமம் அருச்சனை ஆகியவை வேதத்தின் எப்பாகங்களின் உச்சரிப் பாற் செய்யப்படுகின்றனவோ அப்பாகங்கள் மந்திரம் எனப்படும்.

—சுக்கிர நீதி 4,3:24-40

வேதத்துள் நான்காம் வேற்றுமையை ஈறாகவுடைய தெய்வப் பெயர்ச்சொல் அச்சொல்லே கடவுட்கு உரு.

—பரிபாடல் 2.65. பரிமே.

அற்றேல், மேல் ஐங்தெழுத்தால் அமைந்த உரு எனக்கூறி, அதன்பின் ஆன்மாவில் அர்ச்சித்து எனவுங் கூறி ஈண்டுச் சத்தி மூர்த்தி என்றல் மலைவாம்போலும் எனின்? ஆகாது. அம் மூன்றும் முதல்வனுக்கு முறையே 1. தூல வடிவும் 2. சூக்கும வடிவும் 3. அதிசூக்கும வடிவும் எனக் கோடலான் என்பது.

—சித்தி. சுபக். 300. சிவஞான.

மந்திரம் அத்து வாவின் மிகுத்தொரு வடிவமாகத்
தந்ததென் அரனுக் கென்னின் சகத்தினுக் குபாதானங்கள்
விந்துமோ கினிமான் மூன்றாம் இவற்றின் மேலாகி விந்துச்
சிந்தையார் அதீதமான சிவசத்தி சேர்ந்து நிற்கும்,

—சித்தி. சுபக். 77.

[உபாதனம்–முதற்காரணம். விந்து—சுத்தமாயை. மோகினி –அசுத்த மாயை. மான்–பிரகிருதி மாயை]

சுத்தமாம் விந்துத் தன்னில் தோன்றிய ஆத லானும்
சத்திதான் பிரேரித் துப்பின் தானதிட் டித்துக் கொண்டே
அத்தினாற் **புத்தி முத்தி** அளித்தலால் அரனுக் கென்றே
வைத்தவா **மந்திரங்கள்** வடிவென மறைகள் எல்லாம்
— சித்தி. சுபக். 78.

[**பிரேரித்தல்** - சாதகராவார் கணிக்குமாறு செலுத்துதல், **அதிட்டித்தல்** - கணித்தபின் பயனளித்தற் பொருட்டு அவற்றை வாயிலாகக் கோடல். **புத்தி** - போகம். **மறைகள்** - ஆகமங்கள்].

மந்திர மதனிற் **பஞ்ச மந்திரம்** வடிவமாகத்
தந்திரஞ் சொன்ன வாறிங் கென்னெனச் சாற்றக் கேள்நீ
முந்திய தோற்றத் தாலும் மந்திர மூலத் தாலும்
அந்தமில் சத்தி யாதிக் கிசைத்தலும் ஆகும் அன்றே
— சித்தி. சுபக். 79

[**பஞ்ச மந்திரம்** - பஞ்சப் பிரம மந்திரம் – ஈசாநாதி - 5 **தந்திரம்** – ஆகமம்.]

மந்திரத்தால் மருந்துகளால் வாய்த்த **வியோகத்தால்** மணியிரத குளிகையினால் மற்றும் – **தந்திரத்தே** சொன்ன முறை செய்ய வேத சகல கலைஞானங்கள் திரிகால ஞானம் – அந்தமிலா **அணிமாதி ஞானங்கள்** எல்லாம் அடைந்திடும் ஆசான் அருளால் **அடிசேர் ஞானம்** – வந்திடும் மற்றொன்றாலும் வாரா தாகும் மற்றவையும் **அவன்** அருளால் மருவும் அன்றே.

[வாய்த்த யோகம் – சிறந்த யோகம். **தந்திரம்** - சாத்திரம். சித்தி ஞானம், கலை ஞானம், அணிமாதி ஞானம், அடி ஞானம்].
— சித்தி. சுபக். 327

என்பனவும், பிறவுங் காண்க.

மந்திர வகை

இத்தகைய மந்திரமானது, **பொதுவாக** 1. மூல மந்திரம். 2. பீச மந்திரம், 3. பஞ்ச மந்திரம், 4. சடங்க மந்திரம்,

5. சங்கிதா மந்திரம், 6. பத மந்திரம், 7. மாலா மந்திரம், 8. சம்மேளன மந்திரம், 9. காயத்திரி மந்திரம், 10. அசபா மந்திரம், 11. பிராணப்பிரதிட்டா மந்திரம், 12. மாதிருகா மந்திரம், 13. மோன மந்திரம், 14. சாத்திய மந்திரம், 15. நாம மந்திரம், 16. பிரயோக மந்திரம், 17. அத்திர மந்திரம், 18. விஞ்சை மந்திரம், 19. பசிநீக்கு மந்திரம், 20. விண்ணியக்க மந்திரம், 21. வேற்றுரு மந்திரம், 22. துயில் மந்திரம், 23. திரஸ்கரிணீ மந்திரம், 24. சட்கர்ம மந்திரம், 25. அஷ்ட கர்ம மந்திரம், 26. பஞ்சகிருத்திய மந்திரம், 27. அகமருடண மந்திரம், 28. ஏகாக்ஷர மந்திரம், 29. திரயக்ஷரி மந்திரம், 30. பட்சாக்ஷர மந்திரம், 31. சடக்ஷர மந்திரம், 32. அஷ்டாக்ஷர மந்திரம், 33. நவாக்கரி மந்திரம், 34. தசாக்ஷர மந்திரம், 35. துவாதசநாம மந்திரம், 36. பஞ்சதசாக்கரி மந்திரம், 37. சோட சாக்ஷரி மந்திரம், 38. தடை மந்திரம், 39. விடை மந்திரம், 40. பிரசாத மந்திரம், 41. உருத்திர மந்திரம், 42. சுக்த மந்திரம். 43. ஆயுள் மந்திரம், 44. இருதய மந்திரம், 45. கவச மந்திரம், 46. நியாச மந்திரம், 48. துதி மந்திரம், 49. உபதேச மந்திரம், 50. தாரக மந்திரம், 51. செபசமர்ப்பண மந்திரம் முதலாகப் பலவகைப்படும்.

இவையன்றி, 52. நீலகண்டம், 53. மிருத்யுஞ்சயம், 54. தக்ஷிணாமூர்த்தி, 55. சரபம், 56. வீரபத்ரம், 57. பைரவம், 58. விநாயகம், 59. சண்முகம், 60. நாரசிங்கம், 61. நவக்கிரகம், 62. வாலை, 63. புவனை, 64. திரிபுரை, 65. துர்க்கை, 66. அசுவாரூடி, 67. சப்தமாதர், 68. முப்பத்துமுக்கோடி தேவர்கள், 69. பதினெண் கணம், 70. யோகினியர், 71. காலக் கடவுளர் முதலாயுள்ள எல்லாக் கடவுளருக்கும் தனித் தனியே சிறப்பாயுள்ள மந்திரங்களும், சல்லிய தந்திராதி சித்த மந்திரங்களும், திராவிடாதி லௌகீக தேச பாஷா மந்திரங்களும் ஆக எண்ணிறத்த மந்திரங்கள் உள்ளன.

அன்றியும்; உலகில் உள்ள இயங்கு திணையும், நிலைத் திணையுமான சராசரப் பொருள்கள் எல்லாவற்றிற்கும்

அவற்றை அதிட்டித்து நின்று இயக்கும் அதிதேவதை மந்திரங்கள் உள்ளன என்றும், மந்திரங்களால் அதிட்டிக்கப்படாத பொருள்கள் ஒன்றும் இல்லை என்றும் **சர்வ ஞானோத்தரத்திலும்**, பிற ஆகமங்களிலும் சொல்லப்பட்டுள்ளன.

இவ்வாறு பல திறத்தனவாயும், எண்ணிறந்தனவாயும் உள்ள மந்திரங்கள் யாவும் **ஏழுகோடி** மந்திரங்களில் அடங்கும். இதனை **வடநூலார்** சப்த கோடி மகா மந்திரம் என்பர். **ஏழு கோடி மந்திரம்** - ஏழு வகையான முடிபினை உடைய மந்திரம் என்பது பொருள். **கோடி** - முடிபு. அவையாவன: 1. நம, 2. சுவதா, 3. சுவாகா, 4. வௌஷடு, 5. வஷடு, 6. உம், 7. படு என்பனவாம். இதற்கு இவ்வாறன்றி, ஏழுகோடி என்பது அவ்வளவினவாகிய தொகையைக் குறித்ததாகக் கொண்டு, ஏழு கோடியாகிய எண்களைக் கொண்ட மந்திரங்கள் என்றும், அவை இன்னவென்றும் **ஸ்ரீ ராஜராஜேஸ்வரி கல்பம்** என்னும் **வடநூலில்** பொருள் கூறப்பட்டிருத்தலும் ஈண்டு நோக்கத்தக்கது.

இத்தகைய மந்திரங்கள் பலவற்றுள்ளும் ஈண்டு மந்திரம் என்றது, **புவனாபதியின்** மூலமந்திரமாயுள்ள **ஸ்ரீ பஞ்ச தசாக்கரி வித்தையை**. அஃது அடுத்துவரும் திருமந்திரத்துள் வைத்து உபதேசிக்கப்பெறும். இஃதன்றி, மேல்வரும் இயல்களிலும் பல வகை மந்திரங்கள் சொல்லப்பட்டுள்ளன. அவை பீச மந்திரம், பிரயோக மந்திரம், பிராணப் பிரதிட்டை மந்திரம், சாத்திய நாம **மாலா** மந்திரங்கள் ஆகும். ஆயினும், மந்திரம் என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது ஈண்டு உபதேசிக்கப்படும் மகா மந்திரமாகிய ஸ்ரீவித்தையேயாகும். "**ஸ்ரீவித்யைவது** மந்த்ராணாம்" - மந்திரங்கள் எல்லாவற்றினுஞ் சிறந்தது **ஸ்ரீவித்தையே** யாகும்," - **லலிதா சகஸ்ரநாமம்** என்பதுங் காண்க.

மேற்கோள்

சைவ பூஷண மந்திர வகைகள்

அவையாவன: 1. சுத்தப்பிராசாதம் 2. மூலப் பிராசாதம் 3. தத்துவப் பிராசாதம் 4. ஆதிப் பிராசாதம் 5. ஆன்மப்

பிராசாதம் என்னும் ஐவகைச் சிருட்டிரூப சிவ மந்திரங்களும், 6. மோக்கதம், 7. அபிவிர்த்தி, 8. காமியம், 9. சாந்திகம், 10. பௌட்டிகம் என்னும் ஐவகைத் திதிரூப சதாசிவ மந்திரங் களும், 11. மூவகைச் சங்காரரூப மகேசுர மந்திரங்களும், 12. சாகல்யப் பிரணவம் 13. சௌக்யப் பிரணவம் 14. சாம்பவப் பிரணவம் 15. சர்வவசிப் பிரணவம் 16. சாயுச்சியப் பிரணவம் என்னும் ஐவகைப் பிரணவ மந்திரங்களும், 17. மூல பஞ்சாக்கரம் 18. தூல பஞ்சாக்கரம் 19. சூக்கும பஞ்சாக்கரம் 20. காரண பஞ்சாக்கரம் 21. மிசிர பஞ்சாக்கரம் 22. தார பஞ்சாக்கரம் 23. முத்தி பஞ்சாக்கரம் 24. மாயாக்ய பஞ்சாக்கரம் 25. பிரா சாத பஞ்சாக்கரம் 26. நின்மல சாக்கிர பஞ்சாக்கரம் 27. நின் மல சொப்பன பஞ்சாக்கரம் 28. நின்மல சுழுத்தி பஞ்சாக்கரம் 29. நின்மல துரிய பஞ்சாக்கரம் 30. நின்மல துரியாதீத பஞ்சாக் கரம் என்னும் பதினான்குவகை பஞ்சாக்கர மந்திரங்களும், 31. சடக்கரம் 32. அட்டாக்கரம் 33. நவாக்கரி 34. தசாக்ஷரி 35. பஞ்ச தசாக்கரம் என்னுந் தேவிமூல மந்திரங்களும், 36. சிவாஸ்திரம் 37. சுரிகாஸ்திரம் 38. பாசுபதாஸ்திரம் 39. வியோமாஸ்திரம் 40. அகோராஸ்திரம் என்னும் ஐவகை அத்திர மந்திரங்களும், 41. ஈசானாதி பஞ்சப்பிரம மந்திரங்களும், 42. காயத்திரி 43. மிர்த்யுஞ்சயம் 44. தக்கிணாமூர்த்தி மந்திரம் 45. சரப 46. விக்னேசுர 47. வைரவ 48. வீரபத்ர 49. சுப்பிர- மணிய 50. வித்யேசுவர 51. துவாரபாலக 52. பிரம 53. விட்டுணு 54. சூரிய தேவாதி மந்திரங்களும், 55. துர்க்கை 56. இலக்குமி 57. சரசுவதி 58. புவனேசுவரி 59. அசுவாரூடி 60. திரிபுராம்பிகை முதலிய மகா சத்தி மந்திரங்களும், 61. சித்த சாவரர் 62. சத்திசாவரர் 63. மேருதந்திரர் 64. சாகினி தந்திரர் 65. இடாகினி தந்திரர் 66. கூர்மாண்டர் 67. சல்லியர் முதலாய சித்தமந்திரங்களும், 68. ஏனைய கிரியா மந்திரங் களும் ஆம். இவை உபதேசக் கிரமமாக அறியவேண்டும். அருமைபற்றி விரிக்காது விட்டாம்.

மந்திரப் பிரயோகம்

மேற்கூறப்பட்ட மந்திரங்களை அறிந்து அவற்றுடன் காலம், தேசம், காரியம் என்பவற்றிற்கேற்ற மந்திரங் கொண்

டும், அவ்வம் மந்திரங்களின் வாசகம், வாச்சியம், பாவகம், இலக்கியம், இலக்கணம், தியானம், நிறம். சந்தசு, அதிதேவதை, நியாசம், பீசம், வியாகிருதி, எண் என்பவற்றை அறிந்தும், **ஆறங்க மந்திரங்களின்** கிரமத்திற்கேற்ப நம, சுவதா, சுவாகா, வெளஷடு, வஷடு, உம், பட் என்னும் ஏழு பல்லவங்களை ஒட்டியும், பஞ்ச அங்க மந்திரங்களுக்கேற்ற நேத்திர பல்லவம் விட்டும், அங்கமிலா மந்திரங்களுக்கு அங்கம் கற்பித்தும், இருதயபல்லவம், சிர பல்லவம், சிகா பல்லவம், கவச பல்லவம், நேத்திரபல்லவம், அத்திரபல்லவம் என்பவற்றை எவ்வெக்காரியங்களுக்கு எங்ஙனம் உச்சரிக்க வேண்டுமோ அங்ஙனம் சேர்த்தும், மானசிகம், வாசிகம், உபாஞ்சு என்னும் கிரமம் அறிந்தும் பிரயோகிக்க வேண்டும்.

மந்திர சம்ஸ்கார விதி

இவ்விதி வாதுளாகமம், சாரதா திலகம், மந்திர தேவதாப் பிரகாசிகை, பிரபஞ்ச மந்திரசாரம், மந்திர சகஸிரோத்தம் என்னும் நூல்களிலும், அதர்வண வேதத்தும், தனுர் வேதம் ஆகிய உபவேதத்தும், சந்தசு என்னும் வேதாங்கத்தும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

அது 1. ஜெனம் 2. சீவனம் 3. புடேவதானம் 4. போதனம் 5. அபிடேகம் 6. விமலீகரணம் 7. ஆப்பியாயனம் 8. தர்ப்பணம் 9. தீபனம் 10. குத்தம் எனப் பத்து வகைப்படும். இவற்றை வடநூலார் **தசசம்ஸ்காரம்** என்பர். இவற்றை விரிப்பிற்பெருகும். ஆகலின் விடுத்தாம்.

விபூதி விசேட மந்திரம்

வேதகாம உபநிடத மிருதி புராணங்களில் விதந்து சொல்லப்பட்ட விபூதி விசேட மந்திரங்கள் ஐவகையுள. அவை 1. பஞ்சப் பிரமம் 2. திரியம்பகம் 3. திரியாயுஷம் 4. மாநஸ்தோகம் 5. அக்நிரிதி என்பனவாம். இவை பஸ்மசாபாலம், பிருகச் சாபாலம், சுவேதாச்சுவதரம், சாபாலம், அதர்வசிரஸ் முதலிய

உபநிடதங்களிலும், சித்தம், காரணம் முதலிய ஆகமங்களிலும், மச்சபுராணம், சூதசங்கிதை, 12–திருமுறைகள் முதலியவற்றிலும் விதந்து கூறப்பட்டுள்ளன.

செபம் செய்யும் மந்திர முறை

செபஞ் செய்யுங் காலத்தில் இரேசக பூரக கும்பகத்தை அகாரம், உகாரம், மகாரம் என்னும் மந்திரங்களாற் செய்து, அசைவற்றிருந்து, செபமாலையைக் கையிற் கொண்டு பிறர் அறியாதபடி மறைத்து முறைப்படி மந்திரங்களைச் செபிக்க வேண்டும். மேளா மந்திர செபத்தில் ஒவ்வோர் மந்திரத்திலும் குருவையும், 50–அக்ஷரங்களையும் உச்சரித்துக்கொண்டு செபத்தின் முதல் இடை கடைகளிலும் மாதிரு காக்ஷரத்தோடு செபித்தல் முறையாகும். மேளா மந்திரம் மாலா மந்திரம் எனவும் பெயர் பெறும். இது விருத்தாப்பியத்தில் அதிக பலனைத் தரும். ஏனைய மந்திரங்கள் யௌவன காலத்தில் அதிக பலனை யளிக்கும். பூத முதலிய மந்திரங்கள் இளமையிற் குறைந்த பலனைத் தரும்.

பஞ்சாக்ஷரம், குக சடக்ஷரம் எக்காலத்தும் பலனளிக்கும். சுவாகா, நம:, சேஷ பதங்கள் இம் 3–ம் ஸ்திரீபும்ச நபும்சக லிங்கங்களாம்.

வசியம், உச்சாட்டனம், விடநீக்கம் என்னும் பிரயோகங்களில் புருட தெய்வங்களும், பிணிநீக்கத்தில் ஸ்திரீ தெய்வங்களும், ஏனையகாரியங்களில் நபுஞ்சக (மந்திர) தெய்வங்களும் கொள்ளுதற்குரியன. செபஅளவு சொல்லப்படாத மந்திரங்களைச் செபிக்கும் அளவு எட்டு இலக்கமாகச் சொல்லப்படும். எல்லா மந்திரங்களுக்கும் உதய காலமே மிகச் சிறந்தது. மாதிருகா மந்திரம் 50 — உருத்திர பேதங்களோடும், அத்துணை உருத்திரி பேதகங்களோடும் விளங்கா நிற்கும்.

அசபாமந்திர செபம்

மந்திரங்களுள் சிறந்தது அசபாகாயத்திரி. அது; **ஹம்ஸம் — ஸோஹம்** என இருவகைத்தாய் விளங்கும். அசபா — அசபை — அசபாகாயத்திரி — அம்ச மந்திரம்-**அங்குச மந்திரம்**-சிவமந்திரம் — என்பன ஒரு பொருட் சொற்கள். இது முதலில் சிவபெருமானிடத்திருந்து **திருநந்திதேவரும்**, அவர்பால் முறையே, பிரமதேவரும், சுக்கிரனும், கயமுனிவரும், வியாழப்புத்தேளும் பெற்றுப் பூமியிற் பரந்தது.

இதனை அன்புடன் செபிக்கின் இறந்தவர் எழுவர். நினைந்தன எல்லாங் கைகூடும். முத்தியுஞ் சித்திக்கும். இதற்கு **அதிதேவதை — சிவபெருமானே. தேவதை** — பரமாங்குசனாகிய **விநாயகக் கடவுளே.** பீசம்-ஹம். சத்திசுவாகா. கீலகம்-ஸோஹம் என்பனவாகும். கரநியாச அங்கநியாசங்களை உரியபல்லவங்களாற் செய்து, அருணோதயகாலத்திற்றொடங்கி, அத்தமயனத்திற்குள் நாள் ஒன்றுக்கு 21600-செபம் ஏழு ஆதாரக் கடவுளருக்கும் விதிப்படி பகிர்ந்து அளித்தல் வேண்டும்.

1. மூலாதாரத்தில் கணபதிக்கு 600-ம், 2. சுவாதிட்டானத்தில் நான்முகனுக்கு 6000-ம், 3. மணிபூரகத்தில் திருமாலுக்கு 6000-ம், 4. அநாகதத்தில் உருத்திரனுக்கு 6000-ம், 5. விசுத்தியில் மகேசுரனுக்கு 1000-ம், 6. ஆக்ஞையில் சதாசிவனுக்கு 1000-ம், 7. நிராதாரமாகிய பிரமரந்திரக் கமலத்தில் ஞானாசிரியனுக்கு 1000-ம் ஆக 21600-உருசெபத்தை அர்ப்பித்தல் வேண்டும்.

நிர்மல பஞ்சாக்ஷர செபம்

எல்லா மந்திரங்களிலும் மிகச் சிறந்தது திருவைந்தெழுத்தே. அதற்கு ஒப்பானதும் உயர்வானதும் ஆன மந்திரம் ஒன்றுமில்லை. இதன் வகைகள் பலவற்றுள்ளும் மேலானது நிர்மல பஞ்சாக்கரம் ஆகும். இது மேலுரைத்தவாறு 5-வகைப்படும். இவை நள்ளிரவிற் செபிக்கின் மிக்க பலனை அளிக்கும்.

இவற்றை அநுட்டித்துச் செபித்தவர் சர்வ சித்திகளையும் பெற்று அத்துவித முத்தி அடைவர்.

—காமிகம்; தத்துவ நிசாநுபோக சாரம்; சைவபூஷண சந்திரிகை.

இரண்டோடிரண்டு மூவிரண்டை யிரண்டா
றிரண்டு மீமிசைஎண்
இரண்டோ டிரண்டு கொண்டிருந்த இதழ்ப்பங்
கயங்கள் கடந்துபோய்
இருந்த குளத்தின் மேலோரா யிரந்தோட்டமல
கமலமிசை
இருந்த சோதி தனைக்கண்டெம் எண்ணம்
முடிப்போம் என எழுந்து.
— பிரபு. விமலை. 23.

அறிவோர் சிறிதும் சலியாமல் அன்னப் பெயர்
மந்திரமாறி — 6 : 25

இருபத் தோரா யிரத்தறு நூறாய்
மருவி நாடொறும் வளர்சுவா சத்தைச்
சங்கென வாங்கிச் சமனுறக் கும்பித்து
அங்கென் றெழுப்பும் அசபையும் அருளி
—திருச்செந்தூர் அகவல்

(1. மூலாதாரகமலம் இதழ்-4. 2. சுவாதிட்டான இதழ் -6. 3. மணிபூரக இதழ்-10. 4. அநாகத இதழ்-12. 5. விசுத்தி இதழ்-16. 6. ஆக்ஞை இதழ்-2. 7. பிரமரந்திர இதழ்-1000. அன்னப்பெயர் மந்திரம்—அம்சமந்திரம்)

மந்திரான்மா

"சுரர், நரர், விலங்கு, பறவை, தாவரம் எல்லாவற்றிற்கும் அதிதெய்வ மந்திரங்கள் உள; தாவர சங்கமங்களுள் மந்திரங்

களால் அதிட்டிக்கப்படாத உயிர்கள் இல்லை. மந்திரங்களை உச்சரிக்கும் முறைமை இவ்வாறு என மந்திரங்களின் இயல்பும், அவ்வம் மந்திரங்களைக் கணிப்புழி ஆன்மாப் படிகம்போல அவ்வம் மந்திர மயமேயாய் மந்திரான்மா என நிற்குமாறும், .. அத்துவித பாவனையாற் பரமான்மா என நிற்குமாறும் விரித்தும் தொகுத்தும் சீகண்ட உருத்திர நாயனார், அறுமுகக் கடவுளுக்குச் சர்வஞானோத்தரத்தின் ஞானபாதம் செவியறிவுறுத்தருளினார்.''

—சிவஞானபாடியம் சூ.6. அதி. 2

''பறவை, விலங்கு, மரம் முதலிய சராசரங்களுக்கெல்லாம் அதிதெய்வ மந்திரம் உள என்பதூஉம், படிகம் போல அது வதுவாம் இயல்புடைய ஆன்மா அவற்றுள் எவ்வெம் மந்திரங்களைக் கணிப்பினும் அவ்வம் மந்திர சொரூபியாவான் என்பதூஉம் சர்வஞானோத்தரம் முதலியவற்றுட் காண்க.''

— சூ. 9. அதி. 2

''பறவை, விலங்கு, மரம் முதலியவற்றிற்கெல்லாம் அதி தெய்வ மந்திரம் உள என்பதூஉம், மந்திரங்களைக் கணிப்போன் படிகம்போல மந்திர சொரூபியாவான் என்பதூஉம் சருவஞானோத்திரம் முதலியவற்றுள் காண்க.''

—சிவஞானபோதம். உதராணவெண்பா 58, சிற்றுரை

தடை, விடை, விட மந்திரங்கள்; சாத்திய மந்திரம்

''அங்கித்தம் பனைவல்லார்க்கு அனல்சுடா தாகும் ஔடதம் மந்திரம் உடையார்க்கு அருவிடங்கள் ஏறா'' (தம்பனை–தம்பனம்)

—சித்தி. சுபக். 309

''சிவலிங்கம் முதலிய திருமேனியே சிவமெனக் கண்டு வழிபடுஞ் சரியையாளர்க்கும், மந்திர நியாசத்தால் வழிபடும் கிரியையாளர்க்கும், சாத்திய மந்திரங்களால் வழிபடும் யோகிகட்கும் அவ்வம் மந்திரங்களால் அவரவர் விரும்பிய வடிவாய்த்

தோன்றி அருள் செய்வன். அன்பு மாத்திரையான் வழிபடும் ஞானிகட்கு எப்போதும் யாண்டும் வெளிப்பட்டு நின்று அருள் செய்வன்.''

—325. சிவஞான முனிவர் உரை

''ஊன்கண்ணார்க்குப்படிமையினும், அந்தணர்க்கு வேள்வித் தீயினும், யோகிகட்கு உள்ளத்தினும், ஞானிகட்குஎவ்விடத்தும் வெளிப்படுதலால்''

—பரிபா 2: 65 பரிமே.

பகை-சத்துரு உச்சாடன மந்திரம்

துரந்திடும் மந்திரம் சூழ்பகை போக —திருமந்திரம் 943

''விடைமந்திரம் வந்துழித் தடைமந்திரஞ் செய்யுங் காரியம் நிகழாது. விடைமந்திரத்தால் தடுக்கப்படுதல் பற்றித் தடை மந்திரத்திற்குச் சத்தி உண்மை பெறப்படும்'' (தடை மந்திரம்-தம்பன மந்திரம். விடை மந்திரம்-உச்சாடன மந்திரம்.)

—சிவஞானபாடியம். சூ. 2. அதி. 4

மூலமந்திரம்

பேர்பெற் றதுமூல மந்திரம் — திருமந்திரம் 928

பிராசாதமந்திரம்

தெளியும் பிரசாதம் சிவமந்திரமே —950

அசபாமந்திரம்

அவ்வொடு சவ்வென்ற தரனுற்ற மந்திரம்...ஆமே —957

ஆவிக்குள் மந்திரம் அங்குசம் ஆமே —957

அங்குசம் என்ன எழுமார்க்கம் போதத்தில் —2735

ஆறா தாரத்து அங்குச நிலையும்.. குண்டலி அதனிற் கூடிய அசபை - விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து

—ஔவையார் விநாயகர் அகவல்,

இருபத் தோரா யிரத்தறு நூறாய்
மருவி நாடொறும் வளர்சுவா சத்தைச்
சங்கென வாங்கிச் சமனுறக் கும்பித்
தங்கென் றெழுப்பும் அசபையும் அருளி

—திருச்செந்தூர் அகவல்

தறிபோல் உடலம் நேரிருந்து தயங்கு மருங்கின் இருநாடி
நெறிபோய் மீளும் வளியதனை நிறுவி நடுநாடியிற்செலுத்தி
அறிவோர் சிறிதுஞ் சலியாமல் அன்னப் பெயர்மந் திரமாறிக்
குறிபோய் இருந்த ஒருகுறியைக் குறித்துக் கொண்டங்
கிருந்தனரால்.

—பிரபுலிங்கலீலை 6:20.

அசபைசெகர் சோதிநாத பெருமாளே.

—திருப்புகழ் 1165

ஆறா தார அங்குச நிலையைப்
பேறாகி நின்ற பெருமையுங் காட்டி

—விநாயகர் திரு அகவல் நக்கீரர்

[அசபை — நான் அவன் எனப் பொருள்படும் ஹம்ஸ மந்திரம்]

பஞ்சப் பிரமமந்திரம், சங்டக மந்திரம்

பஞ்ச மந்திரம் ஓதும் பரமனார்

—தேவாரம் 5334

மந்திரம் அதனிற் பஞ்ச மந்திரம் வடிவ மாகத்
தந்திரம் சொன்ன வாறு

—சிவ-சித்தி. சுபக். 79

நீ தங்கும் அங்க நியாசந் தனைப்பண்ணி

—திருமந்திரம் 1311

ஐவகைப் பிரமமும் அங்கம் ஆறும்

—காஞ்சிப். தழுவக். 359

நவாக்கரி மந்திரம்

நவாக்கரி மந்திரம் நாவுளே ஓத
—திருமந்திரம் 1321

காயத்திரி, சாவித்திரி மந்திரம்

காயத்திரியே கருதுசா வித்திரி . மந்திரம் —226

பிராணப் பிரதிட்டை மந்திரம்

பேசிய பிராணப் பிரதிட்டையது செய்து —1315
பொதுவாம் பிராணப் பிரதிட்டையும் போற்றே
—300-355

எழுகோடி–சங்கிதா–மாதிருகா–பத மந்திரங்கள்

தத்துவம் ஆறாறு தன்மனு ஏழ்கோடி (வாறைந்து)
மெய்த்தகு வன்னம்ஐம் பானொன்று மேதினி
ஒத்திரு நூற்றிருபான் நான்கெண் பானொன்று
வைத்த பதம்கலை ஓரைந்தும் வந்தவே.
—திருமந்திரம் 2184

மந்திர்ங்கள் பதினொன்று பதங்கள் எண்பத்தொன்று
அக்கரங்கள் ஐம்பத்தொன்றாகும்—

ஆய்ந்தபுரம் இருநூற்றோ டிருபத்துநாலாம் அறிதரு
தத்துவம் முப்பத் தாறுகலை ஐந்தே.
—சிவ–சித்தி. சுபக். 261

மந்திரங்கள் எழுகோடி ஆதலினால்.. பந்தமறு
மந்திரங்கள் பதினொன்றும் ஆதலினால்
—திருமுறைகண்ட புராணம் 28

ஒன்ப தொன்பதி யானை —தேவாரம் 6110

நீலகண்ட மந்திரம்

திருநீலகண்டத் திருப்பதிகம் —1249-1257

படைக்கல, பாசுபதாத்திர, அத்திர மந்திரங்கள்.
அத்திர மாவன அஞ்செ ழுத்துமே —3040

படைக்கல மாகவுன் னாமத் தெழுத்தஞ் சென்னாவிற்
கொண்டேன் —4945

பாசு பதாபரஞ் சுடரே —7922-7931

உருத்திர மந்திரம்

அரும றைப்பயன் ஆகிய உருத்திரம் அதனை
—பெரிய. 1042

தெண்ணீர்-உருத்திர மனுக்கள் ஓதிவிதியுளி நிறைய ஆட்டி
—காஞ்சிப். தழுவக். 359

நாம மந்திரம்

நாமம்ஓர் ஆயிரம் ஓதுமின் நாதனை —திருமந்திரம் 2987

ஞானசம் பந்தர் என்னும் நாமமந்திரமுஞ் செல்ல
—பெரிய. 2624

நாளும் நம்பி ஆரூரர் நாமம் நவின்ற நலத்தாலே ..
அணிமாதி சித்தியான அணைந்ததற்பின் —1716

உளவெலாம் அரசின் நாமம் சாற்றும் அவ்வொழுக்க
லாற்றார் —1789

திருநாவுக்கரசெனும் ஓர் சொற்றான் எழுதியுங்
கூறியுமே என்றுந் துன்பில்பதம் பெற்றான்
—நால்வர் நான்மணிமாலை-38

பீடுகெழு நங்கை பெரும் பெயர் ஏத்தி—இவள்
பெயரைச் சொல்லி மலரைத் தூவி ஏத்தினார்;
இவள் பெயர் மந்திரோத்தி ஆதலால்.
—சிலப். 23 : 195 அரும்

மாதிருகா மந்திரம் (மாதிருகை-எழுத்துக்கள்)

மாத்ருகா புஷ்பமாலை கோலப்ரவாள பாதத்தில்
அணிவேனோ —*திருப்புகழ்* 1211

மோன மந்திரம்

பரவ அருளிய மவுனமந்த்ரந்தனை உணர்த்தியருள்வாயே
—1127

அகமருடண மந்திரம் (ஒருவகை வேதமந்திரம். அகம்-பாவம்)

ஆராதவிருப்பினால் அகமருடம் படியநீர் – பேராது
மூழ்கினார் —*பெரிய* 1963

அன்றியும் விசேடமிக்க அகமரு டணங்கள் ஆன
வென்றி மந்திரங்கள் கொண்டு.
—*திருவால-திருவிளை* 48:10

மேதாமனு (மேதை-ஞானம்)

வடநிழல் அமர்ந்த மறைமுதல் மேதா மனுஎழுத்
திருபதும் இரண்டும் —*திருவிளை* 16:15

மிருத்தியுஞ்சயமந்திரம் (மிருத்யு: மரணம் யமன்–ஆணவமலம்)

சத்திய ஞான மித்திஞ் சயத்தினை உபதேசித்தான்
—*திருவிளை* 47:12

ஆவ தாகவென் றமரர் நாயகன்
மூவெ ழுத்தினால் முடிந்த அம்மனு
தாவில் தெய்வதம் இருடி சந்தமோடு
ஓவில் ஓசைமூன் றொடுதெ ருட்டினான் —20

பொருவில் மூன்றெழுத்தால் ஓங்கி – விரைந்துயர்
பலத்தை நல்கும் மிருத்தியுஞ் சயம தென்னும்-
திருந்திய மந்திரத்தைச் செவிப்புலத் துபதே சித்தான்
—*திருவால - திருவிளை.* 60 ; 6

அந்தரி மந்திரம்

கோவலன் நாவிற் கூறிய மந்திரம்

பாய்கலைப் பாவை மந்திரம் ஆதலின் — அவன் நாவிற் கூறிய மந்திரம் அந்தரி மந்திரம் ஆதலாலே

—சிலப் 11: 196, 197 அடியார்க்.

துயில் மந்திரம்

துன்னிய மந்திரந் துணையெனக் கொண்டு
வாயிலாளரை மயக்குதுயில் உறுத்து -

துன்னிய-தன் மனத்தின் கண் பயின்ற. மந்திரம்-துயின்மந்திரம்.

—சிலப் 16: 143, 144 அரும் அடியார்க்'

விஞ்சை மந்திரம்

மாய விஞ்சை மந்திரம் ஓதி— மணி. 18: 148.
வெந்தழற்பட விஞ்சைமந்திரத் தொழில் விளைத்தால்

—பெரிய, 2591

வேற்றுரு; விண்ணியக்கம்; பசிநீக்கு மந்திரங்கள்.
வேற்றுரு எய்தவும் – அந்தரந்திரியவும் ஆக்குமிவ்

வருந்திறல்.

மந்திரங் கொள்கென வாய்மையின் ஓதி

—மணி. 10: 80–82

இப்பெரும் மந்திரம் இரும்பசி அறுக்கும் —91.

ஊண்ஒழி மந்திரம் உடைமையின் அன்றோ
மாணிழை செய்தவஞ்சம் பிழைத்தது-மணி. —23: 96, 97.

மந்திரம் ஓதி ஓர் மாதவன் வடிவாய் —26: 71.

ஐந்தெழுத்து மந்திரம் முதலியன

அருமறை மருங்கின் ஐந்தினும் எட்டினும்
வருமறை எழுத்தின் மந்திரம் இரண்டும்
ஒருமுறை ஆக உளங்கொண்டு ஓதி—மந்திரத்தை
ஒருதன்மைத்தாக மனத்தால் நினைந்து வாக்கால் துதித்து
—சிலப்: 128-130 அடியார்க்,

ஆறெழுத்து அடக்கிய அருமறைக் கேள்வி—அது
நமோ குமாராய என்பதாம். —திருமுருகு, 186 நச்.

அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும்
நாலெழுத்தும்
பிஞ்செழுத்தும் மேலைப் பெருவெழுத்தும் —நெஞ்சழுத்திப்
பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும்
கூசாமற் கட்டக்கொடி, —கொடிப்பாட்டு

பிற மந்திரங்கள்

சொல்லக் கடவ மந்திரம் பலவாவன: நீற்றும் அரிசி ஓதும் மந்திரமும், பச்சிலை பிசைந்து தடவும்போது சொல் லும் மந்திரமும், செவியுள்ளுறுத்தும் மந்திரமும்.
—புறப்பொருள் வெண்பாமாலை. 351. உரை.

மந்திரவாதிமதம்

மந்திரத்தால் அழைத்திடவே வானவரும் வந்திடுவர்
மந்திரத்தால் வசிகரண முதல்வலிகள் வந்தெய்தும்
மந்திரத்தால் ஆக்கியளித் தழித்திடலும் ஆக்கியிடும்
மந்திரத்தின் வலியவர்காண் வானவரும் மானவர்தாம்
—தத்துவ நிசாநுபோக சாரம், அத்தியாயம் 75:283

மந்திரவா னர்கத்தே வான் முதலாம் பூதங்கள்
மந்திரவா னாகத்தே மன்னுசரா சரங்களெலாம்
மந்திரவா னாகத்தே வரம்பிலா ஞானமது
மந்திரத்தி னதன் பெருமை வானவரும் அறியாரால்.
—284

மூலமாம் நாதத் துண்மை உணரவிப் போதே முத்தி
ஆல முண்டானும் மாலும் அயனுமிப் படியு ணர்ந்தே
சாலமா இறைவ ராகிச் சமைந்தது சகத்துக் கென்றால்
ஏலுமந் திரவா தத்தே இருமையும் பெறலாம் அன்றே
—285

பார கத்தில் இருக்க வும்பர காய மானது பாயவும்
நீர கத்தில் இருக்க வும்மெய் நினைத்தி டத்தினில் ஏகவும்
போர கத்தினில் வெல்ல வும்பொருள் அன்று பொன்னுல
கேறவும்
மார கத்தின் மதிக்க வும்மிவை மந்தி ரத்தவர் வல்லரே
— 286

என்றது; மந்திரங்களைச் செபித்துப் பிரமன் முதலான தேவர்களை வரச்சொல்ல (செய்ய)வும், மந்திரத்தால் வசீ கரணம் முதலாய அஷ்டகர்மங்களும், மந்திரத்தால் ஆக்கல் அளித்தல் அழித்தல் என்னும் முத்தொழிலும், மந்திர வலியால் தேவரும் மானிடரும் மந்திரவானுடைய உடம்பிலே ஐம்பூதங் களும் சராசரங்களும் ஞானங்களும் உண்டாயிருக்கும்.

அம்மந்திரத்தின் பெருமை யாவராலும் அறிய வொண் ணாது. மூலநாதத்தைச் செபித்துப் பிரமன் விஷ்ணுவாதிகளும் பஞ்ச கிருத்தியமும், பூமியில் எத்தனை காலமிருக்கவும், பரகாயப் பிரவேசமாகவும், நீரில் மூழ்கியிருக்கவும், மண்ணிலே புதைந்திருக்கவும், நினைத்தவிடத்திற் போகவும், உயித்தியம் வெல்லவும், தேவலோகங்களிலே போகவும், காமருவு கொள்ள வும், இப்படி வெகு சாமர்த்தியம் உண்டாகவும், கொல்லப் பிழைப்பிக்கச் சாபானுகிரக சாமர்த்தியங்களும், இப்படிச் செய் விக்கிறது மந்திர மாகையால் மந்திரமே பிரமம் என்று அறிக.

இனி, இதன் சொருபம்: மூலமந்திரம். இந்த மூலமந்திரம் ஒன்றே விரிவாய் ஏழு கோடி முதலான மந்திரமனாது தடத்த லட்சணம். இந்த மந்திரத்தின் வழி நில்லாது சென்னப்படு கிறது பந்த நிலை. இம்மந்திரங்களை விதிப்படி செபித்துத் தேவத்துவம் அடைவது முத்தி நிலை என்றறிக.

—உரை

மந்திரவாதி மதமும் மறுதலையும்

தப்பிலா மந்திரங்கள் ஒன்று கோடிதான் மூதலா
நமசுவாகா வசட்டு வௌஷட்டு
மெய்படும் உம்பட்சுதா என்று நிற்கும் வேறிவற்றால்
எவ்வுருவும் வெளிப்படுவதினாற்
செப்பிடு முத்தியதென்று கூறுமுத்தி செபமுத்தியாகுமொரு
திருநாமம் அதனால்
அப்பெயரை உடையான் வந்தருள வேண்டும் அம்மொழி
முத்தியதாகா அந்நினைவ விடாயே'
—தத்துவப் பிரகாசம், 205

இதன் பொருள் தவறில்லாத மந்திரங்கள் ஏழாய், அவை ஒன்று கோடியாய், அதன் வகை: 1. நம 2. சுவாகா 3. வசட்டு 4. வௌஷட்டு 5. உம், 6. பட் 7. சுதா என்னும் முடிவுகளாய்› இவை மூர்த்திகளுமாய்ப், பிரபஞ்சத்தை நடத்தி நிற்கும். இது தானே அறிவான பொருள் என்றும், இதனை அறிவதே முத்தி என்றும் சொல்லும் மந்திரவாதியே! இம் முத்திநெறி செபித் தலே முத்தியாகாது. ஒரு கர்த்தாவின் நாமம் உரைப்பதாம், அந்நாமம் முத்தி கொடாது. அந்நாமத்தை உடைய கடவுளே வேண்டும், ஆதலால், இம் மந்திரத்தை உடையவன் சிவன் என்னும் நினைவைக் கொண்டு இந்த நினைவை விடுகுதி என்றவாறு.

—உரை.

இயந்திரம்

என்பது:- இயக்குதல் - கருவி பொறி எனப்பொருள்படும். அதாவது; வரைகளும், பீசம் முதலியவையும் முறைப்படி வரையப்பெற்று வழிபடப்படும் சக்கரம் ஆகும். இதன்கண் இறைவனது அருட்சத்தி பதிந்து விளங்கி நின்று சாதகராவார் விழைந்த பொருளையும், வினையையும் இயக்குதற்கு நிலைக் களனாய் இருத்தலினாலே இஃது இப்பெயர் பெற்றது. "மந்திரம்-

உயிர்ப் போன்றது. யந்திரம் – பிராணனைப் போன்றது. பிம்பம் – உடம்பினைப் போன்றது'' என்பதும் அறிக.

— காமிகாகமம். யந்திரோத்தார விதிப்படலம்

இயந்திர வகை

இத்தகைய இயந்திரங்கள் பொதுவாக:- 1. மூல யந்திரம் 2. பூசா யந்திரம் 3. தாபன யந்திரம் 4. தாரண யந்திரம் 5. ரட்சா யந்திரம் 6. பிரயோக யந்திரம் 7. பிரயோகார்த்த பூசன யந்திரம் 8. சித்திப் பிரத யந்திரம் 9. முத்தொழிற் சக்கரம் 10. ஐந்தொழிற் சக்கரம் 11. ஐம்பூதச் சக்கரம் 12. சட்கர்ம சக்கரம் 13. அஷ்ட கர்ம சக்கரம் 14. ஆறாதாரச் சக்கரம் 15. ஏரொளிச் சக்கரம் 16. சிவ சக்கரம் 17. சிவ கோணம் 18. சத்தி சக்கரம் 19. சத்தி கோணம் 20. கால சக்கரம் 21. ராசி சக்கரம் 22. சர்வதோபத்ர சக்கரம் 23. கஷபுட சக்கரம் 24. முக்கோண சக்கரம் 25. சதுரசிர சக்கரம் 26. ஐங் கோணச் சக்கரம் 27. அறுகோணச் சக்கரம் 28. எண்கோணச் சக்கரம் 29. நவகோணச் சக்கரம் 30. விந்துவட்டச் சக்கரம் 31. ரவி சக்கரம் 32. பிறைமதிச் சக்கரம் 33. நாற்பத்து முக் கோணச் சக்கரம் 34. சம்மேளன சக்கரம் 35. திருவம்பல–சிதம்பரச் சக்கரம் 36. பதினாறுபதச் சக்கரம் 37. இருபத் தைந்து பதச் சக்கரம் 38. முப்பத்தாறு பதச் சக்கரம் 39. எண்பத் தொரு பதச் சக்கரம் 40. அறுபத்தி நான்கு பதச் சக்கரம் முதலியனவாகப் பல உள்ளன.

அன்றியும், ஒவ்வொரு கடவுளருக்கும் தனித்தனியே சிறப்பா யுள்ள சக்கரங்களும் பலவாகும். அவை: 41. வாலை சக்கரம் 42. புவனை சக்கரம் 43. திரிபுரை சக்கரம் 44. புவனாபதி சக்கரம் 45. சாம்பவி மண்டலச் சக்கரம் 46. வயிரவச் சக்கரம் 47. நவாக்கரி சக்கரம் 48. நவக்கிரக சக்கரம் 49. ஏரொளிச் சக்கரம் 50. சுதர்சன சக்கரம் 51. விஷ்ணு சக்கரம் 52. நர சிங்க சக்கரம் 53. சரப சாளுவ சக்கரம் 54. விநாயக 55. வீர பத்ர 56. சண்முக 57. மிருத்யுஞ்சய 58. நீலகண்ட 59 சண்டி 60. துர்க்கை 61. இராம 62. சீதா 63. இலக்குமி 64. அனு மந் சக்கரம் முதலாக பலவாகும்.

மேற்கோள்

திருவம்பலச் சக்கரம்

திருவம் பலமாகச் சீர்சக் கரத்தைச்
திருவம் பலமாக ஈராறு கீறித்
திருவம் பலமாக இருபத்தைஞ் சாக்கித்
திருவம் பலமாகச் செபிக்கின்ற வாறே'

—திருமந்திரம்.904

திருவைங்தெழுத்துச் சக்கரம்

அஞ்செழுத் தாகிய அக்கர சக்கரம் —934

சிவ சக்கரம்

சேனையுஞ் செய்சிவ சக்கரந் தானே. —988

இராசி சக்கரம்

இராசியுட் சக்கரம் எங்கும் நிறைந்தபின் —1270

ஏரொளிச் சக்கரம்

ஏரொளிச் சக்கர மந்நடு வன்னியே —1255

சாம்பவிமண்டலச் சக்கரம்

சாம்பவி மண்டலச் சக்கரஞ் சொல்லிடில் —1297

நவாக்கரி சக்கரம்

நவாக்கரி சக்கரம் நான்உரை செய்யின் —1319

காலசக்கரம்: திருமந்திரம். தந்திரம்-3 அதிகாரம்-14

திரிபுரைசக்கரம்	—	4	5
வயிரவச் சக்கரம்	—	,,	10
புவனாபதி சக்கரம்	—	,,	12

ஸ்ரீ சக்கரம் - நாற்பத்தி முக்கோணம்

சிவகோணம் முற்பகர்வதொரு நாலு சத்தி நெறி செறி
கோணமத்தொடரு முருவுகோள்
நவகோணம் உட்படுவ தெழுமூவிரட்டியொரு நவில்
கோணமுற்றதுவும் வலயமா
இவரா நிறைத்த தளம் இருநாலும் எட்டிணையும் எழிலாய
வட்டமொடு சதுரமாய்
உவமானமற்றதனி தனிமூவகைக்கணு மென்
உமைபாதம் உற்றசிறு வரைகளே.
—சௌந்தரியலகரி. 11

முக்கோணம்; ஐங்கோணம்; அறுகோணம்; நவகோணச் சக்கரங்கள் முதலியன

ஓங்காரத் துட்பொருளே உற்றநவ கோணத்தில்
ரீங்காரந் தன்னில் இருப்பவளே—பாங்கான
முக்கோணத் துள்ளிருக்கும் மூர்த்தியே மூவிரண்டாம்
சட்கோணத் துள்ளிருக்கும் சத்தியே - மிக்க புகழ்
எண்ணிரண்டார்ங் கோட்டில் இருப்பவளே எவ்வுயிர்க்கும்
பண்ணிசைந்த பாட்டின் பழம்பொருளே—விண்ணுலகின்
மேற்பட்டங் கூடுருவி மேலாகி நின்றதொரு
நாற்பத்து முக்கோண நாயகியே—சீர்பெற்ற
பஞ்சகோ ணத்திருந்த பைங்கிளியே _
ஆறாதா ரப்பொருளாய் ஐயைந்தாய் ஐம்மூன்றாய்
வீறான சக்கரத்தின் மின்னொளியாய்
—மீனாக்ஷி அம்மை கலிவெண்பா

வராகி சக்கரம்

தோராத வட்டமுக்கோண சட்கோணத் துலங்கு வட்டத்
தீரா றிதழிட்டு ரீங்காரம் உள்ளிட்டிது நடுவே
ஆரா தனைசெய் தருச்சித்துப் பூசித் தடிபணிந்தால்
வாரா திராளல்ல ளேவரலை ஞான வராகியுமே
—வராகிமாலை. 2

வீற்றிருப் பாள்நவ கோணத்தி லேநம்மை வேண்டுமென்று
காத்திருப்பாள்...என்னை யாளுங் குலதெய்வமே —31

மாதிருகா யந்திரம்

ஐம்பத் தோரெழுத் தட்சர நிலையை
இன்பச் சக்கர விதிதனைக் காட்டி
—விநாயகர் திருவகவல். நக்கீரர்

இடைச் சக்கரம்; உடற் சக்கரம்

இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும் - உடற் சக்கரத்தின்
உறுப்பையுங் காட்டி —ஔவை

இதனுட் சக்கரம் என்றதனானே, 1. பூமிச் சக்கரமும் 2. ஆகாயச் சக்கரமும் 3. பூமியாகாயச் சக்கரமும் 4. வட்டச் சக்கரமும் 5. புருடச் சக்கரமும் 6. சதுரச் சக்கரமும் 7. கூர்மச் சக்கரமும் 8. மந்தரச் சக்கரமும் 9. காடகச் சங்கரமும் 10. சனிபுருடச் சக்கரமும் 11. சலாபச் சக்கரமும் 12. சச்கரச் சக்கரமும் 13. அரவுச் சக்கரமும் முதலாகவுடையன புணர்ப் பாவை யுள்ளும், போக்கியத்துள்ளும், கிரணியத்துள்ளும். வதுவிச்சை யுள்ளுங் கண்டுகொள்க. அவையெல்லாம் ஆகவும் கெடவும் பாடுதற்கும், மனத்தது பாடுதற்கும் பற்றாம் என்று கொள்க. —யா-வி. 96

இயந்திரவாதி மதம்

இயந்திரம் அனேகந் தன்னால் எய்தும்எட் டாணகன்மம்
தயந்திகழ் புத்தி முத்தி எனநவிற் றிடுவோம் கேளாய்
இயந்திரந் தன்னைக் கீறும் இயந்திர மிலத மான்மா
நயந்தனை உணரா மூடர் நரதனு வாகா ரன்றே
—தத்துவ நிசாநுபோக சாரம். 78—இயந்திரவாதிமதம் 287

இப்படி இயந்திர பேதங்களாவது: 1. சிதம்பரசக்கரம் 2. வாலை 3. திரிபுரை 4. புவனைசக்கரம் 5. வயிரவ

6. வீரபத்திர 7. விநாயக 8. சண்முக சக்கரங்களும், 9. காளி 10. துற்கி முதலான சத்தி பேத சக்கரங்களும்· 11. சூரியன் 12. சந்திரன் முதலான நவக்கிரக எந்திரங்களும் 13. காலச்சக்கரம் 14. சர்வதோ பத்திர சக்கரம் 15. விஷ்ணு சக்கரம் 16. நரசிம்ம சக்கரம் 17. இராம சக்கரம் 18. இலக்குமி சக்கரம் 19. அனும சக்கரம் இப்படியாக சகல மத சக்கர பேதங்களும், 20. கக்ஷபுட பேதசக்கரங்களும் அநேக யந்திரங்களும் அறிந்து இவற்றின் புனச்சரணை, இவற்றின் செபங்கள், ஆவாகன, ஸ்தாபன, சந்நிதான, சந்நிரோதன, அவுத்து வாசனங்களுடனே பஞ்சசுத்தி செய்து கொண்டு, எந்த கன்மத்துக்கு எந்த சக்கரம், எந்த மத்திரம், எந்த தந்திரம், எந்த பீசாட்சரமோ அப்படியே புனச்சரணை செய்து பூசை செய்தால் இவன் நினைத்த காரியம் எல்லாம் ஆம் என்றறிக.

இது வெகு விஸ்தாரமாம். இதைத் தொகையாகச் சொன்னதென்றறிக. இதின் சொருபமாவது:— மூல மந்திர மாகிற பிரணவம். இனித் தடத்தமாவது: அனந்தகோடி யந்திர மந்திர, தந்திரங்களாய் விரிகிறது. இனிப் பந்தமாவது:- இந்த யந்திரமே தனு, கரண, புவன, போகமயம் என்றறியாமற் போவது. இனி முத்தியாவது - இந்த யந்திர சாத்திரப்படி பூசை செய்து, புனச்சரணை செய்து, அந்தந்த தெய்வங்களை அடைகிறது என்றறிக. —உரை.

இயந்திரவாதி மதமும் மறு தலையும்

அலகில் மந்திரமும் தந்திரங்கள் தானும் அனைத்துயிரும்
இயந்திரமே யாகு மிப்பால்
இலகுமட்ட கருமமிப்பொருள் பொருளே யல்லாதில்லை யெனும்
இயந்திரவா திக்கிது வோமுத்தி
நிலவிய அவ்வட்டகருமத்துக் கல்லால் நீள்முத்தி நெறியிட்ட
கரும மாமோ
கலவிதனக் காமிதனைக் கைவிட் டிந்தக்கண்ணுதலோன்
ஞானத்தைக் கருதிடாயே

இதன் பொருள் :— எண்ணிறந்த மந்திரங்களும், எண்ணிறந்த தந்திரங்களும், எல்லாவுயிரும், இயந்திரத்தினுல் உண்டாம். அதுவுமன்றி, 1. வசியம் 2. ஆகருணம் 3. மோகனம் 4. உச்சாடனம் 5. தம்பனம் 6. மாரணம் 7. வித்துவேஷணம் 8. பேதனம் என்னும் அட்ட கருமமும்; 1. அணுமா 2. மகிமா 3. லகுமா 4. கிரிமா 5. ஈசத்துவம் 6. வசித்துவம் 7. பிராத்தி 8. பிராகாமியம் என்னும் அட்டசித்திகளும் உண்டாவதாதலால் அதுவே பொருள். அது வல்லது வேறு பொருள் இல்லை; என்று கூறும் இயந்திரவாதியே! உனக்கு இதுவோ முத்திநெறி. இந்த நெறி, விளங்குகின்ற அந்த அட்டகருமமும், அட்ட சித்திக்கு அல்லாது பெரிய முத்தி ஆமோ. இது, காமநெறிக்கல்லது முத்தி நெறி ஆகாது. ஆதலால், இவற்றைக் கைவிட்டுச் சிவஞானத்தைச் சேருவாயாக என்றவாறு. அட்டசித்தியாவன :— சிறுமை பெருமை சிக்கென்றல் நொய்மை-அறிதல் உலகறிய வாழ்தல்-பிறிவறவே-யாவரையும் முன்காண்டல் எவ்விடமும் போய்வருதல்-பாவுமட்ட சித்திப் பயன் என்பதனுல் அறிக.

— தத்துவப் பிரகாசம். 206 உரை

இத்தகைய இயந்திரங்கள் பலவற்றுள்ளும் ஈண்டு இயந்திரம் என்றது, புவனுபதி சக்கரத்தை. இது வழிபாட்டிற்குரிய மூலயந்திரம் ஆகும். இஃது, இயந்திரராசன் என்று சிறப்பித்துச் சொல்லப்படுவதும், திருநந்தி தேவரிடத்தினின்றும் திருமூல தேவராற் பெறப்பட்டதும், அவராற் பெரிதும் போற்றி வழிபடப் பெற்றதும், சித்திபுத்தி முத்திகளாகிய எல்லாப் பயன்களையும் எய்துவதற்கு ஏதுவாயுள்ளதும் ஆகிய பெருமைகளை உடையதாகும்.

மேற்கோள்

பக்கம் அடங்கலும் ரீங்காரஞ் சூழ்வித்துப் பாவனையால்
மிக்க புவனையைப் பூசித்து நந்தி விளம்பவிந்தச்
சக்கரம் பெற்றுத் திருமூல தேவன்இத் தாரணியுந்
திக்கும் அனைத்தும் விளையா டினன் அட்ட சித்தியுமே

—புவனை கலைஞான தீபம். 71

ஓரெழுத் தாகிற மந்திர ராசன் என்றோ தரிய-பேரெழுத்தும் —80

மந்திர ராசனை ஈராறிலக்கம் மனத்தடக்கித்
தந்திரம் ஓமம் தியானம் விடாதுசெய் தன்மையினோர்க்கு
இந்திரன் போகங் குபேரன் நிதியம் இரவியன்ன
சுந்தர ரூபன் திசைமுகன் நாள்எய்துந் தொல்புவிக்கே —84

அறத்தின் நீள்நகர் புவனைசக் கரம்என ஆன்ற
திறத்த பொன்மதில் ஏழுடைச் சின்மயக் கோயில்
— காஞ்சி. திருநகரப். 63

புவனைசக் கரத்துளே பூதநாத வெளியிலே
—சிவவாக்கிய தேவர்

திருமந்திர மேற்கோள் அகச்சான்றுகள்

புவனா பதியாம்-அருந்தவச் செல்வியைச் சேவித்து
அடியேன்-பரிந்துடன் வந்தனன் பத்தியி னாலே —75

புவனம் படைப்பான் ஒருவன் ஒருத்தி
புவனம் படைப்பார்க்குப் புத்திரர் ஐவர் —386

புகுந்தறி வான்புவ னாபதி அண்ணல் —397

நின்றது சக்கரம் நீளும் புவியெல்லாம்
மன்றது வாய்நின்ற மாயநன் னாடனைக்
கன்றது வாகக் கறந்தனன் நந்தியும்
குன்றிடை நின்றிடுங் கொள்கைய னாமே —948

அருள் பெற்ற வாசொல்ல வாரீர் மனிதர்
...புவனா பதியார்...சேவடி போற்றுவன் நானே —1071

புனையவல் லாள்புவ னத்திறை எங்கள்
—புனையவல் லாளையும் போற்றியென் பேனே —1149

போற்றியென் பேன்புவ னாபதி அம்மை என்
ஆற்றருள் நிற்கும் அருந்தவப் பெண்பிள்ளை —1150

புணர்த்தொழிந் தேன்புவ ஞபதி யாரை —1250

ஏதும் பலமாம் இயந்திரா சன்னடி-ஓதி —1311
தாவில்ரீங் காரத்தாற் சக்கரஞ் சூழ்வித்து
பூவைப் புவஞ பதியைப்பின் பூசியே —1314

பூசிக்கும் போது புவஞ பதிதன்னை —1315

யாவர்க்கும் எட்டா இயந்திர ராசனை
நீ வைத்துச் சேமி நினைந்தது தருமே —1318

பொய்யிலன் மெய்யன் புவஞ பதி எந்தை —1996

எம் இறை-பொங்கிறின் றான்புவ ஞபதி தானே —2837

பூண்டாள் ஒருத்தி புவனசூ டாமணி — 8297

பொங்கிறின் றான்புவ னாபதி புண்ணிய — 3012

புவனா பதிமிகு புண்ணியன் எந்தை — 3903

மந்திரமும் இயந்திரமும்

மந்திரம், தந்திரம் என்பன இரண்டும் சேர்த்துச் சொல்லப் படுதல் பெருவழக்காதல் போன்று, மந்திரம் இயந்திரம் ஆகிய இவை இரண்டும் இணைத்துக் கூறப்படுதலும் பெரு வழக்காகும். "மந்திரம் - உயிரைப் போன்றது. இயந்திரம் - உயிர் வளியைப் போன்றது. உருவம் - உடம்பைப் போன்றது" என்று மேற் குறித்தவையும் ஈண்டு நோக்கத்தக்கன. இயந்திரம் எனினும் சக்கரம் எனினும் ஒக்கும்.

மேற்கோள்

மந்திரஞ் சக்கரம் ஆனவை சொல்லிடில் — திருமந்திரம், 1281
வெட்டாத சக்கரம் பேசாத மந்திரம் — பட்டினத்தடிகள்

சுந்தரச் சோதி துலங்கும் இடமது
மந்திரச் சக்கரமும் ஆம் — ஔவை குறள்

வருநீரினும் இட்டு நெருப்பினும் இட்டு
அறிவோம் இரு மந்திரமும் யந்திரமுமே — தக்க. 201

சிறந்த யந்திரங்கள் மந்திரங்கள்—முழுதும் வல்ல
அடிகண்மார் — திருவால்-திருவிளை. 37 : 43

யந்திரங்கள் மற்றும்-கற்றமந் திரங்கள் எல்லாம் தனித்தனி
கனத்த ஏட்டில்.. எழுதி இட்டார் — 38 : 18

மந்திரமுந் தேவும் மருந்துங் குருவருளுந்
தந்திரமும் ஞானந் தருமுறையும்—யந்திரமும்
மெய்யென்னில் மெய்யாய் விளங்குமே மேதினியிற்
பொய்யென்னிற் பொய்யாகிப் போம்
— நிதிவெண்பா. 38

(மந்திரம்-மந்திரங்கள். தேவு-தெய்வம். தந்திரம் சாத்திரங்கள். ஞானம் தரும் முறை - ஞானோபதேசம். யந்திரம்-சக்கரங்கள். மந்திரம் முதல் யந்திரம் ஈறாக எடுத்துரைக்கப் பெற்றவைகள் ஏழும் மெய்யென்று நம்பு வோர்க்குப் பயனை அளிக்கும் நம்பாதவருக்குப் பயனைக் கொடுக்க மாட்டா என்பது க்ருத்து.)

ஆகமம்-ஆவது, ஸ்ரீவித்தை. அது மந்திரமும், சக்கர மும் என இருவகைத்து.
—சௌந்தரியலகரி, 30. உரை-எல்லப்ப நாவலர்

என்பனவும் பிறவுங் காண்க. அன்றியும்; கந்தர் அனுபூதி, சௌந்தரியலகரி, மனோன்மணி மாலை, வராகி மாலை முதலிய நூல்களில் உள்ள ஒவ்வொரு செய்யுளும் செந்தமிழ்த் தெய்வ மந்திரம் ஆமாறும், அம்மந்திரச் செய்யுள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே இயந்திரம், தந்திரம், பிரயோகம், வழிபாட்டு முறை முதலியன அமைந்திருத்தலும் விதிப்படி வழுத்துபவருக்கும் பூசிப்பவருக்கும் கருதிய பயன்களை அவை பொய்க்காமல் அளித்துவரும் உண்மையும் ஈண்டுக் கருதத்தக்கன.

மேற்கோள்

இவற்றுக்கு 1. நிறமும் 2. திணையும் 3. பூவும் 4. சாந்தும் 5. புகையும் 6. பண்ணும் 7. திறனும் 8. இருதுவும் 9. திங்களும் 10. நாளும் 11. பக்கமும் 12. கிழமையும் 13. பொழுதும் 14. கோளும் 15. இராசியும் 16. தெய்வமும் 17. திசையும் 18. மந்திரமும் 19. மண்டிலமும் 20. பொறியும் 21. எழுத்து முதலாகிய பண்பும் அறிந்து ஆராதிப்ப அவை யாவருக்கும் கல்வியும் புலமையும் ஆக்கி நன்மை பயக்கும். இவையெல்லாம் திணை நூலுள்ளும், பிறவற்றுள்ளும் கண்டு கொள்க என்பதும் அறிக.

—யாப்பருங்கலவிருத்தி. 95

ஈண்டு இதுகாறும் ஒருவாறு தொகுத்துக் குறிக்கப்பட்டனவும், விரிவஞ்சிக் குறிக்கப்படாதனவாயும் உள்ள மந்திரம், தந்திரம், இயந்திரம் ஆகியவற்றின் விரிவை திருமந்திரமாலை 4–ஆம் தந்திரத்திலும் நிகமாகமங்களிலும் புவனை கலைஞான தீபம், தத்துவ நிசாநுபோக சாரம், தத்துவப் பிரகாசம், தத்துவ ரத்னாகரம், மந்த்ர சாரம், தந்த்ர சாரம், யந்திர சிந்தாமணி, புவனை கல்பம், புவனேசுவரி அகவல், புவனை தந்திரம், யாமள தந்திரம், மாகேசுவரீ தந்திரம், வாமகேசுவர தந்திரம் மேரு தந்திரம், கச்சபுட தந்திரம், மோகனாக்ய தந்திரம், அதர்வண சாரம், கிரியா விவரணம், சாரதா திலகம், ராஜராஜேசுவரி கல்பம், மந்திர தேவதாப் பிரகாசிகை, பிரபஞ்ச மந்திர சாரம், மந்திர சிரோத்தம், மந்திர நிகண்டு, மந்திர வித்தை, மந்திர முக்தாவளி, மந்திர மகோததி, சித்தாந்த சராவளி, மாதிருகா விவேகம், பீச நிகண்டு முதலான தென்மொழி வடமொழி நூல்களிலும், அவற்றின் உரைகளிலுங் கண்டு கொள்க.

திருமந்திரமாலையுள், மந்திரம், தந்திரம், இயந்திரங்களைப் பற்றிப் பலவிடங்களிலும் ஆங்காங்கே காணப்படுதலினாலே, அவற்றைப் பற்றியுள்ள குறிப்புகள் ஈண்டு ஒருவாறு தொகுத்து விரித்து வரையப்பட்டன.

அதிகாரம்

என்பது; அதிகரித்தல்-அதிகரித்த பொருள் - தலைமைப் பொருள் எனப் பொருள்படும். இஃது, ஈண்டு இந்நூல் இயல்களின் உட்பிரிவாயுள்ள சிறு பிரிவைக் குறித்து நின்றது. அதிகாரம் எனினும் படலம் எனினும் ஒக்கும்.

—தொல். பொருள். 473. இளம்.

பாயிரம்

என்பது; முன்னுரை-பொருளடக்கம் ஆகும். இந்நூலின் காப்புச் செய்யுள் முதல் ஐந்து கவிகள் வரை கடவுள் வணக்கமும், கருதிய பொருளும் கூறப்பட்டிருத்தலினாலே இது, தற்சிறப்புப் பாயிரம் எனப்படும். இதனை வடநூலார் நாந்தி என்பர். இஃது, ஆசிரியர் தாமே நூன் முகத்து உரைப்பது ஆகும்.

மேற்கோள்

வணக்கம் அதிகாரம் என்றிரண்டுஞ் சொல்லச்
சிறப்பென்னும் பாயிரம் ஆம்.

—யாப். விருத்தி. சூ. 1, உரை. மேற்.

தெய்வ வணக்கமும் செயப்படு பொருளும்
எய்த உரைப்பது தற்சிறப்பாகும்

—தண்டி. 1 உரை. மேற்.

தற்சிறப்புப் பாயிரமாவது: தெய்வவணக்கமும்,
செய்யப்படு பொருளும் உரைத்து ஆசிரியர் நூன்முகப்பிற் கூறும் பாயிரம்.

—யாப்பருங்கலக்காரிகை. 1. உரை

என்பன அறிக.

மங்கல வாழ்த்து

என்பது மங்கலம், கடவுள் வணக்கம், கடவுள் வாழ்த்து, காப்பு, நந்தி என்றுங் கூறப்படும். மங்கலம் ஆக்கம் - நன்மை -

இஷ்டசித்தி. வாழ்த்து - வாழ்த்துதல் - வாழ்த்துச் செய்யுள். இம்மங்கல வாழ்த்தானது, 1. வாழ்த்து 2. வணக்கம் 3. பொருளியல் புரைத்தல் என மூவகைப் படும். இவற்றை வடநூலார் 1. ஆசி 2. நமஸ்து 3. வஸ்து நிர்த்தேசம் என்பர். அவற்றுள், இவ்வாழ்த்து பொருளியல் புரைத்தல் என்னும் மங்கல வாழ்த்து ஆகும் என்பதை மேல்வருமாறுபற்றி உணர்ந்துகொள்க.

மேற்கோள்

வழிபடு தெய்வ வணக்கஞ் செய்து
மங்கல மொழிமுதல் வகுத்தெடுத்துக் கொண்ட
இலக்கணம் இலக்கியம் இடையூறின்றி
இனிதுமுடியும் என்ப ஆகலின்.
வாழ்த்து வணக்கம் வருபொருள் இவற்றின் ஒன்று
ஏற்புடைத் தாகி முன்வர இயன்று

—தண்டி.8, உரை.மேற்

ஆதியும் அந்தமும் நடுவும் மங்கலம்
ஓதிய மொழிகளான் உரைப்ப ராயிடின்
ஏதமில் இருநிலக் கிழத்தி இன்புற
நீதியம் பனுவல்கள் நிலவும் என்பவே — முத்திநிச். 1 மேற்.

என்பன காண்க.

விநாயகர் காப்பு

இப்பெயர் சில சுவடிகளில் காப்பு என்றுங் காணப்படுகிறது.

விநாயகர் : வி + நாயகர் = விநாயகர். வி - மேன்மை - மூதன்மை - இன்மை. நாயகர் - தலைவர் - நடத்துபவர் எனவே, மேலான தலைவர்; முதற்றலைவர்; தனக்கு மேல் ஒரு தலைவர் இல்லாதவர்;. சொல்லும் பொருளுமான இருதரப்பட்ட உலகங்களையெல்லாம் நடத்துபவர்; தம்மை நடத்துபவர் ஒருவரும் இல்லாதவர் என்பது பெறப்படும். இவற்றால் விநாயகர் பரமபதிப்பொருளாயுள்ளவர் என்பதும், சுவதந்திரர் என்பதும்

விளங்கும். (பதி-ஐந்தொழில் புரிபவர். சுவதந்திரம்-கடவுட் டன்மைகள் எட்டனுள் முதலாவதாகிய தன்வயத்தனாதல் என்னுங்குணம்). இவர், வினை தொடங்குங்கால் முதலில் தம்மைப் போற்றியவர்களுக்கு அறக்கருணையாகிய அநுக் கிரகத்தையும், அல்லாதாருக்கு மறக்கருணையாகிய நிக்கிரகத்தை யும், புரிந்து ஆட்கொள்ளுபவராவர்.

காப்பு

என்பது, காவல்-காப்புச் செய்யுள் என்பதாம். அஃதாவது, எடுத்துக்கொண்ட நூல் இடையூறின்றி இனிது முடிதற் பொருட்டு முதலிற் கூறப்படும் கடவுள் வாழ்த்துச் செய்யுளாகும்.

மேற்கோள்

புகரில் பொருள் நான்கினையும் இடர்தீர்ந் தெய்தப்
போற்றுனருக்கு அறக்கருணை புரிந்தல் லார்க்கு-நிகரில்
மறக்கருணை புரிந்தாண்டு கொள்ளும் நிருமலனைக்
கணபதியை நினைந்து வாழ்வாம்.

—விநாயக புராணம்

என்னரே யாயினும் யாவதொன் றெண்ணுதல்
முன்னரே உனதுதாள் முடியுறப் பணிவரேல்
அன்னர்தஞ் சிந்தைபோல் ஆக்குதி அலதுனை
உன்னலார் செய்கையை ஊறுசெய் திடுதிநீ.

—கந்தபுராணம்

என்பன அறிக.

அன்றியும், விநாயகக் கடவுளைப் பற்றிய செய்திகள் பல திருமந்திரத்துள் பலவிடங்களில் வெளிப்படையாகவும் குறிப்பாக வும் கூறப்பட்டுள்ளன. அவற்றுட் சில வருமாறு,

மேற்கோள்

மாமலர் நாலையும் வட்டத்தின் மேவிடு
மாமலர் நாலிலும் வவ்வாதி சவ்விடு
மாமலர் நாலிலே வட்டத்தின் உள்ளே
ஓமென விநாயகன் உலாவிநின் றானே. —திருமந்திரம்

[விநாயகப் பெருமானை மூலாதார சக்கரத்தில் மூலமந்திர மாகிய ஓங்கார வடிவினனாகத் தியானிக்கும் முறைமையை இம்மந்திரம் உணர்த்துகின்றது.]

மூல முதல்வேதா மாலரன் முன்னீசன்
கோலிய ஐம்முகன் —708

[இம் மந்திரத்தில் ஆறு ஆதாரங்களிலும் இருக்கும் கடவுளரின் பெயர்கள் முறையே குறிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மூலாதாரக் கடவுள்-விநாயகர். மூலமுதல்-மூலாதாரத்தில் வீற்றிருக்கும் முதல்வன்-விநாயகர். மூலம்-ஆறு ஆதாரங்களில் முதலாவ தாயுள்ள மூலாதாரம். இஃது அடிநிலையென்றும், ஆதாரம் என்றுஞ் சொல்லப்படும். சரீரத்தளவு தன் கையால் 96 அங்குலம். இதனுள் மேலே $47\frac{1}{2}$ அங்குலமும் கீழே $4\frac{1}{2}$ அங்குல மும் விட்டு நடுநின்ற ஓரங்குலம் மூலாதாரம்.
—சிலப். 3. 26. அடியார்க்

போதனை போதைஞ்சு பொற்கய (ர) வாரண
நாதனை நாடு நவகோடி தானே —திருமந்திரம், 1044

வாரணம்-யானை. வாரண நாதன்-யானைமுகக் கடவுள். நாரணனொடு நான்முகன் இந்திரன்-வாரணன் குமரன் வணங்குங் கழல்-தேவாரம். 5889. அஞ்சு-கஞ்சக் கரக்கற்பகம். குமரகுருபரர் பிரபந்தத் திரட்டு. 451.)

ஐயென்னும் வித்தினில் ஆனை விளைப்பதோர்.
செய்யுண்டு செய்யின் தெளிவறி வாரில்லை
—திருமந். 2870

(ஐ யென்னும் வித்தி-ஐம் என்னும் வித்தெழுத்து-பீசாட் சரம். ஆனை-ஆனைமுகக் கடவுள். செய்-நன்செய். நற்புலம் ஆகிய மூலாதாரம்.)

வித்தகர் ஐவர் விநாயகர் ஈரெண்மர் —திருமந் 2888

கனியுந் தென்மேற்குக் கணபதி கந்தன் —300: 47
என்பன காண்க.

கொச்சக ஒரு போகு

என்பது, கலிப்பாவின் இனமாகிய ஒரு போகு என்னும் கலியின் வகை இரண்டனுள் ஒன்று. அவை: 1. கொச்சக ஒரு போகு 2. அம்போதரங்க ஒரு போகு என்பன. கொச்சகம்: என்பது, பல கோடுகளும் ஒழுங்குபடுமாறு அடுக்கி ஆண் பெண் ஆகிய இருபாலாராலும் உடுக்கப்படும் ஆடையின் ஓர் உறுப்பு. ஒரு போகு: என்பது ஒரு படித்தான நிலம். இவை இரண்டும் ஒப்பின் ஆகிய பெயர் என்பர் பேராசிரியர்.

கடவுள் வாழ்த்து முத்தமிழுக்கும் பொது என்றும், அஃது இயற்றமிழில் வருங்கால் கொச்சக ஒரு போகாய் வரும் என்றும் அடியார்க்கு\நல்லார் குறித்திருத்தலும் ஈண்டுக் கருதத் தக்கது
—சிலப். 6:35 உரை

மேற்கோள்

ஒருபோகு இயற்கையும் இருவகைத்து ஆகும்
—தொல். 1404

கொச்சக ஒருபோகு அம்போ தரங்கம் என்று
ஒப்ப நாடி உணர்தல் வேண்டும் —1405

தரவின் றாகித் தாழிசை பெற்றும்
தாழிசை இன்றித் தரவுடைத் தாகியும்
எண்ணிடை இட்டுச் சின்னங் குன்றியும்
அடக்கியல் இன்றி அடிநிமிர்ந் தொழுகியும்
யாப்பினும் பொருளினும் வேற்றுமை உடையது
கொச்சக ஒருபோகு ஆகும் என்ப —1406

கொச்சகம் என்பது, ஒப்பினாகிய பெயர்; ஓராடையுள் ஒரு வழி அடுக்கியது கொச்சகம் எனப்படும்; அது போல ஒரு செய்யுளுட் பல குறள் அடுக்கப்படுவது கொச்சகம் எனப் பட்டது.
—தொல். பொருள். 433 பேர்

கொச்சகம் என்பது, ஒப்பினாகிய பெயர்: என்னை? பல கோடுபட அடுக்கி உடுக்கும் உடையினைக் கொச்சகம் என்ப. அதுபோலச் சிறியவும் பெரியவும் விராய் அடுக்கியும், தம்முள் ஒப்ப அடுக்கியும் செய்யப்படும் பாட்டுக்களைக் கொச்சகம் என்றான் ஆகலின் என்பது. இக்காலத்தார் அதனைப்பெண்டிர்க் குரிய உடையுறுப்பாக்கியும், கொய்சகம் என்று சிதைத்தும் வழங்குப.

—தொல். பொருள். 464 பேர்.

ஒரு போகு: இடையீடில்லாத நிலத்தினை ஒரு போகு என்பவாகலின், அஃது ஒப்பின் ஆகிய பெயர்.

—தொல். பொருள். 461 பேர்.

என்பன காண்க.

இச்செய்யுளை, ஒருசாரார் தரவு கொச்சகக் கலிப்பாவைப் போன்ற தென்பர். பின்னூலார் கலிவிருத்தம் என்பர்-இதன் இலக்கணம்—

அளவடி நான்கின கலிவிருத்தம்மே (யாப்பருங்கலம். 89) என்பதாகும். நாற்சீரால் ஆகிய நான்கு அடிகளை உடையன எல்லாம் கலிவிருத்தம் எனப்படும் என்பது இதன் பொருள்.

திருமூலர் திருமந்திரயாப்பு

இவ்வகையில் திருமூலர் திருமந்திர யாப்புக்கள் யாவும் ஒரே வகையில் அமைந்தனவேயாகும். அவை, பெரும்பாலும் பன்னீரெழுத்தானியன்ற நாற்சீராலான முதன் மூன்று அடி களை உடையனவாயும், நான்காம் அடி நேர் முதலாயின் ஒன்று குறைந்து 11–எழுத்துக்களை உடையனவாயும் நிரை முதலாயின் ஒன்றுகூடி 12–எழுத்துக்களை உடையனவாயும் நிற்கும். (யாழ்நூல் பக்கம். 216, 248 பார்க்க) எழுத்தினை எண்ணுங்கால் உயிரும், உயிர்மெய்யுமாகி ஒரு மாத்திரையிற் குறையாதனவே அலகிடப்படும். ஒற்றெழுத்துக்கள் அலகிடப் படாவாம்.

மேற்கோள்

உயிரில் லெழுத்தும் எண்ணப் படாஅ
உயிர்த்திறம் இயக்கம் இன்மை யான.

—தொல். பொருள் 351

என்பது விதி.

மேற்குறித்தவாறு இத்திருமந்திர யாப்பில் எழுத்தளவு கொள்ளப்பெற்ற வரையறையைப்பற்றி இந்நியதி ஒரோ வழி கூடினுங்குறையினும் வழுவின்று என்று ஞானாவரண விளக்கப் பேருரையிலும், இலைநல வாயினும்...வேறு கொளீரே (—திருமந். 203) இம்மூலர் வாக்கு மிக்கு வந்தவாறு கண்டு கொள்க. என்று யாப்பருங்கல (சூ 93) விருத்தியிலும் அமைதி கூறப்பெற்றிருத்தல் ஈண்டுக் கருதத் தக்கது. மேல் மந்திரம் என்ற தலைப்பில், தமிழ் மந்திரச் செய்யுள் பற்றிக் குறித்துள்ள வற்றையும் நோக்குக.

திருச்சிற்றம்பலம்

என்பது, தில்லைப் பெருங்கோயிலில் கூத்தப் பெருமான் வீற்றிருக்கும் இடமாகிய அம்பலம் ஆகும். இது பிரணவப் பொருள் என்றும், ஓங்கார சொரூபம் என்றும், சுத்த மாயா சொரூபம் என்றும், பராசக்தி சொரூபம் என்றும், பரஞான சொரூபம் என்றும், சொல்லும் பொருளுமாயுள்ள உலகுகள் யாவும் தோன்றி நின்று ஒடுங்குதற்கு இடமாயுள்ள தென்றும் முத்தான்மாக்களின் உறைவிடம் என்றும், இவ்வுலகிற்கு நடுவிடம் என்றும், இறைவன் இடையறாமல் ஆடல்புரியும் உள்ளக்கமலம் என்றும், யோகஞான தியானஸ்தானம் என்றும் கூறப்படும். இச்சிற்றம்பலத்தில், திருவைந்தெழுத்தே திருவுரு வாகக் கொண்டு ஓங்காரத்துள் விளங்கி ஆடல்புரியும் இறைவனை யோகஞான நெறிகளால் உணர்தலையே தகரோ பாசனை என்றும், தகர வித்தை என்றும் மறைகளின் முடிவாயுள்ள உபநிடதங்களிற் சொல்லப்பட்டுள்ளன. தகரம் — சிறுமை, நுண்மை, ஞானம் உபாசனை—உபாசித்தல்—வழிபடுதல். வித்தை — அறிதல். சிற்றம்பலம்: சிறுமை + அம்பலம் =

சிற்றம்பலம். சிறுமை - நுண்ணறிவு -பரஞானம்-மெய்யுணர்வு, அம்பலம் – ஆகாயம் எனவே ஞானாகாயம் என்பதாம். ஞானாகாயம் ஞானமயமாகிய ஆகாயம்–பராசக்தி சோதிரூபம் என்றபடி.

மேலும் இச்சிற்றம்பலமானது, 1. ஆதி யான்மிகம் 2. ஆதி தைவிகம் 3. ஆதி பௌதிகம் என மூவகைப்படும். அவை இறைவன் விளங்கி நின்று ஆடல் புரியும் இடங்களாகிய 1. சிற்சக்தியும் 2. வீடு பேறுற்றோரின் மெய்யுணர்வும் 3. தில்லையின்கண்ணே உள்ள அம்பலமும் ஆகும்.

இவ்வாற்றால், திருச்சிற்றம்பலம் என்பது ஒப்புயர்வில்லாத சிறந்த செந்தமிழ்த் தெய்வத் திருமந்திரம் ஆகும் என்பது புலனாகும். ஆதலினாலே சைவத் திருமுறைகளாகிய தமிழ்மறை மந்திரங்களை ஓதுங்கால் அவற்றின் முதலிலும் முடிவிலும் பிரணவ ஓங்கார மூலமந்திரப் பொருளாயுள்ள திருச்சிற்றம்பலம் என்னும் இம் மூலமந்திரத்தை முதலில் ஓதியே தொடங்குதலும் முடித்தலும் தொன்றுதொட்டே வரும் தொல்லாணை நல் லாசிரியரின் மரபு ஆகும்.

மேற்கோள்

தேவர் உறைகின்ற சிற்றம்பலம் என்றும் ... சிதம்பரம்
என்றும் ...

திரு அம்பலம் என்றும் ... தென்பொது ஆமே
—திருமந்திரம் 886

எங்குஞ் சிதம்பரம் எங்கும் திருநட்டம் —2722

செம்மை சிறந்த திருவம் பலக்கூத்துள் —2744

தெண்டினிற் சத்தி திருவம் பலமாகக்
கொண்டு பரஞ்சோதி கூத்துகந் தானே —2749

பாவினுள் ஆடிப் பராசத் தியிலாடிக்
கோவினுள் ஆடிடுங் கூத்தப் பிரானே —2757

திருவழி யாவது சிற்றம் பலத்தே
குருவடி வுள்ளாக் குனிக்கும் உருவே —2763

நெற்றிக்கு நேரே புருவத் திடைவெளி
உற்றுற்றுப் பார்க்க ஒளிவிடும் மந்திரம்
பற்றுக்குப் பற்றாய்ப் பரமன் இருந்திடம்
சிற்றம் பலமென்று தேர்ந்துகொண் டேனே —2770

அம்பலம் ஆவது அஞ்செழுத் தாமே —திருமந்திரம் 2775

திருமந் திரமே சிதம்பரந் தானும் —3101

அருமறை முதலில் நடுவினிற் கடையில் அன்பர்தஞ்
சிந்தையில் அலர்ந்த
திருவளர் ஒளிசூழ் திருச்சிற்றம்பலம் —பெரிய 250

அருமறைச் சிரத்தின் மேலாஞ்-சிற்பர வியோமம் ஆகும்
திருச்சிற்றம்பலத்துள்
நின்று-பொற்புற நடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றிபோற்றி
—351

அண்ண லார்தமக் களித்த மெய்ஞ் ஞானமேயான அம்பலமும்
—3813

தேங்கமழும் பொழிற்றில்லைத் திருச்சிற்றம்பலம் போற்றி
—கோயிற்புராணம்

சீரணங்கு மணிமாடத் திருச்சிற்றம்பலம் போற்றி — ,,

தற்பரமாய்ப் பரபதமாய்த் தாவிலநு பூதியதாய்
அற்புதமாய் ஆரமுதாய் ஆனந்த நிலயவொளிப்
பொற்பினதாய்ப் பிறிவிலதாய்ப் பொருளாகி அருளாகும்
சிற்பரமாம் அம்பரமாந் திருச்சிற்றம்பலம் போற்றி — ,,

செய்யதிரு வடிபோற்றி திருச்சிற்றம்பலம் போற்றி — ,,

மன்றுள் ஞானத்-திருமகிழ நின்றாடுஞ் சிதம்பரத்தை
எந்நாளும் சிந்தை செய்வாம்; —சிதம்பரபுராணம்

தில்லையம்பலத்தே திருக்கூத்தாடும் - ஏர்மேவு
பேரொளியாஞ் சிதம்பரத்தை
யெந்நாளும் இதயஞ் சேர்ப்பாம்: —புலியூர்ப்புராணம்

போதமார் சபையுள் ஆடும் புனிதனை „
திலகமெனுந் திருச்சிற்றம்பலத்துள்
— திரு ஒற்றியூர்ப் புராணம்

அருண்மெய்ஞ்ஞான சொரூப அம்பலத்து நின்று :
—திருமுருகன் பூண்டிப்

என்பன காண்க.

1, ஐந்து கரத்தினை......போற்றுகின்றேனே

என்னும் இக்காப்புச் செய்யுளானது, கிடைத்துள்ள இத் திருமந்திரச் சுவடிகளில் குறைச்சுவடிகள் தவிர நூல் முற்றும் உள்ள எல்லாச் சுவடிகளினும், 1. திருமந்திரம் மூவாயிரம் 2. திருமூலர் கருக்கிடை அறுநூறு 3. திருமூலர் நாடி அந்தாதி 4. திருமூலர் குணவாகடம் என்னும் கருப்பத் திருமந்திரம் 5. திருமூலர் புவனை அகவல் முதலிய நூல்களிலும் காப்பு; விநாயகர் காப்பு என்னுந் தலைப்பில் முதற் செய்யுளாகக் காணப்படுகின்றது.

இது, பொருளியல் புரைத்தல் என்னும் மங்கல வாழ்த்துச் செய்யுள் ஆதலின் நூலின் தொடக்கமாகவே கொள்ளத்தக்கது. அஷ்டப்பிரகரணம்: 6. ஸ்ரீ பட்டராமகண்டர் அருளிய நாத காரிகை சுலோகம் 1. நூல் மங்கலமும், அதற்கு அகோர சிவாசாரியர் இயற்றிய பரஜந்யை என்னும் வியாக்யானமும் பார்க்க.

ஆளுடைய பிள்ளையார் முதலிய அருளாளர் மூவரும் திருவாய் மலர்ந்தருளிய செந்தமிழ் மறைகளான தேவராத் திருமுறைகள் ஏழும் ஒருங்கு சேர்ந்து அடங்கத் தொகுக்கப்பட்ட நூலானது, தேவார அடங்கன்முறை எனப்பெயர் பெற்று வழங்கப்படுமாறு போலத் திருமூலதேவரால் அருளப்பெற்றன வாயுள்ள 1. மந்திர கலைத் திருமந்திரம் 3000-ம், 2. தந்திர

கலைத் திருமந்திரம் 300-ம், 3. உபதேசகலைத் திருமந்திரம் 30-ம் ஆகிய இம் மூன்றையும் அடங்கல் திருமந்திர மாலை என்னும் பெயரால் வழங்குமாறு ஒரு நூலாகவும், அவ்வக் கலைகளின் பெயரால் தனித்தனியே வழங்குமாறு மூன்று நூலகவும் ஆசிரியர் திருமூலதேவர் இத்திருமந்திர மாலையை அமைத்திருத்தலினாலே, இக்காப்புச் செய்யுளானது அம் முத்திறக் கலைகளுக்கும் பொதுவாக உள்ளது ஆகும்.

ஆதலினாலே; அந்தாதித் தொடை இயைபும், மண்டலித்து நிற்கும் அமைதியும் வருஞ்செய்யுள் முதலாகக் கொண்டே நோக்கத் தக்கன என்க.

இவ்வாறே, 1. சுபக்கம் 2. பரபக்கம் என்னும் இரு பெரும் பகுதியாக அமைந்துள்ள சிவஞான சித்தியார் என்னும் அருள் நூலின் கண்ணும் முதலில் உள்ள பரபக்கத்தின் தலைப்பிற் கூறப்பட்டிருக்கும் ஒரு கோட்டன் என்று தொடங்கும் விநாயகர் காப்புச் செய்யுள் ஒன்றே ஏனைச் சுபக்கத்தின் முதலிலும் காப்புக் கவியாக அமையப் பெற்றிருத்தலும், அஃது எல்லா உரையாசிரியர்களாலும் உரை வரையப்பெற்றிருத்தலும் ஈண்டுக் கருதத் தக்கன.

மேற்கோள்

மூலன் உரைசெய்த மூவாயிரந்தமிழ்
மூலன் உரைசெய்த முந்நூறு மந்திரம்
மூலன் உரைசெய்த முப்பது உபதேசம்
மூலன் உரைசெய்த மூன்றும் ஒன்றாமே—திருமந்திரம் 3046

நந்தி உரைத்தார் நலமாய் எண்ணாயிரம்
பிந்தி ஆயிரம் பிறங்குமூ வாயிரம்
முந்துமூ வாயிரம் முந்நூறு முப்பது
இந்தத் தொகையெல்லாம் ஏத்துங் குடோரியே
—திருமூலர் வைத்தியம் 1000ல். 134

அடங்கற் றிருமந்திர மாலையுள், அவிழ்க்கின்ற வாறும்...
உணர்த்தலுமாமே. (–திருமந். 66)

என்றதூஉம், பிறவுமாம். —முத்திநிச்சயம் 1 பேருரை.

தரும்சத், த்ரிசத, சாகஸ்ரத்ரய ஸ்ரீமந்த்ரபாககிருதே
—ஆளுடையபிள்ளையார் ஆயிரம் நாமம்-532.

(க-பு: த்ரிம்சத்-30, த்ரிசதம்-300. சாகஸ்ரத்ரயம் 3000. ஆக-3330 செய்யுட்களைக் கொண்டுள்ள அடங்கல் திருமந்ர மாலை).

இக்கடவுள் வணக்கம் முதலாயினவெல்லாம் பரபக்கத்து நான்முகத்தாற் கூறிப்போந்தனவே யாயினும் பரபக்கம் சுபக்கம் என இதனை இருநூலாகவுங் கொள்ளவைத்தமையின் ஈண்டும் வேறு கூறினார் —சித்தி. சுபக். 6, சிவஞான.

என்பன காண்க.

தோற்றுவாய்

திருமூலதேவர், திருநந்திதேவர்பால் அருளுபதேசம் பெற்றமையைத் தெரிவிக்கும் அகச்சான்றுகள் பலவுள்ளன அவற்றுட் சில வருமாறு:

நந்தி அருள்பெற்ற நாதரை நாடிடில்...
என்னோடு எண்மரும் ஆமே —திருமந்திரம் 67

செப்புஞ் சிவாகமம் என்னுமப் பேர்பெற்றம்
அப்படி நல்கும் அருணந்தி தாள்பெற்றும் —73

நந்தி அருளால்மெய்ஞ் ஞானத்துள் நண்ணினேன் —92

போதந் தரும் எங்கள் புண்ணிய நந்தியை —142

நந்திதிரு வருள்பெற்ற நான்மறையோ கிகள் ஒருவர்
—பெரிய. 3569

என்பனவும், பிறவும் காண்க.

முதல் நூலின் இலக்கணம்

முதனூலாவது: வரம்பில் அறிவன் பயந்ததாகும். முதல்வன் நூற்குப் பிறன் கோட் கூறாது (—இறை. சூ. 1, உரை. மேற்)

வினையின் நீங்கி விளங்கிய அறிவின்-முனைவன் கண்டது முதனூலாகும் (-தொல். 1594) என்பனவற்றா லறிக.

முதனூல் அருமறை ஆகமங்கள் என்பதற்கும், அவற்றின் பொருள்கள் மறைந்தும் விரிந்தும் உள்ளன என்பதற்கும், அவற்றில் எல்லாப் பொருள்களுங் கூறப்பெற்றுள்ளன என்பதற்கும் மேற்கோள்:

வேதமோ டாகமம் மெய்யாம் இறைவனூல்
ஓதுஞ் சிறப்பும் பொதுவுமென்றுள்ளன
—திருமந்திரம் 2397.

முதலாகும் வேதம் முழுதா கமமப்
பதியான ஈசன் பகர்ந்த திரண்டு —2404

ஏயும் நெறியென்று இறைநூல் இயம்புமே —2839

வேதத்தை விட்ட அறமில்லை வேதத்தில்
ஓதத் தகும்பொருள் எல்லாம் உள 1—5

ஆகம அளவை அறிவனூலாற்-போக
புவனம் உண்டெனப் புலன்கொளல்
—மணி. 27: 43-4

அருமறையா கமம்முதனூல் அனைத்தும் உரைக்கையினால்...
சுருதிசிவா கமம்ஒழியச் சொல்லுவதொன் றில்லை
சிவ-சித்தி. சுபக். 266

வேதநூல் சைவநூல் என்றிரண்டே நூல்கள் வேறுரைக்கும்
நூலிவற்றின் விரிந்த நூல்கள் - ஆதிநூல் அநாதி அமலன்
தருநூல் இரண்டும் ஆரணநூல் பொதுசைவம் அருஞ்சிறப்பு
நூலாம்-நீதியினால் உலகர்க்கும் சத்திநிபா தர்க்கும்
நிகழ்த்தியது. —267

விரிநூல் அந்தணர் விழவு தொடங்கப்
புரிநூல் அந்தணர் பொலங்கலம் ஏற்ப
—பரிபா. 11:78,79

(விரிநூல்-ஆகமம். புரிநூல்-வேதம்)

தொகுத்தவன் அருமறை அங்கம் ஆகமம்-வகுத்தவன்
—தேவாரம் 3047

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க
—பெரிய1904

உலகியல் வேதநூல் ஒழுக்கம் என்பதும்
நிலவுமெய்ந் நெறிசிவ நெறிய தென்பதும் —2723

வேதம் பொருள் பலபடத் தோன்றுஞ் சூத்திரம் போன்றும்; ஆகமம், அதனை அவ்வாறு ஆகவொட்டாது தெளித்துரைக்கும் பாடியம் போன்றும் உள்ளன.

—சிவ-சித்தி.சுபக்.297 சிவஞான.

என்பன காண்க. இவற்றால், முதனூல் ஒன்றே வேதம் ஆகமம் என இரு பகுதியாய் அமைந்தமைக்குரிய காரணமும் புலனாகும்.

மதுர வாசகம்-ஓதின் முத்தி உறுபயன்
வேதம் ஓதின் மெய்ப்பயன் அறமே
—நால்வர் நான்மணிமாலை 32

என்பதும் நோக்குக.

நான்பெற்ற வையகம் என்பது. —திருமந்திரம் 85

தாம் பெற்ற பேற்றை இவ்வுலகமும் பெற்று உய்யவேண்டுவோர் பெரியோர்.

மேற்கோள்

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார் —திருக்குறள் 399

முதனூல்களான வேதாகமங்களின் பகுப்பும், அவற்றின் இயல்பும்.

மேற்கோள்

ஆகுமத் தந்திரம் அந்நூல் வழிநிற்றல்
ஆகு மனாதியுட லல்லா மந்திரம்
ஆகுஞ் சிவபோ தகம்உப தேசமே —திருமந்திரம் 2679

ஆகமம் ஒன்பான் அதிலான நாலேழும்
மோகமில் நாலேழும் முப்பேத முற்றுடன்
வேகமில் வேதாந்தம் சித்தாந்தம் மெய்ம்மையெ(ா)ன்
றாக முடிந்த அருஞ்சுத்த சைவமே —1429

மாண்டவுரை தந்திர மந்திரத்தோடு உபதேசச்சொல்
என மூன்றாம்

அனாதியே அமலனாய அறிவனூல் ஆக மந்தான்
பினாதிமா றின்றிப் பேணல் தந்திரம் மந்தி ரந்தான்
மனாதிகள் அடக்கித் தெய்வம் வழிபடும் வாய்மை ஆகும்
தனாதியீ றிலாதான் தன்மை உணர்த்துதல் உபதேசந்தான்
—சிவ-சித்தி.சுபக்.10;13

மந்திர கலைகள் மற்றைத் தந்திர கலைவான் வேதம்
—தணிகைப்.நந்தி உபதேசம்.153

"அநாதிமுத்த சித்துருவாகிய முதல்வன் அருளிச் செய்த நூல்கள் எனப்படும். வேதாகமங்கள் 1. கருமகாண்டம் 2. உபாசனா காண்டம் 3. ஞான காண்டம் என மூவகைப் படும்."
—சிவ-சித்தி.சுபக்.13. சுப்பிரமணிய தேசிகர் உரை

"ஆகமங்களுட் சில, (1) இருக்கு வேதம்போல் மந்திர கலையைக் குறித்தும் சில, (2) தைத்திரிய வேதம் போலத் தந்திர கலையைக் குறித்தும் சில, (3) சாமவேதம் போல உபயமுங் குறித்தும் சில, (4) அதர்வண வேதம் போல உலகியலைக் குறித்தும் வருதலின் வேதசம்பந்தமாகியும்."
—மெய்ம்மொழிப் பொருள் விளக்கம். இராமலிங்க அடிகள்.

" தந்திரம் சூத்திரம் விருத்திமூன் றற்கும்
முந்துநூல் இல்லது முதனூல் ஆகும்"
—இறை சூ.1. உரை-மேற்

" நூலாவது: மூவகைத்தாய் ..வருவது
மூன்று வகைகளாவன: தந்திரம், சூத்திரம்,
விருத்தி என இவை."—யா-வி.95'

என்னும் அகச்சான்றுகளும், பிறவும் காண்க.

இவற்றுள் தந்திரம் - தந்திரகலை. சூத்திரம் - மறைபொருள்– இயந்திரம் - மந்திரகலை. விருத்தி - நிலையாயுள்ளது - நிறைவு- முடிவு - மேன்மை - இன்பம் (நாநார்த்தீபிகை - சப்த) - உபதேச கலை.

"சரியை கிரியை யோக பாதங்கள் கற்ப வேறுபாடும், கேட்போரது கருத்து வேறுபாடும் பற்றி ஆகமங்களில் சிறு பான்மை வேறுபடக் கூறப்பட்டுள்ளன. உபதேச கலையின்பாற் பட்ட ஞானபாதமாவது அங்ஙனமன்றி பொருட்டன்மை உணர்த்துவதாகலான், அது பலதிறப் படுதல் பொருந்தாது, ஆதலால், அஃது என்றும் ஒரு தன்மைத்தாய் நிலைத்துள்ளது ஆகும்".

—சிவஞான பாடியம்.

" கருதும் அவர்தங் கருத்தினுக் கொப்ப
அரனு ரைசெய்த ஆகமந் தன்னில்".
—திருமந்திரம் 2385

என்பனவும் ஈண்டுக் கருதத்தக்கன.

1. தந்திரகலை 2. மந்திரகலை 3. உபதேசகலை என மூன்றாக வகுத்து — என்றவற்றுள்:

1. தந்திரகலையாவது - கர்மகாண்டம் ஆகும். சரியை, கிரியை ஆகிய இரண்டு பாதங்களும் இதன்கண் அடங்கும்.

2. மந்திரகலையாவது - உபாசனா காண்டமாம். யோக பாதம் இதன்பாற் படும்.

3. உபதேசகலையாவது – ஞானகாண்டமாகும். இது ஞான பாதம் ஆகும்.

இவ்வாறு சரியை முதலாய நான்கு பாதங்களும் தந்திரம் முதலாய மூன்று கலைகளிலும் அடங்கி நிற்குமாற்றை அறிந்து கொள்க.

மேற்கோள்

"அவற்றுள், 1. சரியை–அலகிடல் முதலியன. 2. கிரியை–பூசை முதலியன. 3. யோகம் – எண்வகை. அவை: இயமம், நியமம், ஆசனம் – இருக்கை, வளிநிலை - பிராணாயாமம், தொகை நிலை – பிரத்தியாகாரம், பொறை நிலை - தாரணை, நினைதல் - தியானம், சமாதி என்பன. 4. ஞானம் - வீடுபயக்கும் உணர்வு – மெய்யுணர்வு. இதனை வடநூலார் தத்துவஞானம் என்பர். (தத்துவம் – உண்மை) இதன் வகை நான்கு. அவை: கேட்டல், சிந்தித்தல், தெளிதல் நிட்டை என்பன."

—சிலப். 14:11. அடியார்க்.

தொகைநிலை – மனஒருக்கம்.

—திருக்குறள். 359. பரிமே.

"தந்திரகலையில் சரியையும் கிரியையும், மந்திரகலையில் யோகமும், உபதேசகலையில் ஞானமும் இந்த நான்கு பாதமும் மூன்று கலையினும் அடங்கும் என்பது அறிக".

—சிவ-சித்தி. சுபக். 13. மறைஞான தேசிகர்.

"சரியை கிரியைகளைச் சொல்லுகிற ஆகமங்களுக்குத் தந்திரகலை என்று பெயர். யோகத்தைச் சொல்லுகிற ஆகமங்களுக்கு மந்திரகலை என்று பெயர். திரிபதார்த்தங்(முப்பொருள்) களைச் சொல்லுகிற ஆகமங்களுக்கு உபதேசகலை என்று பெயர்."

—அளவை அட்டவணை.

"கேட்டலுடன் சிந்தித்தல் தெளிதல் நிட்டை களத்தலென ஈரிரண்டாம் களக்கில் ஞானம்" – சிவ-சித்தி. சுபக். 276. என்பன அறிக.

''சைவாகமமானது, வேதம் ஆகமம் என இருதிறத்தனவா யிருக்கும்'' என்பது காமிகம். இவற்றின் பரியாயப் பெயர்கள். வேதம் – அறிதற்குக் கருவி; வித் – அறிவு. சுருதி – உண்மைப் பொருளைக் கேட்டதற்குக் கருவி. நிகமம் - நியதமான உணர் விற்குக் கருவி. ஆம்நாயம் – தொன்றுதொட்டு வழிமுறையாகப் பயிலப்படுவது. சுயம்பு - சுயம்புவாகிய இறைவனிடத்தினின்றும் தோன்றியது. ஆகமம் – ஞானம் - ஞானநூல் என்பது பிங்கல நிகண்டு, ஆகமம்: என்னும் சொல்லில் ஆ–உபசர்க்கம். கம்–போதல். போய்ச்சேருதல்; எனவே அணுகுதல் என்பது திரண்ட பொருளாகும். ''ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க'':- திருவாச. என்பதில் இப்பொருள் அமைந்திருத் தலைக் காணலாம்.

இனி, ஆகமம் என்னும் மொழியில் ஆ – (ஆணவம்) பாசம். க – பசு ம – பதி. எனப் பொருள் கொண்டு முப்பொருள் களை விளக்குவது என்றும், ஆ – சிவஞானம் ஆக- முத்தி. ம – மலநாசம் எனப் பொருள்கொண்டு ஆன்மாக்களின் மலத் தைக் கெடுத்து, சிவஞானத்தைத் தோற்றுவித்து வீடுபேற்றை அருள்வது என்றும், ஆ – ஆன்மா, பசு; க – கடவுள். ம – மலம் என்றும் பொருள் கூறுவர்.

''சிவனிடத்தினின்றும் வந்ததனாலே வேதமும் ஆகமம் எனப்படும்'' ''யாம், வேத சிவாகமங்களுக்குப் பேதம் காண் கிலோம்.'' என்பர் நீலகண்ட சிவாசாரியர். எனவே சைவாகமம் என்னும் சொல்லானது, சிவனிடத்தினின்றும் வந்த – சிவனால் தோற்றுவிக்கப்பட்ட ஞான நூல் எனப் பொருள் குறித்ததலி னாலே அது வேதம் ஆகமம் என்னும் இரண்டனையும் குறிப்ப தாயிற்று.

வேதம், ஆகமம் ஆகிய இவை இரண்டும் தனித்தனியாக முறையே கர்மகாண்டம், ஞானகாண்டம்; தந்திர கலை, மந்திர கலை எனத் தொகையால் இருபகுதியாகவும்; கர்மகாண்டம் உபாசனாகாண்டம், ஞானகாண்டம்; தந்திர கலை, மந்திர கலை, உபதேசகலை என வகையால் மூன்று பகுதியாகவும்;

தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷகாண்டங்கள்; சரியை கிரியை, யோகம், ஞானபாதங்கள் என விரியால் நான்கு பிரிவாகவும் இருக்கும். இவற்றுள் ஞானகாண்டமானது மறை முடிவு என்றும், உபநிடதம் என்றும்; ஞானபாதமானது ஆகமாந்தம் என்றும், சித்தாந்தம் என்றும் கூறப்படும்.

நான்மறையின் ஞானகாண்டப் பொருளைச் சிவாகமங் களுக்கு மாறுபடாவண்ணம் உள்ளவாறு தெரிவிக்குந் தமிழ் மறைகள் தேவாரம் திருவாசகம் முதலிய செந்தமிழ்ச் சைவத் திருமுறைகளாகும். சிவாகமங்களின் ஞானபாதப் பொருளைச் சுருக்கி வடித்துத் தெளித்து இனிது உணர்த்தும் செந்தமிழ் நூல்கள் சிவஞானபோதம்' முதலான மெய்கண்ட சித்தாந்த சாத்திரங்கள் ஆகும். வேதம் ஆகமம் ஆகிய இரண்டிலும் உள்ள கர்மம், உபாசனை, ஞானம் ஆகிய மூன்று காண்டப் பொருளை யும், சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நாற்பாதப் பொருளையும், தந்திர கலை, மந்திர கலை, உபதேசகலை என் மூன்றாக வகுத்து விரித்துக் கூறுஞ் செந்தமிழ் முதனூல், மூலர் நூலாகிய அடங்கல் திருமந்திர மாலையாகும்.

தேவார திருவாசகத் திருமுறைகளில் வேதப்பொருள்கள் மல்கியும், ஆகமப் பொருள்கள் அருகியும்; திருமந்திரத் திருமுறையுள் ஆகமப் பொருள்கள் பல்கியும், ஆரணப் பொருள் கள் அருகியும் அமைந்துள்ளன என்பர்:—

தேவாரம் வேதசாரம், திராவிடப் பிரகாசிகை பார்க்க.

தெய்வச் செந்தமிழ்ச் சைவத் திருமுறைகள் பன்னிரண்ட னுள் 10–ஆம் திருமுறையாகிய திருமந்திர மலையானது, தோத்திரவடிவாயும், சாத்திரவடிவாயும், 12-ஆம் திருமுறை யாகிய திருத்தொண்டர் புராணமானது வரலாற்று வடிவாயும், ஏனைய திருமுறைகள் 10–ம் தோத்திர வடிவாயும் அமைந்திருத் தலும் கருதத்தக்கன.

மேற்கோள்

"மறைவளருந் தமிழ்மாலை வல்லவர்"- தேவாரம் 2199

"மறையிலங்கு தமிழ்வல்லார் வானுலகத்
திருப்பாரே" — ,, 666

"பழுதிலிறை எழுதுமொழி தமிழ்விரகன் வழிமொழி"
—தேவாரம் 3525

"நான்கு வேதஞ் சரித்தது நன்னெறி -
நாலுபோலெம் அகத்துறைநாதனே" — ,, 1605

"சிந்தைசெய்து ஆகமம் செப்பலுற் றேனே"
—திருமந்திரம் 73

"சிலாங்க வேதத்தைச் செப்பவந் தேனே"
— ,, 77

"சுந்தர ஆகமச் சொல்மொழிந்தானே" — ,, 101

"சரியாதி நான்குந் தருஞானம் நான்கும்"
— ,, 1449

"மறை ஆய்பொருள் - துன்னிய ஆகம
நூலெனத் தோன்றுமே" — ,, 2409

"மூடிமன்னு கூனற் பிறையாளன்றன்னை முழுத்தமிழின் படிமன்னு வேதத்தின் சொற்படியேபர விட்டெனுச்சி அடிமன்ன வைத்த பிரான் மூலன் ஆகின்ற அங்கணனே".

—திருமுறை 11

"வண்தமிழால், எழுதுமறை மொழிந்த பிரான்"
—பெரிய. 1450

"புதிய செந்தமிழ்ப் பழமறை மொழிந்த
பூசுரனார்" — ,, 1865

"உள்ளுணர் வானஞானம் முதலிய ஒரு
நான்குண்மை
தெள்ளுதீந் தமிழாற் கூறுந் திருமூலர்" — ,, 3568

"தண்ணிலவார் சடையார்தாந் தந்தஆ கமப்பொருளை
மண்ணின்மிசைத் திருமூலர் வாக்கினால் தமிழ்வகுப்ப"
—பெரிய. 3591

"ஞானமுதல் நான்குமலர் நற்றிருமந் திரமாலை"
— 3594

" நலஞ்சிறந்த ஞானயோ கக்கிரியா சரியையெலாம்
மலர்ந்தமொழித் திருமூல தேவர்" — 3596

"சாத்திரங்களிற் சிறந்தது திருமூலர் தந்திரம். இது மொத்தம் எண்ணாயிரம் பாடல் அடங்கியது. தோத்திரங்களிற் சிறந்தது திருவாசகம். இவற்றை ஊன்றிக் கவனிக்கவும்" – சுத்தசன்மார்க்கத் திருநெறிக் குறிப்புக்கள் - இராமலிங்க அடிகள். என்பனவும், பிறவுங் காண்க.

திருமூலதேவர் திருநந்திதேவர்பாற் பெற்ற முதனூற் பொருளை இவ்வாறு மூன்றாகப் பகுத்து அருளினார் என்பது.

மேற்கோள்

" மூலன் உரைசெய்த மூவாயிரந்தமிழ்
மூலன் உரைசெய்த முந்நூறு மந்திரம்
மூலன் உரைசெய்த முப்ப துபதேசம்
மூலன் உரைத்தது மூன்றுமொன் றாமே"
—திருமந்திரம் 3046

" மூலன் உரைசெய்த மூவா யிரந்தமிழ்
ஞாலம் அறியவே நந்தி அருளது" — 99

" வைத்த பரிசே வகைவகை நன்னூலின்
முத்தி முடிவிது மூவா யிரத்திலே
புத்திசெய் பூர்வத்து மூவா யிரம்பொது
வைத்த சிறப்புத் தருமிலை தானே", — 100

"மூலன் மடவரை – தந்திரம் ஒன்பது
சார்பு மூவாயிரம்" — 101

"என்னைநன் றாக இறைவன் படைத்தனன்
தன்னைநன் றாகத் தமிழ்ச்செய்யு மாறே" — 81

"நந்தியெம் நாதன் நவையற ஓதினன்"
— 300: 362

"களிம்பறுந் தானெங்கள் கண்ணுதல்நந்தி" — 30: 2

"நந்தி – தாயினும் மும்மலம் மாற்றி" — 30: 4

"மலங்கள் ஐந்தாமென மாற்றி யருளி நந்தி"
— 30: 6

"போதந் தருமெங்கள் புண்ணிய நந்தியை"
— 30: 30

"கடிய பிறப்பறக் காட்டினன் நந்தியே"
—திருமூலர் ஞானோபதேசம் 30: 2

"சிவாயநம என – இருவினை நீங்கிடும் என்றனன்
நந்தியே". —திருமூலர் ஞானோபதேசம் 30: 16

"நாமொன்றும் நந்தி நடுவிசைத் தானே".
—திருமூலர் நடுவணை ஞானம். 30: 19

"அத்தன் வைப்பென்று அருள்செய்தான்
நந்தியே". —திருமூலர் நடுவணைஞானம் 30: 24

"நந்தி உரைத்தார் நலமாயெண் ணாயிரம்
பிந்தி ஆயிரம் பிறங்குமூ வாயிரம்
முந்துமூ வாயிரம் முந்நூறு முப்பது

இந்தத் தொகையெல்லாம் ஏத்துங் குடோரியே". [(1) மந்திரம்–3000, (2) தந்திரம்–300, (3) உபதேசம்–30 = 3330] திருமூலர் மருத்துவத் திருமந்திரம். 1000 : 341 என்னும் அகச்சான்றுகளும் பிறவுங் கண்டுகொள்க. "மூக்கில் – அருவி

மூவாயிரத்து முந்நூற்று முப்பதாகும்'' (—நாடித்திரட்டு செய்-7) என்பனவும் ஈண்டுக் கருதத்தக்கன.

சித்திகளின் வகை 3

அவை, 1. கன்ம சித்தி, 2. யோக சித்தி, 3. ஞான சித்தி என்பன. அவற்றுள் ''கன்ம சித்தியின் வகை 8. யோக சித்தியின் வகை 8. இதன் காலம் - மூன்றே முக்கால் நாழிகை முதல் - 3000 ஆண்டு. ஞானசித்தியின் வகை 8.'' என்பர்.

—இராமலிங்க அடிகள்.

1. எண் கருமம்

என்றது, ஈண்டுத் தந்திரகலையின் பேறாயுள்ள அட்ட கன்மங்களை. அவை: 1. வசியம், 2. மோகனம், 3. தம்பனம் 4. உச்சாடனம் 5. ஆகர்ஷணம் 6 வித்வேஷணம் 7. பேதனம் 8. மாரணம் என்பனவாகும். இவை அட்டகருமம், எண் (வகை) வினை, எண்வினை ஏவல், அட்டகன்மப் பிரயோகம் என்றுஞ் சொல்லப்படும். இவை எட்டும் தந்திர கலைப் பகுதியான இத் திருமந்திரம் முந்நூறில் விரித்துக் கூறப்பெற்றுள்ளன.

மேற்கோள்:

''இடும்பெயர் வசியம் மோகனம் தம்பனம்
அடும்பெயர் உச்சா டனம்ஆ கருணை
இடும்பெயர் ஏடணை பேதம் மாரணம்
தொடும்பெயர் கருமத்திற் சொல்லிய எட்டே''.

—திருமந்திரம் 300: 8

''நம்முதல் ஓரைந்தில் நாடுங் கருமங்கள்''

—திருமந்திரம் 3000: 983

''தன்ற வெதுப்பிடத் தம்பனம் காணுமே.'' — 997

''முரணிற் புதைத்திட மோகனம் ஆகுமே,'' — 998

"துரந்திடும் மந்திரம் சூழ்பகை போக" (பகை-சத்துரு உச்சாடனம்) — 943

"ஓங்காமல் வைத்திட உச்சாடனமே." — 999

"வைச்சபின் மேலோர் மாரணம் வேண்டிலே" — 1000

"வாய்ந்ததோர் வில்லப்பலகை வசியத்துக்(கு)" — 1001

"எண்ணா கருடணை ஏட்டின் உகாரமிட்டு" — 1002

"வேண்டார்கள் கன்மம் விமலனுக் காட்பட்டோர்" — 1008

"தேறிய அஞ்சுடன் சேர்ந்தெழு மாரணம்" — 1285

"கூடிய தம்பனம் மாரணம் வசியம்" — 1287

"மறைவது மாரண மவ்வெழுத் தாகி" — 1301

"மொண்டு கொளும்முக வசிய வதாயிடும்" — 1330

"நாடுடை யார்களும் நம்வச மாகுவர்" —1331

என்னும் அகச்சான்றுகளும் பிறவுங் காண்க. இவ்வகையில் கருவூரார் மாந்திரீக அட்டமாசித்து முதலான சில தனி நூல்களும் உள்ளன.

2. எண் பெருஞ் சித்தி

என்றது, ஈண்டு மந்திர கலையின் பேறாக மதிக்கப்படும் அட்டமாசித்திகளை. அவை: 1. அணிமா 2. லகிமா 3. மகிமா 4. கரிமா 5. பிராத்தி 6. பிராகாமியம் 7. ஈசத்துவம் 8. வசித்துவம் என்பன. இவை எட்டும் இவற்றுக்குரிய சாதனங்களும், பிறவும் மந்திரகலைப் பகுதியாயுள்ள திருமந்திரமாலை மூவாயிரத்துள் 3-ஆம் தந்திரத்தில் விரித்து உரைக்கப் பெற்றுள்ளன.

மேற்கோள்:

"அணிந்தெண் டிசையினும் அட்டமா சித்தி"
—திருமந்திரம் 640

"அணிமாதி சித்திகள் ஆனவை கூறில்" — 668

"எட்டா கியசித்தி எட்டாகும் யோகத்துக்(கு)" — 1310

"அட்டமா சித்திகள் அணைதரு காளத்தி"
தேவாரம் 3189

"அட்டமா சித்தி அருளிய அதுவும்" –திருவாசகம் 2: 63

"எல்லை யிலாதன சித்திகள் வந்தெனை
எய்துவ தாகாதே" — 637

"இந்திரச் செல்வமும் எட்டுச் சித்தியும்"
–திருமுறை-11 28: 7: 46

"நாளும் நம்பி யாரூரர் நாமம் நவின்ற
நலத்தாலே–ஆளும் படியால் அணிமாதி
சித்தி யான அணைந்ததற்பின்" -பெரிய. 1716

"மற்றவர்தாம் அணிமாதி வருஞ்சித்தி
பெற்றுடையார்" –பெரிய. 3570

"அணிமா மகிமா விலகிம அரிய கரிமாப் பிராத்திமலப்
பிணிமா சுடையோர்க் கடைவரிய பிராகாமியமீ
சத்துவ மெய்
துணிமா யோகர்க் கெளியவசித் துவமென்
றெட்டாம் இவையுளக்கண்
மணிமா சறுத்தோர் விளையாட்டின் வகையா
மவற்றின் மரபுரைப்பாம்."
— திருவிளையாடற் 33. அட்டமாசித்தி உபதேசித்த
படலம். 22-28.

என்பனவும் பிறவுங் காண்க.

3. எண் குணம்

என்றது, ஈண்டு உபதேசகலையின் பயனாக உணரப்படும் அருள்ஞான குணங்கள் எட்டினையும் ஆகும். அவை: 1. தன்வயத்தனாதல் 2. தூய உடம்பினனாதல் 3. இயற்கை உணர்வினனாதல் 4. முற்றும் உணர்தல் 5. இயல்பாகவே பாசங்களின் நீங்குதல் 6. பேரருள் உடைமை 7. முடிவிலாற்றல் உடைமை 8. வரம்பில் இன்பம் உடைமை என்பன ஆகும். "இவ்வாறு சைவாகமத்துக் கூறப்பட்டது." என்றார் பரிமேலழகரும். —திருக்குறள் 9. உரை.

இவற்றை வடநூலார் 1. சுவதந்திரத்துவம் 2. விசுத்த தேகம் 3. நிராமயான்மா 4. சர்வஞ்ஞத்துவம் 5. அநாதி போதம் 6. அலுப்த சத்தி 7. அநந்தசத்தி 8. திருப் (பூர்த்)தி 7. அநந்தசத்தி 8. திருப் (பூர்த்)தி என்பர்.

மேற்கோள்

"இருந்தான் உணர்ந்து எட்டே," -திருமந்திரம் 1

"கொடையுடை யான்குணம் எண்குணம்
ஆமே" — 444

"எட்டுக் கொலாமவர் ஈறில் பெருங்குணம்"
-தேவாரம் 4342

"எட்டு வான்குணத்து ஈசன்" — 6109

"கழற்சே வடியடைந்தார் களைகண் எட்டும்." — 6591

"எண்குணத்துளோமே" — 7214

"இயக்கி மாரறுபத்து நால்வரை எண்குணஞ்
செய்த ஈசனே" -திருவாசகம் 472

"எல்லையி லாதன எண்குண மானவை
எய்திடு மாகாதே" — 639

" எழுவகை இரதமும் எண்வகை ஞானமும்."
—திருமுறை 11 14:53

" எண்குணத்தான் - தாளை வணங்காத்தலை."
—திருக்குறள் 9

" தன்வ யத்தவன் தூயவு டம்பினன் தானியற்கை
உணர்வினனாகுதல்
பன்னும் முற்ற வுணர்தல் இயல்பினிற் பாசம்
நீங்குதல் பேரருள் ஆகுதல்
மன்னும் ஈறில ஆற்றல் உடைமையும் வரம்பில்
இன்பமும் ஆகிய எண்குணம்
இன்ன வாகச்சை வாகமம் ஓதுமெம் ஈசன்றாளையெப்
போதும் இறைஞ்சுவாம்."

" சர்வஞ்ஞ தாதிருத்தி அநாதி போதம்
அறைசுதந் தரதா அலுத்த சத்தி
நிறையநந்த சத்தி நிராமய வான்மா
செறிவிசுத்த தேகம் இவைசிவத் துவமே."
—சர்வஞானோத்தரம்.

'சித்தவிகற் பங்யகளைந்து...இருந்தார்', என்பது. ருத்தி தொண்டர் புராணத்துள் திருமூலர் வரலாற்றில் உள்ள பகுதி.
—பெரிய. 3588, 3593.

"நின்மல துரியாதீதம் ஆகிய சாக்கிராதீதம்"
என்பதற்கு உதாரணம் வருவாறு.

மேற்கோள்

"சாக்கிரா தீதம் பரன் உண்மை தங்குமே"
—திருமந்திரம். 2212

"சாக்கிரா தீதந் தனிற்சுகா நந்தமே." —2253

"சாக்கிரந் தன்னில் அதீதந் தலைப்படில்
ஆக்கிய வந்த வயிந்தவ மானந்தம்
நோக்கும் பிறப்பறும் நோன்முத்தி சித்தியாம்
வாக்கும் மனமும் மருவல்செய் யாவே." —2265

"பொற்புறு கருவி யாவும் புணராமே அறிவி லாமைச்
சொற்பெறும் அதீதம் வந்து தோன்றாமே
தோன்றி நின்ற
சிற்பரம் அதனால் உள்ளச் செயலறுத் திடவு திக்கும்
தற்பரம் ஆகி நிற்றல் சாக்கிரா தீதந் தானே."
—சிவப்பிரகாசம் 80

"நீக்கமில் சிவத்துடன் நிலைபெற நிற்கும்
சாக்கிரா தீதத் தன்மைசாற் றியது." —கொளு

என்பன காண்க.

"மூவகையால் வரும் இடையூறுகள் ஆவன :-

1. தன்னைப்பற்றி வருவனவும் 2. பிற உயிர்களைப் பற்றி வருவனவும் 3. தெய்வத்தால் வருவனவும் ஆகும். இவற்றை வடநூலார் ஆத்தியான்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம் என்றும் இம்மூன்றையும் தாபத்திரயம் என்றுங் கூறுவர்.

மேற்கோள்

"ஆதி தைவிகம் ஆதி பௌதிகம்
ஆதி யாத்தியான் மிகமென ஓதிய
துக்கம் மூன்றினுள்" ஞானாமிர்தம் 26

"பிறவித்துன்பங்களான: 1. தன்னைப் பற்றி வருவனவும் 2. பிற உயிர்களைப்பற்றி வருவனவும் 3. தெய்வத்தைப் பற்றி வருவனவும் என மூவகையான்-வருந்துன்பங்கள். அடிசேர்ந் தார்க்கும் அவ்விரண்டும் இன்மையின் அவைகாரணமாக வரும் மூவகைத் துன்பங்களும் இலவாயின."

திருக்குறள். 4. பரிமே. உரை. என்பன அறிக.

"மாணாக்கர்" என்றது, ஈண்டுத் திருமூல தேவரின் நேர் முக மாணாக்கர் எழுவரையும், அவர் வழியில் வந்தோர் எண் மரையும், அம்மரபில் மேலும் வருவோரையும் குறித்து நின்றது.

நேர்முக மாணாக்கர் எழுவராவார்:—

மேற்கோள்

1. இந்திரதேவர் 2. பிரமதேவர் 3. விட்டுணுதேவர் 4. உருத்திரதேவர் 5. கந்துரு மாமுனிவர் 6. காலாக்நி உருத்திரர் 7. கஞ்சனூரர் மலையமான் என்பவராவார்.

"மந்திரம் வந்த வழிமுறை மாலாங்கன்
இந்திர னோடு பிரமன் உருத்திரன்
கந்துருக் காலாங்கன் கஞ்ச மலையமான்
இந்த எழுவரும் என் வழி யாமே." —69

"இருந்தவக் காரணம் கேள்இந் திரனே."
—திருமந்திரம் 75

"மாலாங்க னேயிங்கு யான்வந்த காரணம்" — 77

அவர் வழியில் வந்தோர் எண்மராவார்:—

1. காலாங்க தேவர் 2. அகோர தேவர் 3. திருமாளிகைத் தேவர் 4. நாதாந்த தேவர் 5. பரமாநந்த தேவர் 6. போக தேவர் 7. திருமூலதேவர் 8. நிராமய தேவர் என்பவராவர்.

மேற்கோள்

"கலந்தருள் காலங்கர் தம்பால் அகோரர்
நலந்தரு மாளிகைத் தேவர்நா தாந்தர்
புலங்கொள்பர மானந்தர் போக தேவர்
நிலந்திகழ் மூலர் நிராமயத் தோரே."
—திருமந்திரம் 102

அவர்தம் மரபிற் பின்னர் வந்தோர் பலர். அவராவார்:-

1. இடைக்காடர் 2. சின்மயதேவர் 3. அனந்த தேவர் 4. வெளிகண்ட நாதர் 5. போகநாதர் 6. திரு மாளிகைத் தேவர் 7. கருவூர்ச்சித்தர் 8. இபர் 9. மௌனகுரு 10. தாயுமான அடிகள் முதலியோராவர்.

மேற்கோள்

"ஞானாவரண சந்தான குரவர் திருமூலர், மெய்கண்ட தேவர் முதலியோராக எண்ணப்படுவர். இவர்வழி அளவின்றிப் பரப்பிற்றாதலின் ஈண்டு எழுதிற் பெருகும். அது சந்தான வரலாற்றிற் காண்க. இவருள், திருமூல தேவர் சந்தான நூலாக இக்காலத்தும் அடுத்து வழங்குவது திருமந்திர மாலையாம். இக்காலம் அடுத்து வழங்காது இறந்தன:—

1. ஆதி மெய்ஞ்ஞானம் 2. பழுதறு மெய்ஞ்ஞானம் 3. ஒளி விளங்கு மெய்ஞ்ஞானம் 4. சிவானந்த விளக்கம் 5. நாதாந்தம் 6. அறிவாநந்தம் 7. தற்பிரகாசம் 8. பதியோக மாலை 9. சிவானந்த நிலையம் 10. அத்துவசித்தி 11. பிராசாதசித்தி 12. ஞான சித்தி 13. சிவானந்த சித்தி 14. தத்துவ சித்தி 15. அவத்தாசித்தி 16. சாம்பவசித்தி 17. போதசாரம் 18. அதிசய மாலை 19. சிவஞானதிட்டி 20. சிவானந்த சதகம் 21. போத அமுதம் 22. ஞானசூளாமணி 23. ஈரடிக்குறள் 24. பரமார்த்த சதகம் 25. சந்தான அகவல் 26. உண்மை மும்மணி முதலாயின சைவ நூல்களும், 27. மெய்ந்நெறி விளக்கம் 28. பொருள் நெறி விளக்கம் 29. மயேச்சுரர் யாப்பு 30. அணியியல் முதலான கருவி நூல்களும் 31. திருவாவடுதுறை மும்மணிக்கோவை 32. நான் மணிமாலை 33. குடந்தைக்கோவை 34. குடந்தைக் கலம்பகம் 35. ஆளுடைய பிள்ளையார் ஒலிய (ல) ந்தாதி முதலாயின பிரபந்தங்களும் ஆம். இவற்றுள், ஒலிய(ல)ந்தாதி வழங்குவது போலும். இவ்வாறே ஞானாவரண சித்தாந்த குரவர் இயல்பு வந்தவாறு காண்க".

—முத்தி நிச்சயம். பாட்டு 1,2. பேருரை

"மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன் மரபில்வரும் மௌனகுருவே." (மந்த்ரம்-மந்திரகலை. தந்த்ரம்-தந்திரகலை. மௌனம்-மோனம்-ஞானம்-உபதேசகலை. "மோனம் என்பது ஞான வரம்பு"- ஔவையார்.)- தாயுமான அடிகள் என்பனவும், இற்றைக்கு 75-ஆண்டின் முன்னர், ஆலங்குடி சுவாமிநாத தேசிகர் என்பவரால் வெளியிடப்பட்ட "சித்தாந்தப் பிராதாகிய மைனர் வாக்குமூலம்" என்னும் புத்தகத்தில் நூலாசிரியர் வரலாறும், பிறவுங் காண்க.

"இடையூறு நீக்குதற்கு உரிய கடவுள்"

என்றது விநாயகக் கடவுளை இவர் தொடங்குங் கருமத்தின் முதலில் தம்மை எண்ணிப் போற்றியவர்களுக்கு இடையூறுகளை நீக்கியும், அல்லாதாருக்கு இடையூற்றை விளைவித்துப் பின்பு தம்மை வழிபடச் செய்வித்து ஆட்கொண்டும் அருள் புரிபவர் ஆதலின் இந்த இருபொருளுந் தோன்ற விக்நேசர் எனப் பெயர் வழங்கப்பெறுவர். விக்னேசர்-விக்கினங்களை நீக்குதற்கும், அவற்றை விளைவித்தற்கும் தலைவர் என்றபடி. விக்கினம்-இடையூறு.

மேற்கோள்:

"தனதடி வழிபடும் அவர் இடர்-கடிகணபதி."
—தேவாரம். 1330

"குமரனும் விக்கினவிநாயகனும்...போற்றிசைப்ப"
—தேவாரம். 6379

"என்னை நினைந்தடிமை கொண்டென் இடர்கெடுத்துத்
தன்னை நினையத் தருகின்றான்"
—திருமுறை 11. 31: 1

"நம்மேல்-இடையூறு நீக்குவதும் எல்லாம்......
ஆனைமுகத் தானைநினைத் தால்."
—புறப்-வெண்பாமாலை. கடவுள் வாழ்த்து,

"விக்கின சமர்த்தன் எனும்பெருமாளே."

—திருப்புகழ். 3

என்பனவும், பிறவுங் காண்க.

அன்றியும்; விநாயகர் திரிபுர தகனத்தின் முன்னர்த் தம்மைப் போற்றாமையின் அது நிகழாதபடி முதற்கண் இடையூற்றை விளைவித்தும், பின்னர்த் தம்மைப் போற்றவே இவ்விடையூற்றை நீக்கி அருள் புரிந்தமையும், பிறவுங் கூறும் புராண கதை முதலியனவுங் கருதுக.

மேற்கோள்:

"அன்புத வச்சுற்று காரழல் கொண்டெயில் மூன்றெரிய
வன்புத வந்துந்தை மாட்டுகின் றான்மதஞ் சூழ்மருப்பிற்
கன்புத வக்கரந் தாளமிட்டோடிக் கடுநடையிட்
டின்புத வச்சென்று நீயன்று காத்த தியம்புகவே."

—திருமுறை. 11. 25: 9

"முப்புரம் எரிசெய்த அச்சிவன் உறைரதம் அச்சது
பொடிசெய்த அதிதீரா—திருப்புகழ். 1

"யானைவலிபாடுவாம்-யானையின் வலியாவது: திரிபுர
தகனத்தில் இடையூறு தீர்த்ததும், பிறவுமாம்."

தக்க. 3 உரை.

என்பனவுங் காண்க.

"செய்யுளாற் கூறுகின்றார்"

என்றது, அகத்தே செய்துகொண்ட கடவுள் வணக்கமே அமைவதாகப் புறத்தேயும் வேறு கூறியது எற்றுக்கு? என்றெழும் ஐயத்தை நீக்குதற் பொருட்டு என்க.

இதுகாறும் தலைப் பெயர்களைப் பற்றிய விளக்கங்களும், தோற்றுவாய் என்னுந் தலைப்பிற் குறிக்கப்பட்டுள்ளவற்றின் விளக்கங்களும் வரையப்பெற்றன. இனி, இம்மங்கல வாழ்த்துச் செய்யுளின் பொருள் வருமாறு:

இத்திருமந்திரம், நூன்முகத்து உரைக்கப்படும் முன்னவன் காப்பு ஆகிய கடவுள் வாழ்த்தினை உணர்த்துகின்றது.

ஐந்து திருக்கைகளை உடையவராயும், யானையினது முகம் போன்ற திருமுகத்தை உடையவராயும், திங்களின் கலையாகிய இளம்பிறை போலும் மருப்பினை உடையவராயும் சிவபெருமானுடைய திருமகனாராயும், தம்மைப் போற்றும் அயரா அன்பினரான அடியார்களின் சித்தத்தே எழுஞ் செழுஞ்சுடர் ஒளியாய்த் திகழ்பவராயும் உள்ள மூல முதற்பொருளை என் சித்தத்தே வைத்துத் தியானித்து அவருடைய இரண்டு திருவடிகளையும் எண்ணி இறைஞ்சி ஏத்துகின்றேன் என்பதாம்.

எனவே நீவிரும் அவ்வாறு போற்றுமின்; போற்றினால் எல்லாக் கலைஞானங்களும், அவற்றின் பேறாயுள்ள எல்லாச் சித்திகளும் எளிதின் எய்தும் என்றவாறாயிற்று.

குறிப்புரை

முன்னவன் காப்பு-விநாயகர் காப்பு. முன்னவன் எக்கருமருகட்கும் முன்னாகக் கருதிப் போற்றப்படுவன்-விநாயகன். -நிகண்டு. 'முன்னவனே யானை முகத்தவனே முக்திநலம்—சொன்னவனே.

—சிவநேச வெண்பா. காப்பு. இராமலிங்க அடிகள்

கரம்-கிரியைகளைச் செய்வதாகாலன் ஐந்து கரம் என்பது கன்மசித்திகளைக் கூறும் தந்திர கலைத் திருமந்திரம் மூந்நூறையும், யானை முகமும், அதன் நடுவே நீண்டு தொங்கும் துதிக்கையும் எல்லாவற்றுக்கும் மூலமாயுள்ள மந்திரமாகிய ஓங்காரத்தையும், யோக நெறிக்குச் சாதனமாயுள்ள குண்டலினி—சுழுமுனா நாடியையும் குறித்தலினாலே அது, யோக சித்திகளைப் பற்றிக் கூறும் மந்திர கலைத் திருமந்திரம் மூவாயிரத்தையும், இந்தின் இளம்பிறை எயிறு என்பது ஞானத்தைக் குறித்தலினாலே, அது ஞான சித்தியைப்பற்றி யுணர்த்தும் உபதேசகலைத் திருமந்திரம் முப்பதையும் குறிக்கும்.

மேற்கோல்

"ஓம் என விநாயகன் உலாவி நின்றானே."

—திருமந்திரம்

"இடக்கை வலக்கை இரண்டையும் மாற்றித்
துதிக்கையால் உண்பார்க்குச் சோரவும் வேண்டா"

—801

கையினுள் வாயுக் கதித்தங் கெழுந்திடில்" —820

"யானையானது எங்ஙனம் துதிக்கையினலேயே எப்பொழுதும் தூய்மையாயுள்ள தண்ணீரைப் பருகுமோ அங்ஙனமே சுழுமுனையின் வச்சிரக் குழாய் வழியே வளியை உட்கொள்ளவேண்டும்."

—யோகசிகோப நிடதம்

"வித்தக மருப்புடைய பெருமாளே" (வித்தகம்-ஞானம்)

—திருப்புகழ் 3

"ஞானச் செயல் காட்டும் ஒரு கோட்டின் இருகோட்டு
வெண்பிறை"

—திருக்குற்றாலப் புராணம்

"பாவனையை மருப்பெடுத்து நன்கு காட்ட"

(பாவனை-சிவோகம் பாவனை)

—வீரசிங்காதன புராணம்

நந்தி மகன்: நந்தி என்பது சிவபெருமானுக்கும் நந்தியெம்பெருமானுக்கும் பெயர். இஃது ஆனந்தத்தை விளைவிப்பவன்-ஆனந்தமயமாயிருப்பவன் எனப் பொருள்படும் ஈண்டு சிவபெருமானைக் குறித்தது. உலகில் மக்கள் மாட்டுச் செய்யும் வழிபாடு முதலியன அவர்தம் தந்தையர்க்குப் பேருவகை பயத்தல் பற்றியும், மூத்த மகன்பால் தந்தைக்கும், இளைய மகன்பால் தாய்க்கும் அன்பு மிகும் என்னும் உலகியல்பு பற்றியும்

மூத்த பிள்ளையாராகிய விநாயகப்பெருமானை நந்தி மகன் என்றார்,

மேற்கோள்

"பெற்றவள் இளவல் எற்கே என்றனள் பிதாமுன்
என்றான்"

கம்ப. மிதிலைக். 121

"முன்னீன்ற தநயர்பாற் றந்தையருண் முழுதிருத்தப்
பின்னீன்ற தநயர்பாற் பாற்றாயுவக்கும் பெரிதென்பர்"

—உபதேச காண்டம்

"மூத்த மகன் இடத்தார்வம் ஈன்றெடுத்த
பிதாவினுக்கு முதிரும்" —விநாயக புராணம்

"மூத்தாரைப் பிதா விரும்பலும், இளையாரைத் தாய்
விரும்பலும் உலக வழக்கு என உணர்க"

—தக்க உரை 295

"உலகத்துப் புதல்வர்கண் மாட்டுச் செய்யும் வழிபாடு
தந்தையர்க்குக் கழிபேருவகை பயப்பிக்கும்"

—சிவஞான முனிவர்

என்பன காண்க. சிவபெருமானுக்குரிய பெயர்கள் பலவாகவும் இப்பெயரினைக் கிளந்தெடுத்துக் கூறியது எற்றுக்கெனின்? தமக்குச் சிவஞானோபதேசம் செய்தருளிய முதற் பெருங் குரவரின் திருப்பெயராயும் இருத்தலினாலும் குருவே சிவனா தலின் அவரை வேறாக வைத்துப் போற்றக் கூடாமையானும், இம்மந்திர நூலின் அடுத்து வரும் திருமந்திரச் செய்யுளில் வைத்து உபதேசிக்கப்பெறும் மூல வித்தையையும், புவனாபதி சக்கர உபாசனையையும் தமக்கு அருளிய தமது அருட்குரவரை யும் உளங்கொளற் பொருட்டென்க.

ஞானக்கொழுந்து:— தன்னைத் தியானிப்பவரது ஞானத் தின் எழும் கொழுந்து. ஞானம்-ஈண்டுப் பரஞானம். "அறிவுத்

தொழின் மாத்திரையான் வழிபடுவது ஞானம்'' என்பர் சிவஞான முனிவர். — சிவஞான பாடியம். சூ 8, அதி. 1. கொழுந்து - செந்தீச்சுடர். ''சுடர் தீயினால் நெடிதாகிய கொழுந்தினையுடைய நெருப்பால்''

—கலித். 137:20-21 நச்.

ஒப்புமைப்பகுதி மேற்கோள்

''அங்கியிற்கூடி-நணுகினும் ஞானக்கொழுந்தொன்று நல்கும்''
—திருமந். 420

''நணுகினும் ஞானக் கொழுந்தொன்று நல்கும்''
— 1526

''நினைக்குறி யாளனை ஞானக் கொழுந்தின்'' — 1565

''கொழுந்தினைக் காணிற் குவலயந் தோன்றும்''
— 1769

''வானோர் வணங்க மறைமேல் மறையாகி
ஞானக் கொழுந்தாகி நடுக்கின்றி யேநிற்பாய்''
—சிலப். 12: முன்னிலைப். 8

''ஞானக் கொழுந்தினை நினைந்தேற்கு உள்ளம் நிறைந்ததே''
—தேவாரம் 4305

''குரைகடல் ஏழுடைய கோனை ஞானக் கொழுந்து தன்னை''
— 7913

''தில்லைமல்கு செம்பொனின் அம்பலத்துக்கோனை
ஞானக் கொழுந்து தன்னை''
—திருவிசைப்பா 198

''ஞானக் கொழுந்தது வாகிய கூத்தனே'' — 260

''ஞானக். கொழுந்து நகராசன்றன் மடந்தை''
—திருமுறை 11 : 8 : 12

"மூலத் தெழுந்த மூர்த்தியா னவனே-
ஞாலம் படைத்த ஞானக் கொழுந்தே"
—புவனை (சிவகாமியம்மை) அகவல்

"கோதில் மெய்ஞானக் கொழுந்தனையார்"
பெரிய புராணம் 2226

"ஒன்றாய்ப் பலவாய்...குன்றாத ஞானக் கொழுந்தாய்...
நின்றான்"
இராமாவதாரம் காப்பு

"குன்றாத மூவுருவாய் ஞானக் கொழுந்தாகி
அறுசமயக் கூத்துமாடி"
–தாயுமான அடிகள்

"நெடியகுணக்-குன்றே மெய்ஞானக் கொழுந்தே
அருட்கடலே"
—சுப்பிரமணிய தேசிகர் நெஞ்சுவிடுதூது 304

என்பன பலவும் காண்க. இவற்றால் விநாயகர் அம்பிகையின் திருக்குமாரர் என்பதும் போதரும்.

புந்தியில் வைத்து:—தியானித்து.புந்தி-புத்தி-அறிவு-ஆன்மா. வைத்தல்-நினைத்தலும், மறத்தலுமின்றி இடைவிடாமற்றி யானித்தல். "பொறியின்றி ஒன்றும் புணராத புந்திக்கு- அறிவென்ற பேர் நன்றற."-திருவருட்பயன் 15. "சிந்தையில் அவன்றன் சேவடி வைத்து"-வைத்தல்–நினைத்தல்–தியானம்"- சிலப். 11 : 106. என்பனவும் நோக்குக. வைத்து–என்றது ஈண்டு உபசார வழக்கு; உபசாரமாவது: ஒன்றனை அஃதன் றெனத் தெரிந்திருந்தும் அதுவாக வழங்குதல். சையோகசம்பந்த வாசகத்தை, சமவாய சம்பந்தத்திற்கு உரைத்தமையால் உபசாரமாயிற்று. "புயங்கன் தாளே புந்திவைத்திட்டு"-திரு வாசகம் 610. "மனத்து உன்னை வைத்தாய்"–தேவாரம். 'என்சித்தத்தே-தன்னை வைத்து"–என்னறிவின் கண்ணே தற்சொரூபத்தை விளக்குதற்கு எழுந்தருளி வந்து; வைத்து–

என்றது உபசார வழக்கு; "அன்போடியைந்த வழக்கு" (-திருக்குறள்) என்றாற்போல."

—சித்தியார் 3. சிவஞான முனிவர்.

என்பனவும் நோக்குக.

அடிபோற்றுகிறேன்: அடி-இறைவனுடைய திருவுருவம் அருளே யாகலான் அவனுடைய திருவடிகள் 2-ம் ஞானக்கிரியா சக்திகள் ஆகும். ஞானசக்தியானது ஆணவமல இருளின் வலியைக் கெடுத்து ஞானம் விளங்கச் செய்யும். கிரியாசத்தி யானது வினையை நீக்கும். ஆதலால் ஈண்டுத் திருவருளை அடி என்றதும் உபசார வழக்கெனக. 'சிவன்அடி சென்னி சேர்ப்பாம்"-சிவன்அடி என்றது உபசாரம்." (-சித்தி 2. சிவ ஞானமுனிவர்) என்பதும் அறிக.

அன்றியும் ஞானம்-உபதேச கலையையும், கிரியை-தந்திரம் மந்திர கலைகளையும் உணர்த்துவனவாம். எனவே தந்திரம், மந்திரம், உபதேசம் ஆகிய மூன்றும் கிரியை, ஞானம் என்னும் இரண்டில் அடங்கி நிற்கும் என்க. இதனானே வேதமானது கன்மகாண்டம், உபாசனா காண்டம், ஞானகாண்டம் என 3-பிரிவாகவும், இவற்றுள் உபாசனையானது கன்மத்துள் அடங்கி நிற்றல் பற்றிக் கன்மகாண்டம், ஞானகாண்டம் என 2-பிரிவாகவும் வைத்து எண்ணப்படுவதாயிற்றென்க. எனவே இறைவனுடைய திருவடிகள் 2-ம் மந்திரதந்திர உபதேச கலை களின் சொரூபமாமாற்றை உய்த்துணர்ந்துகொள்க. இதுபற்றியே 'தொழுகின்றேன்' 'வணங்குகின்றேன்' என்னாது 'போற்று கிறேன்' என்றாரென்க. இம்மரபு திருத்தொண்டர் புராணத்துட் பெரிதும் பயின்று வருதலையுங்கண்டு கொள்க.

மேற்கோள்

"மந்திரம் ஆவதும் மாமருந் தாவதும்
தந்திரம் ஆவதும் தானங்கள் ஆவதும்
சுந்தரம் ஆவதும் தூநெறி யாவதும்
எந்தை பிரான்றன் இணையடி தானே".

—திருமந்திரம். 1604

"அடியாரைப்-பரிந்துகாப்பன் பத்தியில் வருவன்
மத்தமாம்பிணி

நோய்க்கு-மருந்துமாவன மந்திரம் ஆவன...
இணையடித்தலந்தானே".
—தேவாரம் 216

"அழுகெழுதலாகா அருட்சேவடி". — 6300

"உரைமாலை யெல்லாம் உடைய அடி". — 6303

மந்திரமும் தந்திரமும் ஆய அடி. — 6304

"மந்திர தந்திர யந்திர பாதா"
— இராமலிங்க அடிகள்

"புகலூர்வரும் அந்தணர்திறம் போற்றலுற்றாம்".
—பெரியபுராணம். 1021

காலுந் தலையும் அறியார் கலதிகள்
காலந்தச் சத்தி அருள் என்பர் காரணம்
பாலொன்றும் ஞானமே பண்பார் தலைஉயிர்
காலந்த ஞானத்தைக் காட்ட வீடாகுமே.
— திருமந்திரம். 2425

என்பனவும் பிறவுங் காண்க.

இத்திருமந்திரத்துள் இறைவனுக்குரிய முடி, முகம், கை எயிறு, அடி ஆகிய அங்கசாங்கப், பிரத்யங்க, உபாங்கங்கள் சொல்லப்பட்டிருத்தலையறிக. முகம், கை, எயிறு என்பதே முறைமையாயினும், அவ்வங்கங்களின் கிடக்கை முறைமை கருதாது, தாங்கூறும் பொருள்களின் வைப்பு முறையே கருதினா ராகலின் அதற்கியைய கை, முகம், எயிறு என முறைப்படுத் தோதி யருளினாரென்க.

இங்ஙனம், நூல்நுதல் பொருள்களையெல்லாம் ஒருவாற்றாற் புலப்படுத்தி நிற்றல் மங்கல வாழ்த்துக்கு இலக்கணமென்க. இதனானே இது பொருளியல் புரைத்தல்' என்னும் வணக்க

மாயிற்று. இவ்வாறே சிவஞானபோதம், சிவஞான சித்தியார் முதலான நூல்களில் உள்ள மங்கல வாழ்த்துக்களிலுங் கண்டுகொள்க.

இச்செய்யுள். அடங்கல் திருமந்திரமாலையுள் அடங்கியுள்ள திருமந்திரம் 3000-300-30 ஆகிய மூன்றுக்கும் உரிய மங்கல வாழ்த்துச் செய்யுளாக அமைந்திருத்தல் பற்றியும், பொருளியல் புரைத்தல் என்னும் மங்கலமாக அமைந்திருத்தல் பற்றியும், பண்டை உரையாசிரியர்களின் மரபுபற்றியும் சிறிது விரித்து உரைவரையப் பெற்றது. முன்னர்க் காட்டப்பட்ட மேற்கோள் களுட் சில, பின்னருங் காட்டப் பெற்றிருத்தல் வெவ்வேறு கருத்துக்களை விள்க்குதற் பொருட்டாகும். மேல் வருவனவும் அன்ன.

மூலமந்திரம்

மூலவித்தை—ஸ்ரீவித்தை — காதிவித்தை

2. ககராதி ஓரைந்துங் காணிய பொன்மை
அகராதி ஓரா றரத்தமே போலும்
சகராதி ஓர்நான்குந் தான் சுத்த வெண்மை
ககராதி மூவித்தை காமிய முத்தியே.

பாட பேதம்

1. ககாராதி யோர்நான்குங் காணிய
2. அகராதி - யகாராதி யோரா றரத்தமலர் போலும்- யகராதி யோரக் கரத்தமே போலும் - யகாராதி யைந்து மரத்த நிறமாகுஞ்-மகராதி யோராறரத்தமே போலுஞ்
3. சகாராதி-சகராதி மூன்றுந்-நகராதி நாலஞ்சுந்-நகாராதி நாலைஞ்சுந், வெண்மையாம்.

4. ககாராதி மகராதி - மகாராதி - ககராதி வித்தை, ககாராதி வித்தைக்-ககராதி மூவைந்துங் காமிய.

1-4. ககராதி .. முத்தியே உ இது, பஞ்சதசியாச்சரி (பஞ்சதசாக்கரி). க-எ (ஏ)-இ (ஈ)-ள (ல)-ஹ்ரீம்-ஐயும்; அ (ஹ)-ச (ஸ) க-அ (ஹ)-ள (ல)- ஹ்ரீம்-கிலியும்; ச(ஸ)-க-ள (ல)-ஹ்ரீம்-டம்-சௌவும்-புவனாபதை (த) யே சிவாக (சுவாகா). உ. வாலைபுவனை வடிவுள்ள ராச மாதங்கி பாதார விந்தயே கெ (க) தி-குருவே துணை.

குறிப்பு:

இதுவரையும் எனக்குக் கிடைத்துள்ள இந்நூலின் மூலச் சுவடிகள் எல்லாவற்றிலும் இதனையடுத்துவரும் "முடித்தவிம் மந்திரம் மூலமதாகும்" என்னும் (3-ஆம்) செய்யுளே இந்நூலின் முதல் திருமந்திரமாகக் காணப்படுகின்றது. 11-ஆம் இலக்க மிட்டுள்ள சுவடியில் மட்டுமே அதன் முடிவில் ஆண்டு இருத்தற் குரிய இயைபின்றி இச்செய்யுள் வரையப்பெற்றுள்ளது.

திருமந்திரமாலை மூவாயிரத்தில் உள்ள புவனாபதி சக்கரம் என்னும் அதிகாரத்தின் முதற் செய்யுளாகக் காணப்படும் இம் மந்திரச் செய்யுளானது, இந்நூலுள் இதனையடுத்துவருந் திருமந்திரச் செய்யுளின் பொருளியைபும், தொடையியைபும், முதலும் முடிவும் மாறுகோளின்றிப் பொருளான் மண்டலித்து முடிந்து நிற்கும் அமைப்பும், பிறவும் பற்றி இந்நூலின் முதற் செய்யுளாக இருத்தல் வேண்டும் என்னும் ஊகத்தால் ஈண்டு மேற்கொள்ளப்பட்டது.

இதுபற்றித் திருமந்திர மாலை மூவாயிரத்துள் 4 - ஆம் தந்திரத்தில் உள்ள புவனாபதி சக்கரம் என்னும் தலைப்பினை யுடைய அதிகாரத்திலும், அதற்கு முன்னரும் பின்னரும் உள்ள அதிகாரங்களிலும் வரும் செய்யுட்களின் அமைப்பும் நோக்கத் தக்கன. திருமூலதேவர் அருளியனவாயுள்ள ஏனைய மந்திர கலையும், உபதேச கலையும் ஆகிய மூவாயிரமும், முப்பதுமான

இரு நூல்களின் முதலும் முடிவும் இவ்வாறே மண்டலித்து நிற்கும் அமைதியும் கருதத்தக்கது.

இச் செய்யுளானது; யந்திரராசன் என்றும், மந்திரராசன் என்றும் சிறப்பித்துக் கூறப்படுவதாயும், குருவின் அருளுபதேசத்தாற் பெறத்தக்க அருமறைக் கேள்வியாயும், பெரிதும் மறைவாகக் கொண்டு பேணிப் போற்றி வரத்தக்க பெரும் பெயர்ப் பொருளாயும் உள்ள புவனாபதியின் மூலமந்திரமான ஸ்ரீவித்தையை வெளிப்படுத்துவதாக இருத்தலினாலே, இம் மந்திரத்தை ஈண்டு வெளிப்பட ஏட்டின் புறத்தே எழுதி வைக்காமல் விடுத்து, வாய்மொழி உபதேச மரபில் அகத்தே வரைந்து வைத்துச் செவியறிவுறுத்தி வந்தனர் போலும்.

மேற்கோள்:

"கிட்டா தொழிந்தது கீழான மூடர்க்கே"

—திருமந்திரம் 1310

"ஏதும் பலமா மியந்திர ராசனை
ஓதிக் குருவின் உபதேசம் உட்கொண்டு."

—திருமந்திரம் 1311

"யாவர்க்கும் எட்டா இயந்திர ராசனை
நீவைத்துச் சேமி நினைந்தது தருமே." — 1318

"ஒரெழுத் தாகிய மந்திர ராசனென் றோதரிய
பேரெழுத்தும்."

—புவனை கலைஞான தீபம் 80

"மந்திர ராசனை ஈரா றிலக்கம் மனத்தடக்கித்
தந்திரம் ஓமம் தியானம் விடாதுசெய் தன்மையினோர்க்
கிந்திரன் போகங் குபேரன் நிதியம் இரவியன்ன
சுந்தர ரூபந் திசைமுகன் நாள்எய்துந் தொல்புவிக்கே."

புவனை கலைஞான தீபம் 84

"ராஜ்யந் தேயம் சிரோதேயம் நதேயா சோடசாட்சரீ."

—லலிதாதிரிசதீ

" ஒருவன், தன் அரசைக் கொடுப்பினுங் கொடுக்கலாம். சிரசைக் கொடுப்பினுங் கொடுத்துவிடலாம் ஸ்ரீவித்தை யைக் கொடுக்கலாகாது."

" ஸ்வ மாத்ரு ஜாரவத் கோப்யா வித்யை

ஷேத்யாகமாசுகு:—

ததோதி கோபநீ யாமே சர்வ பூர்த்தி கரீஸ்துதி."

—லலிதாதிரிசதீ

"ஒருவன், தன் தாயின் கூடா ஒழுக்கத்தை எங்ஙனம் வெளிப்படுத்தாமல் மறைத்து வைத்திருப்பானோ, அங்ஙனமே இந்த ஸ்ரீவித்தையையும் வெளிப்படுத்தாமல் பெரிதும் மறைவாகப் போற்றி வைத்துக்கொள்ள வேண்டும் என்று ஆகமங் களில் சொல்லப்பட்டுள்ளது. அவ்வாறே இந்த சர்வபூர்த்தி கரீ என்னும் நாம மாலாமந்திரத் தோத்திரத்தையும் மறைவாகவே வைத்துக் கொள்ளத் தக்கதாகும்."

"கர்ணாத் கர்ணோப தேசேந சம்ப்ராப்தம் அவநீதலே." என்பனவும், பிறவும் காண்க.

குறிப்புரை

இம் மந்திரம் புவனாபதியின் மூலமந்திரம் ஆமாறு உணர்த்துகின்றது.

மூலமந்திரம் - மூலவித்தை, "முடித்தவிம் மந்திரம் மூலம தாகும்" (-3); "சத்தியின் மூலம் இருபத்தினாலுரு" "மோகபோக விழைவினார் உன் மூல வித்தை தன்னின்முன்- ஆகமாரன் யோநி பொன்னள் அங்க மைத்து" (-சௌந்தரி யலகரி-32); "மூல மந்த்ராத்மிகா-சித்தி, புத்தி, முத்தி என்னும் மூவகைச் சித்திகளுக்கும் மூலகாரணமாயுள்ள பஞ்சதசாட்சரீ வித்தையையே திருமேனியாகச் கொண்டிருப்பவர்". (-லலிதா சகஸ்ர நாமம் 88) என்பன அறிக.

ககராதி ஓர் ஐந்து

ககரம் ஆதி-ககரத்தை முதலாகவுடைய-முதலில் உடைய. ஆதி-முதல். ஓர் ஐந்து-ஒரு கூறாயுள்ள ஐந்து பீசங்கள். கூறு—கூடம்-கண்டம்-கிரந்தி என்றும் கூறப்படும். பீசம்-வித்தெழுத்து -மூல எழுத்து. ஐந்து ஆவன: க், ஏ, ஈ, ல, ஹ்ரீம் என்பன. இது முதற்கூறு. பொன்மை-பொன்னிறம்-மஞ்சள்.

அகராதி ஓர் ஆறு:

அகரம் ஆதி-ஹகரத்தை முதலாகவுடைய. ஓர் ஆறு-ஒரு கூறாயுள்ள ஆறு பீசங்கள். அவை: ஹ, ஸ, க, ஹ, ல, ஹ்ரீம் என்பன. அரத்தம் - செம்மை-செம்பரத்தை-செம்பரத்தம் பூ; ஆகுபெயர் இஃது, 2-ஆம் கூறு.

சகராதி ஓர் நான்கு

சகரம் ஆதி-ஸகரத்தை முதலாயுடைய. ஓர் நான்கு: ஒரு கூறாயுள்ள நான்கு பீசங்கள். அவை: ஸ, க, ல, ஹ்ரீம் என்பன. சுத்த வெண்மை-தூய வெண்மை நிறம். இது 3-ஆம் கூறு.

சகரம்-ஸகரம். அகரம்-ஹகரம். வடமொழியில் உள்ள 35 மெய்களுள்; 32,33-ஆம் எழுத்துக்களாயுள்ள இவை இரண்டும் ‘முப்பது...இரண்டு சதவும்-மூன்றே அகவும்'' என்னும் வடமொழியாக்கச் சிறப்பு விதியின்படி தமிழில் வந்தன.

ககராதி மூவித்தை :

ககராதி வித்தை ;-மூ வித்தை ; — வித்தை :

ககராதி வித்தை-ககரத்தை முதற் பீசமாகக் கொண்டுள்ள வித்தை-காதி வித்தை எனப்படும். இது, மூல எழுத்தின் முதற் குறிப்பாற் பெற்ற பெயர். ஸாதி வித்தை, ஹாதி வித்தை முதலாகிய வித்தைகளும் உண்மையால் இஃது, இனஞ்சுட்டிய அடைமொழியாகிய பிறிதின் இயைபு நீக்கிய விசேடணம்.

இதனை வடநூலார் வியா வர்த்தக விசேடணம் என்பர். விசேடணம்-அடை மொழி, "ஹாதி வித்யாயை நம."—லலிதா திரிச்தீ 119.

"காதி ஹாதி மநுருபிணி மஹம் பாவயாமி பரதேவதாம் சிவாம்"

என்பனவும் பிறவுங் காண்க.

மூவித்தை

மூன்று கூடங்களை உடையதாயுள்ள வித்தை. இந்த மூன்று கண்டங்களையும் உணர்த்துதற் பொருட்டே ஆசிரியர் திருமூலதேவநாயனார் (1) ஓர் ஐந்தும் (2) ஓர் ஆறும் (3) ஓர் நான்கும் என்று வகுத்தோதி விளக்கியருளினார் என்க. இந்த மூன்று கூறுகளுள்.

1–ஆம் கூறு

இஃது, ஐந்து பீசங்களை உடையது. இது வாக்பவ கூடம், அக்நி கண்டம், பிரம்மக் கிரந்தி, ஞானசத்தி ஸ்தானம் என்றுஞ் சொல்லப்படும். இஃது எல்லா ஞானங்களையும் அளிப்பதா கலான், இதனை சர்வவித்யாப்ரதம்-எல்லா ஞானங்களையும் கொடுப்பது என்பர். இஃது இறைவியின் திருமுக மண்டல மாகத் தியாநிக்கப்படும். (கிரந்தி-முடி-முடிச்சு).

2–ஆம் கூறு:

இஃது, ஆறு பீசங்களை உடையது. இது காம கூடம், சூரிய கண்டம், விஷ்ணுக் கிரந்தி, இச்சாசத்தி ஸ்தானம் என்றுஞ் சொல்லப்படும். இது, விரும்பிய பொருள்கள் எல்லா வற்றையும் கொடுப்பதாகலான் இதனை சர்வகாம்யப் ரதம் என்பர். (காமியம்-விருப்பம்-சித்திபுத்திகள்) இஃது, இறைவியின் கழுத்து முதல் இடைவரையுள்ள பகுதியாகப் பாவிக்கப்படும்,

3-ஆம் கூறு

இது, 4-பீசங்களை உடையது. சத்தி கூடம்-சந்திர கண்டம்-உருத்திரக் கிரந்தி – கிரியாசத்திஸ்தானம் என்றுங் கூறப்படும். இஃது, ஐம்பெருந் தொழில்கள், எண்பெருஞ் சித்திகள், எண்வகை வினைகள் முதலாகிய எல்லாச் செயல் களையும் புரிவிக்கும் ஆற்றலை அளிப்பதாகலான், இதனை ஸர்வக்கிரியாப்பிரதம் என்பர். இஃது இறைவியின் இடை முதல் திருவடி வரையும் உள்ள பாகமாகப் பாவிக்கப்படும். இவ்வாறே, சிவமூல மந்திரமாகிய திருவைந்தெழுத்தில் உள்ள . ஒவ்வோரெழுத்தும், இறைவனுக்கு அங்கமாயும், ஐந்தொழில் ஆற்ற வல்லனலாயும் அமைந்து நிற்கும் முறைமை யும் ஈண்டுக் கருதத் தக்கன.

மேற்கோள்

"ஸ்ரீமத் வாக்பவகூடைகஸ்வரூப முகபங்கஜா |"
— லலிதாஸஹஸ்ரநாமம். 85

"கண்டாத: கடிபர்யந்த மத்யகூடஸ்வரூபிணி |" — 86

"சக்திகூடைக தாபந்ந கட்யதோபாக தாரிணீ |" — 87

"மூல் மந்த்ராத்மிகா |" —
சித்தி, புத்தி, முத்தி ஆகிய மும்மைப் பேறுகட்கும் மூல காரணமாயுள்ள பஞ்சதசாட்சரீ மூலமந்திரத் திரத்தையே திருமேனியாகக் கொண்டுள்ளவர். — 88

"மூல கூடத்ரய கலேபரா |"—
மூலவித்தையாகிய பஞ்சதசாட்சரியில் உள்ள 3-கண்டங் களையுமே சூட்சுமதேகமாகவுள்ளவர். — 89

"த்ரிகண்டேசீ |"—
செந்தீமண்டலம், ஞாயிற்று மண்டலம், திங்கள் மண்டலம் ஆகிய 3-மண்டலங்கட்கும் இறைவியாக வுள்ளவர். — 583

"த்ரிகூடா |" —
வாக்பவகூடம், காமகூடம், சக்திகூடம் ஆகிய 3-கூடங்களுடன் வேறுபாடின்றி இருப்பவர். — 588

"த்ரிகண்டோ மாத்ருகா மந்த்ர:, சோம சூர்யா
நிலாத்மக: |"

ஐந்தெழுத்துருவமும்—ஐந்தொழிலும்

"அஞ்செழுத் தாலே அமர்ந்தனன் நந்தியும்."
— திருமந்திரம்: 934

"ஆகின்ற பாதமு மந்நவாய் நின்றிடும்
ஆகின்ற நாபியுள் அங்கே மகாரமாம்
ஆகின்ற சீயிரு தோள்வவ்வாய்க் கண்டபின்
ஆகின்ற வச்சுடர் அவ்வியல் பாமே."
— திருமந்திரம். 941

"திருந்துதற் சீயென் றுதறிய கையும்
அருந்தவர் வாவென் றணைத்த மலர்க்கையும்
பொருந்தில் இமைப்பிலி யவ்வென்ற பொற்கையும்
திருந்தநத் தியாகும் திருநிலை மவ்வே." — 2797

"மருவுந் துடியுடன் மன்னிய வீச்சு
மருவிய அப்பும் அனலுடன் கையுங்
கருவின் மிதித்த கமலப் பதமும்
உருவில் சிவாய நமவென ஓதே." — 2798

"அரன்துடி தோற்றம் அமைத்தல் திதியாம்
அரன் அங்கி தன்னில் அறையிற் சங்காரம்
அரணுற் றணைப்பில் அமருந் திரோதாயி
அரனடி யென்றும் அணுக்கிரகம் என்னே." — 2799

"எட்டும் இரண்டும் உருவான லிங்கத்தே
நட்டம் புதல்வா நவிலக்கேள் - சிட்டன்
சிவாய நமவென்னுந் திருவெழுத் தஞ்சாலே
அவாயமற நின்றாடு வான்."
— உண்மை விளக்கம். 31

"ஆடும் படிகேள்நல் அம்பலத்தான் ஐயனே
நாடுந் திருவடியி லேநகரம் - கூடும்
மகரம் உதரம் வளர்தோள் சிகரம்
பகருமுகம் வாமுடியப் பார்." — 32

"சேர்க்குந் துடிசிகரம் சிக்கனவா வீசுகரம்
ஆர்க்கும் யகரம் அபயகரம் – பார்க்கிலிறைக்
கங்கி நகரம் அடிக்கீழ் முயலகனார்
தங்கும் மகரமது தான்." — உண்மை விளக்கம் 33

"ஓங்கார மேநற் றிருவாசி உற்றதனில்
நீங்கா எழுத்தே நிறைசுடராம் – ஆங்காரம்
அற்றார் அறிவர்அணி அம்பலத்தான் ஆடலிது
பெற்றார் பிறப்பற்றார் பின்." — 34

"தோற்றந் துடியதனில் தோயுந் திதியமைப்பில்
சாற்றி இடும் அங்கியே சங்காரம் – ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தில் உற்ற திரோதம்முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு." — 35

"மாயை தனைஉதறி வல்வினையைச் சுட்டுமலம்
சாய அமுக்கிஅருள் தானெடுத்து - நேயத்தால்
ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தானழுத்தல்
தானெந்தை யார்பரதந் தான்," — 36

"அகரஉகர மகரமே விந்துநாதமாகியவக் கரமைந்தும்
இலிங்க மாகப்
பகருமிதன் மிசைசிகரந் துடியதாகப் பரிவினுடன்
வீசியகை வகரமாக
யகரமிகும் அபயகரமாக நீடும் எரிநகரம் ஆகமுய
லகனின் பாதம்
மகரநிலை யாகமணி மன்றினூடே வான்கருணை
வடிவாகி நடஞ்செய்வானே." — சிவஞானதீபம்

" உறுதி யாகிய சூக்குமந் தூலமென் றுரைக்குங்
குறைவின் மூலமந் திரத்தையே திருவுருக் கொண்டு
மறுவி லாமணி மன்றுணின் றிருவர்வாழ்த் தெடுப்ப
பிறவி நோய்கெட நடம்புரி பிரானடி பணிவாம்."
— கடம்பர் கோயிற் புராணம்

" திருத்தில்லை வாணன்உரு ஐந்தெழுத்தும்."
— சிவராத்திரிப் புராணச் சுருக்கம்.

" சுருதிபுகழ் ஐந்தெழுத்தின் பொருளாகி உலகினில்
ஐந்தொழிலும் நீடப்—பெருகியபொன் அம்பலத்திற்
கூத்தாடும் பெருமானைப் பேசி வாழ்வாம்."
— தணி-பு-சுருக்கம்.

" தோற்றமொரு கைத்துடியிற் றிதியபயந்தருகரத்திற்
றொலைவோர் செங்கை—ஏற்றகவைக் கொழுந்தழலிற்
றிரோபவமூன் றியதாளில் எடுந்த தாளின்-மாற்றரிய
அருள்வயங்க இருமுனிவர் பணிந்தேத்த மறைகள்
வாழ்த்தச்-சாற்றரிய அம்பலத்தில் நடநவிலும்
பெருமானைச் சார்ந்து வாழ்வாம்." — உறையூர்ப்பு.

" சத்தமும் ஆகிஅச் சத்தத் தாற்பெறும்
அத்தமும் ஆகலின் அனந்தன் கண்களே
உத்தமன் ஐந்தெழுத் துருவங் காண்பன."
— சிதம்பரச் செய்யுட் கோவை. 46

" அரன் உருவும் அஞ்செழுத்தால் அமைந்தமையும்
அறிந்திட்டு - அஞ்செழுத்தால் அங்க கரநியாசம்
பண்ணி." — சிவஞான சித்தியார். 299

" தம்முடை - அங்கையில் ஐவிரல் அஞ்செழுத்துமே."
— தேவாரம். 3035

என்பன காண்க. இவற்றால், சிவமூல மந்திரமாகிய திருவைந்தெழுத்தும், சத்திமூலமந்திரம் ஆகிய பதினைந்தெழுத்தும் ஆகிய இவை இரண்டும் சிவசத்திகளின் திருவுருவமாக அமைந்து

நின்று, ஐம்பெருந் தொழில்களையும், இச்சா ஞானக் கிரியைகளையும் ஆற்றவல்லனவாக இருத்தலை உணர்க.

வித்தை

என்பது; மெய்யுணர்வு - உண்மைஞானம் எனப் பொருள்படும். இதனை வடநூலார் தத்துவஞானம் என்பர். தத்துவம்= உண்மை—பரம்பொருள். "ஞானமாவது - வீடுபயக்கும் உணர்வு" என்பர் பரிமேலழகர். மூத்திக்கு வித்து முதல்வன்றன் ஞானமே" (—திருமந். 2506) என்னுந் திருவாக்கும் ஈண்டு நோக்கத் தக்கது. அத்தகைய மெய்யறிவை எய்துதற்குச் சாதனமாக இருத்தலினாலே வேதாகமம் முதலான நூல்களும் வித்தை என்று உபசரிக்கப்படும். இத்தகைய வித்தைகளின் வகைகள் பல. அவை உற்கீதவித்தை, உபகோசல வித்தை. உஷஸ்த வித்தை, ககோளவித்தை, சத்வித்தை, சாண்டில்ய வித்தை, பஞ்சாக்கினி வித்தை, பர்யங்கவித்தை, பிராணவித்தை, புருஷவித்தை, மண்டலவித்தை, வியாகிருதி வித்தை, வைசுவாநரவித்தை, மதுவித்தை, ஆத்மவித்தை, பிரம்மவித்தை, தகரவித்தை முதலியன. இவற்றின் விளக்கம் பிருகதாரணியம், சாந்தோக்யம், தைத்திரியம், மகாநாராயணம், கைவல்யம் முதலிய உபநிடதங்களிலே விரிவாகச் சொல்லப்பட்டுள்ளன. இந்த வித்தைகள் எல்லாவற்றுள்ளும் தகரவித்தையே மேலானதும் எல்லாவுபநிடதங்களிலும் சிறப்பித்துச் சொல்லப்பட்டதுமாகும்.

உணரத்தக்க பொருள் எதுவோ? எந்தப் பொருளை உணர்ந்தால் மற்றெல்லாப் பொருள்களையும் உணர்ந்ததாகுமோ? அத்தகைய மேலான பரம்பொருளை உணர்வதற்குச் சாதனமாக உள்ள வித்தை எதுவோ? அந்த வித்தையே உண்மையில் வித்தையென்று சிறப்பித்துக் கூறப்படுவதாகும். அதனை அறிந்தவனே வித்வானாவான். சிற்பம் முதலான ஏனைய கலைகளும் வித்தை எனப் பெயர்பெற்று வழங்குமாயினும், அவற்றை அறிந்தவன் வித்துவானெனப்படுதல் இல்லை. ஆதலால் அவற்றிற்கு அப்பெயர் உபசாரமேயாகும். அம்மையப்பராயுள்ள முழுமுதற் பரம்பொருளை உணர்வதற்குச்

சாதனமாயுள்ள இந்தத் தகரவித்தையின் இயல்புமேல் விளக்கப் படும். ஆண்டுக் காண்க.

மேற்கோள்:

" ஞானநாட்டம் பெற்றபின் யானும்-நின்பெருந்
தன்மையுங் கண்டேன்
காண்டலும்-என்னையுங் கண்டேன் பிறரையுங்
கண்டேன்-நின்நிலை
அனைத்தையுங் கண்டேன் என்னே! — நின்னைக்காணா
மாந்தர்
தன்னையுங் காணாத் தன்மை யோரே".
—திருமுறை 11 . 28 . 13 : 30-35

என்னுந் திருவாக்கும் ஈண்டுச் சிந்திக்கத்தக்கது.

மந்திரமும் - வித்தையும்

இனி, இறைவன் உயிர்களின் பொருட்டுத் தனது இச்சையால் மேற்கொண்டுள்ள திருமேனிகள் பலவாகும். அவற்றுள், ஆண்மையினவாகப் போற்றிப் பூசிக்கப்படும் தெய்வஞ் சுட்டிய பெயர் நிலைக் கிளவிகள் மந்திரம் என்றும், பெண்மையினவாகப் பேணிப் பூசிக்கப்படும் மறைமொழிகள் வித்தை என்றும் வழங்கப் படும். இவ்வகையில் இந்த மூலமந்திரமாகிய பஞ்சதசாட்சரீ வித்தையானது, எல்லா வுலகங்கட்கும் அம்மையப்பராயுள்ள புவநாபதியை ஆதிதெய்வமாகக் கொண்டிருத்தலினாலே இவ் விருவகைப் பெயர்களையும் பெற்று நிற்கும். சிவமூலமந்திர மாகிய பஞ்சாட்சரீ வித்தைக்கும் இஃது ஒக்கும் என்க.

மேற்கோள்:

" தக்க பராவித்தை தானிருபா னேழில்".
—திருமந்திரம் 1175

" ஆகம் பராவித்தை யாமுத்தி சித்தியே" — 1309

"நவாக்கரி யாவது நானறி வித்தை
நவாக்கரி மந்திரம் நாவுளே ஓத"
–திருமந்திரம் 1321

"முடித்தஇம் மந்திரம் மூலம தாகும்" — 300: 3

"மந்திரம் நமச்சிவாய ஆகநீ றணியப் பெற்றால்"
–தேவாரம் 4907

"ஓதி அஞ்செழுத் தும்உணர் வார்கட்கு...
மாதுந் தானும் மகிழ்வர்மாற் பேறரே" — 5830

"நமச்சி வாயவே நானறி விச்சையும்" — 6113

"அஞ்செழுத்து மேஅம்மை அப்பர்தமைக்
காட்டுதலால்" –திருக்களிற். 25

என்னுந் திருவாக்குகளும் ஈண்டு நோக்கத்தக்கன.

அன்றியும், எழுத்துக்களின் தொகை பற்றியும் மந்திரங்களில் பலவகை உண்டு. ஒரெழுத்தினையுடைய மந்திரங்கள் பிண்டம் என்றும், 2-எழுத்துக்களையுடையவை கர்த்தரீ என்றும், 3-முதல் 9–வரையுள்ளவை பீசம் என்றும், 10–முதல் 20-வரை உள்ளவை மந்திரம் என்றும், 20–க்கு மேற்பட்ட எழுத்துக்களைக் கொண்டவை மாலா மந்திரம் என்றுஞ் சொல்லப்படும். இவ்வகையில் இந்த மூலமந்திரமானது, 15-எழுத்துக்களை உடையனவாக இருத்தலினாலே மந்திரம், என்றும், அதன்கண் அமைந்துள்ள கூடங்கள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு பீசமாகக் கொண்டு காணுமிடத்து ஏற்படுந் தொகை 3–ஆக இருத்தலினாலே பீச மந்திரம் என்றுஞ் சொல்லப்படும் என்க.

பஞ்சதசாட்சரீ வித்தையின் பரியாயப் பெயர்கள்:

இந்த மூலமந்திரமானது; மூல வித்தை, சித்த வித்தை, வித்தை, மகாவித்தை, ஸ்ரீவித்தை, தகரவித்தை, பிர்ம்ம வித்தை என்றுங் கூறப்படும். இப்பெயர்களின் காரணங்களையும், பிறவற்றையும் மேல் வருவனவற்றால் அறிக.

1. **மூல் மந்திரம்:** எல்லாவற்றிற்கும் மூல காரணமாயுள்ள பஞ்சதசீமந்திரம்.

"மூல மந்த்ராத்மிகா--யாவற்றுக்கும் மூலமான பஞ்ச தசாட்சரீ மந்திரத்தையே திருமேனியாகவுடையவர்"
-லலிதா சகஸ்ரநாமம் 88

"முடித்தவிம் மந்திரம் மூலம தாகும்"
—திருமந்திரம் 300: 3

"சத்தியின் மூலம் இருபத்தி னாலுரு" —

2. **மூல வித்தை:** தந்திர வித்தை, மந்திர வித்தை உபதேச வித்தைகளின் பேறாயுள்ள சித்தி, புத்தி, முத்திகளாகிய மும்மை யின்பங்கட்கும் மூலகாரணமாயுள்ள வித்தை.

"மோகபோக விழைவினார்உன் மூல வித்தை தன்னில்"
— சௌந்தரியலகரி 32

3. **சித்த வித்தை:** சித்தமான - நிலையாயுள்ள வித்தை என்பது இந்தப் பஞ்சதசீ வித்தையை குறிக்கும். இம்மந்திர மூனது, சித்த வித்தையாக இருத்தலினாலேதான், ஏனைய மந்திரங்கட்குச் செய்யத்தக்கதான சித்தாரி சக்ர (கோஷ்ட) சோதனம் எனப்படும் மந்திரப் பொருத்தம் முதலியன இவ்வித் தைக்குத் தேவையில்லை என்பர். -காதிமதம்

"சித்த வித்யா-சித்த வித்தையாயுள்ள பஞ்சதசாட்சரீ மந்திரத்தின் வடிவமாகவுள்ளவர்"
-லலிதா ஸகஸ்ரநாவம் 472

4. **வித்தை :** ஞானம்-வீடு பயக்கும் உணர்வு. அறியத்தக்க பொருள் யாதோ அதனை அறிவிப்பதே வித்தை என்று சிறப் பித்துக் கூறப்படும். இதனானே இஃது அடைமொழியின்றியே பெயர் பெறுவதாயிற்று, அறியத்தக்க பொருள்: பரம்பொருள் மேலான பொருள். "வித்யா-மெய்யுணர்வை, தத்துவ ஞானத்

தைப் பயப்பிக்கும் பஞ்ச தசாட்சரீ மந்திரத்தின் சொரூபமாக வுள்ளவர்'',

லலிதா சகஸ்ரநாமம் 549

5. **மகா வித்தை** : மகா வாக்கியத்தின் பொருளாயுள்ள வித்தை. மகா வாக்கியம்-பெரும் பெயர். மகா வாக்கியப் பொருள்—''பெரும் பெயர்ப் பொருள்; என்றது வீட்டினை''. (திருமுருகு. 269 நச்) மகா வித்யா—பெரும் பெயர்ப் பொருளா யுள்ள பஞ்ச தசாட்சரீ வித்தையின் வடிவமாக இருப்பவர். (பெயர்-பொருள்-வீடு) லலிதா சகஸ்ரநாமம் 584. பெரும் பெயர்—தத்துவமசி மகாவாக்கியம். ''அரும் பெயர் மரபிற் பெரும் பெயர் முருக'' (திருமுருக. 269; ''பெரியோர் ஏத்தும் பெரும் பெயர் இயவுள்'' (திருமுருக 247); ''பெரும் பெயர்க் கடவுளிற் கண்டு; பெரும் பெயர் எனினும் மகா வாக்கியம் எனினும் ஒக்கும். பெரும் பெயர்ப் பொருளே அஞ்செழுத் திற்கும் (பொருள்) ஆதலின், பெரும் பெயரோடு அஞ்செழுத் திடை வேற்றுமையின்மை உணர்க.'' —சிவஞான போதம். சிறப்புப் பாயிர மாபாடியம். பெரும் பெயரே பெயராக வந்த ஒரு வாய்மை தன்னை நினையினும்''

பஞ்சாக்கர தேசிகர் அந்தாதி 5

6. **ஸ்ரீ வித்தை** : வீடு பேற்றுக்கு வித்தாயுள்ள வித்தை. ஸ்ரீ—திரு-முத்தி. ''ஸ்ரீ வித்யா-முத்திக்கு மூலமாயுள்ள பஞ்சத தாட்சரீ மந்திரத்தின் திருவுருவமாக இருப்பவர்.''

—லலிதா சகஸ்ரநாமம் 585

7. **தகர வித்தை** : சிற்றம்பல வித்தை. சிதம்பர வித்தை. தகரம் – சிறுமை - நுண்மை-ஞானம் - தத்துவ - ஞானம் மெய்யுணர்வு - பரம்பொருள். வித்தை - அறிதல். (இவ்வித் தையின் இயல்பு பின்னர் விரித்துரைக்கப்படும். ஆண்டுக்கண்டு கொள்க) ''ஸ்ரீவித்தை, தகர வித்தையின் அநுபவம் எனக் கொள்க''. (திருவாசகம் 376. காழித் தாண்டவராயர்) ''தகரா காசரூபிணீ - மெய்ஞ்ஞானமயமாயுள்ள சிற்றம்பலத்தின் திருவுரு வாயுள்ளவர்'',

—லலிதா சகஸ்ரநாமம் 609

8. **பிர்ம்ம வித்தை** : பிரமப் பொருளையுணர்த்தும் வித்தை பிரமப்பொருள்-மகாவாக்கியப்-பெரும் பெயர்ப் பொருள். பிரமம் மகத் - பெரியது – சிவம். "பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்" (சிலப். 5 : 169); "அப்பிறை தான் பெரியோன் சூடுதலால் பதினெண் கணங்களாலும் புகழவும்படும்." (புறம் 1 : 9 – 10 உரை. பெரியோன்-சிவபெருமான்); "காமேசுவர ப்ரஹ்ம வித்யாயை நம:" (–லலிதா திரிசதீ 254) என்பனவுங் காண்க.

திருவெண்காடு என்னுந் தலத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவிக்கு பிரம்ம வித்யாம்பாள் என்னும் திருப்பெயருண்மை யும், அங்கேயுள்ள முக்குளங்களுக்கு சோம தீர்த்தம், சூரிய தீர்த்தம், அக்கிநி தீர்த்தம் என்னும் பெயர்கள் உண்மையும் ஈண்டுக் கருதத்தக்கன. இவற்றுள் பிரம்ம வித்தையென்பது: இந்தப் பஞ்சத சாட்சரீ வித்தையையும், முக்குளம் என்பன அந்த வித்தையில் அப்பெயர் பெற்று விளங்கும் மூன்று கண்டங் களையும் உணர்த்துவனவாகும். இச் சிறப்புப் பற்றியே இத் திருக்குளங்கள் மூன்றும்; செந்தமிழ்த் தெய்வத் திருமுறை களிலும் பண்டைச் சான்றோர் பாடல்களிலும் பெரிதும் போற்றிக் கூறப்படுவனவாயின என்க.

மேற்கோள்

" பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினை
வாயினவே வரம்பெறுவர் ஐயுறவேண் டாமொன்றும்
வேயனதோள் உமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்த்
தோய்வினையார் அவர்தம்மைத் தோயாவாந்
தீவினையே " —தேவாரம் 1983

" முக்குளநன் குடையானும் முக்கணுடை
இறையவனே " —1988

" தண்முத் தரும்பத் தடமூன் றுடையான் " – 2126

" முப்புரஞ் செற்றார் பாதம் சேருமுக் குளமும் பாடி "
—பெரிய. 2029

" இருகாமத் திணைஏரி - இம்மையினும் மறுமையினும் உண்டாகிய இன்பத்தினைக் கொடுத்தற்குரிய இணைந்த ஏரிகள் " —பட்டினப்பாலை. 39 நச்,

தடம்உளசோமகுண்டம் சூரியகுண்டம் துறைமூழ்கி
காமவேள் கோட்டந் தொழுதார் கணவரொடு
தாமின் புறுவர் உலகத்துத் தையலார்
போகஞ்செய் பூமியினும் போய்ப் பிறப்பர்.
—சிலப். 9: 58-62.

" இருகாமத் திணையேரி போலுங் குளங்களிலும் .. விளையாடி " —தொல். 1137 நச்.

என்பனவும் ஈண்டு நோக்கத் தக்கன. குண்டம்-ஏரி-தடம் என்பன மானிடர் ஆக்காத நீர் நிலையாகிய பொய்கை என்னும் பொருட்டனவாய் நின்றன. (நச்.) அஃதாவது, உயிர்கள் உய்தி பெறுதற் பொருட்டுப் படைப்புக் காலத்திலேயே இறைவனால் தோற்றுவிக்கப்பட்ட புண்ணியப் பொய்கைகள் ஆகும். அன்றியும் இறைவன்றானே படைப்புக் காலத்தில் உயிர்களின் பொருட்டுத் தமது அருட் சத்தியாற் கொண்டருளிய வடிவங்கள் என்றுங் கூறப்படும்.

மேற்கோள்

" ஈண்டுநாற் பிறப்பின் எழுவகைத் தோற்றத்
தெண்பத்து நான்கெனு மிலக்கம்
மாண்டபல் பவத்திற் பன்முறை வினையால் மறிதரும் உயிர்களை யெடுப்ப
ஆண்டருள் அமலன் அநாதியில் உலகம் ஆக்குழி அருந்தலந் தீர்த்தம்
காண்டகு மூர்த்தி என்னமூன் றுருவாய்க் கண்ணகன் உலகெலாங் கதித்து"
—திருத்தணிகைப் புராணம்

" சென்றாடு தீர்த்தங்கள் ஆனார்தாமே "
—தேவாரம் 7018

ஹ்ரீங்கார குண்டாக்நி சிகாயை நம:
—லலிதாதிரிசதீ 205

ஹ்ரீங்கார சசி சந்த்ரிகாயை நம: —206

ஹ்ரீங்கார பாஸ்கரருச்யை நம: —207

என்பனவும், பிறவும் காண்க.

இவற்றால், இறைவனுடைய இச்சா ஞானக் கிரியா சக்திகள் எனப்படும் ஞாயிறு, தீ, திங்கள் ஆகிய மண்டலங்கள் மூன்றும் சிவபெருமானுடைய வடிவம் என்பதும், அவற்றின் கதிரும், கொழுந்தும், நிலவுமாகியவை சக்தியினுடைய வடிவம் என்பதும், இம்மண்டலங்கள் மூன்றும் இறைவனுடைய முக் கண்கள் என்பதும், அக்கண்களின் வடிவாய் விளங்கும் இக் குண்டங்கள் மூன்றும் மேற்குறித்தவாறு இந்தப் பிரமவித்தையில் அப்பெயர்களைப் பெற்று விளங்கும் மூன்று கண்டங்களையும் உணர்த்தும் என்பதும் அவை இறைவனுடைய அருள்வடிவமே யாகும் என்பதும், ஆகவே அவைகள் தங்கண் மூழ்குதல் பருகுதல் முதலியன புரியும் உயிர்களுக்குக் காமியப் பயனா யுள்ள சித்தி புத்திகளையும், தத்துவ ஞானத்தின் பேறாயுள்ள முத்தியையும் அருளவல்லன என்பதும் இனிது பெறப்படும்.

இனி, மேலே குறிக்கப்பட்டனவாகிய முக்குளங்களில் வைத்து, சிலம்பினும் பாட்டினும் உணர்த்துதற் கெழுந்த பொருள்கள் இட்ட சித்திகளான இரு காமங்களேயாகலான் சித்தி புத்திகளான அவ்விரண்டையும் அளிக்கவல்ல சோம குண்டம், சூரிய குண்டம் ஆகிய இரு குளங்களே எடுத்து மொழியப்பட்டன என்க. இஃது அவற்றில்: "கணவரோடு -தாமின்புறுவர் உலகத்து .. போகஞ் செய் பூமியினும் போய்ப் பிறப்பர்" என்றும், "இருகாமம்" என்றும் கூறப் பட்டிருத்தலினாலே அப்பயன்கள் இரண்டும் இம்மை மறுமை யின்பங்களான சித்தியும் புத்தியுமாயுள்ள பேறுகளே என்பதும் நன்கு விளங்கும்.

அக்கினி குண்டமானது; இம்மையும் மறுமையுமாகிய அவ்விரண்டும் இன்றி எஞ்ஞான்றும் ஒருபெற்றித்தாய்ச் செம்மையில் நிற்பதான வீடுபேற்றினை யளிப்பதாகலான் ஆண்டு அடிகளும், கண்ணனாரும் இந்த அக்னி குண்டத்தை விதந்தோதவில்லை என்க. இந்த அக்னி குண்டமானது ஞானசத்திஸ்தானம் என்பதும், ஞானப்ரதானம் என்பதும், மேலே காட்டப்பட்டன. செந்தீயானது தத்துவ ஞானத்தைக் குறிக்கும் என்பதனை:

மேற்கோள்:

"இடம்படும் ஞானத் தீயால் எரிகொள இருந்து நோக்கில்
கடம்பமர் காளைதாதை கழலடி காணலாமே."
—தேவாரம் 4887

"உத்தமர்க்கு – ஞானச் சுடராய் நடுவே உதிப்பன...
ஐயாறன் அடித்தலமே." — 5054

"கருமருவு குகையனைய காயத்தி னடுவுட் களிம்புதோய்
செம்பனைய யான்
காண்டக இருக்கநீ ஞானவனல் மூட்டியே கனிவுபெற
உள்ளுருக்கி."
—தாயுமான அடிகள்

"ஞாநாக்னி: ஸர்வ கர்மாணி பஸ்மஸாத் குருதே
அர்ச்சுந."
—பகவத்கீதை

"சிதக்நி குண்டஸம்பூதா - ஞானமயமாயுள்ள செந்தீக் குண்டத்தில் விளங்கியிருப்பவர்." —லலிதா சகஸ்ரநாமம் 4

"ஞாநாநலம் விந்யஸ்ய — ஞானமயமாகிய தீயை
வளர்த்து."
—ஆகமம்.

என்பனவற்றாலும் அறிக.

அன்றியும்; இத்திருக் குளங்கள் மூன்றின் வடிவமும் இறைவனுடைய முக்கண்களைப் போன்றும், இறைவிக்குரியன வாயுள்ள பலவகை இயந்திரங்களிலும் அவற்றின் நடுவில்

சிறப்பாகத் திகழும் முக்கோணச் சக்கரத்தைப் போன்றும் அமையப்பெற்று விளங்குந் தன்மையும் நோக்கத் தக்கன. பெண்ணொரு பெண்ணைப் புணர்ந்திடும் பேதைமை, பெண்ணிடை ஆணும் பிறந்து கிடந்தது என்பதையும் நோக்குக. திருமந். 1159

மேலும்; அச்சுத களப்பாளர் என்பார், இம் முக்குளங்களில் முறைப்படி மூழ்கித் தாம் வேண்டியவாறே ஈராட்டை இளங்குழவிப் பருவத்திற்றானே எல்லா ஞானங்களையும் ஓதா துணர்ந்து, அத்துவிதத்தின் மெய்ப்பொருளைக் கண்டருளிய பிரமவித்தகராகிய மெய்கண்ட தேவ நாயனாரைத் தமக்கு மகலாகப் பெற்றருளிய வரலாற்றின் வாய்மையும் ஈண்டுக் கருதத் தக்கது.

ஸ்ரீ வித்தையின் வகைகள்:

இறைவனுடைய திருநாமமாகிய திருவைந்தெழுத்தானது; தூலம், சூட்சுமம், அதிசூட்சுமம், சூட்சுமா சூட்சுமம் என்றும்; காரணம், மகா காரணம் என்றும்; ஒரு தலை மாணிக்கம், இருதலை மாணிக்கம் என்றும்; 8-எழுத்து, 7-எழுத்து, 6-எழுத்து, 5-எழுத்து, 4-எழுத்து, 3-எழுத்து, 2-எழுத்து ஒரெழுத்து என்றும் 12 கலைப் பிராசாதம், 16-கலைப் பிராசாதம் என்றும்; மற்றும் பலவாறாகவும் ஓதுமுறையும், உணர்த்து முறையும், நிற்குமுறையும்பற்றி, அவ்வவர்களின் பரிபக்குவ நிலைகளுக்கு ஏற்றவாறு பலதிறத்தனவாக இருத் தலைப் போன்று, இறைவியின் மூலமந்திரமாகிய இந்த வித்தை யிலும் பலவகைகள் உள்ளன.

அவை: மநு வித்தை, சந்திர வித்தை, உலோபா முத்திரை வித்தை, நந்தி வித்தை, மன்மத வித்தை என்பன முதலாக அவற்றை உபாசித்துச் சித்தி பெற்றவர்களின் பெயர் பற்றியும்; காதி வித்தை, ஸாதி வித்தை, ஹாதி வித்தை என அவற்றில் உள்ள பீசங்களின் முதற் குறிப்புப் பற்றியும், ஏகாட்சரீ வித்தை, திரயட்சரீ வித்தை, பஞ்சாட்சரீ வித்தை, நவாட்சரீ வித்தை,

பஞ்ச தசாட்சரீ வித்தை, சோடசாட்சரீ வித்தை, மகா சோடசீ வித்தை என்பன முதலாக அவற்றில் அமைந்துள்ள மூல எழுத்துக்களின் தொகை பற்றியும்; பாலை வித்தை, புவனை வித்தை, திரிபுரை வித்தை, பரா வித்தை என்பன முதலாக அவற்றின் அதிதேவதைகளின் நாமங்களைப் பற்றியும் மற்றும் பல திறத்தனவாகவும் வழங்குவனவாகும்.

இவற்றுள்; ஏகாட்சரீ-என்பது ஓரெழுத்தாகிய புவனேசுவரியின் பீசத்தையுடைய வித்தை திரயட்சரீ-3 பீசங்களையுடைய பாலையின் வித்தை நவாட்சரீ-9 எழுத்தையுடைய அந்தரியின் வித்தை. பஞ்சாட்சரீ-5 எழுத்தையுடைய வித்தை. இது சக்தி பஞ்சாட்சரம் என்றுஞ் சொல்லப்படும். பஞ்ச தசாட்சரீ-15 பீசங்களுடைய புவநாபதியின் வித்தை; இது சுத்த பஞ்ச தசீ என்றுஞ் சொலலப்படும். ஸ்ரீவித்தை-ஸ்ரீம் என்னும் பீசத்தை முதலில் உடைய வித்தை; இது சோடசீ என்றுஞ் சொல்லப்படும். (சோடசாட்சரீ-16 பீசங்களையுடைய வித்தை) மகா சோடசாட்சரீ-28. பீசங்களையுடைய வித்தை. பராவித்தை-27 பீசங்களையுடைய வித்தையென்றுஞ் சொல்லப்பட்டுள்ளன. இங்ஙனம் கூறியவற்றுள் ஒருசில கொள்கை வேறுபாடுகளும் உள்ளன. அவற்றைப் பட்சாந்தரம்-மதாந்தரம் என்பர்.

மேலே குறித்தவாறு பாலை, புவனை, திரிபுரை, ஐயை முதலான கடவுளரின் மந்திரங்களும் வித்தையெனப் பெயர் பெறுமேனும், அடைமொழியின்றியே வித்தையென்று சிறப்பித்துச் சொல்லப்படுவது இந்தப் பஞ்சதசீ வித்தையேயாகும் என்பது முன்னருங் காட்டப்பட்டது. திருவைந் தெழுத்தின் வகைகளான 8-எழுத்து, 7-எழுத்து, 6-எழுத்து, 4-எழுத்து, 3-எழுத்து, 2-எழுத்து, ஓரெழுத்து முதலிய மந்திரங்களும் ஐந்தெழுத்தென வழங்கப்படுமாறுபோல இந்தப் பஞ்சதசாட்சரீ வித்தையின் பேதமாகிய ஏகாட்சரீ திரயாட்சரீ, நவாட்சரீ, சோடசாட்சரீ முதலான மந்திரங்களும் வித்தையென வழங்கப்படுமென்க. இம்மொழியில் உள்ள வி- என்பது இலக்க நூலின்படி 15 என்னும் எண்ணைக் குறித்து நிற்றலும் நோக்கத்தக்கது.

மேற்கோள்

பஞ்சாட்சரீ வித்தையின் வகைகள்:

"அறைவேன் பஞ்சாக்கர விதியை அதுதான் தூலம்
சூக்குமமாம்" -நிட்டாநுபூதி சாரம் 47

"அஞ்செழுத்தின் விதி எவ்விதமென்னில் அரிய
தூலமொடு சூக்குமம் அதுதான்"
—நிட்டாநுபூதி சாரம் 49

"சிந்தனைக்கரிய சிவமிரு பாலாய்ச் சேருயிர் நடுவணே
யிலங்கும்
ஐந்தெழுத் தினையே காரணம் எனலாம்".
—நிட்டாநுபூதி சாரம் 50

"சூக்கமாமஞ் செழுத்தினில்."
—திருவிளையாடற்புராணம்

"ஒருதலை மாணிக்கம் முன்னர் எனக்குப தேசஞ்
செய்தான்
இருதலை மாணிக்கம் பின்னரும் பேசி இருளறுத்தான்"
—கண்ணுடைய வள்ளல்

"ஐந்தென எட்டென ஆறென நான்கென
முந்துறு மறைமுறை மொழியு மந்திரமே
வேதமும் ஆகம விரிவுகள் அனைத்தும்
ஓதநின் றுலவா தோங்கு மந்திரமே" —அருட்பா

"அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும்
நாலெழுத்தும்
பிஞ்செழுத்தும் மேலைப் பெருவெ ழுத்தும்—
நெஞ்சழுத்திப்
பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையுங்
கூசாமற் காட்டக் கொடி"
—கொடிப்பாட்டு 4

"5—எழுத்து சிவாய நம. 8—எழுத்து-ஓம் ஆம் ஔம் சிவாய நம. 6-எழுத்து-ஓம் நமசிவாய. 4—எழுத்து-ஓம் சிவாய. பிஞ்செழுத்தாகிய பேசும் எழுத்து—வ. பெருவெழுத்தாகிய பேசா எழுத்து-சி. தூலம், சூக்குமம், அதி சூக்குமம், சூக்குமா சூக்கும்மம் என 4 விதம்."
—உரை

"பஞ்சாக் கரத்தின் பேதமாகிய 8-எழுத்து, 6 எழுத்து 4-எழுத்து முதலியனவும் பஞ்சாக்கரமென வழங்கப்படுமாறு போல."
—சித்தி. 1 சிவஞான முனிவர்

"வாசிவா வென்ன வழங்கு மூன்றெழுத்தும்
பேசுதன் முதிர்ந்த பேறென மொழிந்தான்
இன்பமாம் வாசி என்னும் ஈரெழுத்தில்
அன்புறு மகிமை அதிசயமென்றான்
சீயெழுத்தொன்றே சிந்தையிற் கருதத்
தூயநற் சுடராய்த் தோன்றுவை யென்றான்."
—திருச்செந்தூரகவல்

"சிவனெனுந் துணைச் சீரெழுத்தினை
நுவலுவோர் கதி நொய்தின் எய்துவார்."
—கந்தபுராணம்

"தக்கஐந் தெழுத்தும் ஓரெழுத்து உருவாந் தன்மை
கண்டு."
—திருவாதவூரடிகள் புராணம்

"ஓரெழுத்து ஒருபொருள் உணரக் கூறிய
சீரெழுத் தாளரை."
—திருமந்திரமாலை 531

"மந்திரம் ஓரெழுத்து உரைத்த மாதவர்." —533

"ஓரெழுத் தாலே உலகெங்குந் தானாகி
ஈரெழுத் தாலே இசைந்தங் கிருவராய்
மூவெழுத் தாலே முளைக்கின்ற சோதியை" —885

"ஆறெழுத் தாவது ஆறு சமயங்கள்". —994

"எட்டும் இரண்டும் இனிதறி கின்றிலர்." —986

"பன்னிரண் டாங்கலை ஆதி பயிரவி." —1075

"மேதாதி ஈரெட்டும் ஆகிய மெல்லியல்." —1070

"நாமம் நமசிவ என்றிருப் பாருக்கு."
—972, 973, 1213

"தக்க பராவித்தை தான்இரு பானேழில்."
— திருமந்திரம். 1175

"ஆகம் பராவித்தை யாமுத்தி சித்தியே." — 1309

"நவாக்கரி யாவது நானறி வித்தை." — 1321

"நகராதி தான் மூலமந்திரம் நண்ணுமே". — 2700

"சேயுறு கண்ணி திருவெழுத் தஞ்சையும்." — 2703

"சிவாய நம என்னுங்
குளிகை இட்டுப்பொன் ஆக்குவன் கூட்டையே."
— 2709

"ஓதுஞ் சிவாய மலமற்ற உண்மையே." — 2712

"திரிமலம் நீங்கிச் சிவாய என்றோதும்." — 2714

"சிவசிவ என்னச் சிவகதி தானே." — 2716

"சிவாய சிவசிவ என்றென்றே நிற்க ஆனந்தமாமே
— 2718

"எங்கள் பிரான் எழுத்து...ஒன்றையுஞ் சாதித்தால்
அங்கரை சேர்ந்த அருங்கல மாமே." — 2720

"மந்திரம் நமச்சிவாய ஆகநீ றணியப் பெற்றால்."
– தேவாரம். 4907

"நமச்சிவாயவே நானறி விச்சையும்." — 6113

"சென்றுசென் றணுவாய்த் தேய்ந்து தேய்ந்து
ஒன்றாம்." —திருவாசகம்

பஞ்ச தசாட்சரீ வித்தையின் வகைகள் :

மநு வித்யாயை நம : \|	—லலிதா சகஸ்ரநாமம்	238
சந்த்ர வித்யாயை நம : \|	,,	239
சித்த வித்யாயை நம : \|	,,	472
வித்யாயை நம : \|	,,	549
மகா வித்யாயை நம : \|	,,	584
ஸ்ரீ வித்யாயை நம : \|	லலிதா சகஸ்ரநாமம்	585
ஸ்ரீ சோடசாட்சரீ வித்யாயை நம : \|	,,	587
நந்தி வித்யாயை நம : \|	,,	733
கந்தர்ப்ப வித்யாயை நம : \|	லலிதா திரிசதீ	12
ஏகாட்சர்யை நம : \|	,,	22
ஹாதி வித்யாயை நம : \|	,,	119
"ஏகாட்சரீம் திரிபுவநாபதீம் நமாமிம்"	,,	

"காதி ஹா (ஸா) தி மநு ரூபிணீம் அகம் பாவயாமி
பரதேவதாம் சிவாம்"

என்பவற்றாலும், பிறவற்றாலும் மேலே குறிக்கப் பட்டனவாயுள்ள பஞ்சாட்சரீ வித்தை, பஞ்ச தசாட்சரீ வித்தை ஆகிய வித்தைகளின் வகைகளையும், பிறவற்றையும் அறிந்து கொள்க. மற்றும் இவற்றின் பேதங்கள் பலவாம். அவற்றின் விரிவு ஆகமங்களுட் கண்டு உணர்ந்து கொள்ளத்தக்கன.

சோடசாட்சரீ வித்தை

இவற்றுள்; "ஸ்ரீவித்யா சோடசாட்சரீ" என்பதனாலே ஸ்ரீவித்தை என்பது, 16-பீசங்களை உடையது என்பதனை அறியலாம். மகாசோட சீ என்பது, 28-பீசங்களை உடையது

என்பர். "அதவித்யா அஷ்டா விம்சத் விர்ண விசிஷ்டா" (கௌடபாதர் - ஸ்ரீவித்யாரத்ந சூத்திரம்) என்பதனாலும் அஃது அறியப்படும். இந்த 28-பீசங்களின் உண்மையை;

" மாமா யாஸ்மர வாக்பவச்ச ஸபரா வேதாதிபீஜம்
ததோ |
ஹ்ருல்லே காஸ்மர மாத்ரு பீஜ ஸகிதா கூடத்ரயம்
தத்வது ||
சக்திர் வாக்பவ மாயரமயா யுக்தம் த்வதீயம்
மநு : 1
பாவ்யம் சோடா ராஜ ஸகிதம் ஸ்ரீராஜ
ராஜேசுவரீம் || "

என்பதனால் அறியலாம். பராவித்தை-என்பது 27-பீசங்களை உடையது என்பாராய் ஆசிரியர் திருமூலதேவநாயனார் "தக்க பராவித்தை தான் இருபானேழில்" (1175) என்று உபதேசித்திருத்தலும், அஃது அவ்வாறே உபதேச பரம்பரையில் இருந்து வருதலும் சிந்திக்கத்தக்கன. பரா வித்தை - மகா சோடசீவித்தை என்றுஞ் சொல்லப்படும். "ஸப்தவிம் சதிதா பிந்நத்வேந ப்ரத்யேக இச்சாஞாநக்ரி யாத்ம பிர்ம்மக் கிரந்தி மந்த்ர ஸதந்து ப்ரம்மநாடீப்ரம்ம சூத்ரம்" (-பாவநோப நிடதம்) என்பதும் ஈண்டு நோக்கத்தக்கது.

இங்ஙனமாக இந்த மந்திர வித்தைகள் பல பேதங்களை உடையனவாக இருந்தபோதிலும் அவையெல்லாம் ஐந்தெழுத்தும், பதினைந்தெழுத்துமாகிய பஞ்சாட்சரீ பஞ்சத சாட்சரீ என்பனவற்றின் வேறல்ல என்பதும், அவற்றைக் கேட்கும் அதிகாரிகளின் உள்ள நிலையும், உயிர்நிலையுமான பரிபக்குவ நிலைகளுக்கு ஏற்பப் பலதிறத்தனவாக அமைந்துள்ளன என்பதும், அவற்றின் குறிக்கோளாகக்கருதப்படும் முழு முதற்கடவுள் ஒருவரேயென்பதும், உளங்கொளத்தக்கன. இவ்வாற்றால், இவ்வித்தைகளைப் பேதமாகக்கருதாமல் அபேதமாகவே பாவிக்க வேண்டும் என்று ஸ்ரீ பாஸ்கர ராயர் சேது பந்தத்திலும், ஸ்ரீ லலிதா சகஸ்ரநாம பாடியத்திலும் விளக்கியுள்ளார்.

ஸ்ரீ வித்யோபாசகர்கள்

இத்தகைய இந்த மூலவித்தையை உபாசித்து இட்ட சித்தி களான சித்திபுத்திகளையும், பேரின்பப் பெருவாழ்வையும் பெற்ற அரசர்களும், அமரர்களும், முனிவர்களும் பலராவர்.

1. இராமன் 2. பலராமன் 3. இலக்குவன் 4. பரதன் 5. சூரியன் 6. சந்திரன் 7. அக்கினி 8. குபேரன் 9. இந்திரன் 10. அயன் 11. அரி. 12. அரன் 13. கணபதி 14. கந்தன் 15. அனங்கன் 16. நந்தி யெம்பெருமான் 17. மனு 18. உலோபா முத்திரை 19. அகத்தியர் 20. துர்வாசர் 21. சநகாதி முனிவர் 22. திருமூலதேவர் முதலாக எண்ணிறந்தவர்கள் இம்மூல மந்திரத்தைச் சாதித்துப் பேறு பெற்றுள்ளாரகள்.

மேற்கோள்

''ஆதித்தன் அம்புலி அங்கி குபேரன் அமரர்தங்கோன்
போதிப் பிரமன் புராரி முராரி பொதிய முனி
காதிப் பொருபடைக் கந்தன் கணபதி காமன் முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர்
தையலையே''.

—அபிராமி அந்தாதி 94

"மநுச் சந்த்ர குபேரச்ச லோபாமுத்ராச மந்மத : |
அகஸ்தி ரக்நி : சூர்யச்ச ៖ இந்த்ர ஸ்கந்த :
சிவஸ்ததா ||
க்ரோதபட் டாரகோ தேவ்யாத் வாதசாமீ
உபாசகா : | "

''கந்தர்ப்ப வித்யாயை நம:'' கந்தர்ப்பன் - மன்மதன். இவனால் உபாசிக்கப்பட்ட வித்தை மன்மதவித்தை - அநங்க வித்தை என்றும் வழங்கும்.

—லலிதா திரிசதீ 12

''ஹலத்ருக் பூசிதாயை நம.''— ஹலதிருக் - பலராமன். ஹலம்—அலம். கலப்பையாகிய உழுபடை.

—102

"ஹராராத்யாயை நம:"—அரன்-உருத்திரன். —105

"ஹரிப்ரஹ்மேந்த்ர வந்திதாயை நம:" —106

"லக்ஷ்மணாக்ர பூசிதாயை நம:"

— இலக்குவனும், அவனுக்கு முன்தோன்றியவர்களான இராமனும், பரதனும். லலிதாதிரிசதி 190

"ஸநகாதிமுநித் யேயாய நம:"

—சநகாதி முனிவர்கள்: சநகர், சநந்தனர், சநாதனர், சநற்குமாரர். —230

"காமேசுவரப்ரஹ்மவித்யாயை நம:"
—காமேசன்-சிவன் — 254

மநுவித்யாயை நம:
—ஸ்ரீ லலிதா ஸகஸ்ர நாமம் 238

சந்த்ர வித்யாயை நம: ,, 239

காமஸேவிதாயை நம: ,, 586

"லோபா முத்ரார்ச்சிதாயை நம: (உலோபா முத்ரை அகத்திய முனிவரின் மனைவி) — 647

நந்தி வித்யாயை நம: — 733

"புவனாபதியாம்-அருந்தவச் செல்வியை ஆதரித் தடியேன் பரிந்துடன் வந்தனன் பத்தியினாலே."
— திருமந்திரமாலை 75

"அருள்பெற்ற வாசொல்ல வாரீர் மனிதர்
...புவனாபதியார்...சேவடி போற்றுவன் யானே."
— 1071

"போற்றியேன் பேன்புவ னாபதி அம்மையென்
ஆற்றலுள் நிற்கும் அருந்தவப் பெண் பிள்ளை."
— 1150

"புணர்ந்தொழிந் தேன்புவ னாபதி யாரை"

— 1250

" புவனையைப் பூசித்து நந்தி விளம்ப இந்தச்
சக்கரம் பெற்றுத் திருமூல தேவன்"

— புவனை கலைஞான தீபம் 71

" ஐய! அம்பிகை தன்னையான் அன்பினால் வழிபட்டு
உய்ய வேண்டுமென் றாள் அவன் உலகெலாம் பயந்த
தையல் மந்திரந் தனைமகள் தனக்குப தேசஞ்
செய்ய அந்நெறி ஒழுகுவாள் செப்புவாள் பின்னும்"

— திருவிளையாடற் புராணம் 4: 66

" இறைவிதன் மனுவினைச் செப்ப" — 23: 5

" சக்தி தற்பரச் சித்தயோ கிகளும் சாத கத்தனித்
தலைவரும் முதலா

நித்தம் எய்திய ஆயுள்மெய்த் தவர்கள் நீடு
வாழ்திருப் பாடியும் அனேகம்"

(திருக்குறிப்புத் தொண்டர் 82) — பெரிய புராணம் 1164

" மாடுயர்மா மதிற்காஞ்சி வளநகரின் வைகினார்"
" நற்பதி அங்கமர் யோகமுனிவர்களை நயந்து"

— (திருமூலர் 5, 6) 3573-74

என்பனவும், பிறவும் ஈண்டு நோக்கத்தக்கன.

இவர்களால் உபாசிக்கப்பட்டுச் சித்திக்கப் பெற்றனவாயுள்ள இந்த ஸ்ரீவித்தியா மந்திரங்களின் வகைகள் பலவும் அவ்வவர்களின் பெயர்களால் வழங்கப்பெறும். அவற்றின் விளக்கங்கள் ஞானார்ணவ தந்திரம் முதலியவற்றுள் விரித்துரைக்கப்பட்டுள்ளன. ஆண்டுக் கண்டு கொள்க.

ஸ்ரீ வித்தையின் பீசங்கள்—15

இந்த மூல வித்தையானது மூன்று கண்டங்களை உடையது என்பதும், அக்கண்டங்களின் விளக்கமும், அவற்றில்

உள்ள மூல எழுத்துக்களின் தொகையும், அவற்றின் பெயரும் முன்னர்க் குறிக்கப் பெற்றன. இனி, இவ்வித்தையில் அமைந்து நிற்கும் பீசங்களின் விளக்கம் காணத்தக்கதாகும்.

இந்த மூல மந்திரத்தில் உள்ள வித்தெழுத்துக்கள் 15–ஆகும். ககரம்–3 ம், லகரம்–3 ம், ஹ்ரீங் காரம்–3ம், ஹகரம் 2–ம், ஸகரம்-2ம் ஏகாரம்-1 ம், ஈகாரம்-1 ம், ஆக இவ்வாறு பதினைந்து எழுத்துக்கள் உள்ளன. ஆதலினாலே; இம்மந்திரத்திற்கும், இதன் அதிதெய்வமாயுள்ள இறைவிக்கும் பஞ்ததசாட்சரீ என்று பெயர் வழங்கப் பெறும்.

புவனையின் பீசம் - ஹ்ரீங்காரம்

இந்தப் பதினைந்தெழுத்துக்களும் திருவைந்தெழுத்தினைப் போன்றே, தனித்தனியாக ஒவ்வொரு பொருளை உணர்த்தி நிற்பனவாகும். அவற்றுள் மூன்று கூடங்களின் முடிவிலும் விளங்கும் ஹ்ரீங்காரங்கள் மூன்றும் புவனேசுவரியின் மூல எழுத்து ஆகும். இஃது ஏகாட்சரீ, சத்தி பீசம், சத்திப்பிரணவம், மாயாபீசம், யோநி (சுத்தமாயை - குண்டலினி) என்றுஞ் சொல்லப்படும் இதன்கண் அமைந்துள்ள பீசங்கள் நான்கு ஆகும். அவை: 1 ஹகரம் 2. ரகரம் 3. ஈகாரம் 4. விந்து - மகரம் என்பனவாம்.

இந்த நான்கினுள்: 1. ஹகரமானது-சிவத்தையும், ஆகாசத்தையுங் குறிக்கும் பீசமாகும். 2, ரகரம் - அக்கினி பீசம் 3. ஈகாரம் – சத்தி பீசம் 4. விந்துவாகிய மகரம்–அந்தமாதியாய் நிற்கும் நிலையினதாகிய லயஸ்சொரூப சிவத்தையும் உணர்த்தும் என்பர். இவ்வண்ணமாக இந்தப் புவனையின் பீசமாயுள்ள ஏகாட்சரமானது; பஞ்சப் பிரணவங்களுள் ஒன்றாயும், சிவசத்தியாத்மகமாயும் இருத்தலினாலே, சொல்லும் பொருளுமாயுள்ள இருகூற்றுப் பிரபஞ் சங்களின் தோற்றம், நிலை, இறுதியாகியவற்றிற்கெல்லாம் (வித்து – மூலம் – காரணம்) முதற் காரணம் ஆகும்.

மேற்கோள்

"சிவனருள் ஆவி திரோதம் மலமைந்தும்
அவனெழுத் தைந்தின் அடைவாம்."

—திருவட்பயன்

"சிவன்சத்தி சீவன் செறுமலம் மாயை."

—திருமந்திரம் 2710

"சிவனருள் ஆய சிவன் றிரு நாமம்
சிவன் அருள் ஆன்மாத் திரோதமல மாயை."

—2711

"வியதநல லஸத் வாமநேத்ராா்த்த சந்த்ரை : | "

—மகரந்தஸ்வராஜம்.

"சிவபீசம் அக்கினிமாமாயை விந்து தெரிந்திவற்றை
தவறா தெழுதிட ஒரெழுத் தாமிதன் றன்மையினை
எவரேனும் அன்னை புவனை சொரூபம் எனத்
தெளிந்தால்
பவமே யகற்றிப் பரத்தொடுங் கூட்டும் பராபரையே."

—புவனை கலைஞான தீபம் 78

"பரையுல கீன்றவள் ஒரெழுத் தாய பதத்தை." —79

"ஒரெழுத்தாகிய மந்திர ராசனென்றோதரிய
பேரெழுத்தும்." —80

"ஹகாரம் சிவபீஜம்ஸ்யாது சுத்தஸ் படிகநிர்மலம்
அணிமாத்யஷ்ட சித்திஞ்ச புக்திமுக்திப்ரதாயகம்"

—வாதுளாகமம்

"ஹ்ரீங்காரேணைவ ஸம்சித்தே புக்திம்முக்திஞ்ச
விந்ததி."

— புவநேசுவரீகல்பம்

"ஹ்ரீங்காரீ - முத்தொழிலும் செய்பவர்."

—ஸ்வதந்த்ர தந்த்ரம்

என்பனவும், பிறவுங் காண்க. அன்றியும், இதுபற்றி ஸ்ரீ லலிதா திரிசதியில் வரும் (85) "ஹரீங்காரலட்சணாயை" (91) "ஹ்ரீம் பதாராத்யாயை" (203) "ஹரீம்மத்யாயை" (204) "ஹ்ரீம் சிகாமணயே" (216) "ஹ்ரீகாராங்கண தீபிகாயை" (287) "ஹ்ரீங்கார பேடக மணயே நம:" முதலிய நாம மந்திரங்களும் ஈண்டு நோக்கத்தக்கன.

இனி, இந்தப் பஞ்ச தசாட்சரியில் உள்ள இந்த 3-பீசங்களும் தவிர ஏனைய எழுத்துக்கள் 12-ஆகும். அவை முறையே 1. சிவன் 2. சத்தி 3. காமன் 4. பூமி 5. ஞாயிறு 6. திங்கள் 7. காமன் 8. ஆகாயம் 9. இந்திரன் 10. பரை 11. காமன் 12. திருமால் ஆகியவர்களைக் குறிக்கும் மூல எழுத்துக்களாம். இவற்றுள், முதலில் வந்துள்ள பீசங்களே மீண்டும் மீண்டும் வந்திருத்தல் பயன்றரும் முறைமை பற்றியென்க.

மேற்கோள்:

"அரியதா குஞ்சிவஞ் சத்திமதன் அவனிபின்
பாதித்தன் மதிமதனவேள்
பெரியவான் இந்திரன் பின்புபரை மதனன்மால்
பேசின்முக் கண்டமடைவே
உரியதாம் அந்தத்தின் மாயையும் முறையமைத்
துறுமெழுத் தடையவுணர்வால்
தெரியினா மத்தினொடும் உனதுறுப் பாமென்று
செப்புநான் மறைகள் உமையே."

—வீரைக்-கவிராச பண்டிதர் – சௌந்தரியலகரி 31

"இதனால், இம் மூலமந்திரங்கொண்டு அரிய பலனைப் பெறலாம் என்பது பெற்றாம். எழுத்து என்பதனை எல்லாவற்றோடுங் கூட்டுக. கண்டங்களை அறியும் படிக்குப் பின்பு என்றார். கடைக்கண்டம் 3-எழுத்தும், முதற் கண்டம் 4-எழுத்தும், இடைக்கண்டம் 5-எழுத்துமாகக் கண்டந்தோறும் இறுதியில் மாயையின் எழுத்தைப் பொருந்தியிருத்தலினாலே தேவிக்குப் பஞ்சதசாட்சரீ என்னும் பெயர் பொருந்திற்று. முதற்கண்டத்தும், கடைக்கண்டத்தும் சத்தியின் எழுத்தும்,

3-கண்டத்தும் காமன் எழுத்தும் வருதல் பயன் கருதிய முறைமை. இம்மந்திரத்தினுடைய 3-கண்டங்களாவன: முச்சுடரும், முச்சத்தியும், மூன்றவத்தையும், முக்குணமுமாய் இருக்கும். இதன் விரிவு எல்லாம் உபதேச முறைமையால் உணர்க. இது, தேவியினுடைய மூலமந்திரங் கூறியது.''

—உரை. சைவ எல்லப்பநாவலர்

சிவ: சக்தி: காம: க்ஷிதிரத ரவிச் சீதகிரண: ஸ்மரோ ஹம்ஸச் சக்ரஸ் ததநுச பரா மாரஹரி:| அமீ ஹ்ருல்லே காபி: திஸ்ருபி: அவஸாநேசு கடிதா: பஜந்தே வர்ணாஸ்தே தவஜநநீ நாமாவயமதாம். பி-ம் மாரஹரய:||

—சங்கரர் - சௌந்தரியலகரீ 32

தாயே! சிவன், சத்தி, காமன், பூமி ஆகியவர்களின் பீசங்களான க, ஏ, ஈ, ல – என்னும் 4–எழுத்துக்களும்; பின்னர் ஞாயிறு, திங்கள், மாரன், அம்சம், இந்திரன் ஆகியவர்களின் வித்தெழுத்துக்களான ஹ, ஸ, க, ஹ, ல – என்னும் 5–அட்ச ரங்களும்; இவற்றின் பின்னரும் பரை, மாரன், திருமால் ஆகிய வர்களின் மூல எழுத்துக்களான ச, க, ல–என்னும் 3–பீசங்களும் ஆகிய இந்த எழுத்துக்கள், முடிவாயுள்ள தத்தம் ஈற்றில் 3–ஆகவுள்ள ஹ்ரீங்காரங்களால் சேர்க்கப்பட்டனவாகக் கொண்டு உன்னுடைய மகாமந்திரத்தில் அங்கமாக இருக்குந் தன்மையை அடைகின்றன.'' — ,,

''காமோ யோநிச் சதுர்த்தஸ்வரத்ரிதபதி:
பவ்வநேசீச பீஜம்|
பிர்ஹ்மேந்துக் காமதேவோ வியதமரகுரு
பவ்வநேசீச பீஜம்|
இந்து: காயசுரேசா வியதநல லஸத் வாமநேத்ரார்த்த
சந்த்ரை:||.'' —மகரந்தஸ் தவராஜம்.

''காமோ யோநி: கமலா வஜ்ரபாணி: குஹா ஹ் லா
மாதரிச் வாப்ர மிந்த்ர:|
புநர்குஹா ஸகலா மாயயாக புருச்யேஷா
விசுவமாதாதி வித்தியா.||''

—அதர்வணவேத - திரிபுராசூக்த - இருக்கு

என்பனவும், பிறவும் ஈண்டு ஓர்ந்து உணரத்தக்கன.

இந்த மூல மந்திரமாகிய பஞ்சதகாட்சரீயானது "அருமறை விச்சைப் பெருமறை"ப் (-பெருங் 5. 4: 7) பொருளாயுள்ள வித்தையாக இருத்தலினாலே, அதன் கண் உள்ள பீசங்களை உள்ளவாறே வெளிப்படையாக எடுத்துக் கூறாமல் மறைத்து வைத்துக் குறிப்பால் உணரும் வண்ணம் சொல்லப்பட்டிருத் தலை மேலே காட்டப்பட்டுள்ள மேற்கோள்களால் அறியலாம். இதுபற்றியே ஆசிரியர் திருமூலதேவரும் இத்திருமந்திரச் செய்யுளில் மூல எழுத்துக்கள் யாவற்றையும் உள்ளவாறே கிளந்து ஓதாமல் அவற்றுள் அமைந்துள்ள மூன்று கூடங்களின் முதற் குறிப்பையும், அவற்றில் உள்ள பீசங்களின் தொகையை யும், இந்த வித்தையின் பெயரையும் எடுத்து விளக்கி உபதேச மரபிற் பெறப்படுமாறு செவியறிவுறுத்தியருளினார் என்க.

அவற்றுள்: க கராதி, அகராதி, ச, கராதி என்பன அந்த 3 கண்டங்களிலும் உள்ள மூல எழுத்துக்களின் முதற் குறிப்பு ஆகும். 5, 6, 4 என்பன அவ்வக் கண்டங்களில் உள்ள எழுத்துக் களின் தொகையாகும். ககராதி வித்தை-காதி வித்தை என்பது பெயராகும் என்க. இவ்வாறு இந்த பஞ்ச தசியில் உள்ள பீசங்களின் பகுப்பையும், அவற்றின் உண்மையையும் உணர்ந்து பயில்பவருக்கே மந்திர சித்தி எய்தும் என்பதாக ஸ்ரீ லலிதா திரிசதியிலும் சொல்லப்பட்டுள்ளது.

ஸ்ரீ பஞ்ச தசாட்சரி வித்தை:

இந்த வித்தையானது; இத்தகைய பெருமையை உடைய தாக இருத்தலினாலே இஃது ஆகமங்களிலும் திருமுறைகளிலும், பிறவற்றிலும் பெரிதும் அருமையாகவும், மறைவாகவுமே வைத்துப் போற்றப்பட்டுள்ளது.

அவற்றுட் சில வருமாறு:

"வட்ட மென்முலை யாளுமை பங்கனார்
எட்டும் ஒன்றும் இரண்டுமூன் றாயினார்"
—தேவாரம் 5650

" அஞ்சும் அஞ்சுமோர் அஞ்சும் ஆயவன்" — 6106

" அவ்வுண்டு சவ்வுண்டு அனைத்துமாங் குள்ளது
கவ்வுண்டு நிற்குங் கருத்தறி வாரில்லை
கவ்வுண்டு நிற்குங் கருத்தறி வளர்க்குச்
சவ்வுண்ட சத்தி சதாசிவன் றானே."
—திருமந்திரமாலை 933

" ஏனைப் பதினைந்தும் விந்துவும் நாதமும்
சேனையுஞ் செய்சிவ சக்கரந் தானே." — 988

" பாதி பராபரை பன்னிரண் டாதியே." — 1124

" வைத்தார் புவனை திரிபுரை மந்திரம்
ஒத்தபன் னிரண்டுடன் மூன்றெழுத் தாகும்."
—திருமந்திரம் 300: 373

" வாலை புவனை வடிவுள நாயகி
ஆலை திரிபுரை அமருஞ் சாமளை
கோலைய மாயுறு கோமளை யாமளை
மாலைப் பஞ்ச தசாட்சரி பூசையே."
—திருமூலர்வாலை பூசாவிதி 41: 1

"பஞ்ச தசாட்சரீ மநோஹராய நம: | "
— நடேசர் அஷ்டோத்தரம் 54

" ஹகாரஞ்ச ஸகாரஞ்ச் ககாரஞ்ச ஹகாரகம் |
லகாரஞ் சைவ ஹ்ரீங்காரம் ககாரஞ் சைவ
ஏகாரகம் ||
ஹகார லகார ஹ்ரீங் காரஞ்ச ஸகாரஞ்ச ககாரகம் |
ஹகா ரஞ்ச லகாரஞ்ச ஹ்ரீங்காரா வதியந் மநும் | (?)
த்ரிபுரா மந்த்ரகம் ப்ரோக்தம் ததா பஞ்ச
தசாட்சரீம் | "
— காமிகாகமம்

"ஹஸகஹல ஹ்ரீம் | க ஏ ஹல ஹ்ரீம் | ஸகல ஹ்ரீம் என்பது, திரிபுரை மந்திரம் என்றும், பஞ்ச தசாட்சரீ என்றுஞ் சொல்லப்படும் | ." — காமிகாகமம்

" ஹ ஸ க ஹ ள ஹ்ரீஞ் சைவ ஸ க ஹள ஹ்ரீந்
தத்தை வச |
கயஹ்ள ஹ்ரீம் ததாப் ரோக்தம் சக்தேச்ச சோட
சாட்சரீ || — " (?)

என்பனவும் பிறவுங் காண்க.

பஞ்சாட்சரியும், பஞ்சதசாட்சரியும் :

இனி: சிவமூல மந்திரமாகிய திருவைந்தெழுத்தும், சத்தியின் மூலமந்திரமாகிய பதினைந்தெழுத்தும் ஆகிய இவை இரண்டும் சிவமும் சத்தியுமாயுள்ள இருவரையும் குறித்து நிற்றலினாலே, அவை மந்திரம் என்றும் வித்தை என்றும் கூறப்படும் என்பது மேலே காட்டப்பட்டது. ஞாயிறு ஆகிய பொருள் ஒன்றே தன்னை விளக்குங்காற் கதிர் என்றும், உலகத்துப் பொருள்களை விளக்குங்காற் கதிரோன் என்றும் பெயர் பெற்று நிற்குமாறு போன்று, முழுமுதலாகிய பரம்பொருள் ஒன்றுதானே தன்னை யுணர்த்துமிடத்து சிவமென்றும், உலகினைக் குறித்து நிற்கு மிடத்து சத்தியென்றுஞ் சொல்லப்படுமென்க.

இவ்வாறே, இந்த மறைமொழிகளாயுள்ள வித்தைகள் இரண்டும் சிவமும் சத்திமாயுள்ளதோர் முழுமுதற் பொருளை உணர்த்துமாயினும் அவற்றுள் 5 எழுத்து வித்தையானது சிவத்துக்கு முதன்மையாகவும், 15 எழுத்து வித்தையானது சத்திக்கு முதன்மையாகவும், அமைந்திருத்தலினாலே தலைமை பற்றிய பெயர் வழக்காய் அங்ஙனம் சிவமூல மந்திரம் என்றும், சத்தியின் மூலமந்திரம் என்றும் வழங்கப்பட்டனவேயன்றி, உண்மையான் உற்று நோக்குவார்க்கு இவை தம்முள் வேற்றுமையின் றென்க. சிவத்துக்கும் சத்திக்கும் உள்ள வேறுபாடு எவையோ! அவையே இம்மந்திரங்கட்கும் உள்ள வேறுபாடென்க.

மேற்கோள்:

"சத்தியாய் சிவமாய் உலகெலாம் படைத்த
தனிமுழுமுதலுமாய் அதற்கோர் வித்துமாய்"
— திருவிசைப்பா

"அருளது சத்தியாகும் அரன்றனக்கு அருளை இன்றித்
தெருள் சிவம் இல்லை அந்தச் சிவமின்றி சத்தியில்லை"
— சிவஞான சித்தியார் 239

"அருளல்ல தில்லை அரன் அவன் அன்றி
அருள் இல்லை ஆதலின்."
— திருமந்திரம் 475

"சத்தி சிவமாஞ் சிவன்சத் தியுமாகும்." — 1772

"சேயுறு கண்ணி திருவெழுத்து அஞ்சையும்." — 2703

"நமச்சி வாயவே நானறி விச்சையும்."
— தேவாரம் 6113

"ஏதும் ஒன்றும் அறிவிலர் ஆயினும்
ஓதி அஞ்செழுத்தும் உணர்வார்கட்குப்
பேதம் இன்றி அவரவர் உள்ளத்தே
மாதுந் தானும் மகிழ்வர் மாற்பேறரே." — 5830

"அஞ்செழுத்து மேஅம்மை அப்பர்தமைக்
காட்டுதலால்." —திருக்களிற். 25

"பஞ்சாட்சர்யை நம: | பஞ்சாட்சராய நம: |"
—சிதம்பர (நடேசர்) சம்மேளன அஷ்டோத்தரம்

"ஸ்ரீவித்யா மந்த்ர ஸ்வருபாயை நம: |
ஸ்ரீபஞ்சாட்சரீ மயாயதேநம: |"
—அர்த்த நாரீசுவரர் அஷ்டோத்தரம் 69 : 70

"பஞ்சாட்சர ஸ்வரூபாய நம: |
ஸ்ரீமத் பஞ்சதசாட்சர்யை நம: |"
—சகஸ்ர நாமாவளி 671 : 672

என்பனவும் ஈண்டுக் கருதத்தக்கன.

மந்திரோபதேசம் பெறுதற்குரியார்

இனி; இந்தப் பஞ்சதசாட்சரீ வித்தையை உபாசித்தற்குத் தகுதியுடையார், இன்ன மரபினராகத்தான் இருத்தல் வேண்டும் என்னும் நியமம் இல்லை: இம்மந்திரத்தைப் பயில்வதில் அதிகாரம் அனைவருக்கும் உண்டு என்பதாக லலிதா திரிசதீ முதலியவற்றிற் கூறப்பட்டுள்ளது. இதனானே இம்மந்திரம் சித்தவித்தை என்றுஞ் சொல்லப்படும் என்பது முன்னரே விளக்கப்பட்டது. காயத்திரி முதலான சிற்சில மந்திரங்களின் உபதேசத்தில் உரிமை இன்னாருக்குதான் உண்டு என்னும் நியமம் இருத்தலைப் போலன்றி, உலகினர் அனைவருமே இம்மந்திரோபதேசம் பெறுவதில் தகுதியுடையவராவர். இது பற்றியே ஆசிரியர் திருமூலதேவர் "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" (திருமந்திரம் 85) என்னும் பெருகருணை யினாலே மாந்தர் யாவருக்கும் ஏற்புடைத்தாயுள்ள இம்முறை மொழியாகிய ஸ்ரீவித்தையை ஈண்டு முதற்கண் எடுத்து வெளிப்படுத்திச் செவியறிவுறுத்தியருளினார் என்க.

இவ்வாறே, ஸ்ரீ பஞ்சாட்சரீ வித்தையிலும் அதிகாரம் உலகினர் அனைவருக்கும் உண்டு என்பதும் ஈண்டுக் கருதத் தக்கது. இன்ன மரபினர்தாம் செபித்தற்குத் தகுதி உடையார் என்றும் இன்ன மரபினர் செபித்தற்குத் தகுதியிலர் என்றும் வரையறை விதிக்கப்பட்டுள்ள சில மறைமொழிகளைப் போலன்றித் திருவைந்தெழுத்தைப் பயில்வதிலும் உலக மக்கள் யாவரும் உரிமையுடையவராவர் என்க.

மேற்கோள்:

"உலகுக்கெலாம்—நம்பன் நாமம் நமச்சிவாயவே."
—தேவாரம் 3321

" கொல்வாரேனும் குணம்பல நன்மைகள்
இல்லாரேனும் இயம்புவராயிடின்" —தேவாரம் 3324

" நமச்சிவாயவெனும் ..சொல்—சிந்தையால் மகிழ்ந்து
ஏத்தவல்லார் எல்லாம்." — 3330

" நல்லவர் தீயர் எனாது நச்சினர்." — 3034

" குலமிலராகிலுங் குலத்துக்கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சிவாயவே." — 4267

"அடைந்தவர்க்கெலாம்-நன்னெறியாவது
நமச்சிவாயவே" — 4270

"நமச்சிவாய வாஅழ்க நாதன்றாள் வாழ்க"
—திருவாசகம் 1: 1

"நம்ச்சிவாயத் திருப்பதிகத்தை அங்கண்
வானமும் நிலனுங்கேட்க அருள்செய்து இம்மணத்தில்
வந்தோர்
ஈனமாம் பிறவி தீர யாவரும் புகுக என்ன."
—பெரிய புராணம் 3151

என்னுந் திருவாக்குகளும் ஈண்டுக் கருதத் தக்கன.

இதுகாறும் உரைத்தவாற்றால், 5-எழுத்து வித்தையும், 15-எழுத்து வித்தையும் ஆகிய இவை 2-ம் எல்லா உலகங்கட்கும் அம்மையப்பராயுள்ள முழுமுதற் பரம்பொருளை உணர்த்தும் வித்தைகளாகும் என்பதும், இவைதம்முள் வேற்றுமை இன்று என்பதும், இவற்றை உபதேசம் பெறுவதிலும், உபாசித்தலிலும், செபித்தலிலும் உரிமை உலகமக்கள் அனைவருக்கும் உண்டு என்பதும் தெற்றெனை விளங்கும்.

பஞ்சாட்சரீ வித்தையும், பஞ்ச தசாட்சரீ வித்தையும்
தகர வித்தையாமாறு :

இனி; தகர வித்தையாவது: மேலே சொல்லியவாறு உலகுயிர்கட்கெல்லாம் அம்மையப்பராய் — உமாசகாயராய்

உள்ள அம்முழுமுதற் பரம்பொருளை யோக நெறியாலே உள்ளத்தாமரையின் கண்ணதாகிய சிற்றம்பலத்திற்றிகழும் செழுஞ்சுடர் முனையின் நடுவண் வைத்துத் தியானித்து உணர்தலாகும். தகரம்=நுண்மை - ஞானம் - பராசத்தி - குறை. வித்தை - உணர்தல்.

மேற்கோள்

"போதுகந் தேறும் புரிசடை யானடி உணர்ந்தார்."
—திருமந்திரம் 632

"போதா லயத்துப் புலன் கரணம் புந்தி
சாதா ரணங்கெடல் தாஞ் சகமார்க்கமே"
—1492; 1707

"ஆவிக் கமலத்தின் அப்புறத்து இன்புற-
மேவித் திரியும் விரிசடை நந்தியை."
— 1147

"மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்-
நிலமிசை நீடு வாழ்வார்." — திருக்குறள் 3

(மலர் = உள்ளக்கமலம் - தகரபுண்டரீகம் - சிற்றம்பலம் ஏகினான் = ஆதிபகவன் - ஆதிசத்தியாகிய அம்மையுடன் கூடிய பகவன் - சிவபெருமான். "உருத்திரன் சத்தி-உமை. மகேசுவரன்சத்தி - பவானி. சாதசிவன் சத்தி - மனோன் மணி. சிவன்சத்தி-ஆதி." என்பது காமிகாமம். "சிவமெனும் பொருளும் ஆதிசத்தியொடு சேரின் எத்தொழிலும் வல்லதாம்- இவள் பிரிந்திடின். இயங்குதற்கும் அரிதரி தெனா மறை இரைக் குமால்."— சௌந்தரியலகரி 1 "சத்தியுள் ஆதியோர் தையல் பங்கன்"- தேவாரம் 1241. என்பனவும் காண்க. எனவே ஆதி சத்தியை ஒரு கூற்றிலே கொண்ட பகவன் ஆதிபகவன் என்க. "பெண் உரு ஒரு திறன் ஆகின்று அவ்வுருத் - தன்னுள் அடக்கி கரக்கினுங் கரக்கும்-" புறம் 1. என்பதும் கருதத்

தக்கது. தேர்தல் = தியானித்தல்—சோகம். பாவனை – சிவோகம் பாவனை. நிலம்—பிரம்மலோகமாகிய சிவலோகம்)

"அரியரன் பூமேலோன் அகமலர் மேல் மன்னும்
விரிகதிரஞ் சோதி விளக்காகிய நிற்பாய்."
—சிலப் 12. உரைப்பாட்டுமடை 8

"ஊன் கண்ணார்க்குப் படிமையினும், அந்தணர்க்கு வேள்வித் தீயினும்,
யோகிகட்கு உள்ளத்திலும், ஞானிகட்கு எவ்விடத்தும் வெளிபடுதலால்
சுடர்வளப்பாடு கோடலை அந்தணர் காணும் வரவு என்றார்."
—பரிபாடல் 2: 68 பரிமே

"மலர்மிசை எழுதருபொருள் நியதமும் உணர்பவர்."
—தேவாரம் 221

"ஞானம் – புகலுடை – யோர்தம் உள்ளப் புண்டரிகத் துள்ளிருக்கும் புராணர்."
—1421

"எரியாய தாமரைமேல் இயங்கினாரும்."
— 6408

"தாமரையினர்...கழிப்பால மேய கபாலப்பனார்"
—6360

"அன்பர்தஞ் சிந்தையில் அலர்ந்த – திருவளர் ஒளிசூழ் திருச்சிற்றம்பலம்."
—பெரிய 351

"பூலரும் இதயத்துப் பொருளோடும் உணர்ந்திருந்தார்."
— 3593

"தகரத்து அந்தச் சிகரத்து ஒன்றி."
—திருப்புகழ்

"தரணியின் நடுவண் வைகுஞ் சரவணப் பொய்கை தன்னில்
விரைசெறி கமலப் போதில் வீற்றிருந் தருளுஞ் செவ்வேள்

பெருவடி வமைந்த மாயன் பிறங்கிய மனத்திற்
றண்ணென்று
எரிசுடர் விளக்கத் துச்சி இருந்திடும் ஈசன்போன்றான்.''
—கந்தபு. திருவவ 100

''சுடர்மனக் குகையுள் ஏகம்பத்து-ஓமொழிப் பொருளை
அடக்கி ஆனந்தம்
உறுநர்வாழ் இடம்ப உளவால்.''
—காஞ்சிப் திருநகரப் 109

''ஏய்ந்தசீர்த் தகர வித்தை முறைப்படி இதயக் கஞ்சப்
பூந்தழற் சிகைமேல் ஈசற் போற்றும் மாயவன்.''—119

''பகரும் உந்தியின் மேலிடத் தலரும்அப் பதுமத்
திகழ ருந்திறத் தில்நுண் குகையதன் இடத்து
நுகரும் ஊண்பகுத் தமருநோன் தழல்அதன் தலையில்
திகழ மேவரும் நுணங்குபூஞ் சிகையதன் நடுவண்.''
—தழுவக் 153

''சாற்றும் மெய்ப்பரப் பிரமமாஞ் சதாசிவப் புத்தேள்
வீற்றிருப்பது யோகத்திற் கண்டனன்.'' —154

''இதய நாண்மலர் இடத்தினிற் பெருவிரல் அளவில்
வதியும் நாதனை யோகினில் வழிபடு வார்க்குப்
புதிய போகமெ லாமுறும்.'' —தணிகைப்புராணம்

''மலைமகள் துணைவன் முக்கணன் நீலமணிமிடற்றவன்
என வானோர்
திலகனே உன்னைத் தகரமாங்குகையுள் தியானஞ்
செய்திடுமுறைசெப்பி
...உரைக்குங் கைவல்லிய மறையே.''
—சிவதத்துவ விவேகம்

''மறைகளிற்றலைமை எய்திய விருகதாரணியகம்
முதல் மறைகள்
பிறவுநல் இதயத்துறுபொருளாம் உன் பெருமையே
பேசிடும்.'' — ''

"தகரமெஞ்ஞானத் தனிப்பொருள் (பெரு)
வெளியெனும்
அகர நிலைப்பதி அருட்பெருஞ்சோதி."

—இராமலிங்க அடிகள் அருட்பெருஞ்சோதி அகவல் 45-46 என்பனவற்றால் தகரவித்தையின் தன்மையை அறிக.

தகரவித்தையின் பரியாயப் பெயர்கள்.

இங்ஙனம் மாதொருபாகனாகிய ஆதிபகவனை உள்ளத் தாமரையின் கண்ணே வைத்துத் தியானிப்பதாயுள்ள இவ் வித்தையானது பிரம்மவித்தை, ஆத்மவித்தை, பராவித்தை, ஸ்ரீவித்தை, குஹ்யவித்தை, மகாவித்தை, சிற்றம்பல வித்தை, சிதம்பரவித்தை, அம்சவித்தை, அசபாவித்தை என்றும், தகரோபாசனை என்றுங் கூறப்படும்.

நான்மறைகளின் முடிவாயுள்ள பிருகதாரணியம், கைவல்லியம், சாந்தோக்கியம், தைத்ரீயம், மகாநாராயணம் முண்டகம், சுவேதாசுவதரம், கேநம், மைத்ராணம், முதலாகிய உபநிடதங்களிலே இந்தத்தகரோபாசனையானது விதந்து கூறப்பட்டுள்ளது. சூக்குமாகாயமாகிய தகராகாசம் எனப்படும் சிற்றம்பலத்தைக் குறிக்கும் பெயர்கள் பல அவ்வுப நிடதங்களிலே் காணப்படுகின்றன. தில்லை மூதூரானது இவ்வுலகில் சிற்றம்பலத்தின் விளக்கத்திற்கு நிலைக்களனாக இருத்தலினாலே தானியாகுபெயரான் சிதம்பரம் என்றும், சிற்றம்பலம் என்றும் சொல்லப்படும்.

சிதம்பரத்தின் வேறு பெயர்கள்

1. சிதம்பரம் = ஞானாகாசம் – ஞானமாகிய ஆகாசம். ஏனைப் பூதாகாசம்போற் சடமாயிராமல் என்றும் சித்தாயுள்ள ஆகாசம் – சிற்றம்பலம் என்றபடி, சித் – ஞானம். அம்பரம் – ஆகாசம்.

2. சிற்றம்பலம் - தகராகாசம். தகரம் ஆகாசம் = தகரா காசம். சிறுவை = அம்பலம் = சிற்றம்பலம். தகரம்=சிறுமை-

நுன்மை - ஞானம். ஆகாசம் - அம்பலம். (-சாந், பிருக, தைத்-உபநிடதங்கள்).

3. அற்புதம் = புதுமை - ஞானம், நோக்குந்தோறும் நோக்குந்தோறும் புதிதாயிருப்பது — ஞானமயமாயிருப்பது (கைவல்).

4. அம்பலம்=பொது - மன்று - பொதுவிடம். எல்லாவுயிர் களுக்கும் பொதுவாய்ப் பவப்பகை வழக்கைத் தீர்க்கும் இடம்.

5. அமலம் - இயல்பாகவே பாசங்களின் நீங்கி நிற்கும் இடம். அ-இன்மை. மலம் - பாசம்.

6. சத்து - உள்ளது; காலத்தால் வரையறுக்கப் படாமல் என்றும் ஒரு பெற்றித்தாய் நிலைத்துள்ள பொருள். (-"ஓர்த்து உள்ளம் உள்ளது உணரின்" — திருக்குறள். உள்ளம்=ஆன்மா-உயிர். உள்ளது=சத்து-பரமான்மா - சிவம். சாந்தோக்கியம்).

7. உம்பர் - எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்ட மேலான பொருள். சுத்தமாயைக்கும் அப்பாற்பட்ட பொருள் என்றபடி.

8. இரண்மய கோசம் — ஞானமயமாகிய கோசம். இரண்யம் - ஞானம். கோசம் - பொக்கிஷம் - கருவூலம். "முதுநூலிற் – சின்மயமாம் மன்று இரண்மயம் ஒன்று உண்டு – முதனூல்களாயுள்ள வேதாகமங்களிலே ஞானமயமாகிய சபைக்கு இரண்மய கோசம் என்று ஒருபெயர் சொல்லப்பட்டு உள்ளது." –கோயிற். நடராசச் 42 (முண்டகம்).

9. மகத்து - பெரியது; எல்லாப் பொருள்களுந் தன்பால் ஒடுங்கத்தான் ஒன்றிலும் ஒடுங்காமலும், எல்லாப் பொருள்கட்குந் தோன்றுமிடமாயும் உள்ளது. (- பிருகதாரண்யம்).

10. தனி = ஒன்றேயாய், ஒப்பற்றதாய், சுத்தகேவலப் பொருளாய் உள்ளது - விவிக்தம். (–கைவல்யம்)

11. புண்டரீகம் - வெண்டாமரை மலர்; சுத்தமாயையின் நிறம் வெண்மை; உள்ளத்தாமரையின் நிறமும் வெண்மையாகப்

பாவிக்கப்படும். உலகினுக்கு உள்ளத்தாமரைப்போதாயுள்ள இடம்.

"நீவிர் – இருவரும் கண்டமன்றம் இதயமாம்"

— திருவிளை.

"விராட் இருதய பத்மஸத்தாயநம: |"

— நடராசர்சகஸ்ர. 78

(–கைவல், சாந், மகாநாராயணோபநிடதங்கள்)

"புண்டரீக புரேசுவர்யை நம: | புண்டரீக புரேசுவராய நம: | ". — சிதம்பர சம்மேளன நாமாவளி.

12. குகை = மறைவாக உள்ள இடம் – ரகஸ்யஸ்தானம். குகன் – உள்ளமாகிய குகையில் விளங்குபவன். – (தைத்ரியம்)

13. ககனம் – ஆகாயம்; என்றும் எங்கும் நிறைந்துள்ள பரமாகாசம். (–மகாநாரா, சாந்தோக்ய உப நிடதங்கள்).

14. சுத்தம் - தூய்மையாய் – சுத்த மாயா சொருபமாய் உள்ளது. (பிருகதாரணியம்)

15. பரம் – (எல்லாப் பொருள்கட்கும்) மேலானது – சுத்த மாயைக்கும் அப்பாற்பட்டது. (சுவேதாசுவதரம்)

16. பரமவியோமம் = பராகாசம் – மேலான ஆகாசம் – ஞானாகாசம். "சிற்பரவியோமமாகுந் திருச்சிற்றம்பலத்துள்"

—பெரிய. 351

"வ்யோம மூர்த்தயே நம: | –நடராசர்சகஸ்ர. 95

(-சுவே. தைத்)

17. மெய்ப்பதம் – மெய்ப்பொருளுக்கு இடமாயுள்ளது சத்தியாஸ்பதம் – சத்திமயமாயதானம். மெய் = சத்து – சத்தாகிய பொருள். (-சாந்தோக்யம், கேநம்)

18. சுழுநாவழிஞான சுகோதயம் - சுழுமுனை நாடியின் நெறியி (சிவயோகத்தி)ல் ஞானானந்தம் தோன்றுமிடம்-

பரசிவசுத்த சுகாதீதமாகிய துரீயாதீத ஸ்தானம். (-தைத்ரியம்) "தில்லை ஞானயோகமார் தானம் ஆமால்" (-கோயிற்); "அருணிலைவிளங்கும் சிற்றம்பலம் எனுஞ் சிவ சுகாதீத வெளி நடுவிலே" -இராமலிங்க அடிகள்.

19. முத்தி - பாசநீக்கமும் வீடுபேறும் எய்தப்பெறும் இடம். முத்தி=விடுதல் - வீடு.

20. சத்தி - சிவசத்தியின் திருவுருவாயுள்ள இடம். "சத்தி திருவம்பலமாகக் - கொண்டு பரஞ்சோதி கூத்துகந்தானே;" "பராசத்தியில ஆடிக் - கோவினுள் ஆடிடுங் கூத்தப்பிரானே." (திருமந்திரம். 2749, 2757)

21. பரப்பிரமம் = சுத்த மாயைக்கும் அப்பாற்பட்ட பொருள் - மேலான பெரும்பொருள்.

22. சபை - எஞ்ஞான்றும் எல்லாப் பொருள்களிலும் விளங்குவது. (சாந்தோக்யம்)

23. சிவாலயம்=பரமாலயம் - பரம்பொருளாயுள்ள சிவத்துக்கு ஆலயமாக - கோயிலாக உள்ள இடம். "ஆலயமாக அமைந்த பஞ்சாக்கரம்" "உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்" - திருமந்திரம். 919; 1823. (மைத்ரம்) என்பனவற்றால் தகராகாசத்தின் தத்துவத்தினை உணர்க.

மேற்கோள்:

"அத்தன்பர தத்துவ்ன் நித்தநடத் தமரும்பொது
விண்பெயர் மன்றமலம்
சத்தும்பர் இரண்மய கோசம்மகத் தனிபுண்டரி
கங்குகை வண்ககனம்
சுத்தம்பரம் அற்புதம் மெய்ப்பதம்அச் சுழுநாவழி
ஞான சுகோதயநற்
சித்தம்பரம் முத்தி பரப்பிரமம் திகழுஞ்சபை சத்தி
சிவாலயமே."

—கோயிற்புராணம் - வியாக்ரபாதச் சருக்கம். 29

"என்றின்ன அநேகம் அநேகம்எடா ஏரார் பொதுவின்
பேர்ஆரணநூல்- நின்றென்றும் இயம்பிடும்" — 30.

"அமலம் ஸத்பரம் நித்யம் மகாந் கோசோ இரண்மய: |
அந்த: புரம் விவிக்தஞ்ச புண்டரீகம் குகாவரம். ||
ககனம் பரிசுத்தஞ்ச பரம் அற்புதம் உத்தமம் |
ஸத்யாஸ்பதம் சுழும்நாயாம் ஆத்மக்ஞாந சுகோதயம் ||.
சிதம்பரம் ஸ்வமுக்திச்ச லஸத்பிர்ம்ம புரோத்தம |
சக்திச்ச மகதீ திவ்யா விபுலச்ச சிவாலய: ||.
ஏதாநி சைதந்யாநி சுருதாந்யேநி கோடிச: |
உக்தாநி நியதம் வேதை ராக மைரகிலைரபி ||
ஏவமுக்தா பராசம்போ ந்ருத்தபூமி ஸ்சுவிஸ்த்ருதா |"
— சிதம்பரமான்மியம் அத்யாயம் 10

"வித்யாம் பராம் கதிசிது அம்பரம் அம்பகேசிது ஆனந்த மேவ கதிசித்கதிச்ச மாயாம் | தாம் விசுவமாகு: . |"
—காளிதாசர் அம்பாஸ்தவம்.

"அம்மே | சிலர் நும்மை வித்தை என்றும்; சிலர் பரை என்றும்; சிலர் அம்பரம், ஆகாயம், வியோமம், ககனம், க்கம் என்றும்; சுலர் ஆனந்தம் என்றும்; சிலர் மாயை என்றுங் கூறுவர் _" —

"எந்தச் சிவபெருமானுக்கு பரை சத்தியாயுள்ளாரோ அவர் ஆகாயம் எனப்படுவர்."
—கூர்மபுராணம்

"இருதயம், மனசு.. விஞ்ஞானம், பிரக்ஞாநம், மேதை, சிருஷ்டி, திருதி, மதி வசம் என்பன (-18ம்) பிரக்ஞானத்தின் பெயர்களாகின்றன."
—ஐதரேயம்

"சிவபெருமான் வேத்யர்; சத்தியார் சிவை, வித்தை, பிரக்ஞை...ஞானேச்சாக்கிரியை, ஆக்ஞை (ஆணை) எனப் படுவர்."
—வாயுசங்கிதை உத்தரபாகம் அத்யாயம்-8

"சிவமும், சத்தியும் இயைந்துள்ள பரம்பொருளே பரமான்மா என நிச்சயிக்கப்படுகின்றது."
—கைலாய சங்கிதை

"இருதய குகையின் கண்ணேயுள்ள பரமாகாயத்தில் இருக்கும் பரம்பொருளை அறிபவன் விழைந்த போகங்கள் யாவற்றையுந் துய்க்கின்றான்." —தைத்ரீயம்

"பரமாகாயத்திலே நிறுவப்பட்டுள்ள அந்த வித்தை அறியப் பட்டது." —தைத்ரீயம்

"பிரமபுரத்தின் நடுவில் உள்ள தகரபுண்டரீக வீட்டில் தகராகாசம் உள்ளது. அதன்கண் உள்ளது உபாசிக்கற் பாற்று."
—மகாநாராயணம்

"சிவபெருமான் ஆகாயமத்தியிற்றியானிக்கற் பாலர்."
—அதர்வசிகோபநிடதம்

"சிதம்பரந் தற்குகை ஆதாரந்தானே."
—திருமந்திரம் 2653

"எங்குந் திருமேனி எங்குஞ் சிவசத்தி
எங்குஞ் சிதம்பரம் எங்குந் திருநட்டம்" — 2772

"அம்பல மாவது அகில சராசரம்
அம்பல மாவது ஆதிப் பிரானடி
அம்பல மாவது அப்புத்தீ மண்டலம்
அம்பலமாவது அஞ்செழுத் தாமே." — 2775

"திருமந் திரமே சிதம்பரந் தானும்" — 3101

"உள்ளத்து ளேயுடல் ஆகாயம் ஆமே," — 2804

"உள்ளம் வெளியது வாமே." — 2810

"சத்தியார் கோயில் இடம்வலஞ் சாதித்தால்
மத்தியா னத்திலே வாத்தியங் கேட்கலாம்
தித்த கூத்தும் சிவனும் வெளிப்படும்
சத்தியஞ் சொன்னோம் சதாநந்தி ஆணையே." — 730

"பற்றுக்குப் பற்றாய்ப் பரமன் இருந்திடஞ்
சிற்றம் பலமென்று சேர்ந்துகொண் டேனே."
— திருமந்திரம் 2770

"உடலாங் குகையில் உணர்வாகும் பீடத்
தடலார் சமாதி இதயத்த தாக
நடமா டியகுகை நாடிய யோகி." — 3049

"அருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோம மாகுந் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ்செய் கின்ற பூங்கழல் போற்றி
போற்றி." — பெரிய 351

"அண்ண லார்தமக் களித்தமெய்ஞ் ஞானமே
யான அம்பலமும்." — 2563

"அறிவின் எல்லை யாயதிருத் தில்லை." — 3813

"பரை இடமா நின்று-பராசத்தியாகிய திருவம்பலம்
இடமாக நின்று." — உண்மை விளக்கம் - உரை. 38

"தகரஸ்தாய நம:" — நடராசர் ஆயிரநாமம் 338

"தகராகாச நிலையாயை நம: அர்த்தநாரீசுவரர்."
— ஆயிரநாமம் 620

"தகராகாசரூபிணி - உள்ளமாகிய குகையில் இருக்கும்
சூட்சுமமான ஆகாச சொரூபமாயுள்ளவர்."
—லலிதாசகஸ்ர நாமம். 609

"பராகாசா பராசத்தியாகிய ஆகாசத்தில் இருப்பவர்-
பராகாச சொரூபமாயிருப்பவர்; பராகாசம் = ஞானா
காசம்-சிற்றம்பலம்." — லலிதாசகஸ்ரநாமம். 782

"அதயதஸ்மிந் ப்ரஹ்மபுரே தஹரம் புண்டரீகம்
வேச்ம !

"தஹரோஸ்மிந் அந்தராகாச: தஸ்மிந்யதந்தஸ்ததந்
வேஷ்டவ்யம்"-சுருதி.

"தஹர உத்தரேப்ய:|" என்பன முதலாக வரும்
பிரமசூத்திர (1—3—13) தகராதிகரணப் பகுதிகளும்,
பிறவும் காண்க.

இவற்றால் தகராகசா மெனப்படும் திருச்சிற்றம்பலமானது, சிவசத்தி சொரூபம் என்பதும், பிண்டாண்டம் பிரமாண்டங்கள் எங்கணும் நிறைந்துள்ள தென்பதும், இறைவன் புரிந்தருளும் திருக்கூத்தினுக்கு முக்கிய நிலைக் களனாகவுள்ளதென்பதும், ஞானமாகிய பராசத்தியின் சொரூபம் என்பதும், பிறவும் புலனாகும். (பிண்டாண்டம்-உடல். பிரமாண்டம்-உலகம்.)

தகரவித்தையாகிய சிற்றம்பல உபாசனையின் வகை:—

இனி, தெய்வஞ்சுட்டிய பெயர்நிலைக் கிளவியாயுள்ள இச்சிற்றம்பலமானது; பொதுவாக ஒன்றாயும், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம், ஆதி ஆன்மிகம் என்னும் இடவகையான் மூன்றாயுஞ் சொல்லப்படும். இவற்றுள்:—

1. ஆதிபௌதிகம் என்பது, புறத்தேயுள்ள பூதாகாச மாகும். இது தூலவடிவம்; தில்லைச்சிற்றம்பலத்தின் கண்ணே வைத்துக் கண்டு வழிப்படப்பெறுந் திருவுருவமாம். "உணர்வின் நேர்பெற வருஞ்சிவ போகத்தை ஒழிவின்றி உருவின்கண்-அணையும் ஐம்பொறி அளவினும் எளிவர அருளினை" (-பெரியபு. 2064) என்னுந் திருவாக்கும் அது.

2. ஆதி தைவிகம் ஆவது, மாந்திரிகன் தன்னுடைய உள்ளக் கமலத்தின் கண்ணே அதுபோல வைத்துத் தியானித்துக் கணிக்கப்படும் மந்திரம் ஆகும். இது சூக்கும வடிவம். அஃது 5-எழுத்தும், 15-எழுத்தும் ஆகிய பஞ்சாட்சரீ, பஞ்சதசாட்சரீ வித்தைகளின் (சிவசத்தி) சம்மேளன மந்திரமாகும். பஞ்சதசீ வித்தையானது பராசத்தியின் திருவுருவமாக அமைந்துள்ள முறைமையும், பஞ்சாட்சரீ வித்தையானது பரமசிவத்தின் திருவுருவமாக அமைந்துள்ள முறைமையும் முன்னர்க் காட்டப் பட்டன. "ஸ்ரீ வித்தை-தகரவித்தையின் அனுபவம் எனக் கொள்க" [-திருவாசகம். 376 காழித் தாண்டவராயர்] என்பதும் ஈண்டுக் கருதத்தக்கது.

3. ஆதியான்மிகம் என்பது, அங்ஙனம் அறிவாற் கணிக்கும் மாந்திரீகனுக்கு அம்மந்திரத்தினிடமாக நின்று பயனளிப்பதா

யுள்ள சிவசத்தியாகும். இஃது அதிசூக்கும வடிவம். இம்மூன்றனுள் ஈண்டுத் தகரவித்தை என்றது, உள்ளக் கமலத்தின்கண் வைத்துத் தியானித்துக் கணிக்கப்படும் சிவசத்தி சம்மேளன மந்திர சொரூபமாயுள்ள ஆதி தைவிக சிற்றம்பல வித்தையை என்க.

மேற்கோள்

"புறத்துள் ஆகாசம் புவனம் உலகு
அகத்துள் ஆகாசம் எம்ஆதி அறிவு
சிவத்துள் ஆகாசம் செழுஞ்சுடர்ச் சோதி
சகத்துள் ஆகாசம் தானஞ் சமாதியே."

—திருமந்திரம். 2812

"அண்ண லார்தமக் களித்தமெய்ஞ் ஞானமே
யானஅம் பலமும்தம்
உள்நிறைந்த ஞானத்தெழும் ஆனந்த ஒருபெருந்
தனிக்கூத்தும்." —பெரிய. 2063

"ஆகாசம் இருவகைப்படும். அவை: பிண்டாண்ட ஆகாசம் பிரம்மாண்ட ஆகாசம் என்பன. இந்த 2-ம் பிரம்ம வியத்திஸ் தானமாகிய பிரகாசம் என்று சொல்லப்படும். இந்தப் பிண்டாண்டத்தில் உள்ளதாகிய பராகாசமும் 2-வகைப்படும். அவற்றுள்:

1) இருதயாகாசம்: என்பது ஞாயிறு மதிமண்டலங்கட்கு நடுவில் உள்ள ஆகாயத்தில் இருக்கும் செந்தீ மண்டலத்தின் முனையில் பராகாசமாகும்."

2) "மற்றொன்று நெற்றிக்குமேல் கபால உச்சிவரை உள்ள இடமாகிய துவாத சாந்நப் பெருவெளியாகும்." "சிரசுக்குமேல் 2-அங்குல அளவில் உள்ள இடம் பரம வியோமம் எனப்படும் பராகாசமாம்."

—சித்ககன சந்திரிகை; சுவச்சந்த சங்கிரகம்.

என்பனவற்றால், இந்த மூவகைச் சிற்றம்பலங்களின் உண்மை புலனாகும்.

அன்றியும்; கோயிற்புராணம், சிதம்பர புராணம் புலியூர்ப் புராணம், திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் முதலியவற்றில் முதற்கண் உள்ள பாயிரம்-கடவுள் வாழ்த்துப் பகுதிகளில் இவற்றிற்குத் தனித்தனிச் செய்யுட்களால் வாழ்த்துக் கூறப்பட்டிருத்தலும், சிவஞானபாடியச் சுவடியில் முதற்கண் வரையப்பட்டுள்ள திருப்பாசுரம், திருவாசகம், திருக்குறள், கற்பக விநாயகர்துதி, குருமரபு வாழ்த்து ஆகிய இச்செய்யுட்கள் ஒவ்வொன்றன் முடிவிலும் "திருச்சிற்றம்பலம், திருச்சிற்றம்பலம், திருச்சிற்றம்பலம்." என்று மும்முறை அடுக்கி வரையப்பட்டிருத்தலும், அவ்வாறே, அருண்மிகு; இலக்கணம்-முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகளால் சென்னை வித்தியாநுபாலனயந்திர சாலையில் வெளியிடப்பட்ட சிவஞான பாடியப் பதிப்பில் (துர்மதிஸ - மார்கழிமாதம்) காணப்படு தலும் ஈண்டுக் கருதத்தக்கன.

மேற்கோள்:

"தேங்கமழும் பொழிற்றில்லைத் திருச்சிற்றம்பலம்
போற்றி." —கோயிற்புராணம்

"சீரணங்கு மணிமாடத் திருச்சிற்றம்பலம் போற்றி."
—கோயிற்புராணம்

"சிற்பரமாம் அம்பரமாந் திருச்சிற்றம்பலம் போற்றி."

"ஞானத்-திருமகிழ நின்றாடுஞ் சிதம்பரத்தை
எந்நாளுஞ் சிந்தைசெய்வாம்." —சிதம்பர புராணம்

"தில்லையம்பலத்தே திருக்கூத்தாடும்-ஏர்மேவு
பேரொளியாஞ் சிதம்பரத்தை
எந்நாளும் இதயஞ் சேர்ப்பாம்."
—புலியூர்ப் புராணம்

"சந்ததந் - திருத்தச் செம்பதம் புரிப்பித் தன்புறுந்
திருச்சிற்றம்பலந் திருச்சிற்றம்பலம்."
—திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம்

"திருவும் பெரும்புகழுந்தருந் திருவம்பலந் திருவம்பலம்."
—திருவிளையாடற் புராணம்

"பொன்னஞ்சிலம்பின்னந்தரும் பொன்னம்பலம்
பொன்னம்பலம்."
—திருவிளையாடற்புராணம்

"தென்மதுரை மாநகர்சேர் திருச்சிற்றம்பலம் போற்றி."
—திருவிளையாடற்புராணம்

என்பனவும், பிறவுங்காண்க. இவற்றால்; சிற்றம்பலம், சிதம்பரம், திருவம்பலம், பொன்னம்பலம் என்பன தெய்வஞ் சுட்டிய பெயர்நிலைக் கிளவிகளாகிய மறைமொழிகளாய் நிற்கும் வாய்மையையும் உணர்க.

சிற்றம்பலக் கூத்து

இனி; இறைவன் இடையறாமல் இயற்றியருளுந் திருக் கூத்தினுக்கு இடனாகவுள்ள இந்த மூவகைச் சிற்றம்பலத்தின் கண்ணும் வைத்து நோக்குங்கால் (1) ஆதியான்மிகச் சிற்றம் பலத்திற் புரியும் சிவானந்தக் கூத்தானது, முத்தான்மாக்கட்டு அந்தமிலா ஆனந்தத்தை விளைவித்தற் பொருட்டும், (2) ஆதிதைவிகச் சிற்றம்பலத்திற் புரியும் அருள் ஞானக்கூத் தானது, ஏனைப் பெத்தன்மாக்கள் இருண் மலம் நீக்கித் திருவருள்ஞானத்தை எய்துதற் பொருட்டும், (3) ஆதிபௌதிகச் சிற்றம்பலத்திற் புரியும் திருக்கூத்தானது, அவ்வான்மாக்களுக்குத் தனுகரண புவன போகங்களாயும், தத்துவ புவன வன்ன பத மந்திர கலைகளான ஆறு அத்து வாக்களாயும் விரிந்து நிற்கும் சொல்லும் பொருளுமாயுள்ள இருவகை உலகங்களையும் தோற்று வித்தற் பொருட்டும் நிகழ்வனவாகும். எனவே ஆதிபகவனாகிய அம்பலவாணன் புரியும் அருட்கூத்தானது, நிலைத்திணைகளாயுள்ள சடப்பிரபஞ்சங்களின் அறிவு விளக்கத் திற்கும், இன்பப்பேற்றினுக்கும் மூலகாரணமாகும் என்க.

மேற்கோள்

"வேதங்கள் ஆட மிகுஆ கமமாடக்
கீதங்கள் ஆடக் கிளரண்டம் ஏழாடப்
பூதங்கள் ஆடப் புவனம் முழுதாட
நாதங்கொண் டாடினான் ஞானாந் தக்கூத்தே."

—திருமந்திரம், 2729

"தேவர் ... சராசரம்-யாவையும் ஆடிடும் எம்மிறையாடவே."

— 2731

"தெண்டினிற் சத்தி திருவம் பலமாகக்
கொண்டு பரஞ்சோதி கூத்துகந் தானே." —2749

"பாவினுள் ஆடிப் பராசத் தியிலாடிக்
. கோவினுள் ஆடிடுங் கூத்தப் பிரானே:"

— திருமந்திரம் 2757

"மூன்றினும் ஆடினான் மோகாந்தக் கூத்தே."

— 2784

"புரிந்தவன் ஆடிற் புவனங்கன் ஆடும்."

— திருமந்திரம் 2786

"தத்துவம் ஆடச் சதாசிவந் தானாடச்
சித்தமும் ஆடச் சிவசத்தி தானாட
வைத்த சராசரம் ஆட மறையாட
அத்தனும் ஆடினான் ஆனந்தக் கூத்தே."

— திருமந்திரம் 2789

[என்பனவாதியாகத் திருமந்திரமாலை 9—ஆம் தந்திரத்தில், திருக்கூத்துத் தரிசனம் என்னும் அதிகாரத்துள், (1) சிவானந்தக் கூத்து (2) சுந்தரக்கூத்து (3) பொற்பதிக்கூத்து (4) பொற்றில்லைக் கூத்து (5) அற்புதக்கூத்து என்னுந் தலைப்பில் வருவனவும் கண்டுச் சிந்திக்கத்தக்கன. - திருமந்திரம் 2722-2803.]

"ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே...
காட்டுவித்தால் ஆரொருவர் காணாதாரே
காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக்காலே."

— தேவாரம் 7175

"ஊனை நாடகம் ஆடுவித்தவா உருகிநானுனைப்
பருகவைத்தவா
ஞானநாடகம் ஆடுவித்தாவா நையவையகத்
துடைய விச்சையே." — திருவாசகம் 99

"ஊன நடனம் ஒருபால் ஒருபாலாம்
ஞானநடம் தான்நடுவே நாடு."
— திருவருட்பயன் 83

"அம்பலம் ஆடரங்கா-வெளிவளர் தெய்வக்
கூத்துகந்தாயைத் தொண்டனேன்
விளம்புமா விளம்பே" "-பணியுமா பணியே."
"கருதுமா கருதே."-

"உரைக்குமாறுரையே." - "நணுகுமா நணுகே."-
"இசையுமா றிசையே,"-

"நுகருமா நுகரே." - "புணருமாபுணரே."-
"தொடருமா தொடரே."-

"விரும்புமா விரும்பே." - "நினையுமா நினையே."
— திருவிசைப்பா 1-11

"அவனன்றி ஓரணுவும் அசையாது எனும் பெரிய
ஆப்தர்மொழி ஒன்று கண்டால்."

—தாயுமான அடிகள்; எங்கு நிறைகின்ற பொருள்-1.

"காட்டிடு வானுந் தானாய்க் கண்டிடு வாணுந் தானாய்
ஊட்டிடு வானுந் தானாய் உண்டிடு வானுந் தானாய்
வேட்டிடு வானுந் தானாய் விராயதற் கேற்ப மன்றில்
ஆட்டிடு வானுந் தானாய் ஆடுவாற் கடிமை
செய்வாம்."
— திருத்தணியூர்ப் புராணம்

தில்லைச் சிற்றம்பலக் கூத்து

இனி; இவ்வுலகில் தில்லையின் கண்ணேயுள்ள சிற்றம்பல மானது விராட்புருடனுக்கு இருதயத் தானமாயும், சிவயோக

நெறியில் நிற்பார்க்குச் சிறந்த சாதனமாயுள்ள சுழுமுனா நாடித் தானமாயும் எல்லாப் புவனங்கட்கும் ஈடாக இவ்வண்டத்தின் நடுவண் எஞ்ஞான்றும் மன்னி நிற்பதொன்றாகலான் அதன்கண் இறைவன் நின்று இடையறாதியற்றும் திருக்கூத்தானது அண்ட பிண்டங்களாகிய எல்லாவுலகுயிர்களின் சுழற்சிக்கும் மூலகாரண மாகும். தேர் உருளையின் சுற்றுவட்டத்திற் காணப்படும் சுழற்சியானது அதன் நடுமையத்தினின்றுமே தோன்றுமாறு போன்று, இவ்வண்டத்தின் இயக்கமும், இதன்கண் உள்ள மற்றெல்லாப் பொருள்களின் இயக்கமும் இவ்வண்டத்தின் நடுமை யாகக் கருதப்படும் தில்லைச்சிற்றம் பலத் திருக்கூத்தினின்றே தோன்றுவனவாகும்.

இறைவனுடைய அருட்கூத்தானது அண்டத்தின் நடுவா யுள்ள தில்லைச்சிற்றம்பலப் பெருவெளியின் கண்ணே ஓவாது நிகழ்தலைப்போன்றே, பிண்டமாகிய எல்லாவுயிர்களின் நெஞ்ச கவெளியிலும் ஓவாது நிகழ்வதாகும். ஆதலினாலே கோயில் என்றும், சிவாலயம் என்றும் சொல்லப்படுஞ் சிதம்பர தலமானது, ஏனையதலங்கள் எல்லா வற்றிலும் மேலானதாக வேதவேதாந் தங்களினும், ஆகம ஆகமாந்தங்களினும், இதிகாசம், மகேதி காசம், புராணம் முதலியவற்றினும், மற்றுமுள்ள எல்லாக் கலைகளினும் விதந்து பெரிதும் போற்றப் பெறுவதாயிற்றென்க.

மேற்கோள்:

"மேரு நடுநாடி மிக்கிடை பிங்கலை
கூருமிவ் வானின் இலங்கைக் குறியுறும்
சாருந் தில்லைவனத் தன்மா மலயத்தூ
டேறுஞ் சுழுனை இவைசிவ பூமியே."

— திருமந்திரம் 2747

"பூதல மேருப் புறதான தெக்கணம்
ஓதும் இடைபிங் கலையொண் சுழுனையாம்
பாதி மதியோன் பயில்திரு அம்பலம்
ஏதமில் பூதாண்டத் தெல்லையின் ஈறே" — ,, 2748

" இடைபிங் கலையிம வானோ டிலங்கை
நடுநின்ற மேரு நடுவாஞ் சுழனை
கடவுந் திலைவனம் கைகண்ட மூலம்
படர்வொன்றி யென்னும் பரமாம் பரமே."

— திருமந்திரம் 2754

"ஞாலமாந் தில்லை தன்னுள் நவின்றசிற் றம்பலத்தே."

— தேவாரம் 4393

" வையகந் தன்னின் மிக்க மல்குசிற்றம்பலத்தே."

— ,, 4393

" தில்லை மூதூர் ஆடிய திருவடி-பல்லுயிர் எல்லாம்
பயின்றனனாகி." — திருவாசகம் 2: 1-2

" அனைத்துலகுந் தொழுந்தில்லை அம்பலத்தே
கண்டேனே." — ,, 474

" மண்ணுக்கு நாப்பண் நயந்து தென்தில்லை
நின்றோன் - மண்முழுதுக்கு
மிடைத்தில்லையை நயந்து அதன்கண் நின்றோன்."

— கோவை 162 பேர்

" மன்னுக தில்லை ..பொன்னின்செய் மண்டபத்துள்ளே
புகுந்து புவனியெல்லாம் விளங்க."

— திருப்பல்லாண்டு 1

" ஏழ்பெரும்புவனம் உய்ய எடுத்து -நடநவின்றருள் ...பதி."

— பெரியபுராணம் 241

எவ்வுலகும் விளங்கிய பொன்னம்பலத்து மேவியாடல்
புரியாநின் றவர்தம்மைப் பணிந்து." — ,, 1445

" எப்புவனங்களும் நிறைந்த திருப்பதியின்
எல்லையினை இறைஞ்சி." — ,, 1449

" எவ்வுலகும் உய்ய எடுத்தருளியசே வடியாரை."

— ,, 3575

" உலகுவிளங் குந்திருப்பேரம்பலத்தை வணங்கி
உள்ளணைந்தார்." — பெரியபுராணம் 3806

" அறிவின் எல்லைஆய திருத்தில்லை." — 3813

" வையகம் பொலிய . ஐயர்தாம் வெளியே
ஆடுகின்றாரை." — 251

" அலைந்திடும் பிண்டம் அண்டம் அவைசமயம்
ஆதலாலே"

" இலங்கைநேர் இடைபோம் மற்றை இலங்குபிங்
கலையாம்நாடி."

" நலங்கினர் இமயம்நேர்போம் நடுவுபோம்
சுழுனைநாடி" — கோயிற்பு. பதஞ்சலிச் 70

" நாடரும் நடுவில்நாடி நலங்கிளர் தில்லைநேர்போய்க்
கூடுமங் கதனின் மூலக் குறியுள ததற்குத்தென்னர்
மாடுறு மறைகள் காணா மன்னும் அம்பலம்
ஒன்றுண்டங்கு
ஆடுதும் என்றும் என்றான் என்னையாள் உடைய
ஐயன்." — 71

" தில்லையோக ஞானமார் தானம் ஆமால்."

" பெருந்தரை நடுவணாகிப் பிறங்கிய சரவணத்தில்
இருந்தனிக் கமலம் ஒன்றிற் குமரவேள் இருந்தபான்மை
திருந்துநல் அண்டப் புத்தேள் சிந்தையாம் புண்டரீக
புரந்தனில் விரும்பித்தாதை வைகிய இயற்கை போலும்."
— கந்த. திருவவ 101

" எல்லாருந் தொழுதிறைஞ்சுந் தில்லைமன்றுள்
இலங்கியெழும் விராட்புருடன்
இதயந்தன்னில்...திருநடஞ்செய்தான்."
— திருவையாற்றுப்புராணம்

" புவனம்வாழப்...பொதுநடஞ்செய் பரம்பொருளை."
— திருவாப்பனூர்ப்

" திலகமெனுந் திருச்சிற்றம்பலத்துளாடும் செங்கமலப்
பொற்பாதம்." — ஒற்றியூர்ப்

" தரைப்பயனாம் மணிமன்றுள் நடம்நவிலும் ஒருமுதல்."
— திருப்பெருந்துறைப்

சிற்றம்பலத்தின் சிறப்பு

" அருமறை முதலில் நடுவினிற் கடையில் அன்பர்தஞ்
சிந்தையில் அலர்ந்த
திருவளர் ஒளிசேர் திருச்சிற்றம்பலம்."
— பெரியபுராணம் 250

" அருமறைச் சிரத்தின் மேலாஞ்-சிற்பரவியோமமாகுந்
திருச்சிற்றம்பலம்" — 351

" அண்ணலார்தமக் களித்த மெய்ஞ்ஞானமேயான
அம்பலமும்." — 2063

" சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்பலத்தும்
என் சிந்தையுள்ளும்
உறைவான் - தில்லையின்கண்ணேயுள்ள
சிற்றம்பலமாகிய நல்லவிடத்தும்,
என்னெஞ்சமாகிய தீயவிடத்தும் ஒப்பத்தங்கு
மவன்." — திருக்கோவையார் 20 பேர்

என்னுந் திருவாக்குகளால் தில்லைச் சிற்றம்பலத்தினது தத்துவத்தை உணர்க.

திருவைந்தெழுத்தும், பதினைந்தெழுத்தும் சிதம்பர சம்மேளன சக்கரத்தின்

மந்திர வித்தைகளாதல்

இதுகாறும் உரைத்தவாற்றால்; தில்லைச்சிற்றம்பலமானது எல்லாப் புவனங்கட்கும் ஈடாக இந்நிலவுலகின்கண்ணே நிலவுவதென்பதும், அங்கே நிகழும் அருட்கூத்தானது எல்லாவுலகங்

களின் இயக்கத்துக்கும் மூலகாரணமாகும் என்பதும், அக்கூத்தினைப் புரியும் இறைவனும் இறைவியுமே உலகங்கட்கெல்லாம் அம்மையப்பராயுள்ள புவனநாயகனும் புவன நாயகியும் ஆவர் என்பதும் திருவைந்தெழுத்தும் பதினைந்தெழுத்துமாகிய மந்திர வித்தைகள் இரண்டும் புவனேசுவரன் புவனேசுவரியாகிய அவ்விருவர் தம் மூலமந்திரமாகும் என்பதும் இனிது புலப்படும். இவ்வியைபுபற்றியே, இந்த மூலமந்திர வித்தைகள் இரண்டும் தில்லைச்சிற்றம்பலத்தின் கண்ணே திகழும் சிதம்பர சம்மேளன சக்க (இரகசிய இயந்திர)ரத்தின் மூலமந்திரமாக அமைந்துள்ளன என்க.

மேற்கோள்

"சிற்றம்பலவா – நித்திய நிட்கள நிரஞ்சன நிராலம்ப அகண்டாகார சச்சிதானந்த சுத்த சிவசொரூப மத்தியில், ஆன்மாக்களைக் குறித்து எழும் லய போக அதிகாரம் என்னும் நிஷ்கள நிருத்தத்தினையும், மகாமாயாமய மகா சபாபித்திகையில், மாந்திரிகன் எழுதிய பஞ்சாட்சர, பஞ்சதசாட்சர சம்மேளன சக்ரவிக்ரகத்தில், ஸ்ரீகண்ட விக்ரகத்தை அதிட்டித்து, அதுவதுவாய் நின்று, சகள நிருத்தத்தினையும் பண்ணும் அழகிய திருச்சிற்றம்பலத்தையும் உடையவரே."

—அத்துவிதவெண்பா 1-உரை

"ஆதிநடு அந்தமிலா அளவில் சோதி அருள்ஞான மூர்த்தியாய் அகிலம் ஈன்ற-மாதினையும் ஒரு பாகத்தடக்கி அருள் மூர்த்தியாய் – (மகாமாயாமய மகாசபா பித்தியில் மாந்திரிகன் எழுதிய பூதாகாசவடிவாகிய மந்திரலிபி என்னும் இலக்கில், மாந்திரிகன் உச்சரிக்கும் மந்திரம், கரிவழியால் வந்த அக்கினிபோல் ஆவிர்ப்பவித்துத் திவ்விய மந்திரமாகிப் பலன் கொடுக்கும்படி சிவனது சங்கற்பத்தால் உண்டாய்ச் சத்திய சுத்த சம்மேளனமாகிச், சுத்தமாயா புவன வாசிகளாகிய சாரூபிகளுக்குச் சத்தியவடிவாயும், மாந்திரிகனது சங்கற்பத்தாற் கற்பித சம்மேளனமாகிச் சிவனுக்குக் கற்பித வடிவாயுமிருக்கும் வாசகமந்திரமாகிய பஞ்சதசாட்சரி, பஞ்சாட்சரமாகித், தனது

பரிக்கிரக சத்தியாயிருக்கின்ற வாசக சத்திமய சரீரத்தில் ஆவிர்ப் பவித்து, அவ்நாபூதமாயிருக்கின்ற வாச்சிய மந்திரமாகிய பஞ்சதசாட்சரி, பஞ்சாட்சரமாகித் தனது] சமவேத சத்தியா யிருக்கின்ற வாச்சிய சத்திமய சரீரியாய்... அடக்கி – [நிர்த்த சாட்சியாய்த் தன்சத்தி சானித்தியத் தானமர்ய் நின்ற நிலை நிற்கவும்] ஓரம்சத்தினாலே அடக்கிச் சமுத்திரத்திம் உற்பவித்த முத்துப்போல, அநந்தத் துவாரத்தினாலே மாயையின் உற்ப வித்துத் தனது சம்மேளனசக்கிர விக்கிரகத்தில் ஆவிர்ப்பவித்த ஸ்ரீகண்டமூர்த்தியிற் பிரவேசிப்பித்துச் சம்மேளனமாக்கித் திரும்ப அதிற்றானுஞ் சானித்தியமாய்'' – சிவஞானசித்தியார். சுபக். ஞானப்பிரகாசமுனிவர்.

'' நந்திவித்யா நடேசிவரீ''

—லலிதாசகஸ்ரநாமம் 733 : 734

'' புவநேசுவர்யை நம:''

—சிவகாமசுந்தரீ அஷ்டோத்தரம்

ஸ்ரீ வித்யா மந்த்ரஸ்வரூபாயை நம : |
ஸ்ரீ பஞ்சாட்சரீ மயாயதே நம : |

— அர்த்தநாரீசுவரர் அஷ்டோத்தரம்

பஞ்சாட்சரஸ்வரூபாய நம : |
ஸ்ரீமத் பஞ்சதசாட்சர்யை நம : |

—சகஸ்ர நாமம்

நடேசுவரசத்தி-திரிபுரை என்பது: மகுடோத்தரத்தில் –

'' அகம் பஞ்சாட்சரம் ஸாக்ஷாத்வம் பஞ்ச தசாட்சரீ | ''

'' அகம்நவாட்சரம் ஸாக்ஷாத்வம்தேவீ நவாத்மிக | ''

ஆவயோச் சக்ரஸம்யோகம் விஷ்ண் வாதிநாம்
அகோசரம்.''| —ஞானாவரணவிளக்க மாபாடியும்

''நித்யம்கிலோக ரக்ஷார்த்தம் யந்த்ரம் ஸாக்ஷாத்கிருதம் மயா | ஸ்ரீ ஸபாக்ய மஹாயத்ரம் மமரூபம் ப்ரதர்சகம் ||

அஹம் பஞ்சாக்ஷரம் ஸாக்ஷாதுத்வம் பஞ்சதசாக்ஷரீ | அஹம் நவாக்ஷரம் ஸாக்ஷாது த்வம் தேவீ நவாத்மிகாம் || ஆவயோச் சக்ர ஸம்மேளம் விஷ்ண்வாதீநாம் அகோசரம் ‘| ரஹஸ்யாநாம் ரஹஸ்யேத் யந்த்ரம் .. சிதம்பர நடேசுவேதி மந்த்ரராஜம் ஸதாஜபோது || இதம் ரஹஸ்ய பாபக்நம் புத்தி முந்திப்ரதம் ப்ரியே| .. சிதம்பர ரகஸ்யார்த்தம் ஸம்க்ஞாய சக்ர தேசிகே|| தஸ்மாத் சர்வ: ப்ரயத் நேந கர்த்தவ்யம் தேசிகோத்தம:|.”– இதி மகோடத்தர ரகஸ்யே சிதம்பர ரகஸ்ய சக்ரமந்த்ர யோகபாதே–த்விதீய: ஸ்கந்த:||

“புவநா பதிநா நடேசுவரீ...ஸர்வ வேதாந்தாகம ரகஸ்ய நிர்த்த மூர்த்திஸ்வரூபகம் | .. சிதம்பர மஹாநந்த நட மூர்த்திம் ப்ரதர்சகம்|| லோகரக்ஷார்த்தம் – நித்யம் ஸாக்ஷாத் க்ருதம் – ப்ரத்யட்சீக்ருதம்|| ..சிக்க பிக்ஷௌ யதாதேவீ ப்ராஸா நோத்தர பார்சுவத:|| மஹாமாயா மிருகே பிக்ஷௌ ப்ராஸா தாப்ரதி கேப்ரியே| நித்யாம்கி லோகரக்ஷார்த்தம் ஸகளீ க்ருத்ய விக்ரகம் || மஹாஹ்ருதய மத்யஸ்தாந்ருத்த மூர்த்தி சிவம்பரம் ...மந்த்ர விக்ரஹம்:| லிகேச்சக்ரம் விதிவது ஆவயோச்ச வபு: ப்ரியே || மஹா மாயாத்மகே–மகாயாஸ்வரூபே| மஹாஹ்ருதய மத்யஸ் தாம் – ஸ்ரீ சக்ரகோணாக்ஷர மத்யஸ்தாநம்| மந்த்ர விக்ரஹம்–மந்த்ராக்ஷர ரூபம்||.– வியாக்யாந சம்மேளனம்.

“ஸ்ரீ சக்ரம் சிவயோரர் வபு:||” –லலிதா

“தேவர்கள் ... தூயசெம்பொன்னினால்
எழுதி மேய்ந்தசிற் றம்பலக் கூத்தனை.”

—தேவாரம் 5247

“ஆகாய மந்திரமும் ஆனான் ஆகும்.”–தேவாரம் 6410

“புவனநா யகனே அகவுயிர்க் கமுதே.”

—திருவிசைப்பா

“புவன நாயகிதன் யாமள புராதனர்களே.”

—தக்க 432

ஸ்ரீ வித்யாம் சிவவாமபாக நிலையாம் ஹ்ரீங்கார
மந்த்ரோஜ்வலாம்।
ஸ்ரீ சக்ராங்கித பிந்து மத்யவஸதீம்
ஸ்ரீமத் ஸபாநாயகீம் ॥
ஸ்ரீமத் சண்முகம் விக்நராஜ ஜநநீம்
ஸ்ரீமத் ஜகந்மோகிநீம் ।
சிவகாமீம் பிரணதோஸ்மி ஸந்ததமகம்
காருண்ய பாராநிதிம் ॥."

"ஒளியாம் பரமும் உளதாம் பரமும்
அளியார் சிவகாமி யாகுஞ் சமயக்
களியார் பரமுங் கருத்துறை யந்தத்
தெளிவாஞ் சிவானந்த நட்டத்தின் சித்தியே,"

—திருமந்திரம். 2726

"பெண்ணுரு ஒருதிறன் ஆகின்று அவ்வுருத்
தன்னுள் அடக்கிக் கரக்கினுங் கரக்கும்"

—புறம் 1. : 7-8

ஸர்வம் சத்திமயம் ஜகது."- சுருதி. "இதனால், தேவி சர்வலோகமும் தானேயாதல் அறிக," (-தக்க 116 உரை);

"தேவிதான் இவ்வுலகமெல்லாம் என வுணர்க" (-தக்க 158 உரை); "தோற்றப்பட்ட உருவமெல்லாம் பரமேஸ்வரி யின் வடிவெனக்கொள்க; எனவே தோற்றாதனவெல்லாம் ஈசுவரன் வடிவெனவுணர்க." (-தக்க 292 உரை); "சகத்தின் வடிவெல்லாம் பரமேசுவரி வடிவும், அல்லாத வடிவெல்லாம் பரமேஸ்வரன் வடிவெனக் கொள்க." (-தக்க 293 உரை).

" உனதுமா ஞானவா னந்தவுரு வைப்புவன
வுருமென வகுத்தருளவோ."-

"தேவிதான் ஸர்வ உலகமும் என உணர்க."

—சௌந்தரியலகரி 34 உரை

" யாவையும் ஆம்-ஏகத்து ஒருவன் இரும்பொழில்
அம்பலவன்."—

" எல்லாப் பொருள்களுமாய் விரியும் ஒன்றயுடைய
ஒருவன்; யாவையும் ஆம் ஏகம் – பராசக்தி."
—திருக்கோவையார் 71 பேர்

என்பனவும் ஈண்டுச் சிந்திக்கத் தக்கன.

"நாதம் நாதாதிமம் கூடம் காலார்ணம்
பார்த்திவாந் விதம்।

"வாருணம் வந்நிஸம் யுக்தம் மருத்
சஷ்ட்டஸ் வராந்விதம்॥
ஸ்வராந்தே பிந்து நாதாட்யம் நவார்ணாத்ம
சிவம் விது: ।." —காரணம்

என்பதனால் நவாக்ஷர மந்திரத்தை உணர்க.

திருவம்பல வித்தை

இதுகாறும் உரைத்தவாற்றால், சிவசத்தி மூலமாயுள்ள 5-ம், 15-ம் ஆகிய மந்திர எழுத்துக்களைக் கொண்ட இவ்வித்தைகள் 2-ம் சிதம்பர சக்கரத்தின் மூலமந்திரமாக, அமைந்துள்ளமை புலனாகும். இதனால் அம்மந்திரமானது, சிதம்பர வித்தை – சிற்றம்பல வித்தை – திருவம்பலவித்தை யென்றுஞ் சொல்லப்படும். திருவைந்தெழுத்தே எல்லா மந்திரங்கட்கும் மூலம் என்பதையும், இதன் விரிவே பஞ்ச தசாட்சரீ வித்தை என்பதையும், அசபையும் ஐந்தெழுத்தின் பரிணாமமே என்பதையும் பின்வருவனவற்றால் அறிக.

மேற்கோள்

"ஐந்தின் பெருமையே அகலிடம் ஆவதும்...
ஐந்தின் வகைசெயப் பாலனும் ஆமே.
—திருமந்திரம் 969

"ஐம்ப தெழுத்தும் போய்அஞ்செழுத்தாமே." —965

"ஐம்ப தெழுத்தே அஞ்செழுத் தாமே." —2698

"பிரான் வைத்த ஐந்தின் பெருமை உணராது" —2708

"பழுத்தன ஐந்தும் பழமறை யுள்ளே." —2721

"முந்தைமுதன் மந்திரங்கள் எல்லாந்தோன்றும்
முதலாகும் முதல்வனார் எழுத்தஞ் சென்பார்"
—பெரியபுராணம் 2169

"ஆதி மந்திரம் அஞ்செழுத் தோதுவார் நோக்கும்
மாதி ரத்தினும் மற்றைமந் திரவிதி வருமே?" —2601

"விதையா யிருக்கும் ஐந்தெழுத்தும் வேதாகமமும்
முத்தமிழும்." —பட்டணத்தார் பாடல்

"அஞ்செழுத்துங் கண்டீர் அருமறைகள் ஆவனவும்."
—திருமுறை 119 : 40

"அஞ்செழுத்தே ஆகமும் அண்ணல் அருமறையும்
அஞ்செழுத்தே ஆதிபுராணம் அனைத்தும் அஞ்செழுத்தே
ஆனந்த தாண்டவமும் யாவைக்கும் அப்பாலாம்
மோனந்த மாமுத்தி யும்."
—உண்மை விளக்கம் 44

"எவ்வெவர்கோட் படுபொருளும் அஞ்செழுத்தின்
அடக்கி."
—காஞ்சிப். கடவுள் 18

"திருவளர் திருவம் பலத்திலே அந்நாள் செப்பிய
மெய்ம்மொழிப் பொருளும்
உருவளர் திருமந் திரத்திரு முறையால்
உணர்த்திய மெய்ம்மொழிப் பொருளும்
கருவளர் அடியேன் உளத்திலே நின்று
காட்டிய மெய்ம்மொழிப் பொருளும்
மருவியென் னுளத்தே நம்பிநா னிருக்கும்
வண்ணமுந் திருவுளம் அறியும்."
—இராமலிங்க அடிகள். பிள்ளைப் பெருவிண்ணப்பம் 114

(மெய்ம்மொழி-வாய்மொழி-மந்திரம் என்பன ஒரு பொருட் கிளவிகள்.)

"ழ்:- இந்தச் சிறப்பியல் அக்கரம் 18-மெய்களில் பட்ச முடிபின் எண்குறிப்பில் நின்று, சிவயோக பூமியாகிய பரத கண்டத்தில் பௌராணிக தத்துவத்தாற் குறிக்கப்பட்ட 56-தேசங்களுள் சுதேசந் தவிர மற்ற 55-தேச பாஷைகளிலும் இல்லாததாயும், 18-நிலமாகக் குறிக்கப்பட்ட செந்தமிழ் கொடுந்தமிழ் எண்ணும் 2-க்கும் ஒற்றுமையுரிமையாயும், முத்துறைத் தமிழுக்குள் முதன்மைத் துறையானதும், இருக்கு யசுர் சாமம் என்னும் சம்ஸ்கிருத வேதப்பொருள் அனுபவத்தை எளிதிற் கற்றுணர்ந்து தெளிந்து அனுபவிக்கிறதற்குப் பரமேசுவரனது திருவருளைப் பஞ்சாட்சர முத்தொழிற் காரியமான பஞ்சதசாட்சரியால் பிரத்யட்சானுபவம் சித்திக்கச் செய்யும் நிலயமானதும் ஆன பெருமைச் சிறப்பியல் ஒலியாம்." -

"சூக்கும பஞ்சாக்கரத்தின் பரிணாமமாகிய அசபை, அதிதெய்வங்களைப்பற்றி ஒரோவொன்று மும்மூன்றாய், மீள மீள மாறி ஒரோ வொன்றாப் பரிணமித்து, இடையிடையே அறுவகைச் சூனியங்களுடைய 12-கலைப் பிராசாதமாம் எனவும், இங்ஙனமாகலின் சூக்கும பஞ்சாக்கரம், தூல பஞ்சாக்கரம், அசபை, பிராசாதம் என்பன தம்மின் வேறல்ல எனவும் உணர்ந்துகொள்க. இவற்றின் விரிவெல்லாம் சிவாகமங்களுட்காண்க. ஈண்டுரைப்பிற் பெருகும்."

—சிவஞானபாடியம். வெண்பா 25

"குறிப்பிடம் காலந் திக்கு ஆசனம் கொள்கை குலம் குணம்சீர் விருப்புறு விரதம் சீலம் தபம் செபம் தியானம் எல்லாம்.

இடம்: கங்கை, குமரி முதலிய தீர்த்தத் தானம், திருவம்பலம் முதலிய சிவத்தானம் ..

செபம்: தேவதை மந்திரங்கள், சத்தி மந்திரங்கள், எதிரேறு மந்திரங்கள், திருவம்பல வித்தை முதலாயுள்ள ஜபங்கள்."

—சிவப்பிரகாசம் 97, சிவப். உரை

என்பன காண்க.

திருவம்பல வித்தையும் பெரும் பெயர்ப் பொருளும்.

இதுகாறும் விளக்கியவாற்றால், திருவைந்தெழுத்தே எல்லா மந்திரங்கட்கும் மூலம் என்பதும், அதன் விரிவே 15-எழுத்து வித்தையென்பதும், சிவசக்தியான் மகமாயுள்ள இம்மூல மந்திரங்களின் சம்மேளனமே திருவம்பல வித்தை என்பதும் நன்கு புலனாகும்.

இனி, பெரும் பெயராவது மகா வாக்கியமாகும். இ∴து ஒரு சொல், ஒரு மொழி, ஒரு வார்த்தை, மௌன மந்திரம், மோன வித்தை, சும்மா இருத்தல் என்றுஞ் சொல்லப்படும். "பிரக்ஞாநம் பிர்ம்மம்; அகம் பிர்ம்மாஸ்மி; தத்துவ யசி; அயமாத்மா பிர்ம்மம்" என்பன முதலாக வரும் வேதாந்த மகா வாக்கியமும், "சிவோயம்; சிவத்துவ மசி; சிவோகம்; ஸோஹம்" என்பன முதலாக வரும் சிந்தாந்த மகா வாக்கியமும் பொருளான் ஒன்றேயாகும்.

சாந்தோக்கியம் முதலான உபநிடதங்களிலே உபதேசிக்கப் பெற்றுள்ள தத்துவமசி என்னும் மகாவாக்கியமானது; தது, துவம், அசி – அது நீ ஆகின்றாய் எனப் பொருள்படும் 3-பதங்களையுடையது. இப்பதங்கள் 3-ம் முறையே (1) முதல்வனுடைய தடத்தலக்கணம் எனப்படும் பொதுவியல்பாகிய பதித் தன்மையையும், (2) உயிர்களினுடைய தடத்தலக்கணமாகிய பசுத்தன்மையையும், (3) அவ்விரு பொருள்களினுடைய சிறப்பிலக்கணம் எனப்படும் சொரூப நிலையாகிய அத்துவிதத் தன்மையையும் உணர்த்துவனவாகும்.

இவ்வாறே அதிசூக்கும பஞ்சாட்சரத்தில் நிற்கும் (1) சிகாரம்-தத்பதப் பொருளாகிய பதியையும், (2) யகாரம்-துவம் பதப் பொருளாகிய பசுவையும், (3) வகாரம்–அசி பதப்பொருளாகிய அவ்விரு பொருள்களின் அத்து விதத்தையும் அறிவிப்பனவாகும். இந்த அதிசூக்கும பஞ்சாட்சரமானது காரணபஞ்சாக்கரமென்றும் முத்தி பஞ்சாக்கரமென்றுஞ் சொல்லப்படும். இங்ஙனமே பஞ்சதசாட்சரீ வித்தையுள் நிற்கும் கூடங்கள் 3-ம் முறையே

(1) தத்பதம் (2) துவம்பதம் (3) அசிபதம் ஆகிய மகா வாக்கியத்தின் பொருளைக் குறிப்பனவாம்.

இத்திருமந்திரச் செய்யுளில் உபதேசிக்கப்பெற்றுள்ள மூல மந்திரமாகிய காது வித்தையில் உள்ள 3-கூடங்களுள் முதற் கூடத்தின் முதலில் நிற்பதாயும், ஒன்று என்னும் எண்ணின் தமிழ்க்குறி யெழுத்தாயுமுள்ள ககரமானது; திருவைந்தெழுத்துள் சிகரத்தையும், மகா வாக்கியத்துள் தத்பதத்தையும், அவற்றின் பொருளாயுள்ள பதியை (சிவம்-பிர்மத்தை)யும் உணர்த்தும். 2-ஆம் கூடத்தின் முதற்கண் நிற்கும் ஹகரமானது:— ஐந்தெழுத்துள் யகரத்தையும், மகாவாக்கியத்துள் துவம் பதத்தையும், அவற்றின் பொருளாயுள்ள பசுவை (உயிரை)யும் குறிக்கும். 3-ஆம் கூடத்தின் முதலில் நிற்கும் ஸகரமானது:— ஐந்தெழுத்துள் வகரத்தையும், மகாவாக்கியத்துள் அசி பதத்தையும், அவற்றின் பொருளாயுள்ள அத்து விதத்தை (பரையை-அருளை)யும் உணர்த்தும்.

எனவே, முத்தி பஞ்சாட்சர மந்திரமும், காதி பஞ்சதசீ வித்தையும், தத்துவம்சி-சிவத்துவமசி என்னும் வேதாந்த-சித்தாந்த மகா வாக்கியங்களும் தம்முள் வேறுபாடின்மையை உற்று நோக்கி உணர்ந்து கொள்க இவ்வாற்றாண் இத்திருவைந்தெழுத்தும், பதினைந்தெழுத்தும் ஆகிய மந்திர வித்தைகள் இரண்டும் மகா வாக்கியம் என்றும் சொல்லப்படும்.

மேலும் காதி வித்தையில் அமைந்துள்ள பீசங்களின் சொரூபம் பாவனை முதலியவற்றின் விரிவை ஸ்ரீவரிவஸ்யா ரகஸ்யம், யோகிநீ இருதயம் முதலான மந்திர தந்திர நூல்களிற் கண்டு கொள்க. அன்றியும் முன்னர் "பஞ்ச தசாட்சரீ வித்தையின் பிற பெயர்கள்"; "ஸ்ரீவித்தையின் பீசங்கள்" என்னுந் தலைப்புக்களிற் குறிக்கப்பெற்றுள்ளவற்றையும் நினைவு கூர்க.

மேற்கோள்

" தோன்றிய தொம்பதம் தற்பதஞ் சூழ்தர
ஏன்ற அசிபதம் இம்மூன்றோ டெய்தினோன்
.. சிவமா யிருக்குமே ". —திருமந்திரம் 2437

" தற்பதம் என்றும் துவம்பதந் தானென்றும்
நிற்ப தசியத்துள் நேரிழை யாள்பதம்
...கலந்துநின் றானே". —2439

" அணுவும் பரமும் அசிபதத் தேய்ந்து
.. உரை யற்றிடத் தோன்றுமே." — 2440

" தொம்பதந் தற்பதந் தோன்றும் அசிபதம்
...சீவன்பரன் சிவனாய் நிற்கும் ..சொரூபமாவாக்கியம்"
— 2441

" அயிக்கியத்-துவமா கியநெறி சோகம் என்போர்க்கு"
— 2476

" ஆறிய ஞானச் சிவோகம் அடைந்திட்டு" — 2478

" தற்பதம் தொம்பதம் தானாம் அசிபதம்" — 2488

" அவ்வாக்கியத்-துந்துமுறை யிற்சிவன் முன்வைத்
தோதிடே" — 2490

" தவமுறு தத்துவ மசிவே தாந்தம்
சிவத்துவ மசிசித் தாந்தவே தாந்தமே" — 2571

" நீயது வானாய் எனநின்ற பேருரை
ஆயது நானானேன்" — 2577

" தூலப் பிரணவம் சொரூபப் பேருரை" — 2675

" ஓமெனும் ஓங்காரத் துள்ளே ஒருமொழி" — 2676

" சிவாய சிவசிவ என்றென்றே சிந்தை
அவாயங் கெடநிற்க ஆனந்த மாமே" — 2718

"எண்ணிடை ஒன்றினர் இரண்டினர் உருவம்"
—தேவாரம் 855

"எட்டும் ஒன்றும் இரண்டும் அறியிலென்" — 6226

"தன்னாமங்கெட்டாள் தலைப்பட்டாள் நங்கை
தலைவன்றாளே" — 6501

"பேதித்து நம்மை வளர்ந்தெடுத்த பெய்வளை"
— திருவாசகம் 168

"நாமொழித்து-சிவமான வாபாடித் தெள்ளேணங்
கொட்டாமோ" — 238

"வான்கெட்டு மாருதம்மாய்ந்துஅழல்நீர் மண்கெடினும்
தான் கெட்டலின்றிச் சலிப்பறியாத் தன்மையனுக்கு
ஊன்கெட்டுயிர் கெட்டுணர்வு கெட்டென் உள்ள
மும்போய்
நான்கெட்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ"
— 252

"மன்ன என்னை ஓர்வார்த்தை யுட்படுத்து" — 399

"வேண்டிய கல்வி யாண்டுமூன் றிறவாது" - மூன்று

பதமாவன: அது-என்றும், நீ-என்றும், ஆனாய்-என்றும் கூறும் பதங்களாம்.

அவை: பரமும், சீவனும், அவ்விரண்டும் ஒன்றாதலும் ஆதலின், இம்மூன்று பதத்தின் கண்ணே தத்துவங்களைக் கடந்த பொருளை உணர்த்தும் ஆகமங்கள் எல்லாம் விரியுமாறு உணர்ந்து கொள்க." — தொல்காப்பியம் 1133 நச்.

"வேண்டிய கல்வி யாண்டு மூன்றிறவாது" என்புழி, மூன்றனைப் பதி, பசு, பாசம் என்றும்; தத்துவமசி மகா வாக்கியம் என்றும்...உரைப்பர்"
—இலக்கணக் கொத்து சூ. 6 உரை

"சோகம் எனப் பாவிக்கத் தோன்றுவன் வேறின்றி... பண்டை மறைகளும் அதுநான் ஆனேன் என்று பாவிக்கச் சொல்லுவது இப்பாவகத்தைக் காணே" – சோகம் – சிவோகம். எனவே வேதாந்த மகா வாக்கியமும், சித்தாந்த மகா வாக்கியமும் பொருளான் ஒன்று என்பது பெறப்பட்டது."

—சித்தியார். சுபக்கம் 298. சிவஞான முனிவர்

"அவனிவன் ஆனது அவனருளால் அல்லது
இவனவன் ஆகானென் றுந்தீபற
என்றும் இவனேயென் றுந்தீபற."

— திருவுந்தியார் 40

"அதுஇது என்றும் அவன்நானே என்றும்
அதுநீயே ஆகின்றாய் என்றும்-அதுவானேன்
என்றுந் தமையுணர்ந்தோர் எல்லாம் இரண்டாக
ஒன்றாகச் சொல்லுவரோ உற்று."

— திருக்களிற்றுப்படியார் 85

"அவனே தானே ஆகிய அந்நெறி"

— சிவஞானபோதம் சூ. 10

"மௌனமான ஐந்தெழுத்தை வாசியேறி மெல்லவே
வானெலாம் நிறைந்தசோதி மண்டலம் புகுந்தபின்
அவனும் நானும் மெய்கலந்து அனுபவிக்கும் அளவிலே
அவனுமில்லை நானுமில்லை யாருமில்லை யானதே."

— சிவவாக்கிய தேவர்

"ஐந்தெழுத்தைச்-செவியாமல் நீசெபித்தாற் பிறவா
முத்தி சித்திக்குமே" — பட்டணத்தார் பாடல்

"வெட்டாத சக்கரம் பேசாதமந்திரம் . குருநாதன்
மொழிந்ததுவே" —

"சும்மா இருக்கவைத்த சூத்திரத்தை நானறியேன்"

—

"சும்மா இரு சொல்லற என்றலுமே
அம்மாபொருளொன்றும் அறிந்திலனே" — கந்தரனு 12

"நவிலத்தகுமோ-யானாகிய என்னைவிழுங்கி வெறுந்
தானாய்நிலை நின்றது 'தற்பரமே" — 28

"பேசா அனுபூதி பிறந்ததுவே" — கந்தரனு 43

"சும்மா இருக்கவைத்த சூத்திரமாம் சாத்திரத்தை"
— ஒழிவிலொடுக்கம்

"ஒருமொழி சும்மா இருத்தலாம் அதனால் ஒப்பிலாச்
சிவபதம் அடைவர்" — நிட்டானுபூதி சாரம் 15

"சொல்லரிய நெறியை ஒருசொல்லால் உணர்த்தியே
சொரூபானு பூதிகாட்டி" — தாயுமான அடிகள்

"அல்லலெல்லாம்-வீழும்படிக்குனது மௌனமந்த்ரா

த்திய வித்தையை வியந்தருள்வையோ - நாதவடிவாகிய
மகாமந்த்ர ரூபியே. மலைவளர் காதலிப்பெண் உமையே" —

"வாசி அருளியவை வாழ்விக்கும் மற்றதுவே
ஆசில் உருவமுமாம் அங்கு" — திருவருட்பயன் 88

"ஆசில்நவா நாப்பண் அடையா தருளினால்
வாசியிடை நிற்கை வழக்கு" — 89

"ஒருபாலாம்-ஞானநடம் தான்நடுவே நாடு" — 83

"பிஞ்செழுத்தும் மேலைப் பெருவெழுத்தும்-நெஞ்சழுத்தி
பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும்
கூசாமற் காட்டக் கொடி" — கொடிக்கவி 4

"உடையா ளுன்றன் நடுவிருக்கும் உடையாள் நடுவுள்
நீயிருத்தி-அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பதானால்"
— திருவாசகம்

"ஈண்டிய-பெரும்பெயர்க் கடவுளிற் கண்டு"
— சிவஞானபோதம் சிறப்புப்

"பெரும்பெயர் எனினும், மகாவாக்கியம் எனினும் ஒரு வார்த்தை எனினும் ஒக்கும். பெரும் பெயர்ப் பொருளே அஞ்செழுத்திற்குமாதலின், பெரும் பெயரோடு அஞ்செழுத்திடை வேற்றுமையின்மை யுணர்க. (மகாவாக்கியம்-சிவோகம் அஸ்மி)
—சிவஞானபாடியம்

" அரும்பெயர் மரபிற் பெரும்பெயர் முருக ..
பெரியோர் ஏத்தும் பெரும்பெயர் இயவுள்"
—திருமுரு. 269; 274

" பெரும்பெய ரேபெய ராகவந்த
ஒருவாய்மை தன்னை நினையினும்"
—பஞ்சாக்கர தேசிகர் அந்தாதி 5

"அது நீ ஆகின்றாய் - எனவும், அதுவானேன் - எனவும், அதுஇது-எனவும், அதுநான் - எனவும் பொருள்படும் தத்துவமசி முதலிய மகாவாக்கியங்களின் பொருளே ஈண்டு எடுத்தோதினார் மகாவாக்கியப் பொருளாகலானன்றே பயனோத்துள் அவனே தானே யாகிய அந்நெறி (சூ. 10) என இதனை அனுவதித்துச் சுட்டியதூஉம் என்க"
– சிவஞானபாடியம் 2:1

"ஆசாரியன் சிவோயம் - எனத் தன்னுள்ளே பாவித்து சிவத்துவமசி - என்றறிவுறுக்குஞ் சித்தாந்த மகா வாக்கியப் பொருளை நாடோறும் பயின்று, சிவோகம்-எனப் பாவிப்பானாயின்"
—சிவ. வெண்பா 58

"விந்துத்தானமாகிய புருவ நடுவில் சிகார, வகார, யகங்ராகள் (3-ம்) முறையே தத் பதப் பொருளும், துவம் பதப் பொருளும், அசி பதப் பொருளுமாம் முறைமையின் அவ்வஞ்செழுத்தாற் சிவோகம் பாவனை செய்யின்"
— 59

" விதி எண்ணும் அஞ்செழுத்தே-த்யாயாத்
பஞ்சாட்சரீம் சுதீ:"
—சூ 9

"வாசனாமலம் நீங்கி, ஆன்மசுத்தியாதற் பொருட்டு, ஸ்ரீ பஞ்சாக்கரத்தை மகா வாக்கியப் பொருள் பயப்ப உச்சரிக்க .. ஈண்டு பஞ்சாக்கரம் என்றது முத்தி பஞ்சாக்கரத்தை"

—சூ. 9. 1

"கம் ப்ரஹமம்" (உபநிடதம்). "ககாராய கபுர்வாதி தேவதா பூசிதாயச" —சூதசங்கிதை

"ஹ்ருத் கமலா சிருதம் ஸ்ப்புரத்தாரகாகாரம்
ஸாந்த பீஜமயம் சிவம்" —ஆகமம்

"சிசோச் சைதந்யம் ஸ்ப்புரத்தாரகாகாரம்
ஹம்ஸ பீஜஸ்த்தம் ஸஞ்சிந்த்ய" — ,,

"சிவ : சக்தி : பரா மாரஹரி :"

—சௌந்தர்யலகரி 32

"அரியதாகுஞ் சிவஞ்..... பரை மதனன்மால்" — 31

என்பன பலவும் உணர்க. இதுகாறும் "வித்தை" என்பது பற்றி ஆராய்ந்து விளக்கி விரித்துரைக்கப்பட்டது. இனி "ககராதி வித்தை" என்பதன் விளக்கம் காணத்தக்கதாகும்.

காதி வித்தையின் சிறப்பு

ககாரதிவித்தை, காதிவித்தை, காதிபஞ்சதசீ வித்தை, காமராஜ வித்தை என்றும் இவ்வித்தையின் பெயர் வழங்கும். பஞ்சதசாட்சரீ வித்தையின் வகைகள் பலவும் முன்னர்க் குறிக்கப் பட்டன. அவற்றுள் சிறந்த வித்தைகள் 3-ஆகும். அவை (1) ஸாதிவித்தை (2) ஹாதி வித்தை (3) காதிவித்தை என்பனவாம். இம்மூன்றனுள்ளும் மிகச் சிறந்தது ஈண்டு உபதேசிக்கப்பெற்றுள்ள காதிவித்தையே யாகும்.

சோடசீ வித்தை, மகாசோடசீ வித்தை, பராவித்தை முதலான 16-ம், 28-ம், 27-ம் ஆகிய பீசங்களை உடைய ஸ்ரீ வித்யாமந்திரங்களின் உத்தாரம், இந்தக் காதி வித்தையி

னின்றே அமைந்திருத்தலினாலும், இறைவியின் மூல மந்திர (லலிதா) திரிசதியானது, இந்தக் காதிவித்தையின்கண் உள்ள வித்தெழுத்துக்களின் வைப்பு முறைமையை அனுசரித்தே பீசம் ஒன்றுக்கு 20-நாமமாகப் 15-பீசங்கட்கும் 300-நாம மந்திரங் களைக் கொண்டு விளங்குதலினாலும், வேதாகமங்களில் விதந்து கூறப்பெற்றிருத்தலினாலும், சித்தி, புத்தி, முத்தி ஆகிய மூன்றையும் அளிக்கும் ஆற்றலை உடையதாக இருத்தலி னாலும், முன்னர்க் குறித்தபடி சித்த வித்தையாக இருத்தலி னாலும், இந்தக் காதிவித்தையானது, வித்தைகள் எல்லா வற்றுள்ளும் தனிச்சிறப்புடையதாய்ப் பெரிதும் பேணிப் போற்றத்தக்கதாம்.

மேற்கோள்:

"காதி ஹாதிமநு ரூபிணீம் அஹம்பாவயாமி
பரதேவதாம் சிவாம் |."

"ஹாதி வித்யாவை நம: |" —லலிதாதிரிசதீ 119

"காமோயோநி: கமலாவஜ்ரபாணி: குஹா |
ஹஸா மாதரிச்வாப்ரமிந்த்ர: |
புநர் குஹா ஸகலா மாயயாச |
புருச்யேஷா விசுவமாதாதி வித்யா ||."
—அதர்வணவேத திரிபுராசூக்த இருக்கு

"காமோ யோநிச் சதுர்த்தஸ்வர சந்த்ரை ||"
—மகரந்தஸ்தவராஜம்

"த்ரிகலாட்யாம் த்ரிஹ்ருல்லேகாம்
த்விஹ ஸஸ்வர பூசிதாம |
யோஜ பத்யம்பதே வித்யாம் ஸோக்ஷர:
பரம: ஸ்வராட்." —சங்கரர்

[த்ரிகலாட்யாம் - 3-ககரங்கள். 3-லகரங்கள். த்ரிஹ்ருல்லேகாம் - 3-ஹ்ரீங்காரங்கள். த்விஹஸஸ்வர - 2-ஹகரம் 2-ஸகரம். த்விஸ்வரம்=2-உயிர்கள்: ஏ,ஈ.] "அம்மையே! க-3.

ல-3. ஹ்ரீம்-3. ஹ-2. ஸ-2. உயிர் ஏ, ஈ-2. இங்ஙனமாகப் 15-மூலமந்திர எழுத்துக்களைக் கொண்ட உன்னுடைய மூல வித்தையைக் கணிப்பவர் கேடின்றிப் பரம்பொருளாவர்.''

'' சித்த வித்யாய நம: |''

—லலிதா ஸஹஸ்ர நாமம் 472

'' வக்த்ரகோடி ஸஹஸ்ரைஸ்து
சிஹ்வாகோடி சதைரபி
வர்ணிதும் நைவசக்யேயம்
ஸ்ரீவித்யா சோடசாக்ஷரீ.''—

'' தேசுத்வௌ மநுராஜௌது
வரிஷ்டௌ விந்த்ய மர்த்தன
லோபா முத்ரா காமராஜா விதிக்யாதி முபாகதௌ
ஹாதிஸ்து லோபாமுத்ராஸ்யாத்
காமராஜஸ்து காதிக:.''—

'' ஸ்ரீ வித்யைவது மந்த்ராணாம்
தத்ர காதிர் யதாபரா.''—

[''மந்த்ரங்கள் எல்லாவற்றுள்ளும் எங்ஙனம் ஸ்ரீவித்தை யானது சிறந்ததோ, அங்ஙனமே ஸ்ரீவித்தையின் வகைகள் எல்லாவற்றுள்ளும் சிறந்தது காதிவித்தையாகும்]

'' ஸப்தவிம்சதி பிந்நத்வேத
ப்ரத்யேக இச்சாஞானக்கிரியாத்ம
ப்ரம்மக்கிரந்தி மந்த்ர ஸதந்து
ப்ரம்மநாடீப்ரம்ம சூத்ரம்.''

—பாவநோபநிடதம்

'' அதவித்யா அஷ்டாவிம்சத்வர்ண விசிஷ்டா. |''

—ஸ்ரீவித்யாரத்ந சூத்ரம் – கௌடபாதர்

'' மாமா யாஸ்மர வாக்பவச்ச
ஸபரா வேதாதி பீஜம்ததோ

ஹ்றருல்லகாஸ்மர மாத்ருபீஜ
ஸகிதா கூடத்ரயம் தத்வது
சக்திர் வாக்பவ மாரமாய ரமயா
யுத்தம் த்வதீயம்மநு:
பாவ்யம் சோடசராஜ ஸகிதம்
ஸ்ரீ ராஜராஜேசுவரீம்." —

"சத்வார ஈம் பிப்ரதி க்ஷேமயத்ந: - 4 ஈகாரங்களை யுடையதாகிய (காதி) வித்தையே சித்தி புத்தி முத்திகளை யளிப்பதாகும்." —

" அவ்வுண்டு சவ்வுண்டு அனைத்துமங் குள்ளது
கவ்வுண்டு நிற்குங் கருத்தறி வாரில்லை
கவ்வுண்டு நிற்குங் கருத்தறி வாளர்க்குச்
சவ்வுண்ட சத்தி சதாசிவன் றானே."

— திருமந்திரம் 933

" சேர்பதினாறுடன்-பன்னியிருப்பப் பராசத்தியாமே"

— 1168

" தக்க பராவித்தை தானிருபா னேழில்." — 1175

" ககராதி மூவித்தை காமிய முத்தியே." — 1307

என்பனவும், பிறவும் அறிக. இவற்றாலும், திரிபுரை உபநிடத்துள் காதி வித்தையின் மூலமாகவே ஹாதி வித்தையின் உத்தாரம் உரைக்கப்பட்டிருத்தலினாலும் ஈண்டு உபதேசிக்கப்பெற்றுள்ள தாகிய காதிபஞ்சதசாக்ஷரீ வித்தையின் தனிப்பெருஞ் சிறப்பினை உணர்ந்துகொள்க.

காமிய முத்தியே

என்பது காமியமும், முத்தியும் எனவிரியும்; உம்மைத் தொகை. காமியப் பயன்களையும், வீடுபேற்றையும் அளிக்கும் என்பதாம். காமியம்-விருப்பம். இது இருவகைப்படும். அவை சித்தி புத்தி என்பன. முத்தியும் பதமுத்தி, பரமுத்தி என இரு வகைப்படும். மற்றும் இவை பயன்றரும் முறைமையில் பலதிறப்

படும். அவையெல்லாம் ஈண்டுரைப்பிற்பெருகும். இனி, இரட்டுற மொழிதலால் காமியத்தையும், முத்தியையும் காமியமுத்தியையும் அளிக்கும் எனினும் அமையும். காமிய முத்தியாவது-பதமுத்தி. இஃது அபரமுத்தி என்றுஞ் சொல்லப்படும். காமியமாகிய அவாவினை நீத்துழி எய்தப்பெறும் பேரா வியற்கைப் பேரின்பப் பெருவாழ்வே பரமுத்தியாம். மந்திரங்கள் பலவும் பயன்றரும் முறைமைபற்றிப் பலதிறப்படும். அப்பயன்கள் யாவும் இவ்விரண்டனுள் அடக்கி நிற்கும். என்க.

மேற்கோள்

"அதானஸ்ஸம் ப்ரவட்ச்யாமி மந்த்ரபேத விதிம்பரம் |
புக்திதம் முக்திதஞ்சைவ ஸர்வகர்மார்த்த சித்திதம் .||".
—வாதுளாகமம். 2. வர்ணபேதபடலம்

"மந்த்ரோத்விருப:-புக்தி முக்திபேதேந. புக்தி இம்மையினும், முக்தி மறுமையினும் பயன்றரும்".
—வியாக்யாநம்

"சித்தி-3 வகை. அவை; (1) கர்மசித்தி (2) யோக சித்தி (3) ஞான சித்தி என்பன." —இராமலிங்க அடிகள்

"புக்தி முத்திப் பலப்ரதாயைநம: |"
—சிவகாமியஷ்டோத்தரம்

"எய்தி வழிப்படில் எய்தா தனவில்லை
எய்தி வழிப்படில் இந்திரன் செல்வமும்
எய்தி வழிப்படில் எண்சித்தி உண்டாகும்
எய்தி வழிப்படில் எய்திடும் முத்தியே."
—திருமந்திரம் 1006

"ஆகம் பராவித்தை யாமுத்தி சித்தியே."
—திருமந்திரம் 1309

"நீவைத்துச் சேமி நினைந்தது தருமே," — 1318

என்பனவும், பிறவுங்காண்க.

ஒப்புமை பகுதி

"தானா அமைந்தவம் முப்புரந் தன்னிடை
தானான மூவுரு ஓருருத் தன்மையள்
தானான பொன்செம்மை வெண்ணிறத் தாள்கல்வி
தானானா போகமும் முத்தியும் நல்குமே", — 1047

என்பது நோக்குக.

ககரம், ஹகரம், ஸகரம் ஆகிய மந்திரமூல எழுத்துக்களை முறையே 3-கூறுகளின் முதலிற்கொண்டு விளங்கும் காதிபஞ்ச தசாட்சரீ வித்தையானது, சித்தியும், புத்தியும், முத்தியும் ஆகிய மும்மைப் பயன்களையும் தரவல்லது என்பதாம்.

1. சித்தியாவது: இம்மையின் எய்தப் பெறுவதாயும் தந்திர கலையின் பேறாயும் உள்ள எண் வகைக் கன்ம சித்திகள். அவை: வசியம் முதலாயின.

2. புத்தியாவது: மறுமையின் எய்தப்பெறுவதாயும், மந்திரக் கலையின் பேறாயும் உள்ள அணிமாவாதி அட்டமாசித்திகளும், இந்திரன் முதலிய இறையவர் பதத்து இன்பங்களும் புத்தி-போகம்.

3. முத்தியாவது: இம்மையும் மறுமையுமாகிய அவ்விரண்டு மின்றியோர் செம்மையில் நிற்கும் நிலையால் எய்தப் பெறுவதாயும், உபதேச கலையின் பயனாயும் உள்ள தன்வயத்தனாதல் முதலான எண்குண சித்திகள்.

இந்தப் பேறுகள் 3-ம் இம்மூல வித்தையை விதிப்படி நிற்குமுறைமையிலும் ஓது முறைமையிலும் நின்று எண்ணுதலால் உண்டாகும் என்க. எண்ணுதல் - உருக்கணித்தலும் தியானித்தலும். மந்திரருவுவைக் கணிக்கும் முறைமை - 3. அவை மூன்றும் முறையே (1) மந்தம் (2) மானதம் (3) சுத்த மானதம் எனப்படும். இவற்றுள் சுத்தமானத மாவது, அறிவாற் கணித்தல். அஃதாவது இந்த மூல மந்திரத்தில் உள்ள 15-பீசங்களையும் 15-எழுத்தாகக் காணாமல் 15-பொருளாகக்

கண்டு, உச்சரித்து அதன் பின்னர் அந்த பீசங்களின் சொரூபத்தை உணர்ந்து, அவற்றுள் சத்திசிவான்மகாயிருக்கும் ஏகாட்சரமாகிய மூல எழுத்தை இருதயத்தில் வைத்து, மகாவாக்கியப் பொருள் பயப்பத்தியானித்தல். இங்ஙனம் தியானிக்கவே அந்தச் சத்தி தானே சிவத்துடன் இரண்டறக் கலப்பித்துப் சிவமாந்தன்மைப் பெருவாழ்வை அளிக்கும் என்க.

இனி, இந்த மூல மந்திர வித்தையின் உபாசனையால் எய்தப்பெறும் 3-வகைச் சித்திகளுள் வைத்து, முதற்கண் உள்ளதாகிய எண்வகைக் கன்ம (கிரியா) சித்திகளை இந்தத் தந்திரகலைத் திருமந்திரம் முந்நூறில் விரித்துரைப்பான் எடுத்துக்கொண்டார். இவ்வாறே ஏனைய எண்வகை யோகசித்திகளையும், ஞானசித்திகளையும் மந்திர கலைத் திருமந்திரம் மூவாயிரத்திலும், உபதேசகலைத் திருமந்திரம் முப்பதிலும் வைத்து விரித்துக்கூறியிருத்தலையும் உற்று நோக்கி உணர்ந்து கொள்க.

இந்தத் திருமந்திரச் செய்யுளில் வைத்து உபதேசிக்கப் பட்டுள்ள மூலமந்திரமாகிய இக்காதி பஞ்சதசீ வித்தையானது; இந்நூலிற் சொல்லப்பட்டுள்ள எண்வினை யேவல் (அஷ்ட கன்மப் பிரயோகங்)களின் தொகை 320—க்கும் உரிய இன்றியமையாத மூலமந்திரமாக இருத்தலினாலும், திருமந்திரம் மூவாயிரத்திலும், முப்பதிலும் கூறப்பட்டுள்ள பேறுகளை எய்துவதற்குரிய சாதனமாகவும் இருத்தலினாலும் இதன் விளக்கம் சிறிது விரித்து ஆராய்ந்து வரையப்பெற்றது. இனி வருந்திருமந்திரங்களின் விளக்கம் சுருக்கமாகவே வரையப்பெறும்.

இத்திருமந்திரத்தில்; காதி பஞ்சதசீ வித்தையானது செவியறிவுறுத்தப் பெற்றிருப்பதன் உண்மையையும், ஸ்ரீவித்தையுடன் பிரம்மவித்யாம்பாள், முக்குளம் என்பனவற்றுக்குள்ள இயைபையும், பஞ்ச தசாட்சரீ வித்தையைப் பற்றிய மற்றும் பல தத்துவங்களையும்; சிவஞானபாடியச் சுவடியின் முதலில் "திருச்சிற்றம்பலம்" என்பன 3-முறை அடுக்கி வரையப் பெற்றிருப்பதன் வாய்மையையும் இற்றைக்கு 25—ஆண்டுகளின் முன்னர்

எனக்கு எடுத்து விளக்கியவர்கள், சூரியனார் கோயில், ஸ்ரீசிவாக்ரயோகிகள் ஆதினத்தைச் சார்ந்த தவத்திரு-சிவானந்த தேசிக சுவாமிகளும், இலக்கணம் – முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகளும் ஆவர்.

எண்ணும் எழுத்தும்

5–எழுத்து. 15-எழுத்து. 51–எழுத்துக்கள்.

5–எழுத்து - திருவைந்தெழுத்து - நமசிவய. இவற்றின் எண் இலக்கம்:

ந – 9. ம - 11. சி–4. வ – 15. ய - 12 (ஆக. 51) சிவ மூலமந்திரம்.

15–எழுத்து-பஞ்ச தசாட்சரி வித்தை–சத்தி மூலமந்திரம். 5–எழுத்தில் இறை எழுத்துடன் இணைந்து நிற்கும் வகரம் – பரை எழுத்துக்குரிய எண் இலக்கம்–15. பரை எழுத்தாகிய இந்த வகரத்தின் விரிவே–15 எழுத்தாயுள்ள பஞ்ச தசாக்கரி வித்தையாகும்.

51–எழுத்துக்கள்

வடமொழியில், அகரம், முதல் க்ஷகரம் ஈறாயுள்ள 51–அக்ஷரங்கள். இந்த 51–ம் வர்ணாத்வா எனப்படும் இவை தெய்வச் செந்தமிழ் மொழியில் அகரம்முதல் னகரம் இறுவாயாகவுள்ள 30-எழுத்துக்களின் விரிவாகும்.

மேற்கோள்

எண்ஆனாய் எழுத்தானாய் எழுத்தினுக்கோர்
இயல்பானாய் —தேவாரம் 4288

எண்ணும் எழுத்தும் குறியும் அறிபவர் — 5026

எண்ஆனாய் எழுத்தானாய் கடல் ஏழானாய் — 6364

எண் அல்லை எழுத்து அல்லை — 6699

எண்ணவன் காண் எழுத்தவன் காண் — 6728

எண்ணும் எழுத்தும் சொல் ஆனாய் போற்றி — 6800

எண் ஆகி எண்ணுக்கோர் எழுத்தும் ஆகி — 7164

ஓதும் எழுத்தோடு ..ஐம்பதோடொன்றென்பர் - சோதி எழுத்தினில் ஐயிரு மூன்றுள - நாத எடுத்திட்டு நாடிக் கொள்ளீரே. —திருமந்திரம் 963

விந்துவிலும் சுழி எழுநாதம் எழுந்திட...
ஐம்பத் தொன்றாயதே — 964

ஐம்ப தெழுத்தே . அஞ்செழுத்தாமே — 965, 2698

செந்தமிழ் ஆதி தெளிந்து வழிபடு — 1089

முத்தமிழ் ஓசை — 2115

கு-பு: ஆதி எழுத்து - மூல எழுத்து. சோதி = ஒளி-சிவம். நாதம் = ஒலி - சத்தி. ஐ இருமூன்று = ஐந்து இருமூன்று 5×6=30. சோதி எழுத்து ஒளி=யெழுத்து - வரி வடிவம். நாதஎழுத்து - ஒலிவடிவம்.

பல ஓசைத் தமிழவையும்.. ஆனான் —தேவாரம் 111

செந்திறத்த தமிழோசை வடசொல்லாகி
—திவ்யப்ரபந்தம்

வடிவெழுத்தும் பெயரெழுத்தும் தன்மை எழுத்தும்
தெரித்து வழக்கிற்காட்டி

முடிவெழுத்தி னாக்கவே றிலயத்தாற் பொருட்பகுதி
முற்றுங் காட்டி

உடலெழுத்தும் சார்பெழுத்தும் உயிரெழுத்து
மயன்முதலோர் எழுத்திற் காட்டி

மடமையறுத் தருள்துறைசைச் சிவஞான
சாமியிரு மலர்த்தாள் போற்றி

அருள்நூலும் ஆகமமும் அல்லாதும் ஐந்தின்
பொருள்நூல் தெரியப் புகின். —திருவருட்பயன் 81

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. —திருக்குறள் 355

என்பனவற்றாலும், பிறவற்றாலும் அறிவன் அருளிய 28 - ஆகமங்களும், 4 - வேதங்களும், 64 - கலைஞானங்களும் மற்றுமுள்ளனவற்றினையும் ஆராயின், 5-எழுத்தும், 15-எழுத்தும் ஆகிய சிவசக்தியாத்மக மந்திர வித்தைகளின் தத்துவமேயாம் என்பதனை உணர்ந்து கொள்க. ஐந்தின் பொருள் - திருவைந் தெழுத்தின் தத்துவம். பொருள் – உண்மை - மெய்ம்மை. இறைவன் – பொருள் சேர் புகழ் புரிந்தார் மாட்டு-திருக்குறள். 5. புரிதல்–எப்பொழுதும் சொல்லுதல் - பரிமேல். புகழ்நாமம் – செவிகேட்ப தேவாரம் 1908. மெய்ப்பொருளாவது, நாதன் நாமம் நமச்சிவாயவே–3320 என்பனவும் காண்க.

நூல் நுதல் பொருள்

3. முடித்தவிம் மந்திரம் மூலமதாகும்
அடுத்தவி லக்கமும் அக்கரந் தானும்
அடுத்திடு வீசம் அறைபதி னாறும்
எடுத்திடுங் கருமம் இனிச்சொல்லு வோமே.

பாட பேதம்

1. மூலம தாகி ; மூலம தாக.

2.

3. மடுத்தவிவ் வீச ; மடுத்திடு வீசமு ; மடுத்த வீச.

4. எடுத்திடு கரும ; எடுக்குங் கரும. சொலுவோமே ; சொல்லுவேமே.

குறிப்புரை.

இது முதல், மூன்று செய்யுட்கள், இந்நூலின்கண் எடுத்துக் கூறப்படும் பொருள்களைத் தொகுத்து உணர்த்துகின்றன.

முடித்தல் = கைவரப் பெறுதல்-சித்தியாக்கிக் கொள்ளுதல். அஃதாவது, ஆசிரியரால் உபதேசிக்கப்பெற்ற இம்மந்திரத்தை முறைப்படியிருந்து, 1. பூசை 2. செபம் 3. ஓமம் 4. தர்ப்பணம் 5. பலிதானம் முதலியவற்றைச் செய்து சித்தி பெறுதல். இவற்றை வடநூலார் புரச்சரணம் - புரச்சரணை-புரச்சரண பஞ்சாங்கம்-புணச் சரணம் என்பர். புர :- (மந்திரோபாசனைக்கு) முன்னாக. (தீட்சையின் பின்னர்) ; சரணம்-செய்ய வேண்டிய கிரியை. ஒவ்வோரெழுத்திற்கும் நூறாயிரம் முறை புரச் சரணை செய்தல் வேண்டும் என்பர். இவற்றின் விரிவு. ஆகமங்களிலும், லலிதோ பாக்கியானத்தில் பூசா கண்டம், புரச்சரண கண்டம், ஓம கண்டம் முதலியவற்றிலும் காணத்தக்கன.

மூலம் அது ஆகும் = மூலம் ஆகும்—மூல மந்திரம் ஆகும் அது-பகுதிப்பொருள் விகுதி. மூலம்=முதன்மை-தலைமை-பிர தானம் - காரணம்—மூலமந்திரம்—மூலவித்தை. அக்கரம் தான் உம் – அக்கரமும். வீசம் = பீசம் - வித்தெழுத்து-மூல எழுத்து. எடுத்திடும்-எடுக்கும்-இடு-துணைவினை. கருமம்-எண்கருமம்-தந்திரவினை.

சாதன நெறியில் நின்று சாதித்து சித்தி செய்து கொள்ளப் பட்ட இம்மந்திரமே மேலே சொல்லப்படும் எண்வகை ஏவல் வினைகளுக்கும் உரிய மூலமந்திரம் ஆகும். இனி, எண்வகை ஏவல் வினைகட்கும் உரிய எண்ணும், எழுத்தும், வித்தெழுத் தும், இவற்றிக்கு இடனாயுள்ள பதினாறு அறைகளும், இவற் றால் தொடங்கப்படும் அட்ட கன்மங்களும் ஆகியவற்றைச் சொல்லுவோம் என்பதாம்.

மேற்கோள்

"நண்ணிய பஞ்சாங்கம் நண்ணுஞ் செபமும்"

—திருமந்திரம் 1007

"புரச்சரண கண்டேது ஜபலக்ஷண மீரிதம் – புரச்சரண கண்டத்தில் ஜப லக்ஷணம் சொல்லப்பட்டது"

—லலிதா சகஸ்ரநாமஸ்தோத்திரம் 6

"மூல மந்த்ராத்மிகா-சித்தி, புத்தி, முத்திகளுக்கு மூல காரணமாயுள்ள பஞ்ச தசாக்கரி மந்திரத்தையே திருவுருவாக உடையவர்"

—லலிதா ஸகஸ்ர நாமாவளி 88

"மூல வித்யா ஸமுச்சார்ய ததந்தே தேவதா பிதாம்"

—கக்ஷபுடதந்திரம்

"ஓமித்தலும், தியானித்தலும் பூசைக்கு அங்கம், பூசை-அங்கி என அறிக"

—சிவ போதம். உ-வெண்பா 59 மாபாடியம்

"பட்சுத்ரயம் சிதேந்த்ரிய ஸத்ரிஷணஸ்நாயீ நக்தஞ் சருபோசீ பூசய்யோ பூத்வா | ப்ரதிதிநம் மூலமந்த்ர ஸகஸ்ரம் தாசம்சதே ப்ரம்மாங்காநிச ஜப்த்வா | வஹ்நாவபி தசாம்சம் சுகுயாது— வ்ரதாரம் பாவ ஸாநயோ: த்ரிதிநம் பஞ்சகவ்யம் பிபேது"

—ஸ்ரீ அகோர சிவாசாரியர் பத்ததி

"மந்த்ர சித்யர்த்தம் பஞ்ச சத்வாரிம்சத் திநாநி த்ரி காலஸ்நாத சருபோஜந பூஜந ஜப ஹவந யஜநாதி நியமம் விதத்யாது"

நிர்மலமணி வியாக்யாநம். என்பனவும், பிறவுங் காண்க.

4. சொல்லுந் திசையுந் துணைக்காவல் தெய்வமும்
நல்லதோர் வீசமும் நாடும் இலக்கமும்
சொல்லுங் கிரியையுஞ் சூழுமந் திரமும்
வல்லவர்க் கிவற்றை வாத்துவந் தானே.

பாட பேதம்

1. திகையுந். தெய்வங்கள். துணைக் காவாகுந் தெய்வங்கள்.

2. நல்லதொரு வீசநாடுந் ; பீசமும் ; பீஜமும். நாடுந் திசைகளும்.

3. கிரிகையுஞ். சூழ்மந்திரம் ; சூழ்மந்திரங்களும் ; சூழுமந்திரமும் ; சூழமந்திரமும்.

4. வல்லவற். கிற்றை ; கித்தை. வாத்துவன் றானே.

குறிப்புரை

திசை - எண்வகை வினைகளுக்கும் உரிய எண்டிசைகள். அவை : பெருந்திசை 4-ம் கோணத்திசை 4-ம் ஆக-8 துணை—உதவி. காவல் தெய்வம் - எண்டிசைக் காவற் கடவுளர். அவராவார் : உலக பாலகராயுள்ள இந்திரன் முதலான எண்மர். கிரியை - எண்வகை ஏவல் வினைகட்கும் உரிய பூசனை முதலாய தந்திர வினைகள். மந்திரம்—அவற்றிற்குரிய மறைமொழிகள். சூழுதல் - இயந்திரத்தைச் சூழ இருத்தல் - கருதுதல். வல்லவர்—மந்திர, தந்திர, இயந்திர நூல்களில் வல்லுநராயுள்ளவர். இவற்றை – இவை; அற்று சாரியை. வாத்துவம் – உண்மை; வாஸ்த்தவம் என்னும் வடசொல்லின் திரிபு. வாத்துவன் எனப் பாடங்கொள்ளின், இவற்றைச் சொல்லுவேன் என்க. இப் பொருளில் வாத்துவன் எனப் பாடங்கொள்ளின், இவற்றைச் சொல்லுவேன் என்க. இப்பொருளில் வாத்துவன் என்பது, வாழ்த்துவன் என்பதன் விகாரம். வாழ்த்துதல்—சொல்லுதல்—ஆசீர்வதித்தல் ; இவற்றை வாத்துவன் – இவற்றை வாழ்த்தி யருளுவேன்.

மந்திர தந்திர இயந்திர நூல்களில் வல்லவர்கட்கு, இந் நூலின் கண் சொல்லப்படும் அவை யாவும் வாய்மை உடையனவேயாகும் என்பதாம். தப்பாது பளக்கும் என்றபடி. திசையும் தெய்வமும் :-

1. கிழக்கு	—	இந்திரன்
2. தென்கிழக்கு	—	அக்நி
3. தெற்கு	—	யமன்
4. தென்மேற்கு	—	நிருதி
5. மேற்கு	—	வருணன்
6. வடமேற்கு	—	வாயு
7. வடக்கு	—	குபேரன்
8. வடகிழக்கு	—	ஈசானன்

மேற்கோள்

உதிக்கின்ற இந்திரன் அங்கி யமனும்
துதிக்கும் நிருதி வருணன்நல் வாயு
மதிக்குங் குபேரன் வடதிசை ஈசன்
நிதித்தெண் திசையும் நிறைந்துநின் றாரே.

—திருமந்திரம் 2527

உலகபாலர் உருவாய் நின்று உலகங் காத்தலின்

—திருக்குறள் அதி. -39 அவ. பரிமேல்

தர்ப்பணத்திற் களிம்பு வாத்தவம்

—கைவல்ய நவநீதம்.

மூத்தவர் பின்னவர்க்கு வாழ்த்துரை பேச வேண்டும்

—காஞ்சிப் புராணம்

''உலகபாலர் உருவாய் நின்று உலகங் காத்தலின்.''

— திருக்குறள் அதி. 39 அவ. பரிமேல்

''தர்ப்பணத்திற் களிம்பு வாத்தவம்.''

—கைவல்ய நவநீதம்

''மூத்தவர் பின்னவர்க்கு வாழ்த்துரைபேசவேண்டும்.''

—காஞ்சிப்புராணம்

5. வாத்துவந் தன்னை வகுத்தவிம் மந்திரம்
பாத்திடும் எட்டுக் கருமம் பகர்ந்தது
ஏத்திடுந் தெய்வமும் எண்ணிய நூல்களுங்
கூத்தன் உரைத்தது கூறுகின் றேனே.

பாட பேதம்

1. வாத்துவன் றன்னை. வகுத்துவிம்; வகுத்தவித; வகுத்தவியந்திரம்.
2. கருமமும்' பகுந்தது.

3. தெய்வம் எண்ணிய னூல்களுங்.

4.

குறிப்புரை

இம்மந்திரம் - தந்திர கலையின் பகுதியாயுள்ள இம்மந்திர நூல் முந்நூறு. பாத்தல் - பகுத்தல். பகர்தல் - பகுத்துக் கூறுதல். ஏத்துதல் = துதித்தல் - போற்றுதல் - புகழ்தல் - வழி படுதல். தெய்வம் - எண்வகை வினைகட்கும் உரிய அதி தெய்வங்கள். நூல் - குளிசங்களை யாத்தற்குரிய நூலின் இழைகள்; காப்பு நாண் எனினுமாம்; இதனை வடநூலார் இரட்சாபந்தன சூத்திரம் என்பர். இறைவனே குருவாதலின் தமது குரவராகிய நந்தியெம் பெருமானைக் கூத்தன் என்றார். எட்டுக் கருமம் - வசியம் முதலான எண் வினைகள்; இவற்றை வடநூலார் அட்ட கன்மம் என்பர்.

இம்மந்திர நூல், கன்ம சித்திகளாயுள்ள எண்வகைக் கருமங்களையும் வகுத்துச் சொல்லுவதாகும். இதன்கண் அவற்றிற்குரிய அதிதெய்வம் முதலியவற்றை நந்தியெம் பெருமான் எனக்கு அருளியவாறே எடுத்துக் கூறுகின்றேன் என்பதாம்.

மேற்கோள்

"குருவே சிவமெனக் கூறினன் நந்தி."

—திருமந்திரம் 1581

"கூத்தன் - குரவனாய் எங்கணுங்கூத்துகந் தானே."

— 2761

"குருவுரு வன்றிக் குனிக்கும் உருவம்." — 2762

"சீய குருநந்தி திருவம் பலத்திலே—ஆயுறுமேனியை."

— 2802

“ அத்திரு மன்றுள் ஆடும் ஐயர்இங் கென்னையாள
இத்திரு மேனி கொண்டார்.”

—திருவாதவூரடிகள் புராணம்

“ விண்ணின் றிழிந்து வினைக்கீடாய் மெய்கொண்டு...
கண்ணின்று காட்டிக் களிம்பறுத் தானே.” — 113

“ அருபரத் தொருவன் அவனியில் வந்து
குருபரன் ஆகி அருளிய பெருமையை.”

—திருவாசகம் 4 : 75–76

யந்திரங்களை வரைந்து குளிகை செய்து கட்டி.

— தக்க 175 உரை.

மாலயன் இந்திரன் முதல் தேவர்க்கெல்லாம்
குரவா எனும் குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே

—திருவிசைப்பா 31

கனகசபை மேவும் எனது குருநாத —திருப்புகழ்

யந்திரங்களை வரைந்து குளிகை செய்து கட்டி

—தக்க 175 உரை

1-ஆம் தந்திரம் மந்திர யந்திர வியல்

அதி. 2–எண் வினை ஏவல் இயந்திரம்

இயந்திரம் வரையும் முறை

6. *கூறுகின் றேனறை கூறுங் குறியது*
கீறுகின் றேனஞ்சு மேலஞ்சு கீற்றது
தேறுகின் றேன்தெளி யும்பதி னாறறை
கூறுகின் றேனிது கொண்டது தானே.

பாட பேதம்

1. *றேனறை கீறுங் குறியதை; கீறும் விதமது கூறுங் கிரிகை.*

2. *றேனைந்து; றேனைந்தின். மேலைந்து; மேலைஞ்சு. கீற்று.*

3. *றேன்றெளிவும்; றேன்தெரியும்; றேனான் றெரியும்பதி.*

4. *றேனது; றேனந்தி; றென்னந்தி. கொண்டது கேண்மோ; கொண்ட கோணமே; கொண்டது கோணமே.*

குறிப்புரை

இம்மந்திரம், எண்வகை வினை ஏவல்கட்கும் உரிய இயந்திரம் வரையும் முறைமையை உணர்த்துகின்றது.

எண் வினை ஏவல் – இதனை வடநூலார் அட்டகன்மப் பிரயோகம் என்பர். வரைதல்–கீறுதல். குறியது – குறியை; குறி–விதி. அறை–பதம், வீடு, கட்டம் என்பன ஒரு பொருட் சொற்கள்.

விதித்துள்ளபடி பொன், செம்பு முதலிய உலோகங்களான் அமைந்த தகட்டிலும், உரிய பிறவற்றிலும் சம சதுரமாக அமையும்படி குறுக்கும் மறுக்குமாக ஐந்து, ஐந்துகோடுகளை வரைதல் வேண்டும். அங்ஙனம் வரைவதால் காணப்படும் அறைகள் பதினாறு ஆகும் என்பதாம்.

இதுவும் அது

7. கொண்ட கீற்றஞ்சுங் குறுகியகீற் றஞ்சும்
விண்டதோ ரொவ்வொன்றுக் கொவ்வொன்று
விஞ்சாமற்
கண்டதாங் கூத்தன் கலையென் றுரைத்தது
எண்டிசைக் கன்மத் திடும்பெயர் தானே.

பாட பேதம்

1. கொண்டது; கொண்டதோர். கீற்றைஞ்சுங்; கீற்றைந்துங். குறுகியல் கீற்றைந்தும்.
2. விண்டதே; விண்டது. ஒன்றுக்கு ஒன்று. மிஞ்சாமற்.
3. கண்டதொவ் வொன்றுக் கொவ்வொன்று மாகுமால்; கண்டது கூத்தன்.
4. எண்டிசை கருமத்

குறிப்புரை

இம்மந்திரம், இயந்திரத்தில் கீறப்படும் வரைகளின் அளவும், எண்வகை வினைகட்குத் தோற்றுவாயும் உணர்த்துகின்றது.

கீறு=கீற்று - கீறப்பட்ட கோடுகள். கொண்ட கீற்று - நெடுங்கோடுகள். குறுகிய கீற்று - குறுக்காகக் கீறப்பட்ட கோடுகள். விண்டல் = விள்ளல் - சொல்லுதல் - வேறுபடுதல். விஞ்சுதல் - மிகுதல். காண்டல்=செய்தல் - குறித்தல் (பிங்). கூத்தன் கலை - சிவாகமம். கலை - ஆகமம்; என்றது ஈண்டு இயந்திரத்தை.

ஆகமமாவது: வித்தையும், சக்கரமும்என இருவகைத்து
—சௌந்தரியலகரி உரை

இனி, கூத்தன்கலை — கூத்தனது திருவுருவம் எனினும் அமையும். கலை–திருமேனி. கலையிலாளன் காமர் வேனி லொடு கலை — சரீரம் —சிலப். 10:28 அடியார்க்

கன்மத்து இரும் பெயர்—கருமங்களுக்கு இடப்பட்ட பெயர்கள். கன்மத்து – கன்மத்துக்கு; சாரியையும், உருபும் தொக்கு நின்றது.

மேற்கூறியவாறு குறுக்கும், நெடுக்குமாயுள்ள கோடுகள் பத்தும், ஒன்றுக்கொன்று கூடாமலும் குறையாமலும் ஒத்த அளவினவாக இருத்தல் வேண்டும். இவ்வாறு அமைந்த இயந்திரமானது, இறைவன் திருவுருவமாகும். இனி, எண் திசைகளை இடமாகக்கொண்டு செய்யப்படும் எண்வகை வினை களின் பெயரையும் சொல்லுவோம் என்பதாம்.

பின்னர்க், குறியகீற்று என வருதலினாலே முன்னர்க் கொண்ட கீற்று என்பது நெடுங்கோடு என்பதும், விஞ்சாமல் எனவே எஞ்சாமல் என்பதும் பெறப்படும்.

எண்வகை வினைகளின் பெயர்

8. இடும்பெயர் வசியம் மோகனந் தம்பம்
அடும்பெயர் உச்சா டனமா கருணை
இடும்பெயர் ஏடணை பேதம் மாரணம்
தொடும்பெயர் கருமத்திற் சொல்லிய எட்டே

பாட பேதம்

1. மோகன தம்பனம்; தம்பனம்.
2. அடும்பே ருச்சா டணமா கருஷணை; அடும்பே ருச்சாடணமாகரு ஷணையொடும்; அரும்பெயர். உச்சாடனமாகரு ஷணம்; மாகருசணையும்; மாகருணை யொடும்; மாகருஷணையோடும் கருடணம்; கடருணை.

3. இடும்பே ரேடனை; எடும்பெய ரேஷணை. பேதன மாரணந்; பேதனை மாரணந்.

4. தொடும் பேர்; தொகும் பெயர். கன்மத்திற்; கருமஞ்; கன்மாதி, சொல்லிய தெட்டே.

குறிப்புரை

இம்மந்திரம், எண்வகைக் கருமங்களின் பெயர்களைத் தொகுத்து உணர்த்துகின்றது.

1. வசிப்புவினை = வசியகன்மம்; வசி-வசிப்பு-வசியம்.
2. மோகனவினை = மோகன கருமம் - மயர்ப்பு வினை-மயர்வு வினை.
3. தம்பனகருமம் = தடைவினை - கட்டுவினை.
 கரடி வெம்புலி வாயையுங் கட்டலாம்.
 — தாயுமான அடிகள்.
 தடை மந்திரம். - சிவஞானமாபாடியம்
4. உச்சாடன கருமம்=போக்கு வினை – விடை வினை விடைமந்திரம் —சிவாஞன மாபாடியம்.
5. ஆகருஷணகருமம்–அழைப்பு வினை.
6. வித்வேஷண கருமம்–பகைப்பு வினை.
7. பேதன கருமம் – மாற்று வினை.
8. மாரண கருமம்-கோறல் வினை.

தம்பம்–தம்பனம். ஆகருணை – ஆகர்ஷணம். ஏடணை–வித்வேஷணம் – பகைமை. பேதம் – பேதனம். தொடுதல்–தொடங்குதல். கருமத்தில்-கரும காண்டமாகிய இத்தந்திர கலையில்.

வசியம் முதலாக எடுத்துக் கூறப்பட்டவைகள் எட்டும் தந்திரகலையில் உள்ள எண்வகைக் கருமங்களின் பெயர்களாகும் என்பதாகும்.

இவையெட்டனுள் ஒன்றில் மற்றொன்றை அடக்கிக் கூறும் முறைமையில் சட்கர்மங் (6-தொழில்) களாகவும், பஞ்சகிருத் தியங் (5-தொழில்) களாகவும், முத்தொழில் களாவும் இரு தொழில்களாகவுங் கூறப்படும் எண்க.

மேற்கோள்

சாந்திர் வசியம் ஸ்தம்பநஞ்ச வித்வேஷோச் சாட மாரணம். | —சாபர சிந்தாமணி.

"ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பில்."
—திருவாசகம். 1: 42-43

ஒருவனு மேயுல கேழும் படைத்தான்
ஒருவனு மேயுல கேழும் அளித்தான்
ஒருவனு மேயுல கேழுந் துடைத்தான்
ஒருவனு மேயுல கோடுயிர் தானே.
—திருமந்திரம் : 404

"சிட்டித் திதியாய்ச் சிறந்தசங் காரமாய்."— 300 : 60

"அவன்வள் அதுவெனும் அவைமூ வினைமையின்."
—சிவஞானபோதம் சூ. |

மறைப்பு - திதியின்கண்ணும், வீடுபேறு சங்காரத்தின் கண்ணும் அடங்குதல்பற்றி முத்தொழில் எனத் தொகுத்துக் கூறப்படும். மறைப்பினுள் ஏனைய 3-ம் அடங்குதல் பற்றி "பந்தம் வீடு தரும் பரமன்" என 2-தொழிலாகவும் வைத்து ஓதப்படும். —சிவஞானபாடியம்.

பந்தம் வீடிவை பண்ணினீர். —தேவாரம். 8119

பந்தமும் வீடும் படைப்போன் காண்க.
—திருவாசகம் 3 : 52

பந்தமுமாய் வீடும் ஆயினார்க்கு. —214

பந்தமும் வீடும் தெரிபொருட் பனுவல்.
—திருவிசைப்பா

பந்தம் வீடு தரும்பர மன்கழல்.
—பெரியபுராணம் 300

பந்தமும் வீடும் ஆயபத பதார்த்தங்கள் அல்லான்.
—சிவஞானசித்தி. 64.

எண்வகைக் கரும இயந்திரம்—பொது

9. சொல்லிய எட்டுக்குந் தோன்றுந் துருவமும்
நல்லறை எட்டினில் நாடும் இலக்கமும்
நல்ல பதினா றறைமுதல் நாலினிற்
சொல்லும் பகவத தோன்ற விட்டதே.

பாடபேதம்

1. சொல்லிய எட்டுக்குந்

2. நல்லறை யெட்டுக்கும்; நல்லறை யெட்டில்; நல்ல முறை யெட்டில்.

3. நல்லவரை யெட்டு நாடுமில் லக்கமும்; நல்லபதினா றறை முதனாலி னாலறைச்; நல்லபதி னாறையு நாடுமின்னாலினி; முதலினில் நாலினிற்.

4. சொல்லிய பகவதாதோடு; பகவதத் தோன்ற; பகவதத்தோடு மிடுவதே; தோன்றவிடுவதே.

குறிப்புரை

இம்மந்திரம், எண்வினை ஏவல்களுக்கும் பொதுவாகிய இயந்திரமும், அவற்றில் இலக்கம் அடைக்குந் தந்திரமும் உணர்த்துகின்றது.

சொல்லிய எட்டு – சொல்லப்பட்ட எண்வகை வினைகள். துருவம் = அசையாநிலை – துருவநட்சத்திரம் – எண்ணூலில் வழங்கப்படும் ஓர் வகைக் கணக்கு வாய்பாடு. இதனைத் துருவ வாக்கியம் என்பர். ஈண்டு இப்பொருளில் வந்தது. துருவ நட்சத்திரமானது, எப்போதும் வானவெளியில் ஏனையவற்றைப் போலத் தோன்றாமலும், மறையாமலும் தான் நின்ற இடத்தி லேயே நிற்கும்; அசையாமல் என்றும் வடக்கேயே நிற்றலினாலே பிற திசைகளைத் தெரிந்துகொள்வதற்கும் இந்நட்சத்திரம் சாதனமாகும். இங்கே சொல்லப்படும் துருவ வாய்பாடுகளும் அவ்வாறிருத்தலின் இப்பெயர் பெற்றது. இஃது ஒப்பின் ஆகிய பெயர். தோன்ற = துருவலக்கம் தோன்றும்படி விளங்க.

துருவ அறை–8ம், அத்துருவ அறை-8ம் ஆகப் பொருந்திய இந்த-16 அறைகளில் முதற்கண் உள்ள-4 அறைகளில் முறையே பகரம், ககரம், வகரம், தகரம் ஆகிய இந்த-4 எழுத்துக்களையும் வரைக என்பதாம்.

இதுவும் அது

10. இட்டபதி னாறில் எட்டாந் துருவமும்
பட்ட விலக்கம் பதித்திடும் எட்டினில்
தொட்ட துருவம் தொடர்ந்தொன்றோ டெட்டாக
கட்டும் அடைவுக்கு காரணம் ஆமே.

பாட பேதம்

1. எட்டுத் துருவமும்.
2. பட்ட விலக்கமும் எட்டிலத்; எட்டினிலத் பதித்திடும்.
3. தொட்டத் துருவம் தொடர்ந்துகொண் டொன்றாக்க; தொடர்ந்தொன்றோ - டொக்கக்; தொடர்ந்தொன் றொன்றாக, தொடர்ந்தொன்றோ டொன்றாகக், டெட்டாக.
4. அடைவுக் காரணமாமே, ஆகுமே, ஆகவே,

குறிப்புரை

இம்மந்திரம் பதினாறு அறைகளில் இலக்கம் அடைத்தற்குரிய முறைமையை உணர்த்துகின்றது.

இட்ட-கீறப்பட்ட. பதினாறில்—16 அறைகளில். எட்டு ஆம்-1 முதல் 8 ஆக உள்ள. துருவம்-துருவ இலக்க அறைகள், பட்ட-பொருந்திய. இலக்கம்-1 முதல் 8 வரை உள்ள எண்கள். எட்டினில் பதிந்திடும்-துருவ அறைகள் எட்டிலும் முறையே அமையும். தொட்டு-தொடங்கி.

அ துருவம் = அத்துருவம்-நத்துருவம் – துருவ அறை—8ம், அல்லாத அறைகள். வடமொழி வியாகரண விதிப்படி, ந + துருவம் = என்பது. அத்துருவம் என வந்தது. நத்துருவம் என்ற பிரயோகமும் உண்டு. நகரத்துக்குரிய இன்மை-அன்மை-மறுதலை என்னும் 3 பொருள்களுள்; அசைவன், அப்பிராமணன் என்றாற் போல, ஈண்டு அன்மைப்பொருளில் வந்தது. (பிரயோக விவேகம்) கட்டுதல் = பிணித்தல் – வரம்பாதல் – இலக்கங்களை அடைத்தல். அடைவு = அடைதல்-முறை. காரணம் – கருவி.

துருவம் – இறைவன் வடிவென்றும், அத்துருவம் – இறைவி வடிவென்றும் கட்சபுட தந்திரத்திற் சொல்லப்பட்டுள்ளது. இவ்வாறு இயந்திரத்தில் இவை 2–ம் விரைவியிருத்தலினாலே எல்லா வினைகளும் இயக்கப்படுகின்றன. "சிவமெனும் பொருளும் ஆதிசத்தியொடு சேரின் எத்தொழிலுஞ் செய்ய வல்லதாம்." —சௌந்தரியலகரி

பதினாறு அறைகளில், துருவ அறைகள் எட்டிலும் 1-முதல் 8-வரை உள்ள எண்களை, மேற்சொல்லப்படும் எண்வினைத் துருவ வாய்பாடுகளின்படி முறையே அடைத்துக் கொள்க. பின்பு அத்துருவ அறைகள் எட்டிலும் வேண்டுங் கருமத்திற்குரிய எண்ணை அவ்வாறே விதிப்படி அடைத்துக் கொள்க. இவ்வாறு, துருவம் அத்துருவம் ஆகிய இவை 2-ம் இணைந்து இருத்தலினாலே எண்வகை ஏவல் வினைகட்குச் சொல்லப்படும் எண்களை அடைப்பதற்கு அவை கருவியாகும். இங்ஙனம் அமைவுற்ற

இயந்திரமானது, அவ்வினைகளை இயக்குவதற்கு மூல காரணமாகும் என்பதாம்.

எண்வகைக் கருமத்தின் பெயரும் முறையும்

11. காரண வசியங் காண்பது மோகனந்
தாரண தம்பனந் தாங்குமுச் சாடனங்
காரண மாகுங் கருணைவித் தேடணை
வாரண பேதம் மாரண மறியே.

பாட பேதம் :

1. காரணம் வசியம்.
2. தாரணந் ; தாரணை ; தாரணைத்.
3. காரண மேயா கருணைவித்து வேடணை ; மேயாகக் கருணைவித் வேடணை, கருணைவித்து வேடணை, வித்து வேஷணம், வேடணம், காரண மெய்யாக் கருணை, மெய்யா கருணை.
4. மாரண பேதன மற்றறி நீயே, வாரண பெந்தன, மாரண பேதன, வாரண பேதன. மாமறி நீயே, மறுதியே, மறதியே, மறுகியே, மருகியே.

குறிப்புரை

இம்மந்திரம் இந்நூலுள் விரித்துக் கூறப்படும் எண் வகை வினைகளின் பெயர்களை முறையே தொகுத்து உணர்த்துகின்றது.

முன்னர் வந்துள்ள 8-ஆம் செய்யுளை நோக்க இம்மந்திரம் மிகை என்றும், கூறியது கூறல் என்றுந் தோற்றும். ஈண்டு இதில் நிறுத்த முறையானே ஒவ்வொரு கருமங்களுக்கும் தனித் தனியே உரிய துருவ வாய்பாடுகள் அடுத்து முறையே வகுத்து கூறப்படுதலினாலே குற்றமாகாது.

கூறியது கூறினுங்குற்றம் இன்றே—வேறொரு பொருளை விளக்கு மாயின் — என்பது காண்க. இதனை வடநூலார் அநுவாதம் என்பர். முன்னர்க் கூறியது புரோ வாதம் ஆகும்.

காரணம் - இந்நூலுட் கூறப்படும் பொருள்களுக்கு மூல காரணமாயுள்ள கருமங்கள்; வசியம் முதல் மாரண மீறாகச் சொல்லப்பட்டவைகள் எட்டும் ஆம் என்க. தாரணம்=தாரணை தரித்தல்-நிறுத்துதல். கருணை =ஆகர்ஷணம். வித்தேடணை வித்வேஷணம். வாரணம் = தடை-கவசம், இது பேதனத்துக்கு அடை. பேதம்-பேதனம்.

மேற்கோள்

தரித்தது தாரணை தற்பரத் தோடே.
—திருமந்திரம் 597

தாரணையாற் சிவத்தடைந்த சித்தத்தார்,
—பெரிய 4162

இயந்திரத்தின் இயல்பு

12. அறிகின்ற அக்கர சக்கரந் தன்னைக
குறிகொண் டிருந்திடுங் கோல்வளை தானும்
உறுகின்ற வீசத்தோ டொத்த விலக்கந்
துறுகின்ற சூத்திரஞ் சொல்வரை பாரே.

பாட பேதம்

1. அக்கரச் சக்கரந்; அக்கரஞ் சக்கரந். அறுகின்றதன்னை.
2. குறிகொண டறிந்திடுங்; கோல்வளை நாலும்;
கோலவரை நாலும்; கோலவறை நாலும்.
3. வீசத்தோ டுற்ற; பீசத்தோ; பீஜத்தோ-விலக்கமுந்.
4. சொல்வகை; சொல்லவரை; சொல்வரை.

குறிப்புரை

இம்மந்திரம்; இயந்திரத்தின் இயல்பும், எண் கரும இலக்கத் துருவத்திற்குத் தோற்றுவாயும் உணர்த்துகின்றது.

அக்கரம்-எழுத்து. அக்கர சக்கரம்-அட்சரம் வரைந்துள்ள இயந்திரம். சக்கரந்தன்னை = சக்கரந்தன்னில் – சக்கரத்தில். குறிகொண்டு – இலக்காகக்கொண்டு. கோள்வளை – இறைவி; அன்மொழித் தொகை. கோல் = திரட்சி – வளை-வளையல்; இஃது ஈண்டு இடுகுறியளவாய் நின்றது.

கோல்வளையாள் ஒருபால் ... புணர்தரும் — மெய்ம்மை, என்னே. —தேவாரம். 510

வீசம்=பீசம் – வித்தெழுத்துக்கள். வீசத்துக்குச்சமமான இலக்கங்கள். துறுதல்-நெருங்குதல். சூத்திரம்=விதி—உபாயம் மறை பொருள் – குறிப்பு.

இறைவி, இந்த இயந்திரத்திற் பொறிக்கப்பட்டுள்ள வரைகள் எண்கள், எழுத்துக்கள், பீசங்கள் முதலியவற்றையே அங்கமாகத் தாங்கி இவ்வியந்திரத்தில் வீற்றிருப்பார். இனி, மூல எழுத்துக்கு ஒப்பான இலக்கங்களை இயந்திரத்தில் அடைப்பதற்குக் கருவியாயுள்ள துருவ வாய்பாடுகளின் சூத்திரஞ் சொல்லப்படும் என்பதாம்.

அடுத்துவரும் துருவவாய்பாட்டுத் திருமந்திரங்கள் எட்டும்,
ஆடி நிழலின் அறியத் தோன்றி
நாடுதல் இன்றிப் பொருள்நனி விளங்க
சில்வகை எழுத்திற் செறித்தினிது யாத்துத்
திட்பம் நுட்பஞ் செறிந்தன வாயிருத்தலின்,
அவை சூத்திரம் எனப்படும்.

அதி. 3—எண்வினைத் துருவம்

1. வசியத் துருவம்

13. வரைபார் கிரிதீர் திரிகீர் பரிவார்
உரையார் வசியத் தோதுந் துருவமே
பிரிவீர் தருகார் கருதார் விரைபீர்
சொருகா விலக்கத்தைத் தோன்றவைப் பீரே.

பாட பேதம்

1. *கிருதீர் திருகீர்.*
2. *உரையா வசியம் தோதுந் துருவம்; உரையாய் வசியத்; உரையாச வசியத்; வசியத்துக் கோதுந்-துருவம்; துருவ மாம்.*
3.
4. *விலக்கந் தோன்ற.*

குறிப்புரை

இம்மந்திரம், வசிய வினையின் துருவ வாய்பாடு உணர்த்து கின்றது.

வசியகன்ம இலக்கத் துருவ சூத்திரம்

வரைபார் கிரிதீர் திரிகீர் பரிவார்—என்பது.

வாய்பாடு

வ பா - கி தீ - தி கீ - ப வா — என்பது.

அத்துருவ சூத்திரம்

பிரிவீர் தருகார் கருதார் விரைபீர் — என்பது.

வாய்பாடு

பி வீ - த கா - க தா - வி பீ — என்பது.

அறை 16-க்கும், வாய்பாடுகளில் உள்ள குறியெழுத்துக்களும் 16-ஆதல் அறிக. வசிய கருமத்தில், இவ்வாய்பாட்டின்படியே துருவ அறை எட்டில் 1-முதல் 8-வரையுள்ள எண்களையும், அத்துருவ அறை எட்டில் ஏனைய எண்களையும் முறையே அடைக்க என்பதாம். முன்னர், துருவம் என்றதனாலே, பின்னர் உள்ளவை அத்துருவம் என்பது பெறப்படும். பிறவற்றிற்கும் இவ்வாறே கண்டுகொள்க.

சொருகுதல் = அடங்குதல் - தங்குதல் - நுழைத்தல் - மறையச் செய்தல். துருவம் = அசையாநிலை-நிலையாயிருத்தல்--மையம்-நடு.

மேற்கோள்

துரியங்கண் முன்றுஞ் சொருகிடன் ஆகி —திருமந். 1893.

சொருகு கொந்தளகம் ஒருகை மேலலைய. —கலிங் 46.

2. மோகனத் துருவம்

14. பீர்விரை தார்கரி கார்தரு வீர்பிரிந்
தேர்பெறு மோகனத் தெய்துந் துருவமாம்
வார்பரி கீர்திரை தீர்கிரி பார்வரை
பேர்பெறு லக்கம் பேசத் தருவனே.

பாட பேதம்

1. பீர்வின வீர்பிரித் தார்கரு வீர்பிரி.

2. யேர்பெற; ஏர்பெற்ற; ஏர்தரு; தேர்பெற-தெய்த; தேய்ந்த. துருவமே; துருவம்.

3. வார்பரு. திர்கிரி கீர்திரை பார்வரை.
பேர்பெற விலக்கம்; பேர்பெற்றிலக்கம்; பேர்பெற்ற லக்கம்; பேர்பெற லக்கம்; லெக்கம். பெருகத்; பெருக்கத் - தருவளே; தருவதே; தருவதே; தருவீரே.

குறிப்புரை

இம்மந்திரம், மோகன கரும இலக்கத்தின் துருவ வாய்பாடு உணர்த்துகின்றது,

மோகன இலக்கத் துருவ சூத்திரம்

பீர்விரை தார்கரி கார்தரு வீர்பிரி. —என்பது

வாய்பாடு

பீ வி–தா க–கா த–வீ பி. —என்பது

அத்துருவ சூத்திரம்

வார்பரி கீர்திரை தீர்கிரி பார்வரை. —என்பது

வாய்பாடு

வா ப-கீ தி–தீ கி–பா வ. —என்பது

3. தம்பனத் துருவம்

15. தருகார் பிரிவீர் விரைபீர் கருதார்
சொருகீர் வருதம் பனைக்குத் துருவம்
கிரிதீர் வரைபார் பரிவார் திரிகீர்
நிரையா விலக்கத்தை நீர்வரை கீரே.

பாட பேதம்

1. *விரை வீர்.*
2. *வருதம் பனத்துரு வ(ம்)மே, வருமித் தம்பனத் துருவம், வருதம் பனத்தின் துருவம், வருந்தம் பனத்தின் றுருவம், வருதம் பனத்திற் றுருவம், வரு தம்பனந் தோற்றுந் துருவமாம்.*
3. *கிருதீர் விரைபார் பதிவார் திருகீர்.*

4. நிரையா மிலக்கத்தை, நிரையா யிலக்கத்தை,
நிரைமா மிலக்கத்தை-நீவரைகிறே, நீர்பதிக்கிரே,
நேர்பதிக்கிரே, நேர்பதிப் பீரே, கிறே.

குறிப்புரை

இம்மந்திரம், தம்பன கரும இலக்கத்தின் துருவ வாய்பாடு உணர்த்துகின்றது.

தம்பன இலக்கத் துருவ சூத்திரம்

தருகார் பிரிவீர் விரைபீர் கருதார் —என்பது

வாய்பாடு

த கா-பி வீ-வி பீ-க தா. —என்பது

அத்துருவ சூத்திரம்

கிரிதீர் வரைபார் பரிவார் திரிகீர் —என்பது

வாய்பாடு

கி தீ-வ பா-வ வா-தி கீ. —என்பது

சொருகுதல்-அடைத்தல் (செய்.13). தம்பனை-தம்பனம். "அங்கித்தம் பனைவல்லார்க்கு அனல்சுடாதாகும் ஒளடதமந் திரமுடையார்க்கு அருவிடங்கள் ஏறா"

—சித்தியார். 309

நிரை = வரிசை - முறை - இவ்வாய் பாட்டிற் சொல்லிய முறைப்படி. அடுத்துவரும் செய்யுளின் அந்தாதித் தொடையியைபு பற்றியது கிரே என்பது. கிர் = வார்த்தையுமாம் - வாய்பாட்டின்படி என்றபடி. மேலும் இவ்வாறே கண்டு கொள்க.

4. உச்சாடனத் துருவம்

16. கீர்திரை வார்பரி பார்வரை தீர்கிரி
ஒருமுச் சாடனத் தோதுந் துருவமாம்
தார்கரி பீர்விரை வீர்பிரி கார்தரு
ஒரும் இலக்கம் உடன்கரு தாரே.

பாட பேதம்

1. *வார்பதி, பார்பரி.*
2. *ஏருமுச், ஓதுமுச் சாடன மோதுந், சாடனத் தெய்துந், சாடன மொத்த, சாடனத் தொத்ததுருவம்.*
3. *தார்கரு, தார்கிரி. பார்பிரை, வீர்விரை, வீர்பிரை, பீர்பிரி, வீர்பிரை கார்தரும்.*
4. *மிலக்கத்தை நேர்கருதீரே; மிலக்க முடனே கருதே, முடன்றரு காரே, உடன்கரு தீரே.*

குறிப்புரை

இம் மந்திரம், உச்சாடன கரும இலக்கத்தின் துருவ வாய்பாடு உணர்த்துகின்றது.

~~தம்பன~~-இலக்கத் துருவ சூத்திரம்

கிர்திரை வார்பரி பார்வரை கீர்கிரி — என்பது

வாய்பாடு

கி தி - வா ப - பா வ - தீ கி, — என்பது

அத்துருவ சூத்திரம்

தார்கரி பீர்விரை வீர்பிரி கார்தரு — என்பது

வாய்பாடு

தா க - பீ வி - வீ பி - கா த.

ஓர்தல் = ஆராய்தல் – தெளிதல் - நினைத்தல். இலக்கம் - உச்சாடன கருமத்திற்குரிய இலக்கம்.

5. ஆகருடணத் துருவம்

17. கருதார் விரைபீர் பிரிவீர் தருகார்
தெரியா கருணைக்குச் சேருந் துருவம்
திரிகீர் பரிவார் வரைபார் கிரிதீர்
மருவா விலக்கம் வகுத்துவைத் தீரே.

பாடபேதம்

1. கருதா.
2. செரியா. கருஷணைக்கு. சேரத்; சேர்ந்த, தேர்ந்த, தேருந், சொல்லுந், துருவமாம், துருவமே.
3. திருகீர். பரைவார். திருதீர்.
4. மருவா லெக்கம், மருவா மிலக்கம், மருவா திலக்கம் வகுத்துரைப் பீரே, வகுத்துரைத் தீரே, வகுத்துரைத் தாரே, வகுத்துவைத்தாரே, வகுத்திடுவீரே.

குறிப்புரை

இம்மந்திரம், அழைப்பு வினை ஏவல் இலக்கத்தின் துருவ வாய்பாடு உணர்த்துகின்றது.

அழைப்புவினை இலக்கத் துருவ சூத்திரம்

கருதார் விரைபீர் பிரிவீர் தருகார் — என்பது

வாய்பாடு

க தா – வி பீ – பி வீ – த கா. — என்பது

அத்துருவ சூத்திரம்

திரிகீர் பரிவார் வரைபார் கிரிதீர் — என்பது

வாய்பாடு

ஆகருணை = ஆகருடணை - ஆகருடணம்; "எண்ணா கருடணை ஏட்டின் உகாரமிட்டு" - திருமந்திரம் 1002. மருவல்- பொருந்தல். இலக்கம் - ஆகருடண கருமத்தின் இலக்கம்.

6. வித்து வேடணைத் துருவம்

18. தீர்கிரி பார்வரை வார்பரி கீர்திரை
ஒரும்வித் தேடணைக் கோதுந் துருவமாம்
கார்தரு வீர்பிரி பீர்விரை தார்கரி
சீர்பெற லக்கஞ் சேரப் பரிவதே.

பாடபேதம்

1. வார்பரு கீர்திரி, வார்பரி கீர்திரி, கீர் திரு, கீர் திரி, கீர் திரிந்து.
2. ஊரும்வித் தேடனைக், ஊர்வித் தேடனைக், ஒரு மேடனைக் குற்ற. ஓதும் வித், வித்து வேடணைக் கோதுந் கொத்த துருவமாம், துருவம், துருவமே.
3. கார்தரு வீர்பரி.
4. சீர்பெற் றிலக்கஞ். றிலக்கத்தைச் பரிவுறே.

குறிப்புரை

இம்மந்திரம், பகைப்பு வினை ஏவல் இலக்கத்தின் துருவ வாய்பாடு உணர்த்துகின்றது.

பகைப்பு வினை இலக்கத் துருவ சூத்திரம்

தீர்கிரி பார்வரை வார்பரி கீர்திரை. —என்பது

வாய்பாடு

தீ கி - பா வ - வா ப - கீ தி. —என்பது

அத்துருவ சூத்திரம்

கார்தரு வீர்பிரி பீர்விரை தார்கரி. —என்பது

வாய்பாடு

கா த – வீ பி – பீ வி - தா க. —என்பது

வித்தேடணை = வித்து வேடம் – வித்து வேடணம் – பகை-விரோதம். சீர்-முறைமை. லக்கம்-வித்து வேடண கருமத்தின் இலக்கங்கள். பரிதல் — சூழ்தல். இயந்திரத்தைச் சூழ அடைத்தல். "புண்ணுமிழ் குருதி பரிப்பக் கிடந்தோர் – குருதி பரிப்ப – குருதி விழுந்தோரைச் சூழ".

—அகம் 31-10 உரை.

7. பேதனத் துருவம்

19. பரிவார் திரிகீர் கிரிதீர் வரைபார்
பெரியோர் துருவத்தைப் பேதனம் என்பர்
விரைபீர் கருதார் தருகார் பிரிவீர்
அரிதா மிலக்கத்தை அறிந்திடு வீரே.

பாடபேதம்

1. பரிவார் திருகீர், பரிவார் கிருதீர், பரிவார் கிரிகீர்.
2. பெரியோர் பேதனத் துருவம் என்பர். பேதனம் என்பார், பேதனமாக, பேதனமாமே.
3. அரிதா மிலக்கம் அறிந்திடு, மரபா விலக்கமறிந்; மரபா விலக்க மறிந், மருவா விலக்க மறிந், பிரிவீரிலக்கம் பேசிடு வீரே.

குறிப்புரை

இம்மந்திரம், பேதன கரும இலக்கத்தின் துருவ வாய்பாடு உணர்த்துகின்றது.

பேதன வினை இலக்கத் துருவ சூத்திரம்

பரிவார் திரிகீர் கிரிதீர் வரைபார் —என்பது

துருவ வாய்பாடு

ப வா - தி கீ - கி தீ - வ பா. —என்பது

அத்துருவ சூத்திரம்

விரைபீர் கருதார் தருகார் பிரிவீர் —என்பது

வாய்பாடு

வி பீ - க தா - த கா - பி வீ. —என்பது

பெரியோர் = பெரிய தேவர் - நந்தியெம்பெருமான் - அபரசிவம். பெரியதேவரைச் சென்று கொணர்கென-பெரிய4277. பேதனம்=பேதம் - பேதித்தல் - வேறுபடுத்தல் (இதன் வகை-5. குறள், 467. பரிமேல்) அருமை - சிறப்பு இலக்கம் - பேதன வினைக்குரிய இலக்கங்கள்.

8. மாரணத் துருவம்

20. வீர்பிரி கார்தரு தார்கரி பீர்விரை
மாரண கன்மம் வகுத்த துருவமாம்
பார்வரை தீர்கிரி கீர்திரை வார்பரி
சேரும் இலக்கஞ் சேர்த்துப் பரிவுறே.

பாட பேதம்

1. வீர்பரி, வீர்பிரிதார்தரு, தார்கரு, பீர்விரி.
2. மாரணக் கன்மம், மாரண கருமம், மாரணத்துக்கு வகுத்த. வகுத்த துருவம், வகுத்த துருவாம், வகுத் துரைப்பீரே, மாரணத் துருவம் மகிழ்ந்துரைப் பீரே.
3. பார்பரை தீர்கிரி தீர்திரை, பார்வரை தீர்கிரி கீர்திரி.
4. இலக்கஞ் சிறக்கவைப் பீரே, இலக்கந் தெரிந்து பரிவுற; சேர்ந்து பரிவுற்றே, செறிந்து பரிவுறே, செறிந்து பரிவுறவே, செறிந்த பரிவுற்றே, சேர்ந்து பறிவுற்றே.

முடிவு: துருவம் முற்றும்.

குறிப்புரை

இம்மந்திரம், மரிப்புவினை ஏவல் இலக்கங்கட்குரிய துருவ வாய்பாடு உணர்த்துகின்றது.

மாரண கன்ம இலக்கத் துருவ சூத்திரம்

வீர்பிரி கார்தரு தார்கரி பீர்விரை. —என்பது

வாய்பாடு

வீ பி - காத - தாக - பீ வி. —என்பது

அத்துருவ சூத்திரம்

பார்வரை தீர்கிரி கீர்திரை வார்பரி. —என்பது

வாய்பாடு

பாவ – தீ கி - கீ தி – வா ப. —என்பது

கன்மம் - கருமத்துக்கு. வகுத்தல் - வகைப்படுத்திக் கூறுதல். இலக்கம்-மாரண கரும ஏவலுக்குரிய இலக்கங்கள். பரிவுறல்=சூழ்தல்-சக்கரத்திற் சூழ வரைந்திடுதல்.

குறிப்பு:—சில சுவடிகளில், 13 முதல் 20 வரை உள்ள துருவ சூத்திரப் பாடல்களுக்குத் தலைப்புக்களும், "அத்துருவத்தில் அடைக்க லக்க விபரம் அறிய" என்னுந் தலைப்பின் கீழ்ச் சில பிரயோகங்களுக்குரிய எண்களும், எண்வகைக் கருமங்களின் துருவ வாய்பாடுகளும், துருவசக்கரங்களும், மந்திரங்களும் காணப்படுகின்றன. அவை அடுத்து, சேர்க்கப் பெற்றுள்ளன.

அதி-4. எண்ணும் எழுத்தும்
இலக்கம் அடைக்கும் முறை

21. பரிவுறும் எட்டுத் துருவம் பதித்துக்
கருவுறும் எட்டிற் கருமத் திலக்கம்
நெறியுறப் பாதிசெய் தொவ்வொன்று நீக்கு
அறியுற அன்பத்தொன் றாகும் அகாரமே.

பாட பேதம்

1. பரிவுறு எட்டுத்; பரிவுற்ற எட்டிற்; பரிவர எட்டுத். துருவமும்; துருவம் பகர்ந்தந்தக்.

2. எட்டுக்குக்; எட்டுக் கருமத் திலக்கா. கரியுறும்; கருமத்திற்பாதி.

3. நெறிவுறப் பாதி; நெரிவுறு பாதி; நெரிவுரு பாதி. நெரியுறுபாதி செய்யொவ் வொன்று; செய்தொவ் வொன்று; செய்தது லொன்று; செய் தொன்று; நீக்கி; நீக்கும்.

4. அறிவுறும் அன்பத்தோ ரெழுத்தாதி அகாரமே: அரியுறுமைம்பத்தோரெழுத்தாதி அகாரமே; அறியவன் பத்தொன்றாகும் அகாரமே: அரிதைம் பத்தோ ரெழுத்தாகி அகாரமே; அரிதைம்பத்தோ ரெழுத்தாதி அகாரமே; அறிதியன்பத்தோரதி கார முடிவே, அரியவன்பத்தோ ரெழுத்தாகிய அகாரமே, அரிஅன்பத் தோரெழுத்தாதி அகாரமே.

குறிப்புரை

இம்மந்திரம், எண்வினை இலக்கங்களை இயந்திரத்தின் அத்துருவ அறைகளில் அடைக்கும் பொதுவிதியும், 16-அறை களிலும் 15-எழுத்துக்களை அடைப்பதற்குத் தோற்றுவாயும் உணர்த்துகின்றது.

1. வசிய கன்ம சக்கரத்திற்குரிய இலக்கத் துருவத்தின் இயந்திரம்

துருவ வாய்பாடும், இலக்கமும்

செய்யுள் – 13

1. துருவ சக்கரம்

ப.	க.	வ.	த.
ப. 7		வ. 1	
பா. 2		வா. 8	
	கி. 3		தி. 5
	கீ. 6		தீ. 4

துருவ வாய்பாடு

வ பா – கி தீ – தி கீ – ப வா.

இலக்கம் 1 to 8.

2. அத்துருவ சக்கரம்

ப.	க.	வ.	த.
	க. 12		த. 14
	கா. 13		தா. 11
பி. 16		வி. 10	
பீ. 9		வீ. 15	

அத்துருவ வாய்பாடு

பி வீ – த கா – க தா வி பீ.

இலக்கம் 16 to 9.

3. துருவாத்துருவ சக்கரம்

ப. 7	க. 12	வ. 1	த. 14
பா. 2	கா. 13	வா. 8	தா. 11
பி. 16	கி. 3	வி. 10	தி. 5
பீ. 9	கீ. 6	வீ. 15	தீ 4

1. வசியம்.

ப. எ	க.	வ. க.	த.
உ		அ	
	நு.		ரு.
	சா.		சு.

சென்னை அரசாங்கத் தமிழ்க் கையெழுத்து நூல் நிலையச் சுவடியின்படி

2. மோகன கன்ம சக்கரத்திற்குரிய இலக்கத் துருவத்தின் இயந்திரம்.

துருவ வாய்பாடும், இலக்கமும்

செய்யுள் – 14

1. துருவ சக்கரம்

ப. க. வ. த.

	க. 4		த. 6
	கா. 5		தா. 3
பி. 8		வி. 2	
பீ. 1		வீ. 7	

துருவ வாய்பாடு

பீ வி – தா க – கா த – வீ பி,

இலக்கம் : 1 to 8

2. அத்துருவ சக்கரம்

ப. க. வ. த.

ப. 15		வ. 9	
பா. 10		வா. 16	
	கி. 11		தி. 13
	கீ. 14		தீ. 12

அத்துருவ வாய்பாடு

வா ப - கீ தி - தீ கி - பா வ

இலக்கம்: 16 to 9

3. துருவாத்துருவ சக்கரம்

ப. 15	க. 4	வ. 9	த. 6
பா. 10	கா. 5	வா. 16	தா. 3
பி. 8	கி. 11	வி. 2	தி. 13
பீ. 1	கீ. 14	வீ. 7	தீ. 12

2. மோகனம்

ப.	க. ச.	வ.	த. சா
	ரு.	.	ந.
அ.		உ.	
க.		எ.	

செ–அ–நூ–சு.

3. தம்பன கன்ம சக்கரத்திற்குரிய இலக்கத் துருவத்தின் இயந்திரம்.

துருவ வாய்பாடும், இலக்கமும்

செய்யுள் – 15

1. துருவ சக்கரம்

ப. க. வ. த.

	க. 7		த. 1
	கா. 2		தா. 8
பி. 3		வி. 5	
பீ. 6		வீ. 4	

துருவ வாய்பாடு

த கா - பி வீ - வி பீ - க தா,

இலக்கம்: 1 to 8

2. அத்துருவ சக்கரம்

ப. க. வ. த.

ப. 12		வ. 14	
பா. 13		வா. 11	
	கி. 16		தி. 10
	கீ. 9		தீ. 15

அத்துருவ வாய்பாடு

கி தீ - வ பா - ப வா - தி கீ.

இலக்கம்: 16 to 9

3. துருவாத்துருவ சக்கரம்

ப. 12	க. 7	வ. 14	த. 1
பா. 13	கா. 2	வா. 11	தா. 8
பி. 3	கி. 16	வி. 5	தி. 10
பீ. 6	கீ. 9	வீ. 4	தீ. 15

3. தம்பனம்

ப.	க. எ.	வ.	த. க.
	உ.		அ.
ந.		ரு	
சு.		சு.	

செ - அ - நா - சு.

4. உச்சாடன கன்ம சக்கர இலக்கத் துருவத்தின் இயந்திரம்.

துருவ வாய்பாடும், இலக்கமும்

செய்யுள் – 16

1. துருவ சக்கரம்

ப.	க.	வ.	த.
ப. 4		வ. 6	
பா. 5		வா. 3	
	கி. 8		தி. 2
	கீ. 1		தீ. 7

துருவ வாய்பாடு

கீ தி - வா ப - பா வ - தீ கி.

இலக்கம்: 1 to 8.

2. அத்துருவ சக்கரம்

ப.	க.	வ.	த.
	க. 15		த. 9
	கா. 10		தா. 16
பி. 11		வி. 13	
பீ. 14		வீ. 12	

அத்துருவ வாய்பாடு

தா க - பீ வி - வீ பி - கா த.

இலக்கம்: 16 to 9.

3. துருவாத்துருவ சக்கரம்.

ப. 4	க. 15	வ. 6	த. 9
பா. 5	கா. 10	வா. 3	தா. 16
பி. 11	கி. 8	வி. 13	தி. 2
பீ. 14	கீ. 1	வீ. 12	தீ. 7

4. உச்சாடனம்

ப. சு	க.	வ. சூ	த.
ரு.		நு.	
	அ.		உ.
	க.		எ.

செ - அ - நூ - சு.

5. ஆகர்ஷண கன்ம சக்கரத்திற்குரிய இலக்கக் துருவத்தின் இயந்திரம்.

துருவ வாய்பாடும், இலக்கமும்

செய்யுள் – 17

1. துருவ சக்கரம்

ப.	க.	வ.	த.
	க. 1		த. 7
	கா. 8		தா. 2
பி. 5		வி. 3	
பீ. 4		வீ. 6	

துருவ வாய்பாடு

க தா - வி பீ - பி வீ - த கா.

இலக்கம்: 1 to 8

2. அத்துருவ சக்கரம்

ப.	க.	வ.	த.
ப. 14		வ. 12	
பா. 11		வா. 13	
	கி. 10		தி. 16
	கீ. 15		தீ. 9

அத்துருவ வாய்பாடு

தி கீ - ப வா - வ பா - கி தீ.

இலக்கம்: 16 to 9

3. துருவாத்துருவ சக்கரம்

ப. 14	க. 1	வ. 12	த. 7
பா. 11	கா. 8	வா. 13	தா. 2
பி. 5	கி. 10	வி. 3	தி. 16
பீ. 4	கீ. 15	வீ. 6	தீ. 9

5. ஆகர்ஷணம்

ப.	க. க.	வ	த. எ.
	அ.		உ.
ரு.		ந.	
ச.			சு.

செ - அ - நா - சு.

6. வித்வேஷண கன்ம சக்கர இலக்கத் துருவத்தின் இயந்திரம்

துருவ வாய்பாடும், இலக்கமும்

செய்யுள் – 18

1. துருவ சக்கரம்

ப.	க.	வ.	த.
ப. 6		வ. 4	
பா. 3		வா. 5	
	கி. 2		தி. 8
	கீ. 7		தீ. 1

துருவ வாய்பாடு

தீ கி - பா வ - வா ப - கீ தி.

இலக்கம்: 1 to 8.

2. அத்துருவ சக்கரம்

ப.	க.	வ.	த.
	க. 9		த. 15
	கா. 16		தா. 10
பி. 13		வி. 11	
பீ. 12		வீ. 14	

அத்துருவ வாய்பாடு

கா த - வீ பி - பீ வி - தா க.

இலக்கம்: 16 to 9.

3. துருவாத்துருவ சக்கரம்.

ப. 6	க. 9	வ. 4	த. 15
பா. 3	கா. 16	வா. 5	தா. 10
பி. 13	கி. 2	வி. 11	தி. 8
பீ. 12	கீ. 7	வீ. 14	தீ. 1

6. வித்துவேஷணம்

ப. சூ.	க	வ. ச.	த.
ந.		ரு.	
	உ.		அ.
	எ.		க.

செ - அ - றா - சு.

7. பேதன கன்ம சக்கர இலக்கத் துருவத்தின் இயந்திரம்

துருவ வாய்பாடும், இலக்கமும்

செய்யுள் – 19

1. துருவ சக்கரம்

ப. க. வ. த.

ப. 1		வ. 7	
பா. 8		வா. 2	
	கி. 5		தி. 3
	கீ. 4		தீ. 6

துருவ வாய்பாடு

ப வா - தி கீ - கி தீ - வ பா.

இலக்கம்: 1 to 8.

2. அத்துருவ சக்கரம்

ப. க. வ. த.

	க. 14		த. 12
	கா. 11		தா. 13
பி. 10		வி. 16	
பீ. 15		வீ. 9	

அத்துருவ வாய்பாடு


வி பீ – க தா - த கா - பி வீ·

இலக்கம்: 16 to 9.

3. துருவாத்துருவ சக்கரம்

ப. 1	க. 14	வ. 7	த. 12
பா. 8	கா. 11	வா. 2	தா. 13
பி. 10	கி. 5	வி. 16	தி. 3
பீ. 15	கீ. 4	வீ. 9	தீ. 6

7. பேதனம்



செ - அ - நூ - சு

8. மாரண கன்ம சக்கர இலக்கத் துருவத்தின் இயந்திரம்

துருவ வாப்பாடும், இலக்கமும்

செய்யுள் – 20

1. துருவ சக்கரம்

ப. க. வ. த.

	க. 6		த. 4
	கா. 3		தா. 5
பி. 2		வி. 8	
பீ. 7		வீ. 1	

துருவ வாய்பாடு

வீ பி - கா த - தா க - பீ வி,

இலக்கம்: 1 to 8

2. அத்துருவ சக்கரம்

ப. க. வ. த.

ப. 9		வ. 15	
பா. 16		வா. 10	
	கி. 13		தி. 11
	கீ. 12		தீ. 14

அத்துருவ வாய்பாடு

பா வ - தீ கி - கீ தி - வா ப.

இலக்கம்: 16 to 9

3. துருவாத்துருவ சக்கரம்

ப. 9	க. 6	வ. 15	த. 4
பா. 16	கா. 3	வா. 10	தா. 5
பி. 7	கி. 13	வி. 8	தி. 11
பீ. 7	கீ. 12	வீ. 1	தீ. 14

8. மாரணம்

ப.	க. சு.	வ.	த. சு.
	நு.		ரு.
(?)		அ.	
(?)		க.	

செ - அ - நூ - சு.

பரிவுறல்=பரித்தல்-தாங்குதல். துருவம்-துருவ அறைகள். பதித்து-வரைந்து. கரு=காரணம்-நிமித்தம். இலக்கு எட்டில்-அத்துருவ அறைகள் எட்டில். கருமம்-எண்வகை வினை. இலக்கம் அவற்றின் இலக்கங்கள். நெறி-செம்மை. அன்பத்தொன்று-அகர முதல், க்ஷகரம் ஈறாகவுள்ள 51-எழுத்துக்கள்.

முன்னர், எண்வகை வினைகளுக்கும் சொல்லப்பட்டுள்ள வாய்பாடுகளின்படியே, துருவ அறை எட்டிலும் 1-முதல் 8-வரையுள்ள எண்களை முறையே அடைத்துக் கொள்க. பின்னர், வேண்டுங் கருமத்துக்குரிய இலக்கத்தைச் செம்பாதியாக்கி, அதனில் ஒன்றை நீக்கி, ஒவ்வொன்று குறைத்து, அத்துருவ அறைகள் எட்டிலும் முறையே அடைத்துக் கொள்க. இனி, 51-எழுத்துக்களையும் துருவம், அத்துருவமாகிய 16-அறைகளில் அடைப்பதற்குரிய விதிமேற்சொல்லப்படும் என்பதாம். 13-ஆம் செய்யுள் முதல், இச்செய்யுள் வரை சொல்லப்பட்டுள்ள அட்டகன்மத் துருவ சூத்திரங்களின் விளக்கங்களை, அவ்வச் சக்கரங்களிற் கண்டு கொள்க.

துருவ அறை-8

22. அகாரமாம் ஒன்றில் இகாரமா மிரண்டில்
உகாரமாம் மூன்றில் ருகாரமாம் நான்கில்
லுகாரமாம் ஐந்தில் எகாரமாம் ஆறில்
ஒகாரமாம் ஏழில் ஒழிந்தஐ எட்டிலே.

பாட பேதம்

(இவ்வெழுத்துக்கள், சில சுவடிகளில் கீழ்க்காணுமாறு வடமொழிக் கிரந்த எழுத்தின் வரி வடிவில் காணப்படுகின்றன.)

1. அ காரமாம்; அகரமாம் ஊகாரமாம், ஒகாரமாம் இகரமாம். ரெண்டில்; இரண்டில்.

2. உகரமாம். ருகரமாம்; ஐகாரமாம், ரிகாரமாம் நாவில். நாலாகும். ருகார நாலாகும்.

3. ஓுகரமாம்: ஏ॰ கொரமாம் ஐஞ்சில். எகரமாம்; ஒுளகாராமம்; எகாரம் ஆறாகும்.

4. ஒகரமாம். ஒழிந்தசம்; ஒழிந்தவம். ஒழிந்த அம்; ஒழிந்தம்ம; ஒழிந்ததம்; ஒழிந்த எட்டிலே; எட்டே

குறிப்பு :

இச்செய்யுள், 14-ஆம் எண் இட்ட சுவடியில் இல்லை. அதில் காணப்படும் செய்யுள்:—

மகாரம் நடுவாய் வளர்ந்திடு சக்தி
உகாரம் பிளந்து உள்வளைத் தேத்தி
அகாரந் தழையாய் இருக்குஞ் சிகாரமாய்
நகாரம் வகாரம் இருகாது நாடுமே.—என்பதாம்.

1. மகாரம் நடுவே வளைத்திடு சத்தியை; வளைந்திடுஞ் சத்தியை.

2. ஒகாரம் வளைத்திட்; உகாரம் வளைதிட். டும்பிளந் தேற்றி; வளைத்திட்டேபிளந்; வளைத்திட்டுட் பிளந்தேறி.

3. யகாரந் தலையாய் இருகண் சிகாரமாய்.

4. நகார வகாரநற் காலது நாடுமே; நகார மகார மிருகாது; நகார வகாரம் நற்காது நாடுமே. (ஊகம்)

மகார நடுவே வளைத்திடுஞ் சத்தியை
ஒகாரம் வளைத்திட் டும்பிளந் தேற்றி
அகாரந் தலையாய் இருகண் சிகாரமாய்
நகார வகாரநற் காலது நாடுமே: —திருமந்திரம்921

என்பதும் ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கது.

சுவடி 11, அகாரம், க-ல்; இகாரம், உ-ல்; உகாரம், ங-ல்; எகாரம், ச-ல்; ஐகாரம், ரு-ல்; ஒகாரம், சா-ல்;

ஔகாரம், எ-ல்; ஒழிந்த எட்டிலே, க௦. இதின் மேலிடும் படிக்குத் துருவம். என்பது காணப்படுகின்றது.

குறிப்புரை

இம்மந்திரம், சக்கரத்தின் துருவ் அறை எட்டிலும் அடைக்கவேண்டிய எழுத்துக்களை உணர்த்துகின்றது.

ஒன்றில்-ஒன்று ஆம் இலக்கம் இட்ட அறையில். எட்டில்-எட்டு ஆம் இலக்கம் இட்ட அறையில்; பிறவும் அன்ன. அகாரம் ஆம்-அகர எழுத்து வரையத்தக்கது ஆகும். ஐ-ஐ என்னும் எழுத்து. எட்டில்-எட்டு ·ஆம் இலக்கமிட்ட அறையில் வரையத்தக்கது ஆகும். பிறவற்றுக் கும் இவ்வாறே கொள்க.

இயந்திரத்தில் 1-முதல் 8-வரையுள்ள எண்கள் இடப் பட்ட துருவ அறைகள் எட்டிலும், முறையே எடுத்தோதப் பட்டனவாகிய அகரம் முதல், ஐகாரம் ஈறாகவுள்ள எட்டு எழுத்துக்களையும் வரைக என்பதாம்.

எனவே, துருவ அறை எட்டிலும் நிற்கும் எழுத்துக்கள் எடுத்துச் சொல்லப்பட்டனவாயுள்ள குற்றெழுத்துக்கள் 8-ம் என்பதாயிற்று.

அம்முத லாகிய எட்டிடை உற்றிட்டு.

—திருமந்திரம் 996

என்பதுங் காண்க.

இம் மந்திரம் முதலாகத் தொடர்ந்து வரும் சில செய்யுட்களின் மூலபாடமும், பொருளும் தெளிவாக இல்லை. பாட பேதங்களும் பலவாகக் காணப்படுகின்றன. ஆதலின், தெளிவாய் நன்குவிளங்கியவற்றிற்கே குறிப்புரை யில் விளக்கம் வரையப்பட்டுள்ளன.

இதுவும் அது

அத்துருவ அறை-8

23. எட்டிலக் கவறை ஆமுதல் ஔவீறாக்
கட்டுங் கலைபதி னாறுங் கருத்தொக்க
ஒட்டுந் துருவத்தில் ஒருநான்கு கவ்வும்
நட்டுஞ் சகாரநால் ஙஞ்ஞவ் விலக்கே.

பாட பேதம்

1. எட்டிலக் கவ்வரை; எட்டிலக்கவரை; எட்டு மிலக்க மறைமுதலவ்விறுதி; இட்டு மிலக்கம் அகார மிறுதியில்; எட்டு மிலக்கவறை. அமுதல் அம்மிறுதி; அம்முதல் அகவிருதி; ஆமுதல் அவ்விறுதி; அம்முதல் அ: இறுதி; அo முதல் அ: விறுதி; அ அ: இறுதியில்.

2. கலைகள் பதினாறுங். கருத்தொக்கத்.

3. ஒட்டுந் துருவத் தொருநாலுங் ஙவ்வும்; ஒட்டுந் துருவமொரு நாலும் சவுமேல்; எட்டுந் துருவத் தொருநாலு கங்ஙவ்வும்; எட்டுத் துருவத்திடும் உ கன்னாலும் ஙவ்விலங்; தொட்டதுருவத் தொருநாலில் ஙவ்விட்டு; தொட்டது துருவம்பத் தொருநாலில் ஙவ்விட்டு; தொட்ட துருவமத் தொருநாலில் ஙவ்விட்டு; தொட்ட துருவத் தொருநாலில் ஙவ்விட்டு; தொட்டது துருமத் தொருநாலில் ஙவ்விட்டு; துருவமற் றொருநாலு கங்ஙவ்வும்.

4. கிட்டு சகரனால் ஞவ்விலக் காகவே; நட்டுஞ் சகார நால் ஞவ்விலக்காமே; ஞவ்விலக்காகவே; ஞவ்விலக்காகுமே. சகாரம் ஞவ்விலக்காகவே; சகாரம் நால் ஞவுமிலக்காலே; சகாரம் நாலுஞ் சவ்வாமே; சக்கரம் நஞுவிலக்காகவே.

குறிப்புரை

இம்மந்திரம், அத்துருவம், துருவம் ஆகிய இரண்டிலும் அடைத்தற்குரிய எழுத்துக்களை உணர்த்துகின்றது.

எட்டு இலக்க அறை=இலக்க அறை எட்டு - இலக்கங்களை இடுவதற்கு இடனாயுள்ள அத்துருவ அறைகள் 8. ஆமுதல், ஔவீறா-ஆமுதல், அ:-இறுதியாக உள்ள எழுத்துக்கள் 8. அவை; 1) ஆ (2) ஈ (3) ஊ (4) ரூ (5) லூ (6) ஏ (7) ஓ (8) ஔ. என்பன. கட்டுதல் - கட்டங்களில் அடைத்தல். கலை=மெய்-உடம்பு. கலையிலாளன் காமர் வேனிலொடு :-சிலப் 10 : 28. அஃது ஆகுபெயரான் உயிரைக் குறித்தது. கலை பதினாறும்-எடுத்துக் கூறப்பட்ட அமுதல், ஔவீறாகவுள்ள உயிர் எழுத்துக்கள் 16-ம். கருத்து ஒக்க-கவனமாகப் பொருந்த. ஒட்டும் துருவத்தில்-எண்ணும், எழுத்தும் இணைந்துள்ள துருவ அறை எட்டிலும். ஒரு நான்கு கவ்வும்=கவ்வினம்-கவ்வர்க்கஎழுத்துக்கள் 4-ம். அவை: க, 𑌖, 𑌗, 𑌘 -என்பன. நடுதல்-நிறுவுதல். சகாரம் நால்=சவ்வருக்கம்-சவ்வினம் நான்கு. அவை: ச, 𑌛, ஜ, 𑌝 என்பன. ங ஞ விலக்கு-ஙகரமும், ஞகரமும் விலக்கத் தக்கனவாம்.

ஒன்று முதல் எட்டுவரையுள்ள எண்களும், அகரம் முதல் ஐகாரம் வரையுள்ள எட்டு குற்றெழுத்துக்களும் இடப்பட்டுள்ள துருவ அறைகள் எட்டிலும் கவ்வினம் 4-ம், சவ்வினம் 4-ம், ஆகிய 8-எழுத்துக்களும் முறையே நிற்கும். இனி, அத்துருவ அறைகள் 8-ல் ஆ-முதல் ஔ ஈறாகவுள்ள நெட்டெழுத்துக்கள் 8-ம் முறையே நிற்கும். எனவே அறைகள் 16-ல் துருவ அறையில் குறில் 8-ம், அத்துருவ அறையில் நெடில் 8-ம் ஆக உயிர் எழுத்துக்கள் 16-ம் நிற்கும் என்பதாயிற்று.

மேற்கோள்

வித்தாஞ் செகமய மாக வரைகீறி
நத்தார் கலைகள் பதினாறும் நாட்டிப்பின்.

—*திருமந்திரம்* 991

என்பதும் நோக்க.

இதுவும் அது

24. இலக்கத்துட் டந்நால் ணகாரந் தந்நாலும்
நலக்கு மிறுதியில் நந்நிற்க மீண்டும்
சொலப்பதி னாறத் துருவம் தெட்டில்
இலக்கும் க்ஷகாரம் முதலவ் விறுதியே.

பாட பேதம்

1. இலக்கத்துடனாலும் ணகாரந்தானாலும்; இலக்கத்துட்டவ்வால் ணகாரந்தன்னாலும்; இலக்கத்துட்டான்னாலு ணகாரந்தன் னாலும்; இலக்கத்துட்டவ்வாலும் ணகாரந் தன்னாலும; இலக்கத்துடனாலும் ணகாரந்தான் நாலும்; இலக்கத்தொட்டவ்வால் ணகாரந்தன்னாலும்; தான் நாலும்; தாநாலும்.

2. நலக்க மிறுதியின்னிற்க; நலக்கமிறுதியில் நன்னிக பின்னிடுஞ்; நலக்க மிறுதியில் நிற்க மீண்டும்; நலக்கு மிறுதி யில் நமனிற்ற; நழனிற்க மீண்டும்; ஞலக்கு. நன்னிற்க.

3. சொலத்தக்க பன்னாறி லத்துருவ மெட்டில்; பன்னாறி லத்துருவம் தெட்டில்; பதினாறி லத்துவருவ மெட்டில்; பதினாறில் துருவம தெட்டில்; பன்னாறுந் தோன்று மகாரம்; பன்னாறில் துருவத் தடைவே; பன்னாலுந் தோன்று மகாரம்.

4. இலக்கும் க்ஷகாரம் முதலவ் விறுதியே; இலக்கும் க்ஷகாரம் முதல் வவ்விறுதியே; இலக்க க்ஷகார முதலவ் விறுதியே; விலக்ஷகாரம் முதலவ் விறுதியே; விலக்கம் யகாரம் மாயிறுதி யெட்டே; மலைக்கும் யகாரம் ரகார மறுதியே; மலக்கா ரலகூடி மூலநவ் வுறுதியே; விலக்கும் க்ஷகாரம்.

குறிப்புரை

இம்மந்திரம், அத்துருவ அறை எட்டில் அடைக்கப் படும் மெய்யெழுத்துக்களை உணர்த்துகின்றது.

இலக்கம்-அத்துருவ இலக்கங்கள், டந்நால் = டநால்-டவ்வர்க்கம்-டவ்வினம் 4. அவை: ட, ெ, ஞ, ஒ, என்பன. தந்நாலு = தவ்வர்க்கம்-தவ்வினம், 4. அவை: த, ழ, ஃ, ழ என்பன. நலக்கல் = நலத்தல்-நலமாதல். "நல்க்க அடி யோமை ஆண்டுகொண்டு" திருவாசகம், 200. இறுதி யில்-அத்துருவ அறையின் ஈற்றில். நந்நிற்க - நகரம் நிலை பெற. பதினாறு - 16 அறை. அ துருவம்-அந்தத் துருவ அறைகள். இலக்கும் = இலங்கும் - விளங்கும். க்ஷகாரம் - 51-ஆம் மெய்யெழுத்து. முதல்-முதலறையில். அ இறுதி - அகரத்தின் ஈற்றிற் பதிக்க என்பதாம்.

இதுவும் அது

25. இறுதியாம் அத்துரு வத்து ரம்முதல்
உறுவது நவ்வந்தம் ஒதிய விட்டு
பெறுதியில் அம்முதல் பேசும்க்ஷவ் வீறாய்
அறிவ தெழுத்தைம்பத் தொன்றுமங் கானதே.

பாட பேதம்

1. இறுதிய தாமத் துருவத்து ரம்முதல், இறுதியாம் அத்துருவத்துளம் முதல், இறுதியி லக்கரத் தரவென்று நின்ற, அறுதியிலக்கத்தர வென்று நின்ற நின்றது, அத்துருவத்து லம்முதல், அத் துருவத்துளம்முத்.

2. உறுவது னலத்து மொத்திவை, உறுவது நாலத்தி மொத்திவை4 துறுவது, உருவந் தெட்டாதி யொன்றிறுதியாகப், துருவந் தெ(தொ)ட், துருவமெட்டாதி ஒன்(றி)றுதியாக, துருவந்(த்) தெட்டாதி ஒன்றிறுதியாகப், உறுவது நாவத்து மொத்திவையிட்டு, துருவந்தெட்டாதி யொன்றி றுதியாகப்.

3. பெறுதியி லம்முதற் பேசுஞ் க்ஷவ்வீறாம், லம்முதற் பேசுஞ் கெக்ஷளவ்வீறாம், பேசுங் க்ஷவ், லமுதற் பேச்சுமக்கூட்டி, மமுதல், வீறா.

4. தெழுத்தன்பத்; அறிவ தைம்பத்தொன்று மங்கானதே.

1—4 (சுவடி : 8)

இறுதியி லெக்கத் தரவென்று நின்ற
துருவந்தொட்டாதி யொன்றிறுதி யாகப்
பெறுதியில் ஆனது ஙவ்வவு சகாரம்
இறுதியி லானது ணவ்வாங் மகார.

பெறுதியி லம்முதல் பேசும். கு ஷ ள (க்ஷ) வீ (றா) ராமறிவதே.

அறிவ தைம்பத் தொன்று மங்கானதே.

(சுவடி , 12)

(ஆனது) (ஙவ்வுங்) அறுதி யிலக்கத் தரவென்று நின்ற
துருவந்(த்) தெட்டாதி யொன்றி றுதியாகப்
பெறுதியிலம் முதற் பேசும்க்ஷவ் வீறா
மறிவ தெழுத்தைம்பத் தொன்றுமங் கானதே.

குறிப்புரை

இம் மந்திரம், இயந்திரத்தில் உள்ள 16 - அறைகளில் 51-எழுத்துக்களும் அடங்கி நிற்கும் முறையை உணர்த்துகின்றது.

அத்துருவத்து - அத்துருவ அறைகள் 8 - ல். ரம்முதல் நவ்வந்தம்-ரகரம் முதல் நகரம் இறுதியாகவுள்ள ஏனைய எழுத்துக்கள்-8. அவை: ர, ய, ம, ஹ, வ ம வ ந என்பன அந்தம்-முடிவு. ஓதிய இட்டு-சொல்லப்பட்ட எழுத்துக்களை இட்டு. பெறுதி - அடையப்பட்ட பொருள். அம்முதல் க்ஷவ்விறாய் - அகரம் முதல் க்ஷகரம் ஈறாக. எழுத்து ஐம்பத்

தொன்று-வடமொழியில் உள்ள உயிர் 16-ம், மெய் 35-ம் ஆகிய எழுத்துக்கள் 51.

இவ்வாறு 16 - அறையுள்ள இவ்வியந்திரத்தில் அகர முதல் க்ஷகரம் ஈறாயுள்ள எழுத்துக்கள் 51-ம் பொருந்தி நிற்கும் என்பதாம்.

மேற்கோள்

அடைவினில் ஐம்பதும் ஐயைந் தறையில்
அடையும் அறையொன்றுக் கிரெழுத் தா(க்)கி
அடையும் அகாரத்தில் அந்தமாம் க்ஷவ்வும்
அடைவின் எழுத்தைம்பத் தொன்றும் அமர்ந்ததே.
—திருமந்திரம் 924

ஆகின்ற சக்கரத் துள்ளே எழுத்தஞ்சும்
பாகொன்றி நின்ற பதங்களில் வர்த்திக்கும்
ஆகின்ற ஐம்பத் தோரெழுத் துள்நிற்கப்
பாகொன்றி நிற்கும் பராபரன் தானே. —945

ஐம்ப தெழுத்தே அனைத்துவே தங்களும்
ஐம்ப தெழுத்தே அனைத்தாக மங்களும்
ஐம்ப தெழுத்தின் அடைவை யறிந்தபின்
ஐம்ப தெழுத்தும்போய் அஞ்செழுத் தாமே. —965

மெய்த்தகு வன்னம்ஐம் பானொன்று —2184

அகார முதலாக ஐம்பத்தொன் றாகி...
நகார முதலாகும் நந்திதன் நாமமே. —2699

ஐம்ப தெழுத்தே அனந்தா கமங்களும்
ஐம்ப தெழுத்தே அண்டமும் பிண்டமும்
ஐம்ப தெழுத்தை அறிவால் அறிந்தபின்
ஐம்ப தெழுத்தும் அஞ்செழுத் தாகுமே.
—தத்துவ தீபிகை மேற்

ஓதும் எழுத்தோ டுயிர்க்கலை மூவைஞ்சில்
ஆதி எழுத்தவை ஐயம்பதோ டொன்றென்பர்
சோதி எழுத்தினில் ஐயிரு மூன்றுள
நாத எழுத்திட்டு நாடிக்கொள் ளீரே. —963

(சோதி எழுத்து - தெய்வச் செந்தமிழ் எழுத்து. ஐயிரு மூன்று-30 (ஐ-ஐந்து. இரு மூன்று-ஆறு.. ஐந்தாறு-30) நாத எழுத்து-(எடுத்தும், படுத்தும், நலிந்தும் கூறும் வேறுபாடுகளாற் பிறக்கும்) ஒலி எழுத்துக்கள். எழுத்தெனப்படுப-அகரமுதல் னகர இறுவாய்-முப்பஃதென்ப.

—தொல்காப்பியம் 1

இதுவும் அது

26. ஆனது ஙவ்வுங் ககார விறுதியில்
ஆனது ஞவ்வுஞ் சகார விறுதியில்
ஆனது ணவ்வுந் டகார விறுதியில்
போனசுன் மூன்றும் பொருளெழுத் தாமே.

பாட பேதம்

1. ஙவ்வுஙகார, ஙவ்வுங்கார, சவ்வுமகார, வவ்வுங் ககார இறுதியில், இறுதியிற்.

2. போனது. ஙவ்வுஞ் சகார விறுதியில், சக்கரவிறுதியில்.

3. ஆனது ணவுணட டகார விறுதியிற், ஆனது ணவ்வும் டக்கர விறுதியில்.

4. போனதன் மூன்றும், போனது மூன்றும் பொரு மெழுத்தாமே, எழுத்தாகிய, எழுத்தாதியே,

குறிப்புரை

இம்மந்திரம், 51-எழுத்துக்களுள் இந்த இயந்திரத்தில் இடம் பெறாத எழுத்துக்களை உணர்த்துகின்றது.

கவர்க்கம், சவர்க்கம், டவர்க்கம் ஆகிய இவற்றின் முடிவில் முறையே நிற்கும் ஙகரம். ஞகரம், ணகரம் ஆகிய சுன்னெழுத் துக்கள் மூன்றும் இவ்வியந்திரத்தில் விலக்கத்தக்கன என்பதாம்.

ஙகாரதி - சுன்மூன்றும் - நீக்கி
—கண்ணுடைய வள்ளல் - பஞ்சாக்கரமாலை

சுன் - சுன்னம் - சூனியம் - வெறுமை. - சுழி பூச்சியம் - 0. சுன் மூன்று-ஙகரம், ஞகரம். ணகரம் ஆகிய 3 – எழுத்துக்கள். எனவே, .51 - எழுத்துக்களுள் இவை 3-ம் நீங்கலாகவுள்ள ஏனைய எழுத்துக்கள் 48-ம் அறை ஒன்றுக்கு 3-எழுத்துக்களாகப் 16-அறைகளிலும் மேலே கூறியவாறு விரவி நிற்கும் என்ப தாயிற்று.

மேற்கோள்

எண்ணும் எழுத்தும்

எண்ணானாய் எழுத்தானாய் எழுத்தினுக்கோர் இயல்
பானாய்.
—தேவாரம் 4288

எண்ணும் எழுத்துங் குறியும் அறிபவர் — 5026

எண்ணானாய் எழுத்தானாய் கடலேழ் ஆனாய் — 6364

எண்ணவன்காண் எழுத்தவன்காண் — 6728

எண்ணும் எழுத்தும் சொல் ஆனாய் போற்றி — 6800

என்னடானே எழுத்தோடு சொற்பொருள் எல்லா
முன் கண்டானே. 8205

எண்ணும் எழுத்தும் இனஞ்செயல் அவ்வழி.
—திருமந்திரம் 3041

எண்ணெழுத்தைக் கைப்பற்றிக் கொண்டு நீதான்
இருந்துவிளை யாடுவாய் அட்ட சித்தும்
ஆத்திச்சூடி - ஞானம்

என்னுந் திருவாக்குகளும் ஈண்டுக் கருதத்தக்கன. இவற்றால் ஈண்டுக் குறிக்கப்பட்டனவாயுள்ள எண்களும், எழுத்துக்களும் உமையொரு பாகனை யுணர்த்தும் திருவருட் குறியாம் என்பவற்றையும் உணர்ந்து கொள்க.

அதி.5 - இயந்திர மந்திர பீசங்கள்.

27. ஆதியாய் நின்ற அறையின் இலக்கத்தைச்
சோதியாய் நின்றதோர் சத்தியாற் சூழ்ந்திட்டு
ஏதமாய் நின்ற எழுத்துக்கள் தானெல்லாம்
வேதமாய் நின்ற விந்து கொடுப்பதே.

பாட பேதம்

1. ஆதியாய் நின்றவம் மாயினிலக்கத்தை; நின்றதோர் அறையின்; நின்றுறையின்; அறையில் லக்கத்தை; வரையின். இலக்கத்தைப்.

2. சாதியாய் நின்ற பெருஞ் சத்திசூழ்ந்திட்டு சாதியா நின்றதோர் சத்திசூழ்ந்திட்டு; பேதியாய் நின்றதோர் சத்தியாற்; பெரும் சத்தியாற் போக்கி; சத்தியைச் சூழ்ந்திட்டு; சத்தியாய்ச் சூழ்ந்திட்டு; ஆதியாய் நின்றதோர் சத்தியால்.

3. ஓதமாய் நின்ற. எழுத்துக்கட்கெல்லாம்; எழுத்துள்ளதற் கெல்லாம்; எழுத்துள்ளதாலே.

4. ஓதிய வுண்மைக்கு விந்து. நின்றொரு; நின்றதொரு; நின்றதோர் விந்து; வித்துக். கொடுக்கவே; கொடுப்பது.

குறிப்புரை

இம்மந்திரம், இயந்திர அறைகளில் வரையப்பட்டுள்ள எண்களுக்கும், எழுத்துக்களுக்கும் ஆவதோர் சிறப்பு விதி உணர்த்துகின்றது.

ஆதி = மூலம் - முதன்மை - காரணம். அறை - துருவ, அத்துருவ அறைகள். ஆதி அறை = முதற்கண் உள்ள

அறை - துருவ அறை என்றுமாம். சோதி - ஒளி. சத்தியால் - சத்தி எழுத்தாலே. சூழ்ந்திட்டு = சூழ்ந்து - வளைத்து - கட்டி. ஏதம் - குற்றம்; மாயையின் காரியமாகலான். எழுத்துக்கள் (தான்) எல்லாம் - எல்லா எழுத்துக்களுக்கும். வேதம் = அறிவு - ஞானம்; விந்துவுக்கு அடை. விந்து = சுத்தமாயை (சித்தி) புள்ளி (உரி - நி) - வட்டம் (நாமதீப). விந்து - சிவவடிவம்; சத்தியாற் சூழப்படுங்கோடு, நாதவடிவம் ஆகலான், அது சத்தி வடிவமாம். சத்தி எழுத்து ரீங்காரம். அதனாற் சூழ்தல் - அந்த எழுத்தால் கட்டி வளைத்தல் விந்து கொடுத்தல் - புள்ளி யிடுதல்; o.

இயந்திரத்தில் உள்ள அறைகளில் பதிக்கப்பட்ட இலக்கங்களை ரீங்காரத்தால் வளைத்துக் கட்டி, அவ்வறைகளில் நிற்கும் எல்லா எழுத்துக்களுக்கும் பக்கத்தில் புள்ளிவட்டம் இடுக என்பதாகும்.

மேற்கோள்

தாவில் ரீங்காரத்தாற் சக்கரஞ் சூழ்ந்து
பூவைப் புவனா பதியைப்பின் பூசியே.
—திருமந்திரம் 1314

விந்துவி லுஞ்சுழி நாதம் எழுந்திடப்
பந்தத் தலைவி பதினாறு கலையதாய்க்
கந்தர வாய்கரங் காலுடன் பாயினாள்
அந்தமும் இன்றி ஐம்பத்தொன் றாயதே. — 964

மேல்வரும் விந்துவும் மவ்வெழுத் தாய்விடும். — 1258

ஞாலம தாயிடும் விந்துவும் நாதமும். — 1259

விரிந்த எழுத்தது விந்துவும் நாதமும்
விரிந்த எழுத்தது சக்கர மாக. — 1260

நின்றிடும் விந்துவென் றுள்ள எழுத்தெல்லாம்
நின்றிடும் நாதமும் ஓங்கும் எழுத்துடன். — 1271

விளைந்த எழுத்தது விந்துவும் நாதமும்
விளைந்த எழுத்தது சக்கர மாக
விளைந்த எழுந்தவை மெய்யினுள் நிற்கும்
விளைந்த எழுத்தவை மந்திரம் ஆமே. — 1281

சுத்த மாயை, மாமாயை, குடிலை, குண்டலி, விந்து என்பன ஒருபொருட்கிளவி:— சிவஞானபாடியம்.

இதுவும் அது

28. கொடுப்ப தறைநடுக் கோணமா றாக
எடுத்தவக் கோண நடுவே கிலீயென்
றெடுத்த கிலீயை ரீங்காரத் தாற்கட்டி
கடுத்தறு கோணங்கள் காமபீ சம்மிடே.

பாட பேதம்

1. கொடுப்ப தரைநடு, தரைநாடு, தறைந்திடு, தறிந்திடு, தறை நடுவே, தறிந்திடு நடுவே அறுகோணம், தறிந்திடு கோண மாறாக, கோணமதாறாய்.

2. நடுவே, நடுவில், நடுக்கிலீ என்னும், கிலி, எனும்.

3. கிலியை. ரீங்காரங் கட்டி ஹ்ரீங்காரங், றீங்காரங் ஓங்காரமாக ரீங்காரமாக. கட்டிக், கூட்டிக்.

4. கடுத்தவறு கோணங்கள், கடுத்தவறு கோணங், கடுத் துறு கோணத்துள், கோணத்தில் காம வீசமிடே, காமபீசமிட்டே, காமவீ சம்மிடே, காம பீஜம்மிடே, பீஜமிடே, காமனெழுத்திடே.

குறிப்புரை

இம்மந்திரம், இயந்திரத்தில் உள்ள 16-வீடுகளின் நடுவே வரையத்தக்க கோணத்தையும், பீசத்தையும் உணர்த்துகின்றது.

அறை நடு = நடு அறை - நடுவில் உள்ள 4 - அறைகளில் கோணம் ஆறு ஆக - ஆறு கோணம் ஆக - அறுகோணம் அமையும்

படியாக வரைந்து. எடுத்தல் = எழுப்புதல் - வரைதல். கட்டி - சூழ வளைத்து. கடுத்தல் - ஒத்தல், அவிர் அறல் கடுக்கும் அம்மென் கூந்தல்:— புறநா. 25: 13. காமபீசம் - கிலீங்காரம், க்லீங்காரம் காம ஜம்ஸ்யாத்:— ஆகமம்.

பதினாறு பதங்கள் உள்ள இவ்வியந்திரத்தின் நடுவேயுள்ள 4 - அறைகளின் இடையே அமைய அறுகோணம் வரைக. அவற்றின் நடுவில் கிலீம் என்னும் பீசம் இட்டு, அப்பீசத்தை ரீங்காரத்தாற் கட்டி வளைக்க. அறு கோணங்களைச் சூழ கிலீம் பீசம் இடுக என்பதாம்.

மேற்கோள்

ரீங்காரத் துள்ளே இனிதிருந் தாளே.
—திருமந்திரம் 1074

நவாக்கரி யக்கிலீயுஞ் சௌமுத வீறே. — 1319

நினைத்திடு மச்சிரீ மக்கிலீ மீறா. — 1324

இதுவும் அது

29. **இடுவ துருவத் தரவென்று சொல்லி**
இடுவ திலக்கத் தரியென் றிசைய
இடுவ தசபை துருவத்தில் நிற்க
இடுவசோ கங்கென் றிலக்கத் தினிலிடே.

பாட பேதம்

1. இடுவது துருவத் ; இடுவதுருவத்தரவ்வென்று, இடுவ துருவத்தா தாவென்று.

2. இடுவது லெக்கத், இடுவது லக்கத்.

3. விடுவநசவை துருவத்துணிற்க, விடுவது தசைவை துருவத்து நிற்க, துருவத்தினிற்க.

4. விடுவது மங்கென் றிலக்கத்தில் லெட்டே, விடுவது மங்கென்று இலக்கத்தில் எட்டே, விடுவது அங்ஙென்றிலக்கவறை யெட்டே, விடுவதம் மென்று லெக்கத்திலிட்டே, இடுவது சோகங் கென்று லக்கத்தெட்டே, இடுவது மங்கென்றிலக்கத் தினிலெட்டே, றிலக்கத்தினிலொட்டே.

குறிப்புரை

இச்செய்யுள், இயந்திரத்தில் எழுதவேண்டிய மந்திரங்களை உணர்த்துகின்றது.

துருவம் - துருவ அறை 8. அர = அர - ஹர என்னும் மந்திரம். இலக்கம் - அத்துருவ அறை 8. அரி = அரி - ஹரி என்னும் மந்திரம். இசைதல் — பொருந்துதல். அசபை = அசபாமந்திரம் – அம்சமந்திரம். ஹம்ஸம் என்பது சோகம் – ஸோ'ஹம் என்னும் மந்திரம். துருவ அறையை எடுத்தோதி யதனால், இலக்கம் என்பது, வேண்டுங் கருமத்தின் இலக்கத்தை இடுவதற்கு இடனாயுள்ள ஏனைய அத்துருவ அறைகள் என்று பெறப்பட்டது.

துருவ அறைகள் எட்டிலும் அர, அம்சம் என்னும் மந்திரங் களையும், அத்துருவ அறைகள் எட்டிலும் அரி சோகம் என்னும் மந்திரங்களையும் முறையே வரைக என்பதாம்.

மேற்கோள்

அமர்ந்த அரகர வாம்புற வட்டம்
அமர்ந்த அரிகரி யாகுமுள் வட்டம்
அமர்ந்த அசபை யாமத னுள்வட்டம்
அமர்ந்த விரேகையும் ஆகின்ற சூலமே.

—திருமந்திரம் 925

அரகர என்ன அரியதொன் றில்லை
அரகர என்ன அறிகிலர் மாந்தர்
அரகர என்ன அமரரும் ஆவர்
அரகர என்னவே அறும்பிறப் பன்றே. — 916

அவ்வொடு சவ்வென்ற தரனுற்ற மந்திரம்
அவ்வொடு சவ்வென்ற தாரும் அறிகிலர்
அவ்வொடு சவ்வென்ற தாரும் அறிந்தபின்
அவ்வொடு சவ்வும் அனாதியாகுமே. — 957

சேவிக்கு மந்திரஞ் செல்லுந் திசைபெற
ஆவிக்குள் மந்திரம் ஆதாரம் ஆவன
பூவுக்குள் மந்திரம் போக்கற நோக்கிடில்
ஆவிக்குள் மந்திரம் அங்குசம் ஆமே. — 959

அங்குதி மந்திரம் ஆகுதி யாமே. — 961

அங்குசம் என்ன எழுமார்க்கம் போதத்தில். — 2735

அகரம், உகரம், மகரம், விந்து, நாதம் என்னும் இவை 5-ம் முறையே அகங்காரம், புத்தி, மனம், சித்தம் ஆகிய கருவிகளையும், உயிரினையும் இயக்கும் சூக்கும பஞ்சாக்கரம் ஆகும். இவற்றைப் பகுக்காது ஆயிராயின் பிரணவமாகும். இப்பிரணவம் தூலபஞ்சாக்கரமாம், கருவிகளையும் உயிரினையும் இயக்கும் சூக்கும பஞ்சாக்கரம். அசபையாய்ப் பரிணமித்து உயிர்வளியை அடக்கியும், விட்டும் நின்று உணர்த்தும்; அதனாலே கணந்தோறும் நினைப்பும், மறப்புமாகிய சகல கேவலங்கள் மாறி மாறி நிகழும். சூக்கும பஞ்சாக்கரத்தின் பரிணாமமாகிய அசபை அயன், மால் உருத்திரன், மகேசன், சதாசிவனாகிய அதிதெய்வங்களைப்பற்றி, ஒரோவொன்று மும்மூன்றாய் மீள மீள மாறி, ஒரோவொன்றாய்ப் பரிணமித்து, இடையிடையே அறுவகைச் சூனியங்களுடைய 12-கலைப் பிரசாதமாகும். இங்ஙனமாகலின்; சூக்கும பஞ்சாக்கரம், தூல பஞ்சாக்கரம். அசபை, பிராசாதம் என்பன தம்மின் வேறல்ல என்க. இவற்றின் விரிவெல்லாம் சிவாகமங்களுட் காண்க; ஈண்டு உரைப்பிற் பெருகும்.

—சிவாஞானபாடியம்

இதுவும் அது

30. இட்ட துருவத் திசைசங்க பற்பமும்
பட்ட இலக்கத்திற் பாசாங் குசங்களும்
நட்ட நடுவறை நாலும் புவனையாம்
கட்டங் கலப்பை சுவத்திகம் ஆமே.

பாட பேதம்

1. எட்டுத் துருவத், எட்டுந் துருவத். திசைசங் கற்பமும், திசைசங்க பத்மமும், திசைந்த சபமும், எட்டுத் துருவத்தி லிசைந்த இருநிதி.

2. பட்டகி லக்கத்திற். பாசாங் குசமும், பாசாங் குசங்கம்.

3. நடுவீட்டை. நாலு, நாடும். புவனையாய்.

4. கட்கங், கட்டுங். சுவஸ்திகம், சொத்திகம், சுவலை கள் ஆகுமே.

குறிப்புரை

இம் மந்திரம், இயந்திரத்தில் இடவேண்டும் பீசமும், வடிவெழுத்தும் உணர்த்துகின்றது.

இசை = சொல்-புகழ். இசைதல் - இணைதல் - பொருந்துதல். சங்க பற்பம் = சங்கமும், பத்மமும்-சங்கநிதியும், பத்மநிதியும் ஆகியவற்றின் பீசங்கள், உம்மைத் தொகை. சங்கும், தாமரையும் ஆகியவற்றைக் கையில் ஏந்தி நிற்றலின் இப்பெயர் பெற்றன. "சங்கின் வடிவினது சங்க நிதியே" "தாமரை வடிவினது பதும நிதியே"–திவாகரம் "சங்கநிதி பதுமநிதி இரண்டுந் தந்து"—தேவாரம் 7182 "இந்நிதிகள் 2-ம் இறைவி கோட்டத்தின் வாயிற் காவலர்கள். சிவாலயங்களில் அமைக்கப்பெற்றிருக்கும் வாயிற் காவலர்களைச் சங்கநிதி, பத்மநிதி என்றே கூறுவர். இதனை விளக்கச் சில சிவ தலங்களில் அவ்விருவர்

உருவங்களையும் சூழச்சங்கம், பதுமம் என்பவற்றின் உருவங்கள் முறையே அமைக்கப்பெற்றிருத்தலைக் காணலாம்''-தக்க. 73 விடசேக் குறிப்பு. ''சங்கநிதி-கோதி கோடி பொன். பதுமநிதி-கோடி கோடி கோடி கோடி கோடி பொன். இவை எண்ணால் எய்திய பெயர்கள்''-யாழ்நூல் பக்கம் 294.

சங்கம், பற்பம், பாசம், அங்குசம் என்பன 4-ம் அவ்வ வற்றின் பீச எழுத்துக்களையும்; கலப்பை சுவத்திகம் என்பன 2-ம் அவ்வவற்றின் வடிவெழுத்துக்களையுங் குறித்து நின்றன. சங்க நிதியின் பீசம்--சம். பத்மநிதியின் பீசம்-பம். பாசபீசம்-ஆம். அங்குசபீசம்-க்ரோம், என்பன. இவற்றுள் பாசபீசம் சிரோம் என்பதும் ஒன்று.

மேவிய சக்கர மீது வலத்திலே
கோவை அடைவே குரோம் சிரோம் என்றிட்டு...
பூவைப் புவனா பதியைப்பின் பூசியே

—திருமந்திரம் 1314

என்பதும் நோக்கத்தக்கது. நட்டநடு — நேராகவுள்ள நடு. அறை நாலு 4—அறைகள். புவனை ஆம் — புவனாபதியார் வீற்றிருக்கும் இடமாகும். கட்டம்-இயந்திர அறை. கலப்பை= கலப்பைப்படை - உழுபடை, இதனை வடநூலார் அலாயுதம் என்பர். சுவத்திகம்-சுவத்தி அடையாளம். இது தேயுவின் குறி. ''குறிகுலிசம் கோகநதம் கொள் சுவத்தி''—உண்மை விளக்கம் 6. ''சுவத்திகம்போற்; பாவிய இரேகை''—விநாயக பு. 15: 48.

துருவ அறைகள் எட்டிலும் சங்கநிதி பதுமநிதி பீசங்களாகிய சம், பம் என்பனவற்றையும், அத்துருவ அறைகள் எட்டிலும் பாச அங்குச பீசங்களாகிய ஆம், க்ரோம் என்பனவற்றையும் வரைதல் வேண்டும். நடுவீடு 4-ம் புவனையின் இருக்கையாகும். கலப்பை, சுவத்திகம் ஆகியவற்றின் வடிவையும் வரைதல் வேண்டும் என்பதாம். கலப்பை உழுபடை; ''ஏனை உழுபடை ஏந்திய வெண்ணகை'' — திருமந். 1072.

ஈட்டிய வெல்லாம் இதன்பொருட் டென்பது
காட்டிய கைவன்மை காட்டினார் — வேட்டொறும்
காமருதார்ச் சென்னி கடல்சூழ் புகார்வணிகர்
தாமரையுஞ் சங்கும்போற் றந்து.

— பெரும்பொருள் விளக்கம்

காந்தண் மலரும் கடலுப்பும் உறவானால்
ஏந்துந் தனமிரண்டும் எய்தாவோ – காந்தண்மலர்
காட்டிலே பூபூக்கும் கானலிலே காய்காய்க்கும்
நாட்டிலே கண்டிருப்போம் நாம்.

— சித்தர்பாடல்

என்பனவுங் காண்க.

இதுவும் அது

31 ஆகும் அறையெல்லாம் அமைந்த வக்கரம்
போகுங் துருவத்தில் தும்புரு பீசமும்
ஏகும் இலக்கத் திசைந்தசிந் தாமணி
ஆகுஞ் சத்தியெண் சித்தியாய் நிற்குமே.

பாட பேதம்

1. ஆகுமறை நாலு மாகிற வகாரம்; யெல்லா மக்கர வக்கரம்; அமைந்த அக்கரம்; அமைக்க வக்கரம்; அமைக்க லக்கரம்.

2. வேகா துருவத்தில்; வேகந் துருவத்தில், போகுந் துருவம். வீசமும், வீசமாம், வீசங்கள், பீசங்கள்.

3. தறைந்த சிந்தாமணி.

4. யாகமுட் சத்தி; பாகமுட் சத்தி; பாகமுட் சத்தியே சிட்டி (த்தி) யாய் நிற்குமே; பாகமுட் சத்தி (சுற்றி) யெட்டுஞ்; ஆகுஞ் சித்தி யெட்டுஞ்: சத்தியெட்டுஞ்; சித்தியா, சித்தியால்.

குறிப்புரை

இம்மந்திரம் இயந்திர அறைகளில் இடவேண்டிய பிற பீசங்களை உணர்த்துகின்றது.

ஆகும் அறை எல்லாம்—உள்ள அறைகள் எல்லாவற்றிலும். தும்புரு பீசம்-தும். துருவம் - துருவ அறைகள் 8. இலக்கம்- அத்துருவ அறைகள் 8, சிந்தாமணி-சிந்தாமணி பீசம் ஸௌ எண்சித்தி அட்டகரும சித்தி.

மேலே சொல்லியவாறு 16 அறைகளில் 51 எழுத்தும், பீசங்களும் அடைத்த பின்பு துருவ அறைகளில் தும்புரு பீசத்தையும், அத்துருவ அறைகளில் சிந்தாமணி பீசத்தையும் வரைக என்பதாம்.

தும்புரு-18 கணத்துப்பட்ட கந்தருவச் சாதியாருள் ஒருவர். இசையிற் சிறந்தவர். ''பாடுவார் தும்புருவும் நாரதாதி''
— *தேவாரம் 6502*

''துய்ய தும்புரு நார தாதிகள் வேத வீணை தொடங்கவே''
— *தக்க. 623.*

சிந்தாமணி-சிந்தித்தவற்றைக் கொடுக்குந் தெய்வமணி.
சிற்-கோவை. பேர்.

இதுவும் அது

32. **நிற்கும் இலக்க நடுவே சுற்றெழுத்து**
நிற்கும் வலத்தர நேற்பெற் றிடத்தரி
நிற்குந் துருவத்தை நீகட்டு ரீங்காரம்
நிற்கும் இலக்கஞ் சிறீயென்று கட்டே.

பாட பேதம்

1. *நடுச்சுற்றெழுத்திட்டு. நடுவைத்துச் சுற்றெழுத்து.*

2. நிற்கு மிலக்கரநேர், நிற்குமிலக்காநேர், நிற்கும் வலத்தால், நிற்கவல் லார்தா.

3. யகட்டி ரீங்காரம், ரீகட்டி ஹ்ரீங்காரம், ரீகட்டி ஸ்ரீங்காரம், ரீகட்டு ரீங்காரம், ரீகட்டி ஸ்ரீங்காரம்

4. இலக்கத்தை ஸ்ரீ என்று, ஸ்ரீ மென்று, ஸ்ரீம் என்று. நீ கட்டே.

குறிப்புரை

இம்மந்திரம், இதுகாறுஞ் சொல்லிவந்த துருவ அத்துருவ அறைகளில் இடவேண்டும் எழுத்துக்களையும், அவற்றை வளைத்துக் கட்டும் முறைமையையும் உணர்த்துகின்றது.

இலக்கம் நடுவே - அத்துருவ அறைகள் – 8-ன் நடுவே. வலத்து அர – வலப்பால் அர (ஹர) என்பதையும். இடத்து அரி – இடப்பால் அரி (ஹரி) என்பதையும். துருவத்தை–8-த் துருவ அறைகளையும். ரீங்காரம் கட்டு-ரீங்காரத்தாற் கட்டி வளைத்திடுக. இலக்கம்–8 அத்துருவ அறைகளையும். சிறீ என்று கட்டு-ஸ்ரீம் என்று சொல்லப்படும் திருமகள் பீசத்தாற் கட்டி வளைத்திடுக.

அத்துருவ அறைகளின் வலப்புறத்தில் அர என்பதையும், இடப்புறத்தில் அரி - என்பதையும் இடுக. துருவ அறைகளை ரீங்காரத்தாலும், அத்துருவ அறைகளை ஸ்ரீங்காரத்தாலும் வளைத்துக் கட்டுக என்பதாம். ரீங்காரம்-ஹ்ரீங் காரம் என்றலும் ஒன்று.

மேற்கோள் :

அமர்ந்த அரகர வாம்புற வட்டம்
அமர்ந்த அரிகரி யாகுமுள் வட்டம்.

—திருமந்திரம் 925

சட்கோணந் தன்னில் ஸ்ரீம் ஹ்ரீம் தானிட்டு.— 1312

இதுவும் அது

33. கட்டுவ தன்முன் கருமத்தின் மந்திரம்
இட்டபின் சத்திய தொன்றே இடுமறை
இட்ட விரேகைத் தலை தொறுஞ் சூலமாம்
ஒட்டிய சத்தியிட் டெர்வ்வால் சூழ்வதே.

பாட பேதம்

1. கட்டுவதனக் கருமத்தில், கட்டுமதன்முன் கருமத்தில், கருமத்தியந்திரம்.

2. இட்டபின் சித்திரத் தேற்றி யிடுமறை, சித்திரத் தொன்றே, சத்திய தேற்றியிடு. (இவ்வடி 5-ஆம் சுவாடியில் இல்லை).

3. விரேகை தலை, விரேகைத் தலந்தொறுஞ், தலை தொறுஞ். சூலமா, சூலமாய்.

4. ஒதிய சத்தியிட். டொவ்வாலே, டொவ்விலே.

குறிப்புரை

இச்செய்யுள், மேலும் இயந்திரத்துள் இடவேண்டும் மந்திரமும், 16-அறைகளின் புறத்தே பொறிக்கவேண்டிய வற்றையும் உணர்த்துகின்றது.

கருமத்தின் மந்திரம் - அட்டகருமங்களுள், வேண்டுங் கருமத்திற்குரிய மந்திரத்தை. இட்டபின் - வரைந்த பின்னர். சத்தி-அக்கருமத்திற்குரிய பீசம். அறை-16 அறைகள். இரேகைத் தலைதொறும் - குறுக்கும் மறுக்கு மாகவுள்ள 10-க் கோடுகளின் தலையிலும். சூலம் ஆம்-முத்தலைப் படைக்கலத்தின் வடிவம் வரையத்தக்கதாகும். இவற்றால் காணப்படும் சூலங்கள் 20-ஆகும். ஒட்டுதல்-பொருத்தல். சத்தி - சத்தியின் பீசம்

ஹ்ரீங்காரம்-ரீங்காரம். ஒவ்வால் = பிரணவமாகிய ஓங்காரத்தால். சூழ்வது-அந்தசத்தியின் பீசைத்தைக் கட்டத்தக்கதாகும்.

வேண்டும் கருமத்திற்குரிய மந்திரத்தையும், பீசத்தையும் 16-அறைகளிலும் விரவி நிற்க அடைக்கவும். இரேகைத் தலை தோறும் சூலம் இடவும். அவற்றினிடையேசத்தி பீசமிட்டு, அவற்றை ஓங்காரத்தாற் கட்டுக. என்பதாம்.

மேற்கோள் :

சத்தியை-ஓகாரம் வளைத்திட்டு. —திருமந்திரம் 921

அமர்ந்த விரேகையும் ஆகின்ற சூலமே. — 925

சூலத் தலையினில் தோற்றிடுஞ் சத்தியும்
சூலத் தலையினில் சூழும்ஓங் காரத்தால். —926

சுட்டி யிவற்றைப் பிரவணஞ் சூழ்ந்திட்டு. —995
என்பனவுங் காண்க.

இதுவும் அது

34. சூழ்ந்த இடைவெளி சோடச கலைநிற்கும்
சூழ்ந்த பெயருங் கருமமுஞ் சுற்றிடும்
சூழ்ந்த வரம்பதன் மேலே சிரீயென்று
தாழ்ந்த விருபால் சத்தியை வைப்பதே.

பாட பேதம்

1. சூலத் திடைவெளி. சோடசக்கலை, சோடச கலைகள்.

2. சூழ்ந்த பேர் கன்மமுஞ் சுற்றிலுஞ் சூழவே, சூழ்ந்த கருமஞ் சுற்றிடு சுற்றெழுத்து, சூழ்ந்த பேருங் கருமமுஞ் சுற்றிக்கும், சூழ்ந்தப் பேருங்,

3. சூழ்ந்திட வரம்பு மேலே சிறீயென்று, சூழ்ந்திட்ட வரம்பு மேற்றிரியென்று, சூழ்ந்திட்ட வரம்பு மேலே சிறீ யென்றும், சூழ்ந்திட்ட வரம்புமேற்றிரி யென்று, சூழ்ந்திடச் சூழ்ந்திட்ட வரம்புமேற் ஸ்ரீயென்று, சூழ்ந்தகீட் டவ்வுருப்பு மேலே ஸ்ரீயென்றுந், சூழ்ந்திட்ட லொவ்வுரப்பு மேலே சிறீயென்றுந் சூழ்ந்திட்ட வுரைப்பு மேல் ஸ்ரீயென்று, சூழ்ந் திட்டல் லோவுரப்பு மேலே சிறீயென்றுந், தாழ்ந்திட்ட வப்பிரம மேலே ஸ்ரீயென்னும்.

4. தாழ்ந்தவிரு பக்கஞ் தாழ்ந்தவிரு பக்கமுஞ், தாழ விருபக்கமுஞ், பக்கஞ் சத்தியே வைப்பதே.

குறிப்புரை

இம்மந்திரம், இயந்திரத்தில் உள்ள 16-பதங்களின் புறத்தே வரையத் தக்க எழுத்துக்களையும், பீசமந்திரம் முதலியவற்றை யும் உணர்த்துகின்றது.

சூழ்ந்த- சுற்றிலுமுள்ள இடை வெளி-சூலங்களின் நடுவிலே யுள்ள வெளியிடங்களில் வெளி-வெற்றிடம். சோடசம்-16, சோடச கலை-அம் முதல் அ: ஈறாயுள்ள 16-உயிர் எழுத்துக்கள். பெயர்-சாத்திய நாம மந்திரம். கருமம்-அட்டகருமங்களுள் வேண்டுங் கருமத்தின் பெயர். சுற்றிடும்-சூழ்ந்து நிற்கும் வரம்பதன் மேலே-வரம்பிற்கு மேலே. வரம்பு-எல்லை, சிரீ சிரீம்- என்னும் திருமகள் பீசம். இருபால் - இருபக்கங்களிலும் சத்தி= சத்தியின் பீசம் – ஹ்ரீம். தாழ்தல் – தங்குதல்.

இயந்திரத்தில் உள்ள சூலங்களின் இடை வெளியிடங்களில் 16-உயிர் எழுத்துக்களையும், அவற்றைச் சூழ சாத்திய நாம மந்திரத்தையும், வேண்டும் கருமத்தின் பெயரையும், வரம்பின் மேலே சூழ சிரீம் ஹ்ரீம் சிரீம் என்னும் புவனை திரயட்சரீ பீசமந்திரத்தையும் வரைக என்பதாம்,

மேற்கோள்:

சூலத் திடைவெளி தோற்றிடும் அஞ்செழுத்து.
—திருமந்திரம் 926

பந்தத் தலைவி பதினாறு கலையதாய். — 964

வித்தார் செகமய மாக வரைகீறி
நத்தார் கலைகள் பதினாறு நாட்டி. — 991

சட்கோணந் தன்னில் ஸ்ரீம் ஹ்ரீம் தானிட்டு– ...
மிக்கீரெட் டக்கரம் அம்முதல் மேலிடே. — 1312

என்பனவும் நோக்குக.

இதுவும் அது

35. வைத்தபின் இத்தை வளைப்பது சத்தியால்
ஒத்த வியந்திரம் எல்லாம் உடலாகப்
பத்தி படக்கட்டிப் பக்கம் இரண்டிலும்
சித்தி ரம்மதி யிரவி சேருமே.

பாட பேதம்

1. ஒக்க வியந்திரம் உடனாக

2. *பத்தி படவே பக்கம், பத்திப் படக்கட்டிப் பக்கம் இரண்டருகும், பத்திப் படவே, பத்தி யடைவே பக்கம், பத்திடக் கட்டம் பக்கம், பக்கம் பதித்திட்டு இரண்டருகும், இரண்டுக்கும், இரண்டிற்கும்.*

3. *சித்தி ரத்தே மதிரவி, சித்திரத் தொடுமதி யிரவி சித்திரத் தோடிர விமதி, சித்திரத்தே மதியிரவியுஞ், சித்திரச் சேதா டிரவிமதிச் சித்திரத்தோடு மதியிரவி, மதிச் சேருமே.*

1-4 ஒத்தவிம் மந்திரம் எல்லாம் உடலதாய்
பத்திடக் கட்டம் பக்கம் இரண்டுக்குஞ்
சத்திய வேதங்கள் தானே பதித்திட்டு
சித்திரத் தேமதி யிரவியுஞ் சேருமே.

— சுவடி எண் 5

குறிப்புரை

இம் மந்திரம், இயந்திரத்தின் புறத்தே இடத்தக்க பீசங்களை உணர்த்துகின்றது.

இத்தை = இதை - இந்த இயந்திரத்தை; "இத்தை விளைவித்தல் மலம்" (உண்மை விளக்கம்-50) வளைத்தல்-சூழ்தல்-கட்டுதல். சத்தி = சத்திபீசம்-ஹ்ரீங்காரம். ஒத்தல் - பொருந்துதல், எல்லாம் - எல்லா உறுப்புக்களும், அமைந்த இயந்திரமானது உடலாக என்க. பத்தி படக்கட்டி - முறைமை பொருந்தச் சூழ்ந்து. பக்கம் இரண்டிலும் - வலம் இடம் ஆகிய இரண்டு பக்கங்களிலும், மதிஇரவி - சந்திர சூரியர்களின் பீசங்கள். வலப்பால் ஞாயிற்றின் பீசம் - ஷம் இடப்பால் திங்களின் பீசம் - டம் (ഠம்) - சித்திரம் - அழகு.

இறைவியின் திருவுருவாயுள்ள இந்த இயந்திரத்தைச் சூழ ஹ்ரீங்காரத்தால் வளைத்துக் கட்டி, வலம் இடம் ஆகிய இரு பக்கங்களிலும் ஞாயிறும், திங்களு மாகியவற்றின் பீசங்களை இடுக என்பதாம்.

மேற்கோள்:

தாவில் ஹ்ரீங் காரத்தாற் சக்கரஞ் சூழ்ந்து

—திருமந்திரம் 1314

ஷகாரம் சூர்ய பீசஞ்ச ஸகாரஞ்ச சரஸ்வதி

- பீச நிகண்டு

ഠ காரம் சந்த்ர பீசாக்யம் ஸர்வக்நம் மிருத்யு
நாசநம் —

ஷகாரம் சௌர்ய பீசம் ஸ்யாத் தர்மகாமார்த்த
புஷ்டிதம்

என்பன காண்க.

இதுவும் அது

36. சேரும் பிரணவம் யந்திரத்தைச் சூழப்
பேரும் இதன்மேற் பெரியதொரு வட்டம்
ஆரும் இரண்டு பிரணவத் திடையே
சாருந் துவாரத் தலமு ரைப்பதே.

பாட பேதம்

1. பிரணவ மந்திரத்தைச், பிரணவ மெந்திரத்தைச், பிரணவ யெந்திரத்தைச், சேரும் பிறையைப் பின் மேலே யந்திரத்தைச்.

2. சூழு மிதன்மேற் பெரியதொரு வட்டம், வட்டமாம், வட்டமா.

3. ஆர விரண்டு பிரணவத் திடைவெளி, ஆறு மிரண்டும் பிரணவத் திடைவெளி, பிரணவத்தி லொளி.

4. சாருந் துவாரத் தலங்கள் உரைப்பதே, சாருந் தேவர் சாலங்கள் உரைப்பதே, சேருந் தேவாதிகள் நிற்குந் திறமுரையே, சேருந் தெய்வாதிய (க)ள் நிற்குந் திறமுரையே, சேருந் தேவர்கள் நிற்குந் திறமுரையே, சேருந் தேவர் நிற்குந் திறமுறையே, தேவாதியர் நிற்குந் திறமுறையே தேவரக் காலங்கள், தேவர்கள் காலங்கள்

குறிப்புரை

இம் மந்திரம். இயந்திரத்தின் புறத்தே வரைய வேண்டுவன வற்றை உணர்த்துகின்றது.

பிரணவம் – ஓங்காரம். சூழ்தல் – வளைத்தல். சூழப் பெறும் - சூழ்ந்து இருக்கும். இதன்மேல் - இப் பிரணவத்துக்கு மேலே. ஆரும்-பொருந்தும். இரண்டு பிரணவத்து இடையே ஓங்காரமும், வட்டமும் ஆகிய இவற்றின் இடையே, துவாரம்-வாயில். தலம்-இடம். துவாரத்தலம்-வாயிலிடங்கள் என்பது அவற்றில் இருக்கும் கடவுளரையும், அவர்தம் பீசங்களையும் குறித்து நின்றது.

இயந்திரத்தை ஓங்காரத்தால் வளைத்துக் கட்டுக; அதன் மேலே பெரிய வட்டம் ஒன்று வரைக. இவற்றினிடையேயுள்ள வாயிற் கடவுளர்களைப் பற்றி மேல் உரைக்கப்படும் என்பதாம்.

மேற்கோள்

ஓகாரம் வளைத்திட்டு உம்பிளந் தேற்றி
— திருமந்திரம் 921

சூலத் தலையினிற் சூழும்ஓங் காரத்தால் — 926

எக்கோண முஞ்சூழ எழில்வட்டல் இட்டு — 1312

என்பனவும் அறிக.

சத்தியர் எண்மர்—அஷ்ட சத்திகள்

37. உரைத்த பிராமி ஒது மகேசுரி
வரைக்கவு மாரி வந்த வயிணவி
இரைத்த வராகி இசையிந் திராணி
வரைத்தரு சாமுண்டி மாயிலக் குமியே.

பாட பேதம்

1. பிராமணி மகேசை, மயேசுரி, மகேசுவரி, மயேஸ்வரி, மயேசை, மாகேசுரி, மாஹேஸ்வரி, மஹேஸ்வரி.

2. விரைத்தகௌள மாரி விந்தை வைணவி-வரைகௌள மாரி வந்த வயிட்டணவி, வரைத்த சேரல்வும் மாலியத் தவலைநுவி, வயிணவி - வயிஷ்ணவி, வயிட்டணவி, வயிந்த வயிஷ்ணவி.

3. இசைந்த மயேந்திரி, இசைந்தவிந் திராணி.

4. வருத்திடு, வரைத்தரு, வரைதரு, மரைத்திசா, மருத்திடு, மாலட்சுமியே, மாலெட்சுமியே, மகா லக்ஷுமியே, மாயிலக்ஷுமியே, மாலக்குமியே, மக லட்சுமியே.

குறிப்புரை

இம் மந்திரம், இவ்வியந்தித்துள் இடம் பெற்றிருக்கும் அன்னையர் எண்மரின் பெயர்களை உணர்த்துகின்றது.

பிராமி = பிரமாணி - அபிராமி. மகேசுரி - மாகேசுவரி கவுமாரி-கௌமாரி. வயிணவி = வைஷ்ணவி-நாராயணி. வராகி= வராக முகத்தையுடையவள் - வாராகி. சாமுண்டி = சண்டன்-முண்டன் ஆகியவர்களை அழித்தவள்-காளி. இலக்குமி-இலட்சுமி.

பிராமி முதல், இலக்குமி யீறாக எடுத்துச் சொல்லப்பட்ட எண்மரும் அட்டமாதர் என வழங்கப்படுவர்.

மேற்கோள்

பிரமாணி நாரா யணிமா யேசுரி
கௌமாரி வாராகி உருத்தி ராணி
இந்தி ராணியென் றெழுவகை மாதர் —பிங்கலம் 2:35

அன்னம் ஏறு விடையே யலகை
மஞ்ஞை களிறு கலுழனும் ஊர்தி — 36

மறை தண்டு சூலம் பினாகம் எஃகும்
வச்சிரம் ஆழி வன்படை ஆகும் — 37

ஆன வராக முகத்தி பதத்தினள்
ஈனவ ராகம் இடிக்கும் முசலத்தோடு
ஏனை உழுபடை ஏந்திய வெண்ணகை
ஊன மறவுணர்ந் தாருளத் தோங்குமே.

—திருமந்திரம் 1072

என்பனவும் நோக்குக.

எண்வகைச் சத்திகளின் பீசங்கள்

1. பிராமீ—ஆம் 2. மகேசுவரி—ஈம் 3. கௌமாரி—ஊம்
4. வைணவி—ரூம் 5. வாராகி—லூம் 6. இந்திராணி—ஐம்
7. சாமுண்டி—ஔம் 8. திருமகள்—அ: என்பன.

பிராம்ஹ்ரீம் மாகேசு வரீஞ்சைவ கௌமாரீம்
வைஷ்ணவீம் ததா
வாராஹீஞ் சைவ மாகேந்த்ரீம் சாமுண் டாஞ்சசு
பூஜயேது

மகாலட்சுமீ ததப்பச்சாது தனேஷ்வஷ்டசு பூஜயேது. என்பதும் நோக்குக. இந்த எண்மருள், திருமகள் தவிர ஏனைய எழுவரும் சத்தமாதர் என வழங்கப் பெறுவர். இவர்களுடைய ஊர்தி, படைக்கலம், தொழில் முதலியவற்றைப் பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தத்தின் முதலில் வரும் காப்புப் பருவத்திற் காணலாம்.

எண்டிசைப் பாலரும், கணபதியாதி நால்வரும்

38. இலக்கிந் திரனங்கி யங்கே யமனும்
வலக்கு நிருதி வருணனும் வாயுச்
சிலைக்குஞ் சசியீசன் சேருங் கணேசன்
மலைக்கின்ற கந்தன் வயிரவன் துர்க்கையே.

பாட பேதம்

1. இலக்குந், இலைக்கிந் திரனங்கியனாம் யெங்கே இமயனும், யமனாம்.

2. வலைக்கு, வலைக்கும். வருணனும் வாயு குபேரன், வருணன் வாயு குபேரன், குபேரனும்.

3. சிலைக்குஞ்சி யீசன் சேருங் கணேசன், சிலைக்குங் குபேரனீ சானன் கணபதி, சிலைக்குமீ சானன் சேருங் கணபதி.

4. துலைக்கின்ற கந்தன், துர்க்கையே, துர்க்கியே துற்கை.

குறிப்புரை

இம்மந்திரம், இயந்திரத்தில் இருக்கும் எண்டிசைப்பாலர், கணபதியாதி நால்வர் ஆகியவர்களின் பெயர்களை உணர்த்துகின்றது.

இலக்கு = இடம் - திசை. வலக்கு = வலக்காரம் வலிமை - வெற்றி - உபாயம். "சிறுவலக்காரங்கள் செய்த வெல்லாம்" —திருக்கோ. 227.

சிலை = முழக்கம்-ஒளி. சசி = சோமன்-குபேரன். மலைவு - போர். துற்கை = துர்க்கை - கொற்றவை. "துர்க்கனைக் கொன்ற வாற்றால் துர்க்கை ஆயினள்" — காசி காண்டம். வச்சிரபஞ். 18.

கந்தன் = சேர்க்கப்பட்டவன் - முருகன் ; "அவ்வுருவம் ஆறினையுந் - தன்னிரண்டு - கையால் எடுத்தணைத்துக் கந்த னெனப் பேர்புனைந்து" — கந்தர்கலி. 83-84.

"ஆறுமோ ருருவ தாக ஆக்கலிற் கந்தன் ஆனான்"
— தணிகைப்.சீபரி.29

"அந்த மில்லதோர் மூவிரு வடிவுமொன் றாகிக்,
கந்தனென்றுபேர் பெற்றனன் கவுரிதன் குமரன்"
—கந்தபு. சரவணப்.21

" சேயவன் வடிவம் ஆறுந் திரட்டிநீஒன்றாய்ச்செய்தாய்
ஆயத னாலே கந்த னாமெனும் நாமம் பெற்றான்"
—திருவிளை. 17

வயிரவன்-அச்சத்தைச் செய்தலும் நீக்குதலும் உடையவன். கணேசன் = கணங்களுக்குத் தலைவன்-விநாயகன்.

கிழக்கு முதலாகிய 8-த்திசைகளிலும், இந்திரன் முதலாகிய 8-க்கடவுளரும் முறையே நிற்பர். கணபதி முதலாய நால்வரும் முறையே மேற்கு, கிழக்கு, தெற்கு, வடக்கு ஆகிய நாற்பெருந் திசைகளையும் நோக்கி நிற்பர் என்பதாம்.

மேற்கோள் :

ஆதித்தன் சந்திரன் அங்கி எண் பாலர்கள்
—திருமந்திரம் 410

தானவர் சட்டர் சதிரர் இருவர்கள் சிவசக்கரந்தானே
— 988

எந்தை பிரானுக் கிருமூன்று வட்டமாய்...
கந்தன் சுவாமி கலந்தங் கிருத்தலால்
—திருமந்திரம் 1026

நடந்து வயிரவன் சூல கபாலி — 1292

மெய்யது செம்மை விளங்கு வயிரவன் — 1294

உதிக்கின்ற இந்திரன் அங்கி யமனுந்
துதிக்கும் நிருதி வருணன் நல் வாயு
மதிக்குங் குபேரன் வடதிசை ஈசன்
நிதித்தெண் டிசையும் நிறைந்து நின் றாரே — 2527

என்பன காண்க.

எண்டிசைப் பாலரின் பீசங்கள்

1. இந்திரன் - லம் 2. அக்கினி - ரம் 3. யமன் - ஹம் 4. நிருதி-ஷம் 5. வருணன்-வம் 6. வாயு-யம் 7. குபேரன்-ஹம் (ஸம்) 8. ஈசன்-சம் என்பன.

கணேசன் முதலான நால்வரின் பீசங்கள்

1. கணேசன்–கம் 2. கந்தன்–சௌம் 3. வயிரவன்–க்ஷம் 4. துர்க்கை–தும் என்பன.

திசைகள்—8

கிழக்குத் தென்கிழக்குத் தெற்குத் தென்மேற்கு
மேற்கு வடமேற்கு வடக்கு வடகிழக்கு என்று
ஆகத் திக்கெட் டாகும் என்ப —பிங்கலம் 1 : 12

திசைப் பாலர்—8

இந்திரன் அங்கி இயமன் நிருதி
வருணன் வாயு குபேரனீ சானன்என்று
ஆகும் எண்டிசைப் பாலர் பெயரே. — 1–19

எண்டிசையானை - அஷ்டகஜம்

39. துற்றயி ராவதஞ் சொற்புண்ட ரீகமும்
அற்புத வாமனுங் குமுதனும் அஞ்சன்
புற்பதந் தன்னொடு சாருவ பூமனும்
சொற்படச் சுப்ர தீபன்சொல் லானையே.

பாட பேதம்

1. துற்ற யிராபதஞ் - சொல்புண்டரீகனும், சொற் புண்டரீகம், சேர்புண்டரீகனும்.

2. வாமன். குமுதமும். அஞ்சனன், அஞ்சனம்.

3. புற்பகந் தன்னொடு, புற்பகெந்தெனகை, நற்புட தெந்தனகைச், நற்புஷ்பதந்தனகை, சாறுவபூமனும், சாறுவ பூமன், சாறுவபூபன், சார்வபூமன்.

4. சொற்பட்ட சுப்பிர, சொற்பட சுப்பிர. சுப்பிர தீபஞ். சொலுமட்ட யானையே, சொலுமஷ்ட யானையே, சொல்லாயே.

குறிப்புரை

இம்மந்திரம், எண்டிசை யானைகளின் பெயர்களை உணர்த்துகின்றது.

துறுதல்-நெருங்குதல். இராவதம்-ஐராவதம். அற்புதம்-அழகு. ஐராவதம் முதல், சுப்பிரதீபன் ஈறாக எடுத்துச் சொல்லப் பட்டவைகள் 8-ம், முறையே கிழக்கு முதல், வடகிழக்கு ஈறாக உள்ள எட்டுத் திசைகளிலும் நிற்கும் யானைகளின் பெயர் களாகும் என்பதாம்.

ஐராவதம் புண்டரீகம் வாமனங் குமுதம்
அஞ்சனம் புட்பதந்தஞ் சார்வ பூமஞ்
சுப்ரதீப மெண்டிசை யானைப் பெயரே. —பிங்கலம் 1:20

திசையானை - 8-ன் பீசங்கள்

1. ஐராவதம்-ஐம். 2. புண்டரீகம்-பும். 3. வாமனம்-வம். 4. குமுதம்-கும். 5. அஞ்சனம்-ஹம். 6. புட்பதந்தம்-ப்ரும். 7. சார்வ பௌமன்-ஸ்ரம். 8. சுப்ரதீபம்-ஸ்ம் என்பன.

எண்டிசை நாகங்கள் - அட்டமாநாகம்

40. ஆனை யனந்தன் அறிவா சுகிதக்கன்
ஊனமில் கார்க்கோடன் உக்கிரமா பற்மன்
ஏனைய பற்மன் சங்கபா லன்குளிகன்
மாநாகம் யோனி அறியுங் கொடியே.

பாட பேதம்

1. ஆனவனந்தன். அறிவா சுகிசட்சன், வரிவாசுகி தஷ்ன்

2. கார்க்கோடகன், உக்கிரமாம் பத்மன், உக்கிரன் மாபத்மன், கார்க்கோடன் சத்திய உக்கிரன் சங்கபாலன் பத்மன், பதுமன், பர்ப்பன்.

3. ஏனைய சேடன் சங்கபாலன் குளியனெண்ணாகம், கோனமர் பத்மன் குளியனென் றெண்ணாகம், கோனமா பத்மன் குளிகனென் றெண்வகை, பானமில் பற்பன் மகா பற்பன் குளிகனோடெட்டு, கோணமாபதுமன், கோணமா பத்மன், ஏனைய சேடன் சங்கபாலன் குளியனெண்ணுக.

4. ஆனது யோனி, ஆனதியோனி, மானாகம்யோனி, கொடியதே, கொடியிதே.

குறிப்புரை

இம்மந்திரம், அட்டமா நாகங்களின் பெயரும் எண்டிசை யோனிகட்குத் தோற்றுவாயும் உணர்த்துகின்றது.

ஊனம் – குற்றம். உக்கிரம் = கடுமை – கொடுமை – சினம். மாநாகம்-அட்டமாநாகம். யோனி=குறி-அடையாளம்.

அனந்தன் ஆதியாகக் குளிகன் ஈறாக எடுத்துச் சொல்லப் பட்டவைகள் 8-ம் எண்டிசை நாகங்களின் பெயர்களாகும். இனி, எண்டிசை யோனிகள் அறியத்தக்கன என்பதாம்.

மேற்கோள் :

அனந்தன் வாசுகி தக்கன்கார்க் கோடகன்
பதுமன் மகாபதுமன் சங்க பாலன்
குளிகன் அட்டமா நாகப் பெயரே. —பிங்கலம் 1 : 21

"எட்டு உரகமாவன: அனந்தன் வாசுகி, தட்சகன், கார்க் கோடகன், சங்கன், குளிகன், பற்பன், மகாபற்பன் என வுணர்க." —தக்க 99 உரை

அட்டமா நாகங்களின் பீசங்கள்

1. அனந்தன் - ஹம். 2. வாசுகி - காம் (ஓங்) 3. தக்கன்-தம் (உம்) 4. கார்கோடன் - காம். 5. மாபத். மன் - மம். 6. பத்மன் - பம். (ஷும்) 7. சங்கபாலன் - சம் 8. குளிகன்-கும் (ஹூம்). என்பனவாம்.

எண்டிசையோனி அட்டயோனிகள்; ஒன்பான் கோள்கள்

41. கொடிபுகை சிங்கம்நாய் கொண்ட எருது
மடிகழுதை யானை மாபெருங் காகம்
சுடர்சோமன் செவ்வாய் துலங்கும் புதனும்
வெடிகுரு வெள்ளி சனிரபாகு கேதுவே.

பாட பேதம்

1. கொடிபுலி, கொடிபூனை, கொடியுரை பீசம் நாயா கொண்டெருது, கொண்ட விடபம்.

2. மாப்பெருங். மாபெருங் காமம், மாபெருஞ் சாதஞ்.

3. துளங்கு, துலங்கிய.

4. வடிகுரு. வெள்ளிச். சனியிராகு.

குறிப்புரை

இம்மந்திரம், எண்டிசையோனி, ஒன்பான் கோள் ஆகிய வற்றின் பெயர்களை உணர்த்துகின்றது.

கொடி = மின்னற்கொடி-இடி. மடி - ஆடை, சாதியடை. மா-கருமை. சுடர் = செஞ்சுடர்-ஞாயிறு. சோமன் = அமுதம் அளிப்பவன்-திங்கள். துலங்குதல் - விளங்குதல். வெடி = ஒலி - புகழ்.

கொடிமுதல், காகம் ஈறாக எடுத்து உரைக்கப்பட்டவைகள் 8-ம் கிழக்கு முதலாகிய எண்டிசைகளிலும் இருக்கும் இந்திரன்

முதலாயுள்ள உலகபாலர் எண்மரின் குறிகள் ஆகும். சுடர் என்பது முதலாக கேது என்பது முடிவாகச் சொல்லப் பட்டவைகள் 9-ம் ஒன்பான் கோள்களின் பெயர்கள் ஆகும் என்பதாம்.

மேற்கோள் :

கொடிபுகை சிங்கநாய் இடபங் கழுதை
யானை காகமிவை எண்டிசை யோனி.

—பிங்கலம் 1 : 22

அஷ்ட பாலகர்குறி: இடி, புகை, சீயம், ஞாளி, இடபம், கழுதை, யானை, காகம். (:- அபிதான சிந்தாமணி.) என்பன காண்க.

எண்டிசையோனிகளின் பீசங்கள்

1. கொடி - அம், 2. புகை - கம். 3. சிங்கம் - சம் 4. நாய்-மம். 5. எருது-தம். 6. கழுதை-வம். 7. யானை-யம். 8. காகம் - ஷம். என்பன.

ஒன்பான் கோள்களின் பீசங்கள்

1. ஞாயிறு-க்ரீம் (ஆ) 2. திங்கள் - ரீம். 3. செவ்வாய் - ஹ்ரீம். 4. புதன் - ஸ்ரீம். . வியாழன் - ஹெளம் 6 வெள்ளி - ஐம். 7. சனி - ஐம். 8. ராகு - ஹ்ரெளம் 9. கேது - சௌம். (ஸௌம்) என்பன.

இராசிகள்—12

42. கேதுடன் ஆனது கோள்கள் இராசியும்
மேடம் எருது மிதுனங் கடகமும்
காதிய சிங்கமுங் கன்னிதுலாந் தேள்வில்
கோதில் மகரங் குடமும் மீனமே.

பாட பேதம்

1. கேதுட னாளது, கேதுட னாடது.
2. மேதகு மேடம் எருதுமிது னங்கடகம், மீதுடன் மேடம் எருது மிதுனங் கடகமும், கடகம்.
3. சிங்கங். கன்னி துலா. வில்லு, வில்லுங், வில்லுக், விலுங்.
4. குடமொடு, குடத்தொடு, மகரக் குடத்தொடு.

குறிப்புரை

இம்மந்திரம், 12 - இராசிகளின் பெயர்களை உணர்த்து கின்றது.

கோள்கள் - 9 கோள்கள். இராசி - 12 இராசிகள். எருது - இடபராசி. காதுதல் - கொல்லுதல். சாதியடை. தேள் - விருச்சிக ராசி. வில் - தனுர் ராசி. கோது - குற்றம். குடம் - கும்ப ராசி. மேடம்=ஆடு - மேடராசி. மீனம்=மீன் - மீன ராசி. இவை 12-ம், மேடம் முதலியவற்றின் வடிவமாக இருத்தலின் இப்பெயர் பெற்றன.

மேடம் முதலாக மீனம் ஈறாகக் கூறப்பட்டவை 12-ம் இராசிகளின் பெயர்கள் என்பதாம்.

12-இராசிகள் பீசங்கள்

1. மேடம் - கிலீம் 2. எருது - ஆம் 3. மிதுனம் - ஸம் 4. கடகம் ஸ்ரும் 5. சிங்கம் - க்ஷேம் 6. கன்னி - ஹ்ரீம்

7. துலாம்-கம் 8. தேள்-ஷம். 9. வில்-ரம் 10. மகரம்-த்ரும் 11. குடம்-க்ரம் 12. மீனம்-ம்ரம் என்பன.

மேற்கோள்

மேடமும் இடபமும் மிதுனமுங் கடகமுஞ்
சிங்கமுங் கன்னியுந் துலாமுந் தேளும்
தனுவும் மகரமுங் கும்பமும் மீனமும்
என்னும் பெயரிவை ஈரா றுள்ளும்
ஒப்புடை மிதுனம் ஒழித்தல் லாதன
அப்பெயர்க் கப்பெயர் அனைத்தும் ஆகும்
—பிங்கலம் 1: 178

பாடிய பன்னீ ரிராசியும் அங்கெழ - திருமந். —1020

அவ்வினம் மூன்றுமவ் வாடது வாய்வரும்
கெவ்வினம் மூன்றுங் கிளர்தரு வேறதாம்
சவ்வினம் மூன்றுந் தழைத்திடுந் தண்டதாம்
இவ்வினம் மூன்றும் இராசிகள் எல்லாம் —1269

இராசியுட் சக்கரம் எங்கும் நிறைந்தபின்
இராசியுட் சக்கரம் என்றறி விந்துவாம்
இராசியுட் சக்கரம் நாதமும் ஒத்தபின்
இராசியுட் சக்கரம் நின்றிடு மாறே —1270

என்பனவும் நோக்குக.

27. நாள்கள் முதலியன

43\. மீனென் றுரைக்குநாள் மிக்கிரு பத்தேழும்
தானு முமைதிருச் சாரதி பூமியும்
ஞான குருவொடு கேத்திரன் நான்முகன்
வானைப் பொருந்து கருடன்வல் லூறே.

பாட பேதம்

1. மிக்கவிரு பத்தேழும்; மிக்கவிரு பத்தேழ்
2. தானு முமைக்கிரு; தானும் முமைதிரு; தானுமை தரு.
3. ஞானக் குருவுடன் க்ஷேத்திரன் நான்முகன்; ஏத்தினான் முகவனை.
4. வானைப் பொருந்துங்; வானைப் பொருதுங்; வானே பொருதுங்; வான பருந்து கெருடனும் வல்லதே; கருடனும் வல்லூறதே; கெருடனும் வல்லதே; கலுழன்வல் லூறதே; வல்லூரதே; வல்லூரே.

குறிப்புரை

இம் மந்திரம் இயந்திரத்தில் இடவேண்டும் நாள்கள் முதலியவற்றை உணர்த்துகின்றது.

மீன்-விண்ணில் மின்னுவனவாயுள்ள அசுவினி முதலாகிய 27-நாள்கள். சாரதி-தேர்ப்பாகன். திரு-திருமகள். பூமி=நில மகள்-பூமிதேவி. ஞானகுரு-கலைமகள். "ஞானமூர்த்தி நற்பா மடந்தை வாக்கின் செலவியை நோக்கிய பெயரே" —(திவாகரம் 1: 14) "நான்முகன் கிழத்தி ஞானத் திறைவி" —(பிங்கலம் 2: 66) "ஞானகுரு வாணி பதம் நாடு" என்பன நோக்குக. கேத்திரன்-கேத்திர பாலன்-வைரவக் கடவுள்; கேத்திரம்=க்ஷேத்திரம் ஆலயம்-உடம்பு. பாலம்-காப்பவன். நான்முகன்-பிரமன். வானைப்பொருந்து - வானிற் பறக்கின்ற.

கருடன் = கருட திசை-கீழ்த்திசை (தமிழ் லெக்ஸிகன்). வல்லூறு-ஐம்புட்களில் ஒன்று; இராசாளி என்பர்.

27 நாட்களின் பீசங்கள்

1. அசுவினி-அம் 2. பரணி-பம் (ஃ0) 3. கார்த்திகை-கம் 4. ரோகிணி-ரோம் 5. மிருகசீருடம்-ம்ரும் 6. திருவா-திரை-ஆம் 7. புனர்பூசம்-பும் 8. பூசம்-பூம் 9. ஆயில்யம்-ஆம் 10. மகம்-மம் 11. பூரம்-பூம் 12. உத்திரம்-உம் 13. அஸ்த்தம்-ஹம் 14. சித்திரை-சிம் (ஷி0) 15. சுவாதி-ஸ்வாம் 16. விசாகம்-வம் 17. அனுடம்-அம் 18. கேட்டை-ஜேம் 19. மூலம்-மூம் 20. பூராடம்-பூம் 21. உத்திராடம்-உம் 22. திருவோணம்-சிரம் (ஶ்ரூ0) 23. அவிட்டம்-தம் (ஃ0) 24. சதயம்-சம் 25. பூரட்டாதி-பூம் 26 உத்திரட்டாதி-உம் 27. ரேவதி-ரேம் என்பனவாகும்.

உமை முதலான எண்மரின் பீசங்கள்

1. உமை-ஹ்ரீம் 2 திரு-ஸ்ரீம் 3. வாணி ஐம் 4. பூமி-லம் 5. ஞானகுரு-கும் (ஃ0) 6. கேத்திரன்-க்ஷம் 7. நான்முகன்-ப்ரம் (ஹ்ரூ0) 8. கருடன்-க்ஷிப: என்பனவாம்.

ஐம்புட்கள்—பஞ்ச பட்சிகள்

44. வல்லூறு வாந்தை கொடிகோழி மாமயில்
பல்லோ ரறிபஞ்ச பட்சியென் றானது
சொல்லா யினித்தேவர் சூழும் பெருந்திக்கு
வல்லோர் வகுத்த வழியுரைப் பேனே.

பாட பேதம்

1. வல்லூறு மாந்தை, வல்லூரு வாந்தை, வல்லீறு மாந்தை, வல்லோர் பருந்தைக் கொடி, கொடிக் கோடி.

2. வல்லோ ரறிபஞ்ச பட்சியை வேண்டது, பட்சி யென்றோது.
3. சொல்லா வினித்தேவர், சொல்லாலினித் தேவர், சொல்லாரினி தெல்லாஞ் சூழ்ந்திடுந் திக்கு.
4. வல்லோர் உரைத்த வகையுரைப்; வகுத்த வரை. யுரைப்.

குறிப்புரை

இம் மந்திரம், ஐம்புட்களின் பெயரையும், இதுகாறுஞ் சொல்லப்பட்ட கடவுளர் முதலாயினர் உறையும் திசைகளை எடுத்தோதுதற்குத் தோற்றுவாயையும் உணர்த்துகின்றது.

வல்லூறு-இராசாளி. கொடி-காகம். மா=கருமை-நீலம். தேவர்-மேலே சொல்லப்பட்ட கடவுளர். சூழ்தல்-இயந்திரத்தில் சூழ இருத்தல்.

ஐம்புட்களின் பீசம்

1. வல்லூறு-அ 2. ஆந்தை-இ 3. காகம்-உ 4. கோழி-எ 5. மயில்-ஒ என்பன. இவற்றைப் பற்றிய நூல்கள் தமிழில் சிறப்பாகவுள்ளன. இவற்றால், நலந் தீங்குகளைத் தமிழர் பண்டு தொண்ட்டே கண்டறிந்திருந்தனர்.

மேற்கோள்

நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும
—தொல். 1037: 17

புள்ளாவன : ஆந்தை முதலியன. காலங்கண்ணுதல் —வருங்காலங் குறித்தல்
—இளம்.

அதுவாம் அகாரம் இகாரம் உகாரம்
அதுவாம் எகாரம் ஒகாரம தஞ்சாம்
அதுவாகுஞ் சக்கர வட்டமேல் வட்டம்
பொதுவாம் இடைவெளி பொங்குநம் பேரே.
—திருமந்திரம் 927

தேவர்களின் திசையும் பீசமும்

45\. உரைப்பது திக்குப் பாலர்கன் னியானை
பருத்தபாம் பியோனி பகருங் கோள்களும்
பொருத்த முறப்பூ ருவந்தொட் டடைவே
தரித்தவ ரவர்கள் தம் பீசங்கள் தானே.

பாட பேதம்

1. உரைப்பதிப் பலர்கன்னி யுயர்த்திக்குப் பாலர், உரைத்ததிப் பாருகன்னி நாகப் பாலகர் கன்னி யானை பாலர் கன்னியர் கெசம், பாலர் கன்னியர் காகம்.

2. பருத்தபாம்பு யோனி, பருத்தபாம் போனி, பருத்தமாம் போனி, பருத்தபாம் போடு, பருந்துபாம்பு யோனி பகவவே கழு தனும், பகருங் கோள்தானும், கோளும்.

3. பொருத்தமுற் பூருவந், பொருத்தமும் பூருவந் தொட்ட தடைவே, பொருத்தமும் முருவம் தொட்ட தொட்ட-தவையே, பெருத்தமும்பு புழுவையே தொட்டதே, பெருத்த முரப்பருவந் தொட்டடைவே, தொட்டவடைவே.

4. தரித்த வவர்கள், தரித்த தவர்கள்தம், தரிப்ப தவர்கள்தம், தெரிப்ப தவர்கள்தம், தரிப்பாத வாருடன் வீதங்கள் தானே, பீஸங்கடானே, வீசங்கடானே.

குறிப்புரை

இம்மந்திரம், இதுகாறுங் கூறப்பட்ட கடவுளரின் பீசங் களை, இயந்திரத்தில் வரையும் இடம் உணர்த்துகின்றது.

திக்குப்பாலர் = எண்டிசைப்பாலர் — இந்திரன் முதலாய கடவுளர்-8. பாலனம்—காத்தல், பாலர்-காவலர். கன்னி-பிராமி முதலாய சத்திகள்-8. யானை-ஐராவதம் முதலாய யானைகள்-8. பருத்தல் = பரித்தல்-சுமத்தல்-தாங்குதல், பெருத்தல் என்றுமாம். பாம்பு-அனந்தன் முதலாய மாநாகங்கள்-8. யோனி-கொடி முத லாய யோனிகள்-8. கோள்கள்-ஞாயிறு முதலாய கோள்கள்-9.

பொருத்தம்உற-இயந்திரத்திற் பொருந்த. பூருவம் தொட்டு – கிழக்குமுதலாக. அடைவு = முறைமை-வரிசை. பீசங்கள் = மூல எழுத்துக்கள்-வித்தெழுத்துக்கள்.

திருமந்திரம் 37-ஆம் செய்யுள் முதல், 41-ஆம் செய்யுள் வரை உள்ளவற்றிற் சொல்லப்பட்ட கடவுளர் முதலாயினாரின் பீசங்களை, இயந்திரத்தில் கீழ்த்திசை முதலாக முறையே வரைக என்பதாம்.

12 இராசிகளின் திசை

46. தான்கிடா யேறு தனியே கிழக்கங்கி
தென்பிறழ் தண்டாகுந் தெற்கரி கடகம்
வான்கனி தென்மேற்கு வைத்த வருணன்மேல்
ஊன்கொடு தேடுலாம் ஒண்டனு வாயுவே.

பாடபேதம்

1. தாங்கி யெருது தனியே, ஏறி.

2. தேனவிழ் தண்டாகும், தேன்விழ் தெண்டாகும், தேன்பிறழ்த் தண்டாரும், தேன்புரந் தன்னாடாகும், தேள்விழ் தண்டாகும். தெற்கரி கற்கடகம், தெற் கரிய கற்கடகம், தேருகர்க்கடகம்.

3. வாள்கன்னி தென்மேற்கு வகுத்தே வருணன் நெல், வைத்த வருணன்மேலும். வான்கன்னி.

4. ஊன்கொண்ட, ஊண்கொண்ட. தேட்டுலா மொண்டனு. தெட்டும் உலாவுத் தனிவரவுவை, தெட்டுலா முறத்தனுவாயுவே, கோடுலா வுற்ற தனு வாயுவே கொண்ட கோடுலா அதனு வாயுவே.

குறிப்புரை

இம்மந்திரம், இயந்திரத்தில் இராசிகளின் பீசம் இருக்கும் இடத்தை உணர்த்துகின்றது.

கிடாய்=ஆட்டின் ஆண்—மேடராசி (மலைபடு. 414 உரை) ஏறு=எருது—இடபராசி. அங்கி=அக்கினிதேவன்—தென்கிழக்கு. தேன்-இனிமை. பிறழ்தல் – விளங்குதல். "ஒளி பிறழும் நெடுஞ் சடை"-கல்லா 54. தண்டு=வீணை-மிதுன ராசி. அரி = சிங்கம்-சிங்கராசி. கடகம் = கடகராசி கற்கடம்-ஞெண்டு. கனி=கன்னி-கன்னிராசி. வருணன்=வருணன் திசை-மேற்கு ஊன்-உடம்பு. கொடு=கொடுகு – கொடுமை – கொடுக்கு; சாதியடை. தேள்-விருச்சிகராசி. துலாம்=நிறைகோல் - துலாராசி. தனு = வில்-தனுராசி. மேடமுதலாய ராசிகள், ஆடு முதலியவற்றின் வடிவின வாக. இருத்தலினாலே அவற்றின் பெயராற் கூறப்பட்டன வாயு = வாயுதிக்கு - வடமேற்கு.

மேடம், இடபம் ஆகிய இந்த இராசிகளின் திசை முறையே கிழக்கும், தென்கிழக்கும் ஆகும். மிதுனம் தெற்கு, சிங்கம், கடகம், கன்னி ஆகிய இவற்றின் திசை தென்மேற்கு. விருச்சிகம், துலாம் ஆகிய இவற்றின் திசை மேற்கு. தனுராசியின் திசை வடமேற்கு என்பதாம்.

மேற்கோள்

விரியும் ஆட் டின் பெயர் மேட விராசி. —திவாகரம்
ஏறுமுதல் வந்தன இடப விராசி. —
மேவுமியாழ்ப் பல்பெயர் தண்டே மிதுனம். —
பெண்மைப் பெயரே கன்னிக்கும் ஆகும் —
தெறுக்கால்.. தேளே விருச்சிகம். —

அவ்வினம் மூன்றுமவ் வாடது வாய்வரும்
கெவ்வினம் மூன்றுங் கிளர்தரு ஏறதாம்
சவ்வினம் மூன்றுந் தழைத்திடுந் தண்டதாம்
இவ்வினம் மூன்றும் இராசிகள் எல்லாம்.

—திருமந்திரம் 1269

என்பனவும் நோக்கத் தக்கன.

ஏனைய இராசிகள், கணபதி முதலானவர்கள் திசைகள்

47. தனிவட கும்பம் மகரந் தயங்கும்
இனியவீ சாசனம் இலங்கு துணைமீன்
கனியுந்தென் மேற்குக் கணபதி கந்தன்
புனைவாயு மூலைப் பொருவுகேத் திரனே.

பாட பேதம்

1. தனிவடக்குக் கும்பம், தனுவட கும்பம், தனி வடக்கு கும்பஞ் கற்மதயங்கு, தனிவட்டக் குருபத்தான தியங்கி மீசன், தயங்குமீன், தயங்க.

2. இனியவீ சானன்மேல் இலங்குந் துணைமீனும் இனியீசன் றன்மேல் இலங்குதுணை யீசனும், முனியீசன் றன்மேல் முயங்குமே மீனம், தனிமே லியங்கு மலைவுயினும்.

3. கன்னியுந் தென்மேற்கு கணபதி, கன்னியு மேற்கு கணபதி. கணபதிக் கந்தன்,

4. புனைவா மூலைக்கேந்திரனே, பனைவாயுமூலை; வுணவாய் குலைபெருங்காதிரேனே, மூலைபொருங்கேத்; மூலை பொருவுங்கேத், மூலைப் பொருவுங் கேத், கேந்திரனே.

குறிப்புரை

இம்மந்திரம், கும்பம், மகரம், மீனம் ஆகிய இராசிகளும் கணபதி, கந்தன் ஆகிய கடவுளரும் இருக்கும் இடம் உணர்த்து கின்றது.

வடகும்பம்-கும்பராசி வடதிசையாகும். மகரம் = சுறா-மகரராசி. ஈசானம்-வடகிழக்கு. இலங்குதல் - ஒளிவிடுதல். துணை = இணை-இரட்டை. மீன்-மீன ராசி. இஃது, இணைந் துள்ள இருமீன்களின் வடிவாயிருத்தலினாலே துணைமீன் என்றார். தென்மேற்கினைக் கன்னிமூலை என்றும், பிள்ளையார்

மூலை என்றுங் கூறுவர். பொருவு-ஒப்பு. கேத்திரன்—வைரவக் கடவுள்.

கும்பம், மகரம் ஆகிய இராசிகளின் திசை வடக்கு. மீனராசியின் திக்கு வடகிழக்கு. கணபதியின் திசை மேற்கு. கந்தன் திக்கு வடமேற்கு என்பதாம். கேத்திரன் திசை, வரும் மந்திரத்துட் கூறப்படும்.

தானவர் சட்டர்சதிரர் இருவர்கள்.—திருமந்திரம் 98,

வடுகன், கொற்றவை, ஐம்புள் ஆகியவற்றின் திசைகள்

48. கேத்திரத்தின் ஈசன் கிளரங்கி துர்க்கையும்
சேத்திடும் இந்திரன் வல்லூறு தெற்காந்தை
கோத்திடுங் காகம் வருணன் சசிகோழி
சாத்து நடுமயில் தன்றிக் கடைவே.

பாட பேதம்

1. கோர்த்திர நீசன் கிழக்குத் துர்க்கையும், கேந்திர னீசனிற்கா லங்கி துர்க்கையும், கேந்திர னினின் காலங்கி துற்கையும், கேத்திர வீசன்.

2. சேர்ந்திடு, சேர்த்திட்டு வல்லூர் கெதிராந்தை; வல்லீறு.

3. கோர்த்திடுங், தேர்த்திடுங், தேர்ந்திடுங், தேர்த்திடு. வடகோழி.

4. சாத்துணடுமயில். சாத்திடுநேமயில், சார்ந்த நடுமயில், சார்ந்து நடுமயில், காத்துணடுமயில், காத்துண்டு மயில் தக்க திசையடைவே, தன்றிசை யடைவே, தான் கெட்டடைவிலே, தான் கேட்டடைவிலே, அந்த திசை யடவே.

குறிப்புரை

இம்மந்திரம், இவ்வியந்திரத்துள் வடுகன், கொற்றவை, ஐம்புள் ஆகியவர்களின் பீசங்களை இடவேண்டும் இடத்தை உணர்த்துகின்றது.

கேத்திரன் = க்ஷேத்திரன் — வைரவர். ஈசன் = ஈசன் திக்கு - வடகிழக்கு. அங்கி = அக்கினியின் திக்கு — தென் கிழக்கு. இந்திரன் - இந்திரன்றிசை - கிழக்கு. வருணன் = வருணன்றிசை-மேற்கு. சசி = சந்திரன் - சோமன் - குபேரன்-குபேரன்றிசை-வடக்கு. "சிலைக்குஞ் சசி யீசன்" (38). அடைவு-முறைமை.

வயிரவன், கொற்றவை ஆகிய இவர்களின் பீசங்களை வடகிழக்கிலும் தென்கிழக்கிலும், வல்லூறு, ஆந்தை, காகம், கோழி ஆகியவற்றின் பீசங்களை, கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய திசைகளிலும், மயிலின் பீசத்தை நடுவிலும் முறையே வரைக என்பதாம்.

தில்லைச் சிற்றம்பலம் முதலாய தலங்களில் உள்ள சிவாலயங்களின் திருச்சுற்றில் இருக்கும் ஐங்கரன் முதலான கடவுளரின் கோட்டங்கள் - இருக்கைகள்; ஈண்டுக் கூறியவாறே அமைந்திருத்தலும், ஆகமங்களிலும் இவ்வாறே சொல்லப் பட்டிருத்தலும் நோக்கத் தக்கன.

கடவுளரின் பீசங்கள் நிற்கும் முறைமை

49. அடைவிலே தேவர்கள் பீசம் அதனைப்
புடையிலே சூழும் புவனைக்குக் காவல்
சடையிலே கலங்கையைத் தாங்கிய ஈசன்
வடிவிலே அக்கரம் வைத்துரைத் தனனே.

பாட பேதம்

1. அடைவுவை தேவர்களனைவருங்கூடி. பீஜம், வீசம்.
2. புடையிலே சூடும் புவனேஸ்வரி வல்லாயி, புடைவிலே.

3. கங்கை தாங்கிய ஈசன், வீசன்.

4. வெடைவிலே அக்கரம், வக்கரம். வைத்துரைத்தானே, வகுத்தரைத்தானே: வகுத்துவைத்தானே.

குறிப்புரை

இம்மந்திரம் இதுகாறுஞ் சொல்லப்பட்ட பீசங்கள் யாவும். இயந்திரத்தில் அமைந்து நிற்கும் முறைமை உணர்த்துகின்றது,

அடைவு-முறைமை. தேவர்கள்-பிராமி முதலாகச் சொல்லப் பட்ட கடவுளர் (செய்யுள் – 37-48) புடை – பக்கம் புவனை – புவனாபதி. பீசம் அதனை = பீசத்தை – மூல எழுத்துக்களை, வடிவிலே அக்கரம்-அக்கர வடிவம், 51–எழுத்தும் திருவுருமா-யிருக்கும் முறைமை.

எடுத்துச் சொல்லப்பட்ட கடவுளர் அனைவரும், இயந்திரத் தில் இடப்பட்டுள்ள தத்தம் பீசங்களை நிலைக்களமாகக் கொண்டு புவனாபதிக்குக் காவலாகச் சூழ்ந்து நிற்பர் என்பதாம்.

பின்னிரண்டடிகளில் மேல்வரும் அக்கர வடிவுக்குத் தோற்றுவாய் கூறப்பட்டுள்ளது.

அடைவிலே தேவர்கள் ஐந்து வகைக்கும்
புடையிலே மந்திரம் போற்றிய பின்னைச்
சடையிலே திங்களைத் தாங்கிய வம்மை
வடிவிலே பொன்மை வகுத்த தியானமே.

என்று மேல்வருஞ் செய்யுள், இதனுடன் ஒப்பிட்டுக் காணத் தக்கது.

அதி–6 அட்சரவடிவம்

50. வைத்துரைத் தான்மதி சூடிய கூத்தனும்
ஒத்த எழுத்தைம்பத் தொன்றும் உடலாகச்
சக்தி திருமேனி சங்கரன் றன்மேனி
அத்தன் மூவெழுத் தாகும் அகாரமே.

பாட பேதம்

1. வைத்துரைத் தான்பத சமபதி தாங்கிய கூத்தன், சூடிய அத்தனும்.

2. ஒத்த வெழுத்தன்பத், ஒவ்வெழுத்தன்பகலாதா.

3. சத்து மேனி அகாரந் திருமேனி.

4. அத்தன் முதலெழுத்தாதி அகாரமே, தாகமா காரமே.

குறிப்புரை

இம்மந்திரம், இயந்திரத்தில் இடப்பட்டுள்ள எழுத்துக்கள் 51-ம் புவனாபதியாரின் திருமேனியாமாறும், அவை 51-ம் அங்கமாய் அமைந்து நிற்கும் முறைமைக்குத் தோற்றுவாயும் உணர்த்துகின்றது.

மதி—திங்கள். கூத்தன்-சிவன். எழுத்து ஐம்பத்தொன்று-அகரம் முதல் க்ஷகரம் ஈறாகவுள்ள 51-எழுத்துக்கள். சத்தி= ஆற்றலுடையவள்-இறைவி. சங்கரன் இன்பஞ் செய்தலின் சங்கரன் (-காஞ்சிப்பு). அத்தன்சிவன் (நாநார்த்த தீபிகை).

அகரம் முதலாக க்ஷகரம் ஈறாகவுள்ள 51 எழுத்துக்களும் உடலின் உறுப்புக்களாக இருதத்தலினாலே, அவை புவனாபதியாரின் திருவுருவமாகும் என்பதாம்.

மேற்கோள்

ஓதும் எழுத்தோ டுயிர்க்கலை மூவைஞ்சும்
ஆதி எழுத்தவை ஐம்பதோ டொன்றென்பர்
சோதி எழுத்தினில் ஐயிரு மூன்றுள
நாத எழுத்திட்டு நாடிக்கொள் வீரே.

— திருமந்திரம் 963

காலை நடுவுறக் காயத்தில் அக்கரம்
மாலை நடுவுற ஐம்பது மாவன. — 965

என்பனவற்றால், எழுத்துக்கள் 51–ஆமாறும், அவை உடம்பில் அமைந்திருக்கும் முறைமையும் அறிக.

கூத்தன் உரைத்தது கூறுகின்றேனே. (–5).

வகுத்தானங் கூத்தன் வகைபத்தினுக்கும். (–169). என்பன காண்க.

எழுத்துக்கள் 51-ம் உடலின் உறுப்புகளாயிருக்கும் முறைமை

51. அகாரத் திருமுடி ஆகாரம் நெற்றி
இகாரம் வலக்கண் ஈகாரம் இடக்கண்
உகாரம் வலச்செவி ஊகாரம் வாமம்
ருகாரம் வலமூக்கு ரூகாரம் வாமமே.

பாடபேதம்

1. அகாரமிரு கண்ணடு, அகாரஞ் சிரத்தி லவ்விறுதி நெற்றிநடு, அகார சிரத்தி அவ்விருதி நேற்றிநடு, அகாரம் இருகண் ஆகாரம். ஸ்ரீம்காரம் ஸ்ரீகாரம்.

2. ஐ காரம், இகாரம் வலக்கண் ணிடக்கண்ணி லிங்காரம் இகாரம் வலக்கண் இடக்கணீகாரம், இகார வலக்கண் ணிடக்கண் ஹ்ரீங்காரம், இடக்கண் ஈகாரம், ஈகாரம்.

3. உங்காரம் வாமரத்தி, ஊகாரம் வாமமே, ஊங்காரம் வாமமதி, ஓங்காரம் வாமத்தி, வாமத்தில்.

4. ருகாரம் வலமூக் கிடமூக்கு ரூகாரமே, ருகாரம் வலமூக் கிடம் ரூகாரமே: ருகாரம் வலமூக்கி நங்காரம் வாமமே, ருகாரம் வலமூக்கிட மூக்கி ரூகாரமே, இகாரம் வல மூக்கு ரூகாரம் வாமமே, இடமூக்கு ரூகாரமே, ஸ்ரீகாரம் வலமூக்கு ஸ்ரீகாரம் வாமமே.

குறிப்புரை

இம்மந்திரம், இயந்திரத்திற் பொறிக்கப்பட்டுள்ள 51-அட்சரங்களும் திருமேனியின் உறுப்புகளாகப் பொருந்தி யிருக்கும் முறைமையை உணர்த்துகின்றது.

ஊகாரம் வாமம்-ஊகாரம் இடக்காது, ரூகாரம் வாமம்-ரூகாரம் இடமூக்கு. வாமம்-இடப்பக்கம்.

1. அ—திருமுடி. 2. ஆ—நெற்றி. 3. இ—வலக்கண்
4. ஈ—இடக்கண். 5. உ—வலக்காது. 6. ஊ—இடக்காது.
7. ரு—வலமூக்கு. 8. ரூ—இடமூக்கு என்பதாம்.

மேற்கோள்

அகாரந் தலையாய் இருகண் சி(இ)காரமாய்
நகார வ(மு)கார(நற்) காலது (மிருகாது) நாடுமே.

— திருமந்திரம் 921

இதுவும் அது

52. வாங்குமில் லுவ்வு வலக்கன்னம் மற்றிடம்
தேங்குமில் லூகாராம் ஏகாரம் மேலிதழ்
தாங்கும்ஐ காரந் தப்பாது கிழிதழில்
ஓங்காரம் மேல்வாய்ப்பால் ஒக்க நிறைத்தே

பாட பேதம்

1. வாங்குமில் லுவ்வும், வாங்கு மிலவும், வாங்க
மிலிவும், வாங்கு மில்லுவு வலக்கன்ன மற்றிடக்
கன்னம், வாங்குயே வலக்கண்ணு மத்திடத்தில்.
ஸாகார வலக்கன்னம் ஸௌகாரம் வாமமாம்,
மற்றியத்தில்:

2. தேங்கும் லூகாரம், தேங்கும்ஸௌகாரம், ஏங்குமிலூங் காரம், தேங்கும் ளூகாரம், லூங்காரம் ஏகாரம் மேலுதடு, ஏகாரம் மேலுதட்டில், ஏகாரம் மேலிதழ்த், ஸௌகாரம் தேலிதட், ஏங்கியும் மகோர விருத், ஏகார மேலிதழிட்.

3. தாங்குமைகாரந், தாங்குமைகைாரம், தாங்கம் ஔ காரம், ஆங்காரம் அந்துபாகு கீழுகெடில். டாங்சம் ஔகாரமே, தாட்டில் அகாரப, டாங்கம் ஐகார மாமே, ஐங்காரம் தப்பாது கீழிதழ்.

4. ஓகாரம், நீங்காரம், ஓங்காரம்மே வலப்பல். ஒக்க ஒநின்றதே, ஒக்கநின்றதே, ஒக்க நிறைத்தே, ஒக்க நிறைந்ததே.

குறிப்புரை

இம்மந்திரம், லுகரம் முதல் ஓகாரம் வரை உள்ள எழுத்துக்கள் 5-ம் உடலின் உறுப்பாயமைந்து நிற்கும் முறைமையை உணர்த்துகின்றது. கன்னம்—கதுப்பு. இடம்-இடக்கன்னம். மேல் இதழ் – மேலுதடு. கீழ் இதழ்-கீழுதடு. இதழ்-உதடு. பொதுப் பெயர். செயையொடு விசையை மேல்கீழ் இதழினைச் சிறந்து காக்க - பிரமோத்தரகாண்டம். ஓட்டம், அதரம் என்பன 2-ம் முறையே இவற்றின் சிறப்புப் பெயர்களாகும் (பிங்கலம்).

9. லுகரம் - வலக்கன்னம். 10. லூகாரம் - இடக்கன்னம். 11. ஏகாரம்-மேலுதடு. 12. ஐகாரம்-கீழுதடு. 13. ஓகாரம்- மேல் வாய்ப்பல் என்பதாம்.

இதுவும் அது

53. நிறைந்தது கீழ்வாய்ப்பல் நின்றதௌ காரம்
உறைந்ததே அம்மென் றொருதாளக் கூட்டம்
உறைந்த அகவென் றுச்சந் தலையிலே
நிறைந்தகண் டத்தின்மேல் நேர்பதி னாறுமே.

பாடபேதம்

1. நிறைந்தகீழ் வாய்ப்பல், நிறைந்தது கீழ்வாய்ப் பல்லில், நிறைந்தகீழ் வாய்ப் பல்லு, நின்ற ஒளகாரம், நின்ற ஒளகாரமாம்.

2. யம்மென் றொருநாட்கூட்டம், மென்னோவி வாலுக் கூட்டி, அம்மென் றொவிவாலுக்கூட்டி, அம்மென் றிவ்வாறு கூட்டி, அம்மென் னொலி, ம்மென், மென், மென், கூட்ட.

3. உறைந்ததே யவ்வென்ற துச்சந், அ: வென்றது உச்சந், சு: என்று உச்சந், அ: என்றுச் சந்; அ: வென்றுச் சந், ஆ வென்றுச் சந் தலையில்,

4. கண்டத்தினில் மேலே, கண்டத்தின் மேலே, கண்டத்தினில் மேல், கண்டத்தின் மேற்பதினாறே, மேலே பதினாறே, மேல் பதினாறே, நேர் பதினாறே.

குறிப்புரை

இம் மந்திரம், ஒளகாரம் முதல், அ: என்பதீறாய் உள்ள எழுத்துக்கள் 3-ம், உறுப்பாமாறு உணர்த்துகின்றது. தாள் = தாளம்-நாக்கு, தாளக்கூட்டம்-தாடை. "பச்சைத் தாளர வாட்ட" (—திருவாசகம் 547) உச்சந்தலை-தலையின் உச்சி. கண்டம்-கழுத்து. பதினாறு-அகரம் முதல் அ: ஈறாகவுள்ள உயிர் எழுத்துக்கள் 16.

14. ஒள-கீழ்வாய்ப்பல். 15. அம்-தாடை. 16. அ: உச்சந் தலையுமாம். இவ்வாறாக, அகரம் முதல் அ: ஈறாகவுள்ள 16-உயிர்களும் கழுத்தின் மேலேயுள்ள உறுப்புக்களாகக் கருதப் படும் என்பதாம்.

இதுவும் அது

54. ஆறும் வலக்கைக் ககாரம் நால் ஙவ்வைந்தும்
மாறும் இடக்கை சகாரம் நால் ஞவ்வைந்தும்
தேறும் வலக்கால் டகாரம் நால் ணவ்வைந்தும்
கூறும் இடக்கால் தகாரம் நவ் வய்ந்தே.

பாட பேதம்

1. ஆறு வலக்கை அகாரம் அருதுப, ஆறுமா வலக்கை, வலக்கை ககாரம், ஙவ்வைந்து; ஜுவ்வைந்தும்.

2. ஆறும் இடக்கை, ஆறு இடக்கை அகாரநலு பல வித்தும், மாரு மிடைடக்க அகாரம் நால், ச(ஆ) காரம்நால், ஞவ்வைந்து, ஞூவ் வைந்தும்.

3. ஏறும் வலக்கால், மேரும் வலக்கால், ஒருப வலக் காலாட்சராசனா வானம் இந்துப. டிகார்ம் நால்.

4. ஆறும் இடக்கால், ஆறுப டெக்கால் கனாலைந்தன தகாரம் நால் நவ்வைந்தே, நவ்வைந்தே.

இச்செய்யுள், 12-ஆம் சுவடியில் காணப்படவில்லை.

குறிப்புரை

இம் மந்திரம், மெய்யெழுத்துக்கள் 35-ல் கவ்வினம் முதலாகிய 4 இனங்களில் உள்ள 20 எழுத்துக்களும் உறுப் பாமாறு உணர்த்துகின்றது.

ககாரம் நால் = கவ்விளம் - கவர்க்கம்-4. அவை: க, ெ.ம.வ என்பன. சகாரம் நால் = சவ்விளம்-சவர்க்கம் - 4, அவை அ,ஊஜ, ஞ, என்பன. டகாரம் நால்-டவ்விளம்-டவர்க்கம்-4. அவை:- ட,ഠ,ஸ,ஊ என்பன. தகாரம்-தவ்விளம்-தவர்க்கம்-4. அவை த,மு,ஓ,ய என்பன.

கவர்க்கம் 5ம் வலக்கை. சவர்க்கம் 5ம் இடக்கை. டவர்க்கம் 5ம் வலத்திருவடி. தவர்க்கம் 5ம் இடத்திருவடி என்பதாம்.

இதுவும் அது

55. அய்ந்நாகு கிருபதெழுத் தானது கைகால்
மெய்யாம் பகாரம் விளங்கும் வலவிலா
வெல்யா துரப்புப்பா வேந்து மிடவிலா
பொய்யா பகாரம் போந்த குலையதே.

பாட பேதம்

1. ஐநான், ஐஞ்ஞான், அஞ்ஞான செய்தருளு மக்காக்கி வைகைகால், கிருபதெழுத் தானதங் கைகால் கிருப தெழுத்தானது கைகாலின், கிருபத் தெழுத்தாகுங் கைகாலில்.

2. மெய்யாம் வகாரம், பெவ்வாம் பகாரம், விலங்கு வலவிலா, விள்ளங்கு மல்லவு விலா லெவ துர, வல விலாவிலே.

3. வெய்யா துரம்வி இடவிலா, வெய்யா துரப்புவா லேந்து மிடவிலா, வெய்ய ஹுரப்பீ (பு)ப்ப வேந்து மிடவிலாப், வெய்யாதூரம்வெ வ்வதிடவிலா, வெய்யா துரப்வீது இடவிலா, எய்யா துரப்புவா லேந்து, எய்யா துரப்புப்பா லேந்தும், துரப்பு பாவேந்து, உப்பாக விந்து பிடாவில்.

4. பொய்யாப் பெகாரம், பொய்யாஷூரம், பொய்யா லிக்காரம், பொய்யாப் போகாம், வைப்ப பெகாரம், புரிந்த குலையதே. பிறந்த குலையதே, பிரிந்த முலையதே, பிறந்த விலை (ல) வதே, பீஜத்திருந்ததே.

குறிப்புரை

இம் மந்திரம், பவர்க்கத்தின் முதலில் உள்ள 3-எழுத்துக் களும் உறுப்பாயிருக்கும் முறைமையை உணர்த்துகின்றது.

அய்ந்நான்கு இருபது எழுத்து-(1) கவர்க்கம் 5 (2) சவர்க்கம் 5 (3) டவர்க்கம் 5 (4) தவர்க்கம் 5 ஆக 20 எழுத்துக்கள். எழுத்து என்பது சாதியொருமை; இதனை வடநூலார் சாத்யேக வசனம் என்பர். மெய்ஆம்-21ம் மெய் எழுத்தாயுள்ள. எய்த்தல்-குறைதல்: எய்யாது-குன்றாமல். "எய்த்தெழு பிறையினை வளைவின் றாகநேர்-வைத்துள தெனின்"-இரகு. யாகப். 8. உரப்புதல்-உரப்பிச் சொல்லுதல்; ஐந்து வருக்கங்களிலும் உள்ள 2-ஆம் எழுத்தை உச்சரித்தல். "ஐந்தன் வருக்கத்திலும் உரப்பியும் எடுத்துங் கனைத்தும் சொல்லப்படும் 3-ம்"—நன். 146 மயிலை. பா-பவர்க்கத்துள் 2-ஆம் பகரம். பொய்யா பகாரம்–3ஆம் பகரம். குலை-ஈரற்குலை; மார்புக்கும் உந்திக்கும் இடையில் உள்ளது: "வீரர் குலைகள் அற்றிட"—அரிச். 4 வேட்டஞ். 48.

21. பகரம்-வலவிலா. 22. பகரம்- ഫ இடவிலா. 23. பகரம்- ബ -குலை என்பதாம்.

இதுவும் அது

56. குலையதிற் கீழ்பக் கொண்ட கீழ் வயிறு
நிலையா மகாரமும் நேர்பெற்ற உந்தி
உலையா திலிங்கத்தில் உன்னும் யகரம்
விலையா ரகாரமும் விசத் திருந்ததே.

பாட பேதம்

1. குலையா திருந்துப்பாக் கொண்டது கீழ்வயிறு, குலையது கீழ்படக் கொண்டது றகாரமாம்; குலையதிர் கீழ்படக் கொண்டது லிகரமாம், குலையது கீழ்படக் கொண்டது ഭ கார மாம், குலையாதிதடகுப்பக் கொண்டது கீழ்வயிறு, முலையாதிறக்கிப்பக் கொண்டது கீழ்வயிறு, இலவா இலகுபவர்க் கொண்டகீழ் வைத்து.

2. மகாரம் - உகாரமும்.

3. ஊன்றும் யகாரமே, உண்டு பகாரம்.

4. விலையாம் ரகாரமும், விலைய மகாரம், ரகாரம் ஈகாரம். பீசத் திருந்ததே.

குறிப்புரை

இம் மந்திரம், 24-ஆம் மெய்முதல் 27 ஆம் மெய் வரையுள்ள எழுத்துக்கள் உறுப்பாயிருக்கும் முறைமையை உணர்த்து கின்றது.

கீழ்ப - பவர்க்கத்தில் 4 ஆவதாகிய ஹ காரம். உந்தி-கொப்பூழ். உலைதல்-நிறைகுலைதல். இலிங்கம்-குறி. "விருந்த லிங்கம்"—திருமந்திரம் 455. வீசம் = பீசம்-வித்து. "வீசமும் விந்து விரிந்தது காணுமே"—திருமந்திரம். 1277. உன்னுதல்-நினைத்தல்

24. ஹ-கீழ்வயிறு. 25. ம-உந்தி. 26. ய-குறி. 27. ர-வித்து என்பதாம்.

இதுவும் அது

57. இருந்தமூ லாதாரத் தெய்தும் லகாரம்
பொருந்த வகாரமும் போய குதத்தில்
வருந்த வலமுலை வாய்த்த சகாரம்
இருந்த சகாரம் இடமுலை தன்னிலே.

பாட பேதம்

1. இருந்தது மூலாதாரத், இருத்து மூலாதாரத் தொரு மகாரமும். தென்றும் லகாரம், தென்னும் லகாரம், ஒ காரம், விகாரம்.

2. பொருந்த வகாரம், பொருந்தும் வகாரமும், பொருந்து அகாரமும். பொய்ய, பொய்யத், போய்க், போயா, போயக் குய்யத்தில்.

3. வாய்ந்த செகாரம், வாய்த்த சகாரமும், வாய்த்தி சகாரம், வாய்ந்த ஸகாரம், ஶகாரம், வலமு வாய்த்த சகாரமும்,

4. இருந்த ஷகாரம், இருந்த விகாரம், இருந்த சிகாரிமு மிடமது தானே.

குறிப்புரை

இம்மந்திரம் 28–ஆம் மெய்முதல், 31–ஆம் மெய்வரை உள்ள எழுத்துக்கள் உப்பாயிருக்கும் முறைமையை உணர்த்து கின்றது.

மூலாதாரம் - 6 – ஆதாரங்களுள் முதலாவதாயுள்ள அடி நிலை. "சரீரத்தளவு தன்கையால் 96–அங்குலம். இதனுள் மேலே 47½ அங்குலமும், கீழே 47½ அங்குலமும் விட்டு நடு நின்ற ஒரங்குலம் மூலாதாரம். இதன் மேலே 4–விரல்விட்டுப் பின்னா தாரம் நின்றியங்கும் எனக் கொள்க" (-சிலப் 3 : 26 அடியார்க்). குதம் – எருவிடும் வாயில். வாய்த்த சகாரம் - 30-ஆம் மெய் யாகிய சகாரம்–ஶ. இருந்த சகாரம் - 31-ஆம் மெய்யாகிய சகாரம் – ஷ.

28. ல–மூலாதாரம். 29. வ – குதம். 30. சகாரம் = ஶ – வலமுலை. 31. சகாரம் = ஷ – இடமுலை என்பதாம்.

இதுவும் அது

58. தன்னும் சகாரம் தடமார் நடுநிற்கும்
துன்னும் அகாரமும் தொண்டைக் குழிதன்னில்
மன்னும் ளகாரம் மருவுமே நெற்றியில்
உன்னும் கவ் வென்ற துச்சி யடுத்ததே.

பாட பேதம்

1. தன்னும் ஸகாரம், தன்னும் நுணி சகார தடமார், தன்னும் லகாரம் தடமாவூடு சிக்கு, தன்னு தனுநிலை தடமார் நடுநிற்க, தடமார்புநடு.

2. ஹகாரமும், ஹகாரம், துன்னுமகாரமும், மஹாரமும், மலனனு அரி அகாரம் குழிதனில்.

3. மன்னும் ளு காரம், மன்னு ளகாரம், மன்னு மகாரம். மருவுமேல், மருவும். நெற்றிமேல் நெற்றி. மருவு மேல் நெற்றியில், மருவும் நெற்றிமேல், மருவுமேல் நெற்றி, உடுத்தவு மேல் நெற்றி.

4. உன்னும் க்ஷவ், உன்னுக்ஷவ், உன்னும் மேல்க்ஷவ், உன்னுமேக்ஷவ், உன்னுவிர்க்ஷவ், உன்னில்க்ஷவ், உன்னு மேற்க்ஷவ், உன்னிலரக்ஷவ், உன்னுவீர் க்ஷவ், உனனிலபக்ஷஉன்னியதஷவ். வென்றுச்சி, வென்றேயுச்சி, வென்று உச்சி. யடைத்தே, யடைந்தே, யடைந்ததே.

குறிப்புரை

இம்மந்திரம், 32-ஆம் மெய்ம்முதல் 35-ஆம் மெய்யீறாக நின்ற எழுத்துக்கள் உறுப்பாயமைந்து நிற்கும் முறைமையை உணர்த்துகின்றது.

தடமார்நடு-அகன்ற மார்பின் இடையே. மார்-மார்பு. "இப்பாதகன் மாரின் எய்வனென்று". - கம்ப. இராவணன் வதை 192. தட-பெருமை; உரிச்சொல். "தடவுங் கயவும் நளியும் பெருமை" (.-தொல். 803) உச்சி - உச்சந்தலை.

32. சகாரம்-ஸ-மார்பு. 33 அகாரம்-ஹ-தொண்டைக் குழி. 34. ளகாரம - நெற்றி. 35. கவ்வென்றது-க்ஷகாரம்-உச்சி என்பதாம்.

அத்துவா மூர்த்தியாக இறைவன் இருக்கும் முறைமை பற்றி, இவ்வியந்திரத்துட் பொறிக்கப்பட்டுள்ள 57-எழுத்துக் களும் உறுப்புக்களாகப் பொருந்தி நிற்குமாறு, 51-ஆம் திரு மந்திரம் முதல் இம்மந்திரம் வரை கூறப்பட்டது. இங்ஙனம் அகரமுதல் க்ஷகரமீறாகவுள்ள 51–எழுத்துக்களையும் திரு வுருவாகக் கொண்டுள்ள நிலையில் இறைவனுக்கு வர்ணாத்துவா மூர்த்தி என்று பெயர். இவ்வாறு 51–அட்சரங்களையும் அவயமாகப் பதித்தலை வர்ணநியாசம்—மாதிருகா நியாசம் என்பர். (வர்ணம்-மாதிருகை = எழுத்துக்கள். நியாசம் - பதித்தல்) விரிவு வாதுளம், மாதிருகா விவேகம் முதலிய நூல்களிற் காணத்தக்கது.

51-ஆம் செய்யுள் முதல் 58-ஆம் செய்யுள் ஈறாகவுள்ள இந்தத் திருமந்திரச் செய்யுட்கள் எட்டிலும் சொல்லப்பட்டுள்ள 51 – எழுத்துக்களும் வடமொழியாக்க விதிபற்றித் தமிழில் அமைந்து நின்றன என்க.

இறைவனும் இறைவியும் இயந்திரத்தில் எழுத்துருவாய் அமைந்து நிற்கும் இயல்பு.

59. அடுத்த வியத்திரத் தக்கர மாகி
உடுத்த வுருவுற் றொளிபெற்ற சத்தி
எடுத்த வுருவுற் றிறைவனும் நிற்பன்
அடுத்த கன்மமாதிகள் ஆவதங் கெட்டே.

பாட பேதம்

1. அனைத்த, அடைந்த. வியந்திரத் தக்ஷரமாகி, வியந்திரமாகாரமாதி, வியந்திரம் அகாரமாதி. அபரியந்திரத்தாகியகாரம்.

2. வுருவத்தொளி, புருவத்தொளி, யிருபத்தேயிலப பெத்தசித்தி, வுருவத்தில் தோன்றல் சத்தி. பெற்ற சாதி.

3. வுருவத் திறைவனும், வுருபதிரவனும் நிற்ப பசு, நிற்பான், நிற்கும்.

4. அடுத்தகன் மாதிகள், அடுத்தகண மாமதிகளில் லாத. ஆனதங் கெட்டே, ஆவதங் கெட்டே, ஆவதுமெட்டே; ஆனதொன், றெட்டே.

குறிப்புரை

இம்மந்திரம், இவ்வியந்திரத்தில் இறைவனும் இறைவியும் 51-அட்சவுருவாயிருக்குமாறு உணர்த்துகின்றது.

அடுத்தல் = பற்றுக்கோடாயிருத்தல் — பொருந்துதல். இயந்திரம்-இந்தப் புவனாபதிசக்கரம். அக்கரம் = அட்சரம் - மேலே சொல்லப்பட்ட அகரமுதல் க்ஷகரம் ஈறாயுள்ள 51-எழுத்துக்கள். ஆகி = ஆக-உறுப்புக்களாக. உடுத்தல் - சூழுதல். உரு = உருவம்-அட்சரவடிவம். ஒளி=விளக்கம் - ஞானம்-புகழ். சத்தி-புவனேசுவரி. இறைவன் - புவனாபதி. கன்மமாதிகள் = கன்மங்கள் = கருமம் = தொழில். எட்டு - மேற் கூறப்பட்ட வசியம் முதலாகிய எண்வினைகள்.

இந்தப் புவனாபதி சக்கரத்தில் அமைந்துள்ள 51-எழுத்துக் களும் அங்கமாக அமைந்து நிற்க, இறைவி மேற்கொண்டுள்ள உருவிற்கேற்ற வடிவத்தை இறைவனும் மேற்கொண்டு நிற்பன். இங்ஙனம் இருத்தலினாலே கன்ம சித்தி முதலாய எல்லாச் சித்திகளும் விளையும் என்பதாம்.

நாயக நாயகித் தன்மையின் நிற்றலை வலியுறுத்துவார், "சத்தி எடுத்துருவுற்று இறைவனும் நிற்பன்" எனச் சத்தியின் பெருமை கூறினார்.

மேற்கோள்

சத்தியாய் விந்து சத்தியாய்...
இங்ஙன் வருஞ்சத்தி யொருத்தியாகும்
எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள்.
— சித்தி சுபக் 165

சத்திதான் நாதமாதி . தரும்வடிவானவெல்லாஞ்
சத்தியுஞ் சிவமும் ஆகுஞ் சத்திதான் சத்தனுக்கோர்
சத்தியாஞ் சத்தன்வேண்டிற்றெல்லாமஞ் சத்திதானே.

— 166

"(சத்தியும் சிவமும்) மரமுங் காழ்ப்பும் போல ஒப்ப இயைந்து நிற்றலின், எல்லா திருமேனியுஞ் சத்திசிவம் 2-க்கும் பொது வடிவேயாமாயினும், சத்தனுக்குச் சத்தி தேவியு மாகாலான், அதற்குரிய வடிவு விசேடங் குண விசேடம் பற்றிச் சிவபேதம் சத்தி பேதம் என்றாயின. சத்தனுக்கோர் சத்தியாம் என்றது. வல்லவனுக்கு வல்ல பையாய் நிற்குமெனச் சிவசக்தி கட்கு நாயகநாயகி பாவங் கூறியவாறு நாயக நாயகி பாவ மாதலை வலியுறுத்துவார் சத்தன் வேண்டிற்றெல்லாமாஞ் சத்தி" எனச்சத்தியின் பெருமை கூறினார்.

— சிவஞான. உரை

சத்தியாய் விந்துவாய்...எத்திறம் இறைவன் நின்றனன்
அதனுக்கியைதர அத்திறம் நின்று—விளங்கு பூரணி.

—தணிகைப்

சிவமெனும் பொருளும் ஆதிசத்தியொடு சேரின் எத் தொழிலுஞ் செய்யவல்லதாம்.

—சௌந்தரியலகரீ 1

இவர்தந் திருவுரு இருந்தவா பாரீர்
சத்தியாய் சிவமாய் உலகெலாம் படைத்த தணிமுழு
முதலுமாய் அதற்கோர் வித்துமாய்.

—திருவிசைப்பா 184

நீல மேனி வாலிழை பாகத்து
ஒருவன் இருதாள் நிழற்கீழ்
மூவகை உலகும் முகிழ்த்தன முறையே.

—ஐங்குறுநூறு— 1

பெண்ணுரு ஒருதிறன் ஆகின்று
அவ்வுருத் தன்னுள் அடக்கிக் கரக்கினுங் கரக்கும்.

— புறநானூறு 1

என்பனவற்றால், உலகினுக்கு முழுமுதலாயுள்ள பரம்பொருள், அம்மையப்பராயிருக்குந் தொன்மைக்கோலத்தின் தன்மையை அறிக.

"அக்கரங்கள் இயந்திரங்கள் முதலாய்க் கொடிய மந்திரங்கள் –25 கிருத்தியங்கட்கும்; வசியம், ஆகர்ஷணம், மோகனம், உச்சாடனம், தம்பனம், வித்வேஷனம், பேதனம் மாரணம் ஆகிய அட்டகருமங்கட்கும் அதுவது வாய் நிற்கும் இயல்பினர் என்பது இதன் கருத்து."- தத்துவப் பிரகாசம் 120 உரை. என்பதும் ஈண்டுக் கருதத்தக்கது'

அதி. 7–புவனாபதி சக்கரம்

60. எட்டுத்திசையும் இயல்புடன் நின்றது
சிட்டித் திதியாய்ச் சிறந்தசங் காரமாய்
வட்டத் திருந்த வடிவுள சக்கரங்
கட்டிப் பரனுங் காட்டினன் மாதுக்கே.

பாட பேதம்

1. இயல்பட, இயலாட.

2. சிட்டி திதியாச், சிட்டித் திதியாய்ச், சிட்டித்திதி யாய், சிருஷ்டித் திதியாய்ச்.

3. வடிவுள சத்தாங், வடிவுகள் சக்கரங்.

4. கட்டிப் பரமனுங்.

1–4. கெடையே விதிசெயும் 'இலபாடதி னுதிரதியாபி சிறந்த சங்கரபாணி–வடத் திருந்தால் வடிவுள்ள சக்கரம்—கட்டியே பரமணு காவின மாதுக்கே.

குறிப்புரை

இம் மந்திரம், இதுகாறும் கூறிவந்த புவனாபதி சக்கரத்தின் இயல்பினை உணர்த்துகின்றது.

இயல்பு = இயற்கை - முறைமை. சிட்டி = சிருஷ்டி - படைத்தல். திதி-காத்தல். சங்காரம்-அழித்தல். தோற்றம் - நிலை, இறுதி என்க. வட்டம் = விந்துவட்டம் - மண்டலம். சக்கரம்-புவனாபதி சக்கரம். கட்டுதல் - அமைத்தல். பரன், பரமன் - சிவன் மாது – உமை. 5 தொழில்களுள் மறைத்தல் திதியின் கண்ணும், வீடுபேறு சங்காரத்தின் கண்ணும் அடங்கும் என்பதுபற்றி முத்தொழில் எனத் தொகுத்தும் கூறப்படும்; மறைப்பினுள் ஏனைய 3-ம் அடங்குதல் பற்றிப் "பந்தம் வீடு தரும் பரமன்" (பெரிய. 300) என 2-தொழிலாகவும் வைத்து ஓதப்படும். விரித்துக் கூறுங்கால் 5-தொழில் என்றலே எல்லா ஆகமங்கட்குந் துணிபென்க. (சிவ. போ. 2 : 1 மாபாடியம்) என்பதும் நோக்குக. இந்நூலுள் விரித்துக் கூறப்படும் எண் வினைகளும் இம்முத்தொழிலின்கண் அடங்கும் என்க.

உலக உருவாய் விளங்கும் இந்தப் புவனாதிபதி சக்கரத்தின் இயல்பினை இறைவன் இறைவிக்கு எடுத்துக்கூறியருளினார் என்பதாம்.

மேற்கோள்

ஈச னார்நல் லிறைவிக் கருள்செய்த
பாச மாங்கக் கிசப்பட லந்தன்னை

— தனிச் செய்யுள்

இந்நூலுக்கு கக்கிச படலம் என்ற பெயரும் சுவடிகளிற் காணப்படுகின்றது என்பது முன்னருங் காட்டப்பட்டது (செய். 1 குறிப்புரை).

இதுவும் அது

61. மாதின் பெயரால் வழங்குமிச் சக்கரம்
சோதி யெழுத்துமெண் சொல்லிற்கன் மாதிகள்
ஓதும் உலகத்தில் ஒவ்வொன்று சாதிக்கும்
மாது புவனை மனதில்வைத் தார்க்கே.

பாட பேதம்

1. பெயராய், பேராய், வழங்கவிச், வழங்கிய, விளங்குமிச்.

2. சோதி யுடைத்துமுன், யடைந்துமெண், யடைத்து முன், யடைந்துமென், சோதி லடைந்தது. சொல்லிய கன்மாதி, சொல்வீர் கன்மாதிகள், சொல்லுவர் கன்மாதி, சொல்லீர் கன்மாதி, சொல்வீர் கன்மா, சொல்வீர்கள், சொல்லீர் கன்மாதிகள்.

3. ஓது வுலகத்து ளொவ்வொன்று, ஓது மிலக்கத்தில் சத்திக்கும், சித்திக்கும்.

4. மாது புவனையை, மாதிப் புவனையை மனத்தில் வைத்தாற்கே, வைத்தாருக்கே, வைத்தோற்கு.

குறிப்புரை

இம் மந்திரம், புவனை சக்கரத்தின் ஆற்றலை உணர்த்து கின்றது.

மாதின் பெயரால் வழங்கும் இச்சக்கரம் = புவனை சக்கரம்-புவனாபதி சக்கரம். மாது = மாதா – அன்னை புவனை "அம்மையப் பரேயுலகுக் கம்மையப்ப ரென்றறிக" (—திருக் களிற்றுப்படி 1); "ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டமெல்லாம் – பூத்தாளை" "பூத்தவ ளேபுவ னம்பதி னான்கையும்" (— அபிராமி அந்தாதி) சோதி = ஒளி - சிவன் கடவுள். சோதி எழுத்தும் எண்ணும்-செந்தமிழ்த் தெய்வ எண்ணும் எழுத்தும். "சோதி எழுத்தினில் ஐயிரு மூன்றுள" (—திருமந்திரம் 963) கன்மாதிகள் - வசியமாதி எண்வகைக் கருமங்கள்' சாதிக்கும் = சாதநம்-சித்தி-முடிப்பது காரணம். மாது புவனை-என்னும் இருபெயரொட்டுப் பண்புத் தொகை "ஆதிபகவன்" (—திருக்குறள் 1) என்றாற் போல நின்றது. புவனை-புவனையை; 2ஆம் வேற்றுமைத் தொகை.

புவனாபதியை இச்சக்கரத்திற் போற்றி வழிபடுவாருக்கு அதன்கண் உள்ள எண்ணும் எழுத்தும் அவ்வவற்றிற்கேற்ற எண்வகை வினைகளையும் முடிக்கும் என்பதாம்.

புவனையை மனதில் வைத்தாருக்கு, சக்கரத்தில் வரை யப்பட்டுள்ள எண்ணும் எழுத்தும் சாதிக்கும் என்க. வைத்தல்- தியானித்தல். சிந்தையில் அவன்றன் சேவடி வைத்து''-வைத்தல்- நினைத்தல் தியானம்—சிலப். 11 : 106 அடியார்க்.

இயந்திரத்துள் வரையப்பட்டுள்ள மந்திர உருவான வரி வடிவங்களும், ஒலி வடிவு போலப் பயன்றருதல் கண் கூடாகலான், எழுத்தும் எண்ணும் சாதிக்கும் என்றார். பூதி முதலியவற்றிற் றீட்டிய வரிவடிவும் ஒலி வடிவு போலப் பயன்றரும் ஒற்றுமை குறித்து ஈண்டு அவ்விரு திறனும் விரவிக் கூறினார்'' (-நன். சங் விருத்தி) என்பதுங் காண்க. அந்த வரி வடிவங்கள் தாமும், கட்புலனில் லாக் கடவுளைக் காட்டும் சட்டகம் போன்றன வாகலான், தெய்வத் தன்மை பொருந்தி யுள்ள தொல்லை வடிவினவாக இருத்தல் வேண்டும் என்பதை அவற்றின் முன்னர் அமைந்துள்ள சோதி என்னும் அடை மொழியால் அறிக.

கன்மாதி-கன்மம் ஆதி. கன்மம்-வசியம் முதலான கன்ம சித்திகள் 8. ஆதி-என்றதனானே அணிமா முதலான யோக சித்திகள் 8ம், தன் வயத்தனாதல் முதலான ஞான சித்திகள் 8ம் கொள்ளப்படும். இவற்றை-எண்ணும் எழுத்தும் சாதித்தலை எண்ணெழுத்தைக் கைப்பற்றிக்கொண்டு நீதான் இருந்து விளையாடுவாய் அட்ட சித்தும் (ஆத்தி சூடி ஞானம்) என்பத னாலும் அறிக.

இந்தத் தந்திர கலைத் திருமந்திரம் முந்நூறில் விரித்துச் சொல்லப்படும் 320- வகையினாவாகிய வினையேவல்கட்கும் மூலமாயுள்ள புவனாபதி வழிபாட்டிற்குரிய மூலயந்திர விதானம் ஈண்டுச் சொல்லியுள்ள முறைமைப்படி நன்கு ஆராய்து தெளிந்த பின்னர் விளக்கப்பெறும். மூலயந்திரம் = புவனாபதி சக்கரம்- புவனையந்திரம். அறத்தின் நீள்நகர் புவனைசக் கரமென ஆன்ற- திறத்த பொன்மதில் ஏழுடைச் சின்மயக் கோயில''

— காஞ்சிப் புராணம்–நகரப் படலம் 63

இதுவும் அது

62. வைத்தார் எழுத்தும் வருகின்ற விசமும்
ஒத்தார் அறிவர் உலகிற்கன் மாதிக்கு
வித்தாகி யுண்ணிற்கும் வெவ்வே றிலக்கங்கள்
இத்தா ரணியில் இடுவ தேற்றதே.

பாட பேதம்

1. வாய்க்கு முயிரெழுத்தும் வருகிடை பீசமும்,
வருகின்ற பீஜமும்.

2. அறிவார், அறிய, அறியா, கன்மாதிகள்.

3. யுள்நிற்கும், யுள்ளுக்குண்டுலே வேறு உலகங்கள்.

4. இத்தாரணிமேல், இத்தாரணி சனியிலிடுவது.
இடுவதங் கேத்தே, இடுவதங் கேற்றதே.

முடிவு: சக்கர விதானம் முற்றும்.

உத்தான-விதான-உதாரண-சக்கர விதான-சக்கர விதி முற்றும்.

திருமூலத் தம்பிரான் திருவடிகளே சரணம்.
திருச்சிற்றம்பலம்

சிதம்பரம், அம்பலத்தாடும் ஐயர் மடத்து, வைத்தியலிங்க ஐயர் குமாரன், சாமிநாதையர் கையெழுத்து.

குறிப்புரை

இம் மந்திரம், இம் முதல் தந்திரத்து, மந்திர இயந்திர இயலுள் வைத்து, இதுகாறும் எடுத்துக் கூறப்பட்ட புவனாபதி சக்கரத்தின் முடிபும், மேல் வரும் எண்வினை யேவல் தந்திர இயலுக்குத் தோற்றுவாயும் உணர்த்துகின்றது.

எழுத்து–51 = அட்சரங்கள். பீசம்–சத்தியின் பீச முதலாக மேலே சொல்லப்பட்ட மூல எழுத்துக்கள். ஓத்தல்–கேள்வியால் தெளிந்தவற்றில் உள்ளம் ஊன்றி நிற்றல் (பிங்). கேள்வி - உபதேசம். வித்து - காரணம். கன்மம் – எண்வகைக் கருமம். உள்–இயந்திரத்தினுள்ளே. தாரணி = தரணி = பூமி. தா–பரப்பு. இடுதல் - தொடங்குதல்.

எண்வகை யேவல் வினைகளுக்கும் மூலமாயுள்ள இலக்கங்கள், வித்தெழுத்துக்கள், 51 எழுத்துக்கள் ஆகியவற்றை இயந்திரத்துள் வரைந்து வழிபடும் முறைமையை அநுபவமுடைய நல்லாசிரியர்பால் கேட்டுத் தெளிந்து அவற்றின் மெய்ப்பொருளை உணர்ந்தவரே அறிவர் என்பதாம்.

3, 4-ஆம் அடிகளில் மேல் வரும் அதிகாரத்திற்குத் தோற்றுவாய் செய்யப்பட்டது; நன்கலம் நன்மக்கட் பேறு (திருக்குறள் 60) என்றாற்போல.

2-ஆம் தந்திரம்

2. எண் வினை ஏவல் இலக்க வியல்

[அட்ட கன்மப் பிரயோக இலக்கம்]

8-ம் அதிகாரம்-வசியவினை

(வசிய கன்மப் பிரயோக இலக்கம்)

1. வசிய கருமத்தின் வகை-6

1. உலகவசியம், 2. அரசர் வசியம் ஆகியவற்றின் இலக்கங்கள்

63. ஏற்றது லோக வசியத் திடுலக்கம்
நூற்றஞ் சறுபத்து நாலும் பதினாறும்
நூற்றஞ் சறுபத்து நாலும் இருபதும்
ஏற்ற விராச வசியங் கொண்டதே.

பாட பேதம்

1. ஏற்றிடு, வசியத்து லெக்கம். திடும்லக்கம்; திடுமிலக்கம்.

2. நூற்றைஞ், நூற்றஞ்சு அறுபத்து, சறுபது. பதினாலும், பதினாலுமிக.

3. நூற்றைஞ் சறுபது.

4. ஏற்றுமிராச, ஏற்று விராச வசியமே, வசித்தொழிற், வசியத்தொழிற், வசியத்தொழில், வசியத்தெழில் கொண்டே.

குறிப்புரை

மேலே (செய். 8–11), நிறுத்த முறையானே முதற்கண் வசியகருமம் கூறுவானெடுத்துக் கொண்டார். அவற்றுள் இம் மந்திரம், உலகவசியம் அரசர் வசியம் ஆகியவற்றிற்குரிய இலக்கம் உணர்த்துகின்றது.

1. உலக வசிய வினையேவலின் இலக்கம்.
—105–64–16.

2. அரசர் வசியவினையேவலின் இலக்கம்-105–64–20. கட்ச புடத்திலும் அரசர்வசிய இலக்கம் ஈண்டுக் குறித்துள்ளவாறே காணப்படுகின்றது.

சுவடிகளிற் காணப்படும் இலக்க வேறுபாடுகள்.

1. உலகவசியம்:—105-64-16=185.
105-64-14=183.
64. 90· 94· 183·
183ஓ0· 185· 200.

2. அரசர் வசியம்:—105-64-20=189·
105-64-24=193·
169-20=189· 20·
93· 96 120· 189,

இவ்விலக்கங்களும், இவைபோல் மேல் வரும் இலக்கங்களும் ஈண்டுக் காட்டியுள்ளபடியே சுவடிகளிற் பலவாறு வேறுபட்டுக் காணப்படுகின்றன. இவற்றின் உண்மையான மூலபாடத்தைத் துணிவதற்குச் சுவடிகளின் துணையேயன்றி வேறு வழி ஒன்றுமில்லை. ஆதலால், ஈண்டு மேற்கொள்ளப்பட்ட மூலபாடமானது, சுவடியெண் 15-20 ஆம் இலக்கமிட்டவற்றுள்ளும், பிறவற்றுள்ளும் காணப்படும் ஒப்புமைப் பகுதி முதலாகிய குறிப்புக்களையும், மற்றுஞ் சில நியதிகளையும் பின்பற்றித் துணியப்பட்டதாகும்.

ஈண்டுக் குறித்தவாறே, ஒவ்வொரு கருமங்கட்கும் மூன்று மூன்று இலக்கங்கள் இந்நூலுள் பெரும்பாலும் சொல்லப்பட்டுள்ளன. வேறு சில சுவடிகளினும் இவ்வாறே காணப்படுகின்றன. மற்றுஞ் சில சுவடிகளில், இந்த மூவகை இலக்கங்களுடன், முடிவில் அவற்றின் மொத்தக் கூட்டுத் தொகை இலக்கங்களுங் காணப்படுகின்றன. பிற சுவடிகள் சிலவற்றில்: இம்மூவகையிலக்கமுமின்றி அவற்றின் கூட்டுத் தொகையாயுள்ள மொத்த இலக்கம் மட்டுமே காணப்படுகின்றது.

த்ரிவிதேஸ்மிந் யதாகாமம் சங்க்யாம்
ஏகாம் விகேத் புத:

யந்த்ரேஸ்மிந் விலிகேத் சங்க்யா
காமிதாம் வரவர்ணி நீ.
—புவனை கட்சபுட தந்த்ரம்

என்பதனால், இம்மூவகை இலக்கங்களுள் விருப்பத்தின்படி எதையேனும் மேற்கொள்ளலா மென்று தெரிகின்றது. ஆயினும் ஒவ்வொரு வினையேவல்களுக்கும் மூன்று மூன்று இலக்கங்கள் கூறப்பட்டிருத்தலின் நோக்கம் நுணுகி அறியத்தக்கதாகும். மந்திரவுருவாயுள்ள இந்த இலக்கங்களுக்கும், அவற்றின் வினையேவல்களுக்கும் அமைந்துள்ள இயைபும், அவற்றாற் குறிக்கப்படும் பொருளும், பிறவும் புலனாகாமல், பயனுறுவித்தலில் மட்டும் பொய்க்காமல் இருத்தலினாலே, வாய்மொழியாயுள்ள

இவைகள் தமிழ்முறை வழக்குப்படி நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழியாயுள்ள மந்திரமாயின என்க

அசைவில் செழுந்தமிழ் வழக்கே அயல்வழக்கின் துறை வெல்ல.

— பெரிய 1927

தமிழ்நெறி வழக்கம் அன்ன தனிச்சிலை வழங்கச் சாய்ந்தார்.

— கம்ப. 6. 33:25

என்பனவும் ஈண்டு நோக்கத்தக்கன. இந்த எண்களும், இவ்வாறே மேல் வரும் எண்களும், அவற்றுடன் இயைந்து அறைகளில் நிற்கும் எழுத்துக்களும் அம்மையப்பரான சிவசத்தி யரின் மந்திரத் திருமேனியாகும் என்க. இறைவனுக்குரிய தடத்தலக்கணம் எனப்படும் பொதுவியல்பில் அவனுக்குள்ளன வாகக் கூறப்படும் வடிவங்கள் மூன்றாம். அவை தூலவடிவம், சூக்கும வடிவம்,' அதிசூக்கும வடிவம் என்பன: அவற்றுள் இயந்திரத்தில் எண்ணும் எழுத்துமாய் நின்று அருள்புரியும் நிலை சூக்கும வடிவமாகும்.

மேற்கோள் :

எண்ணும் எழுத்தும் இனஞ்செயல் அவ்வழிப்
பண்ணுந் திறனும் படைத்த பரமனை.

—திருமந்திரம் 3041

எண்ணானாய் எழுத்தானாய் எழுத்தினுக்கோர்
இயல்பானாய். —தேவாரம் 4288

எண்ணும் எழுத்துங் குறியும் அறிபவர். — 5062

எண்ணானாய் எழுத்தாய் கடலேழானாய். — 6364

எண்ணவன்காண் எழுத்தவன்காண் இன்பக்
கேள்வி இசையவன்காண் இயலவன்காண்
எல்லாங்காணுங்-கண்ணவன்காண், — 6728

எண்ணும் எழுத்துஞ்சொல் ஆனாய்போற்றி — 6800

எண்ணதனில் எழுத்தை — 6846

வேலைசூழ் ஞாலத்தார் விரும்புகின்ற—
எண்ணாகி எழுத்தாகி இயல்புமாகி ஏழுலகுந்
தொழுதேத்திக் காண நின்ற-கண்ணாகி மணியாகி — 7066

எண்ணாகி எண்ணுக்கோர் எழுத்துமாகி
எழுஞ்சுடராய் எம் அடிகள் நின்றவாறே. — 7164

எண்டானே எழுத்தோடு சொற்பொருள்
எல்லாமுன் கண்டானே. — 8205

என்னும் அருண்மொழிகளும் ஈண்டுக் கருதத் தக்கன.

இனி, முதல்வன் தன்னிலையாகி சொரூபலக்கணம் எனப்படும் சிறப்பியல்பு பற்றி "எண்ணல்லை எழுத்தல்லை எரியும் அல்லை" (-தேவாரம் 6699) என்று மொழியப்பட்டிருத்தலும் ஈண்டு அறியத்தக்கது.

"எண்ணெழுத்தைக் கைப்பற்றிக்கொண்டு நீதான் இருந்து விளையாடுவாய் அட்டசித்தும்"[-ஆத்திசூடிஞானம்]என்பதனால், ஈண்டுக் குறிக்கப்படும் எண்ணும் எழுத்துமாகிய மந்திரங்கள் 2-ம் வசிய முதலான எண்வினையேவல்கட்கும் மூலமாயிருத்தலையறிக.

வசியமாவது: அரச வசியம், ஸ்த்ரீ வசியம், ஜநவசியம் முதலியன.

—தத்துவ நிசாநுபோகசாரம் அத். 42 கவுளயாமளை மதம்.

(3) மாதர் வசியம். (4) மைந்தர் வசியம்.

64. கொண்டது மாதர் வசியங் குவலயத்
தெண்பதி னேழும் எழுபதன் பத்தாறும்
எண்பதி னாலும் பதினாறும் நூற்றொன்றும்
புண்பட் டுழலும் புருடர் வசியே.

பாட பேதம்

1. குவலயத், குவலையத்து, குவலையத்தில்:
2. எண்பத்தி னேழும், எழுபத்தன், எழுபதைம்.
3. எண்பத்தினாலும் பதினாலும்.
4. பண்பட். புருஷ, புருஷர். வசியமே.

குறிப்புரை

இம்மந்திரம், மாதர் புருடர்களின் வசிய இலக்கம் உணர்த்துகின்றது.

குவலயம் = பூமி – உலகம். உழலல் = சுழலல் – தடுமாறுதல் வசி = வசியம் - வசீகரம் – வசீகரிப்பு (சிலப்)

3. மாதர் வசிய இலக்கம் : 87–70-56.

4. மைந்தர் வசிய இலக்கம் : 84-16-101.

கட்சபுடத்திலும் இவ்விலக்கங்களுக்கு உரிய வாக்கியங்களே காணப்படுகின்றன.

இலக்க வேறுபாடு

3. பெண்டிர் வசியம் - ஸ்த்ரீ வசியம் - பெண் வசியம் – ஸ்ரீ வசியம்:-

87-70–56 = 213. 87-75-6. 44. 105. 175. 213-ஹ்ரீம்.
ஸ்ரீ வசியமாவள்:—64. 116. 135.

ஸ்ரீ வசியமாம் - லட்சுமிவசியமாம் - 116.
திரிபுருஷ வசியம்-158.

4. ஆடவர் வசியம் - புருஷவசியம்:- 84 - 16–101 = 201.
84-14-101 = 199· 100· 101· 117· 130· 199· 201·

(5) பகைவர் வசியம். (6) விலங்கு வசியம்

65. வசியமாஞ் சத்துரு வைத்தநூற் றஞ்சும்
இசையநாற் பத்திரண் டெண்பத்தெட்டாகும்
அசைய விருகம் அன்பத்தஞ் செண்பதும்
ஒசியறு பத்தாறும் ஓதுமந் திரமே

பாட பேதம்

1. சத்துருவும். வைத்துநூற், தைத்தார்நூற்றைந்தும்.

2. இசையுநாற், இசையநாற்பத்திரண்டு எண்பத்தெட்டாகும்.

3. அசையு, இசைய, இசையு.மிருகமும். அம்பத்தஞ்-ஐம்பத்தஞ். செண்பது, செண்பதுடன், சென்பது.

4. ஒசியவறு, உசியறு, முசியறு. பத்தாறுக்கும், பத்தாறோதுமோர் மந்திரமே, பத்தாறோது மந்திரமே, ஓதுவோம் மந்திரம், ஓதுமொரு மந்திரமே, பத்தாறும் ஓதுமோரி, ஓதுபேர் மந்திரம்.

குறிப்புரை

இம்மந்திரம், பகைவர், விலங்குவசியங்களின் இலக்கமும், அறுவகை வசியவினை ஏவல்களுக்குமுரிய மந்திரத்திற்குத் தோற்றுவாயும் உணர்த்துகின்றது.

சத்துரு-பகைவர். விருகம்=விலங்கு-மிருகம். பல் விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகி.

திருவாசகம் 1 : 27

5. பகைவர் வசிய இலக்கம்:— 105-42-88

6. விலங்கு வசிய இலக்கம்:— 55-80-66

கட்சபுடத்திலும் இவ்விலக்கங்களுக்கு உரிய வாக்கியங்களே காணப்படுகின்றன.

இலக்க வேறுபாடு

5. பகைவர் வசியம்-சத்துருவசியம்:—

105-42-88 = 235 · 48-88-105·

64 · 75 · 116·

205 · 235 - ஓ0·

6. விலங்கு வசியம்-மிருக வசியம்:—

55-80-66 = 201·55-86-16.

100-ஹ்ரீம்.

160·20-209.

அகிலஜன வசியம் – 64· 35· சகலவசியம் - சகலமும் வசியம்:— 70-80.

முகவசியம்-91. முகவசியம்-மாதர் மோகனம்:— 24-35-48· 50·91·

யானை வசியம் - கஜவசியம்:— 75· 140 - க்லீம்புவநேசு வர்யை நம:॥

மந்திரம் — 1

1. வசிய வினை ஏவல் - வசிய கருமப் பிரயோக மந்திரம் - 1

ஓம் ஸ்ரீம் அம் டம் ஆம் ஹ்ரம் ஸ: சி வா ய ஹ்ரீம் ஊம்

ட்சிமிரியூம் க்லீம் விரு விரு க ண ப தே கம் கம்

வ ர வ ர த ஸ ர்வ லோ க ஜ நம் ம ம

வ சம் ஆ ந ய கு ரு கு ரு ஸ்வா ஹா —

ஓம் சிரீம்அம் ட்டம்ஆம் ஹ்றம் ஸ : சி வா ய ஹ்ரீம் ஊம்
ட்சிமிரியூம் க்லீம் விரு விரு க ண ப தே கம் கம்
வ ர வ ர த ஸர்வ லோக ஜ நம் ம ம
வசம் ஆ நய குரு குரு சு வா கா—

பாட பேதம்

1. ஓம் ப்ரோம் ஸ்ரும் டம் ஆம் ஹ்ரம் ஸம் சி வா ய ஹ்ரீம் ஊம்

ட்சிமிரியூம் க்லீம் வி ரு வி ரு வ ந்தே க ண ப தீம்

கம் கம் வ ர வ ர த ஸ ர்வ லோ கம் ம ம

வ சம் ஆ ந ய கு ரு கு ரு ஸ்வா ஹா —

ஓம் புரோம் நிரும் ட்டம் ஆம் ஹறம் ஸம் சிவாய ஹறீம்
ஊம் ட்சிமிரியூம் க்லீம் விரு விரு வந்தே கணபதீம்
கம் கம் வர வரத ஸர்வ லோகம் மம
வசம் ஆநய குரு குரு சுவா கா —

2. ஸௌம் ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் ஸ்ரும் ஹ்ரம் ஸம் சி வாய ஹ்ரீம்

ஊம் ட்சிமிரியூம் க்லீம் வி ரு வி ரு வ ந்தே க ண ப தீம்

கம் கம் வ ர வ ர த ஸ ர்வ லோ கம்

ம ம வ சம் ஆ ந ய கு ரு கு ரு ஸ்வா ஹா—

வசிய வகை ஆறுக்கும் உரிய மந்திரம் இது

ஐம் ஓம் சிரீம் ஹ்றீம் க்லீம் ஆம் ஹம் ஸம் சிவாய ஹ்ரீம்
ஊம் ட்சிமிரியூம் க்லீம் விரு விரு வந்தே கணபதிம்
கம் கம் வர வரத ஸர்வ லோகம்
மம வசம் ஆ நய குரு குரு ஸ்வாகா-

வசிய வகை ஆறுக்கும் உரிய மந்திரம் இது

3. ഓം ഭ്രാം കം കാം ടം ഐം ക്ലീം ശിവായ ക്രൂം ക്ലീം
യം ക്രൂം ഉം ക്ഷം ക്ലീം സ്വാ ഹാ ഗം ഗ ണ പ തെ
വ ര ദ വ ര ദ സർവ്വ ലോക ജ നം
മെ വ ശം ആ ന യ സ്വാ ഹാ–

ஓம் ப்ராம் கம் காம் டம் ஐம் க்லீம் சிவாய க்ரம் க்லீம்
த்தம் ஆம் உம் க்ஷம் க்லீம் சுவாகா கம் கண ப தே
வ ர த வரத சருவ லோக
ச நம் மே வசம் ஆ நய சு வா கா –

4. ഓം ഭ്രം കം കാം ടം അം ക്ലീം ശി വായ ക്രീം ക്ലീം
യം ക്രൂം ഉം ക്ഷം ക്ലീം സ്വാ ഹാ ഗ ണ പ തി
വ ര വ ര ദ സ വ൪ ലോ ക ജ നം മെ വ ശം
ആ ന യ സ്വാ ഹാ-

ஓம் ப்ரம் கம் காம் டம் அம் கிலீம் சிவாய க்ரீம் க்லீம்
தம் ஆம் உம் க்ஷம் கிலீம் சுவாகா கணபதி
வர வ ர த சர்வ லோக ச நம் மே வ சம்
ஆ ந ய சு வா கா -

5. ஓ௦ ப்ர௦ க௦ கா௦ ட௦ அ௦ க்லீ௦ ஶி வாய க்ர௦ க்லீ௦
ய௦ ஆ௦ உ௦ க்ஷ௦ க்லீ௦ ஸ்வா ஹா விரு விரு
க ண ப தி வ ர வ ர த ஸர்வ லோ க
ஜ ந௦ மே வ ஶ௦ ஆ ந ய ஸ்வா ஹா—

ஓம் ப்ரம் கம் காம் டம் அம் க்லீம் சிவாய க்ரம் க்லீம்
தம் ஆம் உம் க்ஷம் க்லீம் சுவாகா விரு விரு
கணபதி வர வரத சர்வ லோக
சநம் மே வசம் ஆ நய சு வா கா -

6. ஓ௦ ப்ரோ௦ அ௦ ஆ௦ ட௦ அ௦ க்ஷ௦ ஶி வாய க்ஷ௦ ஹ்ரீ௦
க்ஷ௦ ய௦ ஆ௦ ஊ௦ ட்ச்ம்ரி௦ க௦ ஸ்வா ஹா—

இது, உள் மந்திரம். சோடச அறைக்குள் இடவும்.

ஓம் ப்ரோம் அம் ஆம் டம் அம் க்ஷம் சிவாய க்ஷம்
ஹ்ரீம் க்ஷம் யம்
ஆம் ஊம் ட்ச்மிரம் கம் சுவாகா.
இது, உள் மந்திரம். சோடச அறைக்குள் இடவும்.

7. ஓ௦ ஊ௦ ஔ௦ அ௦ ஆ௦ அ௦ க்ஷ௦ ஶி வாய ஹ்ரீ௦ க்ஷ௦
ஆ௦ ஊ௦ ட்ச்ம்ரி௦ க்லீ௦ ஸ்வா ஹா—

வசியம் ஆறுக்கும் மந்திரம். இதைப் புற வட்டத்தில் இடவும்.

ஓம் ஊம் ஔம் அம் ஆம் அம் க்ஷம் சிவாய ஹ்ரீம் க்ஷம்
ஆம் ஊம் ட்ச்மிரம் க்லீம் சுவாகா—
வசியம் ஆறுக்கும் மந்திரம். இதைப் புற வட்டத்தில் இடவும்.

8. ஓம் விரு வி கூ ம ண வசிம் ம ணம் வர வரத

ஸ வ-ர லொ க ஜ நம் மெ வ ஶ மா நாய ஸ்வா ஹா. ஓம்-

இது சூலத்திடை வெளியிலிடவும்.

ஓம் விரு விக்ர கணபதிம் கணம் வர வரத சர்வ லோக
சநம் மே வசம் ஆநாய சுவாகா ஓம்.
இது சூலத்திடை வெளியில் இடவும்.

9. ஆக வசிய வகை ஆறுக்கும் செபம்:

ஓம் ஆம் அம் ஆம் டம்

க்ஷம் க்ஷம் சிவாயம் ஹ்ரீம் க்ஷம் யம் க்ஷம் ஊம் ஆம் க்லீம்

ஸ்வா ஹா-

இதற்கு ஊ (இம்) மந்திரம் **சோடச அறைக்குள்**
இடவும்.

ஆக வசிய வகை ஆறுக்கும் செபம்:
ஓம் ஆம் அம் ஆம் டம் அம் க்ஷம் சிவாயம் ஹ்ரீம் க்ஷம்
யம் க்ஷம் ஊம் ஆம் க்லீம் சுவாகா-
இதற்கு ஊ(இம்) மந்திரம் சோடச அறைக்குள்
இடவும்.

10. ஓம் விரு விரு ம ண வசிம் ம ணம் வ ர வ ர த

ஸ்வ-ர லொ க ஜ நம் மெ வ ஶ மா நா ய ஸ்வா ஹா ஓம்.

இது சூலத்திடை வெளியில்.

ஓம் விரு விரு கணபதிம் கணம் வர வரத சர்வ
லோக சநம் மே வச மாநாய சுவாகா ஓம்.
இது சூலத்திடை வெளியில்.

11. வசியம் ஆறுக்கும் மந்திரம்: ஓம் ஸ்ரம் அங் அங டங் டங் கஷ்ட சிவாய ஸ்ரீயும் க்ஷமைய அங்கிஷ தூங் கிலியும் சுவாஹா-ஓம் விரு விரு கணபதி வா வா ஸர்வ லோக ஜனம் என்வச மானய சுவாஹா-ஊம் ஔம் அம ஆம் அம் க்ஷம் சிவாய ஹ்ரீம் க்ஷம் ஆம் ஊம் மம் க்ஷீரம் க்லீம் ஹ்லா ஹா ஓம்

புறவட்டத் திடவும்.

12. ஊம் ஔம் ஈம் சூம் ஈம் க்ஷம் ஶிவாய ஹ்ரீம் க்ஷம் க்ரூம் ஊம் ஊம் க்ஷீரம் க்லீம் ஹ்லா ஹா ஓம்-

புறவட்டத்திலிடவும்.

13. ஓம் ஹ்ரம் ஊம் க்ரூம் ஊம் க்ஷம் க்லீம் ஹ்லா ஹா விரு விரு கெண
வர வர த ஸர்வ லோக ஜநம் மே வஸ மா நய ஹ்லா ஹா-

ஓம் ஸ்ரம் அம் ஆம் ஊம் க்ஷம் க்லீம் சுவாஹா
விரு விரு கெண வர வர வரத சர்வ லோக சநம்
மே வசமா நய சுவாஹா-

14. ஓம் பிறாம் அம் ஆம் ஷம் சிவாய ஸ்ரீம் ஷம் ஔ யம் ஆம் ஊம் ஸமிரிங் க்லீம் சுவாஹா.

15. மூல மந்திரம்: ஸ்ரீயும் — ஸ்ரீம் — ஸ்ரீம் — ஓம் —ஸ்ரீயும்— ஹ்ரீம் க்லீம் புவனாதி பதயே ஐம் நம-

மூலமந்திரம்: ஸ்ரீயும் – ஸ்ரீம் – ஸ்ரீம் – ஓம் – ஸ்ரீயும் – ஹ்ரீம் - க்லீம் - புவனாதி பதயே ஐம் நம-

16. வசியமந்திரம்: ஓம் – பிறாம் – அம் – ஆம் – ஷம் – சிவாய– ஸ்ரீம் – ஷம் – யம் ஆம் - ஊம் - ஸமிரிங் - க்லீம்-சுவா ஹா ||.

வசிய மந்திரம்: ஓம் — ப்ராம் — அம் — ஆம் — ஷம் — சிவாய ஸ்ரீம் — ஷம் — மம் — யம் —ஆம் — ஊம் — சமிரிங்— க்லீம் — சுவாஹா-

17. 𑌅𑌥 𑌵𑌶𑍍𑌯 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌃 : 𑌓𑌂 - 𑌹𑍍𑌰𑍀𑌂 - 𑌬𑌂 - 𑌕𑍍𑌷𑌂 𑌵𑌷𑌟𑍍 -
𑌸 - 𑌰𑍍𑌵 𑌜 - 𑌨𑌂 - 𑌮𑍇 - 𑌵 𑌶𑌂 - 𑌆 𑌨 - 𑌯 - 𑌸𑍍𑌵𑌾 𑌹𑌾 -

அத வசிய மந்த்ர: ஓம் — ஹ்ரீம் - பம்—க்கம் — வஷட் சர்வ —ச—நம்—மே—வ—சம்—ஆ—ந—ய—சுவாஹா-

குறிப்புரை

ஓதும் மந்திரமே - என்று தோற்றுவாய் செய்து கொண்டவாறே ஆசிரியர் திருமூலதேவர், அறுவகைப்பட்ட வசிப்புவினை ஏவல்களுக்குரிய மந்திரங் கூறுகின்றார்.

வசிய கன்மத்தின் வகை 6: அவை: 1. உலக வசியம் 2. அரசர் வசியம் 3. மாதர் வசியம் 4. மைந்தர் வசியம் 5. பகைவர் வசியம் 6. விலங்கு வசியம் என்பன.

மேற்கோள்:

ஏய்ந்த வரிதாரம் ஏட்டின்மே லேபூசி
ஏய்ந்த வகாரம் உகாரம் எழுத்திட்டு
வாய்ந்ததோர் வில்வப் பலகை வசியத்துக்
கேய்ந்தவைத் தெண்பதி னாயிரம் வேண்டிலே

— திருமந். 1001

உரைக்கு மியந்திரம் வெள்ளிபொன் செம்பிவற்றுள்
ளெழுதித்தரிக்க வசியங்கள் ஆறுந்தரும்

— புவனை கலைஞான தீபம் 59

லோக ராஜ வதூ மர்த்ய ம்ருகா ரீணாம் யதா க்ரமம்
வசியந்து சட்விதம் ஞேயம் ஆக மேஷு நிதர்சிதம்

— கட்சபுடம்

என்பன காண்க.

அறுவகைப்பட்ட வசிய கன்மப் பிரயோகங்களுக்கும் உரியதாக ஈண்டு மூல பாடமாக மேற்கொள்ளப்பட்ட மந்திர மானது, கணபதியை அதி தெய்வமாகக்கொண்ட வசியசித்தி மந்திரமாகும்.

மேற்கோள்

காணா பத்ய மநும் வட்ச்யே வசிய சித்திப் ரதாயகம்
பிரணவம் ஸ்ரீய முச்சார்ய அம் ட்டம் ஆம் ததநந்தரம்
ஹம் ஸச்சி வாயப் புரோச் சார்ய ஹ்ரீம்ஊம் ட்ச்மிரியூம்
க்லீம் பதம் வதேத் -
விருத்வயம் சமுச்சார்ய வதேத்கணபதிம் தத:
காணா பத்யம் சமுச்சார்ய துவிவாரம் பீசம் அம்பிகே
வரஞ்ச வரதஞ் சைவ சம்புத்யா யோஜ யேத்தத:
சர்வலோக பதம் புரோத்வா பச்சாந் மமவசம் பிரியேம்
ஆநயேதி குருத்வந்தம் ஸ்வாஹாந்தம் மந்த்ர ராஜகம்
அஷ்டா சத்வாரிம் சதர்ண: காணா பத்ய மநுஸ்ம்ருதம்
— கட்ச புடம்

காணா பத்ய மநும் வட்ச்யே லேகநாத் சித்தி தாயகம்
ப்ரணவம் ப்ரோம் சமுச்சார்ய ந்ரூம் ட்டம்ஆம் தத நந்தரம்
ஹம்ஸம் சிவாய ஸமுச்சார்ய ஹ்ரீம் ஊம் ட்ச்மிரியூம் க்லீம் வதேத் புத 8
விருத்வயம் சமுச்சார்ய வந்தேத் கணபதிம் ததா. -
காணா பத்யம்சமுச் சார்ய த்விவாரம் பீஜமம்பிகே
வரஞ்ச வரதஞ்சைவ சம்புத்யா யோஜயேத் புத 8
சர்வ லோக பதம் பச்சாத் பச்சாந் மமவசம் ப்ரியே
ஆந யேதி குருத் துவந்தம் ஸ்வாகாந்தம் மந்த்ர யோஜகம்
வச்யா நாந்து வரா ரோகே சண்மாம் மநுரயம் ப்ரியே
—பாட பேதம்

என்பன காண்க. இவற்றால், கணபதியை அதிதெய்வமாகக் கொண்டுள்ள இந்த வசிய கர்மப் பிரயோக சித்தி மந்திரமானது, 48-எழுத்துக்களை உடையதாகும் என்பது விளங்கும். இம் மந்திரமும் இவ்வாறே மேல்வரும் பிரயோக மந்திரம் முதலியன

வும் மந்திர வகைகளுள் மாலா மந்திரம் என்னும் இனத்தைச் சேர்ந்தனவாகும்.

கணபதியின் மூல மந்திரம்

ஓம் சிரீம் ஹ்ரீம் க்லீம் க்லௌம் கம் கணபதயே வர வரத சர்வ லோக ஜநம் மே வசம் ஆநாய சுவாகா.

—கணேச மூல மந்திரத் திரிசதீ – ஸஹஸ்ர நாமங்கள்.

என்பதும் ஈண்டு நோக்கத்தக்கது.

இம் மந்திரமும், இதுபோல் மேல்வரும் எண்வினை யேவல் மந்திரம் முதலியனவும் ஆசிரியர் திருமூல தேவராலேயே குறிப்பிடப்பெற்றவை என்பது; இம் மந்திரங்களின் முன்னர்த் தோற்றுவாயாகவும், பின்னர் வழிமொழிதலாகவும் அமைந்துள்ள இந்நூற் செய்யுட்களால் நன்கு விளங்கும். எனவே, இது முதலாகவரும் மந்திரத் தொகுதிகளையும் இம்மந்திர மாலையின் மூல பாடமாகவே கொள்ளுதல் ஏற்புடைத்தாகும்.

இந்த வசிய கன்மப் பிரயோகத்திற்குச் சொல்லப்பட்டுள்ள மந்திரத்திலும், அதற்குக் காட்டப்பட்டுள்ள கட்சபுட தந்திர மேற்கோளிலும், அவற்றின் பாட பேதங்களிலும் பலவாறாகக் காணப்படும் விருவிரு – வீருவீரு – விறுவிறு – வீறுவீறு - என்னுந் தொடர்கணபதியைப் பற்றியுள்ள மந்திரங்கள் பலவற்றிலும் காணப்படுகின்றது. இத்தொடரினையும், இவைபோல் மேல் வருவனவற்றையும் தமிழின் சிதைவாயுள்ள பாகத மொழி (தக்க. 323 உரை) என்பர்.

வசிய கன்மத்தின் மந்திரமும் யந்திரந் தரிக்கும் இடமும்

66. மந்திரம் ஒன்றாம் வசியமோ ராறுக்கும்
தந்த வியந்திரந் தாங்குந் தலைமேலே
தந்த வியந்திரஞ் சத்தி திருமேனி
வந்ததி யானம் வருவது காணே.

பாட பேதம்

1. மந்திரம் ஒன்றாகும் வசியம் ஆறு, ஒன்றாய் வசியம தாறுக்கும்.

2. தந்தந்த வியந்திரந், தந்தவிம் மந்திரந், தந்தவிவ் வியந்திரம் தாங்கு தலைமேல், தாங்கத் தலைமேல், தாங்கத் திருமேனி.

3. தந்தவி யெந்திரச் சத்தி, தந்தவிவ் யெந்திரச்சத்தி தந்திர வியந்திர(ந்) தாங்கத் திருமேனி, எந்திரம்.

4. வந்த தனித்திது வருவது, வந்தனை திக்கு வகுத்தது, வந்தன, வந்த நியதி (கதி) வருமது, வந்தவ நிற்றறிகு வருமது.

குறிப்புரை

இம் மந்திரம் அறுவகைப்பட்ட வசிய கருமங்களின் மந்திரமும், அவ்வியந்திரங்களை அணியத்தக்க இடமும் அவற்றின் சொரூபத்தியானத்திற்குத் தோற்றுவாயும் உணர்த்துகின்றது.

வசியம் ஆறு – மேலே சொல்லப்பட்டனவாயுள்ள 1. உலகம் 2. அரசர் 3. மாதர் 4. மைந்தர் 5. பகைவர் 6. விலங்கு என்னும் வகைகளைப்பற்றி வரும் வசிய வினைகள்-6.

மேற்கோள்

உரைக்கும் இயந்திரம் வெள்ளிபொன் செம்பிவற் றுள்
ளெழுதித் - தரிக்க வசியங்கள் ஆறுந்தரும்
— புவனை கலைஞான தீபம் 59

தோன்றுமிவ் வெந்திர சிந்தாமணிதனைச் சொல்லில்இரு
மூன்று வசியந் தருஞ் — 68

லோக ராஜ வதூ மர்த்ய மிருகா ரீணாம் யதாக்ரமம்
— கட்சபுடம்

என்பனவும் அறிக.

படம் 1 செம்மை நிறம்



வசிய கன்மத் தியானத் திருவுருவம்

செய்யுள்: 67

MARA PUBLIC LIBRA

ஆறுவகைப்பட்டனவாயுள்ள வசியவினை ஏவல் 6க்கும் உரிய மந்திரம் இஃது ஒன்றேயாகும். இம்மந்திரம் வரையப் பெற்று முறைப்படி வழிபாடாற்றி முடிக்கப்பட்ட இயந்திரத்தை, அணியும் இடம் முடியாகும். இந்த வசிய கருமத்திற்குரிய இறைவியின் தியான சொரூபம் மேற்சொல்லப்படும் என்பதாம்.

தாரயேச் சிரசிப்ராக்ஞோ யதா சாஸ்த்ரம் பவேத்கிரியே (ப்ரியே) (—கட்சபுடம்) என்பதும் நோக்குக.

— கட்சபுடம்

வசிய கருமத்திற்குரிய இறைவி திருவுருவத்தின் தியானமும் திசையும்

67. காணுந் திருமேனி செம்மைசெம் பட்டுடை
பூணும் மலரம்பு பொற்கரும்பு விற்கை
காணுந் திசையுங் கதிரெழு பூருவம்
பேணுங் கிரியை இனிப்பேசு வோமே.

பாட பேதம்

1. திருமேனிச் செம்மையுடை செம்பட்டுப், திருமேனி செம்மையுடை செம்பட்டுப், செம்மையுட செம்பட்டு, மேனி செம்மையுடை செம்பட்டு, மேனி கரிய செம் பட்டுடை. (செம்மைசெம் பட்டுடை - இப்பாடம் உரைகத்தாற் குறிக்கப்பட்டது).

2. பூணு மலர்பொற் கரும்புவிற்கையில், பூணுமல... விற்கையில், கருப்புவிற், கையிற்.

3. திசையிற், கதிரெழும் பூருவம், கதிரெழு பூர்வம், கதிரோடு பூ(ருவ)ம்.

4. கிரிகை, கிரிசை, கிரிகையில் பேசுவோமே,

குறிப்புரை

இம்மந்திரம், வசிய கருமத்தில் இறைவியைத் தியானிக்கும் முறைமையும், அதற்குரிய திசையும், அதன் தந்திரத்திற்குத் தோற்றுவாயும் உணர்த்துகின்றது.

காணுந்திருமேனி-தியானித்தற்கேற்ற திருவுருவத்தின் நிறம். மேனி = உருவம் - நிறம்-உருவின் நிறம். செம்மை – செந்நிறம். உடை - செம்பட்டாடை. பூணுதல் - மேற்கொள்ளுதல். பொற் கரும்பு = மஞ்சட் கரும்பு - நாமக்கரும்பு. பொன்-அழகு எனினும் அமையும். கதிர் = செங்கதிர் - ஞாயிறு. பூருவம் - கிழக்கு. பேணுதல் = அறிதல் - அறிந்து செய்தல். "பேணாது ஒருத்தி. பேதுற" (.–பரிபா. 7 : 67.) கிரியை = தந்திரம், இது கிரிசை கிரிகை என்றும் வரும் (பாட பேதம் பார்க்க) "நம்பாவைக்குச் செய்யும் கிரிசைகள் கேளீரோ" (:– நாலா–திவ்யப். 475) மலர் அம்பு–பூக்களாகிய அம்புகள்-5. அவை: 1. தாமரை, 2. மா, 3. அசோகு. 4. முல்லை. 5. குவளை ஆகியவற்றின் பூக்கள் (பிங்கலம்) பேசுவோம்-சொல்லுவோம்.

வசிப்பு வினை ஏவலில் இறைவியை, செந்நிறமும், உடுத்துள்ள செம்பட்டாடையையும், தாங்கியுள்ள பூங்கணையும் கரும்வில்லும் பொருந்திய கைகளையும் கொண்டு, கீழ்த் திசையை நோக்கி இருப்பவராகத் தியானிக்க. இக்கருமத்திற் குரிய தந்திரத்தை இனிச் சொல்லுவோம் என்பதாம்.

இறைவிக்குள்ள திருக்கைகள்–4–ல், மேலேயுள்ள 2–கைகளில் வலப்பால் ஐம்மலர்க்கணைகளும், இடப்பால் கரும்பு வில்லும் பொருந்தியிருக்கக், கீழேயுள்ள அத்திருக்கரங்கள்–2–ம் முறையே அபயமும், வரதமும் ஆகிய முத்திரைகளை உடையனவாக இருக்கும் என்க. பிறவற்றுக்கும் இவ்வாறே ஏற்ற பெற்றி கொள்க.

இனி, இந்த வசிப்புவினையேவலுக்குரிய இயந்திரம், தந்திரம், மந்திரம், தியானம் முதலியவற்றைக் கிழக்கு முகமா யிருந்து செய்க எனினும் அமையும். இப்பொருளில் இறைவி,

கீழ்த்திசையில் மேற்கு நோக்கிய திருமுகத்தினராய் இருப்பதாகத் தியானிக்க என்க.

மேற்கோள்

தாளணி நூபுரஞ் செம்பட்டுத் தானுடை
வாரணி கொங்கை மலர்க்கன்னல் வாளிவில்.

— திருமந்திரம் 1049

பசுங்கரும்–பார்த்திடும் பூங்கணையாகுமாம் ஆதிக்கே.

— 1068

செய்ய திருமேனி செம்பட் டுடைதானும். — 1316

உரைக்கும் வசியம் ஒளிதிகழ் செம்மை.

— 300 : 336

இளம் ஞாயிற்றால் விளங்கும் பதுமராக மணிபோன்றுள்ள செந்தாமரைப் பூவில் வீற்றிருப்பவராயும், மலரம்பு கரும்புவில் ஆகியவற்றை ஏந்திய கைகளை உடையவராயும், செம்மேனிய ராயும், செப்பட்டாடையை உடுத்துள்ளவராயும், செம்பொன் அணிகலன்கள் செஞ்சாந்து முதலியவற்றால் விளங்குபவராயும் உள்ள புவனாபதியார் வசிய கருமத்தின் சித்தியை அருளுவாராக என்று தியானித்து வேண்டிக் கிழக்கு முகமாயிருந்து மந்திரம் செபிக்க.

— கட்சபுடம்

வசிப்புவனை ஏவலின் கிரியை

68\. பேசிய நேரம் உதித்தபின் முற்சாமம்
வீசிய ஒரை வியாழம தாயிடு
மாசை யிராச வசியத்தே ஔகாரம்
ஓசை யுலக வசிப்போங் காரமே.

பாட பேதம்

தலைப்பு: வசியக் கிரியை பாகம்.

1. பேசிய நேரமும், பேசிய வோரை யுதித்தபின், பேசிய ஓரையுரைத்தபின், பேசிய வோரை முகூர்த்தம் பின் முதற்சாமம்.

2. தாகும், தாயி (கி) விடும்.

3. ஊகபாடம்: வசியத்தே ஒளகாரம். வசியத் தௌங் காரம், வசியத ஒளங்காரம், வசிய தௌங்காரம், வசியத்தே ஊங்காரம், வசியத் தேழங்காரம், வசியத் தேங்காரம்.

4. ஓசையுலோக வசியமோங், ஓசையிலோக வசியுமோங், ஓசையிலோக வசியுமோங், வசியம் ஓங்.

குறிப்புரை

இம்மந்திரம், வசிப்புவினை ஏவலுக்குரிய வாரம், யாமம், ஓரைகளையும், உலகவசியம், அரசர்வசியங்களுக்குரிய மூல எழுத்துக்களையும் உணர்த்துகின்றது.

வசிய கருமத்திற்குரிய கிரியைகளை காலையில், கதிரவன் உதித்த பின்னர் முதல் யாமத்தில், வியாழ ஓரையில் தொடங்கி முடித்தல் வேண்டும். உலகவசியத்துக்கு ஓகாரமும் அரசர் வசியத்திற்கு ஒளகாரமும் பீசங்கள் என்பதாம்.

நேரம் – காலம். முற்சாமம் – விடியற்பொழுது. சாமம் = யாமம் $7\frac{1}{2}$ நாழிகை - 3 மணி நேரம் கொண்டது. ஓரை = கால ஓரை–மணி. ஓர்நாளில் 24-ல் ஒரு பகுதி. நாள் 1–க்கு மணி-24. இந்த ஓரைகளுக்குத் தலைவர் ஞாயிறு முதலான எழுவரும் ஆவர்.

மறைந்த ஒழுக்கத்து ஓரையும் நாளும்.

—தொல் 1081

(ஓரை = முகுர்த்தம் - (இளம்.) இராசி. (நச்.) — உரை

பருதி சூழ்ந்தவிப் பயங்கெழு மாநிலம்
ஒருபகல் எழுவர் எய்தி யற்றே. —புறம் 358

வான்மிகியார் பாடல். இவர் தலைச் சங்கப் புலவருள் ஒருவர். பகல் - நாள். எழுவர்-ஞாயிறு முதலான ஓரை நாயகர் எழுவர்.

ஓரை வியாழம் எனவே, வாரமும் அதுவேயாதல் பெறப் படும். மேல் வருவனவற்றுக்கும் இவ்வாறே கண்டு கொள்க.

இதுவும் அது

69. ஓங்காரஞ் சத்துரு ஒண்மான் பெண்புருடர்
ஐங்காரங் கூட்டி யியலுநூ றாயிரம்
தேங்காமல் ஓதித் திருந்திய தர்ப்பணம்
பாங்காய்ப் பதினாயிரமது பாரே.

பாட பேதம்

1. சத்துரு ஒண்விருகம், சத்துரு ஒண்மிருகம், சத்ரு ஒண் மிருகம், சத்துருவு மொரண்மிருகம், சத்துருவும் ஒன்று மருங்காரம். பெண்மை புருடரை, பெண்புரும், பெண் புருடர்க், பெண்புமான், பெண்ணான்.

2. ஹரீங்காரங்; ரீங்காரம்; றீங்காரம்; கிரீங் காரங்; ஸ்ரீங்காரங். கூட்டி இரு நூறாயிரம்; கூட்டியஞ் ஞூறா யிரமது; கூட்டியஞ் நூறாயிரமும்; கூட்டி மந்திரம் நூறாயிரம்; கூட்டி மந்திர நூறாயிரமது; கூட்டிய தியான முனூறாயிரமாம்;கூட்டிமந்த்ரம் நூறாயிரமாம்; கூட்டியிம் மந்திரம் நூறாயிரமது.

3. ஓதத் தற்பணம்; தற்பனம்பூம்; தற்ப்பனமும்.

4. பாங்காம்; பாங்கார்; பதினாயிரஞ் சென்று; பதினாயிர மென்று; பதினாயிரமுமானது யார்த்தே; பார்ப்பதே,

குறிப்புரை

இம் மந்திரம், பகைவர், விலங்கு, மாதர், மைந்தர்களின் வசிப்புவினை ஏவலுக்குரிய மூல எழுத்துக்களையும், செபத்தின் உரு, தர்ப்பணங்களின் அளவையும் உணர்த்துகின்றது.

மான் = மா - விலங்கு. பெண் புருடர் - உம்மைத் தொகை தேங்கல் = மனங்கலங்குதல் - தேம்பல் (பிங்) — ததும்புதல் - மிகுதல் - முழங்குதல் - கெடுதல் - தாழ்த்தல் (நாநார்த்த-101. சீவக - 16. பெரிய. 1537) ஓதல் - மந்திர உருக்கணித்தல். தேங்காமல் ஓதுதலாவது: மனந்தளராமல் ஒரு நெறியில் நிற்க, விதிக்கப்பட்ட அளவில் மிகாமலும் குறையாமலும், இடையறவு படாமலும், அயலார்க்குப் புலனாகாமலும் செபித்தல்.

மந்திரங் கணிக்கும் முறை 3. அவை: மானதம், மந்தம், உரை என்பன. இவற்றுள் 1 மானதமாவது; மனத்தாற் பாவித்தல். அதாவது, வாக்கின் சம்பந்தமின்றி மனம் தனித்து அறிவு மயமாய் நிற்க எண்ணுதல். வாக்கின் கலப்பு இல்லாமையால் இது சுத்தமானதம் என்றும் தியானம் என்றும் அறிவாற் கணித்தல் என்றுஞ் சொல்லப்படும். விதி—எண்ணும் அஞ்செழுத்தே. தியாயாத் பஞ்சாட்சரீம் சுதீ: (-சிவ-போதம் 9) என்பனவும் இது.

2. மந்தமாவது: பிறர் செவிக்குப் புலனாகாமல், தன் செவிக்கு மட்டும் கேட்கும்படியாக சூட்சும வைகரிவாக்கால் செபித்தல். மந்தம்-மென்மை. இதனை வடநூலார் உபாஞ்சு என்பர்.

அருமறைக் கேள்வி—நாவியல் மருங்கில் நவிலப்பாடி

—முருகு 186-7

கேட்டற்கரிய, மறைய உச்சரிக்கப்படும் மந்திரத்தை
நாப்புடை பெயரும் அளவிலே பயில உச்சரித்து

— நச்.

ஐது உரைத்து — தான் வழிபடுதற்குரிய மந்திரத்தைத் தோன்றாமல் உச்சரித்து —முருகு. 228 நச்.

என்பனவும் இது.

3. உரையாவது: தன் செவிக்கும், பிறர் செவிக்கும் புலனாகும்படித் தூல வைகரி வாக்காற் செபித்தல். இதனை வடநூலார் வாசகம் என்பர். இதில் உள்ளம் உணராதிருத்தலுங் கூடும் என்பது, நான் மறக்கினும் சொல்லுநா நமச்சிவாயவே (— தேவாரம் 7712-7720) என்பதனாலும் அறியப்படும்.

ஞானமெய்ந் நெறிதான் யார்க்கும் நமச்சிவாயச்
சொலாம் என்று
ஆனசீர் நமச்சிவாயத் திருப்பதிகத்தை அங்கண்
வானமும் நிலனுங் கேட்க அருள்செய்து
— பெரிய 3151

அஞ்செழுத்தை—வாய்ந்த தொண்டர் எடுத்தோதி
மணிநீர் வாவி மூழ்கினார் (- 3615) என்பனவும் இது.

மந்திரங்களைக் கணிக்குங்கால், அவற்றிற்குரிய கடவுளரை உள்ளத்தில் நினைந்து செபித்தல் வேண்டும் என்பது, அருமறை மருங்கின் ஐந்தினும் எட்டினும் — வருமுறை யெழுத்தின் மந்திரம் இரண்டும் — ஒரு முறையாக உளங்கொண்டு ஓதி (—சிலப். 11 : 128—130) என்பதனாலும் விளங்கும்.

மந்திரங் கணிக்கு முறையாக மேற்குறிக்கப்பட்ட 3-வகைகளுள், தேங்காமல் ஓதி என்று ஈண்டுக் கூறியது. மென்மை எனப்படும் மந்தமாகச் செபித்தலையாகும்.

தர்ப்பணம்: என்பது உவப்பித்தல் எனப் பொருள்படும்; மந்திரம் உரைத்து நீர் இறைத்துக் கடவுளரை உவப்பித்தல். கிழக்கே சலம் இடுவார் தொழு கேதாரம் (—தேவாரம் 8019) என்பதுங் காண்க. பாங்கு - தகுதி.

பகைவர் - விலங்குகளின் வசிப்பு வினைக்கு ஓங்காரமும்; மாதர், மைந்தர் வசிப்பு வினைகளுக்கு ஐங்காரமும் பீசங்கள் ஆகும். மந்திர செபத்தின் உரு நூறாயிரம்—இட்சம். தர்ப்பணத்தின் தொகை - பதினாயிரம் என்பதாம்.

பூசைக்கு தியானம், செபம், ஓமம், தர்ப்பணம், அர்ச்சனை என்பன அங்கங்கள். செய்யுள் 3-பார்க்க.

மேற்கோள்

சதுர்த்த சஸ்வரோ பேதம் ராஜ வசியே ஜெபேந்மநும்
லோக சத்ருந் மிருகா ணாஞ்ச வசியே பிரணவ சம்யுதம்
ஸ்த்ரீணாஞ்ச புருஷா ணாஞ்சவசியே வாக்பவயோஜிதம்
புவநாதி பதேர் மந்த்ரம் தேசிகப் ரோக்த சங்க்யயா
குருவாரே ததீயாயாம் ஹோராயாம் ப்ராதராரபேது

— கட்சபுடம்

சித்தி அநந்தரம் ப்ரயோக காலே ப்ராங்முகோபூத்வா
சாத்யநாம பூர்வகம் தச சஹஸ்ரம்ஜப்த்வாதத் தசாம்சம்
ஹோம தர்ப்பணாதிகம் கிருத்வா சிரசிதார யேது பூர்
வோக்த வசிய சித்திர்ப் பவேது.

என்பனவும் ஈண்டு நோக்கத் தக்கன.

எனவே, 1. உலகம் 2. பகைவர் 3. விலங்கு ஆகியவற்றின் வசிப்புவினை ஏவல்களுக்கு பிரணவமாகிய ஓங்காரமும், 4. அரசர் வசியத்துக்கு 51-எழுத்துக்களுள் 14-ஆம் உயிராகிய ஔங்காரமும், 5. மாதர், 6. மைந்தர் வசியங்களுக்குக் கலைமகளின் பீசமாகிய ஐங்காரமும் வித்தெழுத்துக்களாகும் என்பது பெறப்படும். இவற்றை, அவ்வக்கருமங்களுக்கு ஏற்றவாறு மூல மந்திரத்தின் முன்னர்ச் சேர்த்து செபம், ஓமம், தர்ப்பணம் முதலியவற்றைச் செய்தல் வேண்டும். இயந்திரத்திலும் வரைதல் வேண்டும் என்க.

வேறு குறிப்பு

மந்திரங்களைச் செபிக்குங்கால் ராசவசியத்துக்கு-உம். உலக வசியத்துக்கு - ஓம். புருஷ வசியத்துக்கு - ஶ்ரீம். மாதர், விலங்கு வசியங்களுக்கு - ஹ்றீம். பகைவர் வசியத்துக்கு - ஓம் ஹ்றீம் என்பனவற்றைச் சேர்த்துச் செபிக்கவும்.

— சுவடி 15

பிராணப் பிரதிட்டை ஓமம் முதலியன

70 பார்க்கும் பிராணப் பதிட்டையும் ஆயிரம்
ஓர்க்குமோர் கன்மத்துக் கோமமும் ஆயிரம்
சேர்க்குந் தியானமுஞ் செம்மைகீழ்த் திக்கது
பார்க்கிது கீறும் படிசாற்று வோமே.

பாடபேதம்

1. பார்ப்பது. பிரதிட்டையும், பிரதிட்டை, பிரதிஷ்டை, பிரதிஷ்டையும், பிரதிஷ்டை யாட்டியும்.

2. ஓர்க்கு மொரு, ஓர்க்கோர், ஓர்க்குங் ஊர்க்கொரு. கருமத்துக், கருமத்துக்கு. ஓமமூவாயிரம், ஓர் மூவாயிரம் ஊர்க்கொரு கன்மாதி யோமமுமாயிரம், ஓர்க்குங் கருமத்துக் கோமமூ வாயிரம்.

3. செம்மைதிசை கிழக்குப், செம்மைதிசை பூருவம், செம்மைதிசை பூர்வம், செம்மை கீழ்த்திக்குப், செம்மை கீழ்திக்கு, தியானஞ் செம்மைதிகட்கே.

4. பார்த்தினிகீறும்; பார்க்கினிது கிறிது; பார்த்திக் கினிது; பார்க்குந்திக்கினிது; பாற்றிக்கினிது கிறிது; பாற்றுக்கிரும்படியினிச் சாற்றுவோமே; பார்த்திக் கினிது கிரமப்படி சாற்றுமேல்; படி இனிச்சாற்றுமே; சாற்றுமேல்.

குறிப்புரை

இம்மந்திரம்; வசியகருமப் பிரயோகத்துக்குரிய பிராணப் பிரதிட்டை மந்திரசெப உருவின் அளவும், ஓமத்தின் அளவும், உருவத்தியானத்தின் நிறமும், கருமத்திற்குரிய திசையும் ஆகிய வற்றைத் தொகுத்துக் கூறி, இயந்திரம் வரையும் முறைமைக்குத் தோற்றுவாயும் உணர்த்துகின்றது.

பிராணப் பதிட்டை - பிராணப் பிரதிட்டை மந்திர செபத்தின் உரு. பதிட்டை-பிரதிட்டை. அன்பிற்-பழகிய பரனை ஆனாப் பிரிவினிற் பதிட்டை செய்து (.-திருவிளை 36 : 29). பிராணப் பிரதிட்டை மந்திரம், எண்வகைக் கருமங்களுக்கும் பொதுவாக இருப்பதொன்றே யாகலான், அதனை எண்வினை ஏவல்களின் முடிவிற் கூறுப. ஓர்த்தல் = ஆராய்தல்-நினைத்தல். கன்மம் = கருமம்-உலகவசியம் முதலாகச் சொல்லப்பட்ட 6-வகை வினையேவல்கள். தியானமும், திசையும் மேற் கூறப் பட்ட வேனும், ஈண்டு எடுத்துக்கொண்ட கன்மத்தைக் கூறி முடிக்கும் முறைமையில் அவற்றையும் உடன்சேர்த்துத் தொகுத்துக் கூறினார் என்க. பார்க்கு-பாரில். இது-இந்த வசிய கன்மத்திற்குரிய இயந்திரத்தை. கீறுதல்-வரைதல். தரையிற் கீறிடில் தச்சருங் காய்வரோ. — (கம்பர்).

வசிய கருமங்கள் ஒவ்வொன்றுக்கும் பிராணப் பிரதிட்டை மந்திர உரு-1000 மும், ஓமம்-1000 மும் தனித்தனியே செய்தல் வேண்டும். இதற்குரிய இறைவியின் தியான நிறம் செம்மை இடம். கிழக்குத்திசை என்பதாம்.

பிராணப் பிரதிட்டை மந்திரம்-சீவந்நியாச மந்திரம் என்றுங் கூறப்படும். ஓமம்-சிவாக்கினியில் இறைவியைப் பூசித்து, நெய் முதலிய அவிகளை அளித்து வழிபடுதல். திருமந்திரம் மூவாயிரத்துள் 11-ஆம் அதிகாரம் அக்கினி காரியம். 214-223 பார்க்க.

மேற்கோள்

பூசிக்கும் போது புவனா பதிதன்னை
ஆசற் றகத்தினில் ஆவா கனம்பண்ணிப்
பேசப் பிராணப் பிரதிட்டையுஞ் செய்து
தேசுற் றிடவே தியானமது செய்யே.
— திருமந்திரம் 1315

காய்ந்தவி நெய்யுட் கலந்துடன் ஓமமும்
ஆய்ந்தவி ஆயிரம் ஆகுதி பண்ணே. — 1366

நாமம் ஓர் ஆயிரம் ஓதுமின் நாதனை
ஏமம் ஓர் ஆயிரத் துள்ளே இசைவீர்காள்
ஓமம் ஓர் ஆயிரம் ஓதவல் லாரவர்
காமம் ஓர் ஆயிரம் கண்டொழிந் தாரே. — 2987

இயந்திரங் கீறுதற்குரிய பொருள்கள்

71. சாற்றிய வக்கர சக்கர மேனியை
ஏற்றுக பொன்செம் பெழிற்பட்டு வெள்ளியில்
ஆற்றிய வசியம் ஆறுங் களைந்தபின்
போற்றிய மோகனம் போமா றியம்பே.

பாட பேதம்

1. வக்கரஞ் சக்கர, வக்கரம் சக்கர மென்மை வக்கரா சக்கர. மேனியைப்.

2. ஏற்றுகப் பொன்செம்பெழிற்பட்டு, ஏற்றுக பொன் செம்மை யெழிற்பட்டு, போற்றும் பொன் செம் பொன்னெழிற்பட.

3. ஆற்ற வைசியம். கலந்தபின், கரைந்தபின்.

4. போமா றியம்பவே, போமாறியம்பலே, பெயர் மாற்றியம்புமே.

முடிவு: வசியகருமம் முற்றும், வசிய கன்மம் முற்றும், வசிய கன்மாதி முற்றும்.

குறிப்புரை

இம்மந்திரம், தோற்றுவாய் செய்துகொண்டபடி, இயந்திரங் கிறுதற்குரிய பொருள்களையும், வரும் அதிகாரத்துக்குத் தோற்றுவாயையும் உணர்த்துகின்றது.

அக்கர சக்கரம்-51 எழுத்துக்களும், மூல எழுத்துக்களும், மந்திர எழுத்துக்களும் அமைந்துள்ள இந்தப் புவனாபதி சக்கரம். இந்த இயந்திரத்தினோடு இறைவிக்கு வேறுபாடின்மையின் சக்கரமேனியை என்றார். பட்டு-செம்பட்டு. என்பது தகுதியாற் கொள்க. ஆற்றுதல் = செய்தல்-உரைத்தல். வசியம் ஆறு-1. உலகம். 2 அரசர். 3. மாதர். 4. மைந்தர். 5. பகைவர். 6. விலங்கு ஆகியவற்றின் வசியகன்மங்கள், களைதல் = முடித்தல்-கூட்டி முடித்தல். குடுமி களைந்தா னெங்கோ. (பு-வெ. 9:21.)

இந்த புவனாபதி சக்கரத்தைப் பொன், செம்பு, வெள்ளி செம்பட்டு ஆகிய இந்த 4-வகைகளில் ஏற்ற பெற்றி யாதேனும் ஒன்றில் வரைந்து வழிபடுதல் வேண்டும். இவ்வாறு 6 – வகைப் பட்ட வசியகருமத்தின் மந்திரம் தந்திரம் இயந்திரம் ஆகியவை முற்றுப்பெற்றன. இனி, அடுத்துக் கூறுவதற்கு முன்னிற்கும் பொருள் மோகனகன்மம் என்பதாம்.

மேற்கோள்:

வரைவது பட்டோலை வான்செம்பு பொன்னே. — 354

சாதங் கெடச்செம்பிற் சட்கோணந் தானிடே. — 1311

கண்டிடு சக்கரம் வெள்ளிபொன் செம்பிடை. — 1323

ஏய்ந்த மரவுரி தன்னில் எழுதிய, — 1366

ஏய்ந்த அரிதாரம் ஏட்டின்மே லேபூசி
ஏய்ந்த வகாரம் உகாரம் எழுத்திட்டு
வாய்ந்ததோர் வில்லம் பலகை வசியத்துக்
கேய்ந்தவைத் தெண்பதி னாயிரம் வேண்டிலே. — 1001

உரைக்கு மியந்திரம் வெள்ளிபொன் செம்பிவற்றுள்
ளெழுதித் - தரிக்க வசியங்கள் ஆறுந்தரும்.

—புவனை கலைஞான தீம்ப 59

அதி-9. மோகன கருமம்-மயர்ப்புவினை

மயர்ப்பு வினையின் வகை-5

72. இயம்பும் உலகம் எழிற்பெண் புருடர்
தயங்கிய சத்துருத் தாங்கும் விருகம்
வயங்கிய மோகன மைந்து வகைக்கும்
செயம்பட விலக்கந் தெரிந்துரைப் பேனே.

பாட பேதம்

தலைப்பு: மோகன லக்கம்.

1. உலோகம், உலோகர். எழில் பெண் புருஷர்.

2. தய சத்துருத் தூதாங்கும், சத்துரு தாங்கு மிருகமும் மிருகம், விருக.

3. மயங்கிய மோகன மைஞ்சு, மயங்கிய மோகனமைந்து

4. செயம்பட லக்கந், செயம்படி லக்கந், லக்கங்கள் லெக்கங்கள், ஜெயம்பட லெக்கந். தெளிந்துரைப்.

குறிப்புரை

இம்மந்திரம், மேல் நிறுத்த முறையானே மோகன கன்மம் உணர்த்துவான் தொடங்கி, முதற்கண் அதனது வகையும் தொகையும் உணர்த்துகின்றது.

இயம்புதல் - சொல்லுதல். தயங்குதல் = கலங்குதல் — திகைத்தல்- அசைதல். விருகம்-விலங்கு. வயங்குதல்-விளங்குதல். செயம் = வெற்றி-சித்தி. உலகம்-உலக மக்கள்.

மோகன கன்மத்தின் வகை - 5. அவை: 1. உலக மோகனம். 2. மாதர் மோகனம். 3. மைந்தர் மோகனம். 4. பகைவர் மோகனம். 5. விலங்கு மோகனம் என்பனவாகும். இனி, இவற்றிற்குரிய இலக்கங்களை முறையே சொல்வேன் என்பதாம்.

மேற்கோள்

மோகனம் பஞ்சதாஸ் மிருதம் லோகஸ்த்ரீ நர
சத்ருணாம் ம்ருகாணாம் மோகனம் கிரமாது. —கட்சபுடம்
முரணிற் புதைத்திட மோகன மாகுமே.

—திருமந்திரம் 998

மோகனம்: தனக்கு வேண்டாதாரை சுழுத்திய வத்தை போல் மெய்மறந்து கிடக்கச் செய்தலும், விடந் தலைக்கேறி மூர்ச்சை அடிக்கடி வர மரித்தாரைப் போன்றிருக்கச் செய்தலும், தன்மேல் யாவரும் மோகமாக இருக்கச் செய்தலும் ஆகும்.

– தத்துவ நிசானு போகசாரம். அத்யாயம் 42. கவுளயாமளைமதம்.

என்பனவும் ஈண்டு நோக்கத்தக்கன.

1. உலகமோகனம் - மக்கள் மயர்ப்புவினை இலக்கம்

73. உரைப்பேன் உலகர்தம் மோகத் திலக்கம்
நிரைப்பேனெண் பத்தெட்டு நீண்ட வெழுப
துரைப்பேனூற் றொன்றும் ஒளிபெற நின்ற
புரைப்பூங்குழல் மாதர்க்கு மோகனம் போற்றே.

பாட பேதம்

1. உலோகர்தம், உலோகந்தம், உரைப்பெறு லோகர்தம். மோகனத்.

2. நிரைப்பதெண், நிரைப்பனெண், பத்தெட்டும். வெழுப தும், வெழுபது.

3. உரைப்பேனூற்றொன் றொளிபெற, முரைப்பேனூற் றொன்று மொளிபெற, முறை ..மொழிபெறப், முரைப் பனூற்.

4. குழன் மாதர், குழன் மாதர்க்கு, கழன் மாதர்க்கு.

குறிப்புரை

இம்மந்திரம்: மேல் நிறுத்த முறையானே முதற்கண் உலகர் மோகன கன்மத்திற்குரிய இலக்கமும், மாதர் மோகனத்துக்குத் தோற்றுவாயும் உணர்த்துகின்றது.

1. உலக மக்களின் மோகன கன்மத்துக்குரிய
இலக்கம்: 88-70-101.

என்பதாம். மோகம்-மோகனம். புரை-பெருமை.

மேற்கோள்

1. உலக மோகனத்துக்கு, ஈண்டுக் குறித்துள்ள இலக்கங்களை உணர்த்தும் வாக்கியங்களே கட்சபுடத்திலும் காணப்படுகின்றன.

இலக்கவேறுபாடு

1. லோக மோகனம்:- 88-70-101 = 259.

128, 259. மோகனம்: 30.

மேற்கோள்

ழுஹ்ரயேத் லோகத்ரயம் முநே.

— லலிதாஸஹஸ்ரநாமம் உத்தரபாகம் 33.

2-மாதர். 3-மைந்தர்களின் மயர்ப்புவினை இலக்கம்

74. போற்றுமை யைந்தும் புணர்ந்தலைவம் பத்தெட்டும்
நாற்றாறு மாகும் நுவலும் புருடர்க்கு
நாற்றேழ்தொண் ணூறும் நொய்யவிரு பத்தாறும்
சாற்றா யினிச்சத் துருமோகஞ் சாற்றே.

பாடபேதம்

1. யைஞ்சும், புனைந்தவுன், புணைந்தலைவம், புணைந்தைம்பத்.

2. மாக. புருடற்கு.

3. நூற்றேழுந், நூற்றேழு. ஞூறு, நொய்யிரு, நொய்யதிரு.

4. சாற்றாய் பெருகவினிச் சத்துரு மோகனமே, சாற்றாய் சாற்றாய் பெறுகவினிச் சத்துருமோ கனமே, சாற்றா வினிச்சத் துருமோகனமே, சாற்றாமிச் சத்துரு, சாற்று மினிச் சத்துரு மோகனஞ் சாற்றே.

குறிப்புரை

இம்மந்திரம், நிறுத்த முறையானே மாதர் மைந்தர்களின் மயர்ப்பு வினையிலக்கமும், பகைவர் மோகனத்துக்குத் தோற்று வாயும் உணர்த்துகின்றது.

2. மாதர் மோகன கருமத்தின் இலக்கம்:- 25-58-106.

3. மைந்தர் மோகன கருமத்தின் இலக்கம்: 107-90-26.

மேற்கோள்

2. மாதர் மோகனத்துக்கு ஈண்டு உரைத்த இலக்கங்களைக் குறிக்கும் வாக்கியங்களே கட்சபுடத்திலுங் காணப்படுகின்றன.

இலக்கவேறுபாடு

2. மாதர்மோகனம்-ஸ்ரீமோகனம்-ஸ்த்ரீமோகனம்-

மதன மோகனம்: —25-58-106=189.

25-58-101=184.

25-58-101. 24-35-48.

58-106-25. 91. 107. 180. 189.

3. ஆடவர் மோகனம் - புருஷ மோகனம் -

நரமோகனம்:— 107-90-26=223.

107-46-26=179.

76-20-96. 213.

76-90-26. 110

123. 213. 223.

கச்சபுடம் :—107-90-26; 107-46-26.

4-பகைவர். 5-விலங்குகளின் மோகனகன்ம இலக்கங்கள்.

75. சத்துரு மோகனஞ் சாற்றின்முப் பத்திரண்
டொத்த விருபதின்மூன் றோரைம்பத் தெட்டாம்
வைத்த விருகம் வருமோக நாலாறோ
டொத்தமுப் பத்தஞ் சோர்நாற்பத் தெட்டடைவே

பாட பேதம்

1. மோஹநம். சாற்றுமுப்பத்திரண்டு, சாற்றின்முப்பத் திரண்டும்.

2. டொத்தவிரு பத்துமூன் றாமைம்பத் தெட்டாகும், ஒத்தவிருபதின் மூன்று ஓரைம்பத்தெட்டாம், மொத்த விருபத்து மூன்றோ ரைம்பத் தெட்டாகும்.

3. விருகவருமோக, மிருகவருமோக, மிருகம்வருமோகன. நாலாறு, நாலர்.

4. டொத்தமுப் பத்தஞ்சு மொருநாற்பத், மொத்தமுப் பத்தைஞ் சொருநாற்பத், ஒத்தமுப் பத்தைஞ் சோர் நாற்பத், ஒத்த முப்பதுஞ் சோர் நாற்பத், முப்பத்துஞ் சோர், நாற்பத்தெட்டே.

குறிப்புரை

இம்மந்திரம்: நிறுத்த முறையானே பகைவர், விலங்கு என்பவற்றின் இலக்கமும் மோகன கன்ம மந்திரத்துக்குத் தோற்றுவாயும் உணர்த்துகின்றது,

சத்துரு - பகைவர். விருகம்-விலங்கு மோகம்-மோகனம். அடைவு = அடைதல் - சேருதல்-அடைத்தல்-உட்படுத்தல்-காப்புச் செய்தல் (நாநார்த்த தீபிகை). ஆகுபெயரால் அடைக்கப்படும் மந்திரத்தைக் குறித்து நின்றது.

4. பகைவர் மோகன கருமத்தின் இலக்கம் :—
32-23-58.

5. விலங்கு மோகன கருமத்தின் இலக்கம்:—
24-35-48.

மேற்கோள்

இவ்விருவகை இலக்கங்களையுங் குறிக்கும் வாக்கியங்களே கட்சபுடத்திலும் காணப்படுகின்றன.

இலக்கவேறுபாடு

4. *சத்துருமோகனம்:—* 32-23-56=113.
32-58=90. 55. 100.
103. 104. 113. 203. 215.

5. *மிருகமோகனம்:—* 24-35-48=107.
24-30-48=102.
25-58-106.
52. 104. 107. 110.

மதனமோகனம்:— 25-58-106. 205.

மந்திரம்—2

2. மயர்ப்பு வினை ஏவல்—மோகன கன்மப் பிரயோகம்

1. ஓம் க்லீம் ட்சிமிரியூம் ஆம் ஹ்ரீம் ஸ்ரீம் ஆம் க்ரோம் க்ஷிம் ஹம் க்ஷிம் ச்ரவ்வும் க்லெளம் க்கம் க்கம் சுவாஹா. ஓம் ட்ச்மிரவ்வும் ஆம் ஆம் ஹ்ரீம் ஸ்ரீம் ஆம் க்ரோம் ஹம் சவ்வும் ச்ரவ்வும் க்லெளவும் க்கம் க்கம் ட்டம் ட்டம். காளீ நீலகாளீ ஆங்காளீ நிர்வாணீ மோஹே அம் ஆம் மோஹே சர்வேந்த்ரி யாணி மோஹே நம: ॥

பாட பேதம்

1. க்கும் க்லீம் ட்சிமிரியூம் ரம் ஆம் ஹரீம் ஸ்ரீம் க்ரோம் ஹம் சவ்வும் கம் க்கம் க்கம் சுவாகா, க்கம் ட்ச்மிரியூம் அம் ஆம் ஸ்ரீம் ஸ்ரீம் ஆம் க்ரோம் ஹம் ஸம் ச்ரௌவும் கௌம் வம் க்கம் ஓம் ஓம் ஓம் நம: காளீ நீலகாளீ ஆம்காளீ நிர்வாணீ மோகீ அஜாமோகீ சர்வேந்த்ரியாணி சர்வ மோகின்யை நம: ||

2. மோகன மந்திரம் — தியானம் — கிரிகை பாகம்: மந்திரம்:—

ஓம் க்ஷம் க்லீம் க்லாம் க்ஷம் ரம் (ட்ச்மிரம்) ப்ரம் (வ்ரீம்) ஆம் ஹ்ரீம் ஸ்ரீம் ஆம் ஓம் க்ரோம் தாம் அம் ட்ச்லௌம் ஞௌவும் சௌவும் வம் வம் சுவாகா. ஓம் நமோ காளீ நீலகாளீ பத்ரகாளீ நிர்வாணீ மோகே மோகே அஜா மோகே (அந்தர் மோகே) சர்வேந்த்ரியாணி சர்வ மோகி நீ நமா ஓம். ||

3. லம் ஹ்ரீம் ஹ்ரீம் லம் லீம் க்லாம் க்லீம் க்லூம் க்லைம் க்லௌம் க்ல: ஹம் ஸகலம் மோஹய ஸர்வேந்த்ரி யாணி ப்ரேரய ப்ரசீத மகா மாயே ஸர்வ மோகிந்யை நம:

4. ஓம் க்ஷிம் க்ஷிம் அம் ஆம் ஹ்ரீம் க்ரோம் அம் க்ஷம் வௌம் க்லௌம் வம் கம் சுவாகா | ஓம் நமோ காளீ நீல காளீ வச்ரகாளீ நிர்வாணீ ஹேமோஹே ஜகந்மோஹே சர்வேந்த்ரி யாணீ ஸர்வமோகிநீ நம: ||

5. ஓம் க்லீம் க்ஷம் அம் ஆம் ஹ்ரீம் ஸ்ரீம் ஆம் கேம் ரம் அம் க்ஷம் க்ஷேம் ளம் ரம் ஜம் நம் யம் பேம் (வேம்) சுவாகா | ஓம் நமோ நீல காள வச்ரகாள நிர்வாணீமோஹே ஜகந் மோஹே சீக்ரஷ்யாணீ சீக்ரஷமோகிநீ நம: ||

6. ஓம் ஐம் க்லீம் க்ஷம் அம் ஆம் ஹ்ரீம் ஸ்ரீம் ஆம் க்ரோம் அம் ஜம் ரௌம் க்லௌம் வம் சுவாகா | ஓம் நமோ காளீ சீ (நீ) லகாளீ வச்ரகாளீ ந்ருஷா (நிர்வா) ணீ மோகே (மாகே) சுவரீம்ந்த்ரியாணீ (மோகே சர்வேந்த்ரியாணீ) மோகிநீ நம: ||

7. ஓம் க்ஷிம் க்ஷிம் அம் ஆம் ஹ்ரீம் க்ரோம் அம் க்ஷம் ஸம் க்லௌம் வம் கம் சுவாகா | ஓம் நாமோ காள நீலகாள வஜ்ர காள நிக்வா (நிர்வா) ணீ ஹேமோகே ஜகந் மோக சர்வந்த்ராணீ சரீவ மோகினீ நம ஓம் ||

8. ஓம் க்ஷிம் க்ஷிம் அம் ஆம் ஹ்ரீம் கோம் அம் க்ஷம் சௌவும் க்லௌம் வம் கம் சுவாகா | ஓம் நமோ காள நீல காள வச்ரகாள நிக்வா (நிர்வா) ணீ ஏமோகே த்வஜா மோஹே ஸஸக்வஜ்ராணி (ஸர் வேந்த்ரியாணீ) சரீவலோ (கமோ) கிநீ நம் ஓம். ||

9. ஓம் க்ஷிம் க்ஷிம் கம் ஆம் ஹ்ரீம் கோம் அம் க்ஷம் வௌம் க்லௌம் வம் கம் சுவாகா | ஒந் நமோ காளி நீல காளி வச்ரகாளி நிரீவாணீ ஹேமோஹ த்வஜாமோஹ ஸஸக்வேந்த் ராணீ (சர்வேந்த்யாணீ) சர்வ மோகிநீ நம் ஓம்.

10. மோகனம் ஐந்துக்கும் மந்திரம்:— ஓம் க்லீம் சரமுரமும் (ட்ச்மிரியூம்) ஆங் ஆங் ஹ்ரீம் ஹ்ரீம் ஆங் தோங் அங் வரா செவும் கெலவும் வங் எங் சுவாகா | ஓநமோகாளீ நீலகாளீ வச்சிரகாளீ நிருவாண காளீ மோகே மோகே கேது சாமோ கன்றுந்தியகம் "ஐந்தினில் வேண்டும் சிற்றில் பத்தியாங் கருமத்தில் பகர் தம்பனமே" க மோகன கர்மா முற்றும்.

(திருமந்திரம். 300: செய் 79 பார்க்க).

11. ஓம் க்ரும் க்ஷம் அம் ஆம் ஹ்ரீம் ஸ்ரீம் ஆம் க்ரோம் ரம் அம் க்ஷம் க்ஷேம் ளம் ரம் (ட்ச்மிரௌம்) ஜம் நம் யம் (தம்) வேம் (பம்) சுவாகா. ஓம் நம் மம் (ஓ. நமோ) நீலகாளீ வஜ்ர காளீ நிர்வாணீ மோஹே ஜகந் மோகே ஜசர்வேந்த்ரி யாணீ ப்ருஷ மோகிநி நி நம் ஓம் ||

12. ஓம் க்லீம் க்ஷம் அம் ஆம் ஹ்ரி (ஹ்ரீம்) ஸ்ரீம் கேம் ரம் (க்ரோம்) அம் க்ஷம் ளம் ரம் ஜம் நம் யம் பேம் சுவாகா. ஓம் நமோ நீலகாளீ வச்ரகாளீ நிர்வாணி மேஹே சகந்மோகே சிக்ரஷ மோகிநீ நம ||

குறிப்புரை

மேற்செய்யுளின் முடிவில் ''அடைவே'' என்று தோற்றுவாய் செய்து கொண்டபடியே ஆசிரியர் திருமூலதேவர் 5-வகைப் பட்ட மயர்ப்புவினை ஏவல்களுக்கும் உரிய மந்திரங் கூறு கின்றார்.

மோகன கன்மப் பிரயோகத்துக்கு உரியதாக ஈண்டுச் சொல்லப்பட்டுள்ள மந்திரமானது, மகாகாளியை அதி தெய்வ மாகக் கொண்ட மந்திரம் ஆகும்.

மேற்கோள்

மந்த்ர மத்ர ப்ரவட்ச்யாமி மகாகாள்யதி தைவதம்

ஓம் க்லீம் ட்ச்மிரியூம்சம் முச்சார்ய ஆம் ஹ்ரீம் ஆம் ஆம் தத:பரம் || க்ரோம் க்ஷிம் ஹம்க்ஷிம் ச்ரெளம்ச க்லெளம்

யொஜ்ய க்கம் க்கம் சுவாஹா ததைவச | ஓம் ட்ச்ம்ரெளம் ஆம் ஆம் சமுச்சார்ய ஹ்ரீம் ஸ்ரீம் ஆம் க்ரோம் தத:பரம் || ஹம் செளம் ச்ரெளஞ்ச சமுச்சார்ய க்லெளம் க்கம் க்கம் க்ரஹ்ய க்ரஹ்ய ட்டத்வயம் | காளீதி நீலகாளீதி ஆங்காளீதி வதேச்புந: || நிர்வாணீதிச மோகேதி அம் ஆம் மோகேதி யோஜயேது | சர்வேந்திரியாணி சோச்சார்ய மோகேதி நமோந்தகம் || ஏதந் மந்த்ரம் யந்த்ர படேத் விலி கேந் மோகன கர்மணி ||.

— கட்சபுடம்

பாட பேதம்

மந்த்ர மத்ரப் வட்ச்யாமி மகாகாள்யதி தைவதம்.

க்கும் க்லீம் ட்ச்மிரியூம் ரம் சமுச்சார்ய ஆம் ஹ்ரீம் ஸ்ரீம் ஆம் தத : பரம். ||

க்ரோம் ஹம் செளம் கம்சும்யோஜ்ய க்கம் க்கம் சுவாகா ததைவச. |

க்கம் ட்ச்மிரியூம் அம் ஆம் சமுச்சார்ய ஸ்ரீம் ஸ்ரீம் ஆம் க்ரோம் தத : பரம் ||

ஹ்ரம் ஸம் ச்ரௌம் கௌம் க்கம் க்கம் க்ருஹ்ய த்ரயஞ்சப்ரணவம் நம : | காளீதி நீலகாளீதி ஆங்காளீதி வதேத் புத : ||

நிர்வாணீதிச மோகீதி அஜாமோகீதி யோஜயேது. |
சர்வேந்த்ரியாணி சோச்சார்ய ஸர்வ சப்தம் தத : பரம். ||
மோகிந்யை நம இத்யேதந் மந்த்ரம் யந்த்ர படம் நயேது. |
வட்ச்ய மாணம் மகாகாளி மந்த்ர மாலிக்ய யந்த்ரகே. ||

என்பன ஈண்டு நோக்கத்தக்கன. இவற்றால், மாகாளியை அதிதெய்வமாகக் கொண்டுள்ள இந்த மோகன கன்மப்பிரயோக மந்திரத்தின் இயல்பு புலனாகும்.

இம்மந்திரத்துள் அமைந்துள்ள நீலகாளி ஆங்காளிமோகே என்னுந் தொடர்கள் தமிழின் சிதைவான பிரா கிருத பாஷையாகும்.

மோகன கன்மத்துக்குரிய இறைவியின்
திருவுருவத் தியானம்

76. அடைவிலே மோகனம் ஐந்து வகைக்கும்
புடையிலே மந்திரம் போற்றிய பின்னை
சடையிலே திங்களைத் தாங்கிய வம்மை
வடிவிலே பொன்மை வகுத்த தியானமே.

பாட பேதம்

1. அடையிலே.
2. புடைவிலே. பின்னைச்
3. திங்களைச் சாத்திய.
4. வகுக்குந் தியானமே.



மோகன கன்மத் தியானத் திருவுருவம்

செய்யுள்: 76

குறிப்புரை

இம்மந்திரம்; மோகன கன்மத்துக்குரிய இறைவியின் திருவுருவத் தியானம் உணர்த்துகின்றது.

அடைவு—முறைமை. ஐந்து வகை : 1. உலக மோகனம் 2. மாதர் மோகனம் 3. மைந்தர் மோகனம் 4. பகைவர் மோகனம் 5. விலங்கு மோகனம் என்பன. புடை=இடம்—பக்கம். போற்றுதல் – "போற்றலே பாதுகாத்தல் புகழ்தல் பேணுதல் வணங்கல்.

— நாநார்த்த தீபிகை

மேலே சொல்லப்பட்ட மந்திரமானது, ஐந்து வகையாக எடுத்துரைக்கப்பட்ட மோகன கருமப் பிரயோகம் 5-க்கும் உரியதாகும். இப்பிரயோகத்தில் இறைவியைப் பொன்னிறத் திருமேனியராகத் தியானிக்க என்பதாம்.

மேற்கோள்

சைல ராஜ தநயே மோகநம் பஞ்சதாஸ்ம்ருதம் |
லோகஸ்த்ரீ நர சத்ரூணாம் ம்ருகாணாம் மோகனம்
க்ரமாது ||
சுவர்ணவர்ணாம் மகாதேவீம் துங்கபீநபயோதராம் |
அப்ஜா ஸநாந்தரஸ் மேராம் மோக லோகத்ரயாம்பஜே ||
— கட்சபுடம்

என்பனவுங் காண்க.

ஒப்புமைப் பகுதி: செய்யுள் 49 பார்க்க.

உரைக்கிலும் மோகனம் பொன்னிற மாகும். — 36

மோகனத்திற்குரிய திசை செபம் தர்ப்பணம் முதலியன

77. தியானிக்குந் திக்கு நிருதியின் மூலை
தியானிக்கு மந்திரஞ் செப்பி னூறாயிரம்
தியானிக்குந் தர்ப்பணஞ் சேர்பதி னாயிரம்
தியானித்து வைக்குந் திறமிது வாகுமே.

பாட பேதம்

1. தியானிக்குந்.

2. தியானிக்க-மந்திரம் - தியாநிக்கு. செப்பிநூ - செப்புநூ - செப்பினீராயிரம்.

3. தியாநிக்குந். தற்பணம்.

4. தியாநித்து - தியானித் துவக்குந். திறமிதுதானே - திறமதுதானே - திறமாகுந்தானே - த்றமாகுமிதுவே.

குறிப்புரை

இம்மந்திரம்; மோகன கருமப் பிரயோகத்துக்குரிய திசை, மந்திர செப உருவின் தொகை, தர்ப்பணத்தின் தொகை ஆகியவற்றின் திறம் உணர்த்துகின்றது.

நிருதியின் திக்கு - தென் மேற்கு மூலை. மந்திரம்—மந்திர செப உருவின் தொகை. செப்புதல்—சொல்லுதல். நூறாயிரம் —இலட்சம். தியானித்து வைத்தல்—தியானித்தல். சிந்தையில் அவன்றன் சேவடி வைத்து—வைத்தல்=நினைத்தல்—தியானம். —சிலப். 11:106. அடியார். திறம்=தன்மை—இயல்பு. உன் திறம் அறிந்தேன்—மணி 4:96

இதுகாறும் வகுத்துக் கூறப்பட்ட மோகன கன்ம வகை 5-க்கும் உரிய திசை—தென் மேற்கு. மந்திர செப உருவின் தொகை—இலட்சம். தர்ப்பணத்தின் தொகை - பதினாயிரம் என்பதாம்.

மேற்கோள்:

சுதிநே நிருதி திங் முக: தியாந பூர்வம் ஜபித்வா

என்பதும் அறிக. — கட்சபுடம்

மோகன கன்மத்தின் யாமம் ஓரை முதலியன

78. திறமாகு நேரந் தேர்ந்திரண் டாஞ்சாமம்
உறவாகும் ஓரையும் ஒத்த சனியாம்
பெறுமாம் பிராணப் பிரதிட்டை பண்ணித்
திறமாக வைப்பிடஞ் சேருவது தானே.

பாட பேதம்

1. திறமாக நேரந். தெளிந்திரண் - தெளிந்தவிரண்.
2. உறவாக வோரையும்.
3. பெறுமா பிராணப் பிரதிட்டையும்.
4. சேர்க்குமது – சேர்ப்பது – சேர்ப்பதுந் – சேப்பதுந்தானே
சேர்வதுந் தானே – செப்புது(ந்) தானே.

குறிப்புரை

இம் மந்திரம்; மோகன கருமத்திற்குரிய யாமம், ஓரைகளையும், தந்திரத்தையும் ஓதி, யந்திரத்தை வணக்குமிடத்துக்குத் தோற்றுவாயும் உணர்த்துகின்றது.

திறம் – கூறுபாடு நேரம் = காலம் — பகற்காலம். சாமம் — யாமம். உறவு — பொருத்தம். சனி — சனியோரை. பிராணப் பிரதிட்டை பண்ணி — பிராணப் பிரதிட்டா மந்திர உருச் செபித்து. யாமம் — ஓரை. பிராணப் பிரதிட்டை மந்திரம் முதலியவற்றின் விளக்கம் முன்னர்க் குறிக்கப் பட்டன. வைப்பு இடம் — காப்பாக உள்ள இடம். பிராணப் பிரதிட்டை — இஃது ஏனையவற்றுக்கும் உப லட்சணம். அவை ஓமம், தர்ப்பணம் முதலியன.

மோகன வினையேவலை இரண்டாம் யாமத்தில் சனி ஓரையில் தொடங்கி பிராணப் பிரதிட்டை முதலியவற்றைச் செய்து வழிபாடாற்றி முடிக்க என்பதாம்.

மேற்கோள்

காலே மந்தஸ்ய ஒராயாம் சுதி நே நிருதி திங் முகः|
துவிதீய யாமே காமேத த்தார பேத்வா சமாபயேது||

மோகன இயந்திர வைப்பிடமும் அணியுமிடமும்

79. அதுவாந் திறமையன் ஆனை வலக்காற்
புதையா வியந்திரம் போனது மோகம்
விதியாக வைந்தினில் வேண்டுஞ் சிரத்தும்
பதியாய்க் கருதிப் பகருந்தம் பனமே.

பாட பேதம்

1. அதுதான் திறமைய்யன் யானை. வலக்காற் கீழ்ப்.
2. புதையோ, மோகன — மோகனம்.
3. வைந்தினால் — வைத்தினில். சிரத்துப்.
4. பதியாய் கருதி பகர்தம்.

முடிவு:— மோகனம் முற்றும் - மோகன மந்திரம் முடிந்தது.

குறிப்புரை

இம்மந்திரம்; மோகன கன்ம இயந்திரத்தைப் புதைக்கும் இடத்தினையும், அணியும் இடத்தினையும், உணர்த்தி வரும் அதிகாரத்துக்குத் தோற்றுவாயினையும் உணர்த்துகின்றது.

அது ஆம் திறம்—திறம் அது ஆகும். ஐயன் ஆனை—ஐயனார் கோட்டத்தின் முன்னர் நிற்கும் யானை. ஐயன் - வணங்கப்படத் தக்கவன். மோகம் — மோகன கன்மம். ஐந்து—5 வகை. அவை மேற் சொல்லப்பட்டன. பதித்தல் = தரித்தல் — அணிதல். பகர்தல் — வகுத்துக் கூறுதல்.

இந்த மயிர்ப்பு வினை ஏவல் இயந்திரத்தை, முடிவில் ஐயன் கோட்டத்தின் முன்னர் நிற்கும் யானையினது வலக் காலின்

கீழே புதைக்க. அன்றி முடியிற் சூடிக் கொள்ளுதலும் முறைமை என்பதாம்.

பகருந்தம்பனமே என்பது தோற்றுவாய். திருமந்திரம் செய்யுள் 76–முதல் இதுவரையும் உரைக்கப் பெற்றவை மோகன கன்மத்தின் தந்திரங்களாகும்.

மேற்கோள்:

முரணிற் புதைத்திட மோகனம் ஆகுமே.
— திருமந்திரம். 998

ஆங்கு வடமேற்கில் ஐயனார் கோட்டத்தில் — 999

சாத்தனை மகனா வைத்தார்....திருப்பயற் றூரனாரே.
— தேவாரம் 4475

கதக்காரி - வாமன் புரவிமேல் வந்தனைய
— ஞான உலா. 40.

சேரர் காவலர்...திரு உலாப்புறம் அன்று
.....கயிலையிற் கேட்ட மாசாத்தனார்.
— பெரிய 4285.

சாத்தன் வெள்ளை யானைவாகனன் ஐயன் பெயரே.
— பிங்கலம்.

பவளக்கோட்டு நீலயானை சாதவாகனன் கோயிலுள்ளும் இல்லை. — தொல். 517. இளம்

கர்மணாம் மோகநாக்யாநாம் பஞ்சாநாம் சாஸ்து ராலேயே || — கட்சபுடம்,

அதி-10. தம்பன கன்மப் பிரயோகம்
தம்பன கருமத்தின் வகை—7

80. தம்பனஞ் சாற்றில் தலஞ்சலம் அக்கினி
வெம்பின சுக்கிலம் வேறா யுதங்கட்கம்
கொம்பின சத்துருக் கூறும் விருகமும்
தும்பின தேழ்வகை யாகத் துளங்குமே.

பாட பேதம்

தலைப்பு:— தம்பனலக்கம்; மந்திரம்; தியானம்; திக்கு; கிரிகை பாகம். தம்பனத்திற்கு இலக்கம்.

1. காற்றில் சலம்நிலம் அக்கினி; சாற்றில் நிலஞ்சலம் அக்கினி; சாற்றில் தலஞ்சலங் காணல்.

2. வெம்பிய வேலாயுதங் கட்கம்; வேலும் ஸ்ரீ (ஆ) யுதங்கள்.

3. கொம்பனை; கொம்பணை; கொம்பிய கொம்பனைச் சத்துரு கூறு; கூறுமிருகமுந்.

4. தெழுவகை; தெழுவகையாய்த்; தும்பி தெருவகை யாவுந் துலங்கவே; துளங்கவே;

குறிப்புரை

இனி; மேல் நிறுத்த முறையானே தம்பன கன்மம் உரைப் பான் புக்க ஆசிரியர், முதற்கண் அதன் வகையினை வகுத்து உணர்த்துகின்றார்.

தம்பனம் = தம்பன கன்மம் - கட்டுவினை - தடைவினை. தடை மந்திரம். விடை மந்திரம் (மாபாடியம்) என்பது மறிக. வெம்பின = வெம்மை - வெப்பம் - விரும்பம், வெம்

புயல் இடையிற்றோன்றி விளிந்திடும் மின்னு (-கந்தபு) கொம்மை வெம்முலையார் ஆட (-நைடதம்) தலம் - நிலம். சலம்-நீர் சுக்கிலம் = வெண்மை - வெண்ணீர் - இந்திரியம்; உடலில் உள்ள எழுவகைத் தாதுக்களுள் ஒன்று. இது தீயின் கூறாதலின், வெம்பின சுக்கிலம் என்றார். அண்ணல் உடலாகி அவ்வனல் விந்துவும் (-திருமந் 1951) சுக்கில நாடியிற் றோன்றிய வெள்ளியும் (464) என்பனவுங் கருதுக. வேறு-பிற. கட்கம்=வாள்-வாட்படை கொம்பு = ஊதுகொம்பு-விலங்கின் கொம்பு. விருகம்-மிருகம் தும்பு=தாம்பு - கயிறு. தும்பை விட்டு வாலைப் பிடித்தல் (-பழமொழி) ஆர்த்த தும்பு அறுத்து விடுப்ப (-திருவால -திருவிளை. 33:14) தும்பினது - கட்டுவினையாகிய தம்பன கன்மமானது என்க. துளங்குதல்-வெளிப்படுதல்.

தம்பன கருமத்தின் வகை 7. அவையாவன

1. நிலத்தம்பனம், 2. நீர்த்தம்பனம், 3. தீத்தம் பனம், 4. சுக்கிலத்தம்பனம், 5. படைக்கலத் தம்பனம், 6. பகைத் தம்பனம், 7. விலங்குத் தம்பனம் என்பனவாகும்.

மேற்கோள்

ஸ்தப்திஸ் ஸப்த விதாப்ரியே ||
பூமிஸ்தம்பம் ஜலஸ்தம்பம் சுக்லாக்ந்யோஸ்
தம்பநம்ததா |
ஆயுதாநாஞ்ச சத்ருணாம் ம்ருகாணாம் ஸ்தம்பநம்
க்ரமாது ||

என்பதுங் காண்க. — கட்சபுடம்.

பாடபேதம்.

தம்பனம் ஆவது: (1) அக்கினித் தம்பனம் (2) சலத்தம்பனம், (3) இந்திரியத் தம்பனம், (4) பிஷ்கஸ்தம்பனம், (5) சிங்குவைத் தம்பனம், (6) கதிஸ்தம்பனம் (7) ரூபஸ்தம்பனம், (8) வாயுத் தம்பனம், (9) பூமித்தம்பனம், (10) ஆகாசத்தம்பனம் (11) ஞாயிறு

(12) திங்கள் நட்சத்திரம் முதலான, நாள் கோள்களின் தம்பனம் முதலான சரிக்கிற சீவராசிகள் எல்லாம் சரியாமல் தம்பிக்கச் செய்தல்.

— தத்துவ நிசாநுபோகசாரம், 42-ஆம் அத். கவுளயாமளை மதம்.

1 நிலத்தம்பன கன்மத்தின் வகை—4

1. மரத்தம்பன இலக்கம்

81. துளங்கு நிலத்தம் பனஞ்சொல் வகைதான்
வளர்ந்து மரங்காயா மந்திக்கு நூறும்
விளங்குமெழுபதும் வேண்டைம்பைத் தொன்பான்
களைந்துசெக் கெண்ணெய் காணாம லென்னே.

பாட பேதம்

1. துளங்க; துலங்கு. பனஞ்சொல்லும்; பனஞ்சொல்லும்.

2. காயாமல் மந்திக்கு; காயாமலந்திக்கு; மரங்காய துளங்குமரங் காயாமற் றுதிக்கு மொரு நூறும். நூறு'

3. விளங்கு மறுபது; மெழுபது. வேண்டன்பத். வேண் டறுபத்; வேண்டும்பத்; வேண்டன்பத். தொன்பதும்.

4. களைந்தசெக்; களந்துசெக்; கலந்துசெக்; கெண்ணை. கெண்ணைக். கருதாம லெண்ணே,

குறிப்புரை

இம்மந்திரம்; மேல் நிறுத்த முறையானே முதற்கண் நிலத் தம்பன கருமத்தின் வகை உணர்த்துகின்றது.

காயா—காய்களைக் காய்க்கப்பெறாமல். மந்தித்தல் — மந்தமாதல் - அற்பமாதல் - தாழ்த்தல். களைதல் - நீக்குதல் இடுக்கண் களைவதாம் நட்பு – திருக்குறள் 788. திருமந்திக்கா தருளும்-திருவானைக் கோச் 1.

1. மரம் காய்க்காமல் மந்திக்க :-100-70-59.

இவற்றைக் குறிக்கும் வாங்கியங்களே கட்சபுடத்திலும் காணப்படுகின்றன.

இலக்க வேறுபாடு

1. மரம் காய்க்காது – மரம் காயாமல் மரத்தடியில்-மரம் வளர்ந்து காயாமற்போம்–நிலத்தம்பனம் மரங்காயாமல்-மரம் காயாமற்போம்: – 100 – 70 – 59 = 229.
100-70-90 = 260.
100-70-69 = 189.
100-60-69 = 229.
100-70-89 = 259.
90-60-98 = 248.
113. 141. 148. 220.

செக்கில் எண்ணெய் காணாமைக்குரிய இலக்கம், வருஞ் செய்யுளிற் கூறப்படும்.

2–செக்கு. 3-கரும்பாலைகளின் தம்பனம்

82. என்னுந்தொண்ணூற்றாறும் எய்துநாற் பத்தேழு
முன்னுமைம் பத்திரண்டும் மொய்த்த விலக்கம்
பன்னிய வாலைச்சா றில்லை பதினெட்டுந்
துன்னுநாற் றஞ்சோடு தொண்ணூற்றா றென்றே.

பாடபேதம்

1. எண்ணுந் தொண்; எண்ணூறுந் தொண்ணூற்றாறும்.

2. முன்னைம்பத்திரண்டு; முன்னைம்பத்திரண்டு; முன்னைம் பத்து ரெண்டும்; முன்னமைம் பத்திரண்டு. மொய்த்த விலக்கங்கள்; மொய்க்கு விலக்கங்கள்:

3. பன்னியே பாலைச் சாற்றில்லைப்; பண்ணிய; சாறில்லைப் பதி.

4. துன்னிய நூற்றஞ்சொடு தொண்ணூற்று நாலென்றே; துன்னநூற் றஞ்சொடு தொண்ணூற்று நாலென்றே; துன்னிநூற் றஞ்சொடு தொண்ணூற்றா றென்றே.

குறிப்புரை

இம் மந்திரம்; செக்கில் எண்ணெய் காணாமை, ஆலையிற் சாறுபடாமை ஆகிய தம்பனங்களுக்குரிய இலக்கம் உணர்த்துகின்றது.

மொய்த்தல். நெருங்குதல். மொய்-வலிமை, பன்னுதல்-ஆராய்ந்து சொல்லுதல். ஆலை-கரும்பாலை. சாறு-கருப்பஞ்சாறு. "ஆலைப் படுகரும்பின் சாறுபோல அண்ணிக்கும் அஞ்செழுத்தின் நாமத்தான்காண்". தேவாரம் 6764. துன்னல்-நெருங்குதல்.

2. செக்கில் எண்ணெய் காணாது:— 96-47-52 — கட்சபுடம்.

3. கரும்பாலையிற் சாறுபடாது:— 18-105-96.

இலக்க வேறுபாடு:

2. செக்கில் எண்ணெய் இல்லை - செக்கில் எண்ணெய் வராமல் - செக்கெண்ணெய் வராமல் - வாராமல் - பெறாமல் - வாராமல் செக்கடி - காணாமல் - வராது.
96-47-52 = 195.56-281.

3. ஆலைச் சாறில்லை - ஆலைச்சாறு வராமல் - ஆலைச் சாறு ஆலையடியில் - ஆலைச்சாறு ஆலையடி - ஆலைச் சாறுபெறாமல் – ஆலைச்சாறு கெடும் மழை பெய்யாது – ஆலையில் சாறு வராது – ஆலையில் சாறு வராதிருக்க ஆலையடி – ஆலைசாறு வராமல் – ஆலைச் சார் குறைய - கரும்புசாறு வராமல்:—
18-105-96=219.
45-109-18=173.
18-105-94=217.
106. 107. 110. 217. 219.

4. தனதானியத் தம்பனம்

83. என்று தனதா னியமிட்டு வைத்தற்குச்
சென்றுதொண் ணூற்றாறுஞ் சேர்ந்தபத் தொன்பதும்
அன்றிப் பதினெட் டாமிலக்கம் நால்வகை
நின்ற நிலத்தம்பம் நேர்பட்ட மந்திரம்.

பாட பேதம்

1. எண்ணுந்; என்றுந்தனதா. வைத்ததற்குச்; வைப்பதற்குச். னியமிட்டுதைதாகுச்; னியமிட்டுளதாகச்; னியமிட்டுரைத்தாருக்கு; னியமிட்டு வைத்தார்க்குச்.

2. சென்றுந்தொண் தொன்பது.

3. அன்றி பதினெட்டு மாமிலக்கம்; மாயிலக்கம். நாலுவகை.

4. நின்று. நிலத் தம்பனம். நேர்மந்திரம்; நேர்பட்ட மந்திரமே.

குறிப்புரை

இம்மந்திரம்; தனதானியத் தம்பனத்திற்குரிய இலக்கமும், நிலத்தம்பன கன்ம வகையின் தொகையும், அவற்றின் மந்திரத்திற்குத் தோற்றுவாயும் உணர்த்துகின்றது.

தனதானியம் - தானிய சம்பத்து - களஞ்சியத்திற் சேமித்து வைக்கப்பட்டுள்ள நெல் முதலாகிய செல்வங்கள்; இது தானிய தவசம் என்றாற்போல நின்றது. "சலவையோ பட்டோ தவசதா னியமோ" (குற்றா. குற. 70, 19). தம்பம்-தம்பன கன்மம். நால்வகை:— 1. மரம். 2. செக்கு. 3. ஆலை, 4. தனதானியம் என்பன. நேர்படல்-பொருந்துதல்.

4. தனதானியத் தம்பன இலக்கம்:- 96-19-18,

இலக்க வேறுபாடு

4. தனதானியம் நிலைக்க – தனதானியம் பெருக்காமல் தனதானியம் பயிர்விளையாமல் – விளையாதிருக்க – தன தானியத் தம்பனம் – தனதானியமிட – தனதானிய நிலத் தம்பனம் - தன தானியத்தில் வைக்க - உரலிலிட்ட தானியமு மசியாது – பயிர் விளையாமல் - தானியத் தம்பனம் – நிலத்தம்ப னம். தாது வளராமல் செடி கொடி:— 96-19-18=133.
171–173–215.
173–171–215.
86–19–18=123.
106–19–18–143.
46–19–80=145.
90–60–98=148.
123. 133. 190. 229.

தனதானியம் – தனமும் தானியமும் என உம்மைத் தொகையுமாம் நிலத் தம்பன வகை-4. என்பது:

பூமிஸ்தம்போ மகாதேவீ சதுர்த்தோ பேதத:ப்ரியே ||
— கட்சபுடம்.

1. நிலத் தம்பன கன்மப் பிரயோக வகை 4க்கும் உரிய சிறப்பு மந்திரம்:- 3.

ஓம் ஹ்ரீம் ஸ்ரீம் க்லீம் க்ஷிம் லம் காளி ஓம் காளி நீல காளி வச்ர காளி நிர்வாணீ மோகிநீ திஷ்ட்ட ஸ்தம்பய நில் சுவாகா ||

பாட பேதம்

1. நிலத்தம்பன மந்திரம், தியானம், திக்கு. கிரிகை வகை: மந்திரம். ஓம் ஸ்ரீம் க்லீம் காளி ஓம் நீல காளி வச்ர காளி நிர்வாணீ மோகிநீ நிலம் (நிலம்). ||

2. ஓம் ஸ்ரீம் க்ஷிலம் காளி ஓம் காளி வச்ரகாளி நிர்வாணிய (நிர்வணீயே) மோகி நீ நம: ஓம் ||

3. ஓம் ஹ்ரீம் க்லீம் காளீ நீல காளீ வச்ர காளீ நிர்வாணீ மோகிநீ நம;ஓம் ||

4. ஓம் ஸ்ரீம் க்ஷிம் லம் காளீ ஓம் காளீ வச்ர காளீ நிர் வாணீ யம் மோகிநீ நில் நம:ஓம். ||

5. ஸ்ரீம் க்லீம் த்வம் (க்வம்) ஷம் ஓம் காளீ ஹரீம் ரீம் காளீ நிர்வாணீ மோகிநீ நில். ||

6. ஓம் ஸ்ரீம் ஸ்ரீம் க்லீம் காளீ ஓம் நீல காளீ வச்ரகாளீ நிர்வாணீ மோகிநீ நம. ||

7. ஓம் ஹ்ரீம் ஹ்ரீம் ஹம் டம் ட்டம் ச்சாம் நம: சுவாகா நமோ நம: ||

8. க்கம் ஹரீம் ஸ்ரீம் காளீ நீல காளீ வச்ர காளீ நிர்வாணீ மோகிநீ நீலீ (நில்) க்கம் ஹரீம் ஸ்ரீம் காளீ நீலகாளீ வச்ரகாளீ நிர்வாணீ மோகிநீ || இம்மந்திரம் இரண்டு முறை அடுக்கிச் சொல்லப்பட்டது. அவ்வாறே செய்க.

குறிப்புரை

இம்ம்ந்திரம் மேலே சொல்லப்பட்ட நால்வகை நிலத் தம்பன கன்மப் பிரயோகங்களுக்கும் உரிய சிறப்பு மந்திரம் ஆகும். நால்வகை – நின்ற நிலத்தம்பம் நேர்பட்ட மந்திரம் என்று ஆசிரியர் தாமே தோற்றுவாய் செய்து கொண்டு இம்மந்திரத்தை ஓதியிருத்தலும் நோக்கத் தக்கது. இம் மந்திரத்தின் அதிதெய்வம் மகா காளி.

மேற்கோள்

பௌமாநாந்து மகாகாளீ மந்த்ரம் சம்யக்ஹோச்யதே ||
க்கம் ஹ்ரீம் ஸ்ரீம் இதி சங்கிருஹ்ய சம்புத்யதத
நந்தரம் ||

காளீதி நீலகாளீதி வச்ரகாளீதி பார்வதீ
நிர்வாணீ மோகிநீ நீலீ க்கம் க்ரீம் ஶ்ரீமித்ய நந்தரம் ||
காளீதி மோகிநித்யந்தம் புநரேவமுதாஹரேது. ||
— கட்சபுடம்

ஓம் ஹ்ரீம் ஶ்ரீம் பதமுச்சார்ய காளீ ஓங்காளி இத்யபி |
வச்ரகாளீச நிர்வாணீ மோகிநீ திஷ்ட்ட ஓமிதி ||
ஸ்தம்பயேதி பதம் ப்ரோக்த்வா சுவாகாந்தம்
—சாத்யபூர்வகம் |

1. நிலத்தம்பன கன்மத்தின் தந்திரம்

84. பட்டவிம் மந்திரம் பாரித்த சக்கரம்
கட்டுஞ்செக் காலை கருது மரத்தடி
ஒட்டுந் தனதா னியமொன்றி வைகைக்கு
வெட்டுங் குழிதனில் வேண்டிப் புதையே.

பாட பேதம்

1. பட்டவி மந்திரம்; பட்டது மந்திரம்.

2. கட்டுறுஞ்செக்; காட்டுஞ்செக்; காலைகந்துமரைப்போம்.

3. எட்டுந் தனதா னியம்பெறும் வகைக்கு; னியமொன்றி வகைக்கு; னியமொன்றும் வைக்கைக்கு; னியமொன்றின் வகைக்கு; னியமொன்றி வைக்கு; னியமொன்றே வைக்க.

4. வெட்டுக்குழி தன்னில்; வேண்டிப் புதைப்பதே; வெட்டிப் புதைப்பதே.

குறிப்புரை

இம்மந்திரம்; நிலத் தம்பன கன்மப் பிரயோக இயந்திரங் களை, வைக்கும் இடங்களை வகுத்து உணர்த்துகின்றது.

படுதல் – உண்டாதல், பாரித்தல்=பரித்தல் – தாங்குதல் - அமைத்தல் – பூசித்தல். தடமலர் எட்டினாற் பாரித்து ஏத்த - தேவாரம்.

வளைத்தல் – சூழவரைதல்; "சிலைபாரித்தானே"
— சிவக. 2285.

ஒட்டுதல்–பொருந்துதல். ஒன்றிவைகை–கூடியிருத்தல்.

எண்ணும் எழுத்தும் வரையப்பட்டு, முறைப்படி வழிபாடு ஆற்றி முடிக்கப்பட்ட இந்த நிலத்தம்பன கன்மப் பிரயோக இயந்திரத்தை, வேண்டிப் போற்றி அவ்வவற்றுக்கு அவ்வ வற்றின் அடியில் அகழ்ந்து புதைத்து வைக்க என்பதாம்.

கட்ச புடத்திலும் இத் தந்திரம் இவ்வாறே கூறப்பட் டுள்ளது. தனதானியம் - தனமும் தானியமும் உள்ள கரு வூலங்கள். வேண்டல்-விரும்பிய வரங்களை அருள வேண்டும் என்று விண்ணப்பித்தல்.

2. நீர்த்தம்பன கன்மம் : வகை–8

1. உப்புப்படாமை

85. புதைத்த நிலத்தம்பம் போக்ய பின்னை
விதிக்கும் சலத்தம்பம் வேண்டிய தென்றும்
ஓதுக்கிய உப்புப் படாதோர் நூற்றாறும்
பதிக்கின்ற வேழைஞ்சும் பாயமுப் பத்தொட்டே

பாட பேதம்

1. நிலத்தம்பனம்; நிலத்தம்பம் பொங்கிய.
2. விதைக்குஞ். சலத்தம்பனம். தென்னும்; தேனும்.
3. ஓதுக்கின வப்புப். நூற்றானும்.
4. வேழஞ்சும்; வேழஞ்சு. பாய். தெட்டுமே.

குறிப்புரை

இம்மந்திரம்; நிறுத்த முறையானே நீர்த்தம்பனகன்மம் உரைக்கத் தொடங்கி முதற்கண் உப்புப் படாமைக்குரிய இலக்கம் உணர்த்துகின்றது.

தம்பம்—தம்பனம். விதி—முறைமை. நிலத்தின் பின்னர் நீர் என்று வைத்து எண்ணப்படும் முறைமை. சலம்–நீர்.

நிலத் தம்பன கன்ம வகை கூறி முடித்த பின்னர் முறை மைப்படி வருவது நீர்த்தம்பன கன்ம வகையாம். இதன் வகை-8 அவற்றுள்: 1. அளத்தில் உப்பு விளையாமைக்குரிய இலக்கம். 106—35—38. — கட்சபுடம்

இலக்க வேறுபாடு

1. உப்புப் படாது - சலத்தம்பனம் உப்புப்படாது - உப்புப் படாமல் - அளத்தில் உப்பு இல்லை.

106-35-38=179.
81-88=169. 179.

மேற்கோள்

சலத்தம்பம் : வைகையாற்றிலிட்ட சலத்தம்பன விபரீத மந்திர ஓலைகள்தாம். — தக்க. 212 உரை.

2-முத்து. 3-மீன்கள் படாமை.

86. எட்டிய வெண்பத்தொன் றெய்திய நூற்றெட்டு
முட்டிய நூற்றுநால் முத்துப் படாதிடக்
கட்டு வலைமீன் படாதுதொண் ணூற்றாறும்
இட்டமுப் பத்தெட் டிருபத் தொன்பதே.

பாட பேதம்

1. எண்பத்தொண்.
2. படாதொழியக்.

3. வலைநேர் — படாக்காணுந்தொண் — ணூற்றாறால்; ணூற்றாலம்பத்.

4. தெட்டே யெய்திருபத்; தெட்டு மெய்யிருபத். தெட்டுமெய்திருபத், தெட்டெய்திருபத்.

குறிப்புரை

இம் மந்திரம்; முத்து விளையாமை, மீன் படாமை ஆகிய வற்றிற்குரிய இலக்கம் உணர்த்துகின்றது.

முட்டுதல் – பொருந்துதல். முத்துப்படாமை – கடலில் முத்துக்கள் விளையாமை; படுதல் - உண்டாதல். நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றும்:- தன்னியல்பு குறைதலாவது: நீர்வாழ் உயிர்கள் பிறவாமையும் மணி (முத்து) முதலாயின படாமையு மாம். – திருக்குறள் 17. பரிமேல். இடுதல் – வரைந்திடுதல். கட்டுதல் = பிணித்தல்—பின்னுதல். வலை மீன் படாது-வலையில் மீன்கள் அகப்படா. மீன் என்பது சாதியொருமை யாகலான், படாது என்னும் ஒருமை வினைமுற்றைக் கொண்டு முடிந்தது. இதனை வட நூலார் சாத்யேக வசனம் என்பர்.

2. கடலில் முத்துப்படாமை:- 81-108-104 — கட்ச புடம்.

3. வலையில் மீன் படாமை:- 96-38-29 —

இலக்க வேறுபாடு

2. முத்துப்படாது - கடலில் முத்து உண்டாகாது - முத்துப் படாமல் கரையில். 81-108-104 = 293. 145. 179. 293.

3. வலையில் மீன்படாது - நீரில் மீன் படாது - பரி(றி)யில் மீன் படாது - [பறி-மீன் பிடிக்குங் குருவி "பறியுடை முன்றில்",- பெரும்பாண். 265] 96-38-29 = 163. 80. 173. 179.

4-ஆறு கரை புரளாமை; 5-மழை பெய்யாமை

87. ஒன்பதிற் றாறும் ஒருநூற்றைஞ் சென்பதும்
பொன்பதிக் காறு கரைபுரண்டு போகா
பின்புற மாமழை பெய்யாதொண் ணூற்றிரண்
டன்புறத் தைம்பத்தஞ் சாறிரண் டாகுமே.

பாடபேதம்

1. றானும். நூற்றஞ். நூற்றஞ்சோடெண்பது; நூற்றஞ் செண்பது.

2. பொன்பதியாறு; பொன்பதிக்கவ்வாறு; பொன்பதித் தாறு; பொன்பதிற்றாது. கரைபுரளப்; கரைபிரண்டு. போகாது.

3. பின்புறத்து; பின்புரத்து. மாமழையும். ணூற்றிரண்டு.

4. டெண்புறத்; டெண்புரைத்; மன்புறத்; மன்புரத்; எண் புரைத்; டன்பதைம் பத்தஞ் சாறிரண்டாகுமே; தைம் பத்தஞ் சாதிரண்; தைம்பதஞ் சாதிரண்டாலே; டாகிலே.

குறிப்புரை

இம் மந்திரம்; ஆறு கரைபுரண்டோடாமை, மழைபெய்யா மைகளுக்குரிய இலக்கங்களை உணர்த்துகின்றது.

பொன்=பொலிவு-அழகு. பதிக்கு=பதியில்-நகரத்தில் ஆறு-ஆறுகள். மா-கருமை. மழை=மேகம்-நீர்.

4. ஆறு கரைபுரண்டு போகாமை:— 54-105-80
— கட்சபுடம்

5. மழை பெய்யாமை:— 92-55-12 —

இலக்க வேறுபாடு

4. ஆறு கரைபுரண்டு போகாது-ஆறு கரைபுரளாது. ஆறு கரைபுரளாமல்-ஆற்று நீரின் வேகம் கரையக் கடக்காது-ஆறு கரையை உடைக்காது-ஆறு அணை உடையாது-நதிவேகஸ் தம்பனம்:—

54-105-80=239.
56-105-18=179.
54-108-80=242.
96-105-80-16=297.
96-85-80=261.
179 . 235 . 239 . 242.
261. 297.

5. மழை பெய்யாது-மழை பெய்யாமல்-வான் பெய்யாது-வான் பொய்க்கும்-அந்த ஊருக்கு மழை பெய்யாது-வர்ஷ ஸ்தம்பனம்-(மழை பெய்யாமல்) ஐயனார்கோயில் நடு:—

92-55-12=159.
93-50-52=194.
92-55-80=227.
42-55-122=219.
145 . 159 . 194 . 219 . 227.

6 - இடி; 7 - மரக்கலங்களின் தம்பனம்

88. ஆகிய தெண்பதும் ஐம்பதும் நூற்றாறும்
ஏகில் இடிவிழா தென்று மரக்கலம்
போகா கடலிற் பொருந்தவெண் பத்தஞ்சும்
பாகாநாற் பத்து நாலும் பதினாறே.

பாட பேதம்

1. வொன்பது, மைம்பது நூற்றாறு.

2. மேக விடிவிழா வொன்றுமா லெக்கம்; மேகிலிடி விழாதென்று மரக்கலங்கள்.

3. போகாக். பொருதவெண். பத்தைஞ்சும்; பத்தைந்தும்; பத்தைந்து.

4. பாகாக; மாகாத-நாற்பத்தி; நாற்பது; நாற்பதும்.

குறிப்புரை

இம்மந்திரம்; இடிவிழாமை, மரக்கலம் செல்லாமைகளுக்கு உரிய இலக்கங்களை உணர்த்துகின்றது.

ஏகுதல்=போதல் - இயந்திரத்தில் வரைதல். மரக்கலம் = கலம்-கப்பல்கள். பாகு=பங்கு - பாகம்-பாங்கு.

6. இடித்தம்பன இலக்கம்:— 80-50-106(?) — கட்சபுடம்

7. மரக்கலத்தம்பன இலக்கம்:— 85-44-16.

இலக்க வேறுபாடு

6. இடிக்கட்டு-இடிவிழாது-விழாமல்-ஒரு யோசனை தூரம் இடி விழாது. (யோசனை=யோசநம் - நாற்குரோசம் - நான்கு கூப்பீடு (கந்த) 10 மையில் தூரம்):—

80–50–106=236.
80–100–106=286.
40–50–106=196.
50. 117. 196. 235.
236. 286.

7. மரக்கலக்கட்டு - மரக்கலம் போகாது - மரக்கலம் ஓடாமல் உச்சியில் – மரக்கலம் ஓடாது – கப்பல்களின் கால் முறிய–கப்பல் கடலில் ஓடாது:— 85-44-16=145.
85-40-46=171.
95-40-46=181.
71. 102. 145. 181.

மூலபாடம் முதலடியில் "நூற்றைந்தும்" என்றிருத்தல் வேண்டும் எனத் தோற்றுகின்றது இந்த 6-ஆம் பிரயோகம். இடித்தம்பனத்தின் இலக்கத்தைக் குறிக்கும் கட்சபுட வாக்கியம்: — நியமம் - நஜமம் - வைரவ ஜநயம் - ஜஸ ஜ - ஹாஷிணீ | ஸாதஜ ம்பநீ ஸூம் ஸநா॥ என்பதாகும். இதனில் நியமம் - 80; நஜமம் 50 ஜநயம் - 106 ஆகிய எண்களைக் குறிப்பனவாகும்.

இந்தக் கட்சபுடவாக்கியமும்: நியமம் - நஜமம் - வைரவ ஜநயம் - ஜஸ ஜ - ஹாஷிணீ | என்றிருத்தல் வேண்டும் எனத் தோற்றுகின்றது. இவ்வாக்கியத்தில் உள்ள நியமம் - நஜமம் - ஜநயம் என்பனவை 3-ம் கடபயாதி வாக்கியக் கணன முறைப்படி, முறையே 80-50-105 (=235) ஆகிய இலக்கங்களைக் குறிப்பன வாகும்,

8—ஆறு, குளங்களில் நீர் நிற்க

நீர்த்தம்பன வகையின் தொகை:— 8

89. ஆறு குளநீர் அலைத்துங் கரைநிற்கக்
கூறிய நூற்றாறுல் கொண்டெழு பத்தைந்தும்
ஏறிய எண்பதும் ஏற்ற விலக்கமாந்
தேறுஞ் சலத்தம்பஞ் சென்றெண் வகையே.

பாட பேதம்

1. ஆறுங்குளநீர்; ஆறுங்கரைநீர். அலைந்துங்; அலைந்தங்; அலைத்தங். அலந்துங்.

2. கொண்டவெழு. பத்தைஞ்சும்.

3. எண்பது மெய்து மிலக்கமாந்; எண்பதுமோரு மிலக்கமாம்; எண்பது மோது மிலக்கமாந்.

4. செலத்தம்பஞ், சிலத்தம்பஞ் – தம்பனஞ் – சென்ற தெண்; சென்றது மெண். வகையதே.

குறிப்புரை

இம்மந்திரம்; ஆறு குளங்களின் நீர்த்தம்பன இலக்கமும், நீர்த்தம்பன வகையின், தொகையும் உணர்த்துகின்றது.

ஏற்றல் = கொள்ளுதல். தகுதியாதல். தேறல்–தெளிதல்.

8. ஆறு, குளங்களின் நீர்த்தம்பன இலக்கம்:—
106–75–80 — கட்சபுடம்.

இலக்க வேறுபாடு

8. ஆறு, குளம் கரை நிலைக்க - கரையாமல் கரை நிற்கும்-ஆறு, குளம் போகாமல் - பாலம் இடியாது:—

106 – 75 – 80 = 261.
104 – 75 – 80 = 259.
261. 259.

நீர்த்தம்பன கன்மப் பிரயோகத்தின் வகை-8. அவை:-

1. உப்புப்படாமை. 2. முத்துப்படாமை. 3. மீன்படாமை 4. ஆறு கரை புரளாமை. 5. மழை பெய்யாமை. 6. இடி விழாமை. 7. மரக்கலம் ஓடாமை. 8. ஆறுகுள நீர்த்தம்பனம் என்பனவாம்.

மேற்கோள்

ஜலஸ் = தப்த்யஷ்டவர்க்காணி || ச்ருணுஷ்வாயாத லோசநே.
அஷ்டதாச ஜலஸ் தம்பம் — கட்சபுடம்

2. நீர்த்தம்பன கன்மப் பிரயோக மந்திரத்தின் தோற்றுவாய்

90. வகையொன்றி நின்ற வகுத்த சலத்தில்
தகையொன்றி நின்றவித் தம்பனங் கூறில்
பகையின்றி நின்ற பதினா றறையில்
தொகையின்றி நின்றதோர் மந்திரஞ் சொல்வதே.

பாட பேதம்

1. நிற்க வகுத்து செலத்திற்.
2. றகை. நின்றவத்.
3. பகையொன்றி. றறையிலே.
4. தொகையொன்றி. நின்றிடு; நின்றிரு; சொல்லே.

குறிப்புரை

இம்மந்திரம்; இதுகாறும் எடுத்தோதப்பட்ட நீர்த்தம்பன கன்மப் பிரயோக மந்திரத்துக்குத் தோற்றுவாயும், அதன் தந்திரமும் உணர்த்துகின்றது.

வகை-8 வகையாக எடுத்துரைக்கப்பட்ட நீர்த்தம்பன கன்மத்தின் வகைகள். தகை = தகுதி—மேன்மை பகை-மாறுபாடு. அறை - இயந்திரத்தில் கீறப்பட்டுள்ள அறைகள். தொகை = கூட்டம் - சேர்க்கை; தொகையின்றி - ஒன்றோடு ஒன்று மயங்காமல் என்றபடி. எனவே தனித் தனியாக என்க.

உயர்திணைத் தொகை வயின்—தொகை-மயங்குதல்.
— தொல். 578. இளம்.

இனி, எண் வகையாகக் கூறப்பட்ட, நீர்த்தம்பன கன்மப் பிரயோகத்திற்குரிய இயந்திரத்தில் உள்ள பதினாறு அறைகளிலும், பகிர்ந்து அடைக்கத்தக்கதாகிய நீர்த் தம்பன சிறப்பு மந்திரம் சொல்லத்தக்கது என்பதாம்.

ஆசிரியர், தாம் அடுத்துக் கூறப்புகும் மந்திரத்தை மிகாமலும் குறையாமலும் 16-ஆகப் பகிர்ந்து, இயந்திரத்தில் உள்ள 16-அறைகளிலும் நிரப்பி அடைக்க வேண்டும் என்னும் தந்திரம் உணர்த்துவாராய், பதினாறறையில் — தொகையின்றி நின்றதோர் மந்திரம் என்றும், இந்த நீர்த்தம்பன கன்மப்பிரயோகத்தின் வகை 8-க்கும் மந்திரம் இஃதொன்றேயாய் அமைந்திருத்தல் பற்றி "ஓர் மந்திரம்" என்றும் ஓதியருளினார் என்க. மேல் வருவனவற்றுக்கும் இவ்வாறே ஓர்ந்து கொள்க.

மந்திரம் – 4

2. நீர்த்தம்பன கன்மப் பிரயோக வகை 8-க்கும் உரிய சிறப்பு மந்திரம்

ஓம் ஐம் க்லீம் பகவதே சர்வேந்த்ரியாணீ ஹ்ரீம் ஸ்ரீம் அம் ஆம் க்ரோம் ரம் ட்ச்மிரியூம் ஸ்தம்பய நம் ஓம் சுவாகா. ||

பாட பேதம்

1. ஓம் ஐம் க்லீம் பகவதே சர்வேந்த்ரியாணீ ஹ்ரீம் ஸ்ரீம் ஆம் க்ரோம் ட்ச்மிரியீம் சுவாகா. ||

2. ஓம் ஐம் க்லீம் பகவதே சர்வேந்த்ரியாணீ ஹ்ரீம் ஸ்ரீம் ஆம் க்ரோம் ட்ச்மிரியூம் [சாத்திய நாமம்] ஸ்தம்பய சுவாகா. ||

3. ஓம் ஐம் க்லீம் பகவதே சர்வேந்த்ரியாணீ ஹ்ரீம் ஸ்ரீம் ஆம் க்ரோம் ட்ச்மிரம் ஓம் சுவாகா. ||

4. ஓம் ஐம் க்லீம் பகவதே சர்வேந்த்ரியாணீ ஹ்ரீம் ஸ்ரீம் ஓம் நமோ ட்சிரீம் சுவாகா. ||

5. ஓம் ஐம் க்லீம் பகவதே சர்வேந்த்ரியாணீ ஹ்ரீம் ணீம் அம் நமோம் ட்சிரும் சுவாகா. ||

6. ஓம் ஐம் க்லீம் பகவதே சர்வேந்த்ரியாணீ ஹ்ரீம் ஸ்ரீம் அம் நமோம் ஹ்ரீம் சுவாகா. ||

7. ஓம் ஐம் க்லீம் பகவதே சர்வேந்த்ரியாணீ ஹ்ரீம் ஸ்ரீம் ஆம் க்ரோம் ரம் ட்சிரீம் சுவாகா. ||

8. ஓம் ஐம் க்லீம் பகவதே சர்வேந்த்ரியாணீ ஹரீம் ஸ்ரீம் ஆம்-கெம் (க்ரோம்) ட்சிரீம் சுவாகா. ||

9. ஓம் ஐம் க்லீம் பகவதே சர்வேந்த்ரியாணீ ஹரீம் ஸ்ரீம் ஆம் க்ரேம் ட்சிரீம் சுவாகா. ||

10. ஓம் ஐயும் கிலியும் பகவதே சர்வ இந்திராணீ ஹ்ரீம் ஸ்ரீம் ஆமங்கோசங்கள் பயிரிப்பது சுவா: ||

11. ஐம் க்லீம் பகவதே சர்வேந்த்ரியாணீ ஹரீம் ஸ்ரீம் ஆம் கோசம் களபயிரியும் சுவாகா ||

12. ஐயுங் கிலியும் தேவதே சர்வாந்த்ரியாணீ ஹரீம் ஸ்ரீம் ஆமங் கோசங்கள் பயிரியும் சுவாகா ||

குறிப்புரை

இம்மந்திரம்; இதுகாறும் எடுத்து மொழியப்பட்ட நீர்த் தம்பன கன்மப் பிரயோகத்தின் வகை எட்டுக்கும் உரிய சிறப்பு மந்திரம் ஆகும். இம்மந்திரத்திற்குரிய அதி தெய்வம் ஞாயிறு என்பதாகக் கட்சபுடத்திற் காணப்படுகின்றது.

மேற்கோள்

தேவீ ரபி காராணாம் ஸ்தம்பநே பாநுமந்த்ரகம் |
வதாமி வரதே தேவீ ஸாவதாந மநா சிருணு. ||
ஓம் ஐம் க்லீம் பகவதே ஸர்வேந்த்ரியாணீ ஸமுச்சரேது |
ஸ்ரீரீம் ஸ்ரீம் ஆம் க்ரோம் சமுச்சார்ய ட்சமிரியூம் சுவாகா
ஹேதி மஹாமநும் || —கட்சபுடம்
ஓம் ஐம் க்லீம் பகவதே ததஸ் ஸர்வேந்த்ரியாணிச |
ஸ்ரீரீம் ஸ்ரீம் ஆம் க்ரோம் ஸமுச்சார்ய ட்ச்மிரம்தத்
ஸாத்யம் ஸமுச்சரேது || ஸ்தம்பயேதி பதம் ப்ரோக்த்வா
ஸ்வாகாந்தம் மந்த்ர முத்தரேது |
ஏதந் மந்த்ரம் யந்த்ரே ஸமாலிக்யா ||

— கட்சபுடம்

என்பனவும் நோக்குக.

2 – நீர்த்தம்பன கன்மத்தின் தந்திரம் இயந்திரத்தின் வைப்பிடம்

91. சொல்லிய மந்திரந் தோன்ற வரைந்தபின்
நல்ல வியந்திரம் நாடியே வைப்பிடம்
புல்லும் வலையில் மீனும் புகாதொழியச்
செல்லுந் துறையிற் சேர்ந்துப்பு முத்துக்கே.

பாட பேதம்

1. மந்திரம் தோன்ற.
2. நல்லவிவ்வியந்திர நாடியே.
3. புல்ல. வலையிலே. படாதொழிய; படாதொழிற்; படாதெழிற்; புகாதொழிய.
4. சொல்லுந். துரைதன்னில். செறிந்துப்பு; சொரிந்துப்பு. முற்றுமே.

குறிப்புரை

இம்மந்திரம்; நீர்த்தம்பன கன்மப் பிரயோகத்தின் தந்திர மாகிய இயந்திர வைப்பிடத்தினை உணர்த்துகின்றது.

இயந்திரம் – மேற்சொல்லியவாறு மந்திரம் வரையப்பட்ட இயந்திரம். நாடுதல் = ஆராய்தல்–தேடுதல். வைப்பு இடம் - வைத்தற்குரிய இடம். புல்லுதல் - பொருந்துதல். துறை - கடற்றுறை. வரைந்தபின் - வரைந்து விதிப்படி வழிபாடுகள் யாவும் செய்து முடித்தபின்பு என்க.

மந்திரம் வரைந்து விதிப்படி போற்றிப் பூசனைகள் செய்து முடிக்கப்பட்ட இந்த இயந்திரத்தை மீன்கள் அகப்படாமைக்கு மீன்வலையிலும், உப்பும் முத்தும் படாமைக்குக் கடற்றுறை யிலும் யாத்தும் புதைத்தும் வைக்க என்பதாம்.

சுவடிக் குறிப்பு

உப்புக்கும், முத்துக்கும் துறையிலாவது. கரையிலாவது மீனுக்கு வலையில் கட்டும்.

இதுவும் அது

92. முத்துஞ் சொரிமழை முட்டைய னானைக்கால்
எத்துங் குளநடு வேன்றகரை யாற்றில்
வைத்தங் குறுத்து மரக்கல மாமுடி
ஒத்த விடிசிரத் தோங்கெந் திரமே.

பாட பேதம்

1. முத்தஞ்; மற்றஞ். முட்டையனயன யானைக்கால்; முட்ட அய்யன் ஆனைக்காலில்; னாளைக்கால்.

2. எற்றுங். வெனகரை யாற்றுக்கு; கரையாற்றுக்குள்; கரை பார்த்து.

3. வைத்துங். குருத்து; குத்து; குயுத்த. மரக்கால மாமுடியில்; குயுக்த மாமுடியிலே.

4. ஒத்துமுடிக் குஞ்சிரத் தோங்கிய மந்திரமே; தோங்குயர் மந்திரமே; ஒத்துமிடஞ்சிரத்து ஓங்கிய வியந்திரம்; தோங்குயந்திரமே; ஒத்துமிடஞ் சிரத்தோங்கிய வியந் திரம்; ஒத்துமுடிக்குச் சிரத்; ஒத்தவிடஞ் சிறந்; ஒத்து மிடி சிரத்; தோங்கியந்திரமே.

குறிப்புரை

இம்மந்திரமும், நீர்த்தம்பன கன்ம யந்திர வைப்பிடத்தின் தந்திரம் உணர்த்துகின்றது.

சொரி மழை - பொழிகின்ற மழை; சொரிதல் - பொழி தல். மழைமுட்டு = மழை பெய்யாமை - மழைக்கட்டு வினை யேவல். முட்டுதல்=முட்டுப்பாடு-குறைதல். ஐயன் = ஐயனார்-

சாத்தன் கோட்டம். எத்தல் = எற்றல் - எற்றுதல் - அடித்தல். எத்துங்குளம் - நீரலைமோதுங் கரையினையுடைய குளம். சிரம்- உச்சி. பொதுப்படக் கூறியவதனால் மாட மாளிகை முதலிய வற்றின் உச்சியும் கொள்க.

மழை பெய்யாமைக்கு; ஐயன் கோட்டத்தில் நிற்கும் யானையின் காலிலும், குளநீர், கரையுள் நிற்றற்குக் குளத்தின் நடுவிலும், யாற்றுநீர் அணைகடவாமைக்கு அதன் கரையிலும், மரக்கலம் ஓடாமைக்கு அதன் உச்சியிலும், இடி விழாமைக்கு முடியிலும் இந்த நீர்த்தம்பன 'கருமப் பிரயோக இயந்திரத்தைத் தக்கவாறு வைத்தல் வேண்டும் என்பதாம்.

இந்த இரண்டு திருமந்திரங்களினாலும், எண் வகைப்பட்ட நீர்த்தம்பன கன்மப் பிரயோக இயந்திரங்களின் வைப்பிடத் தந்திரங்கள் சொல்லப்பட்டமை யறிக.

மேற்கோள்

மண்போற் பிறையணி மாளிகை சூலத்தவாய்
— திருக்கோவையார் 222.

மணிமாடத்து உச்சிமிசைச் சூலஞ் செழுங்கொண்டல் அகடிரிய
— திவ்ய. 1231.

ஒள்ளிலை சூலந் தெண்ணீர் உலாமுகில் கிழிக்கும்மாடம்
— சீவக. 2527.

சூல நெற்றிய கோபுரத் தோற்றமும் — 3003.

சூலநெற்றி - அந்தரந் திவளும் ஞாயிற் கோயில்
— சூளா. 361.

சூளிகை சூடிய சூல இலைத்தலை - மாளிகை — 654.

துகிலொடு நெடுங்கொடிச் சூலம் மின்னுவ
— கம்ப. பால. 128.

என்பனவுங் காண்க. சூலம் - மாடமாளிகை கூடகோபுரம் முதலியவற்றின் உச்சியில் அமைக்கப்படும் இடிதாங்கி.

2. நீர்த்தம்பன கன்மத்தின் முடிவு

93. இயந்திரந் தன்னை யெழில்பெற வைத்துப்
பயன்கொள்வ தென்று பரமனுஞ் சொன்னான்
தயங்கிய சுக்கிலத் தம்பனந் தன்னை
இயம்புவ னிந்த விலக்கத் தடைவையே.

பாட பேதம்

1. எந்திரம். யெழிற்பெற. வைத்தும்.
2. கொள்ளவென்று; கொள்கவென்று. சொன்னார்.
3. சுக்கிலதம்பனம்.
4. இயம்புதியிலிந்த லக்கத். தடைவே - தடைவிலே.

குறிப்புரை

இம்மந்திரம்; நீர்த்தம்பன கன்மத்தின் முடிவும், சுக்கிலத் தம்பன கன்மத்துக்குத் தோற்றுவாயும் உணர்த்துகின்றது.

எழில் = எழுச்சி - உயர்வு. பயன் = பலன் - சித்தி - தம்பன கருமத்தின் சித்தி. தயங்குதல் - விளங்குதல். இயம்புவன் - சொல்வேன். அடைவு = அடைதல் - முறை. பரமன் = சிவ பெருமான் - நந்தியெம்பெருமான்.

மேலே சொல்லிய வண்ணம் நீர்த்தம்பன இயந்திரங்களை ஏற்ற இடங்களில் வைத்துப் பயன் பெறல் வேண்டும். இனி, சுக்கிலத் தம்பனவகைகளின் இலக்ககம் முறையே சொல்லப்படும் என்பதாம்.

நிலம், நீர், தீ என்று வைத்து எண்ணப்படும் முறை பற்றி தம்பனஞ் சாற்றில் தலஞ்சலம் அக்கினி – வெம்பின

சுக்கிலம் (80) என்று முன்னர் நிறுத்த முறைப்படியே ஈண்டு அக்கினித் தம்பனத்தைக் கூறாமல் சுக்கிலத் தம்பனத்தைக் கூறியதற்குக் காரணம், இச் சுக்கிலமானது; சுவேதநீர். வெண்ணீர், எனப் பெயர் பெற்று நிற்றலினாலே நீர் என்னும் பெயரியையு பற்றி இது, நீர்த்தம்பனத்தின் பின்னர் வைக்கப் பட்டதென்க.

3. சுக்கிலத் தம்பன வகை-5.

1. சுக்கிலத் தம்பனம் 2. கர்ப்பத் தம்பனம்

94. அடைந்தது சுக்கிலம் ஐம்பத்தி னாலுந்
தொடர்ந்த வறுபதுந் தொண்ணூற்று மூன்று
மிடைந்தவள் கர்ப்பம் விழாது தரிக்க
நடந்திரு பத்தேழு நாலெட்டு நாற்பதே.

பாட பேதம்

1. அடைத்தது; அடைந்து; அடைவது. சுக்கிலத் தைம் பத்தினாலும்; சுக்கிலத் தம்பனத்துக் கன் பத்தினாலுந் ஐம்பதினாலும்.

2. துடர்ந்த. தொண்ணூற்றின்.

3. மிடைந்த வகை கர்ப்பம்; மிடைந்தவற்கெற்பம்; கெர்ப்பம், விடாது; விழாதுற்பவிக்க.

4. நடந்தவிரு பத்தேழு.

குறிப்புரை

இம் மந்திரம்; மேல் தோற்றுவாய் செய்துகொண்டவாறே சுக்கிலத் தம்பனவகை சொல்லத் தொடங்கி, முதற் கண் சுக்கிலத் தம்பனம், கர்ப்பத் தம்பனம் ஆகியவற்றிற்குரிய இலக்கம் உணர்த்துகின்றது'

மிடைந்தவள் = மிடி-மிடிமை-வறுமை; மிடைந்தவள் மக்கட்-செல்வம் இல்லாதவள்; மிடைதல் = வருந்துதல் – மக்கட் பேறின்றி வருந்தியவள்.

1. சுக்கிலத் தம்பன இலக்கம் : 54 - 60 - 93.

— கட்ச புடம்.

2. கர்ப்பம் தரிக்க 27 - 32 - 40. —

இலக்க வேறுபாடு

1. சுக்கிலத் தம்பனம் சுக்கிலந் தரிக்க; தலையில்; தலையில் தரிக்க:- 54-60-93=207. 66. 82. 102. 107. 207.

2. கருத் தம்பன இலக்கம் - கர்ப்பம் விழாமல் - கர்பத் தம்பனம் - விரைந்து கர்ப்பந் தரிக்க - விந்து தங்கிக் கர்ப்பம் நிற்க: தலையில், கழுத்தில் தரிக்க - பெற்றிள வாட்டிக்குக் கட்ட இய (நிர)ம்பப் பெறுவாள்:-

27 - 32 - 40 = 99· 40 - 42 - 47 = 129. 60 - 93 54 = 207. 60 - 95 - 54 = 209. 48. 49. 99. 100. 119. 129. 207. 209. 909.

3. குழவி மரிக்காமை 4. மாதர் தெருளாமை

95. நாற்பதும் நாற்பத் திரண்டெழு பத்தேழும்
பெற்றிடும் பிள்ளை பிறந்து மரியாமல்
ஏற்பது தொண்ணூறும் எண்பதும் பன்னேழும்
சேர்ப்பதும் மாதர் தெருளா திருக்கவே

பாட பேதம்

1. திரண்டேழும்.

2. பேற்றிடும்; போர்த்திடும் மறியாம லேற்பது.

3. ஏர்ப்பது; ஒப்பு. தொண்ணூறு மென்பதுந் தொடுந்த பன்னேழுஞ்.

4. சேற்பது.

குறிப்புரை

இம்மந்திரம்; பிறந்த மகவு மரியாமை, மாதர் தெருளாமை ஆகிய தம்பனங்களின் இலக்கம் உணர்த்துகின்றது.

பிள்ளை — குழந்தை. மரித்தல் — இறத்தல். மாதர் — பெண்கள். தெருளல் = பூப்படைதல் — இருதுவாதல்; தெருள் = தெளிதல் — அறிவு.

3. பிறந்த பிள்ளை இறவாமை:—40-42-77.
— கட்சபுடம்

4. மாதர் தெருளாமை: —90-80-17. —

இலக்க வேறுபாடு

3. பிறந்த குழவி மரியாமை — பிறந்த குழவி இறக்கா திருக்க-பிள்ளை சாகாமல்-தள்ளை சாகாது-பிள்ளை மரியாமல்-சாவு பிள்ளை பெறுவாளின் பாபத்தைப் போக்கும். பெற்றிள வாட்டிக்குக் கட்ட நிரம்பப் பிள்ளை பெறுவாள்-பிறந்த பிள்ளை சாகாது; கழுத்தில் தரிக்க. 40—42—77=159. 40—42—87=169. 78. 79. 159. 169. 238.

4. பெண்டிர் தெருளாதிருக்க - மகளிர் தெருளார் - மாதர் தெருளாதிருக்க - பெண் தெருளாமல் - பெண் தெருளா திருக்க - தெருளும்போம் - ரஜஸ்வலையாகாமலிருப்பாள் :— 90-80-17=187. 18-80-17-115. 17. 80. 92. 115. 157. 200. 217.

5. கொங்கை அரும்பாமை

96. இருக்க முலையெழா தேன்ற வறுபான்
தருக்கு மெழுபதுந் தாங்கெண்பத் தேழுஞ்
சுருக்க முறவைந்துஞ் சுக்கிலத் தம்பம்
நிரக்குமொரு மந்திரம் நீயறி வாயே,

பாட பேதம்

1. இருக்கு. வறுதுந்; வறுபதுந்; வறுப.
2. அருக்குமெழுபது ஆங்கெண்பத்தேழு.
3. முறவைந்து. சுக்கிலத் தம்பனம்.
4. நிரக்குமோர்; நிரக்குமொரு மந்திர நீயறியே. நிரைக்குமொரு; நிற்குமொரு; நீயறியே; நீயுமறியே; நீயுமறிந்திடே.

குறிப்புரை

இம்மந்திரம்; கொங்கையரும்பாமைக்குரிய இலக்கமும், சுக்கிலத் தம்பன வகையின் தொகையும், அவற்றின் மந்திரத் துக்குத் தோற்றுவாயும் உணர்த்துகின்றது.

ஏன்றல்=இயலல். தருக்குதல்—மேற்கொள்ளுதல். "கவறுங் கழகமுங் கையுந் தருக்கி" — திருக்குறள் 935. நிரக்கல் = நிரத்தல் - சமமாகப் பங்கிட்டுப் 16–அறைகளிலும் நிரந்து அடைத்தல்.

5—கொங்கையெழாமைக்குரிய இலக்கம்;— 60-70-87
— கட்சபுடம்

சுக்கிலத் தம்பன கன்மத்தின் வகை — 5. அவை;— 1. சுக்கிலத் தம்பனம், 2. கருத்தம்பனம், 3. குழவிசாகாமை, 4. மாதர் தெருளாமை, 5. கொங்கை எழாமை என்பன வாகும். இனி, இந்த சுக்கிலத் தம்பன வகை 5–க்கும் உரிய மந்திரம் அறியத் தக்கது என்பதாம்.

இலக்க வேறுபாடு

5. தனமெழாதிருக்க - தனம் எழாது - தனம் வராது – தனம் வளராது — முலையெழாமல் — எழாமலிருக்க. கழுத்தில் ;— 60–70–87=217. 107·217.

சுக்கிலத் தம்பன வகை–5 என்பது

சுக்லஸ்தம்பஸத்து பஞ்சதா ‖ — கட்சபுடம்

மந்திரம் - 5

3-சுக்கிலத் தம்பன வகை 5-க்கும் உரிய சிறப்பு மந்திரம்:

ஓம் ஸ்ரீம் க்லீம் க்ரம் வம் க்கம் அம் க்ஷம் சிவாய ஹ்ரீம் இம் ளம் ளம் மம் ஸ்தம்பய ஸ்வாஹா. ||

பாட பேதம்

1. ஓம் ஐம் க்லீம் ப்ரும் க்ரீம் வம் கம் அம் க்ஷம்சிவாய ஹ்ரீம் ஸ்ரீம் ளம் ளம் ட்டம் ஸ்வாஹா ||
2. ஓம் ஐம் க்லீம் ப்ரம் டம் சம் கும் வம் க்கம் க்ரம் க்ஷம் சிவாய ஹ்ரீம் ஸ்ரீம் இம் இம் ட்டம் ஸ்வாஹா ||
3. ஓம் ஐம் க்லீம் க்ரம் க்ரம் வம் வம் அம் சிவாய ஹ்ரீம் ஸ்ரீம் ளம் ட்டம் ஸ்வாஹா ||
4. ஓம் ஐம் க்லீம் ட்சிம் ப்ரம் ஸ்த்ரம் பம் பேம் அம் க்ஷம் சிவாய ஸ்ரீம் ஹ்ரீம் க்ஷம் ஸ்வாஹா ஓம் ||
5. ஓம் ஐம் க்லீம் க்ரம் க்ரம் பம் பம் கம் ஹம் சிவாய ஸ்ரீம் ஹ்ரீம் ளம் ளம் ட்டம் ஸ்வாஹா ||
6. ஓம் ஐம் ட்சிம் ஸ்ரும் ஸ்ரும் வம் வேம் அம் க்ஷம் சிவாய ம் ஹ்ரீம் ளம் ஸ்வாஹா ஓம் ||
7. ஓம் ஐம் க்லீம் க்ரம் க்ரம் வம் பம் கம் க்ஷம் சிவாய ஸ்ரீம் ஹரீம் ளம் ளம் ரம் ஸ்தாஹா ||
8. ஓம் ஐம் ட்சிம் ஸ்ரம் வம் வேம் அம் க்ஷம் சிவாய ஸ்ரீம் ஹ்ரீம் ஷம் ஸ்வாஹா ||
9. ஓம் ஐம் க்லீம் க்ரம் க்ரம் பம் பம் கம் க்ஷம் சிவாய ஸ்ரீம் ஹ்ரீம் ளம் ளம் ட்டம் ஸ்வாஹா ||

10. ஓம் ஐம் ட்சிம் ஸ்ரும் ஸ்ரும் பம் வேம் அம் க்ஷம் (ஷம்) சிரு சிரி) வாய ஸ்ரீம் ஹ்ரீம் ளம் (க்ஷம்) ஸ்வாஹா ஓம் ||

11. ஓம் ஐம் க்லீம் க்ரம் த்ரும் வம் பம் கம் க்ஷம் சிவாய ஸ்ரீம் ஹ்ரீம் ளம் (ரம்) ட்டம் ஸ்வாஹா ||

12. ஓம் க்ரீம் வங் கங் அங் சிவாய ஸ்ரீம் எங் டங் ஸ்வாஹா ||

13. ஓம் ஐம் க்லீம் வ்யம் (க்ரும்) த்வ த்ரும் வம் க்கம் அம் க்ஷம் சிவாய ஸ்ரீம் ஹ்ரீம் லம் ஸ்வாஹா ஓம் ||

14. ஓம் கிரியும் வங் கங் அங் க்ஷம் சிவாய ஸ்ரீயும் எங் டங் சுவாகா ||

15. ஓம் ஐம் க்லீம் ட்சிம் ப்பரம் ஸ்க்ரம் க்கம் க்கேம் அம் க்ஷம் சிவாய ஹ்ரீம் ஸ்ரீம் க்ஷம் ஸ்வாஹா ஓம் ||

குறிப்புரை

இம்மந்திரம் சுக்கிலத் தம்பன கன்மப் பிரயோக வகை 5-க்கும் உரிய சிறப்பு மந்திரம் ஆகும். இயந்திரத்தில் உள்ள 16-அறைகளிலும், இம்மந்திரத்தை முன்னர்க் குறித்தவாறு, கூடாமலும், குறையாமலும் சமமாக நிரவி அடைக்க வேண்டும் என்னுந் தந்திரமுணர்த்த வேண்டி "நிரக்குமொரு மந்திரம்" என்றார் என்க.

மேற்கோள்:

ஓம் ஸ்ரீம் க்லீம் க்ரம் வம் க்கமம் க்ஷம் சிவாய ஹ்ரீம் சமுச்சரேது || ளம் ளம் மம் ஸாத்ய ஸம்யுக்தங் ஸ்தம்பயேதி பதம் வதேது || ஸ்வாஹாந்தம்

மந்த்ரமுச்சார்யம்? — (?)

3. சுக்கிலத் தம்பன கன்மத்தின் தந்திரம்.

97. அறிந்த வியந்திர மாக்கு மடைவுஞ்
செறிந்த சிரமது சேர்க்க விலக்கம்
பிறிந்தவச் சுக்கிலம் பெற்றிழப் பாட்கு
நிறைந்தவக் கர்ப்பம் நிறுத்தத் தரிப்பதே.

பாட பேதம்

1. அறிந்தவிம் மந்திரம் ஆக்கு மடைவில்; மாகுமடைவும்.
2. சிறந்த சிரமது, சேர்ந்த விலக்கம்.
3. பிறிந்தது; பிறிந்தன; பிறிந்தவில்; மறிந்தது. பெற்றிளப். பாற்கு; பார்க்கு; பாகு.
4. நிறைந்தழி; நிறைந்தவிற். கற்பம்; கெற்பம். நிறுத்தித்; நிற்கத்.

குறிப்புரை

இம் மந்திரம்; இதுகாறும் உரைக்கப்பட்ட சுக்கிலத் தம்பன கன்மப் பிரயோக இயந்திரத்தை, வைக்கத் தக்க இடத்தைக் குறிக்குந் தந்திரம் உணர்த்துகின்றது.

ஆக்குதல் - செய்தல். அளவு = அடைதல் - முறை; ஆக்கும் அடைவு - தந்திர முறை. பெற்று இழப்பாள் - பிறந்த பிள்ளை சாகப் பெற்றவள்.

சுக்கிலம், பிள்ளை பிறந்து மறித்தல், கர்ப்பம் ஆகிய இந்த 30தம்பன கன்மப் பிரயோகங்களிலும் இந்த இயந்திரத்தை முடியில் அணிக என்பதாம்.

மேற்கோள்

ஸ்த்ரீணாம் சுக்லஸ் தம்பாதிதம் யந்த்ரம் சிரசி தாரயேது ||

இதுவும் அது

98. தரிப்பது மாசாத்தான் யானை யிடக்கால்
பெருத்த முலையுடன் பெண்தெரு ளாமல்
பொருத்த முறுநாட் பூசை பலியிட்டுச்
செருச்செயு மைங்காயஞ் சேர்த்துப் புதைப்பதே.

பாட பேதம்

1. மாச்சாத்தன்; மாச்சாத்தான்; மாசாத்தா. ஆனை; ஆனைக்காலில்; இடக்காலிற்.

2. பெண் திரளாமல்.

3. முறுநாளிற்; மொருநாளில், பெலியிட்டு; பலிசெய்து பலிசெய்.

4. செருச்செய்யு. சேர்த்திப்; சேத்துப். புதையே.

குறிப்புரை

இம்மந்திரம்; கொங்கையெழாமை, மாதர் தெருளாமை ஆகிய தம்பனங்களின் தந்திரம் உணர்த்துகின்றது.

மாசாத்தான் = தீமை செய்வோரைப் பெரிதும் ஒறுப்பவன் - எல்லாக் கலைகளிலும் வல்லவன் - ஐயன். (.–சிலப் 9: 12. அரும். அடியார்) முலையுடன் – கொங்கையெழாமைத் தம்பனத்தோடு. பூசை - இயந்திர பூசை. பலி = அவி – தேவர் உண்டி. இது வேள்வி வழிபாட்டினைக் குறித்தது. இடுதல் = கொடுத்தல் – சொரிதல். செருச் செய்தல் = செறுத்தல் – தடுத்தல் - தடை – தம்பனம். "வரையா வாயிற் செறாஅது" (.–மதுரைக். 748). ஐங்காயம் – பஞ்சகாயம்; அவை: 1. வெண் சிறு கடுகு. 2. உள்ளி (வெள்ளைப் பூண்டு – வெங்காயம்) 3. திப்பிலி (அரிசித்திப்பிலி - கண்டந்திப்பிலி), 4. மிளகு (வால் மிளகு – வெள்ளைமிளகு – கறிமிளகு). 5. காயம் என்பன. வேறு வகையாகவும் சொல்லப்படும், உள்ளி, கடுகு, காயம், சுக்கு

மிளகு என்பன. இம்மந்திரச் சுவடி ஒன்றில் காணப்படுங் குறிப்பு - கடுகு, ஓமம், வெந்தயம், உள்ளி, பெருங்காயம் என்பன, நாநார்த்த தீபிகையிலும், தேரையர், தைலவருக்குச் சுருக்கத் திலும் காணப்படுங் குறிப்புக்கள் – பஞ்சகாயம் = கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், வெங்காயம், காயம் என்பன தமிழ் லெக்ஸிகன் அகராதியிற் காணப்படுங் குறிப்பு. கடுக்காய், நெல்லிக்காய், வேப்பம் வித்து, மிளகு, மஞ்சள் என்றுங் கூறுவர். "சக்கரம் – பூசிஐங் காயம் புதை ஐயன் கோயிலில்".- 300: 141 என்பதும், அதன் குறிப்புரையுங் காண்க.

நகில் எழாமை, மாதர் தெருளாமை ஆகிய தம்பனப் பிரயோகங்களில் முறைப்படி பூசை பலி முதலியன செய்து முடிந்த பின்பு அந்த இயந்திரத்துக்கு ஐங்காயம் பூசி ஐயன் கோட்டத்துள் நிற்கும் யானையின் இடக்காலின் கீழே அவ்வியந் தரத்தைப் புதைத்திடுக என்பதாம்.

மேற்கோள்

"மிளகும் நெல்லியும் மஞ்சளும் வேம்பிடில்
இளகும் மேனி இருளுங் கபாலமே"
— திருமந்திரம். 849,

அரணமில் ஐங்காயம் பூசி — 998.

"ஆங்கு வடமேற்கில் ஐயனார் கோட்டத்திற்
பாங்கு படவே...கடுப்பூசி வைத்திடும்" — 999.
(பி—ம்: கருப்பூசி)

"பஞ்சாயத்தைப் பாரித்து வைத்திட" — 1000.

"காயம் இரண்டுங் கலந்து கொதிக்கினும்" — 17.

"நெய்யோடு ஐயவி அப்பி = ஐயவி - வெண்சிறு கடுகு". - முருகு. 228,

"ஐயவியப்பிய நெய்யணி நெடுநிலை" – நெடுநல். 86
"தேங்கொள் ஐயவி சிதறினாரே"

'தீந்தேன் இப்பிலி தேய்ந்து'' — சீவக. 113. 2703.

ஸ்த்ரீணி ரஜஸ்தம்பநே சாஸ்துராலயே கஜபாதே ஸ்தாபயேது | தத் யந்த்ரேபரி சித்தார்த்த லசுந பிப்பலீ மரீச இங்கு மாலேபய பலிந்தநஸ்தாபயேது ‖ [1. சித்தார்த்தம்- வெண் சிறு கடுகு. 2. லசுநம் – உள்ளி. 3. பிப்பலீ – திப்பிலி. 4. மரீசி – 5. இங்கு – பெருங்காயம்.] என்பனவும் ஈண்டுக் கருதத் தக்கன.

(மிளகு முதலாகக் கூறப்பட்ட 4 பொருள்களுடன், கடுக்காய்த் தோலையுஞ் சேர்க்பஞ்ச கற்பமாகும். திருமூலர்க்கருக்கடை 600-ல் 160 பார்க்க)

இவ்விரண்டு திருமந்திரங்களினாலும்; 1. சுக்கிலம் 2. கர்ப்பம் 3. மகவு 4. மாதர் 5. கொங்கை என்னும் ஐவகைப்பட்ட சுக்கிலத் தம்பனங்களின் தந்திரங்களான இயந்திரங்களின் வைப்பிடம் உணர்த்தப்பட்டமை காண்க.

4—தீத்தம்பனகன்மம். வகை—3.

1. மழுவேந்த.

96. புதைக்கின்ற சுக்கிலம் போயனல் தம்பம்
விதைக்கின்ற மாமழு வேந்தத்தொண் ணூறும்
பதிக்கும் பதினெட்டும் பார்முப்பத் தொன்றும்
கொதிக்கும் உலைதனிற் குறுகா திரும்பே.

பாடபேதம்

1. போயனல் தம்பனம்; போக்கிய தம்பனம்; போற்றிய தம்பனம்; போயக்கி தம்பனம்.

2. விதிக்கின்ற மாயமும் வேந்தத் தொண்ணூற்றாறும்; வேந்த தொணூறும்; பதைக்கின்ற தானங்கள் பார்த்துப் பதித்தபின்; புதைக்கின்ற தானங்கள் பார்த்துப் பலித்தபின்,

3. பாரிருபத் தொன்றுங். கொதிக்கின்ற வைக்கின் குள(ளி)ரும் வகைக்கே; கொதிக்க வைக்கின் குள(ளி)ரும் வகைக்கே.

4. கொதிக்கு முலைக்கு வுருகா; கொதிக்கு முலையிற் குருகா; கொதிக்கு முலையிற் குறுகா; கொதிக்கு முலையிற் குருக்க; கொதிக்கு முலையில் உருகா. விதிக் கின்ற பக்கம் விதியுடன் செய்வதே; விதிக்கின்ற லக்கம் விதியுடன் செய்வதே.

குறிப்புரை

இம்மந்திரம்; மேல் நிறுத்த முறையானே தீத்தம்பன கன்மப் பிரயோகத்தின் வகை கூறத் தொடங்கி முதற்கண் மழுத்தம் பனமும் இரும்புவேகாத்தம்பனத்துக்குத் தோற்று வாயும் உணர்த்துகின்றது.

சுக்கிலம் - சுக்கிலத் தம்பனம். போதல் - முடிதல். அனல் தம்பம் - தீத்தம்பனம். விதித்தல் - சொல்லுதல். மழு-பழுக்கக் காய்ச்சிய இரும்பு. ஏந்தல்-தாங்குதல். உலை-கொல்லனுடைய உலைக்களம். குறுகுதல் = அடைதல் - அணுகுதல்; என்பது அடைந்து உருகாது என்னும் பொருள்பட நின்றது.

1. மழுத்தம்பனம்-மழுவேந்த : 90-18-31. — கட்சபுடம்.

இலக்க வேறுபாடு

1. மழுவேந்த - மழுவெந்தது எடுக்க — மழுவேந்தல் — மழுவேந்தி நிற்க வேகாது — மழுவேறி நிற்க வேகாது - மழு வேகாது வேந்த—மழுவேந்தினால் வேகாது; கையில். தப்த லோகஸ்தம்பனம்-அக்கினித் தம்பனம் :—

90-18-31 = 139.
46-48-45 = 139.
40-38-21 = 99.
92-18-39 = 149.
92-18-61 = 171.
18·21·68·99.
109·139·149·171.

2. இரும்பு வேகாமை 3. வீடு வேகாமை

100 இரும்புவே காதே இடுமுப்பத் தாறும்
பொருந்தவெண் ணாறும் புகனாற்பத் தைந்தும்
வருந்திய முப்பதும் மன்னு நூற் றொன்றுஞ்
சொரிந்ததொண் ணூற்றாறுஞ் சொன்மனை வேகாதே.

பாட பேதம்

1. இடுமுப்பத் தொன்றும்.

2. பொருந்த வெண்ணூறும் புகன்றபத்தைந்தும்; புகல் நாற்பத்.

3. மந்நூற்றோ ரொன்றுஞ்; மைந்நூற்றோரொன்றும்.

4. சொரிந்ததோற் றாறுஞ்; ஞூற்றாறு சொல்மனை வேகா;

குறிப்புரை

இம்மந்திரம்; இரும்பு வேகாமை, வீடு வேகாமை ஆகிய தம்பனங்களுக்குரிய இலக்கம் உணர்த்துகின்றது.

2. இரும்பு வேகாமை : 36-48-45. —கட்சபுடம்

3. மனைவேகாமை : 30-101-96 —

வேகுதல் = உருகுதல்—எரிதல்.

இலக்க வேறுபாடு

2. இரும்பு . வேகாது — இரும்பு வேகாமல் - கொல்லர் உலைக்களத்திற் காய்ச்சினும் இரும்பு வேகாது - இரும்பு கொல்லன் உலையில் உருகாது — கொல்லர் உலையில் இரும்பு வேகாது; உலைக்களத்தில் - உலோகம் உண்டாகாது. 36–48–45 = 129. 46–48–45 = 139 36–48–55 = 139. 30-48–55 = 133, 96–18–21 = 135. 36, 48, 63. 129. 133, 135. 139, 149, 229,

3. வீடுவேகாமை—வீடு வேகாமல்—வீடு எரியாது—கூறை வீடும் தீப்பற்றி எரியாது—கூரை வேகாது—மனை வேகாது; மனையில் — வீட்டில். 30-101-96 = 227. 30-101-16 = 147. 30-101-90 = 221. 30-101-46 = 177. 30-107-16 = 153. 112. 147. 153. 177. 221. 227. 328. அக்கினித் தம்பனம்-46-48-45 = 139. 149.

4. தீத்தம்பன வகையின் தொகை-3

101. வேகாமல் அக்கினியும் வென்று தம்பிக்கச்
சாகா வகைமூன்றுஞ் சாதிக்கச் சொற்படி
பாகா மறைபதி னாறிற் பதிப்பது
போகா மந்திரம் போற்றி யிடுவதே.

பாட பேதம்

1. அக்கினி வென்றுந், அக்கினியுந் தம்பிக்க வேண்டுமது; அக்கினி தம்பிக்க வேண்டிதற்; வேகா இரும்புக் குலையில் இடுவது.

2. தோகாய். மூன்றுஞ் சொன்னபடி சாதிக்கும்; வாகானம் வீட்டினில் அக்கினி தம்பிக்கும்.

3. பதித்தது.

4. போகாத.

1-4. வேகாம லக்கினி தம்பிக்க வேண்டிடில்
வேகா இரும்புக் குலையில் இடுவது
வாகன வீட்டினில் அக்கினி தம்பிக்கும்
போகாத மந்திரம் போற்றி யிடுவதே.

குறிப்பு: சில சுவடிகளில் 1-4-ஆம் அடிகள் மட்டுமே காணப்படுகின்றன,

குறிப்புரை

இம்மந்திரம்; இதுவரையுங் கூறி வந்த தீத்தம்பன வகையின் தொகையும், அதன் மந்திரத்திற்குத் தோற்றுவாயும் உணர்த்து கின்றது.

வேதல் = வெப்பமாதல் - சூடாதல் - உருகுதல் - எரிதல். சாதல் - கெடுதல். வகை மூன்று - 1. மழுவேந்தல். 2. இரும்பு வேகாமை. 3. மனை வேகாமை சாதித்தல் = சாதனை - சித்தித்தல் - முடித்தல். பாகு = பாகம் பங்கு. அறை பதினாறு- இந்த இயந்திரத்தில் உள்ள 16-அறைகள். பதித்தல்-வரைதல். போதல்-அழிதல் போற்றுதல் = செபித்தல் - பூசித்தல்.

இதுகாறும் சொல்லப்பட்ட தீத்தம்பனப் பிரயோகத்தின் வகை 3-க்கும் உரிய இலக்கங்கள் தப்பாமல் சித்திக்கும். அதற் குரிய இயந்திரத்தில் உள்ள 16-அறைகளிலும் போற்றிப் பதித் திடத் தக்க மந்திரம் இனிச் சொல்லத்தக்கது என்பதாம்.

மந்திரம் — 6

4. தீத்தம்பன கன்மப் பிரயோக வகை 3-க்கும் உரிய சிறப்பு மந்திரம்

ஓம் ஐம் க்லீம் க்ஷும் க்ஷும் பகவதே ஸ்ரீம் ட்ச்மிரியூம் வம் க்ஷும் ரம் ட்டம் ட்டம் ஸ்தம்பய ஸ்தம்பய ஸ்வாஹா ||

பாட பேதம்

1. ஓம் ஐம் க்லீம் க்ஷும் க்ஷும் பகவதே ஜ்ரம் மோம் திம் ஸ்ரீம் ட்ச்ம்ரம் அம் க்ஷும் க்கம் ஸ்தம்பய ஸ்தம் பய வந்ஹிஜாயா ஸ்வாஹா ||

2. வம் க்ஷீம் ஹ்ரீம் ஸ்ரீம் ட்சிமிரியூம் ஹம் ஸம் க்கம் ட்டம் ட்டம் வம் க்ஷும் ரம் ஸ்தம்பய ஸ்தம்பய ஸ்வாஹா ||

3. ஓம் வாம் கிலீம் ள க ஷ ள க ஷ ய பகவம்த ரநிக மோஷ க்ரந்தி ஹீம் கேஷாம் க்ர ஸ்ரீத 8 ||

4. ஓம் ஐம் க்ஷிம் க்ஷமி க்ஷமி (க்ஷும் க்ஷும்) விசுதே ஸ்ரீம் ட்சிரீம் சௌம் ஷிம் (க்ஷிம்) க்ரீம் க்ஷ அம் அமர அம (அம்) க்ஷும் ளம் ஸ்வாஹா ||

5. ஓம் ஐம் க்ஷிம் க்ஷும் க்ஷபி (க்ஷமி) விசுதே ஸ்ரீம் ட்சிரீம் சொறஷிம் க்ரீ க்ஷ வ்ர அமர அம (அம்) க்ஷும் ள்ம் ஸ்வாஹா ||

6. ஓம் ஐங் கூங் (துங்) கழமி (க்ஷமி) அறுவதெந்திரம் மோகலை (மோங்) கஷஷயும் (க்ஷீயும்) வனழப்பி ஸ்ரீம் களப்பதும் அங்களஸ்வாஹா ||

7. ஓம் ஐம் க்ஷங் க்ஷமி அறுவதெந்திரம் ||

8. ஓம் ஐம் ட்ச்மீம் ட்சமி ட்சரி (ட்சமி) விசுதே ஸ்ரீம் ட்ச்மிரம் சொறஷிம் க்ரழ் க்ஷ ணா ரெ அமர அமர க்ஷும் ஸ்வாஹா ||

9. ஓம் ஐம் க்ஷிம் ட்சமி ட்சறி விசுதே ஸ்ரீம் ட்ச்ரீம் சொறஷிம் க்ரீ ப்ரு அமர அம (அம்) ட்சம் ளம் ஸ்வாஹா ||

10. ஓம் ஐம் க்லீம் ட்சமி ட்சமி பகவதே ஸ்ரீம் மோட்சீம் ஹரீம் க்லீம்'ட்ச்ம்ரம் க்ரம் ட்சம் வம் ஸ்வாஹா ||

11. ஓம் ஐம் க்லீம் ட்சமி ட்சமி பகவதேந்த்ரே மோாம் ஷம் ஹரீம் க்ரீம் ட்சத்ரம் ஆம் ட்சம் வம் ஸ்வாஹா ||

12. ஓம் ட்சிம் ட்சமி ட்சமி·விச்வதே ஸ்ரீம் ட்சரீம் சௌ: ட்சிம் ச்ரீம் ட்சம் அம் அமர அமர அம் ட்சம் உம் (ளம்) ஸ்வாஹா ||

குறிப்புரை

இம்மந்திரம்; மேலே சொல்லப்பட்ட தீத்தம்பன கன்மப் பிரயோக வகை 3-க்கும் உரிய சிறப்பு மந்திரமாகும். இதற்கு அதிதெய்வம் வருணன். இதனையும் முன்னர்க் கூறியவாறு 16 அறைகளிலும் அடைத்துப் போற்றுதல் வேண்டும். இம் மந்திரத்தை இயந்திரத்திற் பதிக்கும் போதும் இதனை நவின்று கொண்டே வரையவேண்டுமென்பர், "பதிப்பது, மந்திரம் போற்றி இடுவதே" என்றார். இம்மந்திரத்துள் வரும் வம் – என்பது வருணபீசமாகும்.

மேற்கோள்

ஓம் ஐம் க்லீம் ட்சமுச்சார்ய தத: ட்சம் பகவதேதிச |
ஜ்ரம் மோம்திம் ஸ்ரீம் ட்சரமித்யத ॥ அம்ட்சம் க்கம்ஸா
த்யமுச்சார்ய ஸ்தம்பய ஸ்தம்பயேதிச | வந்திஜாயா
ஸமாயுக்தம் வந்கிஸ்தம்பந மந்த்ரகம் ॥ .-கட்சபுடம்
ஆக்நேயாம் விகாராணாம் மந்த்ரம் வருணதைவதம் |
வம் ட்சிம் ஹரீம் ஸ்ரீம் சமுச்சார்ய ட்ச்மிரியூம் ஹம் ஸம்
க்கம்ச ட்டத்வயம் || —
த்ரிதாக்நிஸ் தம்பநம் ப்ரோக்தம் —

4. தீத்தம்பன கன்மத்தின் தந்திரம்

102. இடுவது யந்திரம் எவ்விடம் வைத்துத்
தொடுவது கையிற் சுடர்மழு வேந்த
இடுவது வேகா திரும்புக் குலையில்
அடுவது வீட்டினில் ஆக்கிவைப் பாகுமே.

பாட பேதம்

1. யெந்திரம்; மந்திரம்; யெந்திரம் அனலிடத்தே வைக்கத்; மந்திர மெவ்விடத்தே வைக்கத்; மந்திர மேவடைத்தே வைக்கத்.

2. தொடுகையி லச்சுடர் மழுவேந்தி.

3. விடுவது - வேகா இரும்புக். இடுவது ஆயுதந் தம்பிக்கு மாறுகேள்; தம்பிக்கும் வாறுகேள்.

4. இடுவது பொது வீட்டிலக்கினிக்காகும் வைப்பாமே; வைப்பதே; வைப்பாமோ; வைப்போமே.

முடிவு: அக்கினித் தம்பன முற்றும்.

குறிப்புரை

இம் மந்திரம்; மேற்சொல்லப்பட்ட மூன்று வகையான தீத்தம்பன கன்மப் பிரயோகங்களின் தந்திரம் உணர்த்துகின்றது.

இடுவது வைத்து = வைத்திடுவது – வைப்பது. எவ்விடம் - எந்த இடங்களாகும் என்று வினாவின். தொடுதல்=கட்டுதல் - தரித்தல். "கிண்கிணி களைந்தகால் ஒண்கழல் தொட்டு" (.–புறம். 77); "சுறாவெழுதிய மோதிரந் தொட்டாள்" (.–கலித். 84:23). அடுதல்–ஏற்றதாதல். வைப்பு ஆகும்–வைக்கத் தக்க இடங்களாகும்; வைப்பு-வைப்பிடம்.

இந்தத் தீத்தம்பன வினையேவல்களில், மழுவேந்துதற்குக் கையிலும், இரும்பு வேகாகைக்குக் கொல்லர் உலைக்களத்திலும்,

மனை வேகாமைக்கு விட்டிலும் இயந்திரத்தை ஏற்றபடி வைக்க என்பதாம்.

மேற்கோள்

ஏதத்யந்த்ரம் தப்த லோஹ தாரணஸ்ய ஹஸ்த
தாரயேது |
நதப்தஸ்யாது கிருகதஹே கிருகோபரி ஸ்தாபயேது. ||
— கட்சபுடம்.

என்பதுங் காண்க.

5. படைக்கலத் தம்பன வகை-5

103. வைப்பாகு மக்கினித் தம்பம் வருந்தாமல்
தப்பாமல் ஆயுதந் தம்பிக்கு மாறுகேள்
அப்போது வெட்டில் அறாதறு பத்தாறும்
முப்பதின் மூன்றும் முதலறு நான்கே.

பாடபேதம்

1. தம்பனம்; தம்பிக்கும். வாங்காமல்.

2. ஆயுதங்கள் தம்பிக்கு. மாறுரைப்பன். தம்பிக்கும் வா (மா) று. தப்பாப் பொதுவெட்டறாதறு ப்த்தாறு; தப்பாம் பொது வெட்டிலறாதறு பத்தாறு.

3. ஒப்பாமுப் பதின்மூன்று முதலறு நன்கும் ; நான்குமே.

4. முப்பத்து எப்போது மாகு மிவையா யுதத்தம்பம் நான்குமே.

குறிப்புரை

இம்மந்திரம்; நிறுத்த முறையானே படைக்கலத் தம்பனத்துக்குத் தோற்றுவாயும், வெட்டுப்படாமைக்குரிய இலக்கமும் உணர்த்துகின்றது.

வைப்பு-இயந்திரத்தை வைக்குமிடம். தம்பம்-தம்பனம். தப்புதல் - தவறுதல். வெட்டில் அறாது-வெட்டினால் வெட்டுப் படாது.

தீத்தம்பன கன்மப் பிரயோகத்தின் மந்திர தந்திரங்கள் இவையாம். இனி, நிறுத்த முறையானே சொல்லத் தக்கது படைக்கலத்தம்பன கன்மப் பிரயோகத்தின் வகைகள் ஆகும். அவற்றுள்:

1–கத்தி வெட்டுப்படாமைக்குரிய இலக்கம் : 66–33–24
— கட்சபுடம்

இலக்க வேறுபாடு

1. வாட்படை வெட்டுப்படாது — வெட்டுப்படாது — வெட்டறாது – வெட்டறாமல் - வெட்டுக்குத்து அறாது-கட்கஸ் தம்பனம் – ஆயுதத் தம்பனம் – ஆயுதம் வெட்டறாமல் இருக்க; தலையில்—66–32-24 = 123. 66 33—34 = 133. 96—33—24 = 153. 63—33—24 = 120. 33. 60. 120. 122. 123. 133. 153.

இதுவும் அது

104. நான்கெட்டும் முப்பதும் நல்ல பதினஞ்சும்
ஊன்பட் டெலும்பில் உறையாது குத்தெலாம்
தான்பட்ட வம்புகள் தையா வறுபதுஞ்
சூன்பட் டிருபதுஞ் சொல்லைம்பத் தொன்றே.

பாட பேதம்

1. பதினைஞ்சும்; பதினைந்தும்.

2. ஊனப்படலுப்பு முறையாது; ஊன்பட்டவுப்பு முறையாது; உதையாது. குத்தெல்லாந்; குத்துக்கள்.

3. வம்புகளுந் தையாதறுபதுஞ்.

4. சொல்லன்பத் தொன்றுமே.

குறிப்புரை

இம்மந்திரம்; உடம்பிற்குத்து உறையாமை, அம்புதைக்காமை ஆகியவற்றிற்குரிய இலக்கங்களை உணர்த்துகின்றது.

ஊன் = தசை-உடம்பு. சூன் = குறைவு-மறைவு; சூன் படல் = குறைதல்-மறைதல்; வழக்கச் சொல். உறைதல் – அழுந்துதல். தைத்தல் = உட்புகுதல் – ஊடுருவுதல் – பொருந்துதல்.

2—குத்து உறையாது; 32—30—15 — கட்சபுடம்.

3—அம்புகள் தைக்கா:— 60—20—51 —

இலக்க வேறுபாடு

2 — குத்துப்படாமல் - குத்துப்படாது - குத்து தையாமல் குத்து தையாது; தலையில் — 32—30—15=77. 70—21—81=172. 70. 77. 81.

3—அம்புதையாது — அம்புதையாமல் — அம்பு படாமல் — அம்பு பட்டாலுந் தையாது; கையில். 60—20—51 = 131. 66—20—15=101. 30. 68. 101. 131.

இதுவும் அது

105. ஒன்று மரமறா தோங்கெழு பத்தாறும்
சென்ற விருபதுஞ் சேரிரு பத்தாறும்
அன்றி யைம்பத்தே ழாகுநாற் பத்திரண்டும்
நின்ற வெழுபான் நேருங் கிடாய்வெட்டே.

பாட பேதம்

1. ஒன்று மரம் வெட்டறாமோ (தோ)ங்குமெழு; தோங்கு மெழு; ஓங்கெழுபத்தாறும்; ஒன்றவிருபதும், சேர்ந் தெழுபத்தாறுஞ் சென்றவிருபதும்.

2. சேர்ந்தவிரு; சேருமிரு; சேர்ந்திரு; தேர்ந்தவிரு; சேர்ந் திருபத்தாறு மன்றியையம் பத்தேழும்; ஆர்ந்திருபத்தாறு மன்றியையம் பத்தேழும்.

3. அன்றியன். நாற்பத்திரண்டு மாய்நின்ற வெழுபதும்; ஆர்ந்த நாற்பத்திரண்டு மாய்நின்ற வெழுபது; அன்றி யையம் பத்தேழும் நாற்பத் திரண்டுமாய்; நார்ப்பத்.

4. வெழுபதும்; வெழுபதுமாய். மான்பட நேரு மாகிடாய் வெட்டே.

குறிப்புரை

இம்மந்திரம்; மரம் வெட்டுப் படாமை, கிடாய் வெட்டுப் படாமை ஆகிய தம்பனங்களின் இலக்கம் உணர்த்துகின்றது.

அறாது = அறுக்கப்படாது — வெட்டுப்படாது. கிடாய் — ஆட்டுக்கிடாய், வெட்டு அறாது — வெட்டுப்படாது என்க.

4. மரவெட்டுத் தம்பன இலக்கம்: 76–20–26
— கட்சபுடம் (?)

5. கிடாய் வெட்டுத் தம்பன இலக்கம்: - 57-42-70
— கட்சபுடம் (?)

இலக்க வேறுபாடு

4. மரம் வெட்டேறாது – வெட்டுப்படாமலிருக்கும் – மரம் வெட்டாமல் – வெட்டறாது - மரம் வெட்ட அறாது - வெட்டறாது மரம்; மரத்தடி:- 76-20-26 = 122. 66-23-26 = 115. 115. 122.

5. கிடாய் வெட்டறாது - வெட்டுப்படாது - வெட்டாது - வெட்டறாமல் - அடியில்:— 57-42-70 = 169. 148. 166. 169. 199.

5. படைக்கலத் தம்பன வகையின் தொகையும் மந்திரமும்

106. வெட்டுங் கிடாயுடன் வேறா யுதத்தம்பம்
பட்டது பாரிற் பரந்து வகையஞ்சாய்
இட்ட இலக்கம் எழில்பெற நின்றபின்
கட்டு மந்திரங் காண்ப தறையிலே.

பாட பேதம்

1. கிடாயும். வேறாயுத தம்பம்; வேறாயுத தம்பனம்.
2. பட்டது வாளிற்: வானிற். பரிந்தவகை யஞ்சாகி; யஞ்சா.
3.
4. கட்டிய மந்திரங்; கட்டியயந்திரங். தறியிலே.

இம் மந்திரம்; படைக்கலத் தம்பன வகையின் தொகையும், அவற்றின் மந்திரத்துக்குத் தோற்றுவாயும் உணர்த்துகின்றது.

வெட்டுங் கிடாயுடன்-கிடாய் வெட்டுத் தம்பனப் பிரயோகத்தோடு. வேறு - மற்றையது. ஆயுதத் தம்பம் - படைக்கலத் தடை வினை ஏவல். பாரில் - உலகில். பட்டது வகை அஞ்சாய்- ஐந்து வகையாய்ப் பட்டது என்க. படுதல் - உண்டாதல். எழில் - எழுச்சி - அழகு. கட்டுமந்திரம்-இந்தப் படைக்கலக் கட்டுவினை ஏவலின் மந்திரம். கட்டு = கட்டுதல் - தம்பனம். காண்டல் = காணுதல் - அறிதல் - செய்தல் - வரைதல்.

படைக்கலக் கட்டு வினையின் வகை 5-ஆவன:-

1. வெட்டறாமை. 2. குத்து உறையாமை. 3. அம்புதைக்காமை 4. மரம் வெட்டறாமை. 5. கிடாய் வெட்டறாமை என்பனவாம்.

முடிவாகக் சொல்லப்பட்ட கிடாய் வெட்டறாமையுடன் படைக்கலத் தம்பனத்தின் வகை ஐந்து ஆகும். இனிக் காண இருப்பது இவற்றுக்குரிய மந்திரம். அஃது இயந்திரத்தில் உள்ள 16 - அறைகளிலும் வரையத்தக்கது என்பதாம்,

மந்திரம் — 7

5. படைக்கலத் தம்பனப் பிரயோக வகை - 5க்கும் உரிய சிறப்பு மந்திரம்

ஐம் க்லீம் ஸர்வேந்த்ரியாணீ ரமி ரமி ஹ்ரீம் ஹ்ரீம் யம் யம் ட்சிம் பம் ட்டம் ரம் ஸ்தம்பய ஸ்தம்பய ஸ்வாஹா ||

பாட பேதம்

1. ஓம் ஐம் க்லீம் ஸர்வேந்த்ரியாணீ ரமி ரமி ஷ்ரீம் ஹ்ரீம் யம் ட்சமி ட்சமி ஓம் ஸ்வாஹா ||

2. ஓம் ஐம் க்லீம் ஸர்வேந்த்ரியாணீ ரமி ரமி ஹரீம் ஹ்ரீம் யம் யம் ட்சமிம் ட்சமிம் ஓம் ஸ்வாஹா ||

3. ஓம் ஐம் க்லீம் ஸௌ: ஸர்வேந்த்ரியாணீ ரம் ரம் ஷிம் க்ரோம் ப்ரீம் தம் தம் ட்சமி ட்சமி ஓம் ஸ்வாஹ

4. ஓம் ஐம் க்லீம் ஸௌம் ஸர்வேந்த்ரியாணீ ட்சிம் ஸம் ஸ்வாஹா ||

5. ஓம் ஐம் க்லீம் ஸௌம் ஸர்வேந்த்ரியாணீ ரமி ரமி ஷிம் க்ரம் ஹ்ரீம் தம் தம் ட்சமி ட்சமி ஓம் ஸ்வாஹா ||

6. ஓம் ஐம் க்லீம் ஸௌம் ஸர்வப்ரயாணீ ரமி ரமி ஷிம் க்ரும் ஹ்ரீம் தம் தம் ட்ச்மி ட்சமி ஓம் ஸ்வாஹா ||

7. ஐம் க்லீம் ஸர்வ யந்த்ராணீ சிரமி தம் தம் ட்சமி ட்சமி ஓம் ஸ்ாஹா ||

வெட்டுக்கு — தலையில் — கையில். மரம் வெட்டுக்கு— வேரில் கிடாய்க்கு—பிடரியில்.

8. ஓம் ஐம் க்லீம் சௌம் ஸாவப்ரியாணீ ரமி ரமி ஷிம் க்ரு ஸ்ரீம் தம் தம் ட்சுமி ட்சமி ஓம் ஸ்வாஹா ||

9. ஐம் க்லீம் ஸர்வயந்த்ராணீ சிரமி ஹ்ரீம் தம் தம் (யம் யம்) ட்சம் ட்சம் ஓம் ஸ்வாஹா ||

வெட்டுக்குத் — தலையில் — கையில். மரம் வெட்டுக்கு — வேரில். கிடாய்க்கு — பிடரியில்.

10. ஓம் ஐம் க்லீம் ஸர்வேந்த்ரியாணீ ரமி ரமி ஷங் இரீங் ஷமி ஓம் ஸ்வாஹா ||

குறிப்புரை

இம் மந்திரம், படைக்கலத் தம்பன கர்மப் பிரயோக வகை 5-க்கும் உரிய சிறப்பு மந்திரம் ஆகும். முன்னர்க் கூறியவாறே இம்மந்திரத்தை இயந்திரத்தில் உள்ள 16-அறைகளிலும் சமமாக நிரப்பி அடைத்தல் வேண்டும். இம்மந்திரத்திற்கு அதிதெய்வம்-கலுழன்.

மேற்கோள்

ஆயுதஸ்தப்தி பேதாநாம் மந்த்ரம் சிருணு கருட்யத: |
ஓம் ஐம் க்லீம் சைவ ஸர்வாக்யாம் இந்த்ராணீ
ரமித்வயம் ||

மாயாத்வயம் வாயுயுகம் (யுக்மம்) ட்சிபடம்
வந்ஹிஜாயயா ||

தத : ஸாத்யம் ஸ்தம்பய ஸ்தம்பயேதிச ||

ஏதேஷாம் ஸமாயுக்தம் ஆயுதஸ் தப்தி மந்த்ரகம் ||
— கட்சபுடம்.

ஆதி பௌதிககருடன் ஆதி தைவிக கருடன் ஆத்தியான்மிக கருடன் எனக் கருடன் மூன்று வகைப்படும். அவற்றுள் உலகத்திற் காணப்படுங் கருடன் ஆதி பௌதிக கருடன்,

அதற்கு அதிதெய்வமாய் மாந்திரிகன் உள்ளத்தில், அதுபோல வைத்துத் தியானஞ்செய்து கணிக்கப்படும் மந்திரம் ஆதிதைவிக கருடன். அம்மந்திரத்தினிடமாக நின்று மாந்திரிகனுக்குப் பயன் கொடுப்பதாகிய சிவசக்தி ஆத்தியான்மிக கருடன் எனப் படும். இவற்றுள் ஈண்டுக் கருடன் என்றது கருடனுக்கதி தெய்வமாய் மாந்திரிகன் உளத்திற் காணப்படும் மந்திர ரூபமாகிய ஆதி தைவிக கருடனை.

—சி. போ. வெ. 58. மாபாடியம்.

கருடன் உருவம் கருதும் அளவில் – திருமந்திரம்-2659.

என்பனவும் ஈண்டு நோக்கத் தக்கன. மேலே குறிக்கப்பட்ட மந்திரத்துள் 10, 11-ஆம் பீசங்களாக வந்துள்ள ட்சிம் பம் என்பவை இரண்டும் ஆதி தைவிக கலுழனது மூல எழுத்துக்களாகும்.

5. படைக்கலத் தம்பன கன்மத்தின் தந்திரமும் இயந்திரத்தின் வைப்பிடமும்

107. அறையிலே மந்திரம் ஆக்கிய பின்னை
இறைதனை வைக்கும் இருப்பிடம் சொல்லில்
நிறைதலை தான்வெட்டு நேரம்பு குத்து
வெறிபடக் கையினில் வேண்டிப் பிடர்கிடாய்.

பாட பேதம்

1. அறையினில் – அறைதனில்.
2. இறைதன்னை - இறைதனில். சொல்லும்.
3. தன்வெட்டு.
4. வெறிபடைக் – வெறிபடை. கையில் – கையிற் பிடி இடாய் வெட்டே – வெட்டு – மிட்டக் கிடாய் வெட்டே - பிடர் கிடாய் வெட்டே – வேண்டிப் பிடிகிடாய்.

குறிப்புரை

இம்மந்திரம் தம்பனத்தின் தந்திரமாகிய இயந்திரம் வைக்கும் இடத்தை உணர்த்துகின்றது.

அறை - இயந்திரத்தில் உள்ள 16-அறைகள். மந்திரம் - மேலே சொல்லப்பட்டதாகிய படைக்கலத் தம்பன மந்திரம். ஆக்குதல் - அமைத்துப் பூசித்தல். இறை = கையில் உள்ள இரேகை - வரை - கோடு (பிங்கலம்). இறைக் கரஞ்சிவப் பெய்திட (இரகு. நாட்டுப். 34) அதுபோன்ற வரைகளை உடைமையால் இயந்திரம், இறையெனப்பட்டது; ஆகுபெயர்; இறைவளை யாழ்தழீஇ இருப்ப (சீவக. 656); இறை - ஆகு பெயர். (நச்) என்பனவுங் காண்க. வெறிபட - ஒழுங்காக, வெறி - ஒழுங்கு.

வேறு வேறு கம்பலை வெறிகொள்பு மயங்கி —
— மதுரைக்காஞ்சி 617.

பிடர்=பிடரி - கழுத்தின் பின்புறம். கிடாய் - ஆட்டின் ஆண். கிடாய் விரவுகின்ற செம்மறித்திரள் வெள் யாட்டுடனே கலந்து. — மலை. 414. நச். உரை.

கடா = ஆடு - எருமை - என்பனவற்றின் ஆண் - நிகண்டு.

இந்த படைக்கலத் தம்பனப் பிரயோக வகைகளில் படை வெட்டுப் படாமைக்குத் தலையிலும்; அம்புதைக்காமை; குத்து உறையாமை ஆகிய இவ்விரண்டு தம்பனங்களுக்குக் கையிலும்; கிடாய்வெட்டுப் படாமைக்கு அதன் பிடரியிலும் இயந்திரத்தைக் கட்டுக என்பதாம்.

எஞ்சியுள்ள மரத் தம்பனத்தின் வைப்பிடம் வருஞ் செய்யுளிற் சொல்லப்படும்.

இதுவும் அது

108. 'கிடாயு மரமுங் கிளத்துகை வெட்டுப்
படாது மணலிற் பதித்துடன் தூவி
அடாநின்ற வாயுதத் தம்ப மவைபோய்ப்
படாநின்ற சத்துருத் தம்பம் பாடுவதே.

பாட பேதம்

1. கிளர்ந்துகை – கிளர்ந்தகை - கிளர்த்துகை – கீழாந் தழை. வெட்டு – வெட்டும்.

2. பதித்துடனாவில் – பதித்துடனறிவில் - பதித்துடனெறி வில் – பரிந்துடன் தூவில். மண்ணிற். புதைத்துத் தூவில் - பறித்துடன் தூவில்.

3. அடாதிந்த ஆயுதத் தம்பனம் – ஆயுததம்பமவை - ஆயுத தம்பனம் வைப்போம்.

4. படாது நின்ற. தம்பனம் பாடே.

முடிவு: இனி சத்துருத் தம்பனம்.

குறிப்புரை

இம்மந்திரம்; மரத் தம்பன இயந்திரத்தின் வைப்பிடமும், படைக்கலத் தம்பனத்தின் முடிவும், பகைவர்த் தம்பன கன்மத் துக்குத் தோற்றுவாயும் உணர்த்துகின்றது.

கிளத்துகை = கிளத்தல் - எடுத்துக் கூறுதல். மரம் வெட்டுப்படாது – மரம் வெட்டுப்படாத் தம்பனம். தூவல் – மலர்தூவி வழிபடுதல். அடுதல் = அழித்தல் – போராடல். போதல் = நிரம்புதல் – நீங்குதல் – முடிதல். படுதல் = புகுதல் - வருதல்.

மரம் வெட்டுப் படாமைக்கு, அதனடியில் இயந்திரத்தைப் பதித்தல் வேண்டும். இவை 5-ம் படைக்கலத் தம்பனத்தின்

வகைகள் ஆகும். இனி, வருவது பகைவர்த் தம்பன கன்மப் பிரயோகங்களின் இலக்கம் என்பதாம்.

6-சத்துருத் தம்பன கன்மப் பிரயோகம். வகை—11.

1. பகை நாவடக்கம்

109. பாடுவ தேவது பகைநா வடங்கத்
தேடுவ தைம்பதுஞ் சேர்ந்தவைம் பத்தெட்டுங்
கூடுமைம் பத்தேழுங் கொண்டவிவ் விலக்கம்
ஆடுங் குரோதம் அடங்க உறுமே.

பாட பேதம்

1. பாடுவ தேது - பாடுவததுவே. பகர்கின்ற நா. வடக்கத்— வடங்கிடத் - வடங்கித்.

2. தேடிய. சேர்ந்தைம்பத் - சேர்ந்தம்பத்.

3. கூடவைம் — கூடியவைம் — கூடைம்பத் தேழாகுங். கொண்டவிற்களு - கொண்ட விரகமும் - கொண்ட விலக்கமும்.

4. ஓடிக்குரோதம். உறவே - உறுவதே - உறவதே.

குறிப்புரை

இம்மந்திரம்; மேல் நிறுத்த முறையானே பகைவர்த் தம்பன கன்மம் கூறத்தொடங்கி, முதற்கண் நாவடக்கமும், குரோதம் அடக்கத்துக்குத் தோற்றுவாயும் உணர்த்துகின்றது.

பகை - பகைவர். நா அடங்க - நாக்குப் பேச முடியாமல் தம்பிக்க. குரோதம் = சினம் - செற்றம். ஆடுதல் = அடுதல் - கொல்லுதல். ஆடுகொள் வென்றி அடுபோரண்ணல் — கொள்ளுதலைப் பொருந்தியவென்றி — புறம். 67. தன்னையே கொல்லுஞ் சினம். சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி (குறள். 305 — 306). ஆறுவது சினம் (ஆத்திசூடி) என்பவாக லான், ஆடுங் குரோதம் அடங்க என்றார், உறும் = வரும் —

மேலே சொன்லப்படும். பகை என்பதனை இச்சத்துருத் தம்பன கன்மப் பிரயோக அதிகாரம் முற்றிலும் சேர்த்து உரைத்துக் கொள்க,

1—பகைவரின் நாவடக்க இலக்கம் 50—58—57.

— கட்சபுடம்.

இலக்க வேறுபாடு

1. நாவடங்க - நாவடக்க - நாவடக்கம் - நாவடக்கும் - சத்துரு நாவடக்க - ஜிஹ்வாஸ்தம்பனம் - பகைவர் நாவடக்கம் - பகைவர் நாக்கு பேசவராது. சிரசில்.

50—58—57 =165. 150. 165. 811.

மேற்கோள்

நான்மறைக்குந் துறை கண்டார் தோளிழந்தார் நா இழந்து

— குமரகுருபரர் 548.

தஸ்யவாக் ஸ்தம்பநம் ஸத்ய: கரோதி நகுலேசுவரீ |

— லலிதாஸஹஸ்ரநாமம். உத்தரபாகம் 38

2—சினம் அடங்க. 3—கால் நடை மடங்க

110. உறுவது நூற்றிரண் டோர்பதி னேழுஞ்
செறிவது முப்பத் திரண்டுஞ்செல் பாதம்
முறிவது முன்னம் நடவா திருக்க
அறுபதும் நாலாறும் ஐம்பத்தஞ் சாகுமே.

பாட பேதம்

1. நூற்றினோரோர் - நூற்றினெட்டோர்,

2. செல்லாத

3.

4. அன்பத்தைஞ்சாமே - ஐம்பத்தைந்தாமே - ஐம்பதைத் தாமே - அன்பத்தஞ்சாமே.

குறிப்புரை

இம்மந்திரம்; சினமடக்கம், கால்நடை முடக்கம் ஆகிய தம்பனங்களின் இலக்கம் உணர்த்துகின்றது.

உறுதல் - பொருந்துதல். செறிதல் = நெருங்குதல் - பொருந் துதல். செல்லுதல் - போக்குவரவு புரிதல். பாதம் - கால்கள். முறிதல் = முரிதல் - வளைதல். கண் புருவமும் முரிமுரிந்தவே. சீவக. 2310. முரிந்து கடைநெரிய வரிந்த சிலைப் புருவம் - மணி 18. 162. முன்னம் - விரைவு.

2 - குரோதம் அடங்க:— 102-17-32. — கட்சபுடம்.

3 - கால்நடை முடங்க:— 60-24-55.

இலக்க வேறுபாடு

2. சினமடங்க - பகைவர் செற்ற மாறும் - சொ (செற்ற)ம் மடக்கம்- குரோதமடங்க - குரோதமடக்கம்:— 102-17-32 = 151. 100-17-32 = 149. 102-77-32 = 211 32. 100. 149. 151. 211.

3. கால் நடை மடங்க - கால் நடவாமல் மடங்க - முடங்க- கால் நடக்கவராது - கால் நடவாமல் - கால் குறை - கால் குறைய - கால் முறிய - கப்பல்களின் கால் முறிய - நடவாமல்- நடமாடாமல். 60-24-55 = 139. ஐயனார் இடக்காலில் - ஐயன் இடக்கால். 68. 102. 139. 153. 189.

4 பகைவர் படைக்கலம் படாமை

5. கை முடக்கம்

111. அஞ்சாமற் சத்துரு ஆயுதந் தையாமல்
அஞ்சாறும் நாற்பத்தே ழறுபத் திரண்டும்
எஞ்சா தெழுதாமற் கைகுறை யாறாறும்
நஞ்சேநாற் பத்தேழ் நாடு மெழுபதே.

பாட பேதம்

1. சத்துருக்களாயுதந்

2. அஞ்சார் - அஞ்சாறு நாற்பத்தே முாகுமறு பத்திரண்டு- நாற்பத்தே மூாமறு பத்திரண்டும்.

3. அஞ்சா தெழுதாமற்-ஐஞ்சா. தெழுதாமல். கைகுறைய வாறாறு-றொகைகுறையாறாறு - கைக் குறைவாகுறும்.

4. நஞ்சேனாற். பத்தேமு-பத்தேமும். மெழுபதுமே.

குறிப்புரை

இம்மந்திரம்; பகைவர் படைக்கலம் படாமை, கை எழுத மாட்டாமற் குறைதல் ஆகியவற்றின் தம்பன இலக்கம் உணர்த்து கின்றது.

சத்துரு ஆயுதம் - பகைவரின் படைக்கலங்கள். தைத்தல் = ஊடுருவுதல் - உட்புகுதல் - எஞ்சுதல் - குறைதல். கைகுறை - கை ஊனமாதல். கை செயல் எனினும் அமையும்; உழவினார் கைம் மடங்கின் - திருக்குறள் 1036. நஞ்சு = நச்சு - விடம் - திமை - விருப்பம்.

4. பகைவர் படைக்கலம் தையாமை:— 30-47-62

— கட்சபுடம்

5. எழுதாமற் கை மடங்குதல்:— 36-47-70 —

இலக்க வேறுபாடு

4. பகைவர் படைக்கலம் படாது - தைக்காது - பகைவர் கைப்படை நழுவும் - கைப்படை நழுவும் - ஆயுதம் படாமல் - சத்துரு ஆயுதந் தையாமல் - சத்துருவின் ஆயுதந் தையாது :— 30-47-62=139. ஐயன் இடக்காலில் 30-67-42 = 139. 139, 164, 30-74-60=164,

5. கை எழுதாமற் குறைய - எழுதாமற் கை முடங்கும் - எழுதாமல் குறைய-எழுதாமல். கடையில்:— 36-47-70 = 153; 36-47-40 = 123. 36-37-77 = 150. 123. 150. 153.

மேற்கோள்

கைகுறை: மெய்யறு சூள்புகல் வியாதன் நீட்டிய
கையடும் நந்தி — கந்த கடவுள். 19.

மன்னிருஞ் சிறப்பின் வாதரா யணனும்
கையிழந் தனனது பொய்மொழிந்தன்றோ.
— சிதம்பர மும்மணிக் கோவை. 17.

வேதந் துறைசெய்தான் மெய்துணியான் கைதுணிந்தான்
— சிதம்பரச் செய்யுட் கோவை 13.

நான்மறைக்குந் துறைகண்டார் தோளிழந்தார் நாவிழந்து —67.
பொய்புகல் வியாதன் கைதம் பித்தலின்
— சிவஞான முனிவர்.

6. பாடல் தம்பனம். 7. ஆடல் தம்பனம்

112. எழுபதும் முப்பத்தஞ் செண்ணான்கு மிட்டாற்
பழுதறு பாட்டு மிடறுந்தம் பிக்கும்
எழுபத்தஞ் செண்ப திருபத்து நாலுங்
குழுவத்துக் கூத்துங் குறுகா துடன்றானே.

பாட பேதம்

1. முப்பத்தைந் தெண்ணான்கு - முப்பத்தைஞ் செண்ணான்கு - முப்பத்தைஞ் செண்ணான்கோடெட்டார்- முப்பத்தைஞ்செண்ணான்கோடெட்டாறு - முப்பத்தஞ் சென்று நாலெட்டாம். மிட்டால்.

2. பாடும். மிட்டறுதம்.

3. எழுபத்தைஞ். செண்பதிருபத்தினாலுங் - செண்பது-இருபத்து.

4. குழுவத்திற் - குழுவதிற் - குழுவதிர் - குழவதிர் - கூத்தங். கூற்றுக். துடனே-துடனேயே.

குறிப்புரை

இம் மந்திரம்; பாடுதல், ஆடுதல் ஆகியவற்றின் தம்பன இலக்கம் உணர்த்துகின்றது.

பாட்டும் மிடறும்-இசைப் பாடலும், அதற்குக் கருவியாயுள்ள தொண்டையும். மிடறு = தொண்டை - கழுத்து-குரல்வளை. குழுவம் = குழஉ - குழுவுதல் - குழுமல் - கூட்டம் - கூடுதல் - கூத்தாடும் அரங்கு. கூத்து - கூத்தாட்டம். கூத்தாட்டவைக் குழாத் தற்றே-திருக்குறள் 332. கூத்துங் குறுகாது = கூத்தாட முடியாது - நடிக்க முடியாது.

6. பாடல் தம்பன இலக்கம்:— 70-35-32 —கட்சபுடம்.

7. ஆடல் தம்பன இலக்கம்:— 75-80-24

இலக்க வேறுபாடு

6. பாட்டுப் பாடாமல் மிடறு தம்பிக்க — பாடும் மிடறு தம்பிக்க — பாடுகிற மிடறு தம்பிக்க — பாட்டுத் தம்பிக்க — பாட்டு ஸ்தம்பிக்க — பாட முடியாது — மிடறு போகாது கையில்:— 70 – 35 – 32 = 137. 67. 137. 165. 185. 197. 222.

8. சரக்கு விற்காமை. 9. தச்சர் தொழில் தம்பனம்

113. உடனைம்பத் தெட்டும் ஒரெழுபத் தொன்றும்
தடைமுப்பத் தாறுஞ் சரக்கு விலைபோகா
படைதச்சர் பண்ணார் பதினே ழுடனே
இடைநின் றிருபத்தா றெய்திடும் நூற்றாறே.

பாட பேதம்

1. தெட்டாகும். தொன்றாந்.

2. தாறு — தாறும் — தாறாஞ். விலைபோகாமற் — விற்போற்கு — விற்போர்க்கு — விற்போருக்கு. படைத் தச்சர் — மடை தச்சர் — மடைதச்சர்பன்னு — மடைதச்சர்க்கா பன்னும். பதினேழுடனே நேரு.

4. யிடைநின் — மிடைநிடை. றெய்தும் நூற்றாதே — எய்து நூற்றாறே — எய்து நூற்றாறுமே — எய்திடும் நூற்றாறுமே — எய்திடும் நூறே.

குறிப்புரை

இம் மந்திரம்; சரக்கு விலை படாமை, தச்சுத் தொழில் தம்பனம் ஆகியவற்றின் இலக்கம் உணர்த்துகின்றது.

தடை = தடுத்தல் — தம்பனம் — கட்டுதல். சரக்கு = பொருள்கள் — வியாபாரம் — விற்பனை செய்யப்படும் பண்டம்; இலைச்சினை ஒற்றிய தலைச்சுமைச் சரக்கினர் — பெருங். மகத. 17 : 152. விலை போகா - விலையாகா. தச்சர் — மரவேலை செய்பவர்; மரங்கொல் தச்சரும் — மணி. 28 : 37. தச்சு = மரவேலை — தச்சரது தொழில். படை = உழுபடை-கலப்பை; படை அலம் தொடுப்பு...உழுபடை கலப்பை — பிங்கலம்.

8. சரக்கு விலையாகாது — 58—71—36. — கட்சபுடம்

9. தச்சர்படைபண்ணார்:— 17—26—106. —

இலக்க வேறுபாடு

8. சரக்கு விலைபோகாது — சரக்கு விலையாகாது — சரக்கு விற்காமல் — விலையாகாமல் — விலை போகாமல் — அறப் பொருள்களை விற்கவும் வாங்கவும் இயலாது. கடையில் — 58—71—36=165. 58—111—36=205. 122. 133. 165. 205.

9. தச்சர் பணி செய்யார் — பணிபண்ணார்கள் — தச்சன் வேலை தம்பிக்க — தச்சனுக்கு வேலை செய்ய முடியாது. பட்டறையில்:— 17 - 26—106 = 149. 47—26—106=179. 73. 129. 141. 149. 179.

படை, தச்சு என்பன — ஒரு மொழி யொழிதன் இனங் கொளற் குரித்தே — நன். என்பதனால் ஏனையவற்றையும் உணர்த்தும் என்க.

10. தண்ணுமை கொட்டல்

11. மட்கலம் வனைதல்களின் தம்பனம்

114. நூற்றாரு முப்பத்தி னாலும் பதினேழுங்
கூற்றாகச் சித்திரங் கொட்டக்கை வாராது
ஏற்றா ரெழுபத்தஞ் செண்பத்தா றெட்டெட்டும்
கூற்றார் குயவர் வனையார் கொள்கலமே.

பாட பேதம்

1. நூறாறு - நூற்றுமுப் பத்தி.

2. கூற்றாக சித்திரங்கள் கொட்டக்கை - கூறாத சித்தி ரங் - சித்திரங்கள் கொள்கை - சித்திரங் கோட் டுக்கை - சித்திரங் கொட்டைகை - கொட்டைக்கை - கோட்டக்கை.

3. வேற்றா தெழுபத்தைஞ் - மேற்றா தெழுபத்தைஞ் - ஏத்தா ரெழுபத்தைந் தெண்பத்தா - செண்பத்தா. றெட்டெட்டு - றெட்டெட்டுங் - செண்பத்தா றெட்டு - செண்பத்தோடாறெட்டுக் - செண்பத்தாறெட்டுங் - செண்பத்தாறெட்டெட்டுக்.

4. கூற்றார் குசவர் - கூற்றாங் குசவர் - கூற்றாங் குயவர் - கூற்றுங் - குசவன். வனையார்கள் - மனையார்கள் - மனையார். கொள்கலம் - கோர்க்கலம் - வனையார் தன் ஏற்றகலம்.

முடிவு: ஆக வகைக்கெல்லாம் மந்திரம். (?)

குறிப்புரை

இம்மந்திரம்; தண்ணுமை கொட்டுதல் மட்கலம் வனைதல் ஆகியவற்றின் தம்பன இலக்கம் உணர்த்துகின்றது.

கூறு=கூறுபாடு - வகைகள். கூற்றார் குயவர் - பெயர் பெற்ற - பேர்போன - பிரசித்தமான குயவர்கள். சித்திரம் - சித்திரக் கரணம்; அதாவது, நன்றாகக் கையாற் செய்யப்படும் பல்லியத் தொழில்கள். கொட்டல் = இன்னியக் கூறுகளை இயக்குதல் - வாத்தியங் கொட்டுதல் - முழக்குதல் - அடித்தல். பதினொராடலும் பாடலுங் கொட்டும்.

— சிலப். 3:14.

கொட்டு - கூத்து விகற்பங்களுக்கு அமைந்த வாச்சியக் கூறுகள். அரும்; அடியார். சித்திரக் கரணஞ் சிதைவின்று செலுத்தும் - அத்தகு தண்ணுமை அருந்தொழில் முதல்வனும்.

— சிலப். 54 - 55.

ஹஸ்தாது வாத்தியச்சுதி:— கட்சபுடம். என்பனவும் ஈண்டு நோக்கத்தக்கன. வனைதல் - செய்தல். கலம்—மட்கலங்கள் - கொள்கலம்; வினைத்தொகை.

இனி சித்திரம் கோட்ட எனப் பாடங்கொள்ளின் ஓவியம் வரைய என்க. கோட்டுதல் - வரைதல். இது மேற்சொல்லப் பட்ட எழுதாமற் கை குறை (111) என்னும் 5-ஆம் பிரயோகத் தில் அடங்குமாதலினாலே வாத்தியங் கொட்டுதல் எனப் பொருள் கோடலே ஏற்புடைத்தாகும் என்க. கூறு - தண்ணுமை கொட்டும் சித்திரக் கரணத்தின் கூறு.

10 - தண்ணுமை கொட்டக் கைவராமைக்:—
106-34-17. — கட்சபுடம்.

11 – மட்கலம் வனைய இயலாமை:— 75-86-64.

இலக்க வேறுபாடு

இன்னியம் இயக்கக் கைவராது - வாத்தியத்தில் கை ஓடாது - சித்திரம் வரையார் - சித்திரம் எழுதக் கைவராது - சித்திரங்கெடாமல் – கையில். 17 - 34 - 106 = 157. 17 - 26 - 106 = 149. 125. 149. 157. 225.

11. குயவர் மட்கலம் வனையார் - குயவன் வனையாமல் - குயவன் பானை வனையான் - குயவன் வேலை செய்யாமல் – குயவருக்குக் கலம் செய்ய முடியாது - குலாலர் வனையார் - குயவன் வனையான் - குயவன் சக்கரம் ஆடாது - சூளையில். 75-86-64 = 225. 75 - 86 - 34 = 195. 57 - 86 - 64 = 207. 75 - 80 - 48=203. 75 - 84 - 64=224. 75. 86. 111. 125. 195. 203. 207. 224. 225.

6 - பகைத் தம்பன வகையின் தொகையும் மந்திரமும்

115 கலமாய சத்துருத் தம்பத்திற் கண்ட
பலமாம் வகையும் பதினொன்றே யாகும்
வலமாகக் கொண்ட வரைபதி னாறில்
நலமாக மந்திரம் நாட்டுவதொன் றாமே.

பாட பேதம்

1. கலமாயிச்சந்துருத் - கலமாய்ச்சத்துருத். தம்பனத்திற்

2. பலவாம்.

3. வறை பதி.

4. நலமாகு மந்திரம். தொன்றே.

முடிவு: சத்துருத் தம்பன மந்திரம்.

குறிப்புரை

இம்மந்திரம்; பகைத் தம்பன கன்மப் பிரயோக வகையின் தொகையும் அவற்றின் மந்திரத்துக்குத் தோற்று வாயும் உணர்த்துகின்றது.

சத்துருத் தம்பம் - பகைவர்த் தம்பன கன்மப் பிரயோகம்· காணுதல் = பெறுதல் - சொல்லுதல் - முற்றும் - இடங்கண்ட பின்னல்லது — திருக்குறள் 491. யாவருங் கண்ட நெறி — அறநெறிச். 17. பலம் = பயன் — வலிமை வலம் ஆகம் கொண்ட — வலப்பக்கமாக வரையப்பட்ட. வரை = இரேகை - கோடு. ஆகுபெயரால் அறைகளைக் குறித்து நின்றது. நலம் = நன்மை-பயன். ஆக—உண்டாக. நாட்டுதல் — ஊன்றிப் பதித்தல்.

வகை பதினொன்றே :

இதுகாறும் எடுத்துக் கூறப்பட்ட பகைத் தம்பன கன்மப் பிரயோக வகைகளின் தொகை - 11 ஆகும். அவையாவன:

1. பகை நாவடக்கம்.
2. சின மாற்றம்.
3. கால் முடக்கம்.
4. படைக்கலம் படாமை.
5. கையெழுத இயலாமை.
6. மிடற்றுத் தம்பனம்.
7. கூத்துத் தம்பனம்.
8. சரக்கு விலையாகாமை.
9. தச்சுத் தொழிற்றம்பனம்.
10. தண்ணுமை முழுக்கமாட்டமை.
11. குயவர் மட்கலம் வனையமாட்டாமை.

என்பனவாம். இந்தப் பிரயோகம் 11-க்கும் இயந்திர அறை 16-லும் முன்புபோல் அடைக்கத்தக்க மந்திரம் ஒன்றே என்ப தாம். அம்மந்திரம் வருமாறு:

மந்திரம் - 8

6—பகைத் தம்பன கன்மப் பிரயோகவகை 11-க்கும் உரிய சிறப்பு மந்திரம்

ஓம் ஐம் க்லீம் சௌம் சர்வேந்த்ரியாணீ அம் க்ஷும் ஹ்ரீம் ளம் ஹ்ரீம் ட்ச்மிரம் ஆம் க்ரோம் ஷ்ரீம் ஸ்தம்பய ஸ்வாஹா ||

பாட பேதம்

1. ஓம் ஐம் க்லீம் சௌம் ஸர்வேந்திரியாணீ அம் க்ஷும் ளம் ஹ்ரீம் ட்க்ஷும் ஆம் க்ரோம் ஷம் ஸ்வாஹா ||

2. ஓம் ஐம் க்லீம் சௌம் ஸர்வேந்திரியாணீ அம் க்ஷும் இம் ஹ்ரீம் ட்ச்ரம் ஆம் க்ரோம் ஷ்ரிம் ஸ்வாஹா ||

3. ஓம் ஐம் க்லீம் சௌம் ஸர்வேந்த்ரியாணீ அம் க்ஷும் இம் (ளம்) ஹ்ரீம் ட்ச்மிரம் ஜ்ரம் க்ரோம் ஷ்ரீம் ஸ்வாஹா ||

4. ஓம் ஐம் க்லீம் சௌம் ஸர்வாணீ ப்ரியாணி அம் ட்சம் ளம் ஹ்ரீம் ட்சிரீம் கோம் டம் ஷ்ரீம் ஸ்வாஹா ||

5. ஓம் ஐம் க்லீம் சௌம் ஸர்வேந்த்ரியாணீ க்ஷேம் ஸம் ஸ்வாஹா ||

6. ஓம் ஐம் க்லீம் சௌம் ஸர்வந்த்ரமமாணி அம் க்ஷும் ளம் ஹ்ரீம் ட்ச்ரீம் ரும் க்ரோம் டம் ஷ்மிரம் ஸ்வாஹா ஓம் ||

7. ஓம் ஐம் க்லீம் சவ்வும் ஸர்வாணீ ஸர்வேந்த்ரியாணீ அம் க்ஷும் ளம் ஹ்ரீம் ட்ச்ரீம் க்ரோம் ஷ்ராம் ஸ்வாஹா ||

8. ஓம் ஐம் க்லீம் ஸௌம் ஸர்வேந்த்ரியாணீ ட்சிம் ஸம் ஸ்வாஹா ||

9. ஓம் ஐம் க்லீம் ஸௌம் ஸர்வேந்த்ரியாணீ அம் க்ஷம் ளம் ஹ்ரீம் ட்ச்ரீம் க்ரோம் ட்ச்ரீம் ஸ்வாஹா ||

10. ஓம் ஐம் க்லீம் ஸௌம் ஸர்வேந்த்ரியாணீ அங் ஷங் ளங் ரீங் ஷங் ரூங் ப்ரேமங் ஆங்கு செம் ஷம் ஸ்வாஹா ||

11. ஐம் க்லீம் சௌம் சர்வேந்திரியாணீ அங் ஷங் ளங் ரீம் ஷஷ்றுங் புறுங் ஆங்குசேம் ஷம் ஸ்வாஹா ||

12. ஓம் ஐம் க்லீம் ஸௌம் ஸர்வேந்த்ரியாணீ க்ஷேம் ஸௌம் ஸ்வாஹா ||

13. ஓம் ஐம் க்லீம் ஸௌம் ஸர்வேந்த்ரியாணீ க்ஷம் ஸௌம் ஸ்வாஹா ||

14. சரக்கு விலைபோகாதிருக்க - 122. (?) மந்திரம்; கண குண கெணி ஸ்ரூ பாவது செந்திரி நம: | இன்னார் சரக்கு விலை போகாதிருக்க என யந்திரத்தில் எழுதி—புதைக்க; சரக்கு விற்காது. செட்டு வராது.

குறிப்புரை

இம்மந்திரம்; 11 - வகையாயுள்ள பகைத் தம்பன கன்மப் பிரயோகங்களுக்கும் உரிய சிறப்பு மந்திரம் ஆகும். இதனை முன்னர்க் குறித்தவாறு இயந்திரத்தில் உள்ள 16-அறைகளிலும் முறைப்படியடைத்தல் வேண்டும்.

மேற்கோள்

ஓம் ஐம் க்லீம் ஹௌம் ஸமுச்சார்ய ஸர்வபதம் இந்த்ராணீ பதம் ததஃ |

அம் க்ஷம் ஹ்ரீம் ளம் ஹ்ரீம் க்ஷ்மிரம் கமிதி ஆம் க்ரோம் ஷ்ரீம் பதமுச்சரேது ||

ஸாத்யம் ப்ரோக்த்வா ஸ்தம்பயேதி ஸ்வாஹாந்தம் மந்த்ர முச்சேது — கட்சபுடதந்த்ரம்.

என்பதும் நோக்குக.

6. பகைத் தம்பன கன்மப் பிரயோகத்தின் தந்திரம்.

116. நாட்டிய தொன்றை நடுப்பட வைத்தபின்
தீட்டிய வாக்குக் குரோதஞ் சிரத்தினிற்
காட்டிய காலுங் கையா யுதமொழிய
ஈட்டுவ தையன் இடக்காலில் வைக்கவே.

பாட பேதம்

1. நாட்டுவ.
2. றீட்டிய - நீட்டிய. வாக்குங்.
3. காலமுங் கையா யுதமொழி - கைகால் முடங்கை யாயுத மொழிய.
4. யீட்டுவ - வீட்டுவ - ஈட்டிய. இடக்காலில் வையே,

குறிப்புரை

இம்மந்திரம்; பகைத் தம்பன கன்மப் பிரயோக இயந்திரத்தை வைக்கும் இடத்தைக் கூறும் தந்திரம் உணர்த்து கின்றது.

நடுப்பட - ஏற்றத்தாழ்வு இன்றிச் சமமாகப் பொருந்த. தீட்டுதல் - எழுதுதல். வாக்கு = வாக்குத் தம்பனம் - நாவடக்கம். குரோதம் - சினமடக்குத்தம்பனம். கால் ஒழிய - நடைமுடக்கத் தம்பனம். கை ஒழிய - கை எழுதாமைத் தம்பனம். ஆயுதம் ஒழிய - பகைவர் படைக்கலம் படாமைத் தம்பனம். ஒழிய என்பதனை கால் ஒழிய கை ஒழிய என ஏனைய இரண்டுடனுங் கூட்டியுரைக்க. காலும் கையும் ஆயுதமும் ஆகிய கருவிப் பெயர்கள் மூன்றும் முறையே அவற்றின் காரியங்களாயுள்ள நடையையும், வரைதலையும், தைத்தலையும் உணர்த்தி

நின்றமையான் ஆகுபெயர்கள். காட்டுதல் - ஆற்றலை வெளிப் படுத்துதல். ஈட்டுதல் - சேர்த்தல். ஐயன் - ஐயனார்.

இந்தப் பகைத் தம்பனப் பிரயோக இயந்திரத்தை முறைப் படி பூசனையாற்றி முடிந்த பின்னர் அதனை வாக்குத் தம்பனம் குரோதத் தம்பனம் ஆகிய பிரயோகங்களில் முடியிலும்; கால், கை, படைக்கலம் ஆகிய கட்டுவினை யேவல்களில் ஐயன் இடக் காலிலும் வைக்க என்பநாம்

ஐயன் இடக்கால் - ஐயன் கோட்டத்தின் முன்னர் நிற்கும் கரி பரி ஆகியவற்றுள் ஒன்றன் இடக்காலில் என்பது தகுதி பற்றிக் கொள்ளப்படும். இதுபற்றி, அடுத்து வரும் செய்யுளிற் காட்டப்படும் மேற்கோளினையும் நோக்குக.

இதுவும் அது

117. வைக்கும் பட்டடை வார்குயவர் தச்சர்க்கு
விற்குஞ் சரக்கிற்கு வேண்டுங் கடையினில்
ஒக்கவிசை பாடார் கொட்டார் உடனாடார்
சிக்கெனக் கையிற் சேரப் பிடிக்கவே.

பாட பேதம்

1. வைக்குமிடம் - வைக்கப்பட்டடையில் - பட்டறை; பட்டை-படையில். வார்க்குசவர் தச்சற்கு-வார்க்குசவர்-வுலைதச்சர்க்கு-வைத்தருலை தர்ச்சர்க்கு.

2. சரக்கு - சரக்குக்கு - சரக்குநடு - சரக்கை. கடைதனில்-கடைதன்னில்-கடையில்.

3. ஒக்க விசையா ரெழுதா ருடனாடார் - ஒக்கவிசை பாட்டெழுதாருடனார் - ஒக்கவிசை பாடார் ஒழுகார் - ஒக்கவிசை பாடார் எழுதார். உடனூற்ற.

4. சிக்கேன்-சிக்கனக்; சிக்கனகக். கைதனிற் சேர்த்துப்-கைதன்னில்-கறைதனிற். பிடிப்பதே-பிடியே.

குறிப்புரை

இம்மந்திரமும் பகைத் தம்பன யத்திரத்தின் தந்திரம் உணர்த்துகின்றது.

பட்டடை = பட்டறை - தொழிற்சாலை - தச்சர் தட்டார் கொல்லர் குயவர் முதலியோர் தொழில் செய்யும் இடம். வார்தல் = வகிர்தல்-அறுத்தல்-பகுத்தல். மட்பகை வினைஞர் என்னும் பெயர்பற்றி வார் குயவர் என்றார். குயவர் மட்பகைஞர் என்ப — திவாகரம். ஒக்க-பொருந்த. இசை = மிடற்றிசை-கண்டப் பாடல். கொட்டல் தண்ணுமை வாசித்தல். ஆடல்-கூத்தாடுதல். சிக்கென = சிக்கெனவாக - உறுதியாக - திண்மையாக.

குயவர் கலம் வனையாமை, தச்சர் பணி செய்யாமை ஆகிய கட்டுவினை ஏவல்களில் இயந்திரத்தை அவ்வத் தொழிற் சாலைகளிலும், சரக்கு விலை போகாமைக்குக் கடையிலும் வைத்தல் வேண்டும். இசை பாடுதல், தண்ணுமை கொட்டுதல், கூத்தாடுதல் ஆகியவற்றின் தம்பனப் பிரயோகங்களில் இயந்திரத்தைக் கையில் திண்மையாகப் பற்றியிருக்க என்பதாம்-

கட்டுவினை யேவலாகலான், சிக்கெனப் பிடிக்க என்றார். சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந்தருளுவ தினியே—திருவாசகம். 534-543. என்னும் பிடித்த பத்துங் காண்க.

மேற்கோள்

சத்ருக்ரோத நிவாரணே சிரசி |
சத்ரு கதிஸ் தம்பநேசாஸ்துரா லயாசுவ வாமபாதேச |
கும்பகாரணாம் பாண்ட நிர்மாண ஸ்தலேச |
வஸ்து விக்ரயே ஆவணேச |
லேகந காந நாட்யாதீநாம் யந்த்ரம் |
ஹஸ்த மத்யே பத்வா த்ருடம் பீடயேது ||

—கட்சபுட தந்த்ரம்

இந்த இரண்டு திருமந்திரங்களினாலும், பகைவர்த் தம்பனப் பிரயோகங்களின் வகை 11-க்கும் இயந்திரம் வைக்கும் இடங்களின் தந்திரம் உணர்த்தப்பட்டமை அறிக.

7. விலங்குத் தம்பனத்தின் வகை - 11.

1. புலிவாய்க்கட்டு

118. பிடிக்கும் விருகங்கள் பேராமற் றம்பம்
கொடுக்கும் வகைக்குத்தான் கூறு மிலக்கம்
எடுக்கும் புலிவாய்க் கிருபதெண் பத்தேழ்
அடுக்குமிரு பத்திரண் டாமிலக் கம்மே.

பாடபேதம்

1. பிடிக்கு மிருகங்கள். பேராம் நற்றம்பங்- பேராத்தம்பம்- பெற்ற மறம்பங் - பெற்ற மாரம்பங்.

2. வகைக்குக் கூறு.

3. கிறுபத் தெண். பத்தேழும்–பத்தேழு–கெண்ப திருபத்-தேழ். புல்வாய்க் கெண்பதிரு.

4. அடுத்தவிரு – அடுத்திரு – உடுக்குமிரு – டாமிலக்கமே– டாகுமிலக்கமே.

குறிப்புரை

இம்மந்திரம்; மேல் நிறுத்த முறையானே, விலங்கின் தம்பன வகை கூறுவான் தொடங்கி, அவற்றுள் முதற்கண் புலிவாய்க் கட்டுவினை ஏவலுக்குரிய இலக்கம் உணர்த்துகின்றது.

விருகம்-மிருகம். பேர்தல் – பெயர்தல். தம்பம் - தம்பனம். தம்பன கன்மம் = கட்டுவினை - தடைவினை. எடுத்தல் – சொல்லத் தொடங்குதல். எடுக்கும் மாக்களை - பெரிய. 3. புலிவாய்–புலிவாய்த் தம்பனம். தம்பனம் என்பது அதிகாரத்தாற் கொள்ளப்பட்டது. மேலும் இவ்வாற இவ்வதிகாரம் முற்றிலுங் கொள்க.

1. புலிவாய்க்கட்டுவினையேவல் இலக்கம்; 20-87-22
— கட்சபுடம்.

இலக்க வேறுபாடு

1. புலிவாய்க்கட்டு–புலிவாய் கட்ட - புலிவாய்க்காவலுக்கு-புலிவாய் விடாமல் - புலிக்கு - புலி பிடிக்க வாய் கட்டும் – எலி புலி வாய் கட்டும்–புலி பன்றி காவல் தம்பனம்-20–87-22 = 129. 63-125-126 = 314. 87-72 = 159. 20-77-82 = 179. மானுமரையு மோடாது-70. 22. 24. 26. 70. 129. 150. 179. 314.

ஒப்புமைப்பகுதி — மேற்கோள் :—

கரடி வெம்புலி வாயையும் கட்டலாம்
— தாயுமான அடிகள்

2. கரித்தம்பனம் 3. எலித்தம்பனம்

119. இலக்கமி யானை எதிர்வரா தோடத்
தொலைத்ததொண் ணூற்றைஞ்சுந் தோன்றிய
வெண்பான்
நிலைக்குநூற் றாறும் நீடெலிவாய்க் காவல்
தொலைக்கு மிருபதுந் தொண்ணூறு மேழுஞ்சே

பாடபேதம்

1. இலக்குமியானை-இலக்காக யானை - இலக்கமிரானை. எதிவாரா. தோடித்.

2. ணூற்றஞ்சுந் – ணூற்றஞ்சு — தொலைக்கத் தொண ணூறையஞ்சு. வெண்பது - வெண்பதும். துலைத்த.

3. நிலைத்த நூற் – றாறிலக்க நீடெலி-றாறுணேடொலி - றாறுணோண்டெலி. வாய்க்காவில்-வாய்காவல்-வாய்க் காலில்,

4. துலைக்கு. தொண்ணூற்றே ழஞ்சே - தொண்ணூறுமே ழஞ்சே – தொண்ணூற்றோடேழஞ்சே – தொண்ணூறோ டேழஞ்சே - தொண்ணூறேழஞ்சே.

குறிப்புரை

இம் மந்திரம் ; யானைக்கட்டு, எலிவாய்க்கட்டு, ஆகிய வற்றின் இலக்கம் உணர்த்துகின்றது.

எதிர் = மாறுபாடு - எதிர்வராது – எதிர்க்காமல். ஓட – போக. எதிர்வராது ஓட என்பது ஈண்டு ஒருசொல் விழுக் காடாய்த் – தம்பிக்க எனப் பொருள்பட்டு நின்றது. நீடுதல் – நிலைத்தல். தொலைத்தல் – தோற்பித்தல். நம் இரும்புனங் காய்ந்து - ஏறும் மலை தொலைத்தாற்கு – நம்மை நோக்கி வந்து ஏறும் மலைபோலும் யானையைத் தோற்பித்தவற்கு — திருக்கோவையார். 113 - பேர். உரை. அளிநீடு அளகம் — 122. நீடு — பரத்தலுமாம். நீடாழியுலகத்து — வி. பாரதம்.

1. காவல் = காத்தல் — தடை — தம்பனம்.

2. யானை எதிர்வராது ஓட :—95 - 80 - 106
— கட்ச புடம்.

3. எலிவாய்த் தம்பனம்:—20-90-35 —

இலக்க வேறுபாடு

2. கரி யெதிர்வராது ஓட - யானை எதிர்வராது — ஒடாது. ஆனையெதிர்வரர்து — வாராமல் — ஆனையெதிர் வாகும் — கஜஸ்தம்பனம்- 95 - 80 - 106 = 281. 45 - 80- 106 = 231. 95 - 80 - 100 = 275. 96. 140. 231. 251. 275. 281. 311. 314.

3. எலிவாய்க் காவல் — எலிவராது — எலி நாவாய் காவல் தம்பனம் — எலி நாவாய்க் காவல் தம்பனம் - எலி வாய் கட்ட — எலிவாராக் காவல் தம்பனம் — எலி புலி வாய்க் கட்டும் — மூடிகத் தம்பனம் - 20 - 90 35 = 145. 20 - 19 —

35 = 74. 20 — 96 - 35 = 151. 22. 74. 145. 151. 165. 228. 277.

இலக்கம் + யானை = இலக்கமியானை; தன்னொழி மெய்ம் முன் யவ்வரின் இகரந் — துன்னும் என்று துணிநரும் உளரே - நன். 205. என்னும் விதிபற்றி வந்தது.

4 - கிடாய்த் தம்பனம். 5 - பாம்புத் தம்பனம்

120. ஏழுஞ் சறுபத் திரண்டுமுப் பத்தெட்டுஞ்
சூழுங் கிடாய்கள் தொடர்ந்தோடிப் பாயாமல்
ஏழேழ் அன்ப திருபத்து நாலிலக்கம்
பேழ்வாய்ப் பாம்பு பின்கடியா தாடவே.

பாட பேதம்

1. ஏழைஞ்.
2. துடர்ந்தோடிப், பாயாது — பயாமே — பாயாமேல் — பாயாதுமேலே.
3. மேலேழு மம்பத் - ஏழேழு மன்பத் - ஏழுமைம்ப. நாலு லக்கம் - நாலு லெக்கம்.
4. பேழ்வாயாம் பாம்பு — பேழ்வாய்ப் பெரும்பாம்பு. பாம்பு கடியாப்பின் னாடாவே - பாம்புபின் கடியாதே.

குறிப்புரை

இம் மந்திரம்; கிடாய்த் தம்பனம், பாம்புத் தம்பனம் ஆகிய வற்றிற்குரிய இலக்கம் உணர்த்துகின்றது.

கிடாய்கள் — ஆட்டுக்கிடாய்கள். கிடாய்—ஆட்டின் ஆண். தொடர்ந்து ஓடிப் பாய்தல் — பின்னே கால்வாங்கிப் போய் முன்னே எதிர்த்து ஓடிவந்து தாக்குதல். பாய்தல் — பாய்ந்து தாக்குதல். பேழ்வாய் — பெரியவாய்; பேய்வாழ் அரவின் அணை

யானும் — தேவாரம் 7761 ஆடுதல் - படமெடுத்து ஆடுதல். பின்கடியாது-பின்தொடர்ந்து வந்து தீண்டாது.

4. கிடாய் பாயாமை - 35-62-38. — கட்சபுடம்.

5. அரபு தீண்டாமை ஆடாமை — 49-50-24.

இலக்க வேறுபாடு

4. கிடாய் பாயாது - பாயாமல் - பாயாமல் சாயும் - கிடாய்த் தம்பனம்-கிடாய்ப்போர் தம்பிக்கும்-35-62-38 = 135. 35-63-30 = 128. 128. 135. 178.

5. பாம்பு கடியாது - ஆடாது-பாம்பு ஆடாது - கடியாது - பாம்பு கடியாமல் - அரவு கடியாமல்-தொடாமல்-தொடராமல்- ஆடாமல் - அரவம் தீண்டாது-பின் தொடராது-நரிவாய்கட்ட- 49-50-24 = 123. 60-49-50-34. 99-50-24 = 173. 123. 133. 173. 193. 211.

6. நரிவாய்க் கட்டு 7. நாய்வாய்க் கட்டு

121. ஆடா நரிவாய்க் கமைந்தவைம் பத்தஞ்சும்
ஈடா மிருபத் திரண்டெண்பத் தெட்டாகும்
நாடாப் பதினைஞ் சிருபதும் நாலாறும்
கூடாமல் நாய்வாய் குறுகா பரிதாமே.

பாடபேதம்

1. நரிவாக் - நரிலக்கமந்த நரிலக்கமர்ந்த — நரிவாய்க் கமைந்த.

2. ஈடாதிருபதிரண் — ஈடாமிருபதிரண்.

3. நாடா பதினஞ். நாடாம். பதினைஞ். சிருபது நாலா- றுங் — சிருப திருபது நாலாறுங்.

4. கூடாது. நாவாய்—நாவாய்கள்—நால்வாய். குறுகாது பயிரே - குறுகாது காண்பீரே — குறுகா பரிதானே.

குறிப்புரை

இம்மந்திரம்; நரிவாய்க் கட்டு, நாய்வாய்க் கட்டு ஆகிய வற்றின் இலக்கமும்; பரிநடைத் தடை வினைக்குத் தோற்றுவா யும் உணர்த்துகின்றது.

ஈடு = ஒப்பு — தகுதி. நாடுதல் = கருதுதல் — தேடுதல். கூடுதல்—பொருந்துதல். குறுகுதல் — அணுகுதல். பரி — குதிரை.

6 - நரிவாய்க்கட்டு — 55-22-88. — கட்சபுடம்

7 - நாய்வாய்க்கட்டு — 15-20-24.

இலக்க வேறுபாடு

6. நரிவாய்கட்டு –நரிவாய்த் தம்பனம் நரிவாய் கட்ட — நரிவாய் கட்டும்—நரிவாய் விடாமல்—நரி புலி சிறுத்தை வராது- நாய் வாய் விடாமல்—55-22-88-165. 52-88 = 140. 140. 165.

7. நாய்வாய் கட்டு — நாய்வாய் வராமல் நாய் வாய் குறுகாது—நாவாய்—நாய் கடியாமல்—நாவாய் பூச்சிவராது — நாய்வாய் விடாமல்—பல் நாவாய் கட்டும்—நாவாய் வராமல்— நால்வாய் குறுகாது — நரிவாய் கட்ட — 15 — 20 — 24 = 59. 55—22—88 = 165. 16—24—22 = 62. 50—20—24 = 94. 16—20—24 = 60. 59. 60. 62. 81. 94. 165. 195.

8-பரி ஓடாமை. 9-எருது விழாமை.
10-பசு விழாமை.

122. பரிகளும் ஓடா பதினே ழுடனே
தெரிவது நாற்பான் தேர்ந்தறு பத்தெட்டும்
எருதும் பசுவும் மேல்விழா திருக்க
ஒருவும் எழுபதுநூற் றொன்றும் நாற்பதே.

பாட பேதம்

1. ஓடாப் பதினேழுடனே—ஆடாப் பதிற்றேழுடனே.

2. நாற்பதுஞ் சேர்ந்தறு-சேர்ந்தவறு.

3. பசுவுமிவைமேல் விழாதங்-பசுவின்மேல் வீழாதிருக்க.

4. உருவுமெழுபதுநாற் - மெழுபதொரு நூற்றொன்று - மெழுபதுமோர் நூற்றொன்றும்-உருவுமெழுபானூற் - கொருவுமெழுபது-நூற்றொன்று நாற்பதே.

குறிப்புரை

இம்மந்திரம்; பரியோடாமை; காளைபொலியாமை, பசு விழாமை ஆகியவற்றின் இலக்கம் உணர்த்துகின்றது.

பரித்தல்-சுமத்தல். பரி = சுமை – செலவு—விரைவு—குதிரை. தேர்தல்=ஆராய்தல் — தெளிதல். எருது=ஆனேறு — காளை. மேல்விழுதல்=பொலிதல் — எதிர்த்துச் சென்று பாய்தல் — முட்டுதல் விழுதல் — விருப்பங்கொள்ளுதல். ஐம்புலன் மேல் விழுந்து—திருநாற். 13. ஒருவுதல்=நீங்குதல் - விடுதல்,

8-பரி ஓடாமை— 17—40—68.

9-எருதுமேல் விழாமை— 70—101—40. — கட்சபுடம்.

10-பசுமேல் விழாமை— 70—101—40. —

இலக்க வேறுபாடு

8. குதிரை நடக்காது—குதிரை—பரி—ஓடாது—ஓடாமல்—நடவாமல்—போகாது—அசுவத்தம்பனம்:— 17—40—68=125. 80—40—68 = 188. 80—46—18 = 144. 70—40—68 = 178. 64 . 70 . 125 . 144 . 149 . 178 . 179 . 188.

கட்சபுடலக்கம்: 70—40—68 (?). 80—46—18 (?).

9. கோவிருஷஸ்தம்பனம்: 70—101—40.

9-10. எருது பசுமேல் விழாமல் — எருது பசுவின்மேல் விழாது—எருது பசுமேல் பாயாது—பசுமேல் விழாது—எருது பொலியாமல்—எருதுவும் பசுவும் கூடா:— 70—101—40=211. 106 . 211 . 250 . 301.

எருதும் பசுவும் மேல் விழாதிருக்க — என்பதைத் தனித் தனியாகப் பிரித்து இரண்டு பிரயோகங்களாகக் கொள்ளப் பட்டது. இரண்டு பிரயோகங்கட்கும் இலக்கம் ஒன்றாயிருப்பினும் இந்த விருகத்தம்பனவகையின் தொகை 11-ஆகக் காணவேண்டி இங்ஙனம் பகுத்துரைக்கப்பட்டது. அடுத்து வரும் செய்யுளை நோக்குக. ஈண்டுக் காட்டப்பட்ட இந்த இரண்டு பிரயோகங் களும், மேலே குறித்தவாறு கோவிருஷத் தம்பனம் என ஒரே பிரயோகமாகக் கட்சபுடத்திற் காணப்படுகின்றது. இதற்கு ஏற்ப இத்தம்பன வகையின் தொகை 10-என்றும் கூறப் பட்டுள்ளது. அது வருஞ் செய்யுளிற் காட்டப்படும்.

11 - பன்றிவாய்க் கட்டு

123. நற்பதி னாலும் நணுகிய வெண்பதும்
பாற்பதி னேழும் பன்றிவரா வாய்க்காவல்
ஏற்கும் பதினொன் றெழில்விருகத் தம்பம்
போர்ப்பதோர் மந்திரம் போற்ற வெண்ணிடே.

பாட பேதம்

1. நாற்பத்தி – நாற்பத்து - நாற்பது. நாலும். நழுகிய- நல்கிய.
2. பார்ப்பதி-பார்பதி - பார்த்தெழு பத்தேழும். பண்ணி வாய்க் - பண்ணியவாய் நன்காவல் - நற்காவல் - பன்றிவாய்தான் காவல் - பன்றிவாய்க்காவல் - பன்றி வராமல்.
3. ஏர்க்கும். றெழில்மிருகத். தம்பனம்.
4. போர்ப்பதொரு - பேராவெண்ணியே - பேராக வெண் ணிடே - போகவெண்ணிடே - பெற்றக வெண்ணிடே - வெண்ணியே.

குறிப்புரை

இம்மந்திரம்; பன்றித்தம்பனத்தின் இலக்கமும், விலங்குத் தம்பன வகையின் தொகையும், அதன் மந்திரத்துக்குத் தோற்று வாயும் உணர்த்துகின்றது.

நணுகுதல் - சார்தல். பால் - பகுதி. வாய்க்காவல் = வாய்க்கட்டு - வாய்திறவாமை. ஏற்றல் - கொள்ளுதல். எழில் = எழுச்சி - வலி. விருகம் - விலங்கு. தம்பம் = தம்பனம் - கட்டு வினை. போர்த்தல் = மூடுநல் - இயந்திரத்தின் இடம் முற்றும் மறையும்படி வரையப்படும் மந்திரமாதல் பற்றிப் போர்ப்பதோர் மந்திரம் என்றார். போற்றுதல் = பாதுகாத்தல் - புகழ்தல் - வணங்குதல் - விரும்புதல்.

11-பன்றிவாய்த்தம்பன இலக்கம் .—44-80-17.

— கட்சபுடம்.

இலக்க வேறுபாடு

11. பன்றிவராமல் வாய்கட்ட - பன்றி வாய்க்கட்டு - வாய் கட்ட வாய்விடாமல் பன்றிவாராமல் - வராது - வாராது வாய் கட்ட:—

44—80—17=141. 44—80—77=201. 44—80—70=213. 125. 141. 201. 213.

விலங்குத் தம்பனத்தின் வகை—11. அவையாவன:—

1. புலித்தம்பனம்
2. கரித்தம்பனம்
3. எலித்தம்பனம்
4. கிடாய்த்தம்பனம்
5. பாம்புத்தம்பனம்
6. நரித்தம்பனம்
7. நாய்த்தம்பனம்
8. பரித்தம்பனம்
9. ஏற்றுத் தம்பனம்

10. பசுத்தம்பனம்
11. பன்றித்தம்பனம்

என்பனவாம். இந்தத் தொகையானது மேலே குறித்தபடி கட்சபுடதந்திரத்தில்.

மிருகாணாம் ஸ்தம்பநே தேவீ தசதா பரிகீர்த்திதம்.

என்று 10—என்பதாகச் சொல்லப்பட்டுள்ளது. இனி, இந்த விலங்குத் தம்பன வகை 11-க்கும் உரிய மந்திரம் சொல்லத் தக்கது என்பதாம்.

மந்திரம் - 9

7. விலங்குத் தம்பன கன்மப் பிரயோக வகை 11-க்கும் உரிய சிறப்பு மந்திரம்

ஓம் ஹ்ரீம் க்லீம் வெப்ளம் ட்ச்மரயூம் அம் க்ஷம் க்லீம் யம் உம் தள தள கோணே கோணே ஐம் ஸ்வாஹா ||

பாடபேதம்

1. ஓம் நம: காளீ நீலகாளீ வஜ்ரகாளீ நிர்வாணீ ஸர்வேந்த்ரி யாணீ ஸர்வஸ்தம்பிந்யை நம: ||

2. ஓம் ஹ்ரீம் க்லீம் ட்ச்மரம் ஹூம் அம் க்ஷம் க்ரம் க்ரீம் [ஆம் க்ரோம்] மம் ப்ரதம் இம் (ளம்) தம் ஐம் கோணே கோணே ஐம் ஸ்வாஹா ||

3. ஓம் ஹ்ரீம் க்லீம் வெப்ளம் ட்ச்ரிம் த்ரம் க்ஷம் ஸ்ரீம் பிம் தளதள கோணே கோணே ஐம் ஸ்வாஹா ||

4 ஓம் ஹ்ரீம் க்லீம் வெப்ளம் ட்ச்ரீம் அம் ட்சிம் த்ரும் ப்ரும் தள கோணே ஸ்வாஹா ||

5. ஓம் ஹ்ரீம் க்லீம் ரீம் (ஸ்ரீம்) தம் ளம் தம் ளம் கோணே கோணே ஸ்வாஹா ||

6. ஓம் ஹ்ரீம் க்லீம் வெப்ளம் ட்ச்ரீம் அம் ட்சிம் த்ரும் ப்ரோம் (ப்ரம்) தள (யத்ர) கோணே ஸ்வாஹா ||

7. ஓம் ஸ்ரீம் க்லீம் வெப்ளம் ட்ச்ரம் அம் ட்சிம் ரும் (த்ரும்) வ்ரும் (ப்ரம்) தள கோணே ஸ்வாஹா ||

8. ஓம் ஹ்ரீம் க்லீம் சிம் தம் ளம் தம் ளம் கோணே கோணே ஸ்வாஹா ||

9. ஓம் நமோகாளீ நீலகாளீ வஜ்ரகாளீ நிர்வாணீ ஸர்வேந்த்ரி யாணீ ஸர்வம் ஸ்தம்பய நம: ஓம் ||

10. ஓம் ஷ்ரம் (ஹ்ரீம்) க்லீம் ஸௌம் ட்சமரும் அம் க்ஷம் ஸ்ரம் சிரம் த்த ள த கோணே கோணே ஓம் ஸ்வாஹா ||

11 ஓம் ஹ்ரீம் சௌவும் சபபுராங்க ஷங் சிங் பிரியுங்ய க்ஷ ய்ள (?) கோணே கோணே ஐயும் ஸ்வாஹா ||

12. ஓம் ஹ்ரீம் க்லீம் ஸ்ௗ: ட்ச்ரீம் அம் ட்சிம் த்ரீம் ப்ரத்தக்ர கோணே ஸ்வாஹா ||

13. ஓம் ஹ்ரீம் ஸௌம் சம்புராங் க்ஷங் கோணே கோணே ஐயும் ஸ்வாஹா ||

14. ஓம் ஹ்ரீம் க்லீம் தம் ளம் கோணே கோணே ஸ்வாஹா ||

15. ஓம் ஹ்ரீம் க்லீம் ஸௌ: ட்ச்ரம் அம் ட்சிம் ப்ரம் தள கோணே ஸ்வாஹா ||

16. ஓம் ஹ்ரீம் க்லீம் சிம் தம் ளம் தம் ளம் கோணே கோண ஸ்வாஹா ||

17. ஓம் ஹ்ரீம் க்லீம் ஸௌ ட்சரீம் அம் ட்சிம் ஸ்த்ரீம் ப்ர த்த க்ர கோணே ஸ்வாஹா ஓம் ||

குறிப்புரை

இம்மந்திரம்; விலங்குத் தம்பனப் பிரயோக வகை 11-க்கும் உரிய சிறப்பு மந்திரம் ஆகும். இதற்கு அதிதெய்வம்; வராகி-காளி. இந்த மந்திரத்தை இயந்திரத்தின் அகத்தேயுள்ள 16-அறைகளிலும் மேலே விளக்கியவாறு முறைப்படி வரைந்து போற்றுதல் வேண்டும்.

மேற்கோள்

ஏதேஷாம் மந்த்ரராஜந்து கர்மணாம் குலசுந்தரீ |
வதாமி தவ கல்யாணீ ஸ்ரீவாராஹ்யதி தைவதம் |

ஓம் ஹ்ரீம் க்லீம் ஸௌம் ஸமுச்சார்ய ட்ச்மரயூம்
அம் க்ஷம் ததப்பரம் |

க்லீம் யம் உம் தள பதத் வந்த்வம் கோணத்வய
முதிரயேது

ஸாத்ய முச்சாய ஐம் ஸ்வாஹா இதி மந்த்ரோய
மீரித: | —கட்சபுட தந்த்ரம்.

மிருகாணாம் ஸ்தம்பநே தக்ஷம் காளீமந்த்ரம்
சுருணுப்ரியே |

ஓம் நம: பதமுச்சார்ய காளீபத மதோச்ச ரேது |
நீலகாளீ வள்ரகாளீ நிர்வாணீ பதமுச்சரேது |

ஸர்வேந்த்ரியாணீ ஸர்வாணீ புநஸ் ஸர்வ பதம்
ஸ்மரேது |

ஸ்தம்பிந்யை நம இத்யே தது மிருகாணாம் ஸ்தப்தி
லம்படம் |

என்பன காண்க.

7. விலங்குத் தம்பன கன்பன கன்மப் பிரயோகத்தின் தந்திரம் இயந்திரம் வைக்குமிடம்.

124. எண்ணிய மந்திரம் இட்டபின் சக்கரம்
பண்ணிப் பதிக்கும் படியை யறிவிப்பன்
எண்ணிப் புலிபன்றி யானை யெழிற்கிடாய்
திண்ணின்ற பாம்புஞ் சிரத்திற் றரியே.

பாடபேதம்

1. எண்ணி மந்திரம். இயந்திரம்-யந்திரம்.
2. பண்ணிய. படியறி – பதியறி – பதியை.
3. எண்ணிய புலி-எண்ணியம் புலி. யெழிற்கடாய்

4. திண்ணென்ற – திண்ணினற் திண்ணிநற்–
திண்ணினார். பாம்பு - பாம்பும். றரிப்பதே –
றரிக்கவே.

குறிப்புரை

இம்மந்திரம்; விலங்குத் தம்பன கன்மப் பிரயோகத்தின் வகை 11-க்கும் உரிய இயந்திரங்களை வைக்கத்தக்க இடங்களை உணர்த்தும் தந்திரம் உரைக்கின்றது.

இடுதல் - இயந்திரத்தில் உள்ள அறைகளில் வரைந்திடுதல். பண்ணுதல் = பூசித்தல் - செய்தல். பதித்தல் - நிலைபெற வைத்தல். படி = தந்திரம் - உபாயம் – விதம் - முறைமை. பூமி – இடம். எண் = எண்ணம் - நினைப்பு. திண்மை–வலிமை.

மேலே சொல்லப்பட்ட மந்திரத்தை இயந்திரத்தில் முறைப் படி வரைந்து வழிபாடு செய்து முற்றிய பின்னர் அந்த இயந்திரத்தை; புலி, பன்றி, யானை, கிடாய், பாம்பு முதலிய வற்றின் தம்பனப் பிரயோகங்களில் ஏற்ற பெற்றியாக முடியில் தரிக்க என்பதாம்.

இதுவும் அது

125. தரிக்கும் புனங்களிற் றன் மூலை நாலும்
நரிக்கும் எலிக்கும் நடுவதங் காகும்
பரிக்கும்பாம் பாடா பரியானை யோடா
பெருத்தவிச் சக்கரம் பின்மந் திரங்கொள்ளே.

பாட பேதம்

1. புனங்கழனி தன்மூலை — புனங்களிற்றான்மூலை —
புனங்கள் தன்மூலை - தரிக்குங் கழனி யுனங்கழனி
தன் மூலை நாலும் — தன்னாலு மூலை — றான்மூலை
நாலு.

2. நரிக்கும் புலிக்கும் நடுவேதங்காகும்—நடுவே தம்பிக்கும்

3. பரிக்கும் பாடா பரியானை — பணியானை — பாடாப் பணியானை. யோடாது.

4. திரங்கொளே — திரங்களே — திரங்கேளே.

குறிப்புரை

இம் மந்திரம்; மேலே எடுத்துரைத்தவை போக எஞ்சியுள்ளவற்றின் பிரயோகத்தில் இயந்திரங்களை வைக்கும் இடத்தினையும், தம்பன கன்மத்தின் பொதுமந்திரத்துக்குத் தோற்றுவாயும் உணர்த்துகின்றது.

தரித்தல் = தங்குதல் — நிறுத்துதல். புனங்கள் — கொல்லை, வயல்கள். மூலை நாலும் — நான்கு மூலைகளிலும். நடுவது = நடுவு — நடுவிடமும். பரிக்கும் பாம்பு - பெரும் பாம்பு. பருமை — பெருமை. பரியானை — பரியும் யானையும். பரி — குதிரை. பெருத்த - பெருமை பொருந்திய.

நரித்தம்பனம் எலித்தம்பனம் ஆகியவற்றில் இயந்திரத்தை கொல்லையிலும் வயல்களிலும் உள்ள நான்கு மூலைகளிலும், அவற்றின் நடுவிலும் புதைத்து வைக்க. இவ்வாற்றால், புலி முதலியனவாகச் சொல்லப்பட்ட விலங்குகள் தம்பிக்கும். இனி, இதுகாறும் கூறப்பட்டனவாயுள்ள தம்பன கன்மங்களின் வகை 7-க்கும் உரிய பொது மந்திரம் உரைக்கப்படும் என்பதாம்.

சுவடிகளிற் காணப்படுங் குறிப்பு.

பன்றி யானை கிடாய் பாம்புகளுக்கு சிரசில் தரிக்க. நாவாய் பூச்சி எலிகளுக்கு கழனி மூலைகளிற் புதைக்க.

சிரசில் யந்திரம் தரிக்க. கழனி மூலை மூன்றுக்குப் புதைக்க. கன்னி மூலையிற் புதைக்க.

விட்டிற் பறவைத் தம்பனத்துக்குக் கொல்லை வயல்களின் நான்கு மூலைகளிலும், நரி எலிகளின் தம்பனத்துக்கும் பாம்பு ஆடாமை பரிகரி ஓடாமை முதலியவைகளுக்கு அவ்வவ் விடங்களின் நடுவிலும் இயந்திரத்தைப் புதைக்கவும்.

மேற்கோள்

ஏதத் யந்த்ரம் வ்யாக்ர சூகரச் சாக ஸர்ப்பாதிநாம் சிரசி தாரயேது சலபாநாம் க்ஷேத்ர சதுஷ்கோணேசு ஸ்தாபயேது ।

— கட்சபுட தந்த்ரம்.

குறிப்பு:— நாய், ஏறு, பசு இவற்றிற்குரிய தம்பன இயந்திரத்தின் வைப்பிடம் தெளிவாகத் துலங்கவில்லை.

மந்திரம் - 10

3-தம்பன கன்மப் பிரயோகப் பொதுமந்திரம்.

ஔம் நமோ காளீ நீல காளீ வஜ்ர காளீ நிர்வாணீ ஸர்வேந்த்ரியாணீ ஸர்வாணீ ஹ்ரீம் க்லீம் ஸ்ரீம் ஸௌ: ஸ்ரீவஸ் தம்பிந்யை நம: ஓம் ||

பாட பேதம்

1. ஒந்நமோ காளீ நீல வஜ்ர காளீ நிர்வாணீ ஸர் வேந்த்ரியாணீ ஸர்வஸ்தம்பிந்யை நம:

2. ஓம் நமோ காளீ நீல காளீ வஜ்ரகாளீ நிர்வாணீ ஸர்வ இந்த்ரியாணீ ஸர்வ ஸ்தம்பநே நம: ஓம் ||

3. ஓம் நமோ காளீ வஜ்ர காளீ நீல காளீ நிர்வாணீ ஸர்வேந்த்ரியாணீ. ஸர்வஸ்தம்பஸே நம: ||

4. ஓம் நமோ (கா)ளீ நீலகாளீ வஜ்ரகாளீ நிர்வாணீ ஸர்வேந்த்ரியாணீ ஸர்வஸ்தம்பம் நம: ஓம் ||

5. ஓம் ஸர்வேந்த்ரியாணீ ஸர்வஷ்தமபநே நம: ஓம் ||

6. ஓம்......ஸர்வேந்த்ரியாணீ ஸர்வஸ்தம்பய நம: ஓம் ||

7. ஓம் ஹ்ரீம் க்லீம் ஸௌம் ட்சமரயூம் ஹம் ஸம் ரம் ஸ்ரீம் ஹ்ரீம் ஸள ஸள || இதை யந்திரத்திலும்; ஐம்க்லீம் ஸௌம் ஸௌம் க்லீம் ஐம் என்று கோணத் திலும் எழுதுக.

ஏழு வகையான தம்பனங்களுக்கும் இது மூலமந்திரம்.

8. ஓம் ஹ்ரீம் ஹ்ரீம் ஹம் டம் ட்டம் சாம் நம; ஸ்வாஹா நமோ நம: ||

9. இந்த மந்திரம் எல்லாத் தம்பனங்களுக்கும் உப யோகம்:—

ஓம் நமோ காளீ நீலகாளீ வஜ்ரகாளீ நிர்வாணீ ஸர்வேந்த்ரியாணீ ஸர்வம் ஸ்தம்பய நம: ஓம் ||

குறிப்புரை

இந்த மந்திரமானது; இதுகாறும் எடுத்துக் கூறப் பட்டன வாயுள்ள எழுவகைத் தம்பனப் பிரயோகங்களுக்கும் உரிய பொது மந்திரம் ஆகும். இதனை இயந்திரத்துள் வரையத்தக்க இடத்தினைப் பற்றி அடுத்து வரும் செய்யுளிற் கூறப்படும்.

மேற்கோள்

ஓந்நம: பதமுச்சார்ய காளீபத மதோச்சரேது |
நீலகாளீ வஜ்ரகாளீ நிர்வாணீ பதமுச்சரேது ||
ஸர்வேந்த்ரியாணீ ஸர்வாணீ புநஸ்ஸர்வ பதம்ஸ்மரேது ||
ஸ்தம்பிந்யை நம உத்யேத்து ஸப்தாநாம் ஸ்தப்திலம்
பட்டம் ||

ஏதே மந்த்ர வராதேவீ வாராகீ மூலமந்த்ரகம் |
— கட்சபுட தந்த்ரம்.

ஓங்காளீ நீலகாளீதி வஜ்ரகாளீ தத: பரம் |
ஸர்வாணீ மோகிநீ நீலி ஓம் ஹ்ரீம் ஸ்ரீமித்யத: பரம் ||
காளீதி மோகிநீத்யந்தம் புநஸ்ஸர்வ முதாஹரேது |
ஸ்தம்பிந்யை நம இத்யந்தே ப்ரோச்சரேந் மந்த்ர
முத்தமம் ||
எதே மந்த்ர வராதேவீ விலேக்யா ஏவ கோஷ்டகே |
ஜப்தவ்யம் ஸர்வதந்த்ராணாம் ஸ்ரீமதி சதுரட்சரீ. || —

வேறு குறிப்பு

தம்பநத்துக்கு பகளாபீஜம் — ஹ்லீம் (க்ஷம்).
ட்டம் ட்டம் ஸ்தம்பந பீஜம் மந்த்ரா தௌஸ்தம்பந பீஜம் |

மந்த்ராந்தே நாமநிர்த்திசேது | நாமாந்தேச புநர்பீஜம்
இதிக் ஞாத்வா மநும் ஜபேது ||

என்பனவும் ஈண்டு நோக்கத் தக்கன.

இந்தத் தம்பன கன்மப் பிரயோகங்கட்கு உரியனவாகச் சொல்லப்பட்டுள்ள சிறப்பு மந்திரங்களிலும், பொது மந்திரத்திலும் அமைந்துள்ள அமைந்துள்ள ஓங்காளீ - நீலகாளீ — வச்ரகாளீ — நில்—அமர அமர - கோணே கோணே — என்பன முதலாகிய தொடர்கள் தமிழின் சிதைவாயுள்ள பாகதச் சொற்களாகும். கோணம்=அங்குசம் - தோட்டி - க்ரோம் —என்பது அங்குச பீச மந்திரமாகும். கோணந் தின்ற வடு வாழ்முகத்த —மதுரைக் காஞ்சி 592

என்பனவும் ஈண்டுக் சிந்திக்கத்தக்கன.

3-தம்பன கன்மப் பொதுமந்திரத்தின் தந்திரம்.

126. கொள்ளுமிம் மந்திரங் கோட்டிய தம்பனம்
ஒள்ளும் வகையேழுக் கோர்புறம் பதனில்
தள்ளியுண் ணின்று தயங்குந் தியானமும்
உள்ளம்பெற் றங்கே யொளிபெறு மாறே.

பாடபேதம்

1. கொள்ளு மந்திரங் - கொள்ளிலிம் மந்திரங்
கொட்டிய - கொடிய; கொட்டி
2. உள்ளும் - என்ளும். கோர்பிறம்பதனில்-கோர் பிரம் பதனில் - கோர்பிறம்பதனீறில் - கோய்வுற்ற பத்தினில் — கொத்ததும் புறந்தனில் - கேற்றும் புறந்தனில் - ஒள்ளும் பதினொன்றுக் வகையேழுக்- என்னும் பாடம் உளகம்
3. தள்ளியுள் நின்று - தள்ளு நின்று தவளாகுந் தியானம்.
4. உள்ளும்பெற் - றாங்கே. ஒளிபெறும் வாறே - ஒளி பெறுவாறே - ஒளிபெறுமாரே.

குறிப்புரை

இம்மந்திரம்; மேலே சொல்லப்பட்ட தம்பன கன்மப் பிரயோகப் பொது மந்திரத்தை இயந்திரத்தில் வரையு மிடத்தையுணர்த்துவதாகிய தந்திரமும், திருவுருவத்தியா நத்துக்குத் தோற்றுவாயும் உணர்த்துகின்றது.

கோட்டுதல்-வரைதல். தம்பனம் - தம்பனகன்மப் பிரயோக இயந்திரம். ஒண்மை - விளக்கம்.

வகை ஏழு – ஏழுவகை அவை:—

1. நிலம்
2. நீர்
3. சுக்கிலம்
4. தீ
5. படைக்கலம்
6. பசை
7. விலங்குத்தம்பனம்

என்பன.

செய்யுள்: 80 பார்க்க. புறம்பு அதனில் – இயந்திரத்தில் உள்ள 16-அறைகளின் புறத்தில். எனவே அவ்வக் கருமங் கட்குரிய சிறப்பு மந்திரத்தை இயந்திரத்தின் அகத்தே யுள்ள 16-அறைகளிலும் பொது மந்திரத்தை அவற்றின் புறத்திலும் வரைக என்றவாறாம். மேல் வருவனவற்றுக்கும் இவ்வாறே கண்டுகொள்க. புறம்பு = புறம் — பக்கம் — பின் புறம் — வெளியிடம். பொங்கரில் வண்டு புறம்பலை சோலை கள் — பெரிய. 937. தன்னைப்பு றம்பழித்து நீவ — கலித். 51. தள்ளி=தள்ளி வரைந்து — வெளியே வரைந்து என்றபடி. தயங்குதல் — விளங்குதல். தியானம் = சிந்தித்தல் — மனத் தைப்புறத்தே புகவிடாமல் அடக்கி இறைவினிடத்திலே செலுத்தி நிறுத்துதல் — தியான சொரூபம்.



தம்பன கன்மத் தியானத் திருவுருவம்

செய்யுள்: 127

மேலே சொல்லப்பட்டதாகிய தம்பன கன்மங்கட்கெல்லாம் பொதுவாயுள்ள இந்த மந்திரத்தை இயந்திரத்தின் புறத்தே வரைந்திடுக. இனி இந்தத் தம்பன கன்மத்துக்குரிய இறைவியின் திருவுருவத்தியானம் சொல்லப்படும் என்பதாம்.

மேற்கோள்

ஸப்தாநாம் கர்மணாம் அம்பே வராகீ மூலமந்த்ரகம் |
— கட்சபுடம்

வேறு குறிப்பு

இந்தப் பொதுமந்திரத்தை இயந்திரத்தின் புறவட்டத்தில் வரையவேண்டும் என்பனவும் காண்க.

3. தம்பனகன்மத்தின் தியானம், திக்கு, காலம் முதலியன

127. ஒளிபெறு சத்தி யொளிநிறம் பச்சை
தெளிவது மேற்கென்னுந் திக்கது தன்னிற்
களிபெறு நேரமுங் காண்மூன் றாஞ் சாமம்
ஒளிபெறும் ஓரையும் ஒண் சனி யாகுமே.

பாட பேதம்

1. ஒளிபெற்ற. சத்தியின் — சத்தியும் — சத்திபின் — சத்திதன். ஒளிப்பச்சை — ஒளியப் பச்சை — ஒலியப்பச்சை — ஒவியம் பச்சை.

2. தெளிவதுமேதெற்கென்னுந் — மேற்கென்று — மேற்சென்று — மேற்கென்றுந் — தொமாதென். தன்னைத்.

3. தளிபெறு. நேரம். சாமமும்.

4. ஒரை. யாமே.

குறிப்புரை

இம்மந்திரம்; எழுவகைத் தம்பனங்களுக்கும் உரிய தியானம், திக்கு, காலம் முதலியவற்றை உணர்த்துகின்றது.

தெளிதல் = அறிதல் — ஆராய்தல். களி = களிப்பு — இன்பம். சாமம் ஓரை என்பனவற்றின் விளக்கம் முன்னர்க் காட்டப்பட்டன.

இந்தத் தம்பனகன்மப் பிரயோகத்தில் இறைவியைப் பச்சை நிறம் பொருந்தியவராயும், நான்கு திருக் கரங்களை உடையவராயும், அவற்றில் சக்கரம், சங்கு அபயம், வரதம் ஆகியவற்றைக்கொண்டு விளங்குபவராயும் தியானஞ் செய்க. இந்தக் கன்மத்துக்குரிய திக்கு-மேற்கு. யாமம்-மூன்றாஞ்சாமம். ஓரை - சனியோரை என்பதாம். ஓரை, சனி எனவே வாரமும் அதுவே எனக் கொள்க.

மேற்கோள்

நிரைக்கிலுந் தம்பனம் நீண்டவிப் பச்சை — 334

தம்பனமுந் - தருவ திருகையிற் சக்கரஞ் சங்கே. — 337

என்பனவும் ஈண்டு நோக்கத்தக்கன.

தியாநம், திக்கு, யாமம், ஓரை முதலியன ஈண்டுக் கூறப்பட்டுள்ளவாறே கட்சபுட தந்திரத்திலுஞ் சொல்லப்பட்டுள்ளன.

3. தம்பன கருமத்தின் தந்திரம்

128. சனியாகும் ஓரை சமைந்தவிச் சத்திக் '
இனிதாக வேற்று முருநூ றாயிரம்
புனைதர்ப் பணமோமம் போம்பத் தாயிரம்
நினைவாம் பிரதிட்டையும் நீகரு தாயே.

பாட பேதம்

1. சத்தி.
2. இனிதாக — இனிதாகு. வேற்றுமுரை யெண்ணி நூறாயிரம் — வேற்றுமோரை யெண்ணி நூறாயிரம் — எண்ணுமுறையு நூறாயிரம் — எண்ணில் நூறாயிரம் — முறை நூறாயிரம்.

3. புனலான — புனமான — புனைமாண்ட. தர்பணம் போம்பதி—தற்பணமும் போம்பதி—தர்ப்பணமும் ஓமம் பதினாயிரம் - போம்பதினாயிரம் - புனைதர்ப்பணமும் போம்பதினாயிரம்.

4. பிரதிட்டையே—பிரதிஷ்டை — பிரதிட்டை — பிறதிட்டையு. நேர்கருதலாலே.

குறிப்புரை

இம்மந்திரம்; தம்பன கன்மத்திற்குரிய செபம், தர்ப்பணம், ஓமம் முதலியவற்றின் தொகையும் பிராணப் பிரதிட்டையும் ஆகிய தந்திரம் உணர்த்துகின்றது.

சமைதல் = அமைதல் — பொருந்துதல். ஏற்றும் உரு = வேற்றுதல்—மந்திரத்தைப் பயில உச்சரித்தல் நூறு ஆயிரம்—இலட்சம். புனை = புனைதல்—செய்தல். தர்ப்பணம் = மகிழ்வித்தல்—மந்திரமோதி நீரினை இறைத்துக் கடவுளரை உவப்பிக்குங் கிரியை—தந்திரம். ஓமம்-அவ்வாறே தீயில் அவியினைச் சொரிந்து வழிபடுந் தந்திரம். இவைபற்றி முன்னர் விளக்கப் பட்டமையும் அறிக. போம்—போகும். பத்தாயிரம் போம் — பதினாயிரம் ஆகிய தொகையினை உடையனவாகும். பிரதிட்டை பிராணப் பிரதிட்டை. இதுவும் முன்னர்க் குறிக்கப்பட்டமை காண்க. கருதுதல்—எண்ணிச் செய்தல்.

இந்தத் தம்பன கன்மத்தில் இறைவியை நினைத்துச் செய்யத் தக்கதாயுள்ள மந்திரவுருவின் தொகை — இலட்சம் ஆகும். தர்ப்பணம், ஓமம் ஆகியவற்றின் தொகை தனித்தனி—பதினாயிரம் ஆகும். பிராணப் பிரதிட்டையினையும் தந்திர முறைப்படி செய்தல் வேண்டும் என்பதாம்.

இதுவும் அது

129. கருதவல் லார்க்குக் கலந்தோங்கு சத்தி
பெருகிய வன்பொடு பேணி யளிக்குந்
திருவுரு வாகித் திகழும் ஒளியை
ஒருபொரு ளாக உணர்ந்திங்கு நோக்கியே.

பாட பேதம்

1. வல்லாற்குக் – வல்லாருக்குக். கலந்தோங்குஞ் சத்தி – கலந்தெங்கு நிற்கும் - கருமமனைத்தும்.

2. வன்போடு.

3. திருவாக நின்று திகழும். ஒளியைப்.

4. பொருளாகக் கண்டு — பொருளிதுவாக — பொரு ளதுவாக (ப்பு) உணர்ந்திங்கு – போந்திங்கு – நினைந் திங்கு — உணர்ந்து நோக்கியே — நோக்கிலே.

குறிப்புரை

இம் மந்திரம்; தம்பன கன்மத்தின் தியானம், தந்திரம் ஆகியவற்றின் பயன் உணர்த்துகின்றது.

கருதல் = தியாநித்தல் — பாவனை. இஃது ஏனைய மந்திரம் தந்திரங்களுக்கும் உபலட்சணம். மந்திரம், கிரியை, பாவனை என்னும் வழிபாட்டின் முறை மூன்றனுள் சிறப்புடைமை பற்றி கருதுதலாகிய பாவனை கூறவே இனம் பற்றி ஏனையவுங் கொள்ளப்படும். கலத்தல் — இயங்குதிணை, நிலைத்திணை யாகிய எல்லாப் பொருள்களிலும் நீக்கமின்றி விரவியிருத்தல். ஓங்குதல் — அங்ஙனங் கலந்து நிற்பினும் அவற்றின் றன்மை தனக்கின்மையால் அவற்றிலும் மேம்பட்டு நிற்றல். பெருகிய அன்பு — பேரன்பு. பேணுதல் = போற்றுதல் — வழிபடுதல். அமரர்ப் பேணியும் — பட்டினப். 200. அளித்தல் = அருள் புரிதல் — கொடுத்தல். திரு - அழகு. திகழ்தல்—விளங்குதல்.

ஒரு பொருள்: யாவையும் ஆம் — ஏகத்து ஒருவன் = எல்லாப் பொருள்களுமாய் விரியும் ஒன்றையுடைய ஒருவன். யாவையு மாம் ஏகம் — பராசத்தி. திருக்கோவையார். 71. பேர். ஏக பராசக்தி ஈசறகாம் அங்கமே — திருமந்திரம். 1309. என்பன ஈண்டு நோக்கத்தக்கன. கலந்து ஓங்குசத்தி ஸர்வம் சக்திமயம் ஜகது — சுருதி. தேவிதான் இவ்வுலகம் எல்லாம் என உணர்க — தக்க. 158. உரை. என்பனவுங் காண்க. ஒரு பொருள் — ஒப்பற்ற பொருள் எனினும் அமையும். அவனோடொப்பாரிங்கி யாவரும் இல்லை — திருமந்திரம். 5.

மேலே சொல்லிய வண்ணம் பூசை, செபம், தர்ப்பணம், ஓமம் முதலியவற்றை, மந்திர தந்திர தியானங்களின் முறை யாகப் பேரன்புடன் போற்றி வழிபடுபவருக்கு இறைவி, வேண்டிய வரங்களை அருள்வார் என்பதாம்.

3. தம்பன கன்மத்தின் முடிவு

130. நோக்கிய தம்பனம் நூலால் எழுவகை
தாக்கித் தொகையேற்றில் தானாற்பத் தேழ்வகை
நீக்கிய பின்னை நிறைந்தவுச் சாடனம்
ஆக்கிய தவ்வழி யாரறி வாரே.

பாட பேதம்

1. தம்பன. நூலா'லேழ்வகை.
2. தாக்கித் துகை – தாக்கிய தொகை – தொகை பெறத் தாம் நாற்பத் – தாக்கித்துக் கைப்பற்றத் தானாற்பத் — யேற்றத் தானாற்பத் தெழுவகை — தேழுவகை – பெறத் தானாற்பத்—றானாற் பத்தாறாகும் (ஊகம்)
3.
4.

குறிப்புரை

இம்மந்திரம், இதுகாறும் சொல்லி வந்த தம்பன கன்மப் பிரயோகத்தின் வகையும், விரிவும் கூறிமுடித்து வரும் அதிகாரத் துக்குத் தோற்றுவாயும் உணர்த்துகின்றது.

நோக்கிய — கருதப்பட்ட. நூல் — தந்திர சாஸ்திரம். எழுவகை — ஏழு விதம். தாக்கி — பெருக்கி. தொகை ஏற்றில் — மொத்தத் தொகையைக் கூட்டிக் காணுமிடத்து. நீக்கிய பின்னை — போனபின்னர். உச்சாடனம் — உச்சாடன கன்மப் பிரயோகம். ஆக்குதல் — ஆதல். வகை = கூறுபாடு — கூட்டப்படும் எண் — விரிவு.

தொகை ஏற்றில் நாற்பத்து ஏழ்வகை:

இதுவரையுங் கூறி முடிக்கப்பட்டனவாயுள்ள தம்பன கன்மங்களின் வகை ஏழும். அவற்றின் மொத்த விரிவு நாற்பத்தேழும் ஆகும். இனி, முறைப்படி வருவது உச்சாடன கன்மம் என்பதாகும்.

தம்பன கன்மப் பிரயோகத்தின் வகை 7-ம் விரிவு 47-ம் வருமாறு

1.	நிலத்தம்பனம்	—	4.
2.	நீர்த்தம்பனம்	—	8.
3.	தீத்தம்பனம்	—	3.
4.	சுக்கிலத்தம்பனம்	—	5.
5.	படைக்கலத் தம்பனம்	—	5.
6.	பகைத் தம்பனம்	—	11.
7.	விலங்குத் தம்பனம்	—	11.

ஆக வகை 7-ம், விரிவு 47-ம் கண்டுகொள்க.

தம்பனஞ் சாற்றில் ... ஏழ் வகையாகத் துளங்கவே (80) என்பதும் நோக்குக.

அதி-11. உச்சாடனகன்மம்:— போக்குவினை.

4-உச்சாட கன்மப் பிரயோகம்.

போக்குவினை ஏவலின் வகை - 8.

131. வாருமுச் சாடனம் வந்த வகைசொல்லில்
தேரும்பேய் தெய்வ மிராசா வியாதியும்
ஓரும் உலகம் ஒருபெண் புருடருஞ்
சாரும் விருகநீர் சத்துரெண் வகையே.

பாட பேதம்

1. சாடணம். வந்தவழி. சொல்லத் — சொல்லும்:

2. சேரும்பேய். தெய்வம் இராசா — தெய்வமிராஜா — தெய்வமிரா சத — மிராசர் — மரசர்.

3. உலோகம். புருஷரும்.

4. சாருமிருகமுஞ் சத்துருவெண் — சாருமிரு கஞ்சலஞ் சத்துருவோடெண் - சாரும் விருகநீர் சத்துருவோ டெண் - சாரும் விருகஞ் சத்துருவோ டெண் - சத்துரெண் வகையே.

குறிப்புரை

இம்மந்திரம்; மேலே நிறுத்த முறையானே. ஐந்தாவதாகிய உச்சாடன கன்மம் உரைக்கத் தொடங்கி, முதற்கண் அதனது வகையினை உணர்த்துகின்றது.

வகை = கூறுபாடு - விதம். தேர்தல் = ஆராய்தல் — தெளிதல். ஓர்தல் — உணர்தல். உலகம் — உலகமக்கள். அறிவில்லாத உலகினை விலக்கவேண்டி ஒரும் உலகம் என்றார். விருகம் - விலங்கு. சத்துரு — பகைவர். எண் வகை — எட்டு வகை. உச்சாடனம் = போக்குதல் - ஏவுதல் - நீக்குதல்.

இனி, மேல் நிறுத்த முறையானே (செய். 8) 5-ஆம் எண்ணு முறைமைக்கண் நின்ற உச்சாடன கன்மம் சொல்லத் தக்கதாகும்.

உச்சாடன கன்மத்தின் வகை 8 அவையாவன:

1. தெய்வம்
2. அரசர்
3. உலகம்
4. பிணி
5. மனிதர்
6. பகைவர்
7. நீர்
8. விலங்கின் உச்சாடனம் என்பனவாம்.

பேய் தெய்வம் = பேயாகிய - பேய் முதலாகிய - சிறு தெய்வங்கள். பெண்புருடர் - பெண்டிரும் ஆடவருமாகிய மனிதர். மேல், இவற்றை விரித்துக் கூறப்பட்டுள்ள முறைமை யையும், தொகையையும், பிரயோக மந்திரங்களையும் நோக்கி, பேய் தெய்வம் என்பனவற்றை ஒருவகை யாகவும், பெண் புருடர் என்பனவற்றை ஒருவகையாகவும் கொண்டு எண்ணப் பட்டன. ஆசிரியர் தாமே ஈண்டு எண் வகை என்று கிளந்து ஓதியிருத்தலுங் காண்க.

மேற்கோள்

அதவட்ச்யே விசாலாட்சி கர்மோச் சாடந லம்படம் |
லோகோபகாரம் பகுதா துஷ்டாநாம் நிக்ரகம்ததா |
அஷ்டதா பிந்நமீசாநீ சுருணுத்வ வகிதாபவ |
தேவாநாஞ்ச ராக்ஞாஞ்ச லோகாநாம் வியாதிநாந்ததா ||
நரணாஞ்சைவ சத்ருணாம் மிருகாணாம் வாரிணாந்ததா |
ஏவம் அஷ்டவிதம் தேவீ || —கட்சபுட தந்திரம்.

சுரம்பூதம் முயலகன் பேய் — ஊன்றும் விடங்கள் பகை மிருகாதி ஒழிந்தகலும். —புவனை கலைஞான தீபம் 68.

ஓங்காமல் வைத்திடும் உச்சா டனத்துக்கே.

—திருமந்திரம் 999.

என்பனவும் ஈண்டு நோக்கத்தக்கன.

உச்சாடனம் ஆவது: பூர்வசுகாசிகை முதலான மிருத்துக் களையும், மனைவிமக்கள் சுற்றம் நட்பு முதலாயினாரையும், தண்டுவிட்ட அரசர் முதலாயினாரையும் விட்டு வேறுபட்டு ஓடிப்போகச் செய்தல்.

தத்துவ நிசாநுபோகசாரம்.

4. உச்சாடன கன்மப் பிரயோக இலக்கம்

1. தெய்வ உச்சாடனம்

132 எண்வகை யாக இயம்புமுச் சாடனம்
பண்ணுற நின்ற படியி னிலக்கத்தை
மண்ணுற வேற்றி வகுத்த தியானமுந்
துண்ணெனத் தெய்வவுச் சாடனஞ் சொல்லே.

பாட பேதம்

1. யாகுமியம்புமுச்சாடனத்துப்.
2. பண்ணற - பண்புற - பண்ண. படியுமிலக்கத்தை - படியிலக்கத்தை - படியிலிலக்கத்தை- படியு மிலக்கத் தையும்.
3. மண்ணற நீயேற்றி - மண்ணுறா வேற்றி - மன்னுரு வேற்றி - மண்புற - வேற்ற வகுக்குந்.
4. திண்ணெனத்-திண்ணென்ற. சொல்வதே - செல்வதே- செய்வதே.

குறிப்புரை

இம் மந்திரம்; இவ்வதிகாரத்தில் நிறுத்த முறையானே முதற்கண் தெய்வ உச்சாடன கன்மப் பிரயோகத்தின் இலக்கம் உரைப்பதற்குத் தோற்றுவாய் உணர்த்துகின்றது.

இயம்புதல் - சொல்லுதல். பண்ணுறல் = செய்தல் - பிரயோகித்தல். படி = நிலை-விதம். மண்ணுறல்-அழகு செய்தல். மாணவை மன்னுறுத்துஞ்-செல்வமும் உண்டு சிலர்க்கு. (நீதி நெறி) ஏற்றி-வரைந்து. துண்ணெனல் = அச்சக் குறிப்பு-விரைவுக் குறிப்புமாம்-ஏதிலார் துண்ணென்ன மேல் விளங்கி-துண்ணென என்னுளம் மன்னிய சோதி. (திருவாசகம். 365. 639.) அச்சம்-தெய்வத்துக்கும், விரைவு - உச்சாடன கன்மத்துக்கும் ஏற்பனவாகும்.

மேற் கூறப்பட்டனவாகிய எண்வகை உச்சாடன கன்மங்களுள்; நிறுத்த முறையானே முதற்கண் தெய்வவுச்சாடன வகையின் இலக்கமும், மந்திரமும், தியாநமும், தந்திரங்களும் உரைக்கப்படும் என்பதாம்.

1. தெய்வ உச்சாடன கன்மத்தின் வகை – 6

1. ஐயன் போக 2. பிடாரி போக

133. சொல்லுமைம் பத்தொன்றுஞ் சேர்ந்த பதினாறும்
அல்லதேசு ரைம்பதும் ஆயிடில் ஐயன்போம்
நல்ல பிடாரிபோம் நாடில் அறுபதுஞ்
சொல்லைம்பத் தேழுந் தொடர்ந்தவேழ் பத்தே.

பாட பேதம்

1. சொல்லைம்பத் - சொல்லன்பத் - சொல்லுமைம். பத்தொன்று. சோர்ந்த.

2. அல்லதொன்பது. மாமிலக்க மையன் போம் - ஐயான் போம்.

3. நாடிலறுபதுடன் - நாடியறுபதுஞ்.

4. சொல்லன்பத். துடர்ந்த - தொடர்ந்தவெழுபதே - வெழுபதுமே.

குறிப்புரை

இம் மந்திரம்; மேல் தோற்றுவாய் செய்து கொண்டவாறே தெய்வ உச்சாடனத்தின் வகைகளை உணர்த்தத் தொடங்கி, முதற்கண் ஐயன், பிடாரி ஆகியவற்றின் போக்குவினை ஏவலுக்குரிய இலக்கங்களைக் கூறுகின்றது.

ஐயன் = சாத்தன் - குட்டிச்சாத்தான் - குறளித் தேவதை- ஓர் பேய். பிடாரி = கிராம தேவதை - காளி இவை இரண்டும் தீயவரைப் பற்றி வருத்தும் சிறு தெய்வங்கள். ஊரின் எல்லைப் புறத்தில் இப்பிடாரியின் கோட்டங்கள் அமைந்திருக்கும். அது பற்றி எல்லைப்பிடாரி என்றும், எல்லையம்மன் என்றும் பெயர் வழங்கும். அறுவர்க்கு இளைய நங்கை - சத்த மாதாக்களில் ஏழாவது இளையாள் - அவள் பிடாரி. (சிலப். 29:37. அரும்பத வுரை) என்பதுங் காண்க. நல்ல பிடாரி என்பது, நல்ல பாம்பு என்றாற் போல நின்றது. போம்=போகும் – விலகும் – நீங்கும். (தன்னைப் போற்றுபவரின் பீடையைப் போக்குபவள். பீடை – துயரம் அரி - அழிப்பவள்).

1. ஐயன் போம்:- 51—16—50 — கட்சபுடம்

2. பிடாரிபோம் - 60—57—70 —

இலக்க வேறுபாடு

1. ஐயன் போம் - ஐயன் போக – ஐயனார் போக:— 51 – 16 – 50 = 117. 51 - 78 - 50 = 179. 51 - 16 - 10 = 77. 77. 107. 117. 179. 208.

2. பிடாரி போம் – பிடாரி போக - பிடாரி ஓடிப்போம்: 60 - 57 - 70 = 187. 57 - 70 = 127. 92. 127. 151. 181. 187. 197. 297. உன்மாதம் போம்: — 17. 217. சப்தமாதுரு உச்சாடனம் 60 - 57 - 70 — கட்சபுடம்.

3. பிரமகண்டன் போக 4. முயலகன் போக

134. எழுபத்தெட் டெண்பத்தேழ் எய்துநூற் றாறுந்
தழுவிற் பறக்குந் தான்பிர்ம்ம ராக்கதன்
எழுமே இருபதும் ஏழேழும் எண்பான்
முழுதற்றுப் போகும் முயலகன் றானுமே.

பாட பேதம்

1. எய்தும் நூற் - எய்தநூற் - எய்தறுபத்தாறு - எய்து நூற்றாறு.

2. தழுவிப் - தழுவப். பறந்து போந் - பிறந்து. பிரம ராக்கதன் – பிரமதாக்கி – பிரமதரக்கி – பிரம ராக்ஷதி - பிரமராக்ஷசி - பிரமதாக்கியன் - பிரமகத்தி - பிரமராக்ஷன் - பிரமராக்கி – பிரமராக்கதம்.

3. எழுதுமே - ஏழுமே - எழுமுற் றிருபது மேழேழு மெண்ணில் - ஏழேழு மெண்பதும் - ஏழேழு மெண் பான் - ஏழேழுமெண்பாம் - ஏழுமே இருபதும் - ஏழும் ஒன்பான்.

4. முயலகன் றானே.

குறிப்புரை

இம்மந்திரம்; பிரமகண்டவலி, முயல்கண்டவலி ஆகிய வற்றின் உச்சாடனப் பிரயோக இலக்கம் உணர்த்துகின்றது.

தழுவுதல் = ஏற்றல் – சூழுதல். பறத்தல் = ஓடிப்போதல் – விரைந்து நீங்குல். பிரமராக்கதன் - அவமிருத்து அடைந்த பிராமணனின் பேய் வடிவம். பிரமரராட்சசி - அவமிருத்துவான பார்ப்பனியின் பேய்வடிவம். அவமிருத்து = அகால மரணம் - துன் மரணம். பிரமகண்டன் = குமர கண்டன் (லெக்ஸிகன்) – குரக்குவலிப்பு (சீவரட்சாமிர்தம்) - பிரமகத்தி - பிரமஞானியைக் கொன்றவன் எய்தும் பேயுருவம் (அபிதான சிந்தாமணி) - பிரம ராட்சஸ பூதம் - பிரமகண்டவலி இந்த நோய்கள் அசாத்தியம்

- ஒருவாற்றானும் போக்க முடியாதது. (ஆத்மரட்சாமிர்தம். 10. அதி தூல ரோகப் படலம்)

கன்றிய பிரம ராக்கதம் பிடித்தது கறுத்தே
— திருவால - திருவிளை. 44:24.

மின்னெ யிற்றுடைப் பிரம ராக்கதன்.
— உபதேச காண்டம். விபூதி. 32.

பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்.
— கந்தர் சஷ்டி கவசம்'

முயலகன் - முயல் கண்ட வலி. இது முசல் வலிப்பு - முசல் வாதம் என்றுங் கூறப்படும். இதனை வட நூலார் அபஸ்மாரம் என்பார். இஃது, உணர்வை அழித்து, வலிப்பை விளைவித்துக் கிழே விழ்த்தி வருத்துவது. தீர்த்தற்கரிய அசாத்திய நோய்களுள் ஒன்று. (சீவரட்சாமிர்தம் பார்க்க.) பண்டுகொல்லி மழவன் மகளுக்குற்ற இந்நோயினை ஆளுடைய பிள்ளையார் தமிழ் மறை மந்திரம் ஓதி நீக்கியருளினார்.

சடலம் - முடங்க வலிக்கும் முயலகன்றன் மொய்ம்பை
அடங்க மிதித்த அடிபோற்றி.
— திருமுறை 11-16-11.

மன்னுபெரும் பிணியாகும் முயலகன்வந் தணைவுற
மெய்வருத்தம் எய்தி.

மற்று வேறொரு பரிசால் தவிராமை.
இவளை முயலகனாம் பொருவில்அரும் பிணிபொருந்த.
— பெரியபுராணம். 2214, 2215, 2220.

என்பனவும் காண்க. முழுது அற்றுப் போகும் = முற்றும் வேரற்று அடியோடு போய்விடும் - பின் தொடராது என்றபடி.

3. *பிரமராக்கதன் போக:*— 78-87-106
— கட்சபுடம்,

4. *முயலகன் போக:*— 20-49-89 —

இலக்க வேறுபாடு

3. பிரமராக்ஷதை விட்டுப் போம் - பிரமராக்ஷஸ் - பிரமராக்ஷசி-ராக்ஷசன் - பிரமராக்கதன் - பிரமாட்சி-பிரமஹத்தி-பிரமஹத்தி போக-பிரமராக்ஷசோச்சாடனம்: 78-87-106=271. 78-88-106=272. 78-87-66=231. 271. 272.

4. முயலகன் போக - முயலகன் வியாதி போக - முசலகன் போக - முயலகன் போம்:— 20 - 49 - 80 = 149. 49 - 80=129. 30-46-80=156. 27-49-80=156. 30-49-80=159. 129. 149. 156. 159. 256.

ஜேஷ்டாதேவி உச்சாடனம். 20-49-80 — கட்சபுடம்.

மேற்கோள்

போற்றுந் தகையன பொல்லா முயலகன் கோபப்புன்மை
ஆற்றுந் தகையன... இன்னம்பரான்றன் இணையடியே.
— தேவாரம் 5130.

5. குமரகண்டன். 6. பசாசு குறள் பேய்களின் போக்குவினை

135. தானேழ் பத்திரண்டுந் தாக்கிய தொண்ணூறும்
ஆனதொண் ணூற்றஞ் சாங்குமர கண்டன்போம்
கூனும் பசாசு குறட்பேய்க் கறுபதும்
ஆனநூற் றேழும் அன்பத் திரண்டாமே.

பாட பேதம்

1. தானெழு பத்திரண்டுந் - தானேயெழுபத்திரண்டாகித் தொண்ணூறும்.

2. மாணதொண் - மானேதொண் - ஆனதொண். ணூற் றஞ்சோ ராங்குமர கண்டன் - ணூற்றஞ்சுயொரங்குமர கண்டன் - றைஞ்சு மாங்குமர - ணூற்றைஞ்சோ டாகுங் குமர கண்டன் - ஆங்கு மர கண்டன் போம் - குமாரக் கண்டன்.

ஹூற்றைஞ்சோ டாகுங் குமரகண்டன் — ஆங்குமர கண்டன்போம் — குமார்க்கண்டன் — குமாரகண்டன்.

3. கூறும் — காணும். பசாசும் — பாசுக் — பிசாசு — பிசாசுக் குறள் பேய்க். கறுபதுடன் — கருட — செழுபது.

4. ஆனது — னானது — மான நூற்றேழு — மான தொண்ணூற்றாறு — ஆனது நூற்றேழு. மைம்பத் திரெண்டுமே — திரண்டுமே.

குறிப்புரை

இம்மந்திரம்; குமரகண்டன் பசாசு குறள்பேய் ஆகிய வற்றின் உச்சாடன இலக்கம் உணர்த்துகின்றது.

ஆம் — ஆகும். குமரகண்டன் — குமரகண்ட வலி; இதன் விவரம் சீவரட்சாமிர்தத்திற் காணத்தக்கது. குமரகண்டன் முதலியன இடும்பையினைப் பெருக்கும் — சேதுபு. துராசார 35., குமரகண்ட வலிப்பு வருஞ்சில நேரம் — தனிப்பா. போம்- போகும். கூறும் பசாசு: குரக்கு வாதம் பிடித்த விதத்தினிற் குடியடங்கலுங் கூன்முது கானவும் — கலிங் — 151. எழுந்து நிற்கின் விசும்பினின் முட்டியே இடம்பெறாமன் முடங்கி யிருப்பன — இரணிய வதைப்பரணி 119 பசாசு — பிசாசு. இதனால் வரும் பிணி பைசாச சுரம் எனப்படும். குறள் = பூதம்- குறளி – குறளிப்பிசாசு. ஈண்டுச் சொல்லப் பட்டனவாயுள்ள பசாசு, குறள், பேய் என்பன தூயவர் அல்லாரையும், மன வலிமை இல்லாரையும் அமையம் பார்த்துப் பற்றி வருத்துவன. பருவுடம்பிற்கு விதிக்கப்பட்டுள்ள ஆயுளின் எல்லை இயல்பாக முடிவதற்குள்ளாக அகால மரணமடைந்து, காற்றுருவாயிருந்து தத்தம் கால எல்லையை நோக்கியிருக்கும் சிற்றுயிர்களாகும். தேவசாதியுட்பட்ட 18-திறத்தவராயுள்ள பூதகணத்தாரும், 48- ஆயிரம் திறத்தவரான பேய்க்கணத்தாரும் (தக்க 336 — உரை) இவற்றின் வேறாவர். குறட்பேய் — என்பது பாட மாயின் குறள்வடிவினையுடைய பேய் என்க. குறளான கூளிகளும் (தக்க. 135) என்பதுங் காண்க, மந்திர நூலிற் கண்ட

படிக்குத் தீண்டி வருத்துவலவாயுள்ள பூதகணங்கள் 18 | வகையாகும்.

மேற்கோள்:

பராவிய பேய்கள் கணங்கள் பசாசு — 331

மற்றொரு கண் நெற்றிமேல் வைத்தான்றன் பேயாய நற்கணத்தில் ஒன்றாய நாம் — திருமுறை — 11—5—86.

பாதம்.. போற்றும் – நற்கணத்தினில் ஒன்றானேன் நான்
— பெரிய 1773.

வானமும்மண்ணும் எல்லாம் வணங்குபேய் வடிவமானார்.
— 1771.

பேஎய் ஓம்பிய பேஎய்ப் பக்கமும்
— தொல்காப்பியம். 1025

பேய்கண் டனையதொன் றாகிநின்றான்
— திருக்கோவையார். 84

வையத்து — அலகையா வைக்கப் படும் — தன்யாக்கை கரந்து மக்கள் யாக்கையுள் தோன்றுதல் வல்ல அலகை
— திருக்குறள் 850 பரிமே.

பேயுருவ மூன்று முறமலைமேல் — இருந்தானை
— தேவாரம் 7615

பேய் அடையா பிரிவெய்தும் — 1983

ஐயவி சிந்தி நறைபுகைத் தாய்மலர் தூய்க்
கொய்யாக் குறிஞ்சி பலபாடி — மொய்யிணர்ப்
பூப்பெய் தெரியல் நெடுந்தகைபுண் யாங்காப்பப்
பேய்ப்பெண் பெயரும் வரும்.

— வெண்பாமாலை 79.

ஏனைப் பிசாசு எனவே அவள் பெண்பாற் பசாசுந்,
தான் ஆண்பாற் பசாசும் என்பது உணத்திற்று.

— கலித் 65 நச்

ஐயவி சிதறி ஆம்பல் ஊதி - இசைமணி எறிந்து காஞ்சி பாடி - நெடுநகர் வரைப்பிற் கடிநறை புகை இக்காக்கம் வம்மோ — புறம் 281.

ஐயவி அப்பிய நெய்யணி முச்சி — மணி 3 : 134

குறுநடைப் புதல்வர்க்குக் - காவற் பெண்டிர் கடிப் பகை யெறிந்து - தூபங் காட்டித் தூங்குதுயில் வதியவும்
— 7 : 57 - 59.

அரவாய்க் கடிப்பகை ஐயவிக் கடிப்பகை — 7: 73. என் பனவும், பிறவும் ஈண்டுக் கருதத் தக்கனகடி - அச்சுறுத் தம் பேய் :

5. குமரகண்டன் போகும்:
— 72 - 90 - 95 கட்சபுடம்

6. பசாசு குறள் பேய்கள் போகும்.
60 - 107 - 52

இலக்க வேறுபாடு

5. குமரகண்டம் - குமரகண்டன் - குமரகண்ட வலிப்பு போகும் - போம் – போக – 72 – 90-95 = 257. 72 – 97 95 – = 264. 257.264.

6. பசாசு குறளி பேய் போக - பசாசு பேய் குறள் போக –பேய் போக – காணும் பசாசு குறட் பேய் போக-பூதப்ரேத ப்சாசு குறளை குட்டிச்சாத்தான் போம் - பசாசு பேய்முனி குறள் பிணிபோக – பிசாசு குறளி போக – பிசாசு குறட்பேய் போக - பேய் பிசாசு திரும் - பில்லி சூனியம் பயித்தியம் திரும் சங்கா தோஷ நிவர்த்தி – நல்லமனிதன் என்று சொல்படுவான் –பசாசு பூதம் பேய் போகும்:— 60 - 107–52 - = 219. 60-97 -

52 = 209. 70 - 96 - 52 = 218. 60 - 97 - 52 = 209. 18. 30 37. 51. 52. 92. 107. 108. 109. 110. 139. 208. 209. 218. 129. 313. 345.

1. தெய்வ உச்சாடனத்தின் தந்திரமும் மந்திரமும்

136. திரண்ட விலக்கங்கள் சேர் பதினாறின்
மருண்டார் தலைதனில் வைத்தவப் போதே
அருண்டுடைந் தோடும் ஐயன் பிடாரிபேய்
வெருண்டோடு மந்திரம் வேண்டிற்று நாடிலே.

பாட பேதம்

1. பதினாறில் - பதினாலின்.
2. தலைதன்னில் – தலந்தனில்.
3. தோட்டும் – தோடு மையன் பிடாரி – உருண்டுடைந் தோடும்.
4. வெருண்டொரு. வேண்டித்து - வேண்டியது–வேண்டி. நாடியே – நாட்டிலே.

குறிப்புரை

இம் மந்திரம்; இதுகாறும் உரைக்கப்பட்ட தெய்வ உச்சாடன வகை - 6க்கும் உரிய தந்திரமும், அவற்றின் மந்திரத் துக்குத் தோற்றுவாயும் உணர்த்துகின்றது.

திரள் = கூட்டம் - தொகுதி. பதினாறு-16 – அறைகளை யுடைய இயந்திரம். மருளல் – மயங்குதல். மருள் = மயக்கம் .பிசாசம் – பேயாட்டம் (பிங்கலம்). அருண்டு – நடுங்கி. அருண்டென் மேல் வினைக்கு அஞ்சி — தேவாரம். 7897. அரளுதல் – அச்சமுறுதல். அரண்டவன் கண்ணுக்கு இருண்ட வெல்லாம் பேய் என்பது பழமொழி. உடைதல் = தளர்தல் – தோல்வி. வெருள் = அச்சம் - மயக்கம். வெருளினும் எல்லாம்

வெருளும் அஃதன்றி - மருளினும் எல்லாம் மருண் - நன். 95. மயிலை மேற். ஐயன் பிடாரி பேய் என்றாரேனும் இனம்பற்றிப் பிரமராக்கதன், முயலகன், பிசாசு, குறள் என்பனவுங் கொள்ளப் படும்.

இந்தத் தெய்வ உச்சாடனப் பிரயோகத்தில் இயந்திரத்தை, முறைப்படி வழிபாடாற்றி முற்றிய பின்னர் முடியில் தரித்தல் வேண்டும். தரிக்கின் அப்போதே அவை அஞ்சி நடுங்கி ஓடிவிடும். இனி இந்தப் பிரயோகத்துக்குரிய மந்திரம் உரைக்கற்பாற்று என்பதாம்.

மந்திரம் — 11

1. தெய்வ உச்சாடனப் பிரயோக வகை 6-க்கும் உரிய சிறப்பு மந்திரம்:

ஓம் ஸௌம் ட்ச்மிரியூம் க்லீம் யட்ச யட்ச ராட்சஸ ராட்சஸ ஸ : க்லீம் ட்டம் ட்டம் ஓம் ஐம் ட்டம் ட்டம் ஸ்வாஹா ||

பாடபேதம்

1. ஓம் ஐம் க்லீம் ட்ச்மரம் யட்ச யட்ச ராட்சஸ ராட்சஸ கிட்டா கிட்டா ஹர ஹரி மிரி மரி ஓம் ஐம் ஸ்வாஹா ||

2. ஓம் ஸௌம் க்லீம் ட்ச்ரீம் யட்ச ராட்சகி ஸ்வாஹா ஹரி மரி ஐம் ஸ்வாஹா ||

3. ஓம் ஸௌம் க்லீம் ட்ச்ரீம் யட்சம் ராட்சம் கி ஹரி ஸ்வாஹா ஹரி மரி மரி ஐம் ஸ்வாஹா ||

4. ஓம் ஸௌம் க்லீம் ட்ச்ரூம் ஆம் ஹ்ரீம் யட்ச யட்ச யட்ச ராட்சஸ (ஸம்) ட்சக்ர ஸா (ஸம்) க்ரு ஸா ஹர ஹரி மரி ஓம்ஐம் ||
 இது ஆறு வகை உச்சாடனம்.

5. தெய்வ உச்சாடனம் ஆறுக்கும் மந்திரம்:-
 ஓம் சம் அங் க்லீம் மங்கிஷப் புறூங்கும் ||

6. ஓம் ஸௌம் க்லீம் க்ஷம் ஐம் (ட்ச்மரைம்) ஙம் யட்ச யட்ச ராட்சஸ ராட்சஸ ட்சரஹா (ஹர)க்ரீ வ மா ஹரிம் மிரி மிரி ஓம் ஐம் ஸ்வாஹா ||

7. ஓம் ஸௌம் க்லீம் ட்ச்ரீம் யட்சம் ராட்சம் கி ஸ்வாஹா ஹரி மரி மரி ஐம் ஸ்வாஹா ||

8. ஓம் ஸௌம் க்லீம் ட்ச்ரூம் ஆம் ஹ்ரீம் யட்ச யட்ச யட்ச யட்ச ராட்சஸம் க்ஷ க்ருஸம் க்ருஸம் ஹர ஹரி மரி ஓம் ஐம் ஸ்வாஹா ||

9. ஓம் ஸௌம் க்லீம் ட்ச்மரம் ஆம் ஹ்ரீம் யட்ச யட்ச யட்ச ராட்சஸ ஸம் க்ஷுக்ரு க்ஷுக்ரு ஸாக்ருஸா ஹர ஹரி மரி ஓம் ஐம் ஸ்வாஹா ||

10. ஓம் ஸௌ : க்லீம் ட்ச்ரீம் யட்ச ராட்சகி ஸ்வாஹா ஹரி : மரி மரி ஐம் ஸ்வாஹா ||

11. ஓம் ஸௌ : க்லீம் ட்ச்மரும் ஆம் ஹ்ரீம் யட்ச யட்ச யட்ச ராட்சஸம் க்ஷுக்ர ஸாக்ர ஸா ஹர ஹ்ரி மரி ஓம் ஐம் ஸ்வாஹா ||

12. உச்சாடன மந்திரமறியவும்:— ஓம் ஸௌம் க்லீம் டச்மரியும் ராட்சச ராட்ச - கிறீட கிறீட ஹரி ஹரி நமாமி ஓம் ஐம் சுவாஹம் ||

13. ஸௌம் க்லீம் ட்ச்ரிம் ளம் யட்ச யட்ச ராட்சஸ ராட்சஸ க்ரீடா க்ரீடாம் ஹர ஹர மிரி மிரி ஓம் ஐம் ஸ்வாஹா ||

14. தேவ உச்சாடன மந்திரம்:— ஓம் ஸௌம் ட்ச்மிரியூம் க்லீம் யட்ச யட்ச ராட்சஸ ராட்சஸ ஸ்வாஹா ஸஹ (ஸ:) க்ரீம் ட்டம் ட்டம் ஓம் ஐம் (ட்டம் ட்டம்) ஸ்வாஹா ||
இம் மந்திரம் தேவ உச்சாடனத்தில் ஆற்றல் வாய்ந்தது.

குறிப்பு: 20-ஆம் இலக்கமிடப்பட்டுள்ள சுவடியில் இம்மந்திரம் இல்லை.

குறிப்புரை

இம்மந்திரம்; தெய்வ உச்சாடனப் பிரயோக வகை 6-க்கும் உரிய சிறப்பு மந்திரம் ஆகும். இதனை முன்னர்க் கூறியவாறே இயந்திரத்தில் உள்ள - 16 அறைகளிலும் அடைத்து முறைப்படி போற்றிய பின்னர், ஐயன் முதலான சிறு தெய்வங்களால் பற்றப்பட்டாரின் முடியில் தரிக்க அவை அஞ்சி விரைந்து ஓடும் என்பதாம்.

மேற்கோள்

ஓம் ஸௌம் ட்ச்மிரியூம் க்லீம் யட்சயுக்மம் க்ருகீத்வா பச்சாது க்ராஹ்யம் யுக்மதோ ராட்சஸேதி | ஸ : க்லீo (க்ரும்) ட்டத்வி : ப்ரோச்ய ஓம் ஐம் ட்டம் யுக்மம் மந்த்ரோ யோக்யோ தேவதோச்சாட நாய || — கட்சபுட தந்த்ரம்.

1 – தெய்வ உச்சாடன வகையின் தொகையும் முடிவும்.

2 – அரசவுச்சாடனத்தின் வகை - 5.

137. நாடிய மந்திரம் நல்லதோர் தெய்வத்துக்
காடிய தாறு வகையா யமர்ந்தது
தேடிய வரசவுச் சாடனஞ் செப்பில்
ஆடிய வஞ்சு வகையா யமர்ந்ததே.

பாட பேதம்

1. நாட்டிய.
2. காடியவாறு-காட்டியவாறு-காட்டியதாறு.
3. தேட்டிய - தேடியராசவுச் - ராஜஉச் - தேடியிரா சவுச். செப்பிடில்-சொல்லிடில்-சொல்லில்.
4. ஆடியதஞ்சு - ஊட்டிய அஞ்சு - யமர்ந்தே [ஆடிய வைவகை யாக வமர்ந்ததே - ஊக பாடம்]

குறிப்புரை

இம்மந்திரம்; இதுகாறுஞ் சொல்லப்பட்டனவாயுள்ள தெய்வ உச்சாடனத்தின் தொகையும், முடிவும்; நிறுத்த முறையானே அரசவுச்சாடன கன்மத்துக்குத் தோற்று வாயும், அதன் வகையும் உணர்த்துகின்றது.

நாடுதல் – விரும்புதல். தெய்வம் - தெய்வ உச்சாடன கன்மம். ஆடல் = ஆடுதல் – செய்தல் – சொல்லுதல். அமரி தல் = அடங்குதல் – இருத்தல் – பொருந்துதல். செப்பல் – சொல்லுதல். செப்பு – சொல்.

தெய்வ உச்சாடன கன்மத்தின் வகை 6. அவை:

1. ஐயன்
2. பிடாரி
3. பிரமராட்சசம்
4. முயலகன்
5. குமரகண்டன்
6. பிசாசு குறள் பேய் ஆகியவற்றின் உச்சாடனங்களாகும். இனிச் சொல்லப்படும் அரச உச்சாடன கன்மமானது 5-வகையாகும். அவை மேற்சொல்லப்படும் என்பதாம்.

மேற்கோள்

தேவதோச் சாடநம் பத்ரே சட்விதம் பரிகீர்த்திதம் |
— கட்சபுட தந்த்ரம்

ராக்ஞாமுச் சாடநம் தேவீ பஞ்சதா பரிகீர்த்திதா: ||
அதாம்பிகே பஞ்ச நரேசுவராணாம் உச்சாடநம் காம
வதாமி சங்க்யாம் ||

2. அரசவுச்சாடனத்தின் வகை-5.

1 - அரசன் போக. 2 - அரசன்பதி போக.

138. அமர்ந்தவைம் பத்தஞ்சு மாம்பதி னாறும்
அமர்ந்ததொண்ணூற்றிரண் டாமர சன்போம்
அமர்ந்த பதிவிட்டுப் போமுப்பந் தாறுஞ்
சுமந்தமுப் பத்தேழுந் தொண்ணூற் றிரண்டுமே.

பாட பேதம்

1. பத்தஞ்சா - பத்தஞ்சாகுநாற் பத்துநால் - னாலும்.
2. தொண்ணூற்றாறு மாமர சன்போகும் - தொண்ணூற்றாறிரண்டாகு. போக - போகும் - போகல் - யேக.

3. இவர்ந்த. பதிவிடப்போ - பதிவிட்டுபோ.

4. சுமந்ததுந் தொண்ணூற்றிரண்டே - திரண்டாமே.

குறிப்புரை

இம்மந்திரம்; அரசன், அரசன்பதி ஆகியவற்றின் உச்சாடன இலக்கம் உணர்த்துகின்றது.

அமர்தல் - பொருந்துதல். போம் = போகும் - போவான். பதி = இடம் - நகரம் - அரண்மனை - வீடு. சுமத்தல் = தாங்குதல் - மேற்கொள்ளுதல் அரசன் என்பதனை இவ்வதிகாரம் முற்றிலுஞ் சேர்த்துக் கொள்ளுக.

1 - அரசன் போக:— 55—16—92.

2 - அரசன் பதிவிட்டுப் போக:— 36—37—92.

— கட்சபுடம்

இலக்க வேறுபாடு

1. ராஜ உச்சாடனம் – ராஜாபோக - அரசன் போக - அரசன் நகர் – அரண்மனைவிட்டுப் போவான்:— 55-16-92 = 163. 53-16-96 = 165. 55-16-96- = 167. 55-44-92 = 191. 50-54-92 = 196. [கட்சபுடம் :— 55-14-92 = 161. 55-44-92-191]. 105. 161. 163. 165. 167. 189. 196. 212.

2. அரசன் தலைநகர் அழியும் - ராசாபதி விட்டுப் போக-ராசன் ஊர் போக - ராஜாபோக – ராஜ உச்சாடனம் – அரசன் போக – அரசன் ஊருக்குப் போக–பதிவிட்டுப் போக–நகர்விட்டு விலக – வேந்தன் பதிவிட்டேனென்பான்-மனைவிட்டுப்போக:—

36-37-92 = 165. 71. 165. 195. 198.

குறிப்பு

அரசர் உச்சாடன கன்மத்திற்கு உரியனவாகக் காணப்படும் இலக்க வேறுபாடுகளுள்; 55, 92 ஆகிய இவை தவிர ஏனைய (14-16-44-54. ?) எண்கள் ஐயப்பாட்டிற்கிடனாயுள்ளன.

3-செல்வம். 4-சேனை ஆகியவற்றின் போக்கு வினை.

139. இரட்டித்த வைம்பது மெண்தொண் ணூற்றைந்து
மருட்கெட் டறுப தைசுவரி யம்போந்
திரட்டும் பெருஞ்சேனை சிந்தநூற் றாறுந்
தெருட்டிப் பதின்மூன்றுஞ் சேர்ந்த வறுபதே.

பாடபேதம்

1. இரட்டித் தறுபது மென்ப-இரட்டித் தறுபத்து மொண்- இரட்டித் தறுபது மெண்-இரட்டித்த நூற்றுமொண்ணு தொண். ணூற்றஞ்சு – ணூற்றைஞ்சு.

2. டறுபது மைஸ்வரி – மை சொரியம் – மயிசுவரியம் - மைஸ்வரி - மையிஸ்வரி. டறுபத்து. போகும் – போகுந்- போம்.

3. சிந்து - சிறந்த நூற். றாறுந்தெரி - றாறுந்தெரிந்.

4. தெருட்டிய - தெருட்பதின் - துருட்டிப் - துருட்டி முப் பதின்னெட்டுஞ். சோராத — சேராவறுபதே — சேரு மறுபதே — சேராறு பதுமே. வறுபதுமே.

குறிப்புரை

இம்மந்திரம்; செல்வம், சேனை ஆகியவற்றின் உச்சாடன இலக்கம் உணர்த்துகின்றது.

இரட்டித்த ஐம்பது - நூறு. சேனை - நால்வகைப்படைகள். அவை: தேர், யானை, குதிரை, காலாட்படை என்பன. இவற்றுள் ஈண்டுச் சேனை என்றது காலாட்படையைக் குறித்து நின்றது. பிற படைகள் வருஞ் செய்யுளிற் சொல்லப்படும். ஐசுவரியம் - செல்வம். அவையாவன: மணி, பொன், தானியம், மனை முதலியன. திரட்டும் – திரட்டப்பட்ட திரட்சி—கூட்டம். தெருட்டல் — தெளிவித்தல். தெருள் — தெளிவு. பெருமை — மிகுதி.

3 — செல்வம் போ;— 100 — 95 — 60. — கட்சபுடம்

4 – சேனை போக.— 106 – 13 - 60.

இலக்க வேறுபாடு

3. பொருள் போகும் – ஐஸ்வரியம் போம் – போக :
100 – 95 - 60 = 255 160 – 95 - 60 = 315.
— கட்சபுடம்.

62 – 95 - 60 = 217. 100 - 95 – 60 – 28 = 283.
81. 217. 255. 275. 283. 315. 318.

4. காலாட்படை போகும் — சேனை போக - படை சிதறி உடைந்துபோம் - சேனை நாசம் : 106-13-60 = 179. 106 – 30 - 60 = 196. 179. 181. 196. 204. 214. 229.

5. அரசனுடைய தேர், கரி, பரி, கருவிகளின் போக்குவினையிலக்கம்

140. அறுபது தேர்பரி யானை கருவி
துறுமநூற் றிரண்டுந் தொண்ணூற்று மூன்றும்
அறுபதா மிலக்கம் ஐந்தே அரசர்
பெருவதோர் மத்திரம் பேசுவோ மியாமே.

பாட பேதம்

1. அறுபதோர் - அறுபதார் - அறுபது தேர் குதிரை. கருவித் – கருவிக்கு – கருவிக்குத் - கருவிக். தேர் பரி - (ஊகபாடம்.)

2. துறுவது – குறுவது - யுறுவது. நூற்றிரண்டு - நூற் ருபத்தெட்டொரு நாற்பத்து மூன்றோடு – தொண் ணூற்றின் – மூன்று. துறும - (ஊகபாடம்).

3. அறுபதுமாமிலக்கம் - மாமிலக்கம் ராசாப் - மாமி லக்கம் ஐந்தேயிராசாப். அறுபதாமிலக்கம் - (ஊக

பாடம்.) பெறுவது மைம்பது மாமிலக்கத் தோரசாப் - பெறுமிலக்க மைந்தோச்சாப் - பெறுவது மைம்பது மாமிலக்கமதே சாரப் - பெறுவது மைம்பது மாமிலக்கம் தோறரசர்ப் - பெறுமைம்பது – மைம்பது மிலக்கத் தோராாசாப்.

4. பெறுவதொரு மந்திரம் பேசுவோம் யாமே - இனிப் பேசுவோமே - மந்திரம் பேசுவோமே - பேசுவோம் நாமே. பேசுவோமியாமே. (ஊக பாடம்)

குறிப்புரை

இம்மந்திரம்; தேர், கரி. பரி கருவிகள் ஆகியவற்றின் போக்குவினையேவல் இலக்கமும், அரசர் உச்சாடன கன்மப் பிரயோக மந்திரத்திற்குத் தோற்றுவாயும் உணர்த்துகின்றது.

பரி - குதிரை. கருவி = படைக்கலம் - தொகுதி. கருவி தொகுதி - தொல். 837. பலவகைப்பட்ட படைக்கலங்களின் தொகுதி. அறிவு அற்றங் காக்குங் கருவி - திருக்குறள். 421. துறுமல் = துறுமுதல் – துறுதல் - நெருங்குதல் (திவா). நறு மலர் துறுமி (பெருங் - இலாவாண. 15.6). ஐந்து அரசர் = உச்சாடனம் 5-வகையாம்.

அரசர் உச்சாடன கன்மப் பிரயோகத்தின் வகை ஐந்து அவை:—

1. அரசன்
2. பதி
3. செல்வம்
4. சேனை
5. தேர், பரி, கரி, கருவி என்பன.

மந்திரம் - இந்த அரசர் உச்சாடன கன்ம வகை 5–க்கும் உரிய மந்திரம். பேசுவோம் யாம் – நாம் சொல்லுவோம்

பேசுவோமியாம்: இகரம் சாரியை. ஏத்தி ஏத்தித் தொழு வோமியாமே — ஆத்திச்சூடி 1. இகழ்வன் போலியானே — தேவாரம். 7607 – 7616.

5-தேர் கரி பரிகருவிகள் போக: 102 - 93 - 60

— கட்சபுடம்.

இலக்க வேறுபாடு

5. ரத கஜ துரக பதாதி குலைந்துபோம் - பரி கரி ஆயுதம் போக - கரி பரி போக - யானை குதிரை போக:—

102-93-60=255. 102-93–50=245. 120 – 128 - 43 = 291. 245. 255. 291.

மேற்கோள்

ராக்ஞாம் உச்சாடநந் தேவி பஞ்சதா பரிகீர்த்திதம்

— கட்சபுடம்.

மந்திரம் — 12

2. அரச உச்சாடன வகை 5-க்கும் உரிய சிறப்பு மந்திரம்

ஓம் அம் ஆம் ளம் ஹ்ரீம் க்ஷம்க்ஷம் க்லீம் ஸ்ரீம் ச்ரெளம் ரம் க்கம் ப்லூம் த்ரும்த்ரும் ட்ச்மிரியூம் ஸெளம் ஸ்வாஹா ||

பாட பேதம்

1. ஓம் ட்டம் அம் ளம் ஹ்ரீம் யக்ஷயக்ஷ க்லீம் ஸ்ரீம் சம் ரம் க்கம் க்கம் தூரம்தூரம் ட்ச்மிரி யூம் ஸெளம் ஸ்வாஹா ||

2. ஓம் அம் ஆம் இம் ஹ்ரீம் க்ஷேம் க்லீம் ஸ்ரீம் ச்ராம் ளம் லம் தம் ட்ச்ரீம் ஐம் ஸ்வாஹா ||

3. ஓம் ஆம் ஆம் ளம் ஹ்ரீம் க்ஷம்க்ஷம் க்லீம் ஸ்ரீம் ச்செளம் ரம் க்கம் பூம் தூரம்தூரம் ட்ச்மிரியூம் ஸெளம் ஸ்வாஹா ||

4. ஓம் அம் ஆம் இம் ஹ்ரீம் க்ஷம்க்ஷம் க்லீம் ஸ்ரீம் ச்ரெளம் ரம் க்கம் ப்லம் த்ரும்த்ரும் ட்ச்மிரியூம் ஸெளம் ஸ்வாஹா ||

5. ஓம் ஆம் இம் ஹ்ரீம் க்ஷேம் க்ஷேம் க்லீம் ஸ்ரீம் ஸெளம் க்லெளம் க்லெளம் பூம் தூரம் ட்ச்மரம் (ஸெளம்) ஐம் ஸ்வாஹா ||

6. ஓம் அம் ஆம் ளம் ஹ்ரீம் க்ஷோம் க்லீம் ஸ்ரீம் அத கெளம் (ச்ரெளம்) ங்ரும் தூரம்ட்சீம் ஸ்வாஹா ||

7. ஓம் அம் ஆம் ளம் ஹ்ரீம் ஷேம் (க்ஷம்) க்லீம் ஹ்ரீம் ஹேம் லேம் டம் ரம் ட்ச்ரும் ஐம் ஸ்வாஹா ||

8. ஓம் அம் ஆம் ளம் ஹ்ரீம் க்ஷெம் க்லீம் ஸ்ரீம் சம் வொ றும் ளம் லெ செளம் லம் கம் த்ரும்த்ரும் ட்ச்மெரம் ஐம் ஸ்வாஹா ||

9. ஓம் அம் ஆம் ளம் ஹ்ரீம் கெம் க்லீம் ஸ்ரீம் அம் யம் (சம்) க்லௌம் தும் தூம் ஸ்வாஹா ||

10. ஓம் அம் ஆம் ஹ்ரீம் ஷெம் க்லீம் ஹ்ரீம் ஹெம் லெம் டம் ரம் ட்ச்ரம் ஐம் ஸ்வாஹா ||

11. ஓம் அம் ஆம் இம் ஹ்ரீம் ஷெம் க்லீம் ஹ்ரீம் ஹெம் லெம் டம் ட்ச்ரும் ஐம் ஸ்வாஹா ||

12. ஓம் அம் ஆம் ளம் ஹ்ரீம் கெர (கெம்) க்லீம் ஸ்ரீம் அத க்லௌம் (அம் தம் க்லௌம்) ங்ரும் ஐம் ஸ்வாஹா ||

13. ஓம் அம் ஆம் ளம் ஹ்ரீம் ஷெ (க்ஷெம்) க்லீம் ஹ்ரீம் ஹெம் லெம் டம் ரம் ட்ச்ரும் ஐம் ஸ்வாஹா ||

14. அஞ்சு வகைக்கு மந்திரம்; ஓங் அங் ஆங் ளங் ரீங் களம் எய. க்லீம் ரீயும் சங் ளங் கெளங் களங் சிங் சப்புறுங் எ சுவாகா ||

15. ஓம் அம் ஆம் ளம் ஹ்ரீம் க்ஷெம் க்லீம் ஸ்ரீம் சம் ரம் க்லௌம் த்ரும் த்ரும் ட்ச்ரீம் ஸ்வாஹா ||

16. ஓம் அம் ஆம் ளம் ஹ்ரீம் க்ஷெம் க்லீம் ஸ்ரீம் சம் க்லம் த்ரும் த்ரும் ட்ச்ரூம் ஸ்வாஹா ||

17. இதற்கு மூல மந்திரம்: அம் ஆம் இம் ஹ்ரீம் ஷெம் (க்ஷெம்) க்லீம் ஹ்ரீம் ஹெம் லெம் டம் ரம் ட்ச்ரம் ஐம் ஸ்வாஹா ||

குறிப்புரை

இம்மந்திரம்; அரசவுச்சாடன கன்மப் பிரயோக வகை 5-க்கும் இயந்திரத்தில் வரைதற்குரிய சிறப்பு மந்திரம் ஆகும். மேலே சொல்லியவாறு இம்மந்திரத்தை இயந்திரத்தில் உள்ள 16 - அறைகளிலும் அடைத்துப் போற்றுதல் வேண்டும்.

மேற்கோள்

ஓம் அம் ஆம் இம் (ளம்) ஹரீம் ப்ரகிருஹய க்ஷயுக்மம் க்லீம் ஸ்ரீம் ச்ரௌம் ரம் க்கம் ப்லம் (ப்லூம்) த்ரும் த்விவாரம் || ட்ச்மிரயூம் ஸௌம் ஹயதெத்வஹ்நி ஜாயாஸமேதம் || ராக்ஞாம் ஹேதத் தட்சிப்ரமுச்சாடநாய || — கட்சபுட தந்த்ரம்.

ஓம் ட்டம் அம் ளம் ஹரீம் ததோய க்ஷயுக்மம் க்லீம் ஸ்ரீம் சம் ரம் க்கம் த்வயம் தூம் த்விவாரம் | ட்ச்மிரி யூம் ஸௌம் ஹயெதத்வந்திஜாயாஸ மேதம் ராக்ஞாம் சைதத் ட்சிப்ர முச்சாடநாய || —

2. அரச உச்சாடன கன்மப் பிரயோக இயந்திரத்தின் தந்திரம்.

141. பேசிய மந்திரம் பெற்றவிச் சக்கரம்
பூசியைங் காயம் புதையையன் கோயிலில்
ஓசை யுறவே உலகவுச் சாடனம்
வாசி யிடையே வந்து பிறந்ததே.

பாட பேதம்

1. சக்கிரம் - சக்கரத்தைப்.
2. பூசியேயைங்காயம் – பூசையைங்காயம் – பூசையங் காயம் - பூசிய ஐங்காயம். புதைத்தையன் - புகை யையன். கோயிலே - கோவிலே - கோயில்.
3. யுலோகவுச் - வுலகவுச் - லோகவுச். சாடணம் - சாடனத்தில்.
4. வாசிவளி (ழி) யோ (ட) டைந்து பிறந்ததே - வாசிவழி நடைவந்து - வாசி வழியே வந்து.

குறிப்புரை

இம்மந்திரம்; அரச உச்சாடன கன்ம இயந்திரத்தின் தந்திரம் கூறிமுடித்து, நிறுத்த முறையானே மூன்றாவதாயுள்ள உலகவுச்சாடன கன்மத்திற்குத் தோற்றுவாய் உணர்த்துகின்றது.

மந்திரம்-மேற் கூறப்பட்ட அரசவுச்சாடன கன்மப் பிரயோக மந்திரம். சக்கரம்-அரசவுச்சாடன கன்மப் பிரயோக இயந்திரம். ஐங்காயம் பூசி ஐயன் கோயிலில் புதைக்க என்க. ஐயன்-ஐயனார். ஓசை = கீர்த்தி - புகழ். வாசி - தகுதி. ஏறினான் அவ்வாசியை வாசியாக — திருவாலவா. 28 : 45. இயற்கை - அரக்கனவன் குலத்து வாசி—இராமநா. ஆரணி. 25. ஐங்காயம்: கடுகு, ஓமம், வெந்தயம், உள்ளி, பெருங்காயம் - தைலவருக்கச் சுருக்கம். வெள்ளுள்ளி, வெந்தயம், கடுகு, ஓமம், காயம் - வைத்திய சாரசங்கிரகம், ஐங்கோலம்: இருப்பைவித்து. வேப்பம் வித்து, ஓமம் கடுகு, கருஞ்சீரகம் - சங்க அகராதி. பஞ்ச காயம்: திரிபலை (கடுக்காய் நெல்லிக்காய் தான்றிக்காய்) வெங்காயம், காயம் - லெக்சிகன். பஞ்சகாரகம்: காயம் வெள்ளுள்ளி வெங்காயம் கடுகு வெந்தயம் - சங்க அகராதி. பஞ்சகற்பம்: கஸ்தூரி மஞ்சள், மிளகு, வேப்பங்கொட்டை, கடுக்காய்த் தோல், நெல்லி. அளக நன்னுத லாயோ ரதிசயங் களவு காயங் கலந்தஇந் நீரிலே-மிளகும் நெல்லியும் மஞ்சளும் வேம்பிடில் - இளகும் மேனி இருளுங் கபாலமே. – திருமந்திரம். 849.

அரணமில் ஐங்காயம் பூசி .. புதைத்திட — 998.

கடுப்பூசி ... வைத்திடும் உச்சாடனத்துக்கே — 999.

பஞ்சகாயத்தைப் பாரித்து .. வைத்திட — 1000.

செருச்செய்யும் ஐங்காயஞ் சேர்த்துப் புதைப்பதே
— 300. 98.

யந்த்ரோபரி சித்தார்த்த லசுந பிப்பலீ மரீச இங்கு
மாலேப்ய — கட்சபுடம்.

என்பனவும் நோக்குக. திருமந்திரம். 300 : 98.
குறிப்புரையும் பார்க்க.

இம் மந்திரம் வரையப் பெற்ற இயந்திரத்தை, முறைப்படி பூசனையாற்றி முற்றிய பின்னர்; ஐங்காயம் பூசி ஐயன் கோட்டத்திற் புதைக்க இந்த அரச உச்சாடன வகை 5-ம் சித்திக்கும். இனி அடுத்து வருவது, உலக உச்சாடன கன்மம் என்பதாம்.

3 - உலக உச்சாடன கன்மம்; வகை-6
1 - வழிநடை போக. 2 - கிலேசம் இடர் போக.

142. பிறந்த வழிநடை பேசெண்பத் தஞ்சுஞ்
சிறந்தவைம் பத்தெட்டுஞ் சேர்முப்பத் தாறும்
அறிந்தன்பத் தேழ்நாற்பத் தெட்டறுபத்தா
றெறிந்த கிலேசம் இடர்போம் உரைப்பதே.

பாட பேதம்

1. வழிநடைக்குப் (போக்கெண்பத்) - பேச்செண்பத்தஞ்சு-
ைதந்தும்.

2. சிறந்தவன்-பொருந்த வைம்பத்தெட்டுப்(ம்)-பத்தெட்டு.
சேர்ந்த முப்பத்தாறு - போமுப்பத்தாறும்.

3. அறிந்த தைம்பத்தேழ் — அறிந்த வைம்பத்தேழ் —
அறிந்தவைம் பத்தேழும் — அறிந்தைம்பத் தேழ்.
டறுபத்தாறு — டறுபத்தாறும்.

4. றெறிந்து — மு(ற)றிந்து — எறிந்த — எறிந்து திசை
விடாயிசைப்போ முரையே — இடர்போ முரையே —
முறையே.

குறிப்புரை

இம்மந்திரம்; இவ்வதிகாரத்தின் முதலில் நிறுத்த முறையானே மூன்றாவதாகவுள்ள உலகவுச்சாடன கன்மம் உணர்த்தத் தொடங்கி, முதற்கண் வழிநடை போதல், கிலேசம் இடர் போதல் ஆகியவற்றின் இலக்கம் உணர்த்துகின்றது.

வழி நடைபோம் — கிலேசம் போம் — இடர்போம் என்க. போம் - போகும் — உச்சாடனம் - போக்குவினை. கிலேசம் = காயக்கிலேசம் — உடலைப்பற்றி வருந்துன்பங்கள். இடர் — உள்ளத்தைப்பற்றி வருந்துன்பங்கள். பஞ்சக்கிலேசம் – ஐவகைக்

குற்றங்கள்; அவை: அவிச்சை, அகங்காரம், அவா, ஆசை வெறுப்பு என்பன. முக்குற்றம் — காமம், வெகுளி, மயக்கம் என்பன. இடர் - தன்னாலும், பிறவுயிர்களாலும், ஊழானும் வருந் துன்பங்கள்.

— திருக்குறள். 4,38,360. பரிமேல்.

புந்திக் கிலேசமும் காயக் கிலேசமும் போக்குதற்கே.

— அருணகிரியார்.

காய்க்கிலேசம் உணர்ந்த பயனன்றே.

— ஔவை குறள் 5.

துன்பே கவலை பிணி என்றிவற்றை நணுகாமற் றுரந்து கரந்துமிடேர். — தேவாரம் 4167

கிலேசம் நோயாதி துன்பம். — நாநார்த்த தீபிகை.

கிலேசம் — ராகம், ரோகம் முதலான துக்கங்கள்.

— அமரம்.

1-வழிநடை போக:— 85—58—36. — கட்சபுடம்.

2-கிலேசம், இடர்போக:— 57—48—66.

இலக்க வேறுபாடு

1. வழிநடை போதல் — வழிநடக்காமற் போக — உலக வழி நடக்காமற் போக — வழிநடை போக — வழிநடை போகாமல் — வழிபோம் — வழிநடக்கும் — வழிநடை நடவா மற் போக - வழி நடவாமற் போக - உலகவழி நடக்காமல் - இரவில் வழி நடக்க — போக்கு வரவுக் கிடனாய நடைவழி போம் — போக்குவரத்துவழி சூன்யமாகும் - தூரவழி போக - தேசம் போம் — லோகவுச்சாடனம் — வழி நடக்கும்:—

85—58—36 = 179. 58—80—36 = 174. 32. 51. 145. 171. 174. 182. 201. 218. 219. 279.

2. கிலேசம் போக — கிலேசம்போம் — கிலேசம் இடர் போக — காயக் கிலேசம், மனக்கிலேசம் 2-ம் தீரும்: சிரசில் தரிக்க;—

57—48—66=171. 57—48—25=130. 130. 171. 179. 216. 219.

3-மோகம், 4-அச்சம் ஆகியவற்றின் போக்கு வினை

143. உரைப்பெண் ணான்கறுபத் தொன்றேழ்பத் தாறும்
நிரைப்பின் மோகம்போம் நின்ற பயம்போக
உரைத்ததொண் ணூறும் நூற்றஞ்சும் நாற்பதும்
பெருத்த வினைபோகப் பேசும் இலக்கமே.

பாட பேதம்

1. உரைப்பதெண். றெழுபத்தாறும்-றெழுபத்தாறு.
2. நிரைத்தபின். மேகம் போம். பயம் போம்.
3. தொண்ணூற் றொடு - தொண்ணூற் றொரு. நூற் றஞ்சு - நூற்றைஞ்சு.
4. வினைதான் போகப்.

குறிப்புரை

இம்மந்திரம்; மோகம், அச்சம் ஆகியவற்றின் போக்கு வினை ஏவல் இலக்கமும், வினைப் போக்கின் பிரயோக இலக்கத்திற்குத் தோற்றுவாயும் உணர்த்துகின்றது.

உரைப்பு - உரைத்தல். நிரைப்பில் = நிரப்பில் - நிரப்புதல்- நிறைத்தல் - பூர்த்தி செய்தல்; வேள்வி நிரப்பி.

— கம்ப. பிராட்டிகளங். 20

மோகம் = மயக்கம் - அறியாமை - மூர்ச்சை - ஆசைப் பெருக்கம். — நாநார்த்த தீபிகை.

மாயையால் நிகழும் மயக்க உணர்ச்சி.

— சிவஞானபாடியம்.

பயம் - அச்சம். பெருத்தவினை = பெருவினை - பெரும் பாவம் - மாபாதகம் என்பர். பெருவினை போக்குதற்குரிய இலக்கம் வருங்கவியுட் சொல்லப்படும்.

3. மோகம் போகும்:— 32-61-76.

— கட்சபுடம்

4. பயம் போகும்:— 90-105-40

இலக்க வேறுபாடு

3. மோகம் போக – மோகம் போம் - மோகம் போகும் - மோகனம் போம். சிரசில் தரிக்க:—

32 - 61 - 76 = 169. 33 - 61 - 76=170. 61 - 52 - 76 = 189. 169. 170. 189.

4. பயம் போக - பயம் போம் - அச்சம் போக - நின்ற பயம் போக - சிலேட்டுமம் போம் சிரசில்:

90 - 105 - 40 = 235. 105 - 40 = 145. 145. 225. 235. 312.

மேற்கோள்

மோகம், பயம் என்பன இரண்டும் மாயா மலத்தின் காரியங்கள். ஆணவ மலத்தின் காரியமாகக் கூறப்படும் மோகம் என்பது இதனின் வேறு:

கூறிய மூன்று மலத்தின் குணக்குறி
வேறு கிளக்கின் விகற்பங் கற்பங்
குரோதம் மோகங் கொலைஅஞர் மதம்நகை
விராயெண் குணனும்ஆ ணவமென விளம்பினை;
அஞ்ஞா னம்பொய் அயர்வே மோகம்
பைசா சூ நியம் மாச்சரி யம்பயம்
ஆயவேழ் குணனும் மாயைக் கருளினை;
இருத்தலுங் கிடத்தலும் இருவினை இயற்றலும்
விடுத்தலும் பரநிந்தை மேவலென் றெடுத்த
அறுவகைக் குணனுங் கருமத் தருளினை.

— இருபாஇருபஃது. 4: 1-10.

மூலமலம் காரிய வேறுபாட்டான் 7-வகைப்படும். அவை யாவன:

1. மோகம்
2. மதம்
3. அராகம்
4. கவலை
5. தாபம்
6. வாட்டம்
7. விசித்திரம்

என்பனவாம். இவற்றுள் மோகம், மதம் முதலிய அறுவகைக் காரியங்கட்கும் ஏதுவாய்க் கட்டு நீங்குங்காறும் ஆன்மாக்களோடு சகசமாயுள்ளது. மோகம் இல்வழி ஏனை மதம் முதலியன நிகழாமையின், அது முதன்மைத் தாதல் அறிக. அம்மோக மாவது, கொள்ளற்பாலது இது; நீக்கற்பாலது இது என நூன் முகத்தான் உணர்ந்தும், அரிவையர் முதலிய விடயங்களின் மயங்குதற்கு ஏதுவாயது.

— சிவஞானபாடியம். வெண்பா - 12

பெருத்த வினைபோக: போமே வினைகளும் புண்ணியன் ஆகுமே.

— திருமந்திரம் 1342

என்பனவும் நோக்குக.

5. பெருவினை 6. தளை ஆகியவற்றின் போக்கு வினை

144. இலக்கம் பதினஞ் செழுபா னறுபான்
புலக்கும் விலங்குதளை போந்தொண்ணூறும்
இலைத்தொரு நூற்றஞ்சும் எண்பத் திரண்டுங்
கலைக்குளிடு மந்திரங் கண்டிட ஓதே.

பாட பேதம்

1. இலக்கும். பதினைஞ் — பதினைந்தொழுபா —பதினஞ் செழுபதறுபதாம்.

2. புலக்க விலங்குதனைப் போக்குந் தொண்ணூறு — புலக்கவு பாதிதனைப் போக்குந் தொண்ணூறு புலக்கலங்குதனைப் போகும் தொண்ணூறாம்— புலக்கும் விலங்குதனைப் போக்குந் — புலக்கவில் வகுதனைப் போக்குந்.

3. இலத்தொரு — நிலைத்தொரு — நினைத்தொரு. நூறஞ்சு.

4. கலைக்குளே. காணவோதே — காணவே ஓதே — காணவே ஓதிடே — காணவொண்ணதே.

முடிவு : மொத்தம் 17-க்கு யந்திரம் — 51 (?)

குறிப்புரை

இம் மந்திரம்; பெருவினை விலங்குதளை ஆகியவற்றின் உச்சாடன இலக்கமும், உலக உச்சாடன கன்மவகை 6-க்கும் உரிய மந்திரத்திற்குத் தோற்றுவாயும் உணர்த்துகின்றது.

புலத்தல் — துன்புறுதல். போகும் புழையுட் புலந்து — ஏலாதி -11. விலங்குதளை. விலங்காகியதளை. தளை = கட்டு — சிறை — தாள் (கால்) விலங்கு. தாடலையிடுமின் — திருவாச. 3 : 143. விலங்குதளை — கைவிலங்கு கால் விலங்குகள். இலைத்தல் — சோர்தல். கலைக்குள் - கலையுள். கலை - திங்களின் கலை 16 என்றது ஈண்டு இயந்திரத்துள்ள 16 - அறைகளைக் குறித்து நின்றது. இடுதல் - வரைதல்.

5. பெருவினை போக :— 15 - 70 - 60 கட்சபுடம்

6. விலங்குதளை போக : — 90 - 105 - 82

இலக்க வேறுபாடு

5. வினைபோகும் - வினைபோம் – வினைபோக – உபாதி போம் — பேதித்தவினை போம் – பெருத்த வினை போக —

வினை, உபாதி போம்; சிரசில். 15 - 70 - 60 = 145. 50 - 70 - 60 = 180. 145. 180. 214.

6. விலங்குபோக - விலங்கு தளைபோக - விலங்கு போம்- விலங்கு, விலங்குதளை தெறித்துப்போக – தெறிச் சுப்போக - விலங்கு விடுவிக்கும் - மந்திர பயத்தினின்றும் விடுவிக்கும்– 90 - 105 - 82 = 277. 105 - 82 - 40 = 227. 66· 130· 227· 277· 279· 299.

பா-ம். அடி 4. காணவொண்ணாதே: கல்லாதார் நெஞ்- சத்துக் காணவொண்ணாதே - திருமந் 312.

மந்திரம் - 13

3. உலக உச்சாடன கன்மவகை 6—க்கும் உரிய சிறப்பு மந்திரம்

ஓம் பம் மம் ஹம் ஹம் ளம் சிவாய ளம் ஹ்ரீம் ளம் க்லீம் க்லௌம் ஸௌம் ஐம் ஸ்ரீம் ஸ்வாஹா ||

என்பது உலகத்தை அழிப்பதில் ஆற்றல் வாய்ந்தது.

பாட பேதம்

1. ஓம் பம் மம் ஹம் ஸம் ளம் சிவாய ளம் ஹ்ரீம் ளம் ப்ரம் சௌம் ஸௌம் க்ஷம் ஐம் ஸ்ரீம் ஸ்வாகா =
2. ஓம் வேம் மம் அம் க்ஷம் சிவாய ளம் ஹ்ரீம் ஹ்ரீம் ளம் க்லீம் ப்ரும் ஸௌம் ஸ்ரீம் ஸ்வாஹா ||
3. ஓம் வேம் மம் அம் க்ஷம் சிவாய ளம் ஹ்ராம் ஹ்ரீம் ளம் க்லீம் ப்ரும் க்ளௌம் ஐம் ஸ்ரீம் ஸ்வாஹா ||
4. ஓம் ஐம் மம் அம் க்ஷம் சிவாய ளம் ஹ்ரீம் ளம் க்லீம் விறும் மம் கௌம் ஐம் ஸ்ரீம் ஸ்வாஹா ||
5. ஓம் பேம் (வெம்) மம் சிவய ளம் ஹ்ரீம் ளம் க்லீம் ஹம் ஹேம் ளம் ஐம் ஸ்வாஹா ||
6. ஓம் வேம் சம் சிவாய ளம் ஹரீம் ளம் க்லீம் ஹ்ம் ஹேம் ளம் ஐம் ஸ்வாஹா ||
7. ஓம் பேம் மம் அம் க்ஷம் வம் யம் லம் ஹ்ரீம் ளம் ப்ரஹ்ம கே ஐம் ஸ்ரீம் ஸ்வாஹா ||
8. ஓம் வேம் மம் சிவய ளம் ஹ்ரீம் ளம் க்லீம் ஹம் ஹோம் ளம் ஐம் ஸ்வாகா ||
9. ஓம் ஸம் மம் அம் க்ஷம் சிவாய உம் கம் க்ரீம் க்லேம் ஐம் ஸ்ரீம் ஸ்வாகா ||

10. ஓம் வேமம் அக்ஷம் பா (பம்) தம் ளம் ஹ்ரீம் ளம் க்லீம் விறுமகே ஐம் ஸ்ரீம் ஸ்வாகா ||

11. ஓம் வே மம் அம் க்ஷம் வா (ஸம்) தம் (சிவாய) ஹ்ரீம் ளம் க்லீம் (விறும்) கே ஐம் ஸ்ரீம் ஸ்வாகா ||

12. ஓம் வே மம் அக்ஷம் வாத ள ஹ்ரீம் ளீ க்லீ பிறும் கௌம் ஐம் ஹ்றம் ஸ்வாஹறா ||

13. ஓம் க்கேம் மம் அம் க்ஷம் வம் யம் லம் ஹ்ரீம் லம் க்லீம் ப்ரஹ்மகே ஐம் ஸ்ரீம் ஸ்வாஹறா ||

14. ஓம் வே மம் அம் க்ஷம் (சி) வாய ஹ்ரீம் ளம் க்லீம் பி (வி) ரும் கௌம் ஐம் ஹ்றம் ஸ்வாஹறா ||

15. இதற்கு மூலம் ஓம் வேம் மம் சிவய ளம் ஹ்ரீம் ளம் க்லீம் ஹறம் ஹேறம் ளம் ஐம் ஸ்வாஹறா ||

16. இதற்கு மந்திரம்: ஓம் வே யம் மங் அங்கிஷ சிவாய ளங் ரீங் ளங் ஷயு பிரிவு (ட்சிமிரியும்) சௌவும் ஐயுங் கிலியும் சுவாகா.

குறிப்புரை

இம்மந்திரம் உலக உச்சாடனத்தின் வகை 6-க்கும் உரிய சிறப்பு மந்திரம் ஆகும். இதனை இயந்திரத்தில் உள்ள 16-அறைகளிலும் மேற்சொல்லியவாறு அடைத்து முறைப்படி பூசித்தல் வேண்டும்.

மேற்கோள்

ஓம் பம் மம் ஹறம் ஹறம் ஸமுச்சார்ய பச்சாததாய தௌளம் சிவாயேதி ளம் ஹ்ரீம் | ளம் க்லீக் க்லௌம் ஸௌம் ததோ ஐம் ப்ரகிருஹ்ய ஸ்ரீம் ஸ்வாஹறாஸ்யா லோக வித் வம்ஸ தக்ஷம் ||
— கட்சபுடம்.

ஓம் பம்மம் ஹறம்ஸம் ஸமுச்சார்ய பச்சாதாதாயா தௌளம் சிவாயேதி ளம் ஹ்ரீம் | ளம் ப்ரம் சௌம் ஸௌம் க்ஷம் ததோ ஐம் ப்ரகிருஹ்ய ஹ்றம் ஸ்வாஹறாஸ்யா லோக வித்வம்ஸ தக்ஷ: ||

3 – உலக உச்சாடன கன்மத்தின் தந்திரம்

145. ஓதிய மந்திரம் ஒக்க வரைந்தபின்
ஆதி யுலகவுச் சாடனம் ஆறுக்குஞ்
சேதித்து வைக்குஞ் சிரத்திலிச் சக்கரம்
வேதிக் கும்பின் வியாதியுச் சாடனம்

பாடபேதம்

1. ஓதிடு.
2. ஆதியி – ஆதிய – ஆதியுலோகவுச் – சாடனமைந்துக்குஞ்.
3. சோதித்து. சிரத்தினிற் – சிரத்தினில் – சிரத்திசை – சிரத் தின்வை,
4. வேதிக்கும் பின்னை. யுச்சாடனமே.

குறிப்புரை

இம்மந்திரம்; ஆறு வகைப்பட்ட உலக உச்சாடன கன்ம இயந்திரத்தின் தந்திரமும், வியாதியுச்சாடன கன்மத்திற்குத் தோற்றுவாயும் உணர்த்துகின்றது.

ஒக்க வரைதல் – மேலே சொல்லியவாறு மிகாமலும், குறையாமலும் 16-அறைகளிலும் பொருந்த வரைதல். ஆதி உலகம்: ஆதி பகவன் முதற்றே உலகு - திருக்குறள் 1.

சேதித்து வைத்தல் – சேத்து வைத்தல். சேத்தல் - தங்குதல் வம்பலர் சேக்குங் கந்துடைப் பொதியில்

— பட்டினம் 249.

வேதித்தல் = வேறு படுத்தல் - தாழ்ந்த பொருளை உயர்ந்த பொருளாக மாற்றுதல். வேதிக்க உடம்பு ஒரு பொன் மயமாய் ஒளிவிட்டு விளங்கினன் மீனவனே.

— தக்க. 217.

கருமருவு குகையனைய காயத்தினடுவுட் களிம்புதோய் செம்பனையயான் - காண்டக விருக்க நீ ஞானவனல் மூட்டியே கனிவு பெற உள்ளுருக்கிப் - பருவம தறிந்துநின் அருளான குளிகைகொடு பரிசித்து வேதிசெய்து - பத்து மாற்றுத் தங்க மாக்கியே பணிகொண்ட பட்சத்தை என்சொல்லுகேன்.

தாயு. சின்மயானந்த குரு. 7.

உலக உச்சாடன கன்ம வகை - 6 ஆவன:

1. போக்குவரவு
2. கிலேசம்
3. மோகம்
4. அச்சம்
5. பெருவினை
6. விலங்குத்தளை

ஆகியவற்றின் போக்குவினைகள்

மேற்கோள்

சட்பிந்நம் மகேசாநீ லேகோச் சாடநமத்புதம் |

— கட்சபுடம்.

லோகஸ்யோச் சாடநே தேவீ நிகநேத் காளி
கோஷ்டகே |

என்பனவும் ஈண்டுக் கருதத் தக்கன.

ஆறுவகையாயுள்ள உலக உச்சாடன கன்மங்கட்கு உரிய இம்மந்திரத்தை விதிப்படி வரைந்து போற்றி முற்றிய பின்னர் முடியில் அணிய இவ்வுச்சாடன கன்மம் சித்திக்கும். இனி வியாதியுச்சாடன கன்மம் சொல்லப்படும் என்பதாம்.

4. வியாதி உச்சாடன கன்மம் வகை - 30

1. சூலை போக. 2. பித்துப் போக.

146. உச்சா டனஞ்சூலை போகவோ ரெண்ணான்கும்
அச்சா மறுபத்தொன் றன்பத்து நாலுமாம்
பிச்சோட நாலாறும் பேரெழு பத்தேழும்
அச்சோ வறுபத்தெட் டாமென்று சொல்லே.

பாட பேதம்

1. டனஞ்சூலம் - டனம் மூலம். போகவெண்ணான்கும் - யோக வொண்ணான்கு.
2. அச்ச. றைம்பத்து.
3. நாலாறு.
4. அச்சா மறுபத்தெட் - அச்சறுபத்தெட். சொன்னதே.

குறிப்புரை

இம்மந்திரம்; மேல் வகுத்துக் கூறியவாறே, வியாதி உச்சாடன கன்மத்தின் வகையினைக் கூறத்தொடங்கி, அவற்றுள் முதற்கண் சூலை பித்து ஆகியவற்றின் போக்குவினைகட்குரிய இலக்கங்களை உணர்த்துகின்றது.

சூலை = சூலம் — வயிற்றுவலி. சூலப் படைக்கலத்தாற் குத்தப்படுங்கால் உளவாகும் துன்பினைப்போலும் வேதனையை விளைவிக்கும் வியாதியாகலான் இஃது இப்பெயர் பெற்றது. இதன் வகை 7-என்று ஆத்மரட்சாமிர்தத்திலும் (பக்-163) 8-விதம் என்று மாதவ நிதானத்திலும் (பக். 86) சொல்லப்பட்டுள்ளன. சுடுகின்றது சூலை - (தேவாரம் 4161, 62) உடலுள்ளுறு சூலை — (4164) வலிக்கின்றது சூலை — 4165. சூலைவஞ்சனை வெல்ல - 5400 கடுங்கனல்போல் அடுங்கொடிய - மண்டு பெருஞ் சூலை அவர் வயிற்றினிடைப் புக்கதால் — பெரிய 1319. வடவனலும் கொடுவிடமும் வச்சிரமும் பிறவுமாம் - கொடிய எலாம் ஒன்றாகும் எனக் குடரின் அகங்குடையப் - படருழந்து

நடுங்கி...விழுந்தார் - 1320. என்பனவற்றால் இந்த நோயின் கொடுமையை அறியலாம். இதனானே இது முதற்கண் கூறப் பட்டதென்க.

அச்சு - ஆதாரம். செந்நாப் - போதார் புனற்கூடற்கச்சு.
—திருவள்ளுவமாலை 21

ஆற்றல் - வேந்தடர்த்த அச்சு. —சீவக. 2777.

பிச்சு = பித்து — பித்தம் - பைத்தியம். பிச்செமை ஏற்றிய பெரியோன் போற்றி. — திருவாசகம். 3:107.

பித்தநீரின் மிகுதியால் உண்டாகும் பிணியாதலின் இஃது இப்பெயர் பெற்றது. இஃது உன்மாதம் என்றுஞ் சொல்லப்படும். பித்து - பைத்தியம். சன்னியின் குற்றத்தால் வரும் நோய். அடிக்கடி எழுந்து ஓடுதல், நிலத்திற் புரளுதல், ஆடுதல், பாடுதல், ஆடிப்பாடிக் கைக்கொட்டுதல், வாய்விட்டலறுதல், உற்று விழித்தல், கொட்டாவி விடுதல், உடையைக் கிழித்தல் முதலியன இதன் குறிகளாகும். இதன் வகை - 40. 80-என்றலும் உண்டு. ஈண்டுக் கூறப்பட்ட சூலை, பித்து ஆகிய இவற்றின் விரிவை வைத்திய சாரசங்கிரகம் — பக். 207. ஆத்மரட்சாமிர்தம் — பக். 163; 243; 335. மாதவநிதாநம் - பக். 67; 86 முதலியவற்றுட் காண்க. அச்சா = என்பது வியப்பிடைச் சொல்-அதிசயமொழி.

ஆர் பெறுவார் அச்சோவே. — திருவாசகம் 648-656.
அச்சோ ஒருவர் அழகியவா.
—திவ்யப் பிரபந்தம். 1758-1766.

அடியனேற்கு இவர்தாம் இங்கே அகப்பட்டார் அச்சோ என்று. — பெரிய. 755

1. சூலை நோய் போக. 32—61—54 — கட்சபுடம்

2. பித்தம், பைத்தியம் போக — 24—77—68.

இலக்க வேறுபாடு

1. சூலை போக — சூலம் போக — மூலம் போக. சிரசில்: 32—61—54 = 147. 36—75—52 = 163. 32. 147. 163. 289. சூலரோக நிவர்த்தி.

2. பித்தம் போக — பயித்தியம் போக — பித்துபோக — பித்த பைத்தியம் போக — சயித்தியம் போக — வலிப்பு போக — பைத்தியந் தீர — பைத்திய நிவாரணம்:

24—77—68 = 169. 22—77—86 = 185. 55. 129. 169. 185. 191. 364.

3. வசூரி. 4. உளைப்பு ஆகியவற்றின் உச்சாடனம்

147. சொன்ன வசூரிபோந் தோன்றுமுப் பத்தாறும்
அன்ன வெழுபத்தஞ் சன்பத் திரண்டுமாம்
உன்னும் உளைப்புப்போம் ஒரைம்பத் தொன்றுடன்
முன்னன்பத் தாறும் முதன்பத் தாறே.

பாடபேதம்

1. சொன்னவச் சூரை - சொன்னது விச்சூரை - சொன்ன விச்சூரை - சொன்ன வச்சுரம் - சொன்னவை சூரிபோந்- போந்தோன்ற - பொருதொன்று - பொருதோன்று - சொன்னது விச்சூரை தோன்றுமுப் - சொன்ன வச்சுரம் போகத் தோன்றுமுப்.

2. மன்னெழு பத்தஞ்சு மன்பத் - மன்னையெழுபத்தைஞ் சைம்பத் - வெழுபத்தைந்து மைம்பத்சைம்பத்.

3. உன்னு மிளைப்புப்போம்-மிளைப்பு போம்-முளைப்புப் போம். ஓரன்பத் - ஒரையத்தோன்றுமுடன்.

4. முன்னம்பத். தாறுடன் - தாறு முதல் முப்பத்தாறுமே.

குறிப்புரை

இம்மந்திரம்; வசூரி, உளைப்பு ஆகிய நோய்களின் போக்கு வினைக்குரிய இலக்கம் உணர்த்துகின்றது,

வசூரி = வைசூரி - அம்மை - பெரியம்மை. இதன் வகை - 8-9-16 என்றும், மசூரி, விஸ்போடம் என்றுஞ் சொல்லப்படும். — சீவரட் சாமிர்தம். பக். 192 - 95. ஆத்மரட்சாமிர்தம். பக். 130 (வைத்தியசாரசங்கிரகம்) பைஷஜ கல்பம். பக். 289. மாதவ நிதானம் பக். 157-161 பார்க்க. பின்னர் வசூரி குரு முச்சில் (159) என்று வருதலினாலே ஈண்டு வசூரி என்றது பெரியம்மை எனப்படும் விஸ்போடகரோகத்தை என்க.

உளைப்பு = உளைவு - வயிற்றுளைவு - குடைச்சல் நோவு. நாக்குளெழு மருப்பம் உளைப்புழலை - தைலவருக்கச் சுருக்கம் 140. உளைமாந்த ரோகத்தின் வகை - 4. சீவரட்சாமிர்தம் பக். - 478. ஆத்மரட்சாமிர்தம். பக். 289. பார்க்க. அன்ன - அத்தகைய. முன்னுதல் - உன்னுதல் - எண்ணுதல்.

3. வசூரி போகும்:— 36-75-52. — கட்சபுடம்

4. உளைப்பு போகும்:— 51-56-36.

இலக்க வேறுபாடு

3. வசூரி நிவாரணம் - சூரிபோம் - குலைநோய் போக - குலைபோம் - சூலைபோம்-சூலை வியாதி போக - சுரைவியாதி போக - சாறு விறு போக - யோனி லிங்க நாற்றம் சுரவியாதி போக - யோனி லிங்க நாத சுர வியாதி போக:— 36-75-52 = 163. 19, 147, 177.

4. உளைப்பு போம் - உளைப்பு போக - உளைப்பு வலி - இளைப்பு போக - இரைப்பு போம்.

நாளிவிருண நிவர்த்தி — கட்சபுடம்.

151-56-36 = 243. 57-56-36 = 149. 143. 149.

5. கழலை 6. விப்புருதி ஆகியவற்றின் போக்குவினை

148, ஆறெட்டுத் தொண்ணூ றமர்ந்தமுப் பத்திரண்
டாறிக் கழலை அடைய வுடைந்துபோம்
ஆறா தறுபத்தே ழைம்பத்தா றையெட்டும்
வீறா வகுக்கில் விப்புருதி தீருமே.

பாட பேதம்

1. ஆறெட்டுந் – தொண்ணூறு மந்தமுப் - தொண்ணூறு முப்பத்திரண்டுமாம் – பத்திரண்டுமாம்.
2. ஆறிக் அடைக்க வுடைத்துப் போம்.
3. ஆறாதது பத்தேழன்பத்தா – ஆறெத்தறுபத்தே.
4. வீற – வீர – வீறு – வீறிக் குவித்திடில். விற்புத்தி – விற்புருதி. வகுத்திடில். தீரும்.

குறிப்புரை

இம்மந்திரம்; கழலை விப்புருதி ஆகியவற்றின் போக்கு வினைகளுக்கு உரிய இலக்கம் உணர்த்துகின்றது.

கழலை = கழலைக் கட்டி – கழுத்து முதலியவற்றில் உள்ள ஊன் முடிச்சு (மாமிசக் கிரந்தி) பெருத்துத் தோன்றும் நோய் – விரணக்கட்டி. கழலை கரப்பான் - ஒருவகைச் சொறி நோய். விருப்புருதி = வித்ரதி – புண். விப்புருதிக் கட்டி – குழந்தை கட்கு வரும் ஒருவகைக் கட்டி. உதர ரோகத்தைச் சார்ந்தது. (வைத்திய சாரசங்கிரகம் பக் - 348). சீழ்க்கட்டி. தாதுக்களை விரைவிற் கெடுத்தலால் இப்பெயர் பெற்றது. (சரகர்) வித்ரதி = விப்ருதி – கட்டி – சீழ்க்கட்டி - வீக்கம் - பரு - சிலந்தி. (பைஷஜ கல்பம். பக் – 304) வித்ரதிக் கட்டி – குத்தலை விளைவித்தலால் வந்த பெயர். வித்திரம் – குத்தல். (சீவ ராட்சாமிதம் பக் - 146) கழலைக் கட்டி நிவாரணிகள்: உகாயிலை, ஆதாளைவித்து, விப்புருதி நிவாரணிகள்: கருஞ் செம்பையிலை, சவ்வீரம், விராலி. (வை - சா - சங். பக். 515) விப்புருதி நாயகம் - அமுக்கிரா. (மலையகராதி)

5. கழலை போக:— 48 - 90 - 32 (?)

— கட்சபுடம்

6. விப்புருதி தீர:— 67 - 56 - 40

இலக்க வேறுபாடு

5. கழலை போக - கழலை உடைந்து போம் - கனலை போக - கழலை வாதம் போம் - கழலை உடையும் - கண்ட மாலை - வன்மீகமாகிய கண்டமாலை - பிளவை போம் - வன் மீக (புற்று) ரோக நிவர்த்தி - சிலந்தி உடைந்து போக - கனலை உடைந்து போம் - கழலை செவிநோய் தீரும்:—

48 - 90 - 32 = 170. 26. 170. 197. 212. (48 - 97 - 32 = 177. ஊகம்).

6. விப்புருதி போம் - வித்திருதி போம் - விப்பிருத் வியாதி போகும்:— 67 - 56 - 40 = 163. 56 - 64 - 40 = 160. 70 - 56 - 40 = 166. 160. 162. 166. 218.

மேற்கோள்

உருமிடி நாகம் உரோணி கழலை

— திருமந்திரம் 263.

வீங்குங் கழலை சிரங்கொடு குட்டமும் — 655

கீழ்வயிற்றுக் கழலை — ஈடு 1 - 1 - 3.

கழலை கரப்பான் போலே எங்கும் ஒக்கச் சஞ்சரிக்கும் நோய். — திவ்யப்ரபந்தம். 2074 வியாக்

சீவார் கழலை இரண்டையுஞ் செப்பென்று

— திருவேங்கடத். 65

கீழ் வயிற்றுக் கழலை - கீழ் வயிற்றின் கண் எழுந்த கழலையைப் போல்வான் - தொல், 947. நச்; நன் - 368 மயிலை. சங்கர.

களமாலை விப்புருதி வரள் சூலை. — திருப்புகழ் 267.
என்பனவற்றால் இந்நோயின் கொடுமையை அறிக.

7. வாதம். 8. குரல்வளை நோய் ஆகியவற்றின் போக்குவினை

149. திருமன் பத்தாறுந் திகழுநூற் றெட்டும்
ஏருந்தொண் ணூற்றேழும் இட்டக்கால்வாதம்போம்
போருந்தொண் ணூற்றஞ்சும் பெற்றமுப்பத்தெட்டுங்
கூரெண்பத் தாறுங் கொள்குரல் ஆகாதே.

பாட பேதம்

1. திருமைம் - திருமவிதரைம்பத்தாறு. திகழநூற் - திகழன்பத் தெட்டும்.
2. ஏறுந்தொண் - ஏறாந்தொண். ணூறாறேழுமிட்ட மேல் - நூற்றேழு மிட்டமேல் - ணூற்றேழும் விட்ட வியல் வாதம் - இட்டக்கால் இயல் வாதம்.
3. பேறாந்தொண். ணூற்றைஞ்சும். பேராமுப்.
4. கூருமெண் - கூறுமெண் - கூறெண்பத். கொண்ட குரல் ஆகாதே - கொண்டக்காலாகாதே - குரலாக்காதே - குரலாகா.

குறிப்புரை

இம்மந்திரம்; வாதநோய் குரல்வளை நோய் ஆகியவற்றின் போக்கு வினைகட்குரிய இலக்கங்களை உணர்த்துகின்றது.

வாதம்-வாதரோகம். வாதம்-வாயு. இந்த நோயின் வகை 80 - என்றும், சித்தர் மதாந்தரப்படி 84 - என்றும் சொல்லப் பட்டுள்ளன. குரல் = குரல்வளைத்தாபனம் - மிடற்றில் தோன்றும் ஒருவகை நோய். (ஆங்கில வைத்திய சங்கிரகம். 231) தொண்டைக் கம்மல் முதலியன. இதனை ஆயுள்வேத நூலார் தொனி விச்சின்ன வாதரோகம் என்றும், தொனிகத்

கதவாதம் என்றும் உரைப்பர். (தொனி = ஒலி-மிடற்றோசை. விச்சின்னம் – துண்டித்தல். கத்கதம் – அடக்குதல்) இது வாத ரோகத்தின் கூறுபாடுகளுள் ஒன்றாகும்.

7. வாதநோய் போக:— 56-108–97
— கட்சபுடம்

8. குரல்வளை நோய் போக:— 95–38–86.

இலக்க வேறுபாடு

7. வாதம் போம் - வாதம் போக – விதிர்ப்பு நடுக்கம் போக - சர்மக் கிரந்தி போம் - கிரந்தி போம்:—

56 – 108 – 97 = 261. 56 – 108 – 87 = 251. 74. 134. 196. 251. 261. 269. 299.

கிரந்தி நிவாரணம்:— 56-108–97. — கட்சபுடம்.

8. குரல்போக - குரலாகாது - குரலாகாமல் - குரல் கம்மல் தீர – குரல் கம்மல் போக – குரல்லெரி போம் – குரல் நெரிவு போகும் - குரல் நெருக்கந் தீரும் – குரல் குறையும்:—

95 – 38 – 86 = 219. 95 – 38 – 68 = 201. 57 – 42 – 78 = 177. 107. 117. 177. 313.

வாதரோக நிவர்த்தி:— 38–95–86. — கட்சபுடம்.

மேற்கோள்

வீங்கிய வாதமும்...மருவிவே — திருமந்திரம் 655.
குரல் கம்மலின் ரோக வகை 6 :
— சிவரட்சாமிர்தம் பக்கம் 88

வாத ரோகத்தின் வகை - 80. சித்தர் மாதாந் தரப்படி — 84 – 209 – 238

தொனி – துவனி - விச்சின்ன வாதரோகம் - தொனி கத்கத வாதம் என்பன 80 – வகைப்பட்ட வாத ரோகங்களின் பிரிவைச் சேர்ந்தவை: — 230. 237.

பைஷஜ கல்பம் —பக்கம் 248 பார்க்க.

9. குன்மம், 10. பித்தம் ஆகியவற்றின் போக்கு வினை

150. ஆகாகுன் மம்போம் அமைந்தவைம் பத்தேழும்
ஏகாத நாற்பத் திரண்டெழுபத் தெட்டும்
போகாத பித்தம் பொடிபடவைம் பத்தேழ்
தோகாய் நூற்றெட்டுந் தொண்ணூறுந்தொடரவே

பாடபேதம்

1. ஆகாத குன்மம் - ஆகாமற் போவாற் கமைந்த-ஆகாமற் போவார்க்கமைந்த - ஆகாகம் மற்போவாற் கமைந்த ஆகாமற் போவதற்கமைந்த - ஆகாமற் போமவற் குணமைம் பத்தேழும்-ஆகாமற் போற்கன் பத்தேழாகும் - ஆகாகம் மற்போம்.

2. ஏகாநாற் பத்திரண்டுடெழுபத் தெட்டுக்கும்.

3. போகாத பித்தம் போம் பாடெண்பத்தேழுபொடி படைம் பத்தேழுந் - போடெண்பத் தேழு-போதெண் பத்தேழு.

4. தோகாய. தொண்ணூற்றாறுந். தொடரில் தொடரே துடரிலே.

குறிப்புரை

இம்மந்திரம்; குன்மம், பித்தம் ஆகிய பிணிகளின் போக்கு வினைகட்குரிய இலக்கங்களை உணர்த்துகின்றது.

குன்மம்=குல்மரோகம் — குன்மக் கட்டி — பைஷஜ கல்பம். பக்-233. குன்மரோகத்தின் வகை: 44. விரிவு-8 சிவரட் சாமிர்தம். பக் 135 - 160. பித்தம் - பித்த ரோகம். இதன் வகை. 40-சிவரட்சாமிர்தம். பக் 243. பார்க்க.

9. குன்மரோகம் போக :- 57 – 42 – 78

—கட்புடம்

10. பித்தரோகம் போக :—58 - 108 90

இலக்க வேறுபாடு

9. குன்மம் போக - குன்மம்போம் - சூலை வியாதி போக -குரல் நெரிவு போக - ஆகாமற் போனவர்களாவார்கள்- ஆகார வியாதிபோக - ஆகாவியாதிபோக–குல்மரோக நிவர்த்தி —57–42–78 = 177. 57-80 – 42 = 179. 107. 117. 219.

10. பித்தம் போக - போகாத பித்தம் போக – தொடர் பித்தரோகம் போம் - பித்தரோகத்திலிருந்து விடு படுவான்: | 57 - 108 - 90 = 255. 90-108 - 57 = 255. 87-108-90 = 285. 17. 124. 125. 169. 199. 205. 217. 251. 255. 285. 291.

11. தொடர்பித்தம் 12. பித்தபாண்டு ஆகியவற்றின் போக்குவினை.

151. தொடர்பித்த ரோகம்போந் தொண்ணூற்று மூன்றும்
படரைம்பத் தாறும் பற்றுநூற் றிரண்டும்
இடர்பட் டெழுபத்தொன் றெய்துநூற் றாறும்
பிடர்பட்ட நாலாறும் பித்தபாண் டுவுக்கே.

பாட பேதம்

1. துடர்பித்த. தொண்ணூற்றின் மூன்றும் — தொண்ணூறு மூன்றும்.
2. படரன்பத் - படருமைம் பத்தாறும். பற்றநூற்பார் நூற். றிரண்டே.
3. யிடர்பட் — மிடர்பட். நூறாறும்.
4. பிடைபட்ட - மிடைபட்டு. நாலாறு. பித்தபாண்டுக்கே- பித்த பாண்டினுக்கே - பித்தமாட்டுக்கே.

குறிப்புரை

இம்மந்திரம்; தொடர்பித்த ரோகம், பித்தபாண்டுரோகம் ஆகியவற்றின் உச்சாடன இலக்கம் உணர்த்துகின்றது.

தொடர்பித்தம் — பித்தத்துடன் வாதமும், சிலேத்தும முந் தொடர்வதால் தோன்றும் நோய். இதனை ஆயுள்வேத நூலார் பித்தத் தொந்தம் என்பர் தொந்தம் = துவந்தம் — தொடர்பு. படர் = படர்தல் - நினைத்தல். இடர் - துன்பம். பிடர் = பிடார் - பெருமை. ஈசுவரத்வப் பிடரால் அன்றியே -ஈசுவரத்துவப் பிடாராலே —ஈடு. 7, 4, 4, 3, 7, 3. பிடகர் - மருத்துவர்- சேதுபுராணம்.

பித்த பாண்டு - பித்த பாண்டு ரோகம். இது பாண்டு ரோகத்தின் 5 - வகைகளில்,2—ஆவதாகும். பாண்டு - வெண்மை. குறுதியைக் குறைவித்தலால் உடல் வெளுத்திடுதல் - சீவரட்சாமிர்தம் – 178. ஆத்மரட்சாமிர்தம் - 274. மாதவநிதானம் – 40 ஆம் பக்கங்களிற் காண்க.

11. தொடர்பித்த ரோகம் போக : 93 - 56 - 102 — கட்சபுடம்.

12. பித்தபாண்டு ரோகம் போக 71 — 106 — 24 —

இலக்க வேறுபாடு

11. பித்த ரோகம் — தொடர்பித்த ரோகம் — தொடர் பித்தம் — தொடர்ந்த பித்தம் — இரத்தபித்தம் — தா(ரா)ளு பித்தம் போக:—

93 - 56 - 102=251. 92 - 56 - 102=250. 87 - 108 - 90 = 285. 107. 117. 159. 177. 205. 250. 251. 285.

12. பித்த பாண்டுக்கு — பித்த பாண்டு, சோகைபோம் - திர:—

71 - 106 - 24 = 201. 77-106 - 24 = 207. 84 - 106 - 44 = 234. 71 - 106 - 64 = 241. 93 - 56 - 102 (சோகை போம்) = 251. 159. 201. 207. 234. 241. 251. 291.

பித்தரோகமானது 40 - வகைப்படும். அவற்றுள், முதலாவதாக வைத்து எண்ணப்படுவது ரத்த பித்த ரோகம் என்பதாகும்.

ஈண்டுக் கூறப்பட்ட தொடர் பித்தம் என்பது தாராபித்தம் என்றும் ரத்த பித்தம் என்றும் கட்சபுடத்திற் காணப்படுகின்றது.
— சீவரட்சாமிர்தம் பக்கம் 243 பார்க்க.

13. உக்கிரபித்தம்; 14 ஈளை ஆகியவற்றின் உச்சாடனம்

152. உக்கரித்த பித்தம் ஒருந்தொண் ணூற்றாறும்
மிக்கவிரு பத்தஞ்சும் மேலைம்பத் தாறுந் தொக்க
தோரீளைபோந் தொண்ணூறுந் தொண்ணூற்றேழ்
ஒக்கவொரு நூற்றிரண் டோடே இடுவதே

பாட பேதம்

1. உக்கிரபித்தம்-ஒதுந்தொண் - ஓர்தொண்,
2. மிக்கிரு. பத்தஞ்சு. மேலுமைம்-மேவுமைம்பத்தா தாறும்.
3. தொக்கவோரீளை.
4. ஒக்கநூற்-ஒக்கவோர் - ஒக்கவே. இருபதே.

குறிப்புரை

இம்மந்திரம்; உக்கிரபித்தம், ஈளை ஆகியவற்றின் போக்கு வினைகட்குரிய இலக்கங்களை உணர்த்துகின்றது.

உக்கரித்த பித்தம் — உக்கிரபித்த ரோகம். உக்ரம்= கடுமை - கொடுமை - கோபம். உக்கிரமில்லாமையும் உணர்த் தவல்லீர்களே - தேவாரம் 7599. உக்கரித்தல்-வாந்தி செய்தல். இந்த நோய்; பித்த கோபம் — பித்த மயக்கம் — பித்தவெறி— பித்த ரோசகம்-பித்த வாந்தி — பித்த அரோசகம் - பித்தஜா ரோசகம் - பித்தஜசர்தி - என்றுஞ் சொல்லப்படும். ஈளை= இருமல் - சிலேஷ்மம் - காசரோகம் கபம். இவற்றைப்பற்றிய விளக்கங்களை சீவரட்சாமிர்தம்: 76, 90,91. ஆத்மரட்சாமிர்தம் —280. வைத்திய சார சங்கிரகம் —275. பைஷஜ கல்பம் 55-57 180-224 ஆம் பக்கங்களிற் காண்க. தொகுதல்-கூடுதல். ஒக்க || பொருந்த-சமமாயிருக்க.

13. உக்ரபித்தம் போக :— 96 - 25 - 56.

14. ஈளை போக :— 90 – 97 – 102 — சட்சபுடம்.

இலக்க வேறுபாடு

13. உக்கிரபித்தம் - உக்ரபித்த வெறி–போகாத பித்தம்– ரத்த பித்தம்-உடல் கலந்த பித்தம் - வாந்தி பித்தம் - பித்த வாந்தி விடுபடும்-போகும்-போக-தீர. 96-25–55=177. 96–35-56 =187. 107. 117. 129. 177. 187.

கட்சபுடம்: 93 - 56 - 102 (=251) ஏதது ரத்தம் பித்த நிவர்த்தி: 96-26-25 (=147); 96-26-15 (=137) ஏததுசர்த்தி பித்த ஹரம் || — கட்சபுடம்.

14. ஈளை போக - ஈளை போம் – ஈளையிருமல் ஈளை காசம் - க்ஷயரோகம் - காசம்போக-போகும்–தீரும் 90-97-102= 289. 28 102. 145. 184. 289. 295.

கட்சபுடம்: காசாதி ரோக ஹரம் — 90-97-102

15. கயம், 16. மேகம் ஆகியவற்றின் உச்சாடனம்.

153. இடுவது முப்பத்தஞ் சேழாறெண் ணான்குங்
கடிய கயம்போங் கருநீர் அழிவும்
விடுமேதொண்ணூற்றாறும் வேண்டெண்பத் தாறுங்
கடவாத நூற்றஞ்சுங் கல்லெரிப்புச் செப்பே.

பாடபேதம்

1. இருபது. சேழாரெண்.

2. கபம் போங் - அயம் போகுங் – ஐயம் போங் – க்ஷயம் போகுங் - கடிய கடிகை போங்-கடுங் கடிகை போகுங் (கடுங்கயம்). கருது நீர் அழிவும் - கருதுநீரிழிவும்- கருநீரிழிவும் - கருது நீரியும்.

3. வேண்டுமெண் பத்தாறுங்.

4. கடியதோர் — கடிவதோர் — கடியதொரு — கடிய நூற்றைஞ்சுங். கல்லெரிப்புச் செப்புவதே — காணாது செப்பவே.

குறிப்புரை

இம் மந்திரம்; கயம், மேகம் ஆகியவற்றின் உச்சாடன இலக்கமும், கல்லெரிப்பு நோயின் போக்குவினைக்குத் தோற்றுவாயும் உணர்த்துகின்றது. கடி = மிகுதி — அச்சம். கயம் = க்ஷயம் — காசரோகம். கயக்கொடும் பிணியினால் — உபதேச காண்டம். சிவத்து. 87. கருநீர் = மேகம் — கரு மேகம். அழிவு — அழிதல். கருநீரிழிவின் வகை — 21. கல்லெரிப்பு = கல்லெரிப்பு மேகம். கல்லெரிப்பு முதல் இடர்ப் பிணியால் - திருக்காளத்திப். 17 : 25. கல்லடைப்பு ரோகம் என்றுஞ் சொல்லப்படும். சீவரட் — 78. 84. 126-128. 132. 142. ஆத்மரட் — 284, 302. பைஷஜ — 185. 233, 293, 309, 314, 492. மாதவ — 44, 45, 49, 50 வைத்திய— 284 ஆம் பக்கங்களில் இந் நோய்களின் விளக்கங்களைக் காண்க.

15. கயநோய் போக : 35 - 42 - 32 — கட்சபுடம்.

16. கருமேகம் போக : 96 - 86 - 105

இலக்க வேறுபாடு

15. கயம் — கபம் — க்ஷயம் — சிலேஷ்மம் — கர்மம் ஷ்ய ரோகம் - கடிவிஷம் போக :—

35-42-32 = 109. 35 82 32 = 149 35. 109. 149.

கடிவிஷம் போம் - நீரிழிவுபோம் - 35.

— கருநிரத்த - 287.

16. மேகம் — கருமேகம் போக — கருநீரிழிவு — மேக நிவாரணம் — கரு நிறுத்த — நீரிழிவு — நினைவு — நினைவு நீரிழிவு போகும்படிக்கு :—

96-86-105 = 287. 105-96-86 = 287. 35. 287.

பாட பேதம்

கடிகை — அரையாப்பு — மூலிகை அகராதி. கடி = அரை-இடுப்பு.

கல்லெரிப்பு - கல்லெரிப்பு மேகம். இது கல்லடைப்பு - கல்லுப் பிரமேகம் — மூத்திரகிருச்சரம் — அஸ்மரிரோகம் — சர்க்கராஸ்மரி என்றுஞ் சொல்லப்படும். சர்க்கரா — சுக்காங்கல். விளக்கம் சீவரட் — 126 — 128 — 422. ஆத்மரட் — 302. பைஷஜ — 185 — ஆம். பக்கங்களிற் காண்க. இந்த நோய்களின் போக்குவினைக்குரிய இலக்கம் வருஞ் செய்யுளிற் சொல்லப்படும்.

17. கல்லெரிப்பு. 18. உடம்பெரிப்பு ஆகியவற்றின் உச்சாடனம்

154. செப்பியநூற் றொன்றுஞ் சேர்ந்தமுப் பத்தாறும்
முப்பத்தெட் டாகும் மொழியு முடம்பெரிப்புத்
தப்பா நூற்றிருபத் தொன்றுந் தலையாக
ஒப்பாக நூறுமோர் நாற்பத்தெட் டொன்றியதே.

பாட பேதம்

1. செப்புநூற். நூற்றஞ்சுஞ் சேர்முப்பத்.
2. மூப்பத்தெட் டாகும் — முப்பத்தெட். முடம்பெரிப்புந்.
3. தப்பாதுநூற் — தப்பாநூற் — தப்பநூற். நூற்றிரு பதினொன்றுந் — நூற்றிருபத்தொன்று. தலையாகும்-தலையாம்.
4. ஒப்பாகும். தெட்டொன்றுமே.

குறிப்புரை

இம்மந்திரம்; மேல் தோற்றுவாய் செய்துகொண்ட வாறே கல்லெரிப்பின் போக்கிற்கும், உடம்பெரிப்பின் போக்கிற்கும் உரிய இலக்கங்களை உணர்த்துகின்றது.

செப்புதல் = மொழிதல் - சொல்லுதல். உடம்பெரிப்பு= தாபச்சுரம் -(சிவரட் 65) காங்கை. (பைஷஜ- 174, 206) தப்பு =குற்றம் - வழு - தவறு. தப்பா - தவறாத. தலை = தலைமை-முதல். ஒப்பு=தகுதி -சமம். ஒன்றுதல் - பொருந்துதல்.

17. கல்லெரிப்புதீர:—101—36—38. — கட்சபுடம்

18. உடம்பெரிப்புதீர;—121—100—48 —

இலக்க வேறுபாடு

17. கல்லெரிப்புப்போம்-கல்லடைப்பு தீரும் – நீர்த் தாரையில் நீர் ஒழிஞ்சு (போனது) போக - நீர்த்தாரையில் எதிர் (ரி)ப்பு-கிருச்சிரமென்னும் மூத்திரமது மேகம் போம்-கல்லுப் பிரமேகம்-கல்லடைப்பு ரோகந்திர - அஸ்மரிரோகம் போக-சர்க்கராஸ் மரிதிர-கருநிறுத்த-நினைவுபோக-மூத்திர கிருச்சரம் போக:—101-36-38-=175. 96-80-105=281. 35. 175. 179-217. 281.287.

18. உடம்பெரிப்பு போக - உடலெரிவு - தேகதாபம் உடம்பு எரிச்சல்-உடம்பு எரிப்பு-உடம்பு எரிவு-உடம் பெரிப்பு தாபச்சுரம் - காங்கை - கால் கை யெரிவு - உடம் பெரிவாகிய தேகபதாபம்போம்: 121-100-48 = 269. 100-48-121=269. 100-48-12=160. 121-100-41=262. 100-48-122=270. 160. 175. 262. 269. 270.

19. வெப்பு. 20. நான்மாறல் சுரம் ஆகியவற்றின் உச்சாடனம்

155. ஒன்றிய நூற்றுநா லோடேயெண் பத்தாறும்.
வென்ற பதினேழும் வெப்புப்போம் நான்மாறல்
என்ற வெழுபத்தஞ் செண்பத்தி னாலோடு
நின்றநூற் றாறும் நிற்கும் மிலக்கமே.

பாட பேதம்

1. நூற்றுனாலோடேயெண்- நூற்றுநாலோடெண் - நூறு நாலோடெண்.
2. வெதுப்புப்போம் - வெப்புபோம். நான் மாரல்
3. என்றதெழுபத்தஞ் - ஒன்றதெழுபத்தஞ். செண்-பத்து நாலொடு.
4. நிறைந்தநூற்-நிறைந்தநூற்றாறும் நிறைந்த விலக்கமே.

குறிப்புரை

இம்மந்திரம்; வெப்புநோய், நான்மாறல் சுரம் ஆகிய வற்றின் போக்குவினைகட்குரிய இலக்கங்களை உணர்த்து கின்றது.

வெப்பு - சுரம் - காய்ச்சல்-தீப்பிணி. தேற்றித் தென்னன் உடல் உற்ற தீப்பிணியாயின தீர - தேவராம். 2188. வெப் பொடு குளிரும் வாதம் மிகையான பித்தும் வினையானவந்து நலியா-2394. உருத்தெழுந்த வெப்பு உயிரையும் உருக்குவதாக- பெரிய. 2616. நான் மாறல்=நான்காம் நாள் முறைக்காய்ச்சல் நாலாமுறைக்காய்ச்சல் என்று சொல்லப்படும். இடையே இரண்டிரண்டு நாட்கள் விட்டு நான்காம் நாளில் மீண்டும் தோன்றும். ஆயுள்வேத நூலார் இதனை விஷமச்சுரம் என்றும், சதுர்த்தகசுரம் என்றுங் கூறுவர். இந்நோய்களின் வகை முதலிய விவரங்களை சீவரட் - சுரரோகப்படலம்: 26 - 55. மாதவ: 6 - 7; 14 - 15. பைஷஜ: 249 - 252 - ஆம் பக்கங்களிற் காண்க. ஒன்றிய - பொருந்திய. என்ற - ஏன்ற: ஏன்றல் = ஏற்றுக் கொள்ளுதல் - இயலுதல். அடியேன் இனிப்பிறவாமல் வந்து ஏன்றுகொள்ளே. — தேவாரம். 5080.

19. வெப்புநோய் தீர — 104-86-17.

20. நான்மாறல் சுரந்தீர — 75-84-106.

— கட்சபுடம்.

இலக்க வேறுபாடு

19. வெப்பு - வெதுப்பு - காய்ச்சல் - சுரம் - காய்ச்சல் வெதுப்பு - வைப்பு - வெதப்பு போக - போகும் சுரநாசம் :— 104 - 86 – 17=207. 104 - 80 – 17=201. 104 - 80 – 67=251. 104 - 86 - 0=190. 135. 190. 201. 207. 211. 251. 319.

20. நாலாமாறல் வெப்புத்திர - நாலாமாறல் திர - நாலாமுறை சுரம் - காய்ச்சல் - முறைக்காய்ச்சல் - நாலா முறைக்காய்ச்சல் - நாலாநாள் முறை சுரம் போகும்:— 75 - 84 - 106=265. 75 - 84 - 105=264. 75 - 84 - 126=285. 263. 264. 265. 274. 285. 295.

21 - குலைப்பு. 22 - செவிநோய் ஆகியவற்றின் உச்சாடனம்

156. இலக்கம் பதினே ழீண்டெழுப தெண்பான்
குலைப்பொழி கூறுஞ் செவிநோய் தவிர
வலக்குநாற் பத்தே ழாறைஞ்சும் பதினாறும்
முலைக்குத்துப் போக விலக்க மொழிவதே

பாட பேதம்

1. விலக்கம். பதினேழு - பதினேழும். வெண்டெழுபத் - வேண்டெழுபத் - வேண்டெழுப - யெண்டெழுப - மெண்டெழுபத். தென்பதாம் - தெண்பதுங் - தொன்பான் - வேண்டெழு(ப)த் தொன்பான்.

2. குலைப்பொழியுங் - குலைப்போரழி - குலைப்பழியக். கூறு - கூறும்.

3. விலைக்குநாற் - விலக்குநாற். பத்தேழு மாறும் - நாற்பத்தேழும் ஆறும் - நாற்பத்தே ழேழும் மாறும் - நாற்பத்தே ழாறும் - நாற்பத்தே ழாறுபதி - நாற்பத் தேழு ம(மா)றைஞ்சும் - நாற்பத்தேழு மாறும், பதினாலும்.

4. முலைக்குத்துபோக. விலக்கம்.

குறிப்புரை

இம்மந்திரம்; குலைப்பு, காது நோய் ஆகியவற்றின் போக்கு வினைகட்குரிய இலக்கங்களையும், முலைக்குத்தின் போக்கிற்குத் தோற்றுவாயையும் உணர்த்துகின்றது.

குலைப்பு = குலைப்பிருமல் - நாய்போற் குலைத்தல் - சுவானக் கிரகதோஷம் (சுவானம் – நாய்) - கக்குவான் - கக்குவாய் – கொக்குவாயிருமல் - முப்பிறைச் சுமை - கக்கிருமல் ரோகம் எனப் பலவாறாகச் சொல்லப்படும்.

செவிநோய் = காதுவலி -- கர்ணரோகம் (கர்ணம் – காது) – செவிபடுவாதம் - கர்ணகுலைரோகம் - செவிடு முதலியன. சீவரட்: 294. 298. 359. பைஷஜ: 208. 220. 232. வைத்திய: 126. மாதவ: 177. 179-ஆம் பக்கங்களிற் காண்க. செவி நோயின் உச்சாடனத்துக்குரிய இலக்கம் கிடைத்துள்ள கட்சபுடச் சுவடிகளிற் காணப்படவில்லை.

21 குலைப்பு போக:— 17—70—80.
— கட்சபுடம்

22. செவி நோய் போக:— 47—30—36.

இலக்க வேறுபாடு

21. குலைப்பு - குளிர் - குளிரும் குலைப்பும் - நாய்போற் குலைப்பு போக - இது கக்குவான் போக - குளிர் சுரம்போக – குலைப்பு அல்லது கக்குவான் போக - சுவாசகாசம் போம்:

17 - 70 - 80 = 167. 70 - 17 - 80 = 167.
17 - 79 - 0 = - 96. 17 - 78 - 86 = 181.
72 - 17 - 80 = 169. 70. 96. 167. 169. 181. 219.

கட்சபுடம் சுவாசகாச நிவர்த்திகரம்:— 70—17—80.

22. செவி நோய் போம் - கழலை செவி நோய் தீரும் - தலையிடி செவி நோய் தீரும்!—

47 - 30 - 16 = 93. 47 - 6 - 16 = 69.

17 - 70 - 80 = 161. 17 - 79 - 0 = 96.
96 - 47 - 66 = 209. 47 - 30 - 97 = 174.

கழலை செவி நோய் தீரும் —

70 - 90 - 49 = 209. 17 - 79 - 96 = 192.
17 - 79 - 96 = 192. 96 - 47 - 66 = 209.

26. 47. 66. 69. 93. 96. 161. 167. 174. 192. 209. 319.

இப்பிரயோகத்திற்குரிய இலக்கங்கள் இவ்வாறாகச் சுவடிகளிற் பலபடக் காணப்படுதலினாலும், எனக்குக் கிடைத்துள்ள கட்சபுட தந்திரச் சுவடிகளில் இப்பிரயோகம் காணப்படாததினாலும் இதுபற்றி மேலும் ஆராயத்தக்கதாகும்.

முலைக்குத்தின் தீர்விற்கு உரிய இலக்கம் வருஞ் செய்யுளிற் கூறப்படும்.

23-முலைக்குத்து 24-தொழுநோய். 25-கண்ணோய் ஆகியவற்றின் உச்சாடனம்.

157. மொழியும் பதினாறும் முன்னூற் றிரண்டும்
ஒழியும் பதினெட்டும் ஓர் தொழு நோய்போம்
எழுபதும் ஆறாறும் எண்பத்து மூன்றும்
எழுபதுந் தொண்ணூறும் ஏழேழுங் கண்ணோய்க்கே

பாட பேதம்

1. முந்நூற் - முன்னூரீ(றீ) ரிரண்டு - முன்னும் நூற்.
2. ஏற்றதொழு – நோய்போகும் - நோய்தீரும்.
3. எண்பதின் – எண்பத்தின். மூன்றும்.
4. எழுபதின் றொண். ஏழேழ்கண்.

குறிப்புரை

இம்மந்திரம்; முலைக்குத்து, தொழுநோய். கண்ணோய் ஆகியவற்றின் போக்கு வினைகட்குரிய இலக்கங்களை உணர்த்துகின்றது.

முலைக்குத்து: இது முலை நோவு - ஸ்தனசூலை - ஸ்தன வித்ரதி - ஸ்தன வித்ரதிக்கட்டி - ஸ்தனருக்கு வாதம் - மார்ச் சிலந்தி என்றுஞ் சொல்லப்படும். இதன் வகை 5.

—மாதவநிதானம் - 208

தொழுநோய்: குஷ்டம் - குறைநோய் - பெருநோய் - கர்ம ரோகம் என்றுங் கூறப்படும். வீங்குங் கழலை சிரங்கொடு குட்டமும்.

—திருமந். 655.

அங்கமெலாங் குறைந்து அழுகு தொழுநோயராய்.

— தேவாரம் 7182

பெருநோய்கள் மிக நலிய

— 7178

அக்கேபோல் அங்கை அழிய விரல் அழுகித் - தூக்கத் தொழுநோய் எழுபவே.

— நாலடி 123.

என்பன காண்க.

கண்ணோய்: கண் வியாதி - நேத்திர ரோகம். வீங்கு வியாதிகள் கண்ணில் மருவியே. கண்ணில் வியாதி யுரோகம்... இல்லையே.

— திருமந். 655-56

என்பனவும் நோக்குக. இந்த நோய்களின் விளக்கங்களை சீவரட் - 150. 197. 206. 220. 223. 228. 231. 247.

பைஷஜ: 234, 274, 277, 308, 309.

மாதவ: 144 - 155; 184 - 199, 208-ஆம் பக்கங்களிற் காண்க.

23. முலைக்குத்துப் போக:— 16 - 102 - 18. (?)

24. தொழுநோய் போக:— 70 - 36 - 83—கட்சபுடம்

25. கண்ணோய் போக:— 70 - 90 - 49.

இலக்க வேறுபாடு

23. முலைக்குத்துப் போம் - ஸ்தனத்திலுள்ள காயம் போம்:—

16—102—18=136. 16—32—18=66.

16—30—18=64. 47—36—14=97.

47—17—14=78. 40—47—14=101.

116—30—18=164. 216—30—18—264.

32. 64. 66. 78. 97. 101. 136. 164. 216. 264. 266. 336. 379.

கட்சபுடம்:— 116—30—18(=164). 216—30—18—(=264). ஏதது குசவிருணஹரம் ||

24. தொழுநோய்—கைகால் இற்றுப் போகிற தொழு நோய்—கால் கை இற்றுப் போகிறதுபோல் இருப்பது — தோள் நோய் — கர்ம வியாதி — குஷ்ட ரோகம் — குட்டம் — தோஷம் போம்—போக—தீரும்—தீர.

70—36—83=189. 16—104—18=138.

71—96—83=250. 16—302—18=336.

90. 104. 138. 187. 189. 250. 267. 307. 336.

25. கண்ணோய் போகும் — தீர — தீரும். கண்ணோவு போம். நேத்திர ரோகம் விலகிக் கழுகுக்கண் (போல்) • ஆகும்.

70—90—49=209. 70—36—83=189.

73—90—41=204. 76—83—91=250.

70—90—99=259. 86. 189. 204. 207. 209. 250. 259

23-ஆம் வினையேவலாகிய முலைக்குத்துப் போக என்னும் பிரயோகத்திற்குக் குறிக்கப்பட்டுள்ள 3-இலக்கங்களுள் 18-தவிர ஏனைய 2(16-102-)ம் ஐயப்பாட்டிற்கு இடனாக உள்ளன.

26. பல்லரணை பற்குத்து. 27. கருங் குட்டம் செங்குட்டம் ஆகியவற்றின் உச்சாடனம்

158. நோய்தரு பல்லரணை பற்குத்து நூற்றைஞ்
சாயறி யெண்பத் திரண்டும் பதினெட்டுந்
தோயுமோர் நூற்றிரண்டுந் தொண்ணூற் றொன்பதுங்
காய்கருங் குட்டஞ் செங்குட்டங் காணாதே.

பாட பேதம்

1. நோய் தவிரும் பல்லரணை. நூற்றஞ் – நூற்றஞ்சு – நூற்றைஞ்சும்.
2. பாயறியெண்பத் - பாயறிய வெண்பத்.
3. தோயுமோர். தொண்ணூற்றொன் பானும் – தொண்ணூறு மொன்பதும்.
4. காயங்—காயக்—காயுங்.

குறிப்புரை

இம்மந்திரம்; பல்லரணை பற்குத்து, கருங்குட்டஞ் செங் குட்டம் ஆகியவற்றின் போக்கு வினைகட்குரிய இலக்கங்களை உணர்த்துகின்றது.

பல்லரணை: பல்லின் வேர் இருக்கும் குழியில் சீழ்க் கொள்ளுதல். இதனை மருத்துவ நூலார் தந்த வித்ரதி என்பர். பற்குத்து = பல்வலி—பல் நோவு—தந்த சூலரோகம் - பல்லீற்று நோய்.

கருங் குட்டம்: குட்ட நோயின் வகைகளுள் ஒன்று. கிருஷ்ண குஷ்டரோகம் — கருங்கரப்பான் — கருங்கிரந்தி என்பர். காரக் குறைந்து — கருங் குட்டத்தாலே காலுங் கையுங் குறைந்து — கலித். 65. நச். செங்குட்டம்: பித்த வெண்குஷ்டம் – செங்கரப்பான் — செங்கிரந்தி — அருண குஷ்டம் என்பர். தணிந்திடச் செய்யா திடர்செய்யுஞ் செங்குட்ட ரோகர் — கடம்ப - பு - இலீலா. 124.

கருங்குட்டஞ் செங்குட்டம்: குன்றி மணி போன்று சுற்றி லும் சிவந்தும், நடுவே கருத்தும் இருப்பது. இத்தகைய குட்டத்தைக் காகணம் என்பர். இந்த நோய்களின் இயல்புகளை சீவரட்: 205, 292 – 93; 370 – 74. பைஷஜ: 213, 265. மாதவ. 146, 170 – 72. வைத்திய – 345 – ஆம் பக்கங்களிற் காண்க.

26. பல்லரணை பற்குத்துப் போக: 105—82—18.

27. கருங்குட்டம் செங்குட்டம் போக:— 102—99—(?)

இலக்க வேறுபாடு

26. பல்லரணை – பற்குத்து – பல்வலி – பல்லரணையும் பற்குத்தும் – கன்னச் சிலந்தி – கண்ணோய் தீரும் – போகும் – தீர – போக : 105 – 82 – 18—205. 75—82—18—175. 105 – 82 – 80 267. 101. 175. 187. 203. 205. 426.

கட்சபுடம்: 105 – 82 – 80 (—267) – ஏதது. தந்த ரோக ஹரம் |

27. கருங்குட்டம் – செங்குட்டம் – குட்டம் – வெண் குட்டம் – கருங்குட்டம் செங்குட்டம் போக – போகும்: 102 - 99 – 0 = 201. 90 – 70 – 101—261. 103—90—80—273. 102—60—9—171. 91—70—101—262. 90—80—108 278. 90. 99. 171. 199. 261. 262. 272. 273. 278. 333.

கட்சபுடம்: 90 – 70 – 101 (—261); 90 – 80 — 108 (—278-?)

ஏதது கிருஷ்ணகுஷ்ட நிவாரணம்—குஷ்டாந் ரூபே.

28. வசூரி குருமுச்சில்; 29. ஒற்றைத் தலைவலி ஆகிய வற்றின் உச்சடான இலக்கம்

159. காணா திருபத்தேழ் கண்டெண்ப தெண்ணான்கும்
வாணா ளறுமே வசூரி குருமுச்சில்
நாணா வொருதலைநோய் நாற்பான்முப் புத்தேழ்
பேணாதெண் ணான்கும் பேழ்வயிற்று நோய்க்கே.

பாட பேதம்

1. திருப்பதேழ். கண்டெண்பத்தெண். தெண்ணான்கு.
2. கூணாகவாணா. வைசூரி. குறுமுச்சில் – குருமுச்சி.
3. நோணா வொருத்தலை நோய். நாற்பதுமுப்பத்தேழும்.
4. பெறுவயிற்று - பெருவயிற்று - பெருவயிறு - பேர் வயிற்று. நோயினுக்கே - நோயினியே.

குறிப்புரை

இம்மந்திரம்; வசூரிகுருமுச்சில், ஒருதலை நோய் ஆகிய வற்றின் போக்குவினை ஏவல்கட்குரிய இலக்கங்களையும், வயிற்றுநோயின் போக்கிற்குத் தோற்றுவாயையும் உணர்த்து கின்றது.

10. ஓம் ஹ்ரீம் ஹ்ரீம் ரம்ரம் யுலவேஸ்தல ஜேப்பரளம் ஹ்ரீம் ஐம் க்லீம் வரவரதே ஸ்வாகா ||

11. ஓம் ஹ்ரீம் ஸ்ரீம் ரம் மம் உத்க ஸதகள ஜகதம் ஹ்ரீம் ஐம் க்லீம் வருக வருக ஸ்வாகா ||

12. ஓம் சிறாங் (சிறீங்) ஸ்ரீயு(ம்) ரங் கமந்துலவே யவத்தில செறுள ஐயும் க்லீயும் வாவா சுவா : ||

13. ஓம் ஸ்ரீயும் ஸ்ரீயும் ஙகமாதுல வெயவத்திலதெ(று) ருள ஐயும் க்லீயும் வாவா (வரவர) ஸ்வாஹா ||
மேற்படியார்கள் பேர் எழுதவும்.

14. இதற்கு மந்திரம் ஓம் ஹ்ரீம் த்ரீம் ரம்ரம் யநலஸ் தேல ஜெக இ(ள)ம் ஸ்ரீம் ஐம் க்லீம் வரவரத சுவாஹா ||

அவன் பெயர் புறவட்டத்திலிட்டு, திறுதேன் மெழுக்கிட்டு, ஐங்காயம் பூசி விளக்கிற் காய்ச்ச வருவான்.

15. புருஷாகர்ணம் : 80 - 88 - 51 = 219. இதற்கு மந்திரம் :—

ஓம் ஹ்ரீம் ரம் மம் உலகே ஸதகள ஜகதாம் ஹ்ரீம் ஐம் க்லீம் வருக வருக ஸ்வாஹா ||

16. புருஷன் வர :—215. ஓம் ஹ்ரீம் க்லீம் ரம் ரம் யநலஸ்தலே ஜெக இ(ள)ம் ஸ்ரீம் ஐம் க்லீம் வரவரத சுவாஹா ||

அவன் பெயர் புறவட்டத்திலிட்டு, சிறுதேன் மெழுக்கிட்டு, ஐங்காயம் பூசி விளக்கிற் காய்ச்ச வருவான்.

17. மாதர் வருகைக்குச் சொல்லியபடி, அவன் தந்தை பெயரை வட்டத்தில் வரைந்து தியானிக்கவும்.

குறிப்புரை

இம்மந்திரம்; ஆடவர் அழைப்புவினை யேவலுக்குரிய சிறப்பு மந்திரமாகும். இதன் தந்திரம் வருந் திரு மந்திரத் திற் சொல்லப்படும்.

மேற்கோள்

நராகிருஷ்டி கரம் மந்த்ரம் ப்ரணவஞ்ச ரமாம்வதேது |
தீர்க்கஸ்வர யுதாம் மாயாம் சதுர்த்தஸ்வரமேவச ||
க்யலபே(வே)த்கிலஜே ஹ்ரூம் ஹ்ரீம் ஐம் ஹ்ரீம் வர யுகம் வதேது |
தும் ஸ்வாஹாந்தோ மஹாமந்த்ரோந்ருணாமாகர்ஷ கார (நாம)க : ||
நராகிருஷ்டி (க்யலவேத்கிலஜே) மதுரே திலஜே |
ஹ்ரூம் ஹ்ரீம் ளம் ஹ்ரீம் வதேது (தும் ஸ்வாஹாந்தோ)
வதேந்தஸ்வாஹாந்தோ | ஆகர்ஷகாரக : ||

— கட்சபுடதந்திரம்

4. ஆடவர் அழைப்பு வினையேவலின் தந்திரமும், தியானமும்.

203. மந்திரம் வேறு தியானம்பெண் கருணை
தந்த விவன்பேர் தகப்பன்பேர் வட்டத்து
வந்த புருடா கருணை வகைபோக்கி
வந்த விருகா கருணை வளமே.

பாட பேதம்

1. தியானம் பெண்ணா கருணை - தியானமொன்றா கருணை.
2. தந்தவள் பேர் - தந்தைவி .லன்னைபேர் - தந்த விலன் பேர். தகப்பன் பேர் வைத்து.
3. வந்த புருடர் - வந்த புருஷர் பேர் கருணை வகை போக – போகி.
4. மிருகா கருணை வளம் படவே - வளம்பாடே – வளம் படே - விளம்பிடவே - விளம்பிடே – விளம்பே.

குறிப்புரை

இம் மந்திரம்; ஆடவர் அழைப்புவினை யேவலின் தியானமும், தந்திரமுங்கூறி முடித்து, நிறுத்த முறையானே விலங்கின் அழைப்பு வினைக்குத் தோற்றுவாயையும் உணர்த்து கின்றது.

மாந்தர் அழைப்புவினை யேவலின் வகை - 2. அவை:

1. மாதர் அழைப்பு
2. மைந்தர் அழைப்பு என்பனவாம்.

இந்த 2-க்கும் உரியனவாகச் சொல்லப்பட்ட மந்திரங்கள் வெவ்வேறேயாகும். ஆயின், தியானம் மட்டும் ஒன்றே. மேல் மாதர் அழைப்பு வினைக்குக் கூறப்பட்ட தியானமே இந்த மைந்தர் அழைப்பு வினைக்கும் ஏற்றதாகும். இந்த இயந் திரத்தின் புற வட்டத்தில் அழைக்க விழைந்த ஆடவர் பெயரையும், அவர்தம் தந்தை பெயரையும் வரைந்து விதிப்படி பூசனை முதலியவற்றைப் புரியச் சித்தியாகும். இனி மேல் நிறுத்த முறையானே 5 - ஆம் எண்ணு முறைமைக்கண் நின்ற விலங்கின் அழைப்பு வினையேவல் கூறப்படும் என்பதாம்.

வேறு – வெவ்வேறாகும். தியானம் பெண் ஆகருணை - தியானமானது மாதர் ஆழைப்பு வினைக்குச் சொல்லிய

வாறேயாம். தந்த இவன்பேர் - அழைப்பு வினைக்கு மேற் கொள்ளப்பட்டவன் பெயரையும். வட்டம் - இயந்திரத்தின் புறவட்டம். வகை = முறை - தன்மை. போக்குதல் = போகச் செய்தல் - உணர்த்தல். — சீவக. 889

போக்கி - பின்பு. இவை போக்கிச் சொல்லுதும்.
— தொல். பொ. 444 உரை.

வளம் - மிகுதி. தொழுதெழுவார் வினைவளம் நீறெழ.
— திருக்கோ. 118

விருகம் - விலங்கு. அழைப்பு வினையேவலின் வகை ஏழில், தொகையால் மிக்கதாகலான், விருகா கருணை வளம் என்றார்.
— செய்யுள் 215. குறிப்புரை காண்க.

இனி, வளம் - தகுதி எனக்கொண்டு, அதற்கேற்ப உரைப்பினும் அமையும்.

மாட்சிமையுங் கொழுப்பும் தகுதியும் வளமெனல்.
— பிங்கலம் 1012

5. விலங்கின் அழைப்பு வினையேவல் வகை – 9

1 - யானை. 2 - புலி ஆகியவற்றின் அழைப்புவினை

204. வளநூற் றைஞ்சும் வாங்கறுபத் தெண்பதும்
உளம்பட் டியானை ஓடி வரும்புலி
விளங்கவோ ரெண்பதும் வேறைம்பத் தொன்றும்
அளந்தவறு பத்தெட் டாமிலக்கந் தானே.

பாட பேதம்

1. வளம்படுநூற் - வளம்படநூற். றைந்தும் - றஞ்சும் - றொன்றும் - நூற்றஞ்சாங் கறுபத்தெண் - வாங்கறுபஃ தெண்பது - வாங்கறுபத் தெண்பது - வாங்கறுப தெண்ப - வாங்கறுபத் தெண்ப.

2. துளம் பெரிய யானை வர ஓடிவரும் புலியும் - முளம் பெரிய யானை - துளம் பரியானை - துளம் படுயானை - துளம்படு மியானை - துளம் படும் யானை. புலியும்.

3. வேறன்பத் - வேரைம்பத் - வோரைம்பத். தொன்று - தொன்றுமாறைந்து - தொன்றுமாரைந்து.

4. அளந்தறு - அளைந்தவறு - வளைந்தறு - மந்ளை தவறு - மளைந்துவைம். பத்தெட் டிலக்கமது தாவே.

குறிப்புரை

இம்மந்திரம்; மேல் தோற்றுவாய் செய்துகொண்டவாறே விலங்கின் அழைப்பு வினையினைக் கூறத் தொடங்கி, முதற்கண் யானை புலி ஆகியவற்றின் அழைப்பு வினைக்குரிய இலக்கங்களை உணர்த்துகின்றது.

வாங்கல் = வரவழைத்தல் - கொள்ளல். உளம்படல் = உளப்படுதல் = உட்படுதல் - சம்மதித்தல். ஓடிவரும் - விரைந்து வரும். இதனைப் புலிக்குங் கூட்டி உரைக்க. அளத்தல் - வரையறுத்தல்.

1. யானை வரும் :— 105 - 60 - 80 — கட்சபுடம்
2. புலி வரும் :— 80 - 51 - 68 —

இலக்க வேறுபாடு

1. யானை - ஆனை - பரியானை - பரிகரி - கரிபரி - யானை குதிரை வர - வரும் :—

105 - 60 - 80 = 245. 101 - 69 - 0 = 170.
105 - 69 - 80 = 254. 170. 245. 254. 317.
கஜாகர்ஷணம் : 105 - 60 - 80 (=245)

2. புலி - வியாக்ரம் வர - வரும் - ஆகர்ஷணம் :—

80 - 51 - 68 = 199. 51 - 30 - 68 = 149.
80 - 51 - 58 = 189. 80 - 51 - 30 = 161.
80 - 51 - 30 - 68 = 229.
95. 118. 149. 161. 195. 199. 228. 229.

3 – பரி. 4 – பன்றி ஆகியவற்றின் அழைப்புவினை.

205. தானே யறுபதுந் தாங்கெழுப தேழும்
கோனே குதிரைவருங் கொண்டதோர் பன்றி
ஆனா லறுபதும் ஐம்பத்தஞ் செண்பதும்
போனா லினிவரும் போர்ப்பெரும் பாம்பே.

பாட பேதம்

1. யறுபதும் - யறுபதாம் - தாங்கெழுபத் தேழேழுங் - தாங்கெழுபத் தேழுங் - தேழும் - தேழேழும்.

2. குதிரை சேனைவருங் கொண்டதன்றியு - குதிரை வருங் கொண்டதன்றியு - குதிரைவருங் கொண்டதோர் பன்றிவரு.

3. மானேயறுபது — மானாலறுபது — மானாவறுபது. மைம்பத்தஞ் - மண்பத்தஞ், செண்பது.

4. பொங்கும் பெரும்பாம்பே. வருமோர் பெரும்-போர் பெரும்.

குறிப்புரை

இம் மந்திரம்; குதிரை, பன்றி ஆகியவற்றின் அழைப்பு வினை யேவல்கட்குரிய இலக்கங்களையும், அரவின் அழைப்பு வினைக்குத் தோற்றுவாயையும் உணர்த்துகின்றது,

போர் = பொந்து — புற்று - மரப்பொந்து. கோன் - அரசன். கோனே - அரசே. ஆடூஉ முன்னிலை விளி.

3. பரி வரும் :— 60 - 70 - 49.

4. பன்றி வரும் :— 60 - 55 - 80 — கட்சபுடம்

இலக்க வேறுபாடு

3. பரி - குதிரை - குதிரை சேனை வர - வரும் - குதிரை சேனை ஆகர்ஷணம் - அசுவசேநாகர்ஷணம்:—

60 - 70 - 49 = 179. 60 - 77 - 0 = 137.
60 - 70 - 41 = 171. 60 - 71 - 49 = 180. (?)
60 - 91 - 41 = 192. (?)
137. 171. 179. 180. 192. 195. 373.

கட்சபுடம்:— அசுவசேநாகர்ஷணம்:—

60 - 70 - 41 (171).
4. பன்றி வர — 60 - 55 - 80 = 195.
51 - 60 - 80 = 191. 95. 191. 195. 269.

5 - பாம்பு. 6 - எலி. 7 - பசு ஆகியவற்றின் அழைப்பு வினை.

206. பாம்புவரு மைம்ப தையைஞ்சு பன்னாறுந்
தூம்பெலிக் கிருப தையைஞ்சு தொண்ணூறும்
நாம்பெற்ற நாற்பதும் நாலேழும் ஐயைஞ்சுந்
தாம்பிற் பசுவருந் தப்பா துரையே.

பாட பேதம்

1. மைம்பது மையைஞ்சும் - மன்பது மையஞ்சு - மையஞ்சும் பதினாறும். பாம்பு வருமஞ்சு சுழன்றிடு பன்னாறு.
2. தூம்புற்றெலிக் – தூம்புற்றெலிக்கிருபத் தையஞ்சுந் தையஞ்சுந் — தூம்புற் றெலிகிருபத் தஞ்சும். கிருபத்தஞ்சு. தொண்ணூறு. கிருபதஞ்சு.
3. நாற்பது. மையஞ்சுந் - மையைந்துந். நாற்பது நல்லெழு பத்தஞ்சு.
4. துரைப்பதே - துரைத்ததே.

குறிப்புரை

இம் மந்திரம்; பாம்பு, எலி, பசு ஆகியவற்றின் அழைப்பு வினைகட்குரிய இலக்கங்களை உணர்த்துகின்றது.

தூம்பு = துளை - உட்டுளை - வளை - எலிகள் வாழும் வளைகள். தாம்பு = தாமணி · பசுக்கயிறு. தப்பு = தவறு - வழு. உரை - சொற்பொருள்,

5. பாம்பு வரும்:— 50 - 25 - 16.

6. எலி வரும் :- 20 - 25 - 90.

7. பசு வரும் :— 40 - 28 - 25. — கட்சபுடம்

இலக்க வேறுபாடு

5. பாம்பு – பெரும் பாம்பு - சர்ப்பம் - கோரின இடத்துக்கு சர்ப்பக் கூட்டம். வர - வரும் - சர்ப்ப சமூகா கர்ஷணம் :—

50 - 25 – 16 = 91. 16 – 10 - 25 = 51.
50 – 25 – 14 = 89. 16 – 50 – 25 = 91.
61 - 25 - 14 = 100. 60 – 25 - 26 = 111.
50 - 25 - 90 = 165. 60 - 55 - 80 = 195.
51. 44. 89. 91. 100. 111. 121. 165. 179. 195. 478. 916.

கட்சபுடம்: சர்ப்ப சமூகாகர்ஷணம்:—

60 - 25 - 26 (= 111) - 16 - 25 - 40 (= 81)

6. எலி – புற்றில் எலி வர – வரும்; எலி பெருச்சாளி அந்தப் புரத்தை அடையும்.

20 - 25 - 90 = 135. 16 - 25 - 90 = 131.
20 - 25 - 0 = 45. 94 - 25 - 26 = 145.
94 - 50 - 20 = 164.
45. 131. 135. 145. 164. 279.

கட்சபுடம்: மூசிக ஆகர்ஷணம்:—

94 - 25 - 26 (= 145) — 95 - 50 - 20 (= 165)

7. பசு - பசுக்கள் வர - வரும் - பசுக்களின் ஆகர்ஷணம்:

40 - 28 - 25 = 93. 40 - 28 - 26 = 94.
40 - 70 - 5 = 115. 40 - 75 - 0 = 115.
93. 94. 115. 185. 279.

கட்சபுடம்: பசுவாகர்ஷணம்:—
40 - 28 - 26 (= 94). (?)

8 - எருமை. 9 - மரை, கலை, கரடி ஆகியவற்றின் அழைப்பு வினை

207. உரைத்த எருமைவரும் ஒது நாற்பான்
புரைத்த வெண் பத்தேழும் போகிய வைம்பான்.
கருத்து மரைகலை கரடி யெண்பான்
நிரைத்த பதினேழும் நீடைம்பத் தாறுமே.

பாட பேதம்

1. வெருமை - யெருமை – பெருமை. ஓதிய - ஓதிடு விருஷபம் - வருமோதிய - வருமோதி - வருமேதி வரு மேறதி - வரவோதிய - வருமேறது. நாற்பதும்.
2. வன்பதுங். பத்தேழு. போகிய வன்மை - வைம்பதும்.
3. மரைமான் கலைகரடி - மறைமான். யெண்பதும்.
4. நிறைத்த நிறுத்த - நிருத்த. நீடன்பத் – நீண்டைம்பத் – நீண்டம்பத் – நீடுமைம்பத்தாறே.

குறிப்புரை

இம்மந்திரம்; எருமை, மரை, கலை, கரடி ஆகியவற்றின் அழைப்பு வினையேவல்கட்குரிய இலக்கங்களை உணர்த்து கின்றது.

புரை - உயர்ச்சி. கருத்து = எண்ணம் – விருப்பம். மரை = ஆமா - காட்டுப்பசு - கவயம். எருமையும் மரையும் வரையார் ஆண்டே. — தொல் 9: 16.

மரையா மரல்கவர மாரி வறப்ப — கலித். 6.

கலை: மானே முசுவே கலையொடு வருமே - திவாகரம் நிரை = ஒழுங்கு - வரிசை.

8. எருமை வரும்:— 40 – 87 - 50 — கட்சபுடம்

9. மரை, கலை, கரடிவரும்:— 80 – 27 – 56

இலக்க வேறுபாடு

8. எருமை - ரிஷபம் - எருதுகள் வர - வரும். எருதுகளின் ஆகர்ஷணம் - விருஷபாகர்ஷணம்:—

40 - 87 - 50 = 177. 40 - 87 - 0 - = 127.

24 - 87 - 50 = 161. 127. 161. 177. 187.

கட்சபுடம் : கோநாத - விருஷபாகர்ஷணம் :

40 - 87 - 50 (=177).

9. மரைமான் கலைகரடி - கலைமான்கரடி - கலைகரடி - மான்கலை - கரடி - குரங்கு - கவயம் வர - வரும்; மரை, மான், கடம்பை, கரடி முதலிய காட்டுமிருகங்களின் ஆகர்ஷணம் :—

80 - 17 - 56 = 153. 17 - 56 - 80 = 153.

80 - 17 - 25 = 122. 149. 150. 153.

கட்சபுடம் : கவயாதி - கவயமுகான் - கவயமுகா நாம் வநாந்த ஸத்வாநாம் ஆகர்ஷணம்:—

80 - 17 - 56 (=153).

4 - விலங்கின் அழைப்புவினையேவல் வகையின் தொகையும் தியானமும்

208. ஆறு மிருகா கருடணை யொன்பதுங்
கூறுந் தியானமுங் கொண்டபெண் புருடர்
தேறும் விருகந் தெளிவகை ஒன்பதும்
ஏறும் மந்திரம் ஏன்றபகை வந்தே.

பாட பேதம்

1. மிறுகா. கருணையவை - கருணை வகை - கருடணைக் கெண்பதுங் - கருடணைக் கெண்பதுங்.
2. கொண்ட பெண்புருஷர் - கொள்பெண்புருடர் - கொண்டபேர் தான்புருடர் - கொண்டெண்பதான புருடர் - கொள் பெண் புருடரும்.
3. தேறு மிருகந் - தேறும் வகைவிருகந் தெளிந்தவகை யொன்பதுக்கும் - விருகந்தெளிந்த வகையொன்ப துக்கு - யொன்பது.

4. மேறுமொரு மந்திரமேன்ற பகை - ஏறுமோர் மந்திர மன்றே வகை - ஏறுமோர் மந்திரமெண்வகை - மென வகை வந்ததே.

குறிப்புரை

இம்மந்திரம்; விலங்கு அழைப்புவினை யேவல் வகையின் தொகையையும், தியானத்தையும், மந்திரத்திற்குத் தோற்றுவாய் கூறுமுகத்தால், அடுத்துவரும் பகைவர் அழைப்புவினை யேவலுக்குத் தோற்றுவாயையும் உணர்த்துகின்றது.

விலங்கு அழைப்பு வினை யேவல்களின் வகை - 9
அவை யாவன

(1) யானை
(2) புலி
(3) பரி
(4) பன்றி
(5) பாம்பு
(6) எலி
(7) பசு
(8) எருமை
(9) மரை, கலை, கரடி என்பனவற்றின் அழைப்பு வினைகள்

மிருகாணாந் நவதா சிவே — கட்சபுடதந்த்ரம். என்பதுங் காண்க.

இவற்றின் தியானமானது மேலே மாந்தர் அழைப்புக்குச் சொல்லப்பட்ட தியானமேயாகும். ஏறு = உயர்ச்சி - இவர்தல். ஏன்றல் = ஏலுதல் - இயலல் - பொருந்துதல். இந்த விலங்கின் அழைப்பு வினைக்குரிய இம்மந்திரமே, அடுத்துவரும் பகைவர் அழைப்புவினைக்கும் ஏற்றதாகும் என்பவனை 4 - ஆம் அடி குறிக்கும். மந்திர பாடபேத எண் 21 - 22 ம், செய்யுள் - 212ம் பார்க்க.

தியானமும் என்ற உம்மையால். இந்த விலங்கின் அழைப்புவினை யேவலுக்குரிய தந்திரமும் அதுவே என்பது பெற்றாம். ஏனையவற்றிற்குக் கூறியுள்ளவாறு இதற்குத் தனியே தந்திரங் கூறப்படாமையுங் கருதுக.

மந்திரம் — 24.

5 - விலங்கின் அழைப்பு வினைசேவல் - 9 க்கும் உரிய சிறப்பு மந்திரம்

ஓம் நமோ பகவதே ஸர்வ இந்த்திரியாணீ ஐம் க்லீம் வரவர வரத வேஸ்தலம் ஈம் ரம் ரூம் சிரீம் ஸ்வாஹா ||

பாட பேதம்

1. ஓம் நமோ பகவதீ ஸர்வ இந்த்ரியாணீ ஐம் க்லீம் ஹ்ரீம் வரவரதம் திர்லும் ச்ரம் ஸ்மாஹா ||

2. ஓம் நமோ தம் த்ரலம் (த்ருலம்) ரம் ச்ரம் ஸ்வாஹா ||

3. ஓம் நமோ பகவதே ஸர்வ இந்த்ரியாணீ ஐம் க்லீம் வரவரதம் வேஸ்தல கம் ரம் ரூம் ஸ்வாஹா ||

4. ஓம் நமோ பகவதே ஸர்வ இந்த்ரீயாணீ ஐம் க்லீம் வரவரதம் வேஸ்தல கம் ரம் ரூம் ஸ்வாஹா ||

5. ஓம் நமோ பகவதி ஸர்வேந்த்ரியாணீ ஐம் க்லீம் ப்ரீம் ஹ்ரீம் வர வரதம் யுலே ஸ்தம்ல ரம்ரம் ப்ரீம் ஸ்வாஹ்ா ||

6. ஓம் நமோ பகவதே ஸர்வேந்த்ரியாணீ (ஸர்வ தங்க்ராணி - ஸர்வ தந்த்ராணீற ஐம் க்லீம் வாவா (ஹவா) ஓம் த்ரும் லம் (த்ருல) வேஸ்தலபே ட்டம் ட்டம் (வேஸ்தலட்டம் ட்டம்) அம் ஸ்வாஹா ||

7. ஓம் நமோ பகவதே ஸர்வ இந்த்ரியாணீ ஐம் க்லீம் ஹ்ரீம் வர வரதம் யுல வேஸ்தல ரம் ரம் ஸ்ரம் ஸ்வாஹா ||

8. ஓம் நமோ பகவதே ஸர்வேந்த்ரியாணீ ஐம் க்லீம் ஹ்ரீம் வரவர வரதம் யுலவேஸ்தல சம் ரம் ரூம் ஸ்ரம் ப்ரீம் ஸ்வாஹா ||

9. இதற்கு மந்திரம்:— ஓம் நமோ பகவதே ஸர்வேந்த்ரி யாணீ ஐம் க்லீம் வாவா ஓம் தும் ளம் க்கேம் ஸ்த்தலபே ரம்ரம் அம் (க்ஷம்) ஸ்வாஹா ||

10. ஓம் நமோ பகவதே ஸர்வ யக்ஞாநீ ஐம் க்லீம் ஹவா ஓம் தூலவே ஸ்தல ட்டம் ட்டம் அம் ஸ்வாஹா ||

11. ஓம் நமோ பகவதே ஸர்வேந்த்திரியாணீ ஐம் க்லீம் ஹ்ரீம் வர வரத மதல வேஸ்தல ரம்ரம் ச்ரம் ஸ்வாஹா ||

12. ஓம் நமோ பகவதே ஸர்வேந்த்திரியாணீ ஐம் க்லீம் வாவா தம் யூலவேஸ்தல ட்டம் ட்டம் அம் ஸ்வாஹா ...

13. ஓம்...ஐம் க்லீம் ஹ்ரீம் வரவரதம் தல வேஸ்தல ரம்ரம் ஸ்வாஹா ||

14. ஓம்...வர வரதம் தலவே ஸ்தலாம் ரம் ஸ்வாஹா ||

15. ஓம் நமோ பகவதே சர்வ இந்திராணீ ஐயும் கிலியும் வாவா திறம் புலவே பலத தேவபே வெலைத்தலம் வெயலைத் தெங்ரங்கிலியும் சுவாகா ||

16. ஓம்...வாவா திறம்புலவே பலத்தே மேவெலைத் தலம் வெயலைத்தேங் ரங் கிலீயும் சுவாகா ||

17. ஓம் ரீங் ரங் ரீயும் ணம் யுலவே அலைத்தே வாவா ஐயும் நலி (கிலி)யும் சுவாகா ||

18. ஓம் நமோ பகவதே ஸர்வேந்த்ரியாணீ ஐம் க்லீம் வாவா ஓம் தூம் ளம் க்கேம் ஸ்த்தலபே ரம்ரம் அம் ஸ்வாஹா ||

19. ஓம்...ஸர்வேந்த்ராணீ ஐம் க்லீம் வாவா (வரவர) தம் யூ (யு) ல வேஸ்தல ட்டம் ட்டம் அம் ஸ்வாஹா ||

20. ஓம்...ஸர்வேந்த்ரியாணி ஐம் க்லீம் ஹ்ரீம் வர வரதம் தல வேஸ்தல ரம்ரம் ச்ரம் ஸ்வாஹா ||

21. சத்துரு ஆகர்ஷணத்துக்கு – ஆகர்ஷணைக்கு உரிய மந்திரமும் இதுவே.

22. மிருகாகர்ஷண மந்திரமே சத்ரு ஆகர்ஷணத்துக்கும்.

குறிப்புரை

இம்மந்திரம்; விலங்கின் அழைப்பு வினையேவல் 9-க்கும் உரிய சிறப்பு மந்திரமாகும். இதனை முறைப்படி இயந்திரத்தில் உள்ள 16 - அறைகளிலும் வரைந்து விதிப்படி பூசிக்கின் இந்த விலங்கின் அழைப்பு வினையேவல் சித்திக்கும் என்பதாம். காரிய சித்திக்குரிய சாதனங்கள்–3. அவை: 1. மந்திரம், 2. கிரியை, 3. பாவனை என்பன. கிரியை, தந்திரம் என்பனவும். பாவனை, தியானம் என்பனவும் ஒரு பொருட் சொற்கள். மேலே மாந்தர் அழைப்பு வினையேவலுக்குச் சொல்லப்பட்டனவாயுள்ள தந்திரமும் தியானமுமே இதற்கும் ஏற்கும்.

மேற்கோள்

சித்திப்ர தம் ப்ரவட்ச்யாமி மிருகா கர்ஷண கர்மணி |
ஓந்நம: பதமுச்சார்ய சதுர்த்யா பகவத் பதம் ||
ஸர்வேந்த்ரியாணீ ஐம்மார வரயுக்மம் தமஞ்சதிகு |
வெஸ்தலம் வாமநயநம் ரும்ஸ்வாஹா மந்த்ராஜக : ||

— கட்சபுடதந்தரம்.

சித்திப்ரதம் ... ஸர்வேந்த்ரியாணீ ஐம்மாரம் வரம் வரத மேவச | ஆக்நேயம் வாமநயநம் ஸ்ரீம் ஸ்வாஹா மந்த்ராஜக : ||

6. பகைவர் அழைப்புவினை யேவல். வகை 5.

1. பகைவர் வர.

209. வந்தவைம் பத்தொன்றும் வாங்குழுப் பத்தாறும்
நந்துமோர் நாற்பத்து நாலும் பகைவரத்
தந்த பகைதன தானிய மும்வரப்
பெந்தித் திலக்கம் பிணைப்பேசு வோமே.

பாட பேதம்

1. வந்தவன். பத்தாறும். வாங்கமுப்.

2. பகைவர - பகைவர்த - பகைவர்தம்.

3. படைதன - பகைக்குத் தன - தந்தம் பகைக்குத் தன. தானியம்வரப்.

4. துலக்கம். பேசுவேமே.

குறிப்புரை

இம்மந்திரம்; மேல் நிறுத்தமுறையானே 6-ஆம் எண்ணு முறைமைக்கணின்ற பகைவர் அழைப்பு வினையேவல் கூறுவான் தொடங்கி, முதற்கண் பகைவர் வருகைக்குரிய இலக்கத்தையும், பகைவரின் தனதானிய வரவிற்குத் தோற்றுவாயையும் உணர்த்துகின்றது.

பகை என்பதனை, இவ்வதிகார முழுதுங் கூட்டியுரைத்துக் கொள்க. நந்துதல் = வளர்தல்; பெரியவர் கேண்மை பிறை போல...நந்தும் - நாலடி. 125. விளங்குதல் - நால் வேறு நனந்தலை ஓராங்கு நந்த - பதிற்றுப் - 69 : 16. பெந்தித்தல் - இயந்திரங்களில் எண், எழுத்து முதலியவற்றை அடைத்தல்; சக்கரத்தினுள் அக்கரந் தடுமாறப் பெந்திப்பது தானே - மாறனலங்காரம். 281 - உரை; பக்கம் - 477.

1. பகைவர் வர :— 51 - 36 - 44 — கட்சபுடம். பகைவர் தனதானியங்களின் அழைப்புவினை யேவலுக்குரிய இலக்கம் வருந் திருமந்திரத்துட் சொல்லப்படும்.

இலக்க வேறுபாடு

பகை - பகைவர் - பகைத்தவன் - சத்துரு - பகைவரின் படைகள் சேனைகள் - படை - பகைவர் ஆயுதம் - 'சத்துருவின் ஆயுதம் வர - வரும்; சத்துருக்களை ஆகர்ஷணஞ்செய்யும் - தனம் வரும் :

51 - 36 - 44 = 131. 44 - 56 - 36 = 138.
46 - 56 - 36 = 138. 130. 131. 136. 138. 151. 157
176. 207. 217. பகைவர - 130. பகை - பகைவர் ஆயுதம் வர - 136.
44 - 56 - 36 = 136. தனம் வரும் - 131.
51 - 36 - 44 = 131. படைவர - 151. 157. 176.

2 - பகைவரின் தனதானியம். 3 - படை ஆகியவற்றின் அழைப்பு வினை

210. பேசுமொரு நூற்றுநால் பின்னைம்பத் தேழும்
பேசுமிரு பானெட்டும் பின்வரும் சேனை
பாச முடனே பதின்மூன்றும் ஏழாறும்
மூசுமுப் பத்தெட் டாகும் முயல்வதே.

பாட பேதம்

1. பேசுமவை. நூற்றுநாலும் - பேசுமுப்பான்நாலு. பின்னியவைம் பத்தேழு - பின்னியவன் பத்தேழும்.

2. மேசுமிருபத்தெட்டின் சேனை பின்வரும் - பத்தெட் டாற் பின்னைச் சேனைவரப் - பத்தெட்டென்றபின் சேனைவரப் - பத்தைந்தில் சேனையது பின்வரும்.

3. பாசுமுடனே. மூன்றேழேழாறும்.

4. தெட்டாகு - தெட்டாக.

குறிப்புரை

இம்மந்திரம்; பகைவரின் தனதானியம், படைகள் ஆகிய வற்றின் அழைப்புவினை யேவலுக்குரிய இலக்கங்களை உணர்த்துகின்றது.

சேனை = சேனைகள் - காலாட்படைகள். பாசம்-அன்பு மூசுதல் = மொய்த்தல் - நெருங்குதல். மூசுவண்டறை

பொய்கை - தேவாரம் - 6112; வண்டு மூசுதேறல் மாந்தி நெடுநல். 33. முயலல் - தொடங்குதல்.

2. பகைவரின் தனதானியம் வர :—104 - 57 - 28

3. பகைவரின் படைகள் வர :—13 - 42 - 38

— கட்சபுடம்

இலக்க வேறுபாடு

2, தனதானியம் - சத்துரு தனதானியம் - சத்துருவின் தனதானியம் - பகைவரின் தன தானியம் - சத்துரு தனம் வர-வரும்; தானாகர்ஷணம்:—

104 - 57 - 28 = 189. 34 - 57 - 25 = 116.
51 - 36 - 44 = 131. 53 - 48 - 42 = 143.
57 - 48 - 80 = 185. 104 - 57 - 52 = 213.
89. 116. 131. 143. 185. 189. 213. 245.

கட்சபுடம் : சத்ரு தனதான்யாகர்ஷணம் :
34 - 57 - 52 - (= 143) ; 104 - 57 - 52 (= 213).

3. சேனை - பகைவர் சேனை வர - வரும் - மீண்டு வரும். பகைவருர்க்குப் பயம் வரும் :—

13 - 42 - 38 = 93. 42 - 13 - 38 = 93.
53 - 48 - 42 = 143. 93. 105. 116. 143. 215.

கட்சபுடம் : சத்ரு சேநாகர்ஷணம்:—
42 - 13 - 38 (= 93).

4 - பகைவரின் சனம்; 5 - படைக்கலம் ஆகியவற்றின் அழைப்புவினை

211. முயலும் பகைவர் சனம்வரு கைக்கு
இயலுமைம் பத்தேழும் எண்பதெண் ணாறும்
அயிலா யுதமவை வரவா றாறும்
பயிலாவெண் ணான்குடன் பதினேழோ டாற்றே.

பாட பேதம்

1. சனமானது வர - சன்மானமது வர - சன்மானம் வருகைக் - சன்மானம் வருபகைக் - ஸன்மானமது வர.

2. இயலுமைம் - வியலுமைம் - கியலுமன். மெண்பத் தொன்றாறு - மெண்பத்தொண்ணாறு - மெண்பத் தெண்ணாறு - மெண்பதெண்ணாறு - மெண்பது மெண்ணாறும்.

3. மயிலாயுதங்களவை வர — மயிலாயுதங்கவை - பயிலா யுதங்களவை — மியலாயுதங்களவை — மயிலி ரதங்கவை வரக் கூறும்.

4. பையிலா வெண் — பயிலா வொண் — பயிலாயெண். ணான்கும் - ணான்கோடு. பதினேழோ டாறே - பதினேழோ டெண்ணாறே — பதினேழோ டாறாறே - பதினெட்டுப்ப ...

குறிப்புரை

இம்மந்திரம்; பகைவரின் சனம், படைக்கலம் ஆகியவற்றின் அழைப்புவினை யேவலுக்குரிய இலக்கங்களை உணர்த்து கின்றது.

முயல் = முயற்சி — ஊக்கம். சனம் = இனம் — கூட்டம். தானப்பகடு முதலாய சனங்கள்.

— பாரதம். சம்பவச். 47

அயில் = கூர்மை — வேல். பயிலல் — சொல்லுதல்.

4. பகைவர் சனம் வர:— 57 - 80 – 48 — கட்சபுடம்

5. பகைவர் படைக்கலம் வர:— 36 - 32 - 17.

இலக்க வேறுபாடு

4. பகை ஜனம் - பகை சனம் - பகைவர் சனம் - பகைவர் இனம் - பகைவர் கூட்டம் - பகைவர் இனமானது - பகைவர சன் மார் - பகைவர் சன்மானம் - சத்துரு கூட்டம் - பகை வரின் இனம் வர - வரும்:—

57 – 80 - 48 = 185. 80 - 57 - 48 = 185.

57 - 81 - 6 = 144. 85. 144. 185. 198. 219. 516.

கட்சபுடம்: வித்விஷாமேநம்:— 80 - 57 - 48 (= 185)

5. ஆயுதம் - ஆயுதங்கள் - இயலாயுதம் - சத்துருவின் ஆயுதங்கள் வர - வரும்; ஆயுதாகர்ஷணம்:—

36 - 32 - 17 = 85. 32 - 17 - 6 = 55.

32 - 18 - 36 = 86. 32 - 17 - 48 = 97.

55. 85. 86. 97. 198.

கட்சபுடம்: ஆயுதாகர்ஷர்ணம் - ஆயுதாகிருஷ்டி:—

32 - 18 - 36 (= 86 ?).

பிரதிபேதக் குறிப்பு: சன்மானம் – வெகுமதி.

பாடி பறைகொண்டு யாம் பெறும் சன்மானம்.

— திவ்வியப். 500

6. பகைவர் அழைப்புவினையின் தொகையும், மந்திரம் முதலியவையும்.

212. ஆற்றுஞ் சத்துரு வாகருணை யைவகைக்
கேற்றுந் தியானம் எழில்மந் திரங்களுஞ்
சாற்றும் விருகா கருணை யதன்செயல்
போற்றுஞ் சலவா கருணை புகழே

பாட பேதம்

1. ஆற்றிய சத்துரு – சத்ரு ஆற்றியா கருணை ஐந்து வகைக்கும் - வாகருணையைந்து – வாகருஷணை யைந்து வகை – வாகருணை வகை யைந்துக்யைந்து வகை.

2. மேற்றுந் – யேற்றுந். தியானமும்.

3. சாற்றுமிருகா - சோற்று விருகா – விருகா கருஷணை – கருணையினதன் செயல் – கருணையிறை (கருணை யின்றன்) செயல் - கருணையென்ற செயல் - கருணை யிதின் செயல்.

4. செலவா - செயலா - கருஷணை - கருணையின் (கருணையினி). புகழ்வதே - புகழ்ந்ததே - புகல்வதே - புகலே.

குறிப்புரை

இம் மந்திரம்; இதுகாறும் சொல்லப்பட்ட பகைவர் அழைப்புவினை வகையின் தொகையையும், தியானத்தையும், மந்திரத்தையும், தந்திரத்தையும், கூறிமுடித்து, அடுத்துவரும் நீர் அழைப்புவினை யேவலுக்குத் தோற்றுவாயையும் உணர்த்து கின்றது.

ஆற்றுதல் = செய்தல் - சொல்லுதல்.

சத்துரு ஆகர்ஷண வினையின் வகை - 5.

அவை யாவன:

(1) பகைவர்

(2) பகைவரின் தனதானியம்

(3) சேனை

(4) பகைவர்சனம்

(5) படைக்கலம் ஆகியவற்றின்

அழைப்புவினை என்பனவாம்.

ஏற்றுதல் = ஏறச்செய்தல் - மேம்படுத்துதல். தியானம் - இறைவியின் சொரூப தியானம். சாற்றுதல் = போற்றுதல் - சொல்லுதல். செயல் = தந்திரம் - கிரியை. விருகா கருணையதன் செயல் - மேலே விலங்கின் அழைப்புவினை யேவலுக்குச் சொல்லப்பட்டனவாயுள்ள மந்திரங்கிரியை பாவனைகளே இதற்கும் ஆகும் என்பதாம். இஃது ஒப்பக் கூறல் என்னுந் தந்திரவுத்தியின் பகுதியாகிய மாட்டெறிந் தொழுகல் ஆகும். (தொல். 1610 : 9. நன். 13 : 7)

பகைவர் அழைப்புவினையின் வகை 6 - என்று கட்சபுடத்திற் சொல்லப்பட்டுள்ளது. அவற்றின் விவரம் கிடைத்துள்ள சுவடி களில் தெளிவாகக் காணப்படவில்லை.

மேற்கோள்

6. பகைவர் அழைப்புவினையேவலுக்குரிய சிறப்பு மந்திரம்

சில சுவடிகளிற் காணப்படும் குறிப்பு.

ஆக சத்துரு ஆகர்ஷணம் 5-க்கும் மந்திரம், கிரியையும் மிருகாகர்ஷணப்படி செய்யவேண்டியது.

இதற்கு மந்திரம் மிருகாகர்ஷணத்துக்கு உள்ளபடி செய்க.

மிருக ஆகர்ஷண மந்திரமே இதற்கும்.

மிருகாகர்ஷணத்துக்குள்ளபடி செய்க.

கட்சபுட தந்திரம்

*சடாசத்ரு கணாநாஞ்ச த்விதாகிருஷ்டி சிவேம்பஸாம் |
சத்ருவா கிருஷ்டி மகாவித்யா மந்த்ரம் சுருணு வரப்ரதே ||*

யதுக்தந்து மிருகாணாங்கி ததேவத்விஷதாமபி என்பனவும் ஈண்டு நோக்கத்தக்கன.

மற்றுஞ் சில சுவடிகளில் ஈண்டு மேலே சொல்லப் படுவதாயுள்ள நீரின் அழைப்புவினை யேவலுக்குரிய மந்திரம் வரையப்பெற்றுள்ளது.

7 – நீரின் அழைப்புவினை யேவல் வகை 2.
1 – மழை வர. 2 – கிணற்றின் நீர் வர.

213. புகழ்ந்தன் பத்தாறும் பொருந்தொண் ணூற் றஞ்சும்
மகிழ்ந்தன்பத் தொன்றும் வருமா மழையும்
நெகிழ்ந்த கிணறு நீர்வர வாறாறும்
மகிழ்ந்தன்பத் தொன்றும் வருநாற்பத் தெட்டுமே

பாட பேதம்

1. புகழ்ந்த பத்தாறும் – புகழ்ந்தவைம் பத்தாறும் - புகந்தெண்பத் தாறும் பொருந்துந்தொண் – பொருந்து தொண். ணூற்றைஞ்சு.

2. மகிழ்ந்தைம்பத் தொன்றும் - மகிழ்ந்தவன் பத் தொன்றும் – மகிழ்ந்தைம்பத்தாறும் – மகிழ்ந்த வன் பத்தாறும் – திகழ்ந்தைம்பத் தொன்றும்; மழையு.

3. நெகிழ்ந்து - நிகழ்ந்த - நிகந்த. நீர்வர வாறாறு – நீர் வரலாகும் – நீர்வர வற்றாது.

4. மகிழ்ந்தைம்பத் - மகிழ்ந்த வன்பத் – வருந்தைம் பத் – வகுந்தைம்பத். 'தொன்று. வரும் நாற்பத் தெட்டே – மன் நாற்பத்தெட்டுமே – மனை நாற் பத்தெட்டுமே – வகுந்தைம்பத் தொன்றும் வருமை ம்பத்தாறா நிகழ்ந்த நாலெட்டே – வருநாற்பா னெட்டே - எட்டுமே.

குறிப்புரை

இம் மந்திரம்; மேல் நிறுத்த முறையானே 7 - ஆம் எண்ணுமுறைமைக் கணின்ற நீரின் அழைப்புவினை கூறுவான் றொடங்கி; மழை, கிணற்று நீர் ஆகியவற்றின் அழைப்புவினை யேவல்கட்குரிய இலக்கங்களை உணர்த்துகின்றது.

நெகிழ்தல் = தளர்தல் – நிலைகெடல் – பொடியாதல் - நீர் வற்றல்.

1. மழை வரும் :— 56 – 95 – 151. — கட்சபுடம் (95 - ?)

2. கிணற்றில் நீர் ஊறிவரும் :— 36 – 51 - 48.

இலக்க வேறுபாடு

1. மழை - மேகம் - அகாலத்திலும் மழை - அகாலத்தில் மேகம் வர - வரும் - வளர - பெய்யும் - வர்சிக்கும்.

56 - 95 - 51 = 202 (?) 51 - 56 - 95 = 202.
(?) 51 - 56 - 34 = 141. 86/- 95 - 51 = 232.
100. 141. 188. 202. 206. 207. 232. 242.

சட்சபுடம்: மேகா கர்ஷணம் :... 51 - 56 - 95
(= 202. ?)

மழையும், கிணற்றில் நீரும் வரும்:— 51 - 47 - 0 = 98.

2. கிணறு நீர்வர - கிணற்றில் நீர் வர - கிணறு நீருண்டாம் - கிணறு தண்ணீர் வர - கிணறுகள் (நீர்) ஊறிவர - கிணறு ஜலம் ஊறிவர - கூபஜலாகர்ஷணம் - சகலா (சலா) கர்ஷணை - நீரற்ற கூவலில் நீருண்டாகும் - நடைவாவி, கூவல்-குளங்களில் சித்திரை வைகாசிகளிலும் மழைக்காலம் ஒப்ப நீருண்டாகும் - சித்திரை வைகாசியிலும் வருஷா காலத்திற்கு ஒப்பாம் ஜலமற்ற கிணற்றில் ஜலமுண்டாகும் - நடைவாவி, கிணறு, குளம் சித்திரை வைகாசியிலும் வருஷா காலத்திற்கு ஒப்பாம்.

36 - 51 - 48 = 135. 51 - 47 - 0 = 98.
51 - 48 - 0 = 99. 51 - 56 - 34 = 141.
48 - 46 - 51 = 145. 66. 98. 99. 135. 141.
145. 214. 317.

மழையும் கிணற்றில் நீரும் வரும்:— 51 - 47 - 0 = 98
கட்சபுடம் : கூபஜலாகர்ஷணம்:— 51 - 36 - 48 (=135)
51 - 56 - 34 (=141)

7 - நீரின் அழைப்பு வினையேவல் வகையின் தொகையும், தந்திரமும், மந்திரமும்

214. எட்டுஞ் சலவா கருணை இரண்டுக்கும்
இட்ட வியந்திரம் ஏற்றுந் தலங்களிற்
கட்டுமை யன்கோயில் ஆனைவலக் காற் கீழ்
பட்டதோர் மந்திரம் பாருக் கறியே,

பாட பேதம்

1. செலவா. கருஷணை. இரண்டுக்கு - இரண்டு தரு.
2. இட்டபின் மந்திர மேறும் - மந்திரமெற்றுந் மந்திர மோருந்.
3. கட்டுமய்யன் – கட்டும் அய்யன். கோயில் யானை-கோவிலானை. காற்கீழ்ப் – கற்கீழ்ப் - காற்கீழே – காலிற்கீழ்ப்.
4. பட்டதொரு. பகருதற்கரிதே – பாருக்கறியவே.

குறிப்புரை

இம் மந்திரம்; நீர் அழைப்புவினை யேவல் வகையின் தொகையும், அதன் இயந்திர தந்திரத்தையும், மந்திரத்துக்குத் தோற்றுவாயையும் உணர்த்துகின்றது.

எட்டுதல் – கிட்டுதல். சல ஆகருணை – நீரின் அழைப்பு வினை யேவல்.

சல ஆகர்ஷண வினையின் வகை - 2. அவையாவன:

(1) மழை நீர் ஆகர்ஷணம்.
(2) கிணற்று நீர் ஆகர்ஷணம் என்பனவாம்.

இட்ட - விதிக்கப்பட்ட. ஏற்றுதல் - வைத்தல் - ஏறச் செய்தல். தலம் - இடம். கட்டுதல் - பிணித்தல். ஐயன்கோயில் – சாத்தன் கோட்டம். படுதல் - உண்டாதல். பார் – உலகம்.

நீரின் அழைப்புவினை யேவல் வகை 2 – க்கும் உரிய இயந்திரத்தை முறைப்படி வழிபாடாற்றி முற்றிய பின்பு அதனை ஐயன்கோட்டத்தின் முன்னர் நிற்கும் யானையினது வலக்காலின் கீழே (காலின் அடியில்) கட்டுதல் வேண்டும். இனி, இந்த இயந்திரத்தில் வரையப்படும் மந்திரம் சொல்லப் படும் என்பதாம்,

மேற்கோள்:

த்விதா கிருஷ்டிச் சிவேம்பஸாம் || — கட்சபுடதந்த்ரம்

மந்திரம் — 25

7. நீரின் அழைப்புவினை யேவல் வகை 2-க்கும் உரிய சிறப்பு மந்திரம்.

ஓம் ஹ்ரீம் ரம் ஹ்ரீம் ஜலாகிருஷ்டிம் குருகுரு மம் யுலம் வேஸ்தலம் ஸ்தலம் வரம்வரத வரவர ஐம் க்லீம் ட்டம் ட்டம் ஸ்வாஹா ||

பாட பேதம்

1. ஹ்ரீம் ரம் ஹ்ரீம் மதுள வேத்பல ஸ்தல வர வரத ஐம் க்லீம் ட்டம் ட்டம் ஸ்வாஹா ||
2. ஹ்ரீம் ரம் ஹ்ரீம் ஜலாகிருஷ்டிம் குரு வரம் வரத ஐம் க்லீம் ட்டம் ட்டம் ஸ்வாஹா ||
3. ஓம் ஹ்ரீம் ரம் ஹ்ரீம் மத்ய ல பே ஸ்த ஜலம் வர வர ஐம் க்லீம் ஸ்வாஹா ||
4. ஓம் ஹ்ரீம் ரம் மயுல வேஸ்தல வர வரத ஸௌம் க்லீம் ஸ்வாஹா ||
5. ஓம் ஹ்ரீம் ரம் ஹ்ரீம் மதுள வேத்ஸல ஸ்தல வர வரத ஐக் க்லீம் ட்டம் ட்டம் ஸ்வாஹா ||
6. ஓம் ஹ்ரீம் ரம் மதுள வேஸ்த்லம் ஸல்தம் வர வரத ஐம் க்லீம் ட்டம் ட்டம் ஸ்வாஹா ||
7. ஓம் ஹ்ரீம் ரம் ஹ்ரீம் மம(மம்) த்ருலவே ஸ்த்ல வர வர தத ஐம் க்லீம் ஸ்வாஹா ||
8. ஓம் ஹ்ரீம் ரம் ஹ்ரீம் மம(மம்) யுலேவ ஸ்தல வர வரத ஐம் க்லீம் ஸ்வாஹா ||
9. ஓம் ஸ்ரீம் க்லீம் ஹ்ரீம் மம(மம்) யுலவே ஸ்தல வர வர வர தர (வரவரதா) ஐம் க்லீம் ஸ்வாஹா ||

10. ஓம் ஹ்ரீம் ரம் ஹ்ரீம் ரம் ம(மம்) யுலவே ஸ்தல வர வரதம் ஐம் க்லீம் ஸ்வாஹா ||

11. ஓம் ஹ்ரீம் ரம் ஹ்ரீம் மத்ய வர வர உ ஐம் க்லீம் ஸ்வாஹா ||

12. ஓம் ஹ்ரீம் ரம் ஹ்ரீம் மயுலவே ஸ்தல வர வரத ஐம் க்லீம் ஸ்வாஹா ||

13. இதற்கு மந்திரம்:— ஓம் ஹ்ரீம் ரம் மயுலவே ஸ்தல வர வரத ஐம் க்லீம் ஸ்வாஹா ||

14. ஓம் ஹ்ரீம் ரம் ஹ்ரீம் மத்ய லவே ஸ்தல வரவரவு ஐம் க்லீம் ஸ்வாஹா ||

15. ஓம் ஹ்ரீம் ரம் மத்ய லபேஸ்த ஜலம் வர வரத ஐம் க்லீம் ஸ்வாஹா ||

16. ஜல ஆகருணை 2-க்கு மந்திரம்:— ஓம் ரீங் ரங் ரங் ரீயும் ராம் யுலவே அலைத்தே வா வா ஐயும் ந(கி)லி யும் சுவாகா ||

17. ஓம் ரீங் ரங் ரீயும் ணம் யுலவே அலைத்தே வா வா ஐயும் ந(கி)லியும் சுவாகா ||

18. ஜலாகர்ஷண மந்திரம் :— ஓம் ஹ்ரீம் ரம் ஹ்ரீம் மயுலவே ஸ்தல வர வரத ஐம் க்லீம் ஸ்வாஹா ||

19. இதற்கு மந்திரம் :— ஓம் ஹ்ரீம் ரம் (ம) யுலவே ஸ்தல வர வரத ஸௌம் க்லீம் ஸ்வாஹா ||

20. ஓம் ஹ்ரீம் ரம் ஹ்ரீம் மதுள வேத்ஸல ஸ்தல வர வரத ஐம் க்லீம் ட்டம் ட்டம் ஸ்வாஹா ||

குறிப்புரை

இம்மந்திரம்; நீரின் அழைப்பு வினையேவல் வகை 2-க்கும் உரிய சிறப்பு மந்திரம் ஆகும். இதனை இயந்திரத்தில் உள்ள

16-அறைகளிலும் முறைப்படி வரைந்து விதிப்படி பூசித்து முடிக்க இக்கன்மம் சித்திக்கும் என்பதாம்.

மேற்கோள்

ஜலா கிருஷ்டி மநும்பத்ரே ஜலஜாயத லோசநே |

மாயா மக்நிம் புநர்மாயாம் மதுளம் பேட்வலம் ஸ்தலம் ||

வரம் வரதமுச் சார்ய ஐங்கிலீம் ட்டத்வய மண்டிதம் ||

— கட்சபுட தந்த்ரம்

ஜலாகிருஷ்டி மநும் வட்ச்யே ஜல ஜாயத லோசநே |
மாயா மக்நிம் புநர்மாயாம் ஜலாகிருஷ்டிந்தத: குரு ||
வரம் வரதமுச் சார்ய ஐங்கிலீம் ட்டத்வய மண்டிதம் ||

5 – அழைப்புவினை யேவலின் வகையும், தொகையும் பொது மந்திரமும்.

215. அறிந்ததோர் மந்திரம் ஆகரு ணைக்குச்
செறிந்தவகை ஏழிற் சேர்ந்த தொகைதான்
முறிந்தவகை கூட்ட முப்பத்தொன் றாகுஞ்
செறிந்த விதற்கொரு மந்திரஞ் சேருமே.

பாட பேதம்

1. அறிந்தது மந்திரம் - அந்த மந்திரம் - அறிந்தவிம் மந்திர. மாகருணையாகுஞ் - மாகருஷணைக்குச் - மாகருணை மிகுஞ்.
2. வகையேழிற் சேர்ந்த வகைதான் - வகை சேரிற் சேர்ந்த வகையினால்.
3. முப்பதே யாகும் - முப்பதேயாகுஞ்.
4. சிறந்த விதுக்கொரு - விதற்கொரு சேரு மந்திரமே சேர்மந்திரமே - சேர மந்திரமே.

குறிப்புரை

இம் மந்திரம்; இதுகாறுஞ் சொல்லப்பட்ட அழைப்பு வினை யேவலின் வகையையும், அவற்றின் தொகையையும், அவற்றின் பொது மந்திரத்துக்குத் தோற்றுவாயையும், உணர்த்துகின்றது.

செறிதல் = நெருங்குதல் - பொருந்துதல் - மிகுதல், வகை = விதம் - கூறுபாடு. தொகை = தொகுதி - கூட்டம். முறிந்த - முற்றிய - முடிந்த - தெளிந்த. முறித்தேன் - தெளிந்ததேன். முறி - துண்டுமாம். செறிதல் - இயந்திரத்தின் புறவட்டத்திற் சூழ இணைந்திருத்தல். இதற்கு வகையான் 7-ஆகவும், தொகையான் 31-ஆகவும் அமைந்துள்ளதாகிய இந்த அழைப்பு வினையேவலுக்கு. ஒரு மந்திரம் - பொது மந்திரம். இஃது அடுத்துக் கூறப்படும்.

பிரதி பேதம்: சிறப்பு - அழைப்பு வினையேவலின் விரி 31-க்கும் ஒன்றாய் இன்றியமையாது வேண்டப்படுஞ் சிறப்பு என்க.

5 – அழைப்பு வினையேவலின் வகை – 7. தொகை – 31.

1. அரசர் அழைப்பு வினையேவலின் தொகை – 5.
2. உலக அழைப்பு வினை ,, 8.
3. மாதர் அழைப்பு வினை ,, 1.
4. மைந்தர் அழைப்பு வினை ,, 1.
5. விலங்கின் அழைப்பு வினை ,, 9.
6. பகைவரின் அழைப்பு வினை ,, 5.
7. நீரின் அழைப்பு வினை ,, 2.

ஆக அழைப்பு வினையேவலின் வகை 7-ம், தொகை 31-ம் காண்க.

மேற்கோள்

ஆகர்ஷணகிரியாம் ஸம்யக்...ஸப்ததா கர்ஷணம் மகது |

ந்ருபா கிருஷ்டி : பஞ்சவிதா லோகா கிருஷ்டிஸ்த்த தாஷ்டதா ||

ஸ்த்ரீணாம் பும்ஸாம் ஏகமேகம் ம்ருகாணாம் நவதா சிவே |

ஷடா சத்ரு கணாநாஞ்ச த்விதா கிருஷ்டி சிவேம்ப ஸாம் ||

— கட்சபுட தந்த்ரம்

மந்திரம்—26

5. அழைப்பு வினையேவலின் வகை 7-க்கும் உரிய பொது மந்திரம். (26)

ஓம் ஐம் க்லீம் ஸௌ: கம்கம்கம் கணபதே வரவரத சர்வ லோகநாத ஸர்வஸ்த்ரீ புருஷ வசங்காராய ஸர்வம் சீக்ரம் அம்அம் ஆம் க்ரோம் ஹ்ரீம் அம்ஸம் [சாத்திய நாமம்] வசமாநய ஆகர்ஷய ஆகர்ஷய வரவர ட்டம் ட்டம் ப்லூம் வௌஷடு ||

பாட பேதம்

1. ஐம் க்லீம் ஸ: கம் கணபதே வரவரத ஸர்வ லோக நாதாய ஸர்வஸ்த்ரீபுருஷ வசங்கராய ஸர்வம் சீக்ரம் அம்அம் வசம் ஆநய ஆம் க்ரோம் ஹ்ரீம் அம்ஸம் ஆகர்ஷய ஆகர்ஷய வரவர ட்டம் ட்டம் ப்லூம் வௌஷட் ஸ்வாஹா ||

2. ஐம் க்லீம் ஸௌம் கம்கம் கம் கணபதயே வரம் வரத ஸர்வ லோகநாத ஸர்வஸ்த்ரீ புருஷ வசங்கராய ஸர்வம் சீக்ரம் அம்அம் ஹ்ரீம் அம்ஸம் ஆகர்ஷய வம்வம் ட்டம் ட்டம் ஸ்வாஹா ||

3. ஓம் ஐம் க்லீம் ஸௌம்: கம் கணபதே வரவரத ஸர்வ லோகநாதாய ஸர்வஸ்த்ரீ புருஷ வசங்கராய ஸர்வம் சீக்ரம் அம்அம் வசமாநய ஆம்க்ரோம் ஹ்ரீம் அம்ஸம் (சாத்திய நாமஞ்சொல்லி – வேத தத்தம்) ஆகர்ஷய ஆகர்ஷய வாவா ட்டம் ட்டம் ஸ்வாஹா ||

4. ஓம் ஐம் (க்லீம்) ஸௌம் கம்கணபதே வரவரத ஸர்வ லோகநாதா ஸர்வஸ்த்ரீ புருஷ வசங்கராய ஸர்வம் சீக்ரத வசவாக ஆம் ஐம் ஹ்ரீம் அம் க்ஷம் (தேவ தத்தரைக்) கொண்டு வருக ஸ்வாஹா ||

5. ஸர்வாகர்ஷண மந்திரம்; இதுதான் பிரதானமானது:—

ஓம் ஐம் க்லீம் ஸௌ: கம் கணபதே வர வரதஸர்வலோ கநாதாய ஸர்வஸ்த்ரீ புருஷ வசங்கராய ஸர்வ சீக்ரம் அம் (ஆம்) க்ரோம் ஹ்ரீம் அம்ஸம் (நட்சத்ரே ராசௌ ஜாதஸ்ய நாமதே யஸ்ய சாத்திய நாமத்தையுமிட்டு -தேவதத்தம்) ஆகர்ஷய ஆகர்ஷய வாவா ஸ்வாஹா ||

இது 7-வகையான ஆகர்ஷணத்துக்கும் முக்கியமான மந்திரம். இதை 7-விதமான ஆகர்ஷண யந்திரங் களிலும் எழுதவும்.

6. ஓம் ஐம் க்லீம் ஸௌ: கம்கம் கணபதே வரவரத ஸர்வலோகநாத ஸர்வத்ரஸ்த்ரீபுருஷ வசங்கராய அம் ஷ்வாகா (ஸம் - க்ஷம்) வசமாக ஆம்க்ரோம் ஹ்ரீம் அம்க்ஷம் ட்டம் (தேவதத்தரைக்) கொண்டு யீ வருக ஸ்வாகா

7. ஓம் ஐம் க்லீம் ஸௌம் கணபதீ வஓ (வம்) பரவரம் ஸர்வலோகநாத ஸர்வஹ க்ருப ரூஷ வஸம் காத்ம அம் ஷ்வ கலசமாஹ(அமுகவசமாக) ஆம் க்ரோம் ஹ்ரீம் அம் க்ஷம் பத ஸதாரே (ரை) கொண்டுபோக ஸ்வாஹா ||

8. எல்லா ஆகர்ஷணத்துக்கும் பொது மந்திரம்: ஓம் ஐம் க்லீம் ஸௌ: கணபதீ வாவா ஸர்வ லோகநாதா ஸர்வத்ர ஸ்த்ரீபுருஷ சகவாத்மகா ஸர்வலோக வசகாத் மகா ஆகர்ஷய ஆம் க்ரோம் ஹ்ரீம் அம் க்ஷம் பதித ஸதாதே கொண்டுவருக ஸ்வாஹா ஸர்வத்ர ||

9. இந்த ஆகர்ஷணம் 30க்கும் மந்திரம்:—

ஓம் ஐம் க்லீம் ஸௌம் கம்கம் கணபதே வரவரதே ஸர்வலோகநாத ஸர்வஸ்த்ரீபுருஷ வசங்கார ஹஷம் பகவசமாக ஆம் க்ரோம் ஹ்ரீம் அம் க்ஷம் (தேவதேவ தாரை) கொண்டு வருக ஸ்வாஹா ||

10 ஓம் ஐம் க்லீம் ஸௌம் கம்கம் கணபதே வரவரத ஸர்வலோகரா (நா)தா ஸர்வஸ்த்ரீபுருஷ வசங்க

ராய அஷ்கக (அமுக) வசமாகர்ஷ ஆம் மோரம் (க்ரோம்) ஹ்ரீம் அம் க்ஷம் (தத்தரை) கொண்டு வருக ஸ்வாஹா ||

11. ஓம் நமோ பகவதீ ஸப்தாகர்ஷணீ கேசுவரி அபீஷ்ட த(வ)ரத ஸர்வலோக மோகிநீ ஸர்வமயே ஸப்தம் ஆகர்ஷய ஸ்வாஹா ||

12. ஓம் ஸ்ரீம் ஸ்ரீம் லீம் (க்லீம்) ஹ்ரீம் கிலவும் (கிலீயும்) ஸ்ரீம் ஊம் பம் பம் ஸௌம் க்லீம் வரவரதே ஐம் சுவாஹம்.

13. ஓம் ஹ்ரீம் ஓம் வௌஷ்ட் நமஸ்தே பகவதீ ஸர்வேந்த்ரி யாணீ ஸமாகர்ஷயாகர்ஷய ஸ்வாஹா ||

14. ஆகர்ஷணத்துக்கு பீஜம் (மூல எழுத்து-வித்தெழுத்து) ப்லூம் |

வௌஷடு ஆகர்ஷயாகர்ஷய ||

குறிப்புரை

இம்மந்திரம்; அழைப்புவினையேவலின் வகை 7க்கும் உரிய பொர்து மந்திரம் ஆகும். பொது மந்திரம் எனினும் சமானிய மந்திரம் என்றும் ஒக்கும். இதன் தந்திரம் வருந் திருமந்திரத்துட் சொல்லப்படும் என்பதாம்.

மேற்கோள்

ஏதந் மந்த்ரம் வரா ரோஹே ப்ரதாநம் வர்ண யாமிதே |
பாலாம் ப்ரதம முச்சார்ய காணா பத்யந் தேத்ததா ||
வதேத் கணபதே பச்சாது வரவரத ஏவச |
ஸர்வ லோக பதம் ப்ரோச்ய நாதாயேதி பதம் வதேது ||
ஸர்வஸ்த்ரீ புருஷேத்யுக்த்வா வசம் பச்சாத் கராயச |
ஸர்வம் சீக்ரம் ஸமுச்சார்ய ப்ரதமஸ்வரயுக்மகம் ||
பச்சாத்வச டயாகட்ச்வா கவயர்மாபதம் வதேது |

பாசாங் குசௌச மாயாஞ்ச பதமம்ஸம் ஸமுத்தரேது ||
தேவதத்த பதம் க்ருஹ்ய ஆகர்ஷய யுக்மம் புத: |
வரவர டத்வய ஸம்யுக்தோ மந்த்ரஸ் ஸப்வப்ரதா நக : ||
ஆகர்ஷாணாநாம் ஸப்தாநாம் ப்ரதாநோ மந்த்ர ராஜக: |
யந்த்ர ராஜேத் விலிகேத் ஸர்வத்ர பரமேச்வரீ ||

— கட்சபுட தந்த்ரம்

ஏதந் மந்த்ரம் வாரரோஹே ப்ரதாநம் வர்ணயாமிதே |
பாலாம் ப்ரதம முச்சார்ய கம்பீஜம் ப்ரோச்சரேத்ரியா (தா) ||
வதேத் கணபதயே பச்சாது வரம் வரத மேவச |
ஸர்வ லோக பதம் ப்ரோச்ய நாதேதிச பதந்தத: ||
ஸர்வ ஸ்த்ரீ புருஷ வசங்கராய சதத: பரம் |
ஸர்வம் சீக்ரம் ஸமுச்சார்ய ப்ரதமஸ்வர யுக்மகம் ||
மாயா பீஜம் ஸமுச்சார்ய அம்ஸம் பச்சாத் ஸமுத்தரேது |
தேவதத்த பதம் க்ருஹ்ய ஆகர்ஷய பதம் புத: |
வம் வம் ட்டத்வய ஸம்யுக்த: மந்த்ரஸ் ஸர்வப்ரதாநக : |
ஆகர்ஷாணாநாம் ஸப்தாநாம் ப்ரதாநம் மந்த்ர ராஜகம் ||
வௌஷடா கர்ஷணேசா தௌ மந்த்ராந்தே ஸாத்ய நாமச |
ததந்தே வௌஷடே சேதி ஜபே விக்ஞாய மந்த்ர வித ||

என்பனவும் கண்டு நோக்கத் தக்கன.

5. அழைப்புனை யேவலின் தந்திரம்

216. சேருமே மந்திரஞ் செப்புற வட்டத்திற்
கூருமே ஐங்காயங் கொண்ட வதன்மேலே
சேருதே யொன்றச் சிறுதேன் மெழுகாலும்
பாருமே வேண்டிப் பதிக்குங் கருத்தே.

பாட பேதம்

1. சேருமேல் - சேருமிம் - சேருமம் மந்திரஞ்- சேருமியந்திரஞ். சென்றபுற-சென்ற பிற. வட்டத்தின்.

2. கூறுமே - கருமைங்காயங். கொண்டவதின் மேலே -கொண்டதின் மேலே.

3. தேருதே-தேறுதே-யோருமே-யூருமே-ஓருமே ஒன்றச்-ஒன்றைச்-யென்றச்-மெழுக்காலும்.

4. பாருமேல். கருத்தையே - கருத்தையோ - கருமத்தே.

குறிப்புரை

இம்மந்திரம்; அழைப்புவினையேவலின் வகை 7-க்கும் பொதுவாயுள்ள தந்திரத்தை உணர்த்துகின்றது. செப்புற = செம்மை - செவ்வையாக. வட்டம் = இயந்திரத்தில் உள்ள புறவட்டம் - சக்கரம். கூர்=காரம் - கார்ப்பு - கடு. காங் கரும் ஏட்டிற் கடுப்பூசி – திருமந்திரம். 999

ஐங்காயம்: சுக்கு, மிளகு, திப்பிலி, பெருங்காயம், வெள் ளுள்ளி என்பன. முன்னும் விளக்கப்பட்டது. சிறுதேன் = சிறுதேனீ - ஒருவகைத் தேனீ - கொசுக்குத் தேனீ. மெழுகு - தேன் மெழுகு. துன்று மெழுகையுள் பூசி - திருமந்திரம் 997; 300: 200-201. பதித்தல் - அழுந்தப் பொதிதல்.

மேலே சொல்லப்பட்டதாகிய அழைப்பு வினை யேவலின் வகை 7-க்கும் உரிய சாமானிய (பொது) மந்திரத்தை, இயந்திரத்தின் புறவட்டத்தில் திருத்தமாக வரைந்து, ஐங்காயம் பூசி, சிறுதேனீயின் மெழுகாற் பொதிந்து வைத்து விதிப்படி பூசிக்க என்பதாம்.

இவற்றின் தியானம் முதலியன, அடுத்துவருந் திருமந்திரச் செய்யுட்களிற் சொல்லப்படும்,

5. அழைப்புவினை யேவலுக்குரிய இறைவியின் சொரூபத்தியானம்

217. கருத்துந் திருமேனி காண்பது நீலம்
திருக்கை இரண்டிற் சேர்பஞ்ச பாணம்
கருப்புச் சிலையும் கலந்துடன் ஏந்தி
வருத்தி யழைக்கின்ற வாறிது வாகுமே.

பாட பேதம்

1. கருதுந் - கருத்துத் - கருத்தில் - கறுத்த. திருமேனிக். காணியது - காணிலது. நீலந்.

2. யிரண்டினில் - இரண்டிலுஞ். சேருஞ் சரபாணங், சேர் பஞ்சாபாணமுங் - சேரஞ்சு பாணங் - சாபஞ்சர பாணம் - திருக்கையிலிரண்டும் சேரும் பஞ்ச பாணம்.

3. கருத்தி விசையக் கலந்துட னேத்தி. ஏத்தி.

4. வருந்தி வாறிது. வாமே - வாறிது தாமே - வாறிது தானே.

குறிப்புரை

இம்மந்திரம்; அழைப்புவினை யேவலின் வகை 7-க்கும் உரிய புவனாபதியின் திருவுருவத் தியானம் உணர்த்துகின்றது.

கருத்து = கருதப்பட்டது - எண்ணம் - விருப்பம். மேனி - திருவுருவத்தின் நிறம். திருமேனிநீலம். நீலமேனி வாலிழை பாகத்து - ஒருவன்-ஐங்குறுநூறு 1. பஞ்சபாணம் - ஐம்மலர்க் கணை; (1) தாமரை (2) மா (3) அசோகு (4) முல்லை (5) கருங்குவளைகளின் மலர்களாகிய அம்புகள். முல்லை அசோகு முழு நீலம் சூதப்பூ - அல்லி முளரியோ டைந்தெனமொழிப - திவாகரம். கருப்புச் சிலை - கரும்பாகிய வில். வருத்தல்=வருந்தல் - வருவித்தல் அழைக்கின்ற ஆறு - அழைப்பு வினை யேவலின் தன்மை. இஃது அழைப்புவினை யேவலின்



ஆகர்ஷண கன்மத் தியானத் திருவுருவம்

செய்யுள்: 217

தியானமாகும் என்க. பாணம் வலக்கையிலும், சிலை இடக்கையிலும் உள்ளன என்க.

அழைப்புவினை யேவலில், புவனாதியார் நீலமேனியராயும், கரும்புவில் ஐம்மலர்க்கணை ஆகியவற்றை ஏந்திய திருக்கைகளை உடையவராயும் பதுமாசனத்தில் வீற்றிருப்பவராகத் தியானிக்க என்பதாம்.

மேற்கோள்

இந்தக் கன்மத்தின் தியானம் ஈண்டுக் கூறியுள்ளவாறே கட்சபுடத்திலுங் காணப்படுகின்றது.

தாளணி நூபுரஞ் செம்பட்டுத் தானுடை
வாரணி கொங்கை மலர்க்கன்னல் வாளிவில்
— திருமந்திரம் 1049.

இருந்த கரமிரு வில்லம்பு கொண்டே — 1371.

விற்றாங் கியகரம் வேல் நெடுங்கண்ணி வியன்கரமே
நற்றாள் நெடுஞ்சிலை நாண்வலித்த கரம் நின்கரமே.
— தேவாரம் 5152

5. இதுவும் அது

218. இதுவா மியந்திரம் ஏற்றிய பின்னைப்
பொதுவா மிரவிற் புனைவிளக் கேற்றி
அதுவா யிருக்கும் அவள்மணக் கோலம்
பொதுவா யிருக்கும் புவனைசக் கரமே.

பாட பேதம்

1. இதுவாவியந்திர - மியந்திர மேந்திய பின்னை - இதுவாகிய மந்திர மேற்றிய.

2. புனைவிளக்கேற்றிட - விளக்கேற்றின் - விளக்கேத்தி - விளக்கேந்திற்.

3. றதுவாயிருக்கு - யதுவாயிருக்கும் வடிவுமணக் - வடிவ மண - வடிவமணக் - வடிவாம் எண்டிங் கோலம் - மவள் மணங்.

4. புனைச்சக் - புனைந்தசக் - புனைசக் - புனை - பின்சக். கரங்களே.

குறிப்புரை

இம்மந்திரம்; அழைப்புவினையேவலின் வகை 7-க்கும் உரிய தியானமும், காலமும் உணர்த்துகின்றது.

இது ஆம் - அழைப்புவினை யேவலின் தியானம் இது ஆகும். பொது ஆம் - அழைப்புவினையேவலின் வகை 7-க்கும் பொதுவாகவுள்ளது ஆகும். புனை = பொலிவு - அழகு; புனை யழல் ஓம்புகையந்தணாளர்.

— தேவாரம் 60.

மணக்கோலம்: என்றது மேலே சொல்லப்பட்ட தியாதின் திருவுருவை; மலர்க்கணையும்; கரும்பு வில்லும் ஏந்தியிருத்தல் பற்றி இங்ஙனம் அருளினார். புவனை: சித்தும்சடமும், சொல்லும் பொருளுமாயுள்ள எல்லாப் புவனங்களையும் உடைமைப் பொருளாக உடையவள். புவனம் = பிரபஞ்சம் - உலகம்.

புவனை கர தலமணியே.

— திருப்போரூர் சந்நிதி முறை.

இச்சொல்லின் ஆண்பால் புவன். புவனாகிப் புவனங்கள் அனைத்துமாகி.

— தேவாரம் 7031.

புவனைசக்கரம் - புவனைசக்ரத்துள்ளே பூதநாத வெளியிலே.

— சிவவாக்கிய தேவர்.

அறத்தின் நீள்தகர் புவனைசக்கரமென ஆன்ற - திறத்த பொன்மதில் ஏழுடைச் சின்மயக்கோயில்.

— காஞ்சிப்புராணம் திருநகரப் - 63.

மேலே சொல்லப்பட்ட திருவுருவத்தியானமானது அழைப்பு வினை யேவலின் திறம் 7 – க்கும் பொதுவாயுள்ள தாகும். இந்தக் கருமத்தை இரவில் செய்யத் தொடங்க வேண்டும் என்பதாம்.

இக்கருமத்திற்குரிய திசை, யாமம், ஓரை, இடம் முதலிய தந்திரங்கள் வருந்திருமந்திரங்களில் வகுத்துக் கூறப்படும்.

5. அழைப்பு வினையேவலின் திசை

219. சக்கரந் தன்னைச் செபித்துரு வேற்றிடுந்
திக்கது வேதென்னிற் றென்றிசை யாகிடும்
உக்கிர மாக உடன்று புவனையைச்
சிக்கென நோக்கிச் செபிப்பது தானே.

பாட பேதம்

1. தன்னை தனித்து – தன்னைத் தனித்துரு. செபித்துரு வேற்றி – தனித்துருவேற்றித் – தனித்து வெதுப்பித் – தனித்து வெதுப்பிடிற் - தனித்து வெதுப்பிய – தனித்துருவேற்றி – தனித்துரு வேற்றிடும்.

2. றிக்கது – திக்கது யேதெனிற் – வேதினிற் – திக்கது நோக்கிடத் தென்றிசை. யாயிடும் - யாவிடும் - யாகும் - யாகு.

3. முக்கிரமாக - முக்கியமாக. உடனே - ஊன்று. புவனையை - புவனையே - புவனை.

4. சிக்கெனனோக்கிச் - சிக்கனமாக ஜெபிப்பது - சிக்கென நோக்கித் தியானித்திருப்பதே - செப்புக தானே – சேவிப்பது - செபித்ததுதானே.

குறிப்புரை

இம் மந்திரம்; அழைப்பு வினையேவலுக்குரிய திசையினை உணர்த்துகின்றது.

உருவேற்றல் - உருக்கணித்தல் திக்கது = திக்கு - திசை. ஏது - யாது? ஆகிடும் - ஆகும். உக்கிரம் = கடுமை - பெருக்கம்.

உக்கிரமில்லாமையும் உணர்த்தவல் லீர்களே
— தேவாரம் - 7599.

உடன்று - வருந்தி. உண்ணின் றுடற்றும் பசி
— திருக்குறள் 13.

முன்னர் வருத்தி யழைக்கின்ற வாறிது வாமே (217) என்றதும் நோக்குக. சிக்கென - உறுதியாக. எம்பொருட் டுன்னைச் சிக்கெனப் பிடித்தேன். — திருவாசகம். 536.

நோக்கி - தியானித்து.

இந்த இயந்திரத்தைப் போற்றிப் பூசித்து மந்திரவுருக் கணித்து இருத்தற்குரியது தென்றிசையாகும். அவ்வாறு மந்திரங் கணிக்குங்கால் முயன்று பரிந்து புவனையைத் தியானித்து உருவேற்றுக என்பதாம்.

5. அழைப்பு வினையேவல் இயந்திரங்களின் வைப்பிடத் தந்திரம்

220. தானத் திருந்து தயங்கிய வேழினில்
மானொத்த வேல்விழி மங்கையர் மைந்தர்க்கு
யானை குதிரை யரசர் மனையுளே
ஆனை பரியேறும் ஐயன் கோயிலே.

பாட பேதம்

1. தானத் தருந்து. தயங்கிய தேழினில் - தயங்கிய தேழிரா - தயங்கிய தேழில் - தயங்குவ தேழிரா - தயங்குவதிலே தெளிவர் காண் - தயவதிலே தெளிவர் காண்.

2. மங்கையு மாந்தர்க்கும் - மங்கையர் மா(ந்)தர்க்கும். மங்கையரி மாந்தர்க்கும் - மைத்தற்கு.

3. ஆனை - மியானை. அரசன். மனையுள்ளே.

4. யானை - யானைப்பரி - யானை குதிரை பரியேறும்.
ஐயன்றன் - ஐயனரன் - ஐயனார் - யெருமை யன்றன்.
கோவிலே - கோவிலிலே.

குறிப்புரை

இம்மந்திரம்; அழைப்பு வினையேவல்கட்குரிய இயந்திரங்களின் வைக்குமிடத்தினை யுணர்த்துகின்றது.

தானம் = இடம் - நிலை. தயங்குதல் = தோன்றுதல் - விளங்குதல். ஏழில் - மேலே சொல்லப்பட்ட அழைப்பு வினையின் வகை ஏழனுள். மனை - உறைவிடம். மான் ஒத்த வேல் விழி: மான் ஒத்த விழி - வேல் ஒத்த விழி; பிணைமானின் பார்வை போலும் மருண்ட நோக்கினையும், வருத்தும் கூரிய அயில் போலும் வடிவினையும் உடைய கண்கள்; ஒரு பொருட்டு ஈருவமம் புணர்க்கப்பட்டமை பொருள் வேறுபாடு பற்றி என்க.

அழைப்பு வினையேவலில் இயந்திரத்தை; மங்கையர்க்கும் மைந்தர்க்கும் மன்னர்க்கும் அவ்வவர் உறையும் மனையினுள்ளும், யானை குதிரைகட்கு அவையுறையும் இடங்களாகிய கரிக்கூடம் பரிப்பந்திகளிலும் வைக்க என்பதாம்.

ஏனையவற்றின் வைப்பிடம் வருஞ்செய்யுளிற் சொல்லப்படும். ஐயன் - ஐயனார். ஆனை - வெள்ளையானை. பரி - காரிக்குதிரை. இவையிரண்டும் ஐயனுடைய ஊர்திகள். சாத்தன் வெள்ளை யானை வாகனம் - காரி யூர்தி காரிக் குதிரை - கோழிக் கொடியும் ஆகும் என்ப - பிங்கலம் என்பனவறிக. இந்த நான்காம் அடியின் பொருள், அடுத்துவருஞ் செய்யுளை நோக்கியது.

இதுவும் அது

221. கோயிலி லாகுங் குவலையஞ் சத்துரு
சேயில் விருகஞ் செலத்துடன் ஆயுதம்
பாயலில் வந்து படர்நித் திரையொழிந்
தாய தியானம் அறிந்து கொள் வீரே.

பாட பேதம்

1. கோவிலாகுங் - கோயிலியாரங் - கோயிலே யாயா குவலையஞ் - கோயிலாற்றங் குவலையார் - கோயிலி யாரங் குவலைவறா (லு) சத்துரு - குவலை வறாச் சத்தரு - கோயிலிலாகுங் - குவலையஞ் சத்துருவுஞ் - குவலையமும் சத்துருவும் - குவலையார் சத்துருஞ்.

2. சேயில் மிருகஞ் - சேயிலமருஞ் - சேயில் கருமஞ் ஜெலத்துடன் - சிலத்துடன்.

3. பாயினில் - பாயில் - யாதியில் - பாதியிரவில் வந்து படாளநித் திரையொளி - திரையொழிந்து.

4. ஆய - தோய - கொள்ளீரே.

குறிப்புரை

இம் மத்திரம்; அழைப்பு வினையேவல் இயந்திரத்தை வைக்குமிடங்களுள் எஞ்சியவற்றை உணர்த்துகின்றது.

குவலயம் = உலகம் - உலக அழைப்பு வினையேவல். சத்துரு - பகைவர் அழைப்பு வினையேவல் சேய் - சேய்மை; சேயில் விருகம் - சேய்மைக் கண் உள்ளனவாகிய விலங்குகளின் அழைப்பு வினையேவல். பாயல் = பாய் - படுக்கை. படர் நித்திரை - கண்படைநிலை. பாயலில்படர் நித்திரை ஒழிந்து - படுக்கையிற் கண்படை கொள்ளாமல்.

அழைப்புவினை யேவலில் மேலே உரைக்கப்பட்டவை போக எஞ்சியுள்ள உலகம், பகைவர், விலங்கு, நீர், படைக்கலம் ஆகிய

இந்த அழைப்பு வினை யேவல்கட்குரிய இயந்திரங்களை ஐயன் கோட்டத்தில் வைக்க என்பதாம்.

ஆனை பரியேறும் ஐயன் என்ற விதப்பால் ஐயன் கோயிலின் முன்னர் நிற்குங் கரிபரிகளினுடைய வலக்காலின் கீழே வைத்தல் வேண்டும் என்பது பெறப்படும். விதப்பு - மிகுதி. விதப்புக் கிளவி வேண்டியது விளக்கும்.

5. அழைப்புவினை யேவலின் தந்திரத்திற்குரிய யாமமும் ஓரையும்

222. வீரன்றன் கோயிலில் வேண்டும் பலிசெய்யும்
நேரம் பொழுபோய் முற்சாமம் பின்னோரை
தூரம் பெருகிய சுக்கிர ஓரையாய்ச்
சேரும் இனிச்சொல் சேர்ந்தவித் தேடணை.

பாட பேதம்

1. கோவிலில். பலிசெய்து - வலிசெய்து.

2. போயமுற் - போயிமுற் போயிமுதற் - போய பின்முற். முற்சாமம்பின் - முதற்சாமம்.

3. தூரம் பேரினில் பெருகிய வோரையாய்ச் - தூரரு பெரிநில் - தூரம்பெருநில் - பேரிநில் - பெருனில். ஓரையுந் தூரம் பெரு(று) சுக்கிரவாரம் - சுக்கிர வோரையாம்.

4. போரு. சிறந்தவித் - செறிந்துவித் - செறிந்துவிது வேஷணை - சேர்ந்தவிடத் தேடணையே சேறா வித்தேடணையே - சேர்ந்த வித்தேடணையே - வித்து வேடணை.

முடிவு: ஆகருஷண முற்றும் - ஆகருஷணையாதி முற்றும். ஆகருஷணத்துக்கு வைக்குமிடம்: வெள்ளி – தெற்கு. முதல் யாமம். கடுகு சிறிதேன் மெழுகுபூசி விளக்கில் வெதுப்பி ஐயன் கோயில் யானை வலக்கால்,

குறிப்புரை

இம்மந்திரம்; அழைப்புவினையேவலின் தந்திரத்திற்குரிய யாமமும், ஓரையும், ஆகியவற்றைக் கூறி முடித்து அடுத்துவரும் ஏடணைக் கன்மத்திற்குத் தோற்றுவாயும் உணர்த்துகின்றது.

வீரன் = ஐயன் - ஐயனார். பலி = பூசை - அவி - கடவுளரைக் குறித்து வேள்வித்தீயில் சொரியப்படும் நெய் முதலிய பொருள்கள். பலியும் அவியும் பரந்து புகையும் - ஒலியும் எம்மீசன் தனக்கென்றே உள்கிக் - குவியுங் குரு மடங் கண்டவர். — திருமந்திரம் 2649.

வித்தேடணை = வித்வேடணம் - வித்வேஷணம் - வித்வேடம் - வித்வேஷம் - வித்துவேடம் — பகை - விரோதம்.

இந்த அழைப்பு வினையை ஆரம்பித்தற்கேற்ற காலம்: வெள்ளிக்கிழமை இரவு முதல் யாமத்தின் கடை சுக்கிர ஓரையாகும். இதனில் தொடங்கி முறைப்படி போற்றி வழி பாட்டினையாற்றி முற்றியபின்னர், ஐயன்கோட்டத்துக்குச் சென்று, பூப்பலியும் அவிப்பலியுமாகிய பூசனையைப் புரிந்து இவ்வியந்திரத்தை மேற்சொல்லப்பட்ட இடத்திற் புதைக்க இந்த அழைப்புவினையேவல் சித்திக்கும் என்பதாம்.

மேற்கோள்

வீரன் = வீரபத்திரன் - வீரமாகாளன் - ஐயனார். வீரமாகாளன் - ஐயனுடைய படைத்தலைவன். ஈண்டு ஐயனைக் குறித்து நின்றது. ஐயன் - சாத்தன்.

பையரா அமளி யானும் பரம்பொருள் முதலும் நல்கும்
ஐயனே ஓலம் விண்ணோர்க் காதியே ஓலஞ் செண்டார்
கையனே ஓலம் எங்கள் கடவுளே ஓலம் மெய்யர்
மெய்யனே ஓலம் தொல்சீர் வீரனே ஓலம் ஓலம்.

— கந்த. மாகாளர், 1

ஆரணச் சுருதி ஓர்சார் அடலுருத் திரனென் றேத்துங்
காரணக் கடவுள் ஓலங் கடல்நிறத் தெந்தாய் ஓலம்
பூரணைக் கிறைவா ஓலம் புட்கலை கணவா ஓலம்
வாரணத் திறைமேற் கொண்டு வரும்பிரான் ஓலம் என்றாள்.
— 2

தாரணி முதல மூன்றுந் தலையளி புரிந்து காப்பான்
காரணி செறிந்துற் றன்ன கரியவன் கடவுள் வெள்ளை
வாரண முடைய ஐயன் மற்றிது பணித்தான் என்பேர்
வீரரில் வீரனான வீரமா காளன் என்றான். — 12

புவனம் ஈந்து புவனத் திறையென
அவனை நல்கி அமரரும் மாதவர்
எவரும் ஏத்திடும் ஏற்றமும் நல்கினான்
சிவன தின்னருள் செப்புதற் பாலதோ.
— மாசாத்தாப் 51

அங்கண் மேவி அரிகர புத்திரன்
சங்கை யில்பெருஞ் சாரதர் தம்மொடும்
எங்கு மாகி யிருந்தெவ் வுலகையும்
கங்கு லும்பகல் எல்லையுங் காப்பனால். — 54

காருறழ் வெய்ய களிற்றிடை யாகிப்
பாரிடர் எண்ணிலர் பாங்குற நண்ணப்
பூரணை புட்கலை பூம்புற மேவ
வாரண மூர்பவன் முன்னுற வந்தான், — 58

அரிய பூரணை புட்கலை யாமிரு
தெரிவை மாமுலைச் செங்கள பத்தொளி
விரவு சுந்தர மேருவொப் பாம்புயக்
குரிசில் தண்டைக் குரைகழல் போற்றுவாம்.
— திருச்செந்தூர்ப்.

கச்சி வளைக்கச்சிக் காமக்கோட் டங்காவல்
மெச்சி யினிதிருக்கும் மெய்ச்சாத்தன் – கைச்செண்டு
கம்பக் களிற்றுக் கரிகாற் பெருவளத்தான்
செம்பொற் கிரிதிரித்த செண்டு.
— சிலப். 5:95 – 8. அடியார். மேற்.

சாத்தனை மகனாவைத்தார் திருப்பயற்றூரனாரே.
— தேவாரம். 4475

ஆங்கு வடமேற்கில் ஐயனார் கோட்டத்தில் . வைத்திடும்
— திருமந். 999.

சுதக்காரி - வாமன் புரவிமேல் வந்தனைய.
— திருமுறை. 11. 8:40.

சேரர் காவலர் விண்ணப்பஞ் செய்த அத் திருஉலாப்புற
மன்று
சாரல் வெள்ளியங் கயிலையிற் கேட்ட மாசாத்தனார்
தரித்திந்தப்
பாரில் வேதியர் திருப்பிடவூர்தனில் வெளிப்படப்
பகர்ந்தெங்கும்
நாரவேலைசூழ் உலகினில் விளங்கிடநாட்டினர் நலத்தாலே.
— பெரிய. 4285

செண்டுகை ஏந்தி - வித்தகக்கரி மேற்கொள்ளும் காரிமேவு
செண்டணை வெளியும் ஒன்றுளதால் — 1164

பொற்றூணில் வந்தசுடர் பொய்கை பயந்தவண்ணல்
சிற்றாயன் முன்வனிதை யாகியளித்த செம்மல்
மாற்றியார்கொல் என்னின் மலர்தூவி வணங்கி நாளுங்
கற்றார் பரவுங் கநகாரி நகாரி காரி. — தண்டி. 95. மேற்.

கடாநிரை யேழுயர் கரிகண் மேல்கொடு
நாடாயுளங் களித்திறு மாந்து நாடொறும்
வடாதுபாற் செண்டணை வெளியின் மாறடு
மடாவலி படைத்தவன் ஆடல் பேணுமால்.
— காஞ்சிப். மாசாத்தன்றளிப். 33.

என்பனவும், பிறவுங் காண்க. இம்மந்திர நூலுள் ஆங்காங்கே பல விடங்களிலும் ஐயனைப்பற்றி விதந்து சொல்லப்பட்டிருத்தல் பற்றி மேற்கோள் பல குறிக்கப்பட்டன.

ஐயன்றன் ஊர்தி - யானையும், குதிரையும். கொடி - கோழி. படைக்கலம் - வளையும் - செண்டும். சத்தி - பூரணை, புட்கலை. புவனம் - கீழ்பால் இந்திரன் திசைக் கண்ணதாகிய சாத்த புவனம் என்க.

13 - ஆம் அதி. 6 - வித்வேஷண கன்மப் பிரயோகம்
பகைப்பு வினையேவலின் வகை - 3

223. ஏடணை தன்னில் இயம்பும் உலகமும்
வீடணை கின்ற விருகமும் ஆயுத
மோடொரு மூன்று முழன்று வருவகை
பாடுகின் றேனினிப் பற்றிலக் கம்மே.

பாட பேதம்

1. உலோகமும் - உலகும்.
2. மிருகமு - மிருகமாயிதம் - ஆயுதமும்.
3. மூடொரு - மூடரு - யூடொரு வகன்று முயலும் வகையது - மூன்று யுழன்று - மூன்று வுழன்று. வரும் வகை - வருகை - வகையது.
4. றேனணி பற்று - றனணிப்பற்று - லேனினியாரு - றெண்ணி பற்று. பற்று மிலக்கமே - பற்று மிலெக்கமே.

குறிப்புரை

இம்மந்திரம்; மேல் நிறுத்த முறையானே, ஆறு ஆம் எண்ணு முறைமைக்கண் நின்ற பகைப்புவினை யேவலைக் கூறுவான் தொடங்கி முதற்கண் அதன் வகையின் தொகையினை உணர்த்துகின்றது.

ஏடணை = வித்வேடணம் - பகை - போர். ஏடணா - ஏடணை. இயம்புதல் - சொல்லுதல். வீடு - விடுதல். விருகம் - விலங்கு. ஆயுதமோடு - படைக்கல ஏடணையுடன், உழலல் - சுழலுதல். பற்று = பற்றுக்கோடு - ஆதாரம்.

வித்வேடண கன்மத்தின் வகை - 3. அவையாவன:

(1) உலக வித்வேடணம்

(2) விருக வித்வேடணம்

(3) படைக்கல வித்வேடணம்

என்பன. இனி, இவ்வினைகட்குப் பற்றாயுள்ள இலக்கங்களைக் கூறுகின்றேன் என்பதாம்.

நான்காம் அடி நுதலிப் புகுதல் என்னுந் தந்திரவுத்தி.

மேற்கோள்

வித்வேஷணந்து த்ரிவிதம் லோகஸத்வத் விஷாம்
ப்ரியே ||

— கட்சபுடதந்த்ரம்.

1. உலகவித் தேடணை. வகை – 13.

1 - வாது வெல்ல

224. இலக்கம் உலகவித் தேடணை யெண்ணிற்
சொலத்தக்க வாது தொடங்கிடல் வெல்லப்
பலிக்கும் பதினேழ் பாரறுபத் தாறு
நலக்குநாற் பத்தாறும் நாஞ்சொல்லு மதுவே

பாடபேதம்

தலைப்பு:— தேசவேடணை.

1. இலக்க – லெக்க. முலோகவித். யெண்ணிச் - யெண்ணிற்.

2. தக்கவாறு - தகவாது - தகாவாது. துடங்கிடல்.

3. பதிக்கும். பதினேழும் பாரறு பத்தாறும் – பதினேழுமாறுபத்தாறும் - பதினேழுமாறு பத்தாறு - பதினேழறு பத்தியாறு–பதினேழ் அறுபத்தியாறுந்-பதினேழறுபத்தியாறும் -யாறுந்.

4. நலக்கநாற் - நலத்தநாற் - பத்தாறு. நாஞ்சொல்லு வோமே - நாளுஞ் சொல்லுவோமே - சொல்லு வதுவே.

குறிப்புரை

இம் மந்திரம்; மேல் நிறுத்த முறையானே உலகவித் தேடணைக் கன்மம் கூறத் தொடங்கி, முதற்கண் வாது வெல்லற்குரிய இலக்கங்களை உணர்த்துகின்றது.

உலகம் - உலகமக்கள். எண்ணில்-எண்ணுமிடத்து. வாது = விவாதம் - வழக்காடுதல் - வாதுசெய்தல் - சொற் போர் புரிதல் - வாதம் - மெய்யுணர்வு காரணமாகச் செய்யுந் தருக்கம். இது நிகழும் இடம் - பட்டிமண்டபம் எனப் படும். வாதி — ஏதுவும், மேற்கோளும் எடுத்துக் காட்டிப் பிறன் கோளை மறுத்துத் தன்துணிவை நிறுத்துபவன் தொடங்கிடல் - தொடங்குதல். பலித்தல் - பயனுடைத்தாதல். நலக்கு = நலத்தல் - நலன் நன்மை - பயன்.

1. வாது வெல்ல:— 17 - 66 - 46 — [கட்சபுடம்]

இலக்க வேறுபாடு

1. வாது வெல்லும் - தகாதவாது தொடங்கி வெல்ல - சண்டையுண்டாக்கி வெல்ல:—

17 - 66 - 46 = 129. 17 - 46 - 66 = 129.
17 - 16 - 46 = 79. 63· 79. 129. தேச வேடணை - 189.

நான்கு மூலையிற் புதைக்க - 209. 313.

மேற்கோள்

வித்வேஷண மாவது : பிராணசகித அன்னியோன்னிய முதலான பேர்களை ஒருவனுக்காகாமல் துவேஷஞ்சிகிறது.

— தத்துவ நிசாநுபோகசாரம். அத் 42. கவுளயாமலை மதம்.

விருது பகரும் வெஞ்சொற் சமணர் வஞ்சச் சாக்கியர்
பகரும் மொழியைக் கொள்ளார் — தேவாரம் 741

வாதுசெய் சமணும் சாக்கியப் பேய்கள் — 840.

வாதில் வென்றழிக் கத்திரு உள்ளமே —

சீலம் வாதுசெயத்திரு உள்ளமே — 3956-3964.

வாது செய்து மயங்கும் மனத்தராய் — 6237.

நலக்க அடியோமை ஆண்டுகொண்ட - திருவாசகம்
— 200.

அமணர்தம்மை - யாவருங் காண வாதில் வென்று
— பெரியபுராணம் 2637.

நலக்குரியார் யார் எனின் = நலக்கு நன்மை. நலத்திற்கு என்பது நலக்கு எனக் குறைந்து நின்றது.
— திருக்குறள் 149. பரிமேல்.

வள்ளல் குருராயன் வாதுவென்ற சம்பந்தன்
— ஒழிவில் ஒடுக்கம்.

சொற்போர் புரிவர் நான்மறையா றங்கம் உணர்த்த
தொழுகுலத்தோர். — பிரபுலிங்க லீலை.

வருகும் புத்தரை வாதினில் வெல்லுமே வாதவூரர்
வழங்கிய பாடலே. — தனிப்பாடல்.

பட்டிமண்டபத்துப் பாங்கறிநது ஏறுமின் - மணிமேகலை.
சொற்புலவோர் வர்தப்போரும் - கலிங்கத்துப் பரணி :
— 276.

பட்டிமன் தென்னன் பாண்டியன். — தேவாரம் 3342.

பன்னருங் கலைதெரி பட்டி மண்டபம். — கம்பர்.

தெற்கண் வாயில் திறவாத பட்டிமண்டபத்தார் பொருட்டு.
— தொல். செய் - சூ. 179. பேர்.

இம் மண்டபம், சங்கம் - கழகம் - கூடல் - தொகை என்றும் வழங்கும்.

2 - சொல். 3 - வழக்கு ஆகியவற்றின் ஏடணை.

225. சொல்லுமது வெல்லத் தோன்றும் பதின்மூன்றும்
நல்ல வெழுபதும் நாற்பத்தெட் டாயிடும்
வெல்லப் பதினேழும் வேண்டுநாற் பத்தெட்டும்
நல்ல நாற்பா னால்வழக்கு வெல்லுமே.

பாட பேதம்

1. தொண்ணூறும் பதிமூன்று - பதின்மூன்று.
2. வெழுபது. டாயிடு - டாகிடு.
3. பதினேழு வேண்டும் நாற். பத்தெட்டு. மெல்லப்.
4. நல்லதோர் நாற்பதும் நல்வழக்கு - நல்லநாற் பத்து நால் நல்வழக்கு - நல்ல நாற்பத்து நால் வழக்கு - வெல்லதோ (வோ)ர். நாற்பத்து நால் வழக்கு. வெல்லவே.

குறிப்புரை

இம்மந்திரம்; சொல், வழக்கு ஆகிய ஏடணைகளின் இலக்கங்களை உணர்த்துகின்றது.

சொல்லுமது வெல்ல - சொல் வெல்ல. ஆயிடும் - ஆகும். நாற்பானால் - நாற்பத்தி நான்கு. வழககு - நியாய வாதம். சொல் - பேச்சு.

2. சொல் வெல்ல:— 13 - 70 - 48 (கட்சபுடம்)
3. வழக்கு வெல்ல:— 17 - 48 - 44 —

இலக்க வேறுபாடு

2. சொல் வெற்றி - சொல் வெல்லும் - சொல்லாற்றல் உண்டாகும் - வாக்சித்திப் ரதம்:—

13 - 70 - 48 = 131 52 - 48 - 70 = 170.
72 - 95 - 40 = 207. 90 - 70 - 48 = 208.

சிரஇல் - 64. 102. 131. 170. 177. 187. 207. 208.

3 வழக்கு வெற்றி - வழக்கு வெல்லும் - நீதிமன்றத்து நியாயாதிபதிகளிடனித்தே வழக்கு வெற்றியாம் - ப்ராத்வி வாக் ஜயப்ரதம்; சிரசில்:—

17 - 48 - 44 = 109. 44 - 17 - 48 = 109.

17 - 48 - 44 = 105. 53. 105. 109. 205. 413.

மேற்கோள்

சொல் = பேச்சு; சொல்லாடச் சோர்வு படும்
— திருக்குறள் 405.

சான்றோர் - கொடுத்தார் எனப்படுஞ் சொல்
நாலடி. 100. — உறுதிமொழி.

தோழமை யென்றவர் சொல்லிய சொல் ஒரு சொல்லன்றோ கம்ப. குகப் 15. — மந்திரம்.

தேவர் குறளும்... திருமூலர் சொல்லும் — மூதுரை.

சொல்லுங்காற் சொல்லும் பலவுள — புறப். 12;

சாபம் சொல்லொக்குங் கடிய வேகச் சுடு சரம்
— கம்ப. தாடகை. 72.

கட்டளை என்சொற் கடந்தால்
— கம்ப. நகர்நீங்கு 104.

செல்வாக்குள்ளவனாதல். வாய்ப்பகையுட் — சொல்

வென்றி வேண்டும் இலிங்கியும் — திரிகடுகம் 17.

சொற்சோர்பு படாமை. சொற்சோர்வு படேல்
— ஆத்திசூடி.

சொல்லுக சொல்லைப் பிறிதோர் சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை யறிந்து — திருக்குறள் 645.

சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது. — 647

4 - படை. 5 - அங்கம் ஆகியவற்றின் ஏடணை.

226. வெல்லு படைக்கு விளங்கொரு நூற்றைஞ்சு
நல்லவெண் பத்து நாலறு பத்திரண்டும்
சொல்லங்கம் வெல்லத் தொடர்ந்தறு பத்திரண்
டெல்லன் பத்தே ழெகுமறு பத்தெட்டே.

பாட பேதம்

1. விளங்கவொரு. நூற்றைஞ்சும் - நூற்றஞ்சு - நூறும்.

2. நல்லதோ ரெண்பத்து - நல்லதோ ரெண்பதும் - மல்லதோரெண்பத்து - மல்ல வெண்பத்து. நாலறு பத்திரண்டுஞ் - நாலுமறுபத்திரண்டுஞ் - நாலெழு பத்திரண்டு - நாலுமெழுபத்திரண்டுஞ் - நாலெழு பத்திரண்டும்.

3. சொல்லகம். தொடர்ந்தவறு - துடர்ந்தறு. பத்தி ரண்டு - பத்திரண்டும்.

4. எல்லையைம் பத்தேழு - எல்லை பதினேழு - டெல்லைம் பத்தேழு மேகுமறு - வல்லம் பத்தேழு - வல்லபதினேழு - வல்லம்பத்தேழு மறுபத்தெட்டாமே - மேழுமறு - மெழுமறு - பத்தெட்டாமே - பத்தெட் டாகுமே.

குறிப்புரை

இம் மந்திரம்; படை, அங்கம் ஆகியவற்றின் ஏடணைக்குரிய இலக்கங்களை உணர்த்துகின்றது.

படை - சேனை. அங்கம் - போர். அங்கம் இடம்பூண் உருவகம் போர் அப்ரதாநம் உடல் உடலின் - அங்கம் உபாயம் குறிமடி கோது அருகு ஓர் தேயம் ஓர் கூத்தாம்.

— நாநார்த்த தீபிகை 88.

தாபதர்தம்மோடு எம்மோடு அங்கம் வந்துற்றதாக

— கம்ப. கும்ப. 15.

எவ் = விளக்கம் - மேன்மை - தொல்.

4. படை வெல்ல:— 105 – 84 – 62.

5. அங்கம் வெல்ல;— 62 – 57 68 — கட்சபுடம்.

இலக்க வேறுபாடு

4. படை வெல்லும் - சேனை வெல்லும்; சிரசில்:—

105 – 84 – 62 = 251. 100 – 84 – 62 = 246.
100 - 84 – 72 = 256. 106 – 84 – 62 = 252.
105 – 84 - 72 = 261.
84. 86. 124. 129. 154. 246. 252. 256. 259. 261.

கட்சபுடம்: பரசேனா ஜயப்பிரதம்:—
100 – 84 – 62 (= 246)?

5. அங்கம் - அங்கிஷம் - சொல்லங்கம் வெல்ல வெல்லும்:—

62 – 57 – 68 = 187. 62 - 24 - 68.
72 - 95 – 40 = 177. 154. 177.

கட்சபுடம்: துவந்தயுத்த ஜயப்ரதம்
62 – 57 - 68 = 187.

6 - சொல்; 7 – எழுத்து ஆகியவற்றின் ஏடனை

227. எட்டிய சொல்வெல் லெழுபத் திரண்டுடன்
தொட்ட தொண் ணூற்றஞ்சுந் தோன்றிய நாற்பதும்
இட்ட வெழுத்துவெல்ல இருபத் தாறுங்
கட்டுநூற் றாறுங் காணெழுபத் தேழே.

பாட பேதம்

1. எட்டாய - எட்டாத – வெல்லவெழுபத் – வெல்ல வெழுபத். திரண்டெனத் – திரண்டே.

2. ணூற்றஞ்சு – ணூற்றைஞ்சுந். நாற்பது.

3. மிட்ட வெழுத்துக்கள் வெல்லவிருபத்தாறும் – இட்ட வெழுத்துக்களிருபத்தாறுங் – வெழுத்து வெல்ல விருபத்தியாறும்.

4. கட்டுநூற்றாறாங். கலந்தெண்பத் - கலந்தெழுபத். தேழுமே.

குறிப்புரை

இம்மந்திரம்; எட்டிய சொல் எழுத்து ஆகியவற்றின் ஏடணைகட்குரிய இலக்கங்களை உணர்த்துகின்றது.

எட்டுதல் = கிட்டுதல் - சேய்மையாதல். தொடுதல் – தொடங்குதல். இடுதல் = கொடுத்தல் - விடுதல் - வைத்தல் – வரைந்திடுதல். கட்டு = உறுதி - அடக்குதல். சொல் - பேச்சு. சொல்புகழ் பேச்சு நெல்லாம் – நாநார்த்த தீபிகை.

6. சொல் வெல்ல:— 72 - 95 – 40 - கட்சபுடம்.

7. எழுத்து வெல்ல:— 26 - 106 - 77 —

இலக்க வேறுபாடு

6. சொல் – எண்ணிய சொல் – எட்டாத சொல் – எட்டாத சொல்லும் - சொல்லை - சொன்னது வெல்ல - வெல்லும்.

கட்சபுடம்: வாஞ்சிதார்த்தப்பிரதம்.

72 - 95 - 40 = 207. 207.

7. எழுத்து - எழுத்துரை - சித்திரம் எழுத்து வெல்ல - வெல்லும்.

கட்சபுடம்: சித்ர லேக்ய ஜயம்:—

26 - 106 - 77 = 209. 26 - 77 - 106 = 209.

26 - 106 - 87 = 219. 26 - 40 - 77 = 143.

143. 166. 209. 219.

சொல்: என்பது, ஆகுபெயரான் இயற்றமிழையும், சொல்லாழம் என்புழிப் போல அதன் பொருளையும்; எழுத்து: என்பது, எழுதப்படும் தொடரையும், ஓவியத்தையும் குறிக்கும். இசைத்தமிழ், நாடகத்தமிழ் ஏடணைகட்குரிய இலக்கங்கள் அடுத்துவருந் திருமந்திரத்துட் சொல்லப்படும்.

8- பாட்டு; 9 - கூத்து ஆகியவற்றின் ஏடணை.

228. எழுபத்து நாலும் இருநூற் றிரண்டும்
பழுதற்ற நூற்றேழும் பாட்டுகள் வெல்லும்
விழுமப் பெருங்கூத்து வெல்லவெண் ணாறு
முழுது மெழுபது முப்பத்தே ழென்னுமே.

பாட பேதம்

1. எழுபத்தினாலு – எழுபத்தினாறு.
2. பழுதார் நூற்றேழும் பழுதற்ற நூற்றாறும். பாட்டுக்கள்.
3. விழுமப் பேராங்கூத்து – விழுமிப் பெருங்கூத்து – வழுமிப் பெருங்கூத்து — இழுமிப் பெருங்கூத்து — இழுமிப் பேறாங்கூத்து - முழுவப் பேராங்கூத்து.
4. முழுவது மெழுபது – முழுபதெழுபதும் – முழுவது முப்பத்தேழென்னே - முப்பத்தேழெண்ணே.

குறிப்புரை

இம் மந்திரம்; இசைப்பாட்டு, கூத்து ஆகியவற்றின் ஏடணைகட்குரிய இலக்கங்களை உணர்த்துகின்றது.

பழுது - குற்றம். பாட்டு = இசைப்பாட்டு – இசைத் தமிழ். பாட்டுக் கச்சேரி என்றாற்போல. பாட்டுக் கச்சேரி – சங்கீதக் கச்சேரி. கூத்து – நாடகத் தமிழ். வேத்தியல்பொதுவியல் என்றிரு திறக்துக் - கூத்தும் பாட்டுந் தூக்குந் துணிவும் - மணி.

2 : 18 - 19. விழுமம் = சிறப்பு; விழுமம் சீர்மையும் சிறப்பும் இடும்பையும் - தொல். 835.

8. பாட்டுகள் வெல்ல : 74 - 202 - 107.

9. கூத்து வெல்ல : 48 - 70 - 37 - கட்சபுடம்.

இலக்க வேறுபாடு

8. பாட்டு - பாட்டுகள் வெல்ல - வெல்லும். 4 - மூலை யில். 74 - 202 - 107 = 383.

74 - 102 - 106 = 282. 74 - 107 - 102 = 283.

கக்ஷபுடம்: சங்கீத ஜயப்ரம்: 74 - 102 - 107 (= 283.) 74 - 102 - 106=282. 183. 190. 282. 283. 383. 385. 403, 76 - 202 - 107 = 385.

9. கூத்து - கூத்துகள் - நாட்டியம் வெல்ல - வெல்லும் - நாட்டிய ஜயம் - 4 - மூலையில். நாட்டிய ரங்கே ஜயம் :- 48 - 70-37 = 155. 48 - 70 30 = 148.

48 - 170 - 33 = 251. 148. 153. 155. 202. 216. 251.

பாட்டுகள் எனப் பன்மை கூறியதனால், மிடற்றுக்கருவி யொழிந்த ஏனைய துளை, நரம்பு, கஞ்சம், தோற்கருவிகளா னியன்ற இன்னியங்களும் கொள்ளப்படும். பெருங்கூத்து. அரங்கிற் குழுமியிருக்கும் மாந்தரின் பெருக்கம், கூத்தின் மேலேற்றி யுரைக்கப்பட்டது.

கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்.

— திருக்குறள். 332.

10 - மாதர். 11 - மைந்தர்களின் ஏடணை

229. என்னுமது மாத ரிடைவெல்ல வெண்பது
முன்னு பதினால் முயங்குபத் தொன்பதும்
என்னே புருட ரிடைவெல்ல வேழேழுந்
துன்னுவாற் பத்தாறுந் தொன்னூற் றிரண்டே.

பாட பேதம்

1. என்னுமதுமாத – என்னுமாத, ரிடைவெல வன்பது - வெண்பதும்.

2. முன்னும் பதினால் - முன்னும் பதினாலு - முன்னம் பதினால் முயங்கும் - முயங்கிய பத்தொன்பது - பத்தொன்ப - பதிநொ (னொ)ன்றே.

3. மென்னே - தென்னப், புருடரி வெல்ல - வெல்லவே ழேழும் - வெல்லலெழுபது - வெல்லெழுபது - வெல்ல நாற் பத்தொன்று.

4. துன்னியநாற் - துன்னாயநாற் - துண்ணுநாற் பத்தாறும் - பத்தாறு, றிரண்டுமே.

குறிப்புரை

இம்மந்திரம்; மாதர், மைந்தர் ஆகியவர்களின் ஏடணை கட்குரிய இலக்கங்களை உணர்த்துகின்றது.

10. மாதரிடைவெல்ல:— 80 - 14 - 19.
11. மைந்தரிடைவெல்ல:— 49 - 46 92.

இலக்க வேறுபாடு

10. மாதரிடை - மாதரை வெல்ல - வெல்லல் - வெல்லும்
5 - மூலையில்:—

80 - 14 - 19 = 113. 80 - 90 - 0 = 99.

80 - 14 - 11 = 105. 80 - 16 - 19 = 115.
54 - 19 - 80 = 153.

55. 99. 103. 105. 113. 149. 153. 236.

கக்ஷபுடம்: நாரீவிஜயம் - 80 - 14 - 11. = 105.

11. புருடரிடை - புருஷரை. வெல்ல - வெல்லும். 4 - மூலையில்:—

187. 41 - 46 - 92 = 179. 70 - 46 - 92 — 208.
92. 179. 185. 187. 188. 208. 305.

கக்ஷபுடம்: புருஷஜய:—

41 - 49 - 92 = 179. 41 - 16 - 92 - = 149.

12 - சிறை. 13 - விதி ஆகியவற்றின் ஏடலை

230. இரண்டாறு நாற்பத் தைஞ்சறு பத்தாறு
நெருண்ட சிறைவல்ல நேரு மிலக்கம்
முரண்ட விதிவெல்ல முப்பத்தி யாறும்
சுருண்டிருபத் தொன்றுந் தொண்ணூறும் நாடிலே

பாட பேதம்

1. நாற்பத்தஞ்சறுபத் - நாற்பத்தைஞ்சேயறுபத் - நாற்பத்தஞ்சறுபத் - நாந்பத்தஞ்சாறுபத்.

2. நெருஞ்சிறை பன்ன - நேருஞ்சிறை வெல்ல - நெருண்ட சிறைப் பண்ண - நெருண்ட சிறை பண்ண - நேருஞ் சிறை வெல்ல.

3. முரண்டவிப்பாதி வியாதிமுப்பத்தாறு - முரண்ட வியாதி பண்ண முப்பத்தாறுஞ் - முருண்ட வியாதி யுடனொரு பத்தாறுஞ் - முரண்டெலிப் பாதி வியாதி முப்பத்தாறு.

4. நெருண்டிருப்பத்தாறு-நொருண்டிருபத்தாறு - சுருண்டயிருபத்தாறுந் - சுருண்டிருபத்தாறுந் - சுருண்டிருபத்தொன்பதுந் - தொண்ணூறும் நாடே - தொண்ணூற்றாறு நாடிலே - தொண்ணூறாறு நாடிலே - தொண்ணூறு நாடிலே - தொண்ணூறு நாடே.

குறிப்புரை

இம்மந்திரம்; சிறை, விதி ஆகியவற்றின் ஏடணைகட்குரிய இலக்கங்களை உணர்த்துகின்றது.

சிறை = சிறைக்கோட்டம் - சிறைச்சாலை - தளை. வெல்ல - விடுதலையாக - நெருண்ட சிறை = நெருடான - கடுமையான - கடினமான - காவல் - தளை முதலியவற்றைக் கொண்டுள்ள சிறை. இந்நூலின் நடை நெருடு என்னும் வழக்குங் காண்க. விதி - ஊழ். அஃதாவது, இருவினைப்பயன் செய்பவனையே சென்று அடைதற்கு ஏதுவாகிய நியதி. விதி, நியதி, ஊழ், பால், முறை, உண்மை, தெய்வம் என்பன ஒரு பொருட்கிளவி.

— திருக்குறள். அதி. 38. ஊழ். அவதாரிகை. பரிமே.

இந்த நியதி தத்துவம்; வித்தியாதத்துவம் ஏழனுள் ஒன்று. இஃது அசுத்தமாயா தத்துவத்தினின்றும் தோன்றியது. பிறரானீட்டப்படும் நல்வினைப் பயனைக் கவரவும், தம்மாலீட்டப்படும் தீவினைப்பயனை நீக்கவும் ஒட்டாமல் அவரவரான் ஈட்டப்படும் வினையின் பயனை அவரவரே நுகருமாறு அரசர் ஆணைபோல் நியமித்து நிறுத்துவது. அரசன் ஆணை யில்வழி எளியோர் பொருளை வலியோர் கவர்ந்து கொள்வதுபோல, நியதிதத்துவம் இல்வழி, ஒருவர் செய்த வினைப்பயன் மற்றொருவர் கவர்வதாய் முடியுமாகலின், நியதிதத்துவம் உண்டென்பது தெற்றென உணர்க. இருவினைகள் போகத்தைப் பயத்தன்மாத்திரையேயன்றி, அப்போகங்கருத்தாவைச் சென்று அடைவிக்குமாறு செய்ய மாட்டா. முதல்வனது சத்தி கருவிகளை முன்னிட்டே காரியம் நடாத்துவதாகதலின்; அது

போகத்தை நியமித்து நிறுத்துவதற்குக் கருவி நியதி தத்துவம் எனக் கொள்க.

— சிவஞானபாடியம்.

விதி வெல்ல - ஊழையும் வெல்ல; என்றனது ஊழிற் பெரு வலி யாவுள மற்றொன்று - சூழினுந் தான்முந் துறும்.

— திருக்குறள் 380.

என்பதின்றி, ஊழையும் உப்பக்கங் காண்பர் — 602 என்க.

12. சிறை வெல்ல்: 12 - 45 - 66 — கஷசபுடம்.

13. விதியை வெல்ல: 36 - 21 - 90 —

இலக்க வேறுபாடு

12. சிறை வெல்லும் - சிறை பண்ண - சிறை பண்ணும் - சிறைவீடு - சிறைச்சாலை விடுதலை - செயிலிலிருந்து விடுதலை யா(க்)கும் - ஜெயில் சிக்ஷை வெல்ல - ஜெயில் சிறை வெல்ல - சிறை வெல்ல. சிரசில் - காராக்கிருக விமோசனம்:—

12 - 45 - 66 = 123. 52 - 45 - 66 = 163.

122. 123. 163. 299.

13. விதியினை - விதியை வெல்ல - வெல்லலாம். வியாதி பண்ண - வியாதி பண்ணும் - வியாதி வெல்ல - 4 மூலையில்.

36 - 21 - 90 = 147. 36 - 26 - 90 - 152.
36 - 29 - 90 = 155. 36 - 26 - 96 = 158.
147. 152. 155. 158. 301.

கக்ஷபுடம் :— 36 - 26 - 90 (= 152 - ?) விஜ்ருத்ருச் சபவேத்ப்ருதி:—

மேற்கோள்

விதியினை யாவரே வெல்லும் நீர்மையார்

— கந்தபுராணம்.

வினைப்பயனை வெல்வதற்கு வேத முதலாய
அனைத்தான நூலகத்தும் இல்லை — மூதுரை.

கூற்றங் குதித்தலுங் கைகூடும் — திருக்குறள் 268.

ஊழையும் உப்பக்கங் காண்பர் — 620.

உலையா முயற்சி களைகணா ஊழின்
வலிசிந்தும் வன்மையும் உண்டே - உலகறியப்
பான்முளை தின்று மறலி உயிர் குடித்த
கான்முளையே போதுங் கரி.
— நீதிநெறி விளக்கம் 51.

என்பனவும் ஈண்டுக் கருதத் தக்கன.

மூலபாடக் குறிப்பு

சிறைவெல்ல என்னும் மூலப்பாடப்பகுதி ஒரு சுவடியில் மட்டுமே காணப்பட்டது விதி வெல்ல என்பதும், இருபத் தொன்று என்பதும் ஊகத்தாற் கொள்ளப்பட்டன.

1 - உலகவித்தேடணை வகையின் தொகை - 13.

231. நாடும் உலகவித் தேடணை நாஞ்சொல்லக்
கூடும் பதின்மூன்று கொண்ட தொகைதானும்
நாடும் இடங்களும் நல்ல சிரஞ்சந்தி
வீடும் இதற்கோர் மந்திரம் வித்தமே.

பாட பேதம்

1. நாடிய லோகவித் — நாடியுலோகவித் — நாடிய வுலோகவித் — நாடியொரு லோகவித் — நாடி விலோகவிதுவேடணை — நாடியொரு லோகவிது. வித்துவேடணை வித்தேடணை. நான் சொல்ல.

2. பதின்மூன்றுங் - பதினொன்று. கொண்டது தொகை தான் - கூடும் பதினொன்றுகைத் தானம்.

3. இடங்கள், நல்ல சிரஞ்சந்தியில் - நல்ல சிரத்தினில் — நல்ல சீர்ச்சந்தியில் - நல்ல சிரஞ்சித்தி — நாடுமிடங் கரும நல்லதாஞ் சாதியில்.

4. இதற்கொரு - அதற்கொரு. மந்திரம் வித்தாமே - மந்திரம் வித்துமே - மந்திர வித்துமே - மந்திரம் (ப) புவித்தமே - மப்திரஞ் சொல்லே.

குறிப்புரை

இம் மந்திரம்; உலகவித்தேடண வினையேவலின் தொகையையும், இயந்திரத்தின் வைப்பிடத்தையும், மந்திரத்துக்குத் தோற்றுவாயையும் உணர்த்துகின்றது.

வித்துவேடணம் = வித்துவேஷம் — வித்துவேடம் — விரோதம் — பகை. தொகை = தொகுதி — கூட்டுத்தொகையெண். இடம் — இயந்திரத்தினை வைக்கத்தக்க இடங்கள். சிரமும், சந்தியும், வீடும் இடங்களாகும். வித்தம் = வித்து — அறிவு - காரணம் - சாதனம் - விதை முத்திக்குவித்து - முதல்வன்றன் ஞானமே. — திருமந்திரம். 2506.

1. உலகவித்தேடணையின் வகை - 13.

அவை யாவன:

1. வாது வெற்றி.
2. சொல் வெற்றி.
3. வழக்கு வெற்றி.
4. படை வெற்றி.
5. போர் வெற்றி.
6. பாட்டு (இசைத்தமிழ்) வெற்றி.
7. எழுத்து (ஓவிய) வெற்றி.
8. இசைத் தமிழ் வெற்றி.
9. நாடகத் தமிழ் வெற்றி.

10. மாதர் வெற்றி.
11. மைந்தர் வெற்றி.
12. சிறை வெற்றி.
13. ஊழ் வெற்றி என்பனவாம்.

இவ்வாறாக உலகவித்தேடணையின் பிரயோகவகை 13 - ஆகும். இவ்வியந்திரத்தை விதிப்படி பூசனையாற்றிய பின்பு சிரம், சந்தி, வீடு ஆகியவற்றில் ஏற்ற பெற்றி வைக்க என்பதாம்.

மேற்கோள்

வித்வேஷண விதிம் ஸம்யக்...த்ரயோதச விதம் லோக்யம் |

யாரயே துசிதஸ்த்தாநே யந்த்ர மேதத் வராநநே || என்பனவுங் கருதுக. — கட்சபுடதந்திரம்

மந்திரம் - 27

1 - உலகவித்தேடணைக்கன்மப் பிரயோகம்
13 - க்கும் உரிய சிறப்பு மந்திரம்

ஓம் ஹ்ரீம் ச்ரௌம வீம் (ளம்) ஹ்ரீம் க்லீம் லம்லம் வரவர ப்ரீம் ஜ(ய)ம். அம் க்கம் லோகவித்வேஷணம் குரு குரு ஸ்வாஹா ||

பாட பேதம்

1. ஓம் ஹ்ரீம் மம் ச்ரௌம் ளீம் க்லீம் லம் லம் வர வர ஜம் அம் லோ்கவித்வேஷணம் குரு குரு ஸ்வாஹா ||

2. ஓம் ஹ்ரீம் ச்ரௌம் ளீம் (ஹ்ரீம்) லம் லம் வர வர ப்ரீம் க்கம் ஸ்வாஹா [நக்ஷத்ரே ரா சௌ நாம தேய ஜாதஸ்ய மம ப்ராத்வி வாகம் ஜயாவஹம்] குரு குரு ஸ்வாஹா ||

3. ஓம் ஹ்ரீம் ச்ரௌம் ஹ்ரீம் க்லீம் வம் வர ப்ரீம் க்கம் ஸ்வாஹா ||

 இம் மந்திரத்தை அத்துருவ கோஷத்தில் (?) அப்பிர தக்ஷணமாய் எழுதவும்.

4. ஓம் ஹ்ரீம் ச்ரௌம் ப்ரீம் (வ்ரீம்) க்லீம் லம் லம் வம் ஜொபி ஜநபே லாபாய ஸ்வாஹா ||

5. ஓம் ஹ்ரீம் ச்ரௌம் ஹ்ரீம் க்லீம் வம் லர வர ப்ரீம் க்கம் ஸ்வாஹா ||

 இம் மந்திரத்தை அத்துருவ கோஷ்டங்களில் (?) அப் பிரதக்ஷணக் கிரமமாக எழுத வேண்டியது.

6. ஓம் ஹ்ரீம் ச்ரௌம் வ்ரீம் க்லீம் லம் லம் வஜோபிஜநபே லாபாய ஸ்வாஹா ||

7. ஓம் ஹ்ரீம் ச்ரெளம் ஹ்ரீ (ஹ்ரீ) ம் க்லீம் வம் வர வர ஸ்ரீம் க்கம் ஸ்வாஹா ||
இந்த வேண்டியது.

8. ஓம் ஹ்ரீம் நே தரெளம் ப்ரம் (ப்ரீம்) க்லீம் லம் லம் வஜோ (ஜ்யோ) ள ஜே (ரிஜே) ந யே வாஹாய ஸ்வாஹா ||

9. ஓம் ஹ்ரீம் க்ரெளம் ப்ரீம் க்லீம் லம் லும் பீஜந ப்லபலா ஹா (பா) ய ஸ்வாஹா ||

10. ஆக (உலகவித்தேடணை) 13 – க்கும் மந்திரம்:—
ஓம் ஹ்ரீம் கிறீம் ஸ்ரீம் கிலீம் ஈம் நம் வம் லோம் ஜோபீஜநல பெல காய சுவா ||

11. இதற்கு மந்திரம்: ஓம் ஹ்ரீம் ஹ்ரெளம் ஸ்ரூம் க்ஷும் லம் லம் வம் கோபீ ஜகல்(க்) பூ பாலகாய ஸ்வாஹா ||

12. ஓம் ஹ்ரீம் ரீப் ஐம் அம் ஏம் பிம் க்லீம் லம் லம் வ நஜாவிஜே நயே பலஹாய ஸ்வாஹா ||

13. ஓம் ஹ்ரீம் ளோம் ப்ரும் க்ஷும் லம் ர்வ்ரம் வம் ஜெம் பிம் ஜம் புவாலஹாய ஸ்வாஹா ஓம் ||

14. ஓம் ஹ்ரீம் ஸெளம் ப்ரம் க்ஷவ்வும் வஜ்ரோபித் தங்க சுவாலஹாய ஸ்வாஹா ||

15. ஓம் ஹ்ரீம் ஐம் அம் ஏம் பிம் க்லீம் லம் லம் வநஜா விஜே நயே பாலஹாய ஸ்வாஹா ||

16. ஓம் க்ஷ்ரீம் ஹ்ரெளம் (ளோம்) ள்ரம் க்ஷும் லம் சம் வம் ஜோபி ஜித் மம் பூவ (ப)ால ஹாய ஸ்வாஹா ||

17. ஓம் ஹ்ரீம் ளோம் ப்ரும் க்ஷும் லல்ச வஜம் பிஜம் புவாலஹாய ஸ்வாஹா ஓம் ||

18. ஓம் ஹ்ரீம் ஸெளம் ப்ரம் க்ஷவ்வும் வஜ்ரோ பித்திங்க ஸ்வாலஹாய ஸ்வா ஓம் ||

19. ஓம் ஹ்ரீங் ஐம் அம் ஏம் பிம் க்லீம் லம் லம் வநஜா விஜேநயே பாலஹாய ஸ்வாஹா ||

20. ஓம் ரீயும் வ(வ்)வும் திரியு (ஸ்ரீம்) (லியு) க்லீம் லலுங் (லம் லம்) கோசி நகஞ் சாலாதாயஞ் சுவாகா ||

அன்பத்தோர க்ஷரம்:—

ஆ - ஆ - உ · ஊ ஐ உ - ஊ - - ஐ3 - ஏ - ஏ3
ஓ - ஒள - ஓ - ஒள - அம் - அ:: | கா · கா · கொ-கா-ஙா- |
ச · ச · ச - செ - ச - சா - ஞ · | ட-ட - டா - டெ - டா -
ண - | த - த - தா - ஷ - கா - ஆ · ஆ ||

குறிப்புரை

இம் மந்திரம்; உலகவித்தேடணை வினையேவல் 13-க்கும் உரிய சிறப்பு மந்திரமாகும். இதன் தந்திரம் வருந்திருமந்திரத்துட் சொல்லப்படும்.

மேற்கோள்

சுருணு மந்த்ர வரந்தேவீ லோகவித் வேஷணச் க்ஷமம் |

தாரம் மாயாம் புநமச்ரௌம் வீம் க்லீம் லத்வய வரந்ததா ||

ஐந்துத தோச்சார்ய அம்பீஜந்து ததோச்சரேது |
லோகவித் வேஷணபதம் குருஸ்வாஹேதி சோச்ச ரேது ||

அத்ருவே விலிகே தேத தப்ரதட்சிணைத ச்சிவோ (வோ) ||
— கட்சபுடதந்த்ரம்.

சுருணு க்ஷமம் | ஓம் மாயாஞ்ச புந : ச்ரௌம் வீம் ஹ்ரீம் க்லீம் லம் த்வய வரந்ததா ||

ஜோயிஜேந பதம் க்கஞ்சலாஹா (பா) யாம் வந்கி வல்லபா | அத்ருவே...சிவே ||

1. உலக வித்தேடணையின் தந்திரம்

233. வித்திய மந்திரம் வீசிய சக்கரம்
சத்திய மேசந்தி நாலிற் புதைத்திடு
வித்தை விதியை விலக்கச் சிறைவெல்ல
சித்திர மான சிரத்தில் நின்றதே.

பாட பேதம்

1. வித்தாக - வித்தக - புவித்திய. பீக்கரம்.

2. மேசந்தி நூலிற் புதைத்திட்டு - நாலிற் புதைத்திட்டு - மேகாதிகா...ற் புதைத்திடும் - நாலும் புதைத்திடு - காலம் புதைத்திடு.

3. வித்தை வியாதி விலக்கச் சிறைபண்ணச் - வித்தை வியாதி விளங்கச் சிறைபண்ண - வித்த வியாதி விளங்கச் சிறை பண்ண - சிறைபண்ணும் - சிறை பண்ணி - சிறப்பண்ண.

4. சிரந்தனிற் சேர்ப்பதே - சிரத்தினிற் சேர்ப்பதே - சத்திர மந்திரந் தன்னில் நின்ற(த்)தே - அத்திர மந்திரந் தன்னில் நின்ற(த்)தே - நிறைத்தே - நின்றத்தே - சேர்ப்பதே.

முடிவு: உலக ஏடணை முற்றும்.

குறிப்புரை

இம்மந்திரம்; உலகவித்தேடண வினையேவல் இயந்திரத்தின் தந்திரம் உணர்த்துகின்றது.

வித்து - மூலகாரணம். வீசுதல் - பரவல். ஞானவாசம் வீசிப்ரகாசியா நிற்ப — திருப்புகழ். 1132. வீசிய மந்திரச்

சக்கரம் – 16 அறைகளிலும் பரவிய மந்திரத்தினையுடைய இயந்திரம். சந்தி = நாற்சந்தி - 4 தெருக்கள் சேருமிடம். இது சதுக்கம் எனப்படும். வித்தை — தந்திரம். சித்திரம் – சிறப்பு. — பிங்கலம். எண்சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம். ஸர்வஸ்ய காத்ரஸ்ய சிரப்ரதானம் என்பன காண்க. சித்திர மாக என்பது பாடமாயின், அயலார் அறியாதபடி மறைவாக என்க. இப் பொருளில் சித்திரம் – இரகசியம். பகைவெல் சித்திரம் பலதிறம் பயிற்றி — பெருங். உஞ்சைக். 37 : 43. விதி – ஊழாகலின் வெல்ல என்னாது விலக்க என்றார். கழுவாய் = பிராயச்சித்தம் - பரிகாரம் – [என்னும் வழக்கும் நோக்குக சிறை = சிறைச்சாலை – தளை.

விதியை விலக்குதல், சிறை வெல்லல் ஆகியவற்றில் இவ் வியந்திரத்தை முடியில் அணிக. ஏனையவற்றின் ஏவலில் நாற்சந்தியிற் புதைக்க என்பதாம்.

2 - விலங்குவித்தேடணையின் வகை - 6.

1. கடா புலியை வெல்ல.

234. நின்ற லோகவித் தேடணை நீள்விருக
வென்றிவித் தேடணை மெத்த வுரைத்திடிற்
பொன்று கடாபோய்ப் புலிதனை வென்றிட
வன்றறுப தையைஞ் சறுபா னால்விளம்பே

பாடபேதம்

தலைப்பு: மிருகவேஷணை – மிருகவித்துவேஷணை.

1. நின்றவுலோகவித் – நின்றவித்தேடனை. விருகம் – விருக்ஷம்.

2. மொன்றியவித்தேடனை செய்யு முரைத்திடிற் - மொன்றிய வித்தேடணை யுரைத்திடிற்.

3. பொன்றுங் – பொன்று கிடாய்ப் போய்ப் புலி தன்னை போய்ப் புலியை – புலியினை. வென்றிடுந் – வென்றிடு - வென்றிடுவ.

4. வன்றறு பானையைஞ்-வன்றுமறு பானையைஞ்-வன்றறு பதையஞ்-தன்றுதைய மறுபத்துநால்-தன்றறு பதையஞ் சறுபத்துநால் - மின்றறு பத்தஞ்சறு பத்துநால் - மின்றறு பத்தஞ்சு பத்துநால்-நின்றறுபத்தஞ்சு அறுபத்துநால்-நின்றறு பத்தஞ்சறுபத்துநால்-நின்றதிரு பத்தஞ்சு நேரறு பத்துநால்-துன்று தொண்ணூற்றினால் சொல்லு.

குறிப்புரை

இம்மந்திரம்; நிறுத்த முறையானே, 2-ஆம் எண்ணு முறைமைக்கணின்ற விலங்கின் வித்தேடணை வகையைக் கூறுவான் றொடங்கி, முதற்கண் கடா புலியைப் பொருது வெல்லுதற்குரிய இலக்கத்தை உணர்த்துகின்றது.

விருகம்-விலங்கு. மெத்த = மெச்ச - மதிக்கும்படி-புகழும்படி. பொன்றுதல் - அழிதல். பொன்றுங்கால் பொன்றாத்துணை. — திருக்குறள் 36. கடா = கடாய். ஆடு, எருமை ஆகியவற்றின் ஆண். (திவா)-ஈண்டு ஆட்டுக்கடாயைக் குறித்து நின்றது. இச் சொல்கிடா-கிடாய் என்றும் வழங்கும்.

1. கடா புலியை வெல்ல;— 60-25-64.

இலக்க வேறுபாடு

1. கிடாய் வெல்ல - கிடாய்ப் போர் வெல்ல - கிடாய் புலியை வெல்ல - ஆடு கிடாய் வெல்லும்-கிடா புலி வெல்லும்-புலியை கிடா வெல்ல சிரசில்:

60 - 25 - 64 = 149. 65 - 64 - 0 = 129.
50 - 55 - 40 = 145. 65 - 64 - 94 = 223.
17. 71. 129. 145. 155. 221. 223.

கட்சபுடம் ! மேஷவியாக்ரஜயம் : 50-55-40 (=145).

இவற்றோடு அடுத்து வரும் தகர் வென்றிக்குக் குறிக்கப் பட்டுள்ள இலக்கங்களை ஒப்பு நோக்குக.

2-தகர்வென்றி.3-சேவல் வென்றி.

235. விளம்புவ தைம்பதும் வேண்டன்பத் தஞ்சுங்
களைந்த நாற்பதுங் கண்ட கடாய்வெல்ல
தளர்ந்த பெருங்கோழி தான்வெல்ல முப்பான்
அளைந்தவிரு பத்தஞ்சும் அன்பதும் ஆமே.

பாடபேதம்

1. தன்பதும் — தன்பது - விளம்புவ தெண்ணஞ்சு தைந்துங் - வேணறு பத்தஞ்சு - வெண்ணறு பத்தஞ்சு - வேணைம் பத்தஞ்சு.

2. களைந்திடு - கழைந்திடு. நாற்பது — வைம்பது. கிடாய். வெல்லத்.

3. தளர்ந்து — தளைந்த - தழரிந்த. தான் வெல்லவே. முப்பது - முப்பதுந். இருபது. கோளி.

4. அளைந்திருபத்தஞ் - தளைந்தவிருபத்தஞ் - அணைந்திருபத்தஞ் - மழைந்தயிருபத்தஞ் - அளைந்திருபத்தைஞ்சும் ஐம்பதுமாமே. — அணைந்திருபத்தஞ்சு ஐ நான்கு மாமே - விருபத்தஞ்சன்பது.

குறிப்புரை

இம்மந்திரம்; தகர் சேவல் ஆகியவற்றின் வித்வேடண இலக்கங்களை உணர்த்துகின்றது.

தளர்ந்த = சோர்ந்த - வலியற்ற. தளர்ந்தேன் எம்பிரான் எனைத் தாங்கிக்கொள்ளே. — திருவாசகம். 105 பெருங்கோழி - சேவல். அளைந்த - பொருந்திய. என்னணியார்முலை ஆகம் அளைந்து. — திருவாசகம் 636.

3. தகர் வென்றி; 50 - 55 - 40.

4. சேவல் வென்றி: 30 - 25 - 50. — கஷபுடம்.

இலக்க வேறுபாடு

3. கிடாய்ப் போர் வெல்ல - கிடாய் வெல்ல - கிடாயை கிடாய் வெல்ல - ஆடு கிடாய் வெல்ல - ஆடு விட போர் வெல்லும் - ஆடு போரில் வெல்லும் - மூப்புற்ற கிடாயும் வெற்றி பெறும் - கிடாயினை வெல்ல சிரசில்:

50 - 55 - 40 = 145.	40 - 65 - 40 = 145.
50 - 65 - 40 = 155.	50 - = 162.
65 - 64 - 62 = 191.	71. 145. 155. 162. 191.

கக்ஷபுடம்: சாகஜயம்:— 50 - 65 - 40 (= 155).

(இந்த வினையேவலின் கூட்டுத் தொகையாகிய 145 என்பது மட்டும், பாடபேதம் - இலக்க நூற் குறிப்பு - ஆகிய வற்றுக்கும் ஒத்திருத்தல் நோக்கத்தக்கது.)

4. தளர்ந்த கோழி வெல்ல - தளர்ந்த கோழியும் முறிந்த கிடாயும் வெல்ல - கோழி வெல்ல - கோழி, கோழியை வெல்ல - கோழி வெல்லும் - கோழி (யினிடம்) ஜயமடையும்- கோழிச் சண்டை வெல்ல - சேவல் சேவலை வெல்லும்:- 30 - 25 - 50 = 105. 31. 105, 401. குக்குட ஜயம்.

4 – கரி. 5 – பரி ஆகியவற்றின் வெற்றி.

236. ஆமானைப் போர்வெல்ல ஐம்பதும் நாற்பதும்
போம்நாற்பத் தேழும் பொருந்தும் பரிவெல்ல
ஆமா றுபதும் ஐயைஞ்சும் அன்பதும்
தாமே பன்றி தனைக்கிடாய் வெல்லவே.

பாட பேதம்

1. ஐம்பது நாற்பது - அன்பதும் நாற்பது - அன்பதுட னாற்பதும் - அருபதிருபத்தைந்து.

2. போநாற்பத் - போனாற்பத் - போமாமறுபத்து நால் போர்வெல்ல வைம்பத்து நாற்பத்தி - பொரிந்தும்,

3. வாமா மறுபத்தொன்றையஞ்சு - வாமாறு பத்தா றையைஞ்சு - ஆமாமறுப தஞ்சுமைம்பது நாற்பதும் - மையைஞ்சு மைம்பதும்.

4. போமே நாற்பத்தேழும் பொருந்து கிடாய் வெல்லே - தன்னைக் கிடாய் வெல்லவே - வெல்லே. தாமே வரும் பன்றி - தாம் வரும் பன்றி.

குறிப்புரை

இம் மந்திரம் ; யானை, குதிரை ஆகியவற்றின் வென்றிக் குரிய இலக்கங்களை உணர்த்துகின்றது.

ஆமானைப் போர் = ஆம் ஆனைப் போர் - ஆனை போர் வெல்ல ஆம். போம் - போகும். பரி - குதிரை. பரி (போர்) வெல்ல ஆம் என்க. பன்றிதனை - பன்றியை. கிடாய் - ஆட்டுக்கடா. இதன் இலக்கம் வரும் திருமந்திரத்துட் சொல்லப்படும். பிரதி பேதம்: வரும் - எதிர்த்து வரும்.

4. வேழ வென்றி : 50 - 40 - 47. — கக்ஷபுடம்
5. குதிரை வென்றி: 60 - 25 - 50.

இலக்க வேறுபாடு

4. ஆனை - யானை - களிறு - யானைப் போர் - ஆனை போர் - யானை சண்டையில் வெல்ல - வெல்லும் - வென்றி; கஜவிஜயம்.

50 – 40 - 47 = 137. 50 - 47 – 60 = 157.
37. 137. 154. 157. 167. 187. 193. 197.
70 - 40 – 47 (= 157).

5. குதிரை வெல்ல - வெல்லும் - வென்றி - மறம் - சண்டையில் வெல்லும் - குதிரை குதிரையை வெல்ல சிரசில் பரிவென்றி - அசுவ ஜயம்.

60 - 25 - 50 = 135. 66 - 25 - 50 = 141. 135. 141. 150. 219. 322.

கக்ஷபுடம் ; அசுவஜயம் : 66 - 25 - 50 (= 141); 66 - 150 - 50 (= 266).

6. கிடாய்கேழலை வெல்ல

237. கிடாய்வெல்ல வைம்பதுங் கேழ்பதினேழும்
அடாதறு பத்திரண்டாகு மிலக்கம்
விடாத விருகவித் தேடணை ஆறும்
கொடாது வென்றிடக் கூறுமோர் மந்திரமே.

பாட பேதம்

1. கடாய் - வெல்ல வைம்பது - வெல்ல வன்பதுங் - வெல்லன்பதுங் கேழ்ப்பதி - கேட்டபதி - கட்டபதி.

2. அடாயென்பத்திரண்டாகு மிதுவும் - அடாயெண் பத்திரண்டாக மிதுவு - அடாயெண்பத்திரண்டு ஆகமிதுவும் - அடதறுபத்திரண்டாகு மிலக்கம் - அடாதறுபத்திரண்டாகு மில்லக்கம்.

3. மிடாத மிருவிகவித் தேணையறுவகைத் - தேடணை யறுவகை - தேடணையாமாறு வகை.

4. குடாதபடி வெல்லக. கூறுவே (ம்) மந்திரம் - கூடு மோர் மந்திரம் - கூறுமோர் மந்திரம் - கூறுமொரு மந்திரமே - கூறொரு மந்திரம் - கூறுவேன் மந்திரம்

குறிப்புரை

இம்மந்திரம் ; கிடாய் பன்றியை வெல்லற்குரிய இலக்கத்தையும், விருக வித்தேடணையின் தொகையையும், அதன் மந்திரத்துக்குத் தோற்றுவாயையும் உணர்த்துகின்றது.

கேழ் - ஒப்பு - கேழ் ஏழ்வரையும் இல்லோன் - திருக்கோவையார். 269 கேழில் பரஞ்சோதிக் கேழில் பரங்கருணைக் கேழில் விழுப்பொருள்கள் , பாடினோம்

— திருவாசகம் 162.

கொடாது வென்றிடி - என்னும் இம்மூலபாடம் ஊகம். கொடாது - புறங்கொடாமல் - குடாதபடி என்பதே பாடமாயின், தாழாதபடி - வளையாதபடி - நிமிர்ந்து நின்று வெல்ல எனப் பொருள் கொள்க. குடா - வளைவு.

விருகவித்தேடணையின் வகை 6 அவையாவன:

(1) கிடாய் புலியை வெல்லல்

(2) தகர்வென்றி

(3) சேவல் வென்றி

(4) வேழவென்றி

(5) குதிரை வென்றி

(6) கிடாய் கேழலை

வெல்லல் என்பனவாகும்.

வித்வேஷண விதிம் ஸம்யக் ஷட்விதம் மார்க்க முச்யதே ॥

— கட்சபுடம்

6. கிடாய் பன்றியை வெல்ல :— 50 - 17 - 62.

இலக்க வேறுபாடு

6. கிடாய் கேழலை - பன்றியைக் கிடாய் - பன்றிகிடாய் வெல்ல - வெல்லும்.

சிரசில் :—50 – 17 – 62 = 129. 50 - 17 - 82 = 149. 50 – 47 – 62 = 159.

57. 60. 63. 117 139. 149. 159 217.

கக்ஷபுடம்: மேஷசூகரஜயம் :— 50 – 47 – 62 (= 159)

இன்னோரன்ன வென்றிகளுட் சிலவற்றை இன்றும் நம் தமிழகத்திற்காணலாம். பண்டைத் தமிழ் மக்களும், மன்னர்களும் இவற்றை விளையாட்டுப் பொழுதுபோக்கிற்காகக் கண்டுகளித்து வந்த செய்தியைப் பண்டைத் தமிழ் இலக்கண இலக்கியங்களும் கல்லெழுத்துக் (சிலாசானங்) களும் அறிவிக்கின்றன. அவற்றுட் சில ஈண்டுக் குறிக்கப்படுகின்றன.

1. தகர் (கிடாய்) வென்றி

அருகோடி நீங்கா தணைதலும் இன்றித்
திரிகோட்ட மாவிரியச் சீறிப் - பொருகளம்
புக்கு மயங்கப் பொருது புறவாயை
நக்குமாம் நல்ல தகர்.

— புறப்பொருள் வெண்பாமாலை 349.

ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேரும் தகைத்து

— திருக்குறள் 486.

மேழகத் தகரொடு சிவல் விளையாட - மேழகக்
கிடாயோடே சிவலையுங் கொண்டு பொருவித்து விளை
யாடும்படி பலருஞ் சேரத் திரண்டு

— பட்டினப் பாலை 77 நச். உரை.

பாடு பெயர்ந் திடிக்கும் ஏடகம் போல

பெருங் 3:1:30

செறி மயிர்த் தகர்கள் தம்மிற் றீயெழத் தாக்கல் நோக்கி
அறைகழல் வீரர் ஆர்க்கும் அமலை — நைடதம்.

வீற்றுச் சமர்க்குப் பின் வாங்கும் வெற்றித் தகரே
யாகுமால் — விநாயகபு. அரசியற் 67.

2. கோழி (சேவல்) வென்றி

பாய்ந்தும் எறிந்தும் படிந்தும் பலகாலும்
காய்ந்தும் வாய்க் கொண்டுங் கடுஞ்சேவல் — ஆய்ந்து

நிறங்கண்டு வித்தகர் நேர்விட்ட கோழிப்
புறங்கண்டுந் தான்வருமே போர்க்கு
— புறப் - வெண் 348.

மறப் போர்க் கோழி மரபிற் பொருந்தும்
விறற்போர் ஆடவர் — பெருங்கதை 3. 4: 19–20

ஒரு தொடையான் வெல்வது கோழி
— நான் மணிக்கடிகை உரை.

உடையார் .. கோழிப்போரில் ஊத்தையாட்டாமலிருக்க
— சாசனம்.

3. வேழவென்றி

கஞ்சுகம் வாய்த்த கவளந்தன் கைக்கொண்ட
குஞ்சரம் வென்ற கொலைவேழம் – துஞ்சா
துழலையும் பாய்ந்திறுத் தோடாது தான்றன்
நிழலையுந் தான்சுளிக்கும் நின்று – புறப் – வெண் 350
குன்றேறி யானைப்போர் கண்டற்றால் - திருக்குறள் 758

4. குதிரை வென்றி

ஐந்து கதியும் பதினெட்டுச் சாரியையும்
கந்து மறமுங் கறங்குளைமா - முந்துற
மேல்கொண்டவை செலீஇ வென்வேலான்
மேம்பட்டான்
வேல்கொண்ட கண்ணாளை மீட்டு
— புறப் – வெண் 355.

5. பூழ் (காடை) வென்றி

சொல்லுஞ் சுவெட்டர் சொல்லுக சொல்லுங்காற்
சொல்லும் பலவுள சொன்னபின் – வெல்லும்
நலம்வர நாடி நடுங்காது நூற்கட்
புலவரால் ஆய்ந்தமை பூழ். — 351

நூற்பழக்கமின்றியே சொல்லுங் குறும்பூழாடிகள் வேண்டிற்றுச் சொல்லுக; சொல்லுமிடத்துச் சொல்லக் கடவ பல மந்திரம் உள; அவற்றைச் சொன்னபின் வென்றிபெறும் ... சொல்லக்கடவ மந்திரம் பலவாவன:— தீற்றும் அரிசி ஓதும் மந்திரமும், பச்சிலை பிசைந்து தடவும்போது சொல்லும் மந்திரமும், செவியுள்ளூறுத்தும் மந்திரமும், - உரை.

6. கோழி வேழத்தை வெல்லல்

முறஞ்செவி வாரணம் முன்சமம் முருக்கிய - புறஞ்சிறை வாரணம் புக்கனர் - முறம்போலுஞ் செவியையுடைய யானையை சமரிற் கெடுத்த, புறந்தே சிறையையுடைய கோழி என்னும் நகரின் கண்ணே விருப்பத்தோடு புக்கார் என்க.
— சிலப். 10: 247- 248. அடியார்

7. தகர், சேவல், யானை, குதிரை, காடை முதலியவற்றின் வென்றி.

வருசெருவொன் றின்மையினால் மற்போருஞ் சொற்புலவோர் வாதப்போரும் — இருசிறைவா ரணப்போரும் இகன்மதவா ரணப்போரும் இனையகண்டே.

கலிங்கத்துப் பரணி. 276.

கோழிப் போருங் கொண்ட சினப்போர்த் தகர் மூட்டும்
பூழிப் போரும். — உத்தரராமாயணம்.

நிலைச்செண்டும் பரிச்செண்டும் வீசமிக மகிழ்வெய்தி
விலக்கரும்போர்த் தகர்ப்பாய்ச்சல் கண்டருளி வென்றிபெற
மலைக்குநெடு முட்கணைக்கால் வாரணப்போர் மகிழ்ந்தருளி
அலைக்குமறப் பலபுள்ளின் அமர்விரும்பி அமர்கின்றார்.
— பெரிய. 3878.

செண்டாடுந் தொழில் மகிழ்வுஞ் சிறுசோற்றுப் பெருஞ்சிறப்பும்
வண்டாடு மலர்வாவி மருவியநீர் விளையாட்டும்
தண்டாமும் மதகும்பத் தடமலைப்போர் சல மற்போர்
கண்டாரா விருப்பெய்தக் காவலனார் காதல் செய்நாள்.
— 3907.

என்பனவும். பிறவும் காண்க.

மந்திரம்-28

2. விலங்கு ஏடணையின் வகை 6-க்கும் உரிய சிறப்பு மந்திரம்,

ஓம் நமோ பகவதே சர்வேந்திரியாணீ ஐம் க்ரீம் ஹ்ரீம் ஸௌம் க்லௌம் ஜௌம் கீழே கவிழ்ந்து விழுக விழுக ஸ்வாஹ ஓம் ||

பாடபேதம்

1. ஓம் நமோ பகவதே ஸர்வேந்த்ரியாணீ ஐம் க்லீம் அத:பத ஸ்வாஹா ||

2. ஓம் நமோ பகவதே ஸர்வேந்த்ரியாணீ ஐம் க்லீம் ஹ்ரீம் ஸ்வாஹா ||

3. ஓம் நமோ பகவதே ஸர்வேந்த்ரியாணீ ஐம் க்லீம் பத ஸ்வாஹா ||

4. ஓம் நமோ பகவதே ஸர்வேந்த்ரியாணீ ஐம் க்லௌம் கவிழ்ந்து வீழ்க ஸ்வாஹா ||

5. ஓம் நமோ பகவதே ஸர்வேந்த்ரியாணீ ஐம் க்லீம் அத்த : (பத) பத: ஸ்வாஹா || இம் மந்திரத்தை விருத்தத்தில் கிரமமாக எழுதவும்.

6. ஓம் நமோ பகவதே ஸர்வேந்த்ரியாணீ ஐம் க்லௌம் கள (கவிழ்ந்து விக்ர (விழு)க (வித்ரும) ஸ்வாஹா ||

7. ஓம் நமோ பகவதே ஸர்வேந்த்ரியாணீ (ஸர்வேந்த்ராணீ) ஐம் க்லௌம் கவிழ்ந்து விழு (வீழ்)ந்துவிழுகை ஸ்வாஹா ||

8. ஆக மிருக வித்து வேஷணை 6-க்கும் மந்திரம்:— ஓம் நமோ பகவதே சருவேந்திரியாணி ஐயும் க்லிம் ஸௌம் கீழ்வுங் கவிழ்ந்து வீழ சுவாஹம் ||

9. ஓம் நமோ பகவதே ஸர்வேந்த்ரியாணீ ஐம் ஜௌம் கவிழ்ந்து விழுக ஸ்வாஹா ||

10. ஓம் நமோ பகவதே ஸர்வேந்த்திரியாணீ ஐம் ஸௌம் கவிந்து வீழ்க ஸ்வாஹா ||

11. ஓம் நமோ பகவதே ஸ்ரவதந்த்ராணி ஐம் ஜௌம் கவிழ்ந்து விழுகை ஸ்வாஹா ||

12. ஓம் நமோ பகவதே ஸர்வதந்த்ரியாணீ கவிழ்ந்து விழுகை கவிழ்ந்து விடுக ஸ்வாஹா (சுவாஹா) ||

13. மந்திரம்: ஓம் நமோ பகவதே சருவயிந்த்ராணி ஐயும் கிலௌங் வினது விழுக சுவாஹா ||

14. ஓம் நமோ பகவதே ஸர்வ தந்த்ரீயாணி ஐம் ஸௌம் கவிழ்ந்து விழுகை ஸ்வாஹா ||

15. ஏடணை 6-க்கும் மந்திரம்:

ஓம் நமோ பகவதே ஸர்வேந்த்ரியாணி ஐம் ஸௌம் கவிந்து விழுக சுவாகா ||

குறிப்புரை.

இம்மந்திரம்; விலங்கின் வித்வேடண வகை 6 - க்கும் உரிய சிறப்பு மந்திரம் ஆகும், இதன் தந்திரம் வருந்திரு மந்திரத்திற் சொல்லப்படும்.

மேற்கோள்

மிருக வித்வே ஷணீம் மந்த்ரம் சுருணு மங்கள
தேவதே |
தாரம் நமோ பகவதே பதே ஸர்வேந்த்ரியாணிச ||
ஐம் க்லீம் அத : பதஸ்வாக விருத்தேச விலிகேத்
க்ரமாது | — கக்ஷபுடதந்திரம்

மிருக வித்வேஷணே மந்த்ரம் சுருணுமங்கள தேவதே!
தாரம் நமோ பகவதே ததஸ் ஸர்வேந்த்ரியாணிச ||
ஐம் க்லீம் மாயாம் தத: ஸ்வாஹ்யாக் தெச
விலிகேத் க்ரமாது ||

இம்மந்திரத்தின் மூலபாடத்தில் உள்ள கீழே கவிழ்ந்து விழுக என்பது ; பலவாறாகத் திரிந்தும், பெயர்க்கப்பட்டும் இருத்தலைப் பாடபேதங்களினாலும், மேற்கோள்களினாலும் உணர்ந்துகொள்க. இது சிதைந்த தமிழாகிய பாகத மொழி கவிழ்தல் = நிலைகுலைதல் - அழிதல்;

தான் சாகஉலகு கவிழும் - சிலப் 7 : 50. விழுதல் = நிலம்படியச் சாய்தல் - தளர்ந்து வீழ்தல். பாடல் புரிந்து விழுந்தெழுந்து - பெரிய 1579. வெஞ்சின வீரர் விழுந்தனர் - கம்ப இரா - வனத் 36. சுவாகா - வேள்விக்குரிய செந்தீக் கடவுளின் தேவி. பாரி சுவாகா தேவியாகும் - பிங்கலம். ஆதலின், ஆவுதிபுரியுங்காற் கூறப்படும் மந்திரங்களின் முடிவிற் சொல்லப்படும். திரிதிரி சுவாகா கன்றுகொண்டு கறவையும் வத்திக்க சுவாகா — தொல் 931. இளம் மேற்.

செந்தமிழே தீர்க்க சுவாகா - நக்கீரர் பாடிய தமிழ் மந்திரச் செய்யுள். (தொல் 1435. பேர் மேற்) என்பனவும் நோக்குக.

2. விருகவித்வேடண வினையேவலின் தந்திரம்,

238. ஒருமந் திரந்தனை ஓதி எழுதிக்
கருதுமைங் காயமுங் காணவே பூசிப்
பொருமக் களத்திற் புதைப்பது பின்னை
நெரியப் பிடிப்பது நேரி நின்றுகொண்டே.

பாடபேதம்.

1. ஓதியே பூசி - ஒக்கவே ஓதி

2. கருதுமே ஐங்காயங் – கருதியங் காயமுங் - கரு மயங்காயமும், காணவேப் பூசி - பூசி.

3. பொருமற் களத்திற் - பொரு அக்கழத்திற். புதைக் கவே பின்னை – புதைப்பது தன்னை.

4. நெரியிற் பிடித்து - நெரியப் பிடித்து - நெரிவைப் பிடிப்பது - நெரியப் பிடிநோய் - நெறியப் பிடி நோய் - பிடிப்பதுனேர் நின்று - பிடிப்பது நேர நின்று.

முடிவு : மிருக வித்வேஷணை முற்றும்.

குறிப்புரை.

இம் மந்திரம் ; விலங்கு வித்வேடண வினையேவலுக் குரிய தந்திரத்தை உணர்த்துகின்றது.

நெரிதல் = நிலை கெடுதல் - முறிந்தோடுதல் - காய்தல் (சூடாமணி நிகண்டு) ஐங்காயம் : முன்னர்க் குறிக்கப்பட் டமை காண்க.

பொரும்க்களம் – போர்க்களம். புதைப்பது - புதைக்க பிடிப்பது - பிடிக்க. நேர் = விலங்குகளின் எதிரே முன்னாக.

இயந்திரத்தில் மேலே சொல்லப்பட்ட மந்திரத்தை முறைப்படி எழுதி, மந்திரம் ஓதி, ஐங்காயமும் பூசிப் போர்க் களத்திற் புதைததிடுக. மேலும் எதிர் விலங்குகள் நிலை கெட்டழியும் படிக்கு அவற்றின் எதிரே இவ்வியந்திரத்தைப் பிடித்து நிற்றலுஞ் செய்க என்பதாம்.

எழுதி ஓதி பூசிப் புதைக்க. பிடிப்பதுஞ் செய்க என்க ஓதி, எழுதி பூசி என்றதனால், எழுதும்போதும், பூசும் போதும் மந்திரத்தை நவிலல் வேண்டும் என்பதும் பெறப்படும்.

3 – படைக்கல ஏடணை வகை – 2
தண்டு, வில் சக்கரம் முறிய.

239. கொண்டபின் ஆயுத ஏடணை கூறுவேன்
தண்டொடு வில்லுச் சக்கரம் முறியக்
கண்டவன்ப தையேழுங் காண வெழுபதும்
பண்டைவாள் ஈட்டிப் பத்திரம் முறியே.

பாடபேதம்

1. ஏடணை கூறுவென் - கூறுவன் - கூறுவெண்.

2. வில்லு சக்கரம் - சக்கரங்களவை முறியக் - சக்கர சர முறியவுங் - வில்லுச்சரங்களவை முறியக் - வில்லு சரங்கள் முறிய.

3. கண்டவைம் பத்தேழுங் – கண்டைம் பத்தேழுங் – கண்டைம்பத்தேழு - கண்டிடு மைம்பது காண முப்பத்தய்ந்து.

4. வானெட்டி - வானிடம் – வாளீட்டி பத்திரம் - வானெட்டி பகர் பத்திரம் - வாளீட்டி பகர்பத்திரம் வானிடம் பத்திரம். முறிய - முறியவே.

முற்றும் விண்டது முப்பது வேஷணை முடிவாம். 50 - 35 - 30·

குறிப்புரை

இம்மந்திரம்; நிறுத்த முறையானே 3 – ஆம் எண்ணு முறைமைக்கண் நின்ற படைக்கல ஏடணைக் கன்மம் கூறுவான் தொடங்கி, முதற்கண் தண்டு, வில், சக்கரம் ஆகிய படைக்கல ஏடணைக்குரிய இலக்கங்களை உணர்த்துகின்றது.

ஆயுத ஏடணை - படைக்கல வித்வேஷண வினையேவல் தண்டு = தண்டாயுதம் — கதைப்பட்டக்கலம். தண்டாயுதமுந் திரிசூலமும் விழ. —கந்தரலங்காரம் 25

சக்கரம் = சக்கராயுதம் - ஆழிப்படைக்கலம் பண்டு= பழமை – தொன்மை வாள் = கத்தி – ஈர்வாள். உயிரீரும் வாள் —திருக்குறள் 334.

ஈட்டி = குந்தம் - குத்துக்கோல். பூந்தலைக் குந்தங் குத்தி. —முல்லைப் 41.

பத்திரம் = அம்பு - உடைவாள்; பகழியும் சுரிகையும் பத்திரம் என்ப – பிங்கலம், பத்திரம் வாங்கித் தான் முன்,

நினைந்த அப்பரிசே செய்ய - பெரிய 481. ஈண்டு எடுத்தோதப்பட்ட படைக்கலங்களில் ஆழியும் அம்பும் எறி படைக்கலங்கள் ஏனையவை நிலைப் படைக்கலங்கள் வடநூலார் இவற்றை முறையே அத்திரம் சத்திரம், என்பர். முரிதல்-ஒடிதல்.

1. தண்டு, வில் சக்கரம் முறிய:— 50 - 35 - 70.

இலக்கவேறுபாடு

1. தண்டு, வில், சக்கரம் முறியும்-தண்டாயுதம் வில்லு சக்கரம் முறிய—

50 - 35 - 70 = 155. 50 - 70 - 35 = 155.

30 - 35 - 50 = 115. 50 - 35 - 35 = 120.

50 - 35 - 40 = 125. 57 - 0-0 = 127.

115. 120. 125. 127. 155, 168.

தடிமுறியும் : 155

க க்ஷ பு ட ம்: ஆயுத வித்வேஷ்ணம் - தநு, சரம் ப்ராஸம், குந்தம், கட்கம், தோமர மண்டலம் | விலக்ஷம் விததம் (விர்த்ததம்) பூயாத் பிந்நஞ்ச விதி வந்திதே ||

50 - 35 - 35 (120 =) 50 - 35 - 40 (= 124).

50 - 35-35 (= 120) 50 - 35 - 40 (= 145).

வாள், ஈட்டி, பத்திரம் ஆகிய படைக்கல ஏடணைகட்குரிய இலக்கம் வருந் திருமந்திரத்திற் சொல்லப்படும்.

3 - படைக்கல வித்வேஷண வினையின் வகை - 2.

240. முறிவது திண்ணம் முனைவது பத்தேழ்
அறுபது மாறெட்டு மான விலக்கம்
செறிபடை யேடணை சேரும் இரண்டு
முறிவன மந்திரம் முற்றிய வாறே

பாடபேதம்

1. முடிவது - முறிந்தறுபத்தேழும் - முறிந்த வறுபத் தேழும் — முனிந்தறுபத்தேழும் — முனிந்தறுபத் தேழ்.

2. மானவிலக்கஞ் - மளவில்லார்க்கஞ் - மளவில்லா லக்கமுஞ் - மளவில்லாலக்கமுஞ் - மளவில்லாக் கமுஞ் - மளவில்லாலெக்கமு - மளவில்லாலக்கம்.

3. செயவித்தேடணை - தேடணை - சேறு.

4. முறியவன் மந்திரம் - முற்றியவாறாமே - முற்றிய வாரே - முற்றறிவாரே - முற்றறிவாறே.

குறிப்புரை

இம்மந்திரம்; வாள் ஈட்டி பத்திரம் ஆகிய படைக்கல ஏடணைகட்குரிய இலக்கத்தையும், படைக்கல ஏடணை வினை யேவல் வகையின் தொகையையும். அதன் மந்திரத்துக்குத் தோற்றுவாயையும் உணர்த்துகின்றது.

திண்ணம் = உறுதி – உண்மை. முனை = பகை – போர்-போர்முனை (முகம்) - பகைப்புலம். செறிதல் = நெருங்குதல்–பொருந்துதல்.

படையேடணை – ஆயுத வித்வேஷணவினை. இரண்டு–2 வகைகள்.

படை ஏடணையின் வகை-2. அவையாவன:

1. தண்டு–வில்-சக்கர ஏடணை.

2. வாள் — ஈட்டி — பத்திர ஏடணை என்பனவாம்.

முன்னது முன்னர்க்கூறினாராகலின், ஈண்டு பின்னதைக் கூறினாரென்க :— 57 - 60 - 48 — கக்ஷ புடம்.

2. வாள்-ஈட்டி, பத்திரம் முறிய:—
67-60-48 — கக்ஷ புடம்.

இலக்க வேறுபாடு

2. வாள்-ஈட்டி-பத்திரங்கள் - முறியும்-வாள்-ஈட்டி-முறிய - வாள்-ஈட்டி-பட்டாக்கத்தி:முறிய-தடி:முறிய.

67-60-48 = 175. 40-60.68 = 168.

115 155. 168. 175. 189.

கக்ஷபுடம்: கட்க-கேடக-பத்ரிகாஜிகுண்டநம்:
67-60-48 (= 175)

மேற்கோள்

வித்வேஷணந்து . த்விவிதம் ஆயுதாநாந்து சுருண் வத: || கக்ஷபுடம். இதற்குரிய மந்திரம் அடுத்துக் கூறப்படும்.

மந்திரம் 29

3-படைக்கல ஏட்டணையின் வகை-2க்கும் உரிய

சிறப்பு மந்திரம்

ஓம் ஐம் க்லௌம் க்ஷாம் காளீ நீல காளீ வஜ்ரகாளீ நிர்வாணீ ஹ்ரீம் க்லீம் ஹூம் ட்சீம் கீழே கவிழ்ந்து விழுக விழுக ஸ்வாஹா. ||

பாடபேதம்

1. ஓம் ஐம் க்லௌம் காளீ நீல காளீ வஜ்ர காளீ நிர்வாணீ ஹ்ரீம் க்லீம் அத ஹூம் பத பத ஸ்வாஹா ||
2. ஓம் ஐம் க்லௌம் காளீ நீல காளீ வஜ்ரகாளீ நிர்வாணீ ஹ்ரீம் க்லீம் ஹூம் பத பத ஸ்வாஹா |

3. ஓம் ஐம் க்லௌம் காளீ நீல காளீ வச்சிரகாளீ | நிர்வாணீ ஹ்ரீம் கவிழ்ந்து விழ்க ஸ்வாஹா ||

4. ஓம் ஐம் க்லௌம் காளீ நீல காளீ வஜ்ரகாளீ நிர்வாணீ ஹ்ரீம் க்லீம் (கம்) கவிழ்ந்து விழுகை ஸ்வாஹா ||

5. ஓம் களம் க்ஷாம் ள (காளீ) வஜ்ரகாளீ நிர்வாணீ கவிழ்ந்து விழுகை ஸ்வாஹா ||

6. ஓம் ஐம் க்லௌம் (க ள ம்)க்ஷாம் ளி காளீ நிர்வாணீஹரீம் க்லீம் கவிழ்ந்து விழுகை ஸ்வாஹா ஓம் ||

7. ஓம் ஐம் க்லீம் காளீ நீல காளீ ஐம் காளீ நி(க)ர் வாணீ க்லீம் க்லீம் ஸ்வாஹா

8. ஓம் ஐம் கௌம் க்ஷாம் காளீ வஜ்ர காளீ நிர்வாணீ ஹ்ரீம் க்லீம் கவிழ்ந்து விழுக ஸ்வாஹா ||

9. ஓம் ஐம் கௌம் (க்லௌம்) காளீ நிர்வாணீ ஹ்ரீம் கிலீம் கவிழ்ந்து விழுக ஸ்வாஹா ஓம் ||

10. ஓம் ஐம் க்லௌம் க்ஷாம் காளீ வஜ்ர காளீ நிர்வாணீ ஹ்ரீம் க்லீம் கவிழ்ந்து விழுக ஸ்வாஹா ||

11. ஓம் ஐம் க்லௌம் காளீ நிர்வாணீ ஹ்ரீம் க்லீம் கவிழ்ந்து விழுக ஸ்வாஹா ஓம் ||

12. ஓம் ஐம் க்லௌம் காள (ளி) ரீ (நீ) ல காளீ வஜ்ர காளீ நிர்வாணீ ஹ்ரீம் ட்சீம் கவிழ்ந்து விழுக ஸ்வாஹா ||

13. ஓம் ஐம் க்லௌம் க்ஷாம் காளீ வஜ்ர காளீ நிர்வாணீ ஹ்ரீம் க்லீம் கவிழ்ந்து வீழ்க ஸ்வாஹா ஓம் ||

14. ஓம் ஐம் கௌம் க்ஷாம் காளீ வஜ்ரகாளீ நிர்வாணீ கவிழ்ந்து விழுக சுவாகா ||

15. ஓம் ஐம் கெலவும் காளீ நிர்வாணீ ஹ்ரீம் க்லீம் கவிழ்ந்து விழுக ஸ்வாஹா ஓம் ||

இதற்குத் திசை – அக்கினி மூலை. ஓரை – செவ்வாய் இரவு 2 – ஆம் யாமம். சத்தி வடிவு – அக்கினி இச்சக்கரம் அவன் தலையில் தரிக்க ; அல்லது தோள் மார்பு, கையில் வைக்கவும்.

வித்து வேஷணை முற்றும்.

16. ஆக (ஆயுத வித்துவேஷணை) 2 - க்கும் மந்திரம் ஓம் ஐயும் ஸௌ (வும்) புா சாா (காளீ) ட்டேகா ஷெல விரசாா (வீர காளீ) நீல (நிர்) வாணீ ஹ்ரீம் கவிழ்ந்து விழுகை சுவாஹம் ||

குறிப்புரை

இம்மந்திரம் ; படைக்கல ஏடணை வினையேவலின் வகை 2 - க்கும் உரிய சிறப்பு மந்திரமாகும். இதன் தந்திரம் வருந்திருமந்திரத்துட் சொல்லப்படும்,

மேற்கோள்

" ஓம் ஐம் க்லௌம் பதமுச்சார்ய காளீ பத மத: பரம் | நீல காளீ வஜ்ரகாளீ நிர்வாணீ (நீசவாணீ) ச பதந்ததா (தத :) ||

மாயாம் மார மத : ச்சப்தம் (மதோவக்தரம்) பதஸ்வாஹா மநுர்ஹ்யயம் (பாதயேதி பதந்தத :) | ப்ரோச்சார்ய வந்நிஜாயாஞ்ச ரோஷாந் மந்த்ரம் ஸமுச்சரேது ||

ஆயுதாநாமயம் மந்த்ரம் ஸங்க் யாவேகநமாத்ர (மார்க்க) த : 1 வேகநிடயாவிசேஷேண சூலாக்ரே சேஷ மாலிகேது ||
— கக்ஷபுட தந்த்ரம்.

என்பன காண்க. இம்மந்திரத்தில் வந்துள்ள கவிழ்ந்து வீழ்க கவிழ்ந்து வீழ்கை என்பன சிதைந்த தமிழாகிய பாகதமொழி. இது, பெயர்க்கப் பெற்றிருக்குமாற்றையும் அறிந்துகொள்க;

மந்திரம் - 30

6 – வித்வேஷண வகை 3 - க்கும் உரிய பொதுமந்திரம்

சில சுவடிகளிற்காணப்படும் குறிப்பு:

ஏடணையின் வகை 3-ம் கூறி முடிந்தபின்னர், இது காறுஞ் சொல்லிவந்த முறைப்படி ஈண்டு இருத்தற்குரிய சாமானிய - பொது மந்திரம் சுவடிகளிற் காணப்படவில்லை. மந்திரம் முற்றியவாறே (240) முற்றியவாறு மொழித்த இம் மந்திரம் — (241) என்று ஆசிரியர் அருளியிருத்தலை நோக்க மேற்சொல்லப்பட்டதாகிய படைக்கல ஏடணைக் குரிய சிறப்புமந்திரமே, மூவகை ஏடணைக்கும் உரிய பொது மந்திரமும் ஆகும் எனத் தோன்றுகிறது.

ஈண்டுச் சில சுவடிகளில் காணப்படும் மந்திரங்கள்

1. ஆக ஏடணை 3-க்கு பிறை (ர) யோக சக்கரம் - லெளகீக ஏடணை 10.

 மிறு (ரு) க வேடணை-6. ஆயுத வேடணை–2. ஆக 18-க்கு மந்திரம்: —

 ஓம் ஐயும் ஸெளவும் (கெளவும்) காளீ க்ஷாம் காளீ வீரகாளீ நிர்வாணீ (நீலகாளீ) ஹ்ரீம் கவிழு(ந்)து விழுகை சுவாஹம் ||

2. (ஓம்) நீலகாளீ வச்சிரகாளீ நிறு(ர்) வாணீ ஹ்ரீம் கவிழ்ந்து வீழ்க சுவாஹம் ||

3. வித்வேஷண மந்திரம்:— ஓம் ஹ்ரீம் ரம் ஹ்ரீம் ஹ்உம் புவநேசுவர்யை நம : ||

4. வித்வேஷணத்திற்கு:—க்ரோம் - த்விவேஷய வித் வேஷய ||

5. வித்வேஷணத்துக்கு:— ஹ்உம்வித்வேஷய வித்வேஷய || -

6. மந்வந்தரே புநர்ப்பீஜம் மந்த்ராந்தே நாம நிர்த்தி சேது |

ஸ்வாஹா நமஸ்வதாவேதி மந்த்ராந்தேது படேத் சுதி: ||

ஏவம் ஞாத்வா ப்ரயோகஞ்ச ஸர்வ கர்மாணி ஸாதயேது |

7. வித்வேஷணத்தில்:— ஹ்றஉம் ப்பட் என்பதை சுற்றிச் சேர்த்துக் கொள்க.

8. இதற்கு மந்திரம் சுத்த:— பிரிபிரி குத்தம் பிரிபிரி நட்டம் பிரிபிரி நாடாதே பிரிபிரி கெட்டும் பிரிபிரி கேளாதே பிரிபிரி ஓம் பிரிபிரி திருநீலகண்டர் ஆணை [இன்னாருக்கும்] பிரிபிரி ||

இம்மந்திரத்தை உருவேற்றி வைக்குமிடத்தில்வைக்கவும் பிரியும்.

9. வித்வேஷணத்துக்கு:—சிவாக்ஷரம் வங்வங். சத்திய க்ஷரம் ஐயும்.

10. இலக்கம் எழுத்தை அனுசரித்த எழுத்தாகவே இருக்கவும். இம்மந்திரம் ஆயுத வித்வேஷணத்துக்காக ஏற்பட்டது. இந்த மந்திரத்தை இலக்கங்களை எழுதுகிற கிரமமாயெழுதவேண்டும். எழுதியதுபோக எஞ்சியுள்ள எழுத்துக்களை சூலாகாரங்களில் எழுதவும்.

11. வித்வேஷாருத்ர பீஜகம் — வித்வேஷணத்துக்கு அங்குச பீசம் — க்ரோம்.

12. ஓம் ஐம் வங் வங் க்லெளம் க்ஷாம் ஹ்றீம் ரம் ஹ்றீம் காளீ நீல காளீ வஜ்ர காளீ நீல காளீ நிர்வாணி ஹ்றீம் க்லீம் ஹும் ட்சிம் க்ரோம் வித்வேஷய வித்வேஷய கீழே கவிழ்ந்து விழுக விழுக ஹ்றஉம் ப்பட் ஸ்வாஹா ஓம் ||

இந்த மந்திரம் ஊகத்தாற் குறிக்கப்பட்டது.

13. இந்த இயந்திரத்தை உசிதமான இடத்தில் தரிக்கச் செய்யவேண்டியது. 5 - விஷத்தினாலாவது, 8 - விஷத்தினாலாவது பூசப்பட வேண்டியது.

14. இவைகட்கு ஐங்காயம் பூசிப் போர்க்களத்தில் வைக்கவும்; புதைக்கவும். பின்பு ஆயுதம் பிடித்து வெட்டவும்.

15. இவ்வியந்திரத்துக்கு ஐங்கடு, முக்கடு, அல்லது எண்கடு (விஷம்) ஆயினும் பூசி உசிதமான இடத்தில் வைக்கவும்.

16. ஹகாரமானது பிந்துவுடனும், உகாரத்துடனும் கூடின் வித்வேஷணமாகும்.

17. ஓம் ஐயும் ஸௌவும் காளீ ட்ரீம் காளீ ... வீரகாளீ நிர்வாணீ ஹ்றீம் கவிழுது விழுகை சுவாஹம் ||

18. ஓம் ஐம் க்லீம்ஸௌம் க்லௌம் ஹ்றீம்காளீ நீலகாளீ வஜ்ரகாளீ வீரகாளீ பத்ரகாளீ நிர்வாணீ ஹ்றீம் க்லீம் ஹும் க்ஷாம் ட்ரீம் க்ரோம் வங்வங் வித்வேஷ வித்வேஷய கீழ கவிழ்ந்து விழுக விழுக ஹ்ரூம் ப்பட் ஸ்வாஹா ஓம் ||

(இம்மந்திரம் ஊகத்தாற் கொள்ளப்பட்டது)

குறிப்புரை

இம்மந்திரம் ; வித்வேஷண கன்மப் பிரயோக வகை 3 - க்கும் உரிய பொது மந்திரம் ஆகும். இதன் தந்திரம் அடுத்து வருந் திருமந்திரத்திற் சொல்லப்படும.

5 - விஷம் = ஐங்காயம் பஞ்சகாயம் - பஞ்சகரு, பஞ்ச கந்தம் — ஐங்கடு ; 8 — விஷம் = எண் காயம் எண்கடு — அஷ்டகாயம் — அஷ்டகரு (அஷ்டகந்தம்) முக்கடு = முக்காயம் — முக்கரு — முக்கந்தம் என்பன ஒரு பொருட்கிளவி கல் காயம் — காயம் — கடு — கரு — என்பனவும் அன்ன — திருமந்திரம் : 998 — 999 — 1000 பார்க்க ஆக்க வினைகளில நறுமணமாகிய சுகந்த (அஷ்டகந்த) மும் அழிவு வினைகளில்

துர்க்கந்தமாகிய காயம் — கடு — கருவும்பூசுதல் வேண்டும் என்பர்.

3. படைக்கல ஏடணைக் கன்மத்தின் தந்திரம்.

241. முற்றிய வாறு மொழிந்தவிம் மந்திரம்
பற்றிய சக்கரம் பாரித்து வன்றலை
சுற்றிய தோர்கையிற் றோன்ற விருக்கினும்
வெற்றியாகும் விரைந்து முடியுமே.

பாடபேதம்

1. மொழிந்தவம்.
2. பாரித்த தன்றலை. பாரித்தவன்றலையும் — பாரித்த வன்கலை — பாரித்தணைகலை — பாரித்தளைகலை — பாரித்தவனற்கலை.
3. சுற்றிய தோழர்கைத் தோன்ற — சுற்றிகை தோள (ழ) ர் கை தோன்ற - சுற்றிய தொழிற் கை தோன்ற விருக்கிலும் — விருக்கலும் - விருக்கவும்.
4. வெற்றியுமாகும்,

குறிப்புரை

இம் மந்திரம்;படைக்கல ஏடணை வினையின் தந்திரம் உணர்த்துகின்றது.

முற்றுதல்-முடித்தல்-வளைத்தல்-தங்குதல். பாரித்தல் தோன்றுதல்—தோன்றச் செய்தல். பகல் செய் மண்டிலம் பாரித் தாங்கு—பெரும்பாண். 442. அணிதல்—கைவளை பாரித்தார்—இராம நாடகம். பால 21. வழிபடுதல்—அருச்சித்தல். தடமலர் எட்டினாற் பாரித்து ஏத்த-தேவாரம். சுற்றுதல் = இயந்திரத்தை உருட்சியாகச் சுருட்டுதல்—விடாமற் பற்றுதல். தோன்ற—பகைப்புலத் தார்க்குப் புலனாகும்படிப் புறத்தே தோன்றுமாறு.

இந்த மந்திரம் வரையப்பட்ட இயந்திரத்தை விதிப்படி வழிபாடாற்றி முற்றிய பின்பு புறத்தார்க்குப் புலனாகும்படி யாக முடியிலேனும் கையிலேனும் தரிக்கின் விரைவாகத் தனக்கு வெற்றியுண்டாகும். அத்துடன் பகைவர் படைக் கலன்களும் விரைந்து முறிந்து கெடும் என்பதாம்.

6. பகைப்பு வினையேவலின் வகையும், தொகையும்.

242. முறிய விழுவது மூன்றுவித் தேடணை
இறியுந் தொகைதான் இருபத்தொன் றாகும்
செறியுந் திசையும் தியானங்கள் தானும்
குறியும் இவையென்று கூறிட நாடிடே.

பாடபேதம்

1. முறிய விடுவது. விதுவேடணை — விதுதேடணை — தேடணை.
2. இறியுந் தகையாமிருபத்தொன் — இறியுந்தகையா யிருபத்தொன் — இரியுந்தகையாயிருபத்தொன் — அறியுந்தொகைதாளிருபத்தொன் — அறி (யு) ந் தொகையா மிருபத்தொன்றாம் — யறியும்பேந் தொகையாமிருபத்தொன்றாஞ்.
3. தியானங்கடானுங்.
4. இவையொன்று — இவையொன்றுங். நாடே — நாடவே.

குறிப்புரை

இம் மந்திரம்; இதுகாறும் உரைக்கப்பட்ட பகைப்பு வினை யேவலின் வகையையும், அவற்றின் தொகையையும் உணர்த்து கின்றது. இறிதல் = இறுதல்—முடிதல்—செறிதல்—பொருந்துதல் குறி = குறிப்பு — அடையாளம் — இலக்கணம். ஈண்டு இக் கன்மத்திற்குரிய காலத்தைக் குறித்து நின்றது. மூன்றுவித் தேடணை — பகைப்புவினை யேவலின் வகை—3.

பகைப்பு வினை ஏவலின் வகை—3 ஆவன :

(1) உலக ஏடணை, (2) விருக ஏடணை, (3) படைக்கல ஏடணை என்பனவாம்.

தொகை இருபத்தொன்று—அவற்றின் மொத்தத் தொகை —21. அவையாவன:—

பகைப்பு வினை ஏவலின் தொகை — 21 ஆவன:

(1) உலக ஏடணையின் தொகை — 13, (2) விருக ஏடணையின் தொகை—6, (3) படைக்கல ஏடணையின் தொகை —2. ஆக 21 ஆதல் காண்க.

வித்வேஷணகன்மப் பிரயோகத்தின் வகை — 3ம் தொகை —21ம் ஆகும். இனி இக்கன்மத்திற்குரிய திசையும் சொருபதியானமும், நேரமும் வருந்திருமந்திற் சொல்லப்படும் என்க.

6. பகைப்பு வினையேவலின் திசையும் தியானமும் நேரமும் முதலியனவும்

248. நாடுந் திசையங்கி நன்மேனி தானங்கி
ஆடிய நேரம் அந்தியிரண் டாஞ்சாமம்
தேடிய ஓரையும் செவ்வா யிவைபோகப்
பீடுறு பேதனம் பின்னை வருமே,

பாடபேதம்

1. நன்மேனி காணிங்கி - நன்மேனிதாங்கி - தாநங்கி
2. நேரமுமந்திரண் - நேரமு மந்தியிரண் - நேரமும் அந்திரெண் – நேரமு மமர்ந்திரண். சாமந் – சாமத் - சாமமாம் - சாமமாந்.
3. ஓரையும் — ஓரை. செவ்வாயவ்வை போகப் — செப்பாயிவை — செவ்வாயிவடொங்கிப் — யிவை யோங்கி — யிவை பொங்கி — யிவை பொங்கிப் — யிவைபோய்ப் — யிவையொக்கும்

4. பீடிடும் — பாடுறு. வரைவது பின்னே — பின்னை — வரைவதே — பின்னை வருவ்தே — பின்னை வருவளே — பின்னர் வருமே — வருவது பின்னே.

முடிவு : வித்வேஷணம் முற்றும்.

குறிப்புரை

இம்மந்திரம் ; பகைப்பு வினையேவலுக்குரிய திசை, தியானம், நேரம், யாமம், ஓரை ஆகியவற்றைக் கூறி முடித்து மேற்சொல்லப்புகும் பேதன கன்மைத்துக்குத் தோற்று வாயையும் உணர்த்துகின்றது.

அங்கி — செந்தீ. அங்கித்திசை = செந்தீக் கடவுட்குரிய திக்கு — தென்கிழக்கு மூலை. மேனி — நிறம் ; தளிரேர் மேனித் தாய சுணங்கின் — நெடுநல்வாடை 148. மேனி — அங்கி — திருவுருவத்தின் நிறம் செம்மை. ஆடிய நேரம் — ஆடல் கோடற்கேற்ற நேரம். ஆடல் = செய்கை — தந்திரம். சொல்லுதல் — வெற்றி. உரையுங் கூத்தும் வெற்றியும் ஆடல் — பிங்கலம். யார்க்கும் நன்மை யாடல் செயும் — கந்தபு தகரேறு 24. ஆடுகொள் நேமியான் கலித்தொகை. 105 : 70. அந்தி = மாலையந்தி - இரவு அந்தி காவலன் அமுதுறுபசுங்கதிரவைசுட . திவ்யப் 1688 சாமம் = யாமம் 7½ நாழிகை கொண்டுள்ள கால அளவு பிங்கலம். ஓரை — 2½ நாழிகை கொண்டுள்ள கால அளவு. பீடு = பெருமை — மிகுதி. பீடுறு பேதனம் — 126 ஆக விரிந்துள்ள பேதனகன்மம். பேதனம் = பேதித்தல் — வேறு படுத்தும் வினை. பின்னை = பின்னர் — இதன் பின்பு — இனி. வரும் = வருதற்குரியதாகும் — சொல்லப்படும்.

இந்த வித்வேடண கன்மத்தின் மந்திரசெபம், இயந்திர வழிபாடு, தந்திரம் ஆகியவற்றுக்குரிய திசை, தென் கிழ்த்திசையாகும். இறைவி திருவுருவத்தின் நிறம் செமமை. காலம் இரவு 2 — ஆம் யாமம். கிழமை செவ்வாய். ஓரை செவ்வாயோரை. இனி வருவது பேதன கன்மம் என்பதாம்,

மேற்கோள்

வித்வேஷணா நாம் ஸர்வேஷாம் குஜஹோராப்ரசஸ்யதே!
ராத் ரௌத்விதியயாமேது ஆரபேத்வா ஸமாபயேது ||
ஆக்நேய திங் முகோ பூத்வா த்யாயேத் தேவி
மநஸ்யதீ : | ...
... ஏவம் த்யாத்வா மகாதேவி புவநாதி பதிம்ப்ரபும் ||
தாரயே துசிதஸ்த்தாநே யந்த்ர மேதத்வராநநே ||
— ககக்ஷபுடதந்த்ரம்

சில சுவடிகளின் முடிவிற்காணப்படும் குறிப்பு.

1. அக்கினி திசையிலிருந்து அக்கினி சுவாலையாய் பேதன சத்தி (?) வருவாள். செவ்வாய்க்கிழமை அந்தி 2–ஆஞ்சாமத்தில் பூசித்து (ச்) செபிக்கவும், மஞ்சள் பூசவும்.

2. இதற்குத் திசை அக்கினி மூலை. ஓரை செவ்வாய் இரவு 2 - ஆம் சாமம். சத்தி வடிவு அக்கினி. இச்சக்கரம் அவன் தலையில் தரிக்க. அல்லது தோள், மார்பு, கையில் வைக்கவும்.

14 – ஆம் அதிகாரம். 7 - பேதன கன்மம்

பேதன கருமத்தின் வகை - 7

244. பின்னை யுலகம் பெரிய நிலஞ்சலம்
மண்ணும் புருடரும் மாதர் விருகமும்
பின்னைப் பகையொடு பேசிய தேழ்வகை
தன்னைப் பெருக்கத் தரித்துரைப் போமே.

பாட பேதம்

தலைப்பு : பேதனம் வருமாறு:

1. யுலோகம் – யுலகமும். நிலஞ்செலம் – நிலஞ் செல(ம்).

2. புருடர் மாதர் - புருஷர் மாதர் – புருடருமாதர். விருக்கமும் – மிருகமும்.



வித்வேஷண கன்மத் தியானத் திருவுருவம்

செய்யுள்: 243

3. பின்னைபகை – பகையோடு – பகையோ. தேழுவகை – தெழுவகை - தொழிவகை.

4. பெருக்கந் – பெருகத் பெருக்க, பேமே – பேனே தனித்துரைப்பேனே.

முடிவு :— பேதநம் - லோகம் - நிலம் – ஜலம் – புருஷர் – ஸ்திரீ – மிருகம் – பகை.

குறிப்புரை

இம் மந்திரம் ; மேல் நிறுத்த முறையானே 7 - ஆம் எண்ணுமுறைக்கணின்ற பேதன கன்மம் கூறுவான் தொடங்கி, முதற்கண் அதன் வகையினை உணர்த்துகின்றது. பேதனம் = பேதம் - வேறுபடுத்தல்-பின்னை - பின். மன்னுதல் = நிலைத்தல் - சேருதல். புருடர் – ஆடவர். மாதர் – பெண்டிர். விருகம் – விலங்கு. பகை – பகைவர். பெருக்கம் - தொகையால் – 126 – ஆக விரிந்துள்ளமை தரித்தல் = மேற்கொள்ளுதல் – உளங் கொள்ளுதல்.

பேதன கன்மத்தின் வகை – 7. அவை (1) நிலம் (2) நீர், (3) உலகம், (4) மாதர், (5) மைந்தர், (6) விலங்கு, (7) பகை ஆகியவற்றின் பேதனங்களாம். இம் இம்முறையே மேல் வகுத்துக் கூறுமாறு கண்டுகொள்க.

மேற்கோள்

அவநீஜலலோக புருஷாணம் ப்ரமதாநாமபி ஸத்வ துஷ்டந்ருணாம் |

இதிஸப்தவிதந்து ப்ரபேதம் சுருணு ராஜீவ தளாபிரா மநேத்ரீ ||

கட்சபுட தந்த்ரம்

உபாயம் :— கொடுத்தல் – இன்சொல் சொல்லல் - வேறு படுத்தல்-ஒறுத்தல் என நால்வகைப்படும். இவற்றை வடநூலார் தான, சாம, பேத தண்டம் என்ப அவற்றுமுன்னைய இரண்டும் ஐவகைய; ஏனைய மூவகைய - அவ்வகைகள் எல்லாம் ஈண்டு உரைப்பிற் பெருகும்.

திருக்குறள் - 467. பரிமே

ஜ்வாதப்ராஹா வேதமாவது: ஈதல்லாமல் ஆயேரணமாவது பாதுகாசித்தி, அஞ்சனாசித்தி, குளிகாசித்தி, மூலிகாசித்தி, ரஸவாதசித்தி முதலான சித்திகளாவது. இப்படி அஷ்ட கர்மமும் வந்து ஆகாச கமனம் முதலான தூரதிருஷ்டி. தூர கமனம் இவை கைவரப்பெறுதல். இதுவே முத்தி யென்பர். இவை வருகிற விதம் எப்படி என்னில்:

சத்திகளிற் பல பேதமுண்டு. 6-கோடி மாயாசத்திகளும், பின்னும் சத்தமாதர், சத்ததுற்கிகள், சத்தகன்னிகைகள் இப்படி அளவில்லாத சத்திகள் உண்டு. இவர்கள் எந்தக் காரியத்தை எண்ணினும் அவற்றிற்கேற்ற சக்திகளும், அவற்றின் மந்திரங் களும், செபங்களும், தியானங்களும் வெவ்வேறாயுள்ளன. கற்பங்களிற் சொல்லியவாறே அவற்றிற்கேற்ற (1) செபம், (2) பூசை, (3) ஓமம். (4) தற்பணம் (5) பலி, (6) தானம். (7) தருமம் முதலானவை செய்து பக்தி வைராக்ய தேவதாப்ர சன்னத்துவத்தால் நினைத்தகாரியமாகும்.

இனி, ஒரு சத்தியே முதல் என்பது சொரூபம் இச்சத்தி எண்ணிறந்த சத்தியாய் எல்லாத் தந்திரங்கட்கும் வியாத்தி வியாபகமாய்ச் செகசிவ தந்திர மத்திரமாய் விரிகிறது தடத்தம் இனி (1) சத்துவநாத (2) சலோகநாத (3) ஆதிநாத (4) அகுளிதநாத (5) மதங்கநாத (6) மச்சேந்திரநாத (7) கடயந்திரநாத (8) கோரக்கநாத (9) குக்குடநாதர் என்கிற இந்த நவநாதர்களால் செய்யப்பட்ட சாஸ்திர வழி களில் நடவாமற்போவதே முத்திநிலை. இனி, முற்சொன்ன அஷ்ட கன்மங்களுங் கைவந்து ஆனந்த பூர்த்தியாவதே முத்தி நிலை.

இனி, யோகங்களின் விரிவை; சிவயோகசாரம், சிவ யோக மஞ்சரி, யோகாத்நவம், அடப்ரதீபிகை, முதலிய நூல்களிலும்; புராணங்களிலும், தமிழில் பெருந்திரட்டு, சிறுதிரட்டு, மெய்ம்மொழி, சகலாகமசிகாமணி, சிவதன் மோத்தரம், திருமந்திரம், தத்துவப்பிரகாசம் முதலான சாத்திரங்களிற் காண்க.

தத்துவ நிசாநுபோகசாரம்.

அதி – 42. கவுளயாமளைமதம்.

1 – நிலபேதன கன்மத்தின் வகை - 14

1 பயிர் தழைக்க.

245. உரைப்போம் நிலபே தனந்தனை யோங்கப்
பரிப்போம் பயிராகப் பார்த்திடி லெட்டும் (?)
நரைப்போ மிருபா னாலுந்தொண் ணூற்றஞ்சும்
விரைப்பது நெல்லு விளைவது காணுமே.

பாடபேதம்

1. உரைப்போ நிலப்பேதனந் — உரைப்பேனில பேதனந் — உரைப்பே நில பேதனந் — உரைப்பேம் நில பேதனந். பேதனந்தன்னை. யோங்க - யோங்கிப் - யோங்கிய.

2. பரிப்பூம் பயிராக - பரிப்பூம் பையிராக – பரிப்பூ மய்யிராசப் - பரிப்போம் பயிர்கள் – பரிந்துபோம் பயிராகப். பார்த்ததிலெட்டு - பார்த்திடிலெட்டு – லெட்டுந் – லெட்டுத்.

3. நரைப்போ மிருபத்துநாலுந் – நரைப்போ மறுபத்து நாலுந் – நரைபோ மறுபத்து - நரப்போ மறுபத்து– வரபப்போமிருபத்து. ணூற்றஞ்சு – ணூற்றாறஞ்சு.

4. விரைப்போது விளைவது தானே – விளைவது காணே– விளையாவது தானே

குறிப்பு: - 7-ஆம் இலக்கம் இட்டுள்ள (தஞ்சை சரஸ்வதி மகால்) சுவடியில், உள்ள செய்யுட்கள் இவ்வளவே. இதன் பின்னர், பின்வருந் தொடர்கள் காணப்படு கின்றன.

காணு மறுபத்துலுடன் பூட முங்கைப் பூதிகமாகக் கொண்டேன். முழங்கைத் தாமரையாகக் கொண்டேன். அஞ்சு வில்லுமைந்தலை நாகமாகக் கொண்டேன். அந்தலை நாகத்தை நஞ்சை யெடுத்திவள் நெஞ்சிற் தொடவுள்ளஞ் சிவந்து, வுடல்

சிவந்து, காமஞ்சிவந்து, கண்ணிரண்டுங் கங்குலார்த்துச் செஞ்சடைச் சிவனார் வருமளவு மவனைமறப்பாய்; என்னை நினைப்பாய். அஞ்சு பூதிமமு மென்பூதிபமாக நிற்க நிற்கவே சி(வா)கா.

குறிப்புரை

இம்மந்திரம்;; நிலபேதன கன்மத்தின் வகையினைக் கூறுவான் தொடங்கி, முதற்கண் பயிர் தழைத்தற்குரிய இலக்கத்தினை உணர்த்துகின்றது.

பயிர் ஆக—நெற்பயிர் தழைத்து வளர. ஆதல்=வளர்தல்—செழித்தல்—தழைத்தல் பரித்தல் = காத்தல் — தாங்குதல். நரை—பெருமை. நரையுருமின் ஏறனையை - மதுரைக்காஞ்சி 63. வெண்மை—பயிர்களின் பசுமை நிறம் வெளிறின தன்மை. விரைப்பது = விதைத்தல் விதைக்கப்பட்டனவாயுள்ள நென் முளைமணிகள். இவை செழித்து முளைப்பதற்குரிய இலக்கம் வரும் திருமந்திரத்துட் சொல்லப்படும்.

1. பயிர் தழைத்து வளர: 8—24—95.

இலக்க வேறுபாடு

1. பயிர் விர்த்தி — பயிர் விளைய பயிர் ஓங்கியெழும்பி வளர—வளரும்—விளைய —விளையும்—விர்த்தியாக—விர்த்திக்க-நிலம் பயிராக. 4 — மூலையிலும் விதைக்க.

8 - 24 - 95 = 127. 28 - 24 - 95 = 147.
28 - 21 - 95 = 144. 8 - 64 - 95 = 167.
28 - 29 - 95 = 152. 24 - 50 - 11 - 85 = 170
95 - 24 - 66 = 185.
24 - 90 - 88 = 172. 95 - 24 - 64 = 183:
64. 123. 127. 143. 144. 147. 152. 167.
170. 172. 183. 185. 198.

கக்ஷபுடம்: ஒஷதயோ பவந்தி ஔஷத யோபவந்தி :
28 - 24 - 95 (= 147) — 28 - 21 - 95 (= 144 : ?) ;-
28 - 29 - 95(= 152 : ?).

இந்த இலக்க வேறுபாடுகளிலும், கக்ஷபுடத்திலும் காணப் படும் குறிப்புக்களையும் பிற சில குறிப்பினையும் நோக்க மூலப்பாடத்தின் 2 - ஆம் அடி - பரிப்பயிராகப் பாரிரு பத்தெட்டும் என்றிருத்தல் வேண்டும் என்றும், இவ் வினையேவலுக்குரிய இலக்கம் : 28 — 24 — 95 (— 147) என்று இருத்தல் வேண்டும் என்றும் தோன்றுகின்றது.

2. நெல் விளைய 3. தனம்பொலிய

246. காணு மிருப திருபத்து நாலுடன்
பூணும்பத் தொன்பதும் போற்றுந் தனம்பொலிய
பேணும் பதினெட்டும் பேசிய வெண்பதும்
கோணுமறு பத்தேழ் கொண்டது தானே.

பாட பேதம்

1. தாணுமிருப — தாணுமிருப — காணுமிருபத்து நா லன்பத்தொன்பதும் — காணுமறுபத்து லுடன் பூட.

2. பூணும்பத் தொன்பதாம் — பூணும்பத் தொன்பான் பேணும் பத்தொன்பதும் — பூணுமுப்பத் தொன் பதும் — பூணுமுப்பதாம். போற்றுந் தனம் வரும், பேராறு மதன் பொ (ய்) யைப் - போற்றுமதன் (தனம்) - பொலியப் - பேறாந் தனம் வரும் - பொலிய.

3. பதினேட்டுப்

4. கோணறு பத்தேழுங்.

குறிப்புரை

இம்மந்திரம் ; நெல் விளைதல், தனம் பொலிதல் ஆகிய வற்றுக்குரிய இலக்கங்களை உணர்த்துகின்றது.

பூணுதல் - தரித்தல், தனம் : கோவிளங்கன்று முத்திரையுங் கொங்கையும் - சாந்தும் பொன்னுந் தனமெனலாகும் - பிங்கலம்,

பொலிவு = மிகுதல் - நிறைதல் பேணுதல் - விரும்புதல்.
கோணுதல் = வளைதல் - சக்கரத்திற்சூழவிருத்தல்.

2. நெல் விளைய :- 20 - 24 - 19 (?)

3. தனம் பொலிய :- 18 - 80 - 67 — கக்ஷபுடம்.

இலக்க வேறுபாடு

2. நெல்லுப் பெருக்க - நெல்விளைய - சஸ்ய விர்த்தி 4 - மூலையிலும் புதைக்க :-

20 - 24 - 19 = 63. 28 - 24 - 95 = 147.

24 - 90 - 58 = 172.

24. 58. 61. 63. 122. 132. 147. 172.

கக்ஷபுடம் : ஸஸ்ய விர்த்தி :-

22. பெண்ணாண்விட — பெண்ணை ஆண்விடும் - பெண்ணால் விட — பெண்விட — பெண்வாழ — பெண்விடக்கு விட - பெண்விடு சேர — பெருங்காமுகனும் பேரழகுள்ள மனையாளைத் துறப்பான் — புருஷன் பெண்சாதியை விட்டு. விடுவான்:—

80 — 105 — 86 = 271. 86 — 105 — 86 = 277.
86 — 65 — 0 = 151. 86 — 65 — 50 = 201.
56. 175. 80. 86. 111. 151. 201. 271. 277.

கசஷபுடம்: காந்தாமபி ஜகாதி:- 80 - 105 — 86 (= 271)

மேற்கோள்

சுணங்குற்ற வாயர் சித்திரா ரங்கேட்டல்
திருமந்திரம். — 705.

சொல்லு மாந்தூர தெரிசனந் தானே — 822.

தூர தரிசனஞ் சொல்லுவன் காணலாம் — 823.

சமாதியான் மலங்கள் வாட்டிப் — பொருந்திய தேச கால இயல்பகல் பொருள்கள் எல்லாம் — இருந்துணர்கின்ற.

ஞானம் யோகநற் காண்ட லாமே.— சித்தியார். சுபக். 13. என்பனவும் ஈண்டுக் கருதத்தக்கன.

23. தூரதரிசனந்தோற்ற 24. முக்கால நிகழ்ச்சியுமுணர 25. காயசித்தியுண்டாக

274. சொல்லிற் பதினெட்டுந் தொண்ணூறெண் பத்தொன்றும்
நல்ல வறுபதும் நாற்பதைம் பத்தொன்றும்
கல்லாமற் காலங்கள் மூன்றும் உணரலாம்
எல்லாஞ் சித்தியேழே ழெழுப தய்யாறே.

பாட பேதம்

1. செல்லிர். பத்தொன்றுமே.
2. வறுபது. நாற்பதன் - நாற்பதைம்பத்து நால்.
3. உணர்ந்திட - உணரலா - கல்லா திரிஞானங்கள் மூன்று முணரலா.
4. மெல்லாஞ் - வெல்லாஞ் - எல்லாஞ் சரியாமே ழெழுப - சரியாமெழுப. சித்தியேழேழுபதையாறே.

குறிப்புரை

இம்மந்திரம்; தூரதரிசனங்கண்டு உரைத்தல், முக்கால நிகழ்ச்சியும் உணர்தல், காயசித்தி உண்டாதல் ஆகியவற்றுக்குரிய இலக்கங்களை உணர்த்துகின்றது.

கல்லாமல் - முக்கால நிகழ்ச்சிகளையும் அறிவதற்குக் கருவியாயுள்ள கணித நூல்களைக் கல்லாமலேயே அந் நிகழ்ச்சிகளை எல்லாம் எளிதின் உணரலாமென்க. சித்தி என்பது, அதிகாரவியைபு பற்றி ஈண்டுக் காய சித்தியைக் குறித்து நின்றது. அஃதாவது உடல் நரை திரை மூப்பின்றி நெடுநாளிருத்தல், சித்தரானவர் காயசித்தி முதல் எய்திடுவர் - குற்றாலப். காலங்கள் மூன்று - இறப்பு, நிகழ்வு, எதிர்காலங்கள்.

23. தூரதரிசனந் தோற்ற:— 18 - 90 - 81.

24. முக்கால நிகழ்ச்சியுமுணர:— 60 - 40 - 51 [கக்ஷபுடம்].

25. காயசித்தியுண்டாக:— 49 - 70 - 30.

இலக்க வேறுபாடு

23. தூரதரிசனங் கண்டு சொல்ல - தூரதரிசனம் - தூர தரிசனம் உண்டாம் - உண்டாக - தூரதரிசனஞ் சொல்ல - தூர தரினஞ்செல்ல - கண்தெரியும் - கண்கள் பொன்போல் ஒளி யுடையனவாகும். (கல்லாமல் திரிகால முணர) - தூரதரிசனம்:—

18 - 90 - 81 = 189. 18 - 87 - 90 = 195.
42 - 80 - 81 = 203. 80 - 105 - 86 = 271.
18. 81. 89. 90. 189. 195. 203. 271.

24. காலமூன்றுமுணர - முக்காலவுணர்வு என்று முண்டாம் - படிக்காமல் திரிகாலம் வர - எல்லாக்காரியமும் வர - திரிகால ஞானம் - திரிகாலக்கியானம் - கல்லாமல் திரிகாலம் - கால மூன்றும் - ஞானம் உண்டாம் - உண்டாக - உணர - வர எல்லாஞ்சரியாக:—

60 - 40 - 51 = 151. 40 - 60 - 59 = 159.
18 - 90 - 81 = 189. 30 - 106 - 56 = 192.
40. 51. 60. 90. 100. 137. 151. 159. 189. 192. 298.

25. காயசித்தி - சரீரசித்தி - சரீரசுத்தி - சரீரம் சுத்தி - சரீர சுற்றி (த்தி) - உண்டாக - பெற - வர - உண்டாம் - சரீர சித்தியை அடைகிறான் . எல்லாஞ்சரியாக:—

49 - 70 - 30 = 149. 49 - 40 - 0 = 89.
34 - 19 - 16 = 69. 77 - 30 - 0 = 107.
40 - 40 - 30 = 110. 48 - 40 - 30 = 118.
77 - 70 - 30 = 177.
30. 49. 69. 70. 89. 107. 109. 110. 118. 149. 170. 217.

23. கக்ஷபுடம்:— சுவர்ண - சுபர்ண சட்சுப்ரதி மஞ்ச சட்சு: பவதி;— 90 - 80 - 84 (= 254 - ?) -

90 - 80 - 81 (= 251).

24. த்ரைகாலிகஞாநம் பவதி:

60 — 40 — 51 (= 151).
25. சரீர விர்த்திர்ப் பவதி:
49 — 40 — 0 (= 89) — 49 — 80 — 0 (= 129.)

மேற்கோள்

நீரா யிரமும் நிலமா யிரமாண்டும் பேராது காயம் பிரான் நந்தி ஆணையே. — திருமந்திரம். 722.

நஞ்சறக் சொன்னோம் நரை திரை நாசமே. 727.

ஞாலம் அறிய நரைதிரை மாறிடும் பாலனுமாவர். 734.

களிதருங் காயங் கனகம தாமே. 846.

நரை திரை மாறும் நமனுமங் கில்லையே. 848.

தேகத்துக் கென்றுஞ் சிதைவில்லை தானே. 581.

திருமந்திர மாலை. தந்திரம்-3. அதி. 13. காயசித்தி உபாயம் காண்க.

அறிவைத் தடை செய்து நின்ற மலசத்திகளை இமய நியம முதலிய அட்டாங்க யோக சமாதியான் ஒருவாறு கெடுத்து, ஓரிடத்து ஒருகாலத்து இருந்தாங்கிருந்து, மூவிடத்தும் முக் காலத்தும் இயல்பாக விரிந்துள்ள பொருள்கள் எல்லாவற்றையும் காண்கின்ற காட்சியாய், உயிரினோடு உணர்வு தெரிவது யோகக் காட்சி எனப்படும் என்க. — சித்தியார். சுபக். 12. சிவஞான முனிவர். என்பனவும் ஈண்டு நோக்கத் தக்கன.

26 – கூடுவிட்டுக் கூடுபுக. 27—உடல் பருக்க 28. ஆயுள் உண்டாக

275. அய்யாறு பன்னஞ் சறுபான் கூடுபுக
மெய்தான் பருக்க விளம்பெண்பத் தொன்பது
துய்தாந்தொண் ணூற்றுநால் தோன்றாயு ளுண்டாக
எய்திரு பத்தா றெண்பானேழ் பத்தொன்றே.

பாடபேதம்

1. ஐயாறு. பதினைஞ் — பதிநஞ்சு அறுபதோர் — பன்னஞ்சறுப தோர்—பதினைஞ் சறுபதோர், கூடுபுகும் — கூடு புகழ்.

2. மெய்தூண் — மெயூண் — மெய்யதூன். பெருக்க வின பெண்பத்—பருக்கவின் டெண்பத்—பருக்கவின் பெண் பந்— பருக்கவிற் றெண்பத் தொண்பதுந்.

3. துய்தான — தொய்தான — தூயதான. தொண்ணூற் றுநால் வாயுண்டாக — தொண்ணூற் றொன்று ஆயுரு (ளு) ண்டாக — தொண்ணூற்றாறு நல்வரவுண்டாம் — தேன்றாயு ளுண்டாகும்.

4. எய்தானிருபத்தாறும் எண்பதெழு — மெய்தானிரு பத்தாறு மெண்பதெழு — வெய்யவிருபத்தா றெண்பத்தேழன் பத்தொன்றே — வெய்ய . . தேழைம்பத்தொன்றே — வெய்ய விருபத்திரண் டெண்பத் தேழன்பத் தொன்றே — எய்திரு பத்தா றெண்பதெழு பத்தொன்றே.

குறிப்புரை

இம்மந்திரம்; கூடுவிட்டுக் கூடுபுகல், உடல் பருத்தல், ஆயுள் உணடாதல் ஆகியவற்றுக்குரிய இலக்கங்களை உணர்த்துகின்றது.

கூடு — உடம்பு. கூட்டை விட்டுயிர் போவதன் முன்ன மே.-தேவாரம்: 6059. மெய் — உடம்பு. பருத்தல் — பெருத்தல். விளம்புதல் — சொல்லல். துய்து = துய்யது — நிச்சயமானது.

துய்யபொருள் சதென்றுந்திபற— திருவுந்தி – 10 எய்தல் — அடைதல்.

26. கூடுவிட்டுக் கூடுபுக:— 30—15—60.

27. உடல் பருக்க:— 89—94—0. (?)

28. ஆயுள் உண்டாக:— 26—80—71.

இலக்க வேறுபாடு.

26. கூடுவிட்டுக் கூடுபாய—பாயும்—புக—புகும்—பாயலாம்-புகழ் கூட—பெருத்த விஷம் உண்டாம்-பரகாயப் பிரவேசம் — பிராணனை ஒருடலைவிட்டு மற்றோருடலிற் புகுவிக்கும்:— 30—15-60=105. 30—15—61=106. 30 -50—60=140. 35—50—60=145 15. 30. 60. 105. 106. 140. 145. 410.

கக்ஷபுடம்: பரகாயப்ர வேசம்:
35—50—60 (=145).

27. உடல் — உடம்பு — ஊன்—சரீரம்—மெய் — தேகம் — இளைத்த சரீரம் பருக்கும் — பருக்க — பெருக்க — சரீரசித்தி—காயசித்தியுண்டாம்—காய சித்திபெற — மாசித்தியுண்டாம் — இளைத்த உடம்பு பருக்கும் — அதிக பக்ஷ (ணம்) உண்டாக

89 - 94 - 0 = 183. 89 - 96 - 0 = 185. 89 - 91 - 0. = 180. 80 - 94 - 24 = 198 89 - 96 - 39 = 224. 89 - 94 - 53 = 236. 89. 94. 180. 183. 185. 198. 219. 224. 236.

கக்ஷபுடம்: அதிஸ்தூலசரீரப்பிராப்தி :— 89 - 94
53 (= 236 - ?) - 69 - 91 - 0 (= 160 - ?).

28. ஆயுள் உண்டாக - ஆயுள் - ஆயுசு - ஆரோக்கியம் - ஆயுள் அதிகம் உண்டாம் - உண்டாகும் - உண்டாக - ஓங்க - வளரும்; நல்வரவு - நல்லுறவு - உறவு நல்வாழ்வு உண்டாக - வரவுண்டாக:—

26 - 80 - 71 = 177. 26 - 71 - 80 = 1‾7.
78 - 82 - 49 = 129. 16 - 50 - 75 = 141.

26 - 87 - 51 = 164. 26 - 88 - 71 = 185.
129. 141. 155. 164. 177. 182. 185. 226. 327.

கஷபுடம்: ஆயுஷ்ய விர்த்தி:— 26 — 88 — 71
(= 185).

மேற்கோள்

தாழான ஒன்பதிற்றான் பரகாயமே - திருமந்திரம் 647.
மானாக் கனமும் பரகாயத் தேகமும்

தானா வதும்பர காயஞ்சேர் தன்மையும் — 649.

விரிந்தது பரகாயம் மேவலும் ஆமே — 682.

வியாப் பரகாயம் மேவலும் ஆமே
மரணஞ் சரைவிடல் வண்பர காயம் — 706.

ஆயவும் நாளும் முகுத்தமும் ஆமே — 796.

குளிகை இட்டுப்பொன் ஆக்குவன் கூட்டையே — 2709.

கூடுகெடின் மற்றோர் கூடுசெய் வானுளன் — 2852.

தவமுனிவர் தம்முடம்புக் கரண் செய்து தாம்முயன்ற
பவனவழி அவனுடலில் தம்முயிரைப் பாய்த்தினார்
— பெரிய: 3581.

தீர்க்காயுஷ்யப்பரதாயகம் I ஆயுஷ்கரோ நாமப்ரயோக: கல்பநோக்த: 11 — லலிதா ஸஹஸ்ரநாமம். உத்தர பாகம். 23.

ஆயுள் — தீர்க்கமான — பூரணமான ஆயுளானது சுருதியின் படிக்கு சதாயுள் 100 வயது ஆகும் மனிதர்க்கு வயது நூறல்லதில்லை என்பனவுங் காண்க.

இச்செய்யுளில்; 3 - 4 ஆம் அடிகளும், அவற்றில் கூறப் பட்டுள்ள இலக்கங்களும் திருத்தமாக இல்லையெனத் தோற்றுகின்றன.

29 - ஆரோக்கியம் ஓங்க. 30 - தெளிவின்றி மாற.

276. ஒன்று மாரோக்கியம் ஓங்கப் பதினாறும்
நின்றதே யைம்பதும் நீண்டெழு பத்தஞ்சும்
சென்று சொல் வார்த்தை தெளியாமற் றான்மாற
வன்றறு பத்தே ழறுபதைம் பத்தாறே.

பாடபேதம்

1. ஒன்றுவாரோக்கியம் — ஒன்றே வாரோக்கியம் — ஆரோக்கியம் ஓங்கும் - ஆரோக்கியமுண்டாம். பதினாறு.
2. யன்பது - ஐம்பது. நீண்டவெழுபத் - நின்றெழு பத்தஞ்சு.
3. சென்ற சொல் — சொன்னசொல். தெரியாமற்றான் மறவா — தெரியாமற்றான் மறைவா.
4. பத்தேழ் ஆறுபத்தைம் பத்தாறே — பத்தேழ் அறு பதைம் பத்தாருமே — பத்தேழாறுமைம்பத் தாறாமே — மன்றறுபத்தேழுமறு பதன்பத்தாறே - பத்தாறாமே

குறிப்புரை

இம்மந்திரம்; ஆரோக்கியமிகுதல், சொல் தெளிவின்றி மாறுதல் ஆகியவற்றுக்குரிய இலக்கங்களை உணர்த்து கின்றது.

ஆரோக்கியம் = ரோகமின்மை — நோயின்மை — சுகம் — சௌக்கியம். ஒன்றுதல் — பொருந்துதல்.

29. ஆரோக்கியம் ஓங்க:— 16 - 50 - 75 [ககூஷபுடம்].

30. பேசுஞ்சொற்கள் தெளிவின்றி மாற:— 67 - 60 - 56.

இந்த உலகபேதன வினையேவல்களை இதுகாறும் உடன் பாட்டு வகையாற் கூறிவந்த ஆசிரியர், இந்த 30-ஆம் இலக்கப் பிரயோகம் முதலாக அவற்றை எதிர்மறை முகத்தாற் கூறுவா னெடுத்துக் கொண்டார் என்க.

இலக்க வேறுபாடு

29. ஆரோக்கியம் - ரோகசாந்தியுண்டாகும் - உண்டாக - ஓங்க - பிணி நீங்கும்:—

16 - 50 - 75 = 141. 26 - 80 - 71 = 177.

78 - 82 - 49 = 209. 16. 50. 75. 129. 141. 177. 209. 327.

கக்ஷபுடம்:— ஆரோக்யம் பவதி:- 16 - 50 - 75 (= 141).

30. சொன்னசொல் தெளியாது மாற - சொன்ன வார்த்தை தவறாது - சொன்ன வார்த்தை வராது - வார்த்தை குளறாமற் பேசலாம் - தெளிவுபெற - சொல் வார்த்தை தெளிவாயிருக்க - வாக்சாமர்த்தியம் உண்டாகும் - மூடனும் நாவண்மை பெறுவான் - மூகனும் நாவலனாவன் - ஆரோக்கியங்கெட:- 67 - 60 - 56 = 183.

16 - 80 - 75 = 141. 141. 183. 217.

கக்ஷபுடம்: வாக்படுத்துவ சித்தி:- 67 - 60 - 56 (=183).

31 - பட்டங்கெட. 32 - குணங்கெட.

277. ஆறும் பதினேழும் அன்பத் திரண்டுமாம்
சிறி யழியுஞ் சிறந்த பெரும்பட்டம்
வேறு குணங்கெட வேண்டிற் பன்னிரண்டும்
பாறும் பதினெட்டும் பற்றும் நூற்றஞ்சே.

பாட பேதம்

1. ஆறுபதினேழு வைம்பத்
2.
3. வேண்டிப் பன்னிரண்டுனொன்பானாறும் - வேண்டிப் பனிரெண்டு நன்றொன்பானாறும் - வேண்டி பதினெட்டு தொண்ணூற் றெட்டு.
4. பற்றியநூற் - பத்துநூற் - பற்றுநூற் றஞ்சுமே.

குறிப்புரை

இம்மந்திரம்; பெரும்பட்டமழிதல், குணங்கெடுதல் ஆகிய வற்றுக்குரிய இலக்கங்களை உணர்த்துகின்றது.

பெரும்பட்டம் - பெருஞ்சிறப்பு - அரசராற் கொடுக்கப்படும் மாராயம் முதலான பட்டப் பெயர்கள். மாராயம் பெற்ற நெடுமொழியானும் - தொல்காப்பியம். குணம் - நற்குணங்கள். பாறுதல் = ஓடுதல் - பாற்றுதல் - நீக்குதல் - ஓட்டுதல்.

31. பெரும்பட்டமழிய:— 6 - 17 - 52. (?)

32. குணங்கெட:— 12 - 18 - 105 — கக்ஷபுடம்.

இலக்க வேறுபாடு

31. பெரும்பட்டம் - கட்டின பட்டம் அழியும் - அழிய - பறந்துவிட. தவம் பெருக - அரசன் ராஜ்ய பிரஷ்டனா வான்:—

6—17 - 52=75. 17—95—0 = 112.
52—67—0 = 119. 67—52—0=119.
36—17—15 = 68. 17—53—80 = 150.
62—87—94 = 243.
17. 52. 68. 75. 105. 112. 119. 135. 150. 243. 325.

கக்ஷபுடம்: ராஜ்யாத்ப்ரஷ் டோவரேண பூமிபதி:—

17—15 - 14 (= 46—?)—17—95—0 (= 112—?).

32. குணங் கெட - கெடும் - இது, குணங்கெடும் - கெட்ட குணமுண்டாகும் - பெருங்குணங் கெடும் - பற்றுவிட - பெரும் பட்டமழியபற்று விட:—

12—18—105=135. 12—18—15=45.
12—18—10=145. 20—18—10—105=153.
53—18—105=176. 18—98—105=221.
12. 18. 45. 105. 145. 153. 176. 221. 415.

கக்ஷபுடம்: துவ்விருத்திதாபவதி:—
12—18 - 105(=135)—18—98—105(=221).

33 - மாதர், மைந்தர் மனம் பிரிய.
34 - மாதர் உறவு கெட.

278. அஞ்சும் பதினாறும் ஆகிய தொண்ணூறும்
வஞ்ச மாதர் புருடர் மனம்பிரிய
வஞ்சி யுறவு கெட வாங்கைம்பத் தெட்டும்
பஞ்சிப் பதினாறும் பாறும் பன்னஞ்சே.

பாட பேதம்

1. அஞ்சுபதினாறு.
2. வஞ்சமாமாதர் - வஞ்சமறமாதர். மனைபிரிய.
3. வஞ்சியுடன்கெட - வாங்குமன்பத்தெட்டுப் - வாங்கம் (ன்) பத்தெட்டும் - வாங்கும் பதினெட்டும்.
4. பாரும் பதினைந்தே - பதினைஞ்சே - பதினஞ்சே·

குறிப்புரை

இம்மந்திரம்; மாதர், மைந்தர்களின் மனம் பிரிதல்: மாதரின் உறவு கெடுதல் ஆகியவற்றுக்குரிய இலக்கங்களை உணர்த்து கின்றது.

வஞ்சம் = வம்சம் - குலம் - கபடம். மாதர் - பெண்டிர். புருடர் - ஆடவர். வஞ்சி=வஞ்சிக்கொடி - பெண். உறவு = சம்பந்தம் - நட்பு - ஒற்றுமை - சுற்றம் - அன்பு. உறவு கோல் நட்டு உணர்வு கயிற்றினால் ... கடைய - தேவாரம் 6121· பஞ்சி = பஞ்சு - வருத்தம். பாறல் = பாற்றுதல் - நீக்குதல் - ஓட்டுதல்.

33. மாதர், மைந்தர்களின் மனம்பிரிய:- 5 - 16—90. (?)

34. மாதர் உறவு கெட:- 58 - 16—15 - கக்ஷபுடம்.

இலக்க வேறுபாடு

33. மங்கையர், மைந்தர் - ஸ்ரீபுருஷர் - ஸ்த்ரீ புருஷர் - ஸ்ரீபுருடர். ஸ்த்ரீபுமான் - ஸ்ரீபுருஷனை - மாதர் புருஷர்மனை -

மாதர் புருஷர் மனம் - குமரனும் குமரியும் விட்டுப்பிரிவார்கள் - மனம் பிரிய - பிரிந்து போக - பிரியும் - பிரிவார்கள்:—

5—16 - 90=111. 16—90—11=117. 36—16—90=142
56—90—0=146. 16—90—60=166. 16—90—65=171.
16. 49. 90. 111. 117. 131. 142. 146. 166. 171. 214.
கக்ஷபுடம்: ஸ்த்ரீ புருஷவியோக:- 16—90—11 (=117) — 36—16—90 (=142—?).

34. மங்கையர் உறவு — வஞ்சியர் உறவு — ஸ்ரீ உறவு — ஸ்த்ரீயுறவு — ஸ்ரீபுமான் உறவு ஸ்த்ரீபுருஷர் உறவு கெட — கெடும்; பந்துஹாநி யேற்படும்:—

58—16—15=89. 18—16—15=49.
55—16—58=129. 85—16—81=182.
15. 16. 58. 49. 89. 129. 182.

கக்ஷபுடம்: பாந்தவஹாநி:- 58—16—15 (=89)—85—16—18 (=119).

35 - சுகங் கெட. 36 - வித்தை கெட.

279. பதினஞ் சிருபத்தா றெண்பத் திரண்டும்
கொதிவஞ்சி நெஞ்சிற் சார்சுகங் கூராது
முதுவித்தை தான்கெட முப்பத்து மூன்றும்
அது பெற்ற வைம்பதும் ஆறாறும் ஆகுமே.

பாட பேதம்

1. பதினைஞ்சிரு - பதினைந்திரு - பதினைந்து நாற்பத்தா திரண்டு - திரண்டுங்.

2. கொதுரு சிர நெஞ்சிற் - கொதுகுஞ்சிர நெஞ்சிற் - கொதுறு சிர நெஞ்சிற். சார சுராங் - சார்சுகங் — கூறாது — கூடாது.

3. மது விதத்தை. மூன்று.

4. மதுபெற்ற. வன்பது — வைம்பது மாறு மாமே — வைம்பது மாறாறு மாமே.

குறிப்புரை

இம்மந்திரம்; சுகங்கெடுதல், வித்தை கெடுதல் ஆகிய வற்றுக்குரிய இலக்கங்களை உணர்த்துகின்றது.

கொதி = கொதிப்பு — பொங்குதல் — மூர்க்கம் வஞ்சி = வஞ்சிக் கொடி - பெண் = சார்தல் - சேர்தல் — கலத்தல் (பிங்கலம்). சுகம் = இன்பம் — மகிழ்ச்சி. கூர் — மிகுதி. முதுமை — பழமை. வித்தை = கலைகள் — அறிவு — கலை ஞானம் — கலையறிவு.

35. சுகங்கெட:— 15 — 26 — 82

36. வித்தை கெட :— 33 — 50 — 36 — கக்ஷபுடம் —

இலக்க வேறுபாடு

35. சுகம் — சுரம் — சங்கிதம் — சங்கீத சுரம் — சங்காதங் — சங்கி தஸ்வரம் — சுரம் சன்னி — தாபச்சுரமும் சன்னியும் அழியும் — கெட — கெடும் — மாறும் — குறைய — நாசமாம் — சரசங் கூராது:—

15 — 26 — 82 = 123. 15 — 82 — 26 = 123. 15 — 82 — 46 = 143, 55 — 26 — 82 = 163. 15. 26. [பிள்ளையுண்டாக — 73] 82. 123. 143. 163. 189 203 கக்ஷபுடம்: தாபஜ்வர சாந்தி :— 15 — 62 — 28 (= 105) — 15 — 82 — 46 (= 143) [15 — 82 — 26 (= 123) வசகம்].

36. வித்தை — முது வித்தை — முழுவித்தை — படித்த வித்தை — முதுவித்தை தான் கெட — கெட—கெடும் — வராது — மறந்து போகும் — உறுதியாயிருப்பினும் கற்றகலை மறையும் :— 33 — 50 — 36 = 119. 36 — 33 — 50 = 119. 32 — 36 — 50 = 118. 33 — 50 — 56 = 139. 33 — 36. 50. 118. 119. 129. 139. 219. கக்ஷபுடம்; வித்யாநாச:— 36 — 33 — 50 (= 119).

37-நன்மை கெட. 38-இறப்பு ஒழிய. 39-செட்டுப் போக.

280 ஆறேழு பத்தஞ் சையெட்டு நன்மைகெட
ஆறே ழைஞ் சறுப திறப்பொழியத்
தோறே செட்டில்லைத்தேர்ந்த வெழுபத்தொன்பான்.
வேறே நூறாம் வேண்டுதலை தட்டைக்கே.

பாடபேதம்

1. ஆறெழுபத்தஞ் — ஆறு மெழுபத்தஞ் — ஆறெழுபத் தஞ்சு ஐயெட்டு — ஆறேழுபத்தைஞ்.

2. ஆறேழுமையஞ் — ஆறேழுமையஞ்சு மறுப — ஆறே ழுமையஞ்சு வைம்ப திருப்பொழியத் — தி (ரை) ப் பொழிய — திற்பொழிய [— சறுபான் சிறப்பொழிய] திரப்பொழிய [— திறப்பொழிய — ஊகம்].

3. தேறுஞ் செட் — தேருஞ்செட். டிலையாஞ்சேர்ந் தெழுபத்தொன்பது — டில்லையந் தேர்ந்தெழுபத் தொன்பான் — சேர்ந்தெழுபத்தொன்பானூற.

4. வேறு நூறாக — வோறா நூறாக. வேண்டுந்தலை — வேறே நூறாக வேண்டுந்தலை தட்டைக்கே — தலைத் தட்டைக்கே.

குறிப்புரை

இம்மந்திரம்; நன்மைகெடுதல், இறப்பொழிதல், செட் டில்லையாதல் ஆகியவற்றுக்குரிய இலக்கங்களையும், தலை தட்டைக்குரிய இலக்கத்துக்குத் தோற்றுவாயையும் உணர்த்து கின்றது.

இறப்பு = மிகுதி — உயர்வு — சிறப்பு (— பிங்) இறுகல் இறப்பென்னும் ஞானிக்கும் — திவ்யப்பிரபந்தம். 3016. செட்டு = வாணிகம் — வியாபாரம். தலைதட்டை — தலை மயிரின்றி மொட்டையாதல். திரத் தறைந்த தலையும் — தன்னுடைய மயிர் நீங்குதலால், தட்டையான தலையினையும் — கலித்

தொகை. 65 நச். இதற்குரிய இலக்கம் வருந்திருமந்திரத்துட் சொல்லப்படும்.

37. நன்மை கெட:— 6 — 75 — 40 (?)

38. இறப்பு ஒழிய:— 42 — 25 60 —கட்சபுடம்

39. செட்டில் லாமற்போக:— 79 — 100 — 0.

37. நன்மை கெட — கெடும்; அவமானம் உண்டாம் — உண்டாக்கும்:- 6 — 75 — 40 = 121. 75 - 40 - 0 = 115. 40 — 75—0=115. 42 — 50 — 40 = 132. 75 — 40 — 60= 175. 36 — 75 - 80 = 191. 75 — 40 — 606 = 721. முட்டு வர — 32. 40. 75. 115. 121. 132. 144. 175. 191. 721.

கக்ஷபுடம்: அமங்களப் பிராப்தி:- 75 — 40 — 606 (= 721) - 75 — 40 - 60 (= 175).

38. இரப்பு - இரைப்பு ஒழிய - இரைப்பு உண்டாம்

....பாதப் பொழிய—பேர் ஒழிந்து போகும் — காசரோகம் நாசமடையும் — காச நோய் நீங்கும் — பிச்சை யெடுக்கும்:— 42 — 25 - 60 = 127. 25 - 42 — 60 = 127. 42 — 25 — = 117. முட்டு வர 32. 25. 32. 42. 60. 117. 127. 141. 147.

கக்ஷபுடம்: காசோ பிநசியேது:- 25 — 42 — 60 (=127) இதற்குரிய வாக்கியம், ஒரு சுவடியில் மட்டுமே காணப்படுகின்றது.

39. வாணிகம் — வியாபாரம் கெட - செட்டிலை - செட்டில்லை - செட்டில்லாமற் - செட்டில்லாமல் போக - செட்டுப் பலியாது — வியாபாரத்தில் லாபம் ஏற்படும் — வாணிகத்தில் லாபம் விரைவில் உண்டாம்:- 79 — 100 — 0 = 179. 70 — 81 =100 - 251. 79 — 100 — 91 = 270. நல்ல மனிதன் என்று சொல்லப்படும் — 110. 79. 100. 110. 127. 179. 200. 266. 270.

கக்ஷபுடம்:— வாணிஜ்யலாப நாசம்:— 79-100—0 (=179) — 79 — 100 — 91 = (270 — ?)

40 - தலைதட்ட. 41 - கெட்டது கூடாமற் போக. 42 — பாட்டு ஒழிய

281. தட்டுற நாலாறு தானஞ்சும் நாற்பதும்
கெட்டது கூடா திருக்கக் கிளர்வது
எட்டாறு நாலா றிருபானேழ் பாட்டொழி
யிட்ட விருபா னூற்றே றெழுநாலே.

பாட பேதம்

1. தட்டை நாலாறு — நாலாறுந் — நாலாறு நாலஞ்சு நாற்பதுங்
2. திருக்கத் திருவது — திருக்க திருவது — திருக்க விருபது — திருக்க விடுவது — திருக்க விருபத்.
3. தெட்டாறு — நாலாறிருபத்தே ழெட்டாகும் — நாலாறு இருபத் தேழ் — நாலிருபத்தே ழெட்டாகும் —நாலாறிருபத்தேழ் நாலிரறிருபத் தேழ்.
4. இட்ட விருபது நூற்றேழ் பதினாலே - இட்ட விருபது நூற்றேழு நாலே — இட்ட விருவது —பாட்டொழிய விட்ட நூற்றெழுபதினாலே -இட்ட இருபது நூற்றெழு நாலே - நூற்றேழுநாலே.

குறிப்புரை

இம்மந்திரம்; தலைதட்டை யாதல், கெட்டது கூடாமை. பாட்டொழிதல் ஆகியவற்றுக் குரிய இலக்கங்களை உணர்த்து கின்றது.

தட்டு = தட்டை — மொட்டை. கெட்டது — இழந்த பொருள். கூடுதல் = கை கூடுதல் — சேர்தல். கிளர்தல் = கிளத்தல் — சொல்லுதல். பாட்டொழிவு — கவித்துவமழிவு.

40. தலைதட்ட:— 24 — 5 — 40 (?)
41. கெட்டது கூடாமற் போக:— 48 — 24 — 27
42. பாட்டு ஒழிய:— 20 — 107 — 28 கக்ஷபுடம்,

இலக்கவேறுபாடு

40. தலைதட்ட — தலைமயிர் போக — தலைதட்டை தலை தட்டையாக - தலை கெட்டுப் போம் - போகும்:- 24—5. 40=69. 24—45—0=69. 24—40—0=64. 24—5—90=119. 5. 40. 24. 64. 69. 84. 101. 119.

கக்ஷபுடம்: கேசபதநம் — 64—40—0 (=104-?) — 24—40—0 (= 64 - ?) —24—45 - 0 (=69) [ஊகபாடம்] கருவூலத்து மூலப் பொருளும் அழியும்:- 64—40—0=104. 64—40—86=190.

41. கெட்டது கூடாதிருக்க — கெட்டது கூடும் — கூட — கூடாமல் — கூடாது — முன் கெட்டது கூட — உண்டாகும்— கெட்டது உண்டாகா திருக்க — மாற்றார் செல்வம் அழிந்து ஒருகாலத்தும் அடைய முடியாது:— 48 — 24 — 27 = 99. 14—24—27=65. 44—24—27=95. 34—48—37=119. 24. 27. 48. 65. 95. 96. 99. 109. 119. 126. 165. 208. 303.

கக்ஷபுடம்: சத்ரு ஸம்பந்நஷ்டாப வேந்நைவ கதாபிலப்யா: 48—21—27 (=96—?) —48—24—27 (= 99) [ஊகம்]. இதற்குரிய வாக்கியம் ஒரு சுவடியில் மட்டும் காணப்படுகிறது.

42. பாட்டு ஒழிய — அழியும் — கெட — பட்டாழி விட்ட —பட்டாழிவிட — பாடொழிய — பாட்டுக்கெட:— 20 — 107 — 28=155. 22 — 28 — 107=157. 20—111—0=131. 20—107—4=131. 107—14—0=121. 20—101—0=121. 20—107 —14=141. 107—20—28=155. பாட்டுண்டாக — 70. 70. 121. 131. 141. 155. 157. 169. 219 கக்ஷபுடம்: பிரபந்தஹாநி:— 107—20—28 (= 155).

43 - மனை கெடுதல். 44 - பெண் வாழாமை.

282. நாலஞ் சிருபத்தஞ் செண்பத்து நாலாகுங்
கோல மனைகெடக் கொண்ட பெண் வாழ்வில்லை
சாலறு பத்தொன்றுந் தக்கறு பத்தாறும்
மேலைம்பத் தெட்டும் விளங்கிடு மெண்ணே.

பாட பேதம்

1. நாலைஞ். சிருபதஞ். நாலாக்குங்.
2. கோலைமனை - கோலுமனை. விலை. வில்லைச்.
3. சாலவறுபத் - சாலவன்பத்தொன்றும். தக்கவறு பத்தாறும் - தக்க வறுபதாம்.
4. மேலையையம் பத்தெட்டும் — வேலையன்பத் தெட்டும் விளங்குவதென்பதே — தென்பவே — தெண்பதே — விளங்குமென்பதே.

குறிப்புரை

இம்மந்திரம்; மனை கெடுதல், பெண் வாழாமை ஆகியவற்றுக்குரிய இலக்கங்களை உணர்த்துகின்றது.

கோலம் - அழகு. மனை - வீடு. சாலுதல் - அமைதல்.

43. மனைகெடுதல்:— 20 - 25 - 84.

44. பெண் வாழாமை: 61—66—58 — கக்ஷபுடம்.

இலக்க வேறுபாடு

43. மனைகெட—மனைகெடும்—கோலின மனைவாழாது—மனையுண்டாக—கிரகநாசம்—கிரகசாந்தி:

20—25—84=129. 20—15—84=119.

20. 25. 43. 74. 82. 84. 94. 119. 129. 217.

44. பெண் வாழாமல் — வாழாது — வாழாள்—கொண்ட பெண் வாழமாட்டாள் — வாழ்ந்த பெண் வாழாள் — வாழ்ந்த பெண் வாழாமற்போம் — கொண்ட பெண் கெட — ஸ்த்ரீ கெடும் — மாதர் நெடுநாள்காறும் மைந்தரை விட்டிருப்பார்:

61—66—58=185. 58—61—66=185.
66—61—58=185. 61—20—84=165.

பெண்விட - 86. பெண் வாழ 201, 175. 80. 86. 153. 165. 175. 185. 201. 215. 251.

கக்ஷபுடம்: பர்த்ராவியுக்தம்:—
66 — 61 — 58 (= 185) — 31 — 65 — 80 (= 176 — ?).

45 — ஞானங்கெட. 46 — தானியங்கெட.

283. எண்பத்து மூன்றும் இயம்பொரு நூற்றாறும்
அன்புற்ற நூற்றிரண் டாகிய ஞானம்போம்
பின்புற்ற வாறாறும் பேசெழுப தையைந்தும்
தன்பற் றலன்றன் தானியங் கெடுமே.

பாடபேதம்

1. எண்பதின் — எண்பத்தின் — என்பதின்
2. அன்புறு - அன்புட (நன் புற்ற — ஊகம்).
3. பின்புறவாறாறும் - பின்புறலாறும். பேசெழுபத் தையைந்தும் — பேசெழுபத்தைந்தும் — பேசெழுப தைந்தும்.
4. தன்பற்றலன்றானியந்தான் கெடுமே — தன்மாற்றான் தானியங்குறை கேடே — தன் மாற்றன தானியங் குறைதான் கேடே — தன் மாற்றான் றானியங் குறையுறு கேடே — தன் மாற்றான் தானியங் — தன் பற்ற (ல) ன் றானியங் குறைதான் கேடே — தன் பற்றன தானியங் குன்றுந்தான் கெடுமே — தன் பற் றலன் றானியங்குறைதான் கெடுமே — குன்றதான் கேடே — தானியங் கேடே.

குறிப்புரை

இம்மந்திரம்; ஞானமழிதல், தானியமழிதல் ஆகிய வற்றுக்குரிய இலக்கங்களை உணர்த்துகின்றது

இயம்புதல் — சொல்லல். நன்பு — நன்மை. நன்புருகி- —ஞானச் சுடர் விளக்கேற்றினேன் நாரணற்கு — திவ்யப். 2182. பற்றலன் — பகைவன்.

45. ஞானங் கெட:— 83 - 106 — 102 — கக்ஷபுடம்.
46. தானியங் கெட: 36—70—25.

இலக்க வேறுபாடு

45. ஞானம்போம் — போக—கெடும்—வித்துவானாயினும் ஞானமில்லாதவனாவான் — புலவனும் அறிவற்றவனாவான்:—

83— 106 - 102 = 291 — 102 — 106 — 83 = 291.
83 — 102 — 106 = 291. 83. 102. 106. 291.

கக்ஷபுடம்:—ஞானஹாநி:— 102 — 106 — 83 (=291).

46. தானியம் — தனதானியம் — தனம் — நலம் தனம் தானியம் கெட — கெடும் — குறைய - குறையும் — சேரும்:—

36 — 70 — 25 = 131. 25 - 36 - 70 = 131.
70 — 36 —25 = 131. 6 — 75 — 0 = 81.
36 — 75 — 0 = 111. 12 — 15 — 90 = 117.
36 — 75— 40 = 151 25. 36. 70. 81. 111.
117. 131. 151. பயிர் விர்த்தி கெடும்.
36 — 75 — 40 = 151.

கக்ஷபுடம்: ஸஸ்ய விர்த்யா: 36 — 75 — 40 (= 151)

47 - நாணங்கெட 48 — தனதானியங்கெட.

284. கெடும்லச்சை நூற்றேழ் கேளிருப தெண்பான்
இடுதன தானியம் கெடவீ ராறும்
படுபதி னைந்தும் பகருந்தொண் ணூறும்
நெடுந்தூரந் தன்னிற் றரிசனம் நேராதே.

பாடபேதம்

1. கெடுமிலச்சை — கேடுமிலச்சை. நூற்றேழுங் - நூற்றேழிரு பத்தொன்பது — நூற்றோழிருபத்தென்பது — நூற்றேழ்கேளிரு பத்தொன்பான் — நூற்றேழ் கேளிரு தொன்பான் — கேளிருதெண்பது.

2. நாடுதானியம் — நாடுதனதானியம் — இடுதன தானியமிவை கெட. கெடவீராறும்.

3. பாடும் பதினைஞ்சும் — பாடும் பதினஞ்சும். பகருந் தொண்ணூற்றாறும்.

4. நேடுந்தூரந் — நேடுதூரந். தன்னிற்றெரிசனம் — தன்னில் தெரிசனம். நேரே — நேராமே - நேரெமே.

குறிப்புரை

இம்மந்திரம்; லச்சைகெடுதல், தனதானியங்கெடுதல் ஆகிய வற்றுக்குரிய இலக்கங்களையும், தூர தரிசன இலக்கத்துக்குத் தோற்றுவாயையும் உணர்த்துகின்றது.

லச்சை - நாணம். இடுதல் = ஈதல் - சேமித்துவைத்தல். பகர்தல் - சொல்லுதல். நெடுந்தூரதரிசனம் - சேய்மைக் காட்சி.

சொல்லலு மாந்தூர தெரிசனந்தானே - திருமந்திரம் 822.

தூர தரிசனஞ் சொல்லுவன் காணலாம் - — 823.

சுணங்குற்ற வாயர் சித்தி தூரங்கேட்டல் - — 705.

என்பனவும் அறிக. தரிசனம் — காட்சி. நேர்தல் — இயைதல்.

47. நாணம் கெட:- 107 — 20 — 80. (?).

48. தனதானியம் கெட:- 12 — 15 — 90 — கக்ஷபுடம்.

இலக்க வேறுபாடு

47. நாணம்—லச்சை — லஜ்சை — லஜ்ஜை — லெச்சை — குலஸ்த்ரீலச்சை கெடும் — கெட. மங்கையர்க்கு மானமில்லை யாகும்.

107 — 20 — 80 = 207. 107 — 29 — 0 = 136.
36 — 25 — 70 = 131. 29 — 107 — 0 = 136.
107 — 29 — 36 = 172. 107 — 29 — 80 = 216.
80. 107. 131. 135. 136. 172. 216. 217.

கக்ஷபுடம்: குலஸ்த்ரீயோலஜ்ஜாஹாநி:— 107 — 29 — 0 (= 136 - (?).

இந்த வினையின் ஏவலக்குரிய மொத்த இலக்கம் — 136-ம், 135-ம், பிரிவிலக்கம் 107 — 29 — 0 (= 136 — ?) ம் ஆகிய இவைகளே சுவடிகளிற் பெரும்பாலுங் காணப்படுகின்றன.

48. தனதானியம் – தனம் – தானியம் – தனதானி – திரவியம் குறையும் – குறைய – கெட – கூடும் – மனை நெல்லு நிறையவரும் – தலைவன் தர்மம், தானம், தயை ஆகிய இம் 3-ம் இலனாவான் – தான தர்மமிலனாவான்:

12 - 15 - 90 = 117. 20. 36. 75. 111. 123. 151.

கக்ஷபுடம்: தர்மாச்சதா நாத்தயயாவிதே:
12 – 15 - 90 (= 117).

இந்த வினையேவல்கள் 2-க்கும் உரிய இலக்கங்கள் கிடைத்துள்ள இத்திருமந்திர நூற் சுவடிகளிற் காணப்பட வில்லை.

தூரம் - தூரதேயம். தூரதரிசனம் - சேய்மைக்கண் உள்ள பொருள்களைக் காணும் யோகக் காட்சியும் நேராது எங்க. இஃது இடம் பற்றிய காட்சி. காலம் பற்றியகாட்சியின் கேடு மேல்வரும் 287-ஆம் திருமந்திரத்துட் சொல்லப்படும்.

பொருந்திய தேச கால இயல் பகல் பொருள்கள் எல்லாம் – இருந்துணர்கின்ற ஞானம் யோகநற் காண்டலமே – சித்தி. 13. என்பதும் அறிக. இதற்குரிய இலக்கம் வருந்திருமந்திரத்திற கூறப்படும்.

49 – தூரதரிசனங்கெட. 50 - பெண்ணாண் கெட.

285. நேரா தறுபதும் நீண்ட பதினேழும்
கூரா தெழுபதும் கொண்டபெண் ஆண்கெடப்
பாரர் (ர்) பதினாறும் பையவே நாற்பதும்
தூரார் தொண் ணூற்றேழ் சொல்லி முடியவே.

பாடபேதம்

1. நேராவறுபது - நேராமறுபது.
2. கூரா வெழுபதுங் பெண்ணாண் – பெண்ணான் - பெண்ணாள் கெட.
3. பாராப் — பதினாறு — பதினாலு

4. தூறார்தொண் - தூறாதொண் - தூராய்த்தொண் — தூராதொண் — ஞூற்றேழுஞ். முடிவதே — முடியே.

குறிப்புரை

இம்மந்திரம்; தூர தரிசனங் கெடுதல், பெண்ணாண் கெடுதல் ஆகியவற்றுக்குரிய இலக்கங்களை உணர்த்துகின்றது.

கூர்தல் — மிகுதல். கூராது — மிகாமல். எனவே அளவாக என்றபடி. பார் = உலகம் — முறை. பைய — மெல்ல. பையவே சென்று பாண்டியற்காகவே — தேவாரம் 3339 தூர் = வேர்— மூலம். தூர்தல் — தூர்த்தல். நிரம்புதல் — அடைத்தல். இருள் தூர்பு புலம்பூர — கலித். 120. தூரமி வாளர் துணைவர் நினைப்பிலர் — திருமந். 1553. துளைவாய் தூர்ந்த துரப்பமை ஆணி — பொருந. 10. கூராமை, தூர்த்தல் ஆகியவை இரண்டும், இயந்திரங்களில் கூடாமலும் குறையாமலும் முறைப்படி இலக்கங்களை நிரப்பி அடைத்தலைக் குறித்து நின்றன.

49. தூரதெரிசனங்கெட :— 60 — 17 — 70.

:0. பெண்ணாண்கெட :— 16 — 40 — 97.

இலக்க வேறுபாடு

49. தூரதரிசனம் — தூரதெரிசனம் — தூரசனம் கெட — கெடும் — நேராது — அதிசேய்மைக்கணுள்ள மரங்களைக் காணலாம் :—

60 – 17 - 70 = 147. 17 - 60 – 70 = 147. 17. 60 70. 147 250. கக்ஷபுடம் : திருக்படுத்வா பவதி : - 17 - 20 – 70 (=107)- 17 — 60 – 70 (= 147 — ஊகம்).

50 கொண்டபெண் ஆண் — கொண்டபெண் கெட — கெடும்; மனிதன் இலச்சையிலனாவான் — கொண்டபெண்ணாண் பிரிவு:— 16 — 40 — 97 = 153. 116 - 40 - 97 = 253. 16 40. 97. 153. 169 253.

கக்ஷபுடம்: நிர்லஜ்ஜி காஸ்யாத பிமாநிநோபி:- 146 — 40 — 70 (= 256 - ?).

51 – தன்வயமாகாமை. 52 – கண்தெரியாமை,

286. முடியவே தன்வச மாகாமை முப்பான்
நெடியவிரு பத்தேழ் நேருநூற்றெட்டாம்
நடைகண் தெரியாமை நாற்பத் தொன் றோடே
அடையுமறு பத்தொட்டோ டைம்பத் திரண்டே.

பாடபேதம்

1. மாகாது. முப்பது – முப்பதும்.
2. நெடிய விரு பத்தேழும் — நெடியபத் தேழு. றெட்டும் – றெட்டு.
3. நடைகண் தெரியாது — நடை தெரியாது நாற்பத் தெட்டோடே.
4. தெட்டைம்பத் — தெட்டன்பத் — திரண்டுமே.

குறிப்புரை

இம்மந்திரம்; தன்வசமாகாமை, கண் தெரியாமை ஆகிய வற்றுக் குரிய இலக்கங்களை உணர்த்துகின்றது.

வசமாகாமை — வசப்படாமை. நடை — நடத்தல்.

51. தன்வசமாகாமை:- 30 — 27 — 108

52. கண் தெரியாமை:- 41 — 68 —52 —கக்ஷபுடம்

இலக்க வேறுபாடு

51. தன்வசமாகாமலிருக்க — தன்வசமாகாது — தனம் வசமாகாமல் — முடியுங் காரியம் முடியாது — சொல்லிமுடியுங் காரியந் தன் வசமாகாது - மகிழ்ச்சி பெற்றவனுந் தன்வய மாகான் — மனிதன் தன் வச மாகான்;

30 — 27 — 108 = 165. 27 — 40 — 108 = 165 30 — 70 — 10 = 208.

கக்ஷபுடம் : துஷ்டோபி நிருணாம் ஸ்வவசம் நயாதி:—
30 — 27 — 810 (= 867) — [30 — 27 — 108 (= 165) ஊகம்].

52. கண் — நடக்கிறகண் — நடக்கக் கண் — தெரியாது — தெரியாமல்; நடக்கிற கரை (தெரியாது — நடைகுன்றிப் போம் - பொட்டைக் கண்ணனாவான் - இறக்கும் வரையும் பொட்டைக் கண்ணனாவான் - பேடு அடைபடும்:— 41 - 68 - 52 = 161. 41 - 52 - 68 = 161. 48 - 68 - 52 = 168. 41. 52. 68. 161.168. 278.

53 - திரிகால ஞானங்கெட, 54 - சரீர சித்திகெட.

287. இரண்டெழு தொண்ணூற் றொன்றிருபத் தாறு
திரண்ட திரிகால ஞானஞ் சிதற
மருண்ட சரீரசித்தி மாறும் நாற்பான்
முரண்டிருபத் தாறுடன் முப்பானேழ் தானே.

பாடபேதம்

1. இரண்டேழு - ரெண்டெழு - தொண்ணூற் றெண்ணிரு - தொண்ணூ றெண்ணிரு. பத்தாறுந்.
2. சிதறா - சிதரா.
3. மருண்டு - சரீரசுத்தி. மாறுமேநாற்பது - நாற்பதும்.
4. முரணிரு பத்தாறுமுப்பத்தேழ் - முப்பதேழ்.

குறிப்புரை

இம் மந்திரம்: முக்காலவுணர்வு, காயசித்தி ஆகியவற்றின் அழிவுக்குரிய இலக்கங்களை உணர்த்துகின்றது.

திரிகாலஞானம் - இறப்பு, நிகழ்வு, எதிர்வு ஆகிய மூன்று காலத்து நிகழ்ச்சிகளையும், பொருள்களையும் உணரும் ஞானம். மறுவில் செய்தி மூவகைக் காலமும் - நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும் - காமம், வெகுளி, மயக்க மில்லாத ஒழுகலாற்றினை இறப்பும், நிகழ்வும், எதிர்வும் என்னும் மூவகைக் காலத்தினும் வழங்கும் நெறியான் அமைத்த முழு துணர்வுடையோன் பக்கமும்....... கலச யோனியாகிய அகத்தியன் முதலியோரும் அறிவர் என்றுணர்க; யோகிகளாய் உபாயங்களான் முக்காலமும் உணர்ந்தமாதமூலர்

முதலியோர் அறிவன்றேயத்து அனைநிலை வகையோராவர்; அவர்க்கு மாணாக்கராகித் தவஞ்செய்வோர் தாபதப் பக்கத் தாராவர்.- தொல் 1020. நச். என்பனவுமறிக. இந்த ஞானம் யோகக் காட்சி எனப்படும் - சித்தி. சுபக். 13 சிதறல் - பயன் படாமற்போதல். மருள் - மயக்கம். சரீரசித்தி - காயசித்தி;

திருமந்திரம் தந்திரம் -3. அதி - 13. காயசித்சி உபயம். செய் 724 - 739 காண்க. முரண் = வலிமை - மாறுபாடு.

53. திரிகாலஞானஞ்சிதற:- 14—91—26.

54. சரீரசித்தி மாற: 40 — 26 — 37 (கக்ஷபுடம்).

இலக்க வேறுபாடு

53. திரிகாலஞானம் — முக்காலத்துப் பொருள்களையும், நிகழ்ச்சிகளையும் அறியும் உணர்வு — திரிகாலக் (யா) ஞங் — ஞானம் — முக்காலவுணர்வும் - ஞானம் சிதறி—குரல் வஞ்சம் — குரல் வஞ்சனம்: கெட — கெடும் - போக — போகும்:— 14 — 91 — 26 = 131. 14 — 26 — 91 = 131. 14—98— 26 = 138. 17 - 91 - 26 = 134. 20 - 67 - 91 = 178. 83 - 106 - 102=291. குறல் வஞ்சம்போக - 131. 270. 161. ஸ்ரீகோபம் - 17 - 26 - 91 = 134. 14. 26. 131. 134. 138. 161. 178. 270. 291. 302.

கக்ஷபுடம்: த்ரை காலிக. ஞாந நாசம்:— 17 - 91 - 26 (= 134—?)- 17 - 94 - 2 (= 137) (- 14 - 9126 (= 131) ஊகம்).

54. காயசித்தி - காயசுத்தி - சரீரசித்தி — காரியசித்தி கெட — கெடும் — மாற — மாறும் — மணிமந்திர ஔஷதங் கெடும் — மந்திரங்கள், யந்திரங்கள், சித்த மருந்துகள் (ஆகிய) இவைகட்குங் கேடுண்டாகும்.

40 — 26 — 37 = 103. 26 - 37 - 40 = 103. 26 — 40 — 37 — 103. 40 — 27 — 36 — 103. 26. 37. 40. 103.

கக்ஷபுடம்: மந்திர யந்த்ர ஔஷத சித்தி நாசம்:— 40 — 26—37 (= 103).

55 – சீர் கெடுதல். 56 – உடல் மெலிதல்.

288. தானே சீர்கெடுந் தக்கவிரு பத்தொன்றும்
ஏனை யிருபதும் எண்பத்து நாலுமாம்
ஊனைந் துடம்பு வுலர்வெழு பத்தாறும்
ஞானநாற் பத்தெட்டும் நாற்பத்து மூன்றே.

பாட பேதம்

1. சீர்கேடு தக்க - ஸ்ரீகெடுந்தக்க - சிறுகேடு தக்க - ஸ்த்ரீகெடுந் தக்க.
2. மேனே.
3. மேனைத்துடம்பு - மேனையுடம்பு - ஊனைந்துடம்பு மெலியவெழு - ஊனைந்துடம்பு மெலிவெழு.
4. நானே நாற்பத்தெட்டும் - நானாநாற்பத்தெட்டும். மூன்றுமே.

குறிப்புரை

இம்மந்திரம்; சீர்கெடுதல், உடல் மெலிதல் ஆகியவற்றுக்குரிய இலக்கங்களை உணர்த்துகின்றது.

சீர் = சிறப்பு - வாழ்வு - புகழ் - அழகு - தன்மை. தகல் - தகுதல். ஊன் = தசை - சதை - மாமிசம். நைதல் = நிலை கெடுதல் - சுருங்குதல். உலர்வு = உலர்தல் - வாடுதல். ஞானம் - தெளிவு.

55. சீர்கெட:— 21 - 20 - 84 - கக்ஷபுடம்.

56. உடல்வாட:— 76 - 48 - 43.

இலக்க வேறுபாடு

55. ஸ்ரீ - ஸ்த்ரீகெட - கெட்டுப்போக - பிரியும் - கூடும் வியாதியால் பீடிக்கப்படுவான்:

21—20—84 = 125. 72—42—12 = 126.
61—20—84 = 165.
21. 20. 48. 125. 126. 139. 165.

கஷபுடம்: ஸத்ரீகோடரேணக்ரத்திதோமநுஷ்ய:- 21—20 —84 (= 125) - க்ஷயாதிபிராப்தி:- 72 - 42 - 12 (= 126 - ?).

56. உடம்பு - உடல் மெலிய - மெலியும் - இளைக்க - தேக நாசமடையும் - வியாதியுண்டாம் - உடலழிவையுள தாக்கும் நோயுண்டாம்:—

76—48—43 = 167. 43—48—76=167.

43—48—16=107. 72—48—42=162.

43—48—106=197.

கக்ஷபுடம்: தேகக்ஷயவியாதி:-
76—48—42 (= 166—?) [—76—48—43 (= 167) ஊகம்.]

பாடபேதம்: நானா — பலவிதமான. நால்வரும் நானா விதப்பொருள் கைக்கொண்டு

— திருமந்திரம்—70—286—2989.

நானாவித உருவாய்நமை யாள்வான் — தேவாரம் 91.

நானாவிதம் நினைவார்தமை நலியார்நமன் தமரே.

— 8056.

நாடும் பொருள் அனைத்தும் நானாவிதமாக — களிறு. 29.

57—ஆரோக்கியங்கெட. 58—ஆயுள்கெட.

289. நாற்பதுதன் னுடனூற்று நால்பன் மூன்றும்
கிற்றுப்பட் டாரோக் கியங்கெடு மெண்பத்தேழ்
தோற்றறு பத்திரண்டுந் தொண்ணூற்று நாலும்
ஆற்றிய ஆயுள் அன்றே கெடுமென்னே.

பாட பேதம்

1. நாற்பது தன்னோடு நூற்றுநால்பன் — நாற்பத்தி
ரண்டொரு நூற்றுநான் மூன்றுங் — நாற்பத்தி
ரண்டொரு முந்நூ (முன்னூ)ற்று நான் மூன்றுங் —
நாற்பத்திரண்டொரு முன்னூற்றிருநான் மூன்றுங்—
நாற்பத்திரண்டொரு முன்னூற்றிரு மூன்றுங்.

2. சிற்றுப்பாடாரோக்கியங் – சிற்றுப்படாரோக்கியங் கேடெண்பத் – சிற்றுப்பாடாரோக்கியங் கேடெண் பத் - சிற்றுப்படாதொயக்கியங் கெடுமெண்பத். மெண் பத்தேழுந்.

3. தோற்றமறு பத்திரண்டுந். நாலுமாம் - நாலுமா.

4. ஆற்றியவாயுளும் - மாற்றியவாயித்து - வாயிசு - வாயுசு – வாயிசும் - ஆயுளும். மாறேகெடும். முன்னே.

குறிப்புரை

இம்மந்திரம்; ஆரோக்கியங்கெடுதல், ஆயுள்கெடுதல், ஆகியவற்றுக்குரிய இலக்கங்களை உணர்த்துகின்றது.

ஆரோக்கியம் = நோயின்மை - சௌக்கியம் - சுகம். ஆயுள் - வாழ்நாள்.

57. ஆரோக்கியங்கெட:- 40 - 104 - 13 - கக்ஷபுடம்.

58. ஆயுள்கெட:- 87 - 62 – 94.

இலக்கவேறுபாடு

57. ஆரோக்கியங்கெட - கெடும் - பொகும்; யோக்கியர் கட்கு – யோக்கியங்கட்குக் கேடுண்டாம் - ஹானியேற்படும்.

40 — 104 — 13 = 157. 104 — 40 — 13 = 157.
13 — 40 — 104 = 157. 14 — 104 — 3 = 149.
23 — 42 — 104 = 169. 43 — 140 — 0 = 183.
40 — 104 — 53 = 197. 53 — 42 - 104 = 199.
40 — 104 - 57 = 201. 42 — 300 - 27 = 369.
13. 40. 104. 149. 157. 169. 183. 197. 199. 201. 369.

கக்ஷபுடம்:— ஆரோக்யஹாநி:— 40 — 104 — 13 (= 157?).

58. ஆயுள் — ஆயுசு – ஆயிசு — வயது வளர்த்திகெட கெடும்; ஆயுளுக்கு ஹாநியேற்படும்:—

87 — 62 — 94 = 243. 62 – 87 – 94 = 243.
94 — 87 — 62 = 243. 62. 87. 94. 243. 305.

கக்ஷபுடம் :— ஆயுஷ்யஹாநி:— 87 - 62 - 94 (= 243).

3. உலக பேதன வினையேவல் வகையின் தொகை – 58

290. என்னே உலக வியற்பே தனவகை
அன்னே யதன்றொகை அன்பத்தெட்டானது
பொன்னே யிதற்குப் புகலுவோம் மந்திரம்
முன்னே பரமன் மொழிந்த படியே.

பாடபேதம்

1. எண்ணென்றுலக — யுலகமியற் — யுலோகமியற் யுலோகமியர் வகைதான்.

2. அன்னேயது தொகை — தன்னே வகைதொகை — கண்ணா வகைதொகை. தானன்பத்தெட்டாம் — தானெண்பத்தெட்டாம் — தானாற்பத்தெட்டாம் — தொகை நாற்பத்தெட்டானது தானைம்பத்தைந்தாம் - தானைம்பத்தெட்டாம்.

3. புண்ணியமாகும் புகலுமொருமந்திரம் - புகலு மோர் மந்திரம் - புகலுவோமந்திரம் – புகலுவேமந்திரம்.

4. முன்னாய்ப் -- முன்னாப் - முன்னா - உன்னாப்பரமன் உரைத்த வகைப்படி - உன்னே பரமன் உரைத்த வகைப்படியே - உரைத்த விதிப்படியே - உண்மை யெனவே உரைத்தபடி போம்.

குறிப்புரை

இம்மந்திரம்; இதுகாறுங் கூறப்பட்ட உலகபேதன கன்ம வகையின் தொகையையும், அதன் மந்திரத்திற்குத் தோற்று வாயையும் உணர்த்துகின்றது.

உலகியற்பேதனம் — உலக வியல்புபற்றி எடுத்துச் சொல்லப் பட்டனவாகிய பேதன கன்மப் பிரயோகங்கள்.

வகை - கூறுபாடு தொகை = தொகுதி - கூட்டம் - கூட்டுத் தொகை. அன்னே = அன்னாய் ! மகடூஉ முன்னிலை விளிப்

பெயர். அன்னே! இவையுஞ்சிலவோ - திருவாசகம். 161. பொன்னே - பொன்னே போற்கொண்டு போற்றத்தக்கதா யுள்ள மந்திரம் என்க. புகலுதல் - சொல்லுதல். பரமன் - சிவபெருமான். மொழிந்தபடி - உபதேசித்தருளிய முறைப்படி.

இதுகாறும் எடுத்துச் சொல்லபபட்டனவாயுள்ள உலக பேதன வினையேவல் வகைகளின் தொகையினைக் காணுங்கால் 58-ஆகும். இனி இவற்றுக்குரிய மந்திரத்தை இறைவன் அருளியவாறே புகலுவோம் என்பதாம்.

(1. உடன்பாட்டு - ஆக்க விளைப்பேதன கன்மத்தின் தொகை – 29)

3 – உலகபேதன வினைவகையின் தொகை - 58

அவையாவன:

1. சபையில் வார்த்தை சொல்லல்.
2. பெரும் பட்டங் கட்டுதல்.
3. நற்குணமுண்டாதல்.
4. மைந்தரும், மாதருங் கூடுதல்.
5. உறவு உண்டாதல்.
6. சிறப்பு உண்டாதல்.
7. சுகம் உண்டாதல்.
8. செட்டு உண்டாதல்.
9. தலைமயிருண்டாதல்.
10. கெட்டது கூடுதல்.
11. தாரமுண்டாதல்.
12. வித்துவானாதல்.
13. நாட்டிற்கு நலம்பயத்தல்.
14. மனையுண்டாதல்.
15. பெண் வாழ்தல்.
16. ஞானமுண்டாதல்.
17. கவிதையுண்டாதல்.
18. தனமுண்டாதல்.
19. நாணமுண்டாதல்.
20. தானியமுண்டாதல்.

21. தன்வசமாதல்'
22. பெண்ணாண்விடுதல்.
23. செய்மைக்காட்சி.
24. முக்காலமும் உணரும் ஞானம்.
25. காயசித்தி.
26. கூடுபுகுதல் (பரகாயப்பிரவேசம்.)
27. உடம்பு பருத்தல்.
28. வாழ்நாள் வளர்தல்.
29. ஆரோக்கியமுண்டாதல்.

(2-எதிர்மறை - அழிவுவினைப் பேதன கன்மத்தின் தொகை - 29.)

30. சொல்தெளிவின்றி மாறுதல். 1
31. பட்டம் அழிதல். 2
32. குணங் கெடுதல். 3
33. மாதர் மைந்தர் மனம் பிரிதல். 4
34. மாதர் உறவு கெடுதல். 5
35. சுகங் கெடுதல். 6
36. வித்தை கெடுதல். 7
37. நன்மை கெடுதல். 8
38. சிறப்பு அழிதல். 9
39. செட்டு இலையாதல். 10
40. தலை தட்டல். 11
41. கெட்டது கூடாமை. 12
42. கவித்துவங் கெடுதல். 13
43. மனை கெடுதல். 14
44. பெண் வாழாமை. 15
45. ஞானங் கெடுதல். 16
46. தானியங் கெடுதல் (குறைதல்). 17
47. நாண மழிதல். 18
48. தன தானிய மழிதல். 19
49. தார தரிசனங் கெடுதல். 20
50. பெண்ணாண் கெடுதல் (பிரிவு) 21
51. தன் வயமாகாமை. 22

52.	கண் தெரியாமை.	23
53.	முக்காலவுணர்வு அழிதல்.	24
54.	காய சித்தி கெடுதல்.	25
55.	சீர் சிறப்புக் கெடுதல்.	26
56.	உடலிளைத்தல்.	27
57.	ஆரோக்கியங் கெடுதல்.	28
58.	ஆயுள் அழிதல்.	29

என்பனவாம். இந்த பேதன வினையேவலின் தொகையானது; சுவடிகளில்: 48 - 55 - 57 - 58 - 88 என்று பாடபேதங்களிற் கண்டவாறே கூடியும் குறைந்துங் காணப் படுகின்றன.

மேற்கோள்

அதலோகவிபேதநம் விசித்ரம் சதசங்க்யார்த்த விகிநகத்வயேந || என்பதுங் காண்க. — சுக்ஷுபுடீதத்ரம்.

மந்திரம் - 33

3 - உலக பேதன கன்மத்தின் வகை - 58-க்கும் உரிய சிறப்பு மந்திரம்.

ஓம் ஐம் (ஓம்) சிலீம் பம் சும் ஹ்றஉம் பட் ச்ரௌம் க்ரோம் ட்ச்மிரியூம் அம் க்ஷும் ஹ்ரீம் நமோ நாராயணாய சிவாய நம: || [பி-ம். சிவாய ஸ்வாஹா].

பாடபேதம்

1. உலக பேதன மந்திரம்: இது திருமாலின் மாயா மந்திரமாகும்:-

 ஓம் ஐம் பகூம் பாசுபதாஸ்த்ராய ஹ்றஉம் ப்பட் நம: ஓம்நமோ நாராயணாய சிவாய நம: ||
2. ஓம் ஐம் ஓம் சிலீம் பம் சும் ஹ்றஉம் ப்பட் ச்ரௌம் க்ஷ்மிரியூம் அம் க்ஷும் ஹ்ரீம் நமோ நாராயணாய சிவாய ஸ்வாஹா ||,

3. ஓம் ஐம் ஹ்றலாம் பசுஹ்ஊம் ப்பட் ச்ரௌம் க்ரோம் க்ஷ்மிரியூம் அம் க்ஷம் ஹ்ரீம் நாராயணாய சிவாய நம: ||.

இம் மந்திரத்தை இயந்திரத்தில் வரையும் முறை: பூபுரத்தில் 1-ம், வட்டத்தில் 2-ம், ஏனையவற்றை ஒவ்வொன்றாக அறைகளில் ஹ்ரீங்காரத்தாற் கட்டப் பட்டதாக வரையவும். இது; ஜபம் ஓமம் இவை களின்றியும் வரைந்த அளவிலேயே சித்தியைத் தரும் ஆற்றல் மிக்கது.

4. ஓம் ஐம் க்மௌ (க்லௌ)ம் ஆம் அம் க்ஷம் ஹ்ரீம் நாராயணாய சிவாய நம. ||.

5. ஓம் ஐம் ஓம் சிலீம் பசும் பாசுபதாஸ்த்ராய ஹ்ரஉம் ப்பட் நம: ச்ரௌம் நமோ நாராயணாய சிவாய நம: ||.

6. ஓம் ஐம் க்லீம் ச்ரம் க்ஷ்மிரீம் ரம் ஆம் ப்ரீம் அம் கம் ஹ்ரீம் நாராயணாய சிவாய நம: ||'

7. ஓம் ஐம் கௌ (க்லௌ) ம் சம் க்ஷ்ரும் அம் க்ஷம் நாராயணாய சிவாய நம·||

8. இதற்கு மந்திரம் :— ஓம் ஐம் க் லௌம் ரம் க்ஷ்ரும் அம் க்ஷம் நாராயணாய சிவாய நம:||

9. இந்தபேதன வகைக்கு மந்திரம் — ஓம் ஐம் கௌ (க்வௌ) ம் ச்ரௌம் க்ஷம் ம்ரும் (ம்ரம்) ச்ரும் ஹ்ரம் க்ஷம் ஹ்ரீம் நாத நாத சிவாய நம: (நமா). நன் மைக்கு விட்டிலும், தலையிலும், வைக்கவும். உலக பேதனம் முற்றிற்று.

10. இந்த - 48 - க்கும் மந்திரம்:— ஓம் நம: || முற்றிற்று.

11. ஆக உலகபேதனம் – 58 - க்கும் மந்திரம்:— ஓம் ஐம் க்லீம் ஆம் அம் (ஹ்ரம்) ஸம் ஹ்ரீம் நாறா (ரா) யணாய சிவாய நம: ||

12. ஓம் ஐயும் கிலியும் ஆம் அம் ஸம் ஹ்ரீம் நாராயணாய சிவாய நம: ||

நன்மைக்குத் தலையில்: தின்மைக்கு அய் (ஐ) யன் கோவிலில் புதைக்கவும்.

13. ஓம் ஐம் க்லீம் ஸௌம் சட்புருவம் அங்கிஷங் ரீம் நாராயணாய சிவாய நம: ||
மேற்கிருந்து ஜெபித்து நன்மைக்கு வீட்டிலும், தீமைக்குக் கோயிலிலும் வைக்கவும்.

14. நுய மந்த்ரம்:— ஹர ஹர உருவோட அந்திற்றே ரோட கடிதாயடே விச: ||

குறிப்புரை

இம்மந்திரம்; உலகபேதன வினையேவல் வகையின் தொகை 58 - க்கும் உரிய சிறப்பு மந்திரமாகும். இந்த மந்திர இயந்திரங்களின் தந்திரம் வருந்திருமந்திரத்திற் சொல்லப்படும்.

மேற்கோள்

லோகபேதந மீசாநீ லோலுபாளிக (லோலம்பாளக) கேசிகே! விசித்ரம் வைஷ்ணவீ மாயா மநு மாகர்ண யாதுநா (யாசுந:) || ப்ரணவம் பூர்வ முச்சார்ய வாக்பவம் (அ யம்) ததநந்தரம் | தத: பாசுபதாஸ்த்ரந்து (பதந்து) ச்ரௌங்காரம் புநருத்தரேது ||

சிந்தாமணிம் ஸ்ருணீஞ்சைய அம்ஷம் பத (பத்ம)
மதோத்த ரேது |

மாயா நாராயணாயேதி சிவாய ததநந்தரம் ||

நம: பதாலங்க்ருதந்தம் (க்ருநோ—க்ருதகோ)
மந்த்ரோமாயா மயச்சிவே (மய: சிவ:) |

வஷ்யாமி தே (வஷ்யமிதே) மந்த்ரவர்ணலேக
நக்ரமமம்பிகே ||

பூகோண விலிகே தாத்யம் பச்சாத் வ்ருக்தாந்தரே
(வ்ருக்தே துவயம்) லிகேது ||
சேஷார்ண ஏகைகச: (சேஷா நேகைகச:) கோஷ்ட்
டேமாயா க்ருகித விக்ரஹாத் மாயாச்ரே
தயிதேத்ருவே ||

விலிகெத்ஸம் ப்ரதாயக்ரு ஸங்க்யா லேகந மார்க்கத: |
விநாஜபம் விநாஹோமம் லேகநாத் சீக்ர சித்திதம் ||
—ககுஷபுட தந்த்ரம்.

பாசுபதாஸ்த்ர மந்த்ரோத்தாரம்:-

தாரோ வாந்தோ வராசுஸ்த்தோ வாமநேத்ரந்து
பூஷ்சித : |

பார்ச்வோ பக: கர்ணயுதோ வர்ம்மாஸ்ராந்த
ஷடக்ஷர : ||

—அ-பந்ததி: வியாக்யானம் - ஸ்ரீ மாசிலாமணி தேசிகர். இந்த உலகபேதன கன்மச் சிறப்பு மந்திர மூலபாடத்தும், பாடபேதத்தும், பிரதிபேதங்களிலும் பலதிறப்பட்ட வடிவங்களுடன் காணப்படும் - 6 பீஜங்களுடன் கூடிய பாசுபதாஸ்திர மஹாமந்திரத்தின் சொருபத்தை - உண்மை வடிவை மேற்காட்டியுள்ள உத்தார விதியால் உணர்ந்து கொள்க.

3 உலக பேதன கன்மத்தின் தந்திரம்.

291. படியிற் பதித்தது மந்திரந் தானும்
நடுமேற் றிசையினில் நாம துரைப்போம்
விடுமத் தலையினும் வீட்டினும் நன்மைக்
கிடுமந்தத் தின்மைக் கியற்சாத்தன் கோயிலே.

பாடபேதம்

1. பதித்து. தானுண் - தானுண்டு.
2. டுடுமத்திசையெனவை - டுடுமத்திசையெவை - டுடு மேற்றிசை யெண்ணனு - நடுமேற்றிசையெண்ணி - டுடுமத்திசை யெண்ணனுநாம.

3. விடுமற்றலையிலும் - விடுமத்தலையிலும். வீட்டிலும். நன்மைக்கும்.

4. கிடுமத் - கிடுமத்தத் - கிடுமற்றத் - இடுமத். இயல் சாத்தன் கோவிலே.

முடிவு: — ஸ்ரீ (ஸ்திரீ) பேதனம் வருமாறு.

குறிப்புரை

இம்மந்திரம்; இதுகாறுங்கூறி முடிக்கப்பட்டனவாயுள்ள உலகபேதன வினையேவல்கட்குரிய தந்திரங்களை உணர்த்துகின்றது.

படி = படிதல் - அழுந்தல் - முறைமை. பதித்தல். வரைதல். மந்திரம் - மேற்சொல்லப்பட்டதாகிய உலகபேதன கன்மப் பிரயோகத்தின் மந்திரம். நடு = நடுவு நிலைமை - பூமி. நாம் = நாமம் - புகழ் - கீர்த்தி - பிரதாபம். விடுதல் = விடுத்தல் - பிரிதல் - பேதனம் - ஏவல் - பிரயோகம். இடுதல் = வைத்திடுதல் - வைத்தல். தின்மை = தீமை - தீயகன்மம். தின்மையும் பாவமுஞ் சிதைந்து தேயுமே - கம்பரா. தனியன்; அடியவர் நன்மைதின்மை அறிபவன் - திருவாலவா. 35. 11. இயல் = விதி - பொருந்துதல். சாத்தன் - ஐயனார்.

உலகபேதன கன்மப்பிரயோகத்தின் மந்திரசெபம், இயந்திர பூசை, தந்திரக்கிரியை, தியானம் முதலியவற்றுக்குரிய திசை மேற்கு ஆகும். அவ்வாறு முறைப்படி வழிபாடு செய்து முடித்த பின்னர், இந்த இயந்திரத்தை நன்மைக்கு முடியிலும், வீட்டிலும்; தீமைக்கு ஐயன்கோட்டத்திலும் வைக்க என்பதாம்.

இந்தப்பேதன கன்மப்பிரயோகங்களின் தொகை 58. அவற்றுள், 1-முதல் 29-வரை விதிமுகத்தாற் சொல்லப்பட்ட வினையேவல்கள் 29-ம் நன்மையையும், 30-முதல் 58-முடிய மறைமுகத்தாற் கூறப்பட்ட வினையேவல்கள் 29-ம் தின்மையையும் பயப்பனவாகுமென்க.

4 - மாதர் பேதன கன்மத்தின் விரி - 18
1. கன்னி கூட

292. கோயிலில் இட்டுக் கூறுலக பேதனம்
போயபின் பெண்ணிற் பொருந்திய பேதனம்
ஆயிலொரு கன்னி கூட அருபதும்
ஏயிலோர் ஐம்பான் எண்பத்தா றொத்ததே.

பாட பேதம்

1. கோயிலிட்டுக் கூறுவே பேதனம் - கூறுவோம் பேதனம் - கூறுலோ பேதனம் - குறுகுலக பேதனம்.

2. போயனே பெண்ணிற் - பேயனே பெண்ணிற் - பேயன பெண்ணிற் - பேனே பெண்ணிற் - போய பின் பெண்ணைப்.

3.

4. ஏயிலோரன்பது - ஏயிலோரைம்பது மெண்பத்தா. றொத்தே - றொற்றதே.

குறிப்புரை

இம்மந்திரம்; மாதர் பேதன வினையேவலின் வகையினைக் கூறத் தொடங்கி, முதற்கண் கன்னி கூடுதற் குரிய இலக்கத்தினை உணர்த்துகின்றது.

கோயில் - ஐயன் கோயில் இட்டு - இயந்திரத்தை வைத்து. போய பின் - முற்றிய பின்னர் பெண்ணிற் பொருந்தியபேதனம் - பொருந்தியுள்ள மாதர்பேதன கருமம். ஆய்தல் = ஆராய்தல் - தேர்தல் - பகுத்தெடுத்தல். கன்னி = இளமை - பெண் - குமரி. கூடல் = கூடுதல் - சேர்தல் - பொருந்துதல். ஏய்தல் = இசைதல். பொருந்தல்.

1. கன்னி கூட:— 60 — 50 — 86 கக்ஷபுடம். (?)

இலக்க வேறுபாடு

1. கன்னி - பெண் - ஸ்ரீ - ஸ்த்ரீ கூட ஸ்ரீ (ஸ்த்ரீ) க்குச் சகிகூட - பெண் ஸ்ரீ பேதனம் - கன்னி கூட - கூடும் - ஸ்த்ரீ

கெ (கூ)டும்-ஸ்த்ரீ புருஷனை அடைவாள் - புருஷர் ஸ்திரீயை அடைவர் - மாதர் நல்ல மைந்தரையடைவர்:—

60 — 50 — 86 = 196. 50 — 86 — 60 = 196.
50 — 60 — 86 = 196. 66 — 42 — 0 = 108.
53 — 60 — 86 = 199.

108. 196. 197. 199. 289. 298. 349.

கக்ஷபுடம்: நாரீபுருஷ ஸ்ய சுவாதி நம்:— 50 — 60 — 86 [= 196 - ?].

இந்த வினையேவலுக்கு மூலபாடத்திற் குறிக்கப்பட்டுள்ள இலக்கத்தில் துணிவு தோற்றவில்லை. இலக்க நூற் குறிப்பிற் காணப்படும் கூட்டுத் தொகையாகிய - 197 - என்பது ஈண்டுக் கருதத்தக்கது.

2-கொங்கையரும்ப. 3-முதிர்ந்தாள் தெருள.

293. ஒத்தமுலையுண்டா மோர்நூறு மையேழும்
முத்திமுப் பத்தாறும் முதிர்ந்தாள் தெருள
அத்தோடைம் பத்தேழும் ஆகுமுப் பத்தாறும்
மெத்த வறுபதும் வேண்டிலக் கம்மே.

பாடபேதம்

1. ஒற்றமுலை. மொருநூறு மையேழு - மோருமையேழு மோறுமையேழு - மோறுமையேழு நூறு.
2. முத்திதருமுப்பத்தாறு முது தெருட்சி - முதிர்ந்தோள் தெருள - முதிர்ந்தோற் தெருள - முதிர்ந்தான் தெருள.
3. அத்தோரைம் - மத்தோரன்.
4. வேணடு மிலக்கமே.

குறிப்புரை

இமமாந்திரம்; ஒத்தநகில் உண்டாதல்; முதிர்ந்தாள் தெருளல் ஆகியவற்றுக்குரிய இலக்கங்களை உணர்த்துகின்றது.

ஒத்தமுலை: கோங்கின் அரும்பு, குரும்பை, சூதாடுகருவி, எலுமிச்சங்கனி, வில்வக்கனி, இளநீர், செப்பு, செம்பொற்கலசம் முதலியவற்றை ஒத்து, இணைந்துள்ள இரு நகில்கள். முத்தி: என்பது - 36 என்னும் எண்ணிற்கு அடையாய்ப் புணர்க்கப் பட்டது. தெருளல் = தெளிதல் - பூப்படைதல் - இருது மதியாதல். மெத்தல் = மெச்சுதல் - புகழ்தல்.

முள்ளி நாண்முகை மொட்டியல் கோங்கின்
அரும்பு தேன்கொள் குரும்பை மூவாமருந்து
உள்ளி யன்றபைம் பொற்கல சத்தியல் ஒத்தமுலை
— தேவாரம் 2815.

முத்தர்தம் முத்தி முதல்முப்பத் தாறே,
— திருமந்திரம். 126.

முப்பதும் ஆறும் படிமுத்தி ஏணியாய் — 126:

என்பன காண்க.

2. ஒத்தமுலை உண்டாக: 100 - 35 - 36: கக்ஷபுடம்.

3. முதிர்ந்தாள் தெருள: 57 - 36 - 60.

இலக்கவேறுபாடு

2. ஒத்த நகில் - ஸ்தனம் - கொங்கை உண்டாக - உண்டாம் - எழும் பேசமுடியாது - மனிதனைப் பேசமுடியாமற் செய்யும்:—

100 - 35 - 36 = 171. 35 - 36 - 100 = 171.

35 - 36 - 0 = 71. 35. 36. 60. 71. 84. 100. 171. 181. 269.

கக்ஷபுடம்: ஸத்யஸ்த் தநாவங்குரி (ரு) தௌ பவேதாம்:— 100 - 35 - 36 (=171).

3. முதிர்ந்தாள் = முதிர்ந்தவள் - பெண் - வயது முதிர்ந் தவள் தெருள - திரளும் - திரள - ருது வாக - கொங்கை யெழுந்து விழ - கொங்கை சுரக்க - தெருட்சியுண்டாக - பூப்படைய:—

57 - 36 - 60 = 153. 36 - 57 - 60 = 153.

60 - 57 - 36 = 153.
36. 57. 60. 95. 151. 153. 315.

கக்ஷப்புடம்: அநங்கநாதிர்த்தவதீ பவித்ரீ:—
57 – 60 – 23. (= 140 -?) (57 – 60 - 36=153 - ஊகம்).

4 - கருவுண்டாக. 5 – மாதர் நயக்க.

294. இலக்கம் பதினஞ் செழுபத்தெட் டோடே
உலக்கநாற் பத்தாறும் உண்டாகும் கர்ப்பம்
நலக்க அரிவையர் நாற்பதும் முப்பான்
பலிக்குமன் பத்தேழ் பகம்பெருக்கப் பாடே.

பாடபேதம்

1. பதினைஞ் - பதினைந் தெழுபத்தெட்.
2. உலைக்கநாற். கர்பம் – கற்பம் - கெர்ப்பம்- கெற்பம்.
3. நலக்க வரிவையர் நாற்பது முப்பதும் - நலக்கவறுபதும் நாற்பது முப்பான்-நலக்கவறுபதும் நாற்பத்து மூன்றும்.
4. பலிக்குமெண் பத்தேழும் – பலிக்குமெண்பத்தேழு — பலிக்குமெண்பத்தேழ். பகம்பெருகப். பாரே.

குறிப்புரை

இம்மந்திரம்; கருவுண்டாதல், அரிவையர் நயத்தல் ஆகிய வற்றுக்குரிய இலக்கங்களை உணர்த்துகின்றது.

உலக்கல் = உலத்தல் - முடிவு பெறுதல் – சித்தியாதல். உலகை – ஒருங்காக அளிப்பாய் சீர் எங்கு உலக்க ஓதுவனே திவ்யப் 2901. கர்ப்பம் - கருக்கொள்ளுதல். அரிவையர் - மகளிர். நலக்க - விழைந்து நலமாய்க்கூட - விழைய – அழகு பெற - அன்புற - இன்புற நலமாக. நலக்க - அடியோமை ஆண்டுகொண்டு — திருவாசகம் 2(0. நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன் - தேவாரம். 4164. நலங்கனிந் துருகி நின்றான்- சிறந்த நின் நலத்தைச் சேரேனாய் விடில் – சீவக. 2060. 2067. வண்ணமுலை - வேசி துயிலும்......பேசில் இவையுடையாள் பெண். என்பனவும் அறிக. பலித்தல் - பயன்விளைத்தல்.

பகம் – பெண்குறி. யோனியும் பகமும் பெண்குறியாகும் - திவாகரம். பெருக்கப்பாடு - பெருத்தல். இதன் இலக்கம் வரும் மந்திரத்திற் கூறப்படும்.

4. கருவுண்டாக:— 15 – 78 - 46 – கக்ஷபுடம்.

5. அரிவையர் நயக்க:— 40 – 30 - 57.

இலக்கவேறுபாடு

4. கர்ப்பம் - கெற்பம் - கெர்ப்பம் - பிள்ளை - கருவுண்டாக - கற்பம் உண்டாம் – உண்டாகும் - தரிக்க-மலடி (யும்) கெற்பமடைவாள் - மூலம் போம் - புத்திர விர்த்தி:— 15 – 78 - 46 = 139. 15 - 46 - 78 = 139. 78 - 46 - 15=139. 55 - 46 – 78 = 179. 54 - 60 – 93 = 207. 15. 32. 46. 58. 63. 78. (புத்திர விர்த்தி—) 100. 139. 159. 179. 207. 346. 416.

கக்ஷபுடம்:- வந்த்யா கர்ப்பப் பிராப்தி:-
15—78—46 (= 139)—57—36 - 60 (153)

5. பகம் - யோனி - பெருக்க - பெரு(க்)கும் - பெரிசாக - பெருக்கமாக. ஸ்ரீகளை நாவடக்கும் - நாமடக்கும் - ஸ்ரீகளுக்குப் பெரும்பாடுண்டாகும் - ஸ்த்ரீ தாசியைப் போலிருப்பாள் - பள்ளியில் வேசிபோல் வசியமாயிருப்பாள்:- 40—30—57=127. 57 —40 — 30 = 127. 30 — 40 — 57 = 127. 40—30—87=157. 30 — 40 – 87 = 157. 87—40—30=157. 50—53—74=177. 74—50—53=177. 60—70—87=217. 30. 40. 57. 87. 127. 157. 177. 190. 217. 317.

கக்ஷபுடம்: அநங்கா வேசியைவ வசியா சயநே நரஸ்ய:-
40—36—57 (= 133)—100—30—57 (= 187) [40—40—57(=127) ஊகம்].

6 - பகம் பருக்க. 7 - விறுண்டாக.

295. பாடெழு பத்துநான் கைம்பதும் பன்மூன்றும்
தேடிய விறுண்டாம் செப்பிய நாலேழும்
நாடிய பதினைஞ்சும் நாற்பத்து நாலும்
கூடிய போகங் குறுகிப் பெருகவே.

பாட பேதம்

1. நாலைம்பது—நாலண்பது—நால்ஐம்பதும்—நாலைம்பதும்.
2. வெறியுண்டாஞ்—வீடுண்டாஞ். நாலேழு.
3. பதினைந்தும்—பதினஞ்சும்—பதினஞ்சு—நான்குஞ்—நாலோடும்— நாலொடு.
4. கூடிய பேதனங்—பெருக்கவே—பெருக்கே.

குறிப்புரை

இம்மந்திரம்; பகம் பருத்தல், வீறுண்டாதல் ஆகியவற்றுக் குரிய இலக்கங்களையும், போகம் பெருகற்குத் தோற்றுவாயையும் உணர்த்துகின்றது.

பாடு - பெருமை. வீறு = வேறொன்றற்கில்லா அழகு. சீவக. 489. நச். வீறாப்பு - இறுமாப்பு. இந்த முறுக்கேன் வீறாப்பேன் (தனிப்பாடல்) - பெருமகிழ்ச்சி வெறி - மதம். காமமிகுதி. மதம் - என்றது, காமக்களிப்பால் உண்டாகிய கதிர்ப்பை - திருக்கோ. 69 பேர். குறுகல் = குறைதல் – கிட்டுதல். போகங் குறுகிப் பெருக - போகங் கிட்டி மிக என்க. இதற்குரிய இலக்கம் வருஞ்செய்யுளில் சொல்லப்படும்.

6. பகம் பருக்க:- 74—50—13.
7. வீறுண்டாக:- 28—15—44 — கக்ஷபுடம்.

இலக்க வேறுபாடு

6. பகம் - கன்னியின் பகம் - பெருக - ருதுவானாற் போலிருக்கும் - கன்னியின் பகம் ருதுவான பெண்டிரின் பகம் போலும்:-

74—50—13=137. 13—50—74=137.
74—13—50=137. 38—44—55=137.
13. 38. 44. 50. 55. 74. 127. 137. 272.

கக்ஷபுடம்:- கன்யாபக விலாஸப்பிராப்தி:-
71—50—13 (= 134 - ?) -

97—50—13 (= 160 - ?) -
(74—50—13=137. ஊகம்).

7. வீறு - வீறாப்பு - வெறி உண்டாக - பெருக; அற்ப மோ(போ)கம் வலுவாம்:-
28—15—44=87. 44—28—15=87.
15—28—44=87. 15—68—70=153.
15. 28. 44. 87. 93. 153. 183.

சுக்ஷுபுடம்: கர்வாபிமாநப்பிராப்தி:-
28—15—44 (= 87).

8-சோகம் பெருக. 9-பெரும்பாடு போக

296. பெருக்கும் பதினைந்தும் பேசறுபத் தெட்டும்
இருக்கும் எழுபதும் எய்தும் பெரும்பாடு
துரக்குந்தொண் ணூற்றேழுஞ் சொல்லிய வைம்பதும்
அருக்கும் இலக்கம் அறுபது மாகுமே.

பாடபேதம்

1. பெருகும்-பதினஞ்சு-பதினஞ்சும்-பதினைந்து.
2. இருக்கும்மெழுபது.
3. துரத்துநூற்றேழுஞ் - துரத்து நூற்றேழு-வன்பது - வெண்பதும்.
4. அருக்கும்பத்தெட்டும் — அருக்கும் பதினெட்டும் — அடுக்கும் பதினெட்டும் — அருக்குமைம்பைத்தெட்டும் அறுபாடு நிற்க. மாமே.

குறிப்புரை

இம்மந்திரம்; போகம் பெருகுதல், பெரும்பாடுபோதல் ஆகியவற்றுக்குரிய இலக்கங்களை உணர்த்துகின்றது.

எய்தல் = பெறுதல் — அடைதல். போகம் பெருகுதற்குப் 15-ம், 68-ம், 70-ம் ஆகிய இவ்விலக்கங்கள் எய்தும் என்க. பெரும்பாடு — குருதி பெரிதுங்கழியும் நோய். இது, குதகவு

திரவிறைப்பு — கருப்பவுதிரவிறைப்பு - நீட்டுதிர மிறைப்பு என்றும் வழங்கும். துரத்தல் — போக்குதல். அருக்கல் = அருமையாதல். அருக்கம் = அருமை — மேன்மை — சிறப்பு — அபூர்வம்.

8. போகம் பெருக:— 15—68—70. கக்ஷபுடம்.

9. பெரும்பாடு போக:— 97—50—60.

இலக்கவேறுபாடு.

8. போகம் பெருக — உண்டாக — உண்டாம் — பெருகும் — அற்பமோ (போ)கம் வலுவாம் — போகங் குறுகிப் பெருக — போகங் கிட்டிமிக:—

15-68-70 = 153. 70-68-15 = 153.
68-70-15 = 153. 15-44-28 = 87.
107-50-78 = 235.
15. 68. 70. 87. 93. 153. 235.

கக்ஷபுடம்: போகே புருஷ ஜைத்ரீபவதி;—
68-70 - 15(= 153).

9. பெரும்பாடு — உண்டாக — உண்டாகும் நிற்க — பெரும்பாடெடுக்கும் — பெரும்பாட்டெடுக்கும் — குருதி ஒழிகித் துன்பமாம்:—

97—50· 60 = 207. 50—60—97 = 207.
97—60—50 = 207. 15—68—70 = 153.
40—30—87 = 157. 97—80—60—237.
50. 60. 97. 153. 157. 207. 237. 370.

கக்ஷபுடம்:— ரக்தஸ்ராவாபிபூதா: ப்ரமதாபவந்தி— நார்யா ஸ்தநம் பிசாச்யா இவ சுஷ்ய மாணம்பவதி:— 97—50—60 (= 207).

இந்தச் செய்யுளில் உள்ள அடிகள் ஒவ்வொன்றும் 13— எழுத்தலகினைப் பெற்று அளவொத்து அமைந்துள்ளமை காண்க.

10-கொங்கைதிரங்கல். 11-மாதர் சேராமை 12-தெருளாமை.

297. அறுப தெழுப தறுபத்து மூன்றுங்
குறுகி முலைசுருங்குங் கொண்டாள் கூடாள்
அறுப தறுபத்தெட் டோடைம்பத் தாறும்
அறுப தெழுப தையைஞ்சேல் தெருளாதே

பாடபேதம்

1. அறுபதெழுபத் தறுபத்துமூன்றுங் — அறுபதெழுப தறுபதினொன்று — அறுபதெழுப தறுபதினொன்றுங்.
2. கருகி. கூட — கூடா — கூடாமல் — கூடாது' கொண்டவள் — கொண்ட பெண்.
3. அறும வறுபத்தெட், டோரைம்பத்.
4. அறுபதெழுபதையைஞ்சொல் - அறுபதெழுபதை யஞ் சொல் - அறுபதெழுபதையன் சொல் - உறுவ தெழுபத்தஞ்சொல்.

குறிப்புரை

இதுகாறும் மாதர் பேதனகன்மப் பிரயோகங்களை, விதி முகத்தாற் கூறிவந்த ஆசிரியர் திருமூலதேவர். இனி அவற்றை மறைமுகத்தாற்கூறுவான் எடுத்துக்கொண்டார். அவற்றுள் இம்மந்திரமானது; மாதரின் கொங்கை சுருங்கல். மாதர் கூடாமை, மாதர் தெருளாமை ஆகிய இம் மூன்றன் வினை யேவல்கட்கும் உரிய 'இலக்கங்களை உணர்த்துகின்றது.

குறுகிச்சுருங்கல் - சிறுத்துத்திரைந்து சுருங்குதல். கொண் டாள் - கொண்டபெண். கூடாள் - சேராள். ஏல் = எனில் — மேற்கொள்ளுதல். தெருளாது — பெண்தெருளாள்.

10. கொங்கை சுருங்குதல் 60—70—63— கக்ஷபுடம்
11. பெண் கூடாமை 60—68—56 (?)
12. பெண் தெருளாமை;— 60—70—25

இலக்க வேறுபாடு

10. கொங்கை — ஸ்தனம் — ஸ்தன்யம் — நகில் சுருங்க-சுருங்கும் — சுரக்க குழும்பிச்சுருங்கும் — பிசாசின் ஸ்தன்யம் போலிருக்கும் — ஸ்தனம், பேயின் ஸ்தனம்போற் சுருங்கும் — திரையும் — திரங்கும்; -

60 — 70 — 63 = 193 70 — 63 — 60 = 193.
60 — 63 — 70 = 193. 63 — 60 — 70 = 193.
60 — 70 — 61 = 191. 80 — 70 — 63 = 213.
60. 63. 70. 95. 191. 193. 199. 213. 219.

கக்ஷபுடம்: நார்யா ஸ்தனம் பிசாச்யா இவ சுஷ்ய மாணம் பவதி:—

60 - 70 - 63 (= 193) - 97 - 50 - 60 (= 207).

11. கொண்ட பெண் - பெண் - ஸ்த்ரீ - கூடாது - கூடாமல் - கூடாமற்போக கூடாமலிருப்பாள் - வாழாமல் - ஸ்த்ரீ திரளாது - பூப்படையாது - அஞ்சிக் கணவனுடன் ரமிக்கமாட்டாள் :—

60 — 68 — 56 = 184. 56 — 60 — 68 = 184.
68 — 60 — 56 = 184. 56 — 68 — 75 = 199.
56. 60. 68. 184. 188. 199. 319.

கக்ஷபுடம்: நாரீபதிந்நரமேதே:—

66 — 56 — 70 (= 192 - ?) — (68 — 56 — 60 (= 184 — ?)

12. மாதர் - மங்கை - பெண் தெருள - திரளும் - தெருட்சியுண்டாக - எத்துணைச் சாந்தி செய்யினும் ருது ஆகிக்கொண்டேயிருப்பாள்:—

60 — 70 — 25 = 155. 70 — 60 — 25 = 155.
25 — 60 — 70 = 155. 36 — 57 — 60 = 153.
60 — 68 — 56 — 75 = 259. 35 — 26 — 80 = 141.
25. 60. 70. 141. 153. 155. 259. 261.

மேற்கோள்

கொங்கை திரங்கி நரம்பெழுந்து ... பரடுயர் நீள்கணைக்

காலோர் பெண் பேய் — திருமுறை 11. 2: 1.

குழும்பி - குழியாகி. குழும்பு — குழி. ஆழ்ந்த குழும்பிற் றிருமணி கிளர. — மதுரைக்காஞ்சி 273.

13. (1) மாதர் அருளாமை. (2) வெறுத்தல்.

298. தெருளா திருக்கத் தேரறு பத்தாறும்
இருளாக முப்பத்தஞ் சென்பதும் இட்டால்
அருளா தரிவை வெறுக்கைம்பத் தாறும்
பரியா விருபதின் மூன்றும் பதினாலே.

பாடபேதம்.

1. தேரிலறு — தெரிவது - தெரியறு — தெரிவிலிருபத் தாறும். [தெரியிலிரு]

இம்மந்திரத்திலும், மேற்கோளிலும் வந்துள்ள விரு விரு வீறு வீறு என்னும் அடுக்குத் தொடர்கள் சிதைந்த தமிழாகிய பாகதச் சொற்கள்.

7 - பேதன கன்மப் பிரயோக மந்திரத்தின் தந்திரம்.

318. தீண்டாத மந்திரம் திதாங் கருமத்தில்
துாண்டாத மந்திரம் சொல்லிய நன்மைக்கு
மாண்டாத புறவட்டந் தன்னில் வரைய
வேண்டுவ தென்று விளம்பினன் நாதனே.

பாட பேதம்

1. தின்றாத - தீண்டிடு. கருமத்திற்.
2. றூண்டாத - தன்றாத - தன்கைக்கு.
3. மான்றார் - மாண்டார் - பிறவட்டதன்னிற்றான் வரைய - புறவட்ட (ந்) தன்னிற்றான் வரைய - புற வட்டமதனில் வரைய - புறவட்டமற்றிதுதான் வரைய - புறவட்டமற்றதுதான் வரைய - புற வட்ட மற்றிதுதான் வளாய - புறவட்டம் மற்றிது தான் வரைய - புறவட்டம் மற்றியது வரைய - பிற வட்டந் தன்னில் வரைய - பிறவட்டம் மற்றதி நின்றான் வரைய - பிறவட்டம் மற்றதிற்றாய.

4. வேண்டுமென்று - வேண்டா மனம் வேண்டும் விதி யெனலாமே - விளம்பினன்றானே - விளம்பி னன்றா னதே - விளம்பின னையனே.

குறிப்புரை

இம்மந்திரம்; மேலே சொல்லப்பட்ட பேதன வினை யேவலுக்குரிய பொது மந்திரத்தை, இயந்திரத்தில் வரையுந் தந்திரம் உணர்த்துகின்றது.

தீண்டுதல் - பற்றுதல். தூண்டுதல் = செலுத்துதல் - ஏவுதல் - பிரயோகித்தல். தீதாங்கருமம் - மேற்சொல்லப் பட்ட பேதன வினையேவல்களில், மறைமுகத்தாற் குறிக்கப் பட்ட கன்மங்கள். நன்மை - விதிவினையேவல்கள். மாண்டாத - மாணாத. மாண் - பெருமை. 16 - அறைகளையுடைய அக வட்டத்தின் புறத்தேயுள்ள வட்டமாதலின், மாணாத என்றார். வட்டம் = சக்கரம் - விருத்தம். புறம் - வெளி. விளம்புதல் - சொல்லுதல். நாதன்=சிவபெருமான் - நந்தி யெம்பெருமான்.

மேலே கூறப்பட்ட பேதனகன்மப் பிரயேகத்துக்குரிய சாமானிய மந்திரத்தை, இயந்திரத்தின் புறவட்டத்தில் வரைந் திடுக என்பதாம்.

மேற்கோள்

பொதுவில் நின்றாடும் - நாதனார் ஆதிதேவனார் கோயில் நாயகன் நந்தியெம் பெருமான் - பெரிய புராணம். 20. நங்கள் நாதனாம் நந்தி தவஞ்செய்து — 45

என்பனவும் ஈண்டு நோக்கத் தக்கன.

7 - பேதன வினையேவலின் தந்திரம்

319. நாதன் அருளினன் நன்மைக்கு வைப்பிடம்
கோதில் சிரத்திலுங் கொண்ட மனையிலும்
வாதிக்குந் தின்மை வருமையன் கோயிலில்
வேதிக்க வந்து வெளிப்பட்ட வாறே,

பாட பேதம்

1. அருளினால் - அருளிய - அருளிய. நன்மைக்கிருப் பிடம்.

2. கோதச் சிரத்திலும் - கோலச்சிரத்திலும் - கோதிலு சந்திலுங்

3. வாதிக்கும் தீமைக்கு வரு - வாதிக்குந் தீமை வரு - வாதிக்குந் தன்மை தருமையன் - வாதிக்குந்தின்மைக்கு மையன் கோவில் - தருமையன் - மாகதிக்குந்தின்மைக்கு மையன்றன் கோயிலில்.

4. வேதிக்கில்.

குறிப்புரை

இம் மந்திரம்; பேதன கன்மப் பிரயோக வகை 7-க்கும் உரிய இயந்திரம் வைக்கும் இடத்தினை உணர்த்துகின்றது.

நாதனை = சிவபெருமான் — நந்தியெம்பெருமான். நன்மை — பேதன கன்மப் பிரயோகங்களுள் விதிமுகத்தாற் சொல்லப்பட்ட வினையேவல்கள். தின்மை = தீமை — தீய செயல்; மறைமுகத்தாற் சொல்லப்பட்ட பேதன வினைகள். அடியவர் நன்மை தின்மை அறிபவன் — திருவாலவா. 35 : 11. தின்மையும் பாவமுஞ் சிதைந்து தேயுமே — கம்பரா. தனியன். வைப்பிடம் — இயந்திரத்தை வைத்தற்குரிய இடம். அருளினன் — சொன்னான். கோது — குற்றம். மனை — வீடு வாதித்தல் = வாதனை — துன்பம் — தடை. ஐயன் = ஐயனார் — சாத்தன். வேதித்தல் = பேதித்தல் — வேறாக்கல் பேதன கன்மம்.

126 — வகையாக விரிந்துள்ள இந்தப் பேதன வினையேவல் களுக்குரிய இயந்திரத்தை நற்கருமங்கட்கு முடியிலும், வீட்டிலும்; தீயகருமங்கட்கு ஐயன் கோட்டத்திலும் வைத்திடுக என்பதாம்.



பேதன கன்மத் தியானத் திருவுருவம்

செய்யுள்: 320

7. பேதன கன்மத்திற்குரிய இறைவியின் தியானமும் நேரமும் ஓரையும்

320. வெளிப்பட்ட மேனியும் வெண்மைய தாகும்
அளிப்பட்ட நேரம் அந்திமுன் றாஞ்சாமம்
ஒளிப்பட்ட ஓரையும் ஓர்புத னாகும்
களிக்கின்ற வாறு கருத்தொக்கப் பட்டதே.

பாடபேதம்

1. வெள்ளைய தாக.
2. நேரமும் — மேனியும் — நேரமு மாதிமுன்.
3. ஓரை. ஒருபுத — ஒளிபுத.
4. கருத்திற்.

குறிப்புரை

இம்மந்திரம்; பேதனகன்மப் பிரயோகத்திற்குரிய புவனாபதியின் தியானத் திருவுருவத்தையும், அதற்குரிய நேரத்தையும், ஓரையையும் உணர்த்துகின்றது.

மேனி — திருவுருவத்தின் நிறம். அளிப்பட்ட — சொல்லப்பட்ட; அளித்தல்—சொல்லுதல். முகமன் அளித்தும் கல்லாடம். அந்தி — இரவு. களி = களிப்பு — மகிழ்ச்சி.

இந்தப் பேதன வினையேவலில் இறைவியை வெண்மை நிறம் பொருந்தியவராகத் தியானிக்க: இதற்கு உரிய நேரம் இரவு 3 — ஆம் யாமம் புதனோரை என்பதாம்.

இதன் தியானமும், நேரமும் இவ்வாறே கக்ஷபுடதந்திரத்திலும் சொல்லப்பட்டுள்ளன.

15-ஆம் அதிகாரம் (8) மாரணகன்மப் பிரயோகம். வகை - 2, மரிப்பு வினையேவல்

321. பட்டவா றெல்லாம் பகர்ந்தது பேதனம்
விட்டபின் மாரணம் வேண்டுவ தேதெனில்
தொட்ட விருகமுந் தோன்று சத்துருவும்
கட்டிய பின்னைக் காணுமா ரண்மே,

பாடபேதம்

தலைப்பு: மாரணலக்கம்.

1. பட்டவரெல்லாம். பரந்தது. பேதநம்.

2. வேண்டுவதே தென்னில் — வேண்டுவதென்னில்

3. விருகமுந் தோன்றிய சத்துருக் — மிருகமுந் தொல் சத்துருவுங்.

4. கலந்த மாரணம் — கலந்தது மாரணமே — கலந்த மாரணமே — கலங்காத மாரணம்.

குறிப்புரை

இம்மந்திரம்; பேதன கருமத்தின் முடிவையும், முன்னர் நிறுத்த முறையானே 8-ஆம் எண்ணு முறைமைக்கண் நின்ற மாரண கருமத்திற்குத் தோற்று வாயையும், அதன் வகையையும் உணர்த்துகின்றது.

படுதல் = பொருந்துதல் - உண்டாதல். பகர்தல் - பகுத்துக் கூறுதல். விடுதல் - முடிதல். தொடுதல் - தொடங்குதல். விருகம் = மிருகம் - விலங்கு.

மாரணகருமத்தின் வகை - 2. அவை: (1) சத்துரு மாரணம். (2) விலங்கு மாரணம் என்பனவாம்.

மேற்கோள்

அதாதஸ்ஸம் ப்ரவக்ஷ்யாமி மாரணம் கர்ம நாயிகே|
த்விவிதந்து ஸம்ப்ரோக்தம் ம்ருகாணாம் த்விஷதாமபி ||
—கக்ஷபுடதந்த்ரம்.

மாரணமாவது: அபிசார கன்மஞ் செனிக்கிற வியாதி வழியாகவும், பலவிதமாக வருகிற பயங்களின் வழியாகவும் ஒருவர் பேதிப்பிக்கிற பயங்கள் வழியாகவும், அகால மிருத்யுக்களாய் மரித்துப் போல் - தத்துவ நிசாநுபோக சாரம். அத் - 4. கவுளயாமளை மதம்.

1. சத்துரு மாரண கன்மப் பிரயோகம். வகை - 8

1. சத்துரு மாரணம் 2. கர்ப்ப மாரணம்

322. மாரணஞ் சத்துரு மன்னுமறு பத்தேழ்
காரணம் பன்னாறுங் காணுமறு பத்தெட்டும்
மாரணங் கர்ப்பம் வந்தவறு பத்தேழும்
சாரணம் பத்தெட்டுஞ் சாருமைப் பத்தாறே

பாடபேதம்

1. மன்னறு பத்தேழுங் - வந்தறு பத்தேழு.

2. பன்னாறுங் காணமுப் - பன்னாறு காணயிமுப் - பன்னாறு காண்முப் பதினாறுங்காணுமுப் பத்தெட்டு.

3. கெற்பத்து வாங்கெழுபத் - கெர்ப்பத்து வாங்கெழுபத் - கெர்ப்பம் வந்தறுபத் - கெற்ப மாங்கெழுபத்-கெற்ப வாங்கெழு - தேழு - தேழுஞ்.

4. சாரணம் பத்தெட்டுச் - சாறணம் பத்தெட்டு - சாரண முப்பத்தெட்டு – சாரண முப்பத்தெட்டுஞ் - சார்ந் தன்பத்தாறே - சார்ந்தைம்பத் தாறே - சார்ந்த தெனம்பத்தாறே - சார்ந்ததெமைம் பத்தாறே - சார்ந் ததன்பத்தாறே - சார்ந்தவெண்பத்தாறே - சார்ந்த தெண்பத்தாறே - சாந்தெண்பத்தாறே - சார்ந்தன் பத்தாறுமே.

குறிப்புரை

இம்மந்திரம்; சத்துரு மாரண கன்மப் பிரயோகத்தின் வகைகளைக் கூறுவான் றொடங்கி முதற்கண்; பகை மாரணம், கருமாரணம் ஆகியவற்றுக்குரிய இலக்கங்களை உணர்த்து கின்றது.

மாரணம் = மாரண கருமம் - மரிப்பு வினை. சத்துரு - பகைவர். காரணம் = மூலம் - ஏது - உபாயம். இதனைத் தீர்க்குங் காரணம் யாது — கம்பரா. நாகபா 234. கர்ப்பம் —

கரு. சார் அணம் — ஒத்துப் பொருந்துதல். அணம் = அண்ணு தல் — ஒத்தல். புகலும் வாள் அரிக்கண்ணியர் — கம்பார. வரைக்காட். 58.

1. சத்துரு மாரணம்:— 67 — 16 — 38 — கஷுபுடம்.

2. கர்ப்ப மாரணம்:— 67 — 18 — 56.

இலக்க வேறுபாடு

1. சத்துரு மாரணம் — சத்ருமாரணமுண்டாகும்:—

67 — 16 — 38 = 121. 67 — 38 — 16 = 121.
16 — 38 — 67 = 121. 56 — 61 — 38 = 155.
16. 38. 59. 67. 100. 118. 121. 154. 155. 300. 321.

கஷுபுடம்: சத்ரு மாரணம்; — 67 — 16 — 38 (= 121) — 65 — 16 — 38 — (= 119.)

2. கரு — கர்ப்ப — கெர்ப்ப — கர்ப்ப சிசு — கர்ப்பத்தி லிருக்கும் சிசு மாரணம் — மரிக்க — மறிக்க:—

67 - 18 - 56 = 141. 67 - 56 - 18 = 141.
18 - 56 - 67 = 141. 77 - 18 - 56 = 151.
67 - 38 - 56 = 161. 67 - 40 - 86 = 193.
151 - 74 - 0 = 225. 77 - 80 - 86 = 243.
18. 56. 67. 74. 151. 161. 181. 193. 208 225. 243.
கஷுபுடம்: கர்ப்பமாரணம்:— 67 - 18 - 56.

3. குழவி மாரணம் 4. சேனை மாரணம்

323. ஆறெட்டுப் பன்னே ழறுபது பிள்ளைசாஞ்
சீறிட்டுச் சேனைசாஞ் சேர்ந்தநாற் பத்தொன்றுங்
கூறிட்ட முப்பதுங் கொண்டமுப் பத்தாறும்
மாறிட்டுச் சாகும் மனைவி மற்றதே.

பாடபேதம்

1. ஆறெட்டும். ழறுபதும். சாம்

2. சிறிட்ட சேனை - சீரிட்ட சேனை. சிறந்த நாற் - செறிந்த நாற்.

3. கூறிட (கூறிட்டு).

4. மனைவியும் மற்றதே - மனையினி மற்றதே - மனைவி மரிக்கவே - மனையினில் மற்றதே - மனையில் மற்றதே. மனையில மத்ததே.

குறிப்புரை

இம்மந்திரம் ; பிள்ளை மாரணம், சேனை மாரணம் ஆகிய வற்றுக்குரிய இலக்கங்களை உணர்த்துகின்றது

பிள்ளை - குழந்தை. சீறல் = - சீற்றம் - கடுஞ்சினம் - சீறுதல் - இரைதல். சேனை = படைகள் - (கரிபரி, காலாள் தேர்) - கூட்டம் - சுற்றம். குரிசிலை விடாத சேனையே - கம்பரா. தைல. 8. (1) மூலப்படை (2) கூலிப்படை (3) நாட்டுப்படை (4) காட்டுப்படை (5) துணைப்படை (6) பகைப்படைகள் - திருக்குறள். 762 பரிமே. சாம் = சாகும் - மரிக்கும். முனை - முனையான்.

3. குழவி மரிக்க. :— 48 - 17 - 60 — கக்ஷபுடம்

4. சேனை மரிக்க :– 41 - 30 – 36

இலக்கவேறுபாடு

3. பிள்ளை - சிசு - பால மாரணம் - மரிக்க - சாம் - சாக :—

48 — 17 — 60 = 125. 17 — 48 — 60 = 125.
60 — 48 — 17 = 125. 48 — 97 — 60 = 205.
17. 48. 60. 125. 205. 315.

கக்ஷபுடம் :— பால மாரணம்:— 48 — 17 — 60 (= 125).

4. சேனா - சேனை மாரணம் - மரிக்க-நாசம் ; சேனைக்கு நாசமுண்டாம் :—

41 — 30 — 36 = 107. 30 — 36 — 41 = 107.
41 — 36 — 30 = 107. 14 — 30 — 36 = 80.
30. 36. 41. 80. 107. 207.

கக்ஷபுடம் :— சேனா மாரணம் - சேநா நாசம்:—

41 — 30 — 36 (= 107) — 14 — 30 — 36 (= 80 - ?)

மனைவி மரிப்பு வினையேவற்குரிய இலக்கம் வரும் மந்திரத்துட் கூறப்படும்.

5. மனைவி மாரணம் 6. கண் மாரணம்

324. மற்றப் பதினேழும் மாறிய தொண்ணூறும்
கற்ற வைம் பத்தாறும் கண்சா முரைத்திடில்
செற்ற விருபத்தேழ் சேரறு பத்தாறு
முற்றமுப் பத்தாறு முன்பகை வற்கே.

பாடபேதம்.

1. மற்றும் - மற்ற - மற்றைப். மாற்றிய
2. கற்றவையன் - கற்றனவன். பத்தாறு. முரைக்கில் - முரைக்கின்றேன்.
3. செற்ற மிரு - சொற்ற மிரு - சென்ற விரு பத்தேழு - பத்தேழுஞ் - பத்தே தழு. சேர்ந்தறு - சேர்ந்தவறு. பத்தாறும்.
4. உற்றமுப் பத்தாறும் உன்பகை வர்க்கிடே — முன் பகை வற்கிடே.

குறிப்புரை

இம் மந்திரம்; மனைவி மாரணம், கண் மாரணம் ஆகிவற்றுக்குரிய இலக்கங்களை உணர்த்துகின்றது.

சாம் — சாகும். கண்சாம் — கண்ணொளி மழுங்கிப் பார்வை கெடும்.

5. மனைவி மாரணம்:— 17 — 90 — 56 கக்ஷ புடம்

6. கண் மாரணம்:— 27 — 66 — 36

இலக்க வேறுபாடு

5. மனைவி — மனையாள் — மாதர் — பெண்டிர் — ஸ்த்ரீ — இஷ்டப்பட்ட ஸ்த்ரீக்கு மாரணம் — மரிக்க — பெண் கலாதி மாரணம் (?)

17 — 90 — 56 = 163. 17 — 56 — 90 = 163.
90 — 56 — 17 = 163. 91 — 17 — 56 = 164.

கக்ஷ புடம்: ஸாத்யஸ்த்ரீ மாரணம்:—
90 — 17 — 56 (= 163). 15. 56. 90. 163. 164. 216.

6. கண் — பகைவர் கண்கள் — பகைவர்க்குக் கண் கெட-மாரணம் — சாம் — நாசம் — மரிக்க — கண்மாரணம் — சத்துரு கண்களுக்கு நாசமுண்டாம்.

27 — 66 — 36 = 129. 27 — 36 — 66 = 129.
66 — 36 — 27 = 129. 87 — 66 — 36 = 189.
27. 36. 66. 89. 129. 133. 189. 319.

கக்ஷ புடம்:— த்விஷ: நேத்ரஹாநி:
27 — 66 — 36 (= 129)

7–பகைவர் சாக - 8 - சத்துரு நாசம்.

325. பகையில ராகப் பகரிரு பத்தெட்டும்
வகைபெறு முப்பதும் வாங்கைம்பத் தொன்றும்
நகரில்லை சத்துரு நாசமே ழேழுந்
தொகை முப்பத் தாருந் தோன்றுநாற் பத்தெட்டே.

பாடபேதம்

1. பகைவர் சாகப் — பகைவாராசாகப். பக்கிருபத் தெட்டு — பத்திரு பத்தெட்டு.

2. வாங்கன்பத் தொன்று.

3. நகரில்லைச் சத்துரு — நிகரில்லை சத்துரு—நிகரில்லைச் சத்துரு. நாச மேழாந் — நாக மேழேந் — நாசமே ழே ஏழ் — நாச மேழாந் தொகை.

4. தொல்நாற்பத் தெட்டுமே — தொல்நாற்பத் தெட்டே.
தூறுநாற் பத் தெட்டே — நூறு நாற்பத் தெட்டே.

குறிப்புரை

இம்மந்திரம்; பகைவர் சாதல், சத்துரு நாசம் ஆகியவற்றுக் குரிய இலக்கங்களை உணர்த்துகின்றது.

பகர்தல் — பகுத்துக் கூறுதல். வகை = கூறுபாடு — முறை. சத்துரு — பகைவர். நகர் — நகரம் — வீடு. நாசம் = அழிவு — மரணம். தொகை — இலக்கம்.

7. பகைவர் மாரணம்:— 28 — 30. 51.

8. சத்துரு நாசம்:— 49 — 36 - 48.

இலக்கவேறுபாடு

7. பகை — பகைவர் — பகையாயுள்ளவர் எல்லாம் — பகையுற்றவரெல்லாம் — சம்பத்து (சத்துரு) க்கு மாரணம் — மரிக்க — நாசமுண்டாம்; ராசாக்கள் பகை கெட — அரசர் பகை கெட — ராசிகம் வரும் — சுகமுண்டு —

28 — 30 — 51 = 109. 51 — 30 — 28 = 109.
28 — 80 - 51 - 159.

வித்வான்களின் சம்பத்து நாசம்:—

28 — 80 — 51 = 159.
28. 30. 33. 51. 99. 109. 114. 159. 189.

கக்ஷபுடம்: வித்யாநாசம் — வித் வித் ஸம் பந்நச்யதி:—
28 — 80 — 51 (= 159) — 26 — 80 — 51. (= 157)
[28 — 30 — 51 (= 109) உவகம்) 885].

8. சத்துரு — சத்துரு குலம் — சத்துரு சேனை — பகை — சத்துரு குலத்துக்கு — சர்ப்ப — ஸர்வ மாரணம் நாசம் — நாசமாக — நாசமுண்டாகும்:—

49 — 36 — 48 = 133. 49 — 48 — 36 = 133.
36 — 48 — 49 = 133. 36 — 48 — 0 = 84.
8 — 36 — 48 = 92. 36 — 48 — 84 = 168.

49 — 36 — 94 = 179. 36. 48. 49. 84. 92. 117. 120. 129. 133. 168. 179. 284. 464. 468.

கக்ஷபுடம்: சத்ருகுல நாசம்:—
48 — 36 — 46 (= 131) — 49 — 36 — 49 (= 134 – ?) — [49 — 36 — 48 (= 133) ஊகம்.]

மந்திரம் - 38

1 – சத்துரு மாரண கன்மப் பிரயோக - வகை 8 – க்கும் உரிய சிறப்பு மந்திரம்.

முறைப்படி, ஈண்டு இருத்தற்குரிய பகைவர் மரிப்பு வினையேவலின் தொகை 8 – க்கும் உரிய சிறப்பு மந்திரம் சுவடிகளிற் காணப்படவில்லை. இது காறும் ஆசிரியர் கூறி வந்துள்ள முறைமையின் படிக்குத் தோற்று வாயுங் காணப்பட வில்லை. சில சுவடிகளில் மட்டும் ஈண்டுப் பின்னர்க் குறிக்கப் படும் மந்திரங் காணப்படுகிறது.

பிரதிபேதம்

1. ஆக [சத்துரு மாரணவகை] 8 - க்கு மந்திரம்:— செணக மெல்லா ஹாய நம|. கருண கண்டனா மிறபா ஐயும் க்லிம் (க்லீயும்)சுவாஹம் ॥.
[சுவடி – 8].

2. ஓம் நமோ ருத்ராய அமுகம் பச பச மத மத தாடய தாடய நாசய லோகித முகே ஸ்வாஹா | ஓம் ஹந ஹந தஹ தஹ ஸ்வாஹா ஓம் ॥. [சுவடி – ॥].

3. மாரணம் 8 - வகைக்கும் மந்திரம்:- (?)
[சுவடி – 16]

4. இரண்டுக்கும் ஒருவித மந்திரம்.

ஓம் ஹ்ரீம் ரம் ரம் க்கேம் க்கேம் பைரவி புவநே சுவரீ மஹா மாரிகே மாரய மாரயரிபும் ஸ்வாஹா ॥ [ஊகம்].

குறிப்புரை

இம்மந்திரம்; சத்துரு மாரண கன்மப் பிரயோக வகை 8 – க்கும் உரிய சிறப்பு மந்திரமாக ஊகத்தாற் குறிக்கப்பட்டது. இதன் தந்திரம், இவ்வதிகாரத்தின் முடிவில் வரையப்படும்.

1 - சத்துரு மாரண கன்மப்பிரயோக வகையின் தொகை – 8.
2 - விலங்கு மாரணம் (வகை – 6.)
1. கரி மாரணம்.

326. எட்டாம்பகை மாரணம் என்னும் விருகம்
சொற்றாற் கரிசாகத் தோன்றுமறு பத்தேழ்
முட்டாத வன்பத்து நாலுடன் முப்பதும்
பட்டாற் பரிசாம் பார்வகை யினியே.

பாடபேதம்

1. பகைமாரணமென்றும் — வகைமிருக மௌாதனிர றன — வமைமிருக மேளாத — வகை மிருக மேறாத னிற்றன — வகைமிருகம் ஏறாது நிற்றல் — வகை மிருக மேழாதனி (ற்) ன — மேராதனிற்றன — வகை மிருகமோர் – நிற்றன – மௌா நிற்றன. விருகஞ் — விருகந்.

2. தொட்டாள் — தொட்டான் — தொட்டாற் — சொற்றால். தோன்றறு பத்தேழும் — தொண்ணூறு பத்தேழ்.

3. முட்டாத — முட்டாகவன்பது நாலுடன் – இட்டது வைம்பதும் நாலுடன்.

4. பட்டாம் பரிசாகப் — பட்டாகம் பரிசாகப் – பட்டும் பரிசாகப் பட்டுப் பரிசாகப் பாடும் வகையிதே — பாடும் வகையினியே — வகையினியதே — வகையிதே — வகையிதே – படும் வகையிதே.

குறிப்புரை

இம்மந்திரம்; பகைவர் மரிப்பு வினையேவல் வகையின் தொகையையும். விலங்கின் மரிப்பு வினையேவலுக்குத் தோற்று வாயையும், அவற்றுள் கரியின் மரிப்பு வினையேவலுக்குரிய இலக்கத்தையும் உணர்த்துகின்றது.

பகை மாரணம் எட்டு ஆம் என்னும் — இவ்வாறாக சத்துரு மாரணகன்மப் பிரயோகத்தின் வகை 8 - என்று சொல்லப்படும். விருகம் = மிருகம் — விலங்கு. இனி விருக மாரணப் பிரயோகத்தின் வகைகளைச் சொல்லுமிடத்து என்க. மாரணம் என்பதனை விருகத்துடனுங் கூட்டியுரைத்துக் கொள்க. கரி = கரத்தையுடையது — யானை, கரம் — துதிக்கை. முட்டு = முட்டுப்பாடு — இடுக்கண் — வருத்தம் — தீமை — குறைவு. படுதல் — உண்டாதல். பரி = பரித்தல் — சுமத்தல் — விரைவு — குதிரை. சாம் — சாகும். இதற் குரிய இலக்கம் வரும் மந்திரத்திற் கூறப்படும்.

1. கரிமரிக்க:— 67 — 54 — 30 = 151 — கக்ஷபுடம்.

இலக்க வேறுபாடு

1. கரி — யானை — ஆனை — யானைக் கூட்டம் மரிக்க -மாரணம் — நாசமாம்—கரிக்கூட்டம் நாசமாம்-கரமாரணம்:-

67 — 54 — 30 = 151. 30 — 54 — 67 = 151.

90 — 70 — 84 = 244.

30. 54. 67. 151. 161. 191. 209. 244. 316.

கக்ஷபுடம்: கரிஸம்ஹதி:— க்கரமாரணம்:—

67 — 54 — 30 (= 151).

1 - சத்துரு மாரண கன்மப் பிரயோகத்தின் வகை - 8

அவையாவன:

1. சத்துரு மாரணம்.
2. கருமாரணம்.
3. குழவி மாரணம்,

4. சேனை மாரணம்.
5. மனை மாரணம்.
6. கண் மாரணம்.
7. பகைவர் மாரணம்.
8. சத்துரு நாசம் என்பனவாம்

2 - பரி மாரணம் 3 - மறி மாரணம்

327. இனியது கேளாய் எழுபத் திரண்டும்
தனியொரு நூற்றொன்றுந் தான்முப்பத் தாறும்
கனியவே ஆடுசாம் காணெண்பத் தாறும்
துனியுந்தொண் ணூற்றஞ்சுஞ் சொல்லு மிருபதே

பாடபேதம்

1. இனியது கேழு (ளு) மேழுபத்திரண்டு - இனிய தொகை ஏழு ஏழேழு முப்பத்தாறு - இனியது கேணிழுமேழேழு - இனியது கேளு - இனியது மேழும் ஏழேழு - இனிய தொகை யேழு வேழேழு முப் பத்தாறு - இனிய தொகை யேழு ஏழேழு முப் பத்தாறு.
2. தனியாந் தொண்ணூற்றாறு சாற்று மிருகமது - தனி யாந் தொண் ணூற்றஞ்சும் சொல்லு மிபத்தே - சொல்லிருபானே.
3. கனியள பொரிசாங் - களியள பொரிசாங் (களிய சஞ்சாகும் - களியசஞ் சாகம்) ஒரு நூற்றைான்று தனிமுப்பத்தாறு தானேண்பத் தெட்டு - கனியசஞ் சாகுங் காணெண்பத்தாறுங் - கனியஞ்சஞ் சாகங் காணெண்பத் தாறுந் - தானெண்பத்தெட்டும்.
4. துணியுந் தொண் - துளியுந்தொண். ணூற்றைஞ் சுஞ் சொல்லு மிருபதே - இனி மிருக மாரணஞ் சொன்னதே - இனிய மிருக மாரணஞ் சொன்னதே.

குறிப்புரை

இம்மந்திரம்; பரி, மறி ஆகியவற்றின் மரிப்பு விளைவேயவ லுக்குறிய இலக்கங்களை உணர்த்துகின்றது.

தனி = ஒப்பின்மை - கலப்பின்மை. கனிதல் - உருகுதல் ஆடு - மறி என்பது ஒரு பொருட் சொற்கள். சாம் - சாகும். துனி = அச்சம் - துன்பது. துணிதலுமாம்.

2. பரி மாரணம்:— 72 - 101 - 36 — கக்ஷபுடம்.

3. மறி மாரணம்:— 86 - 95 - 20 —

இலக்கவேறுபாடு

2. பரி - குதிரை - பரித்தொகுதி - குதிரைக் கூட்டம் - குதிரை (ஆடு) மாரணம் - மரிக்க - சாகும் - நாசம் - நாச மடையும்:—

72 — 101 — 36 = 209. 101 — 72 — 36 = 209.
36 — 72 — 101 = 209. 79 — 101 — 36 = 216.
72 — 109 36 = 217.
36. 60. 72. 101. 209. 216. 217. 369.

கக்ஷபுடம்:— வாசிநாம்மாரணம் – வாசி நாசம்:—

72 — 101 — 36 (= 209) — 72 — 109 — 36 = 217.

3. ஆடு — ஆட்டிற்கு — ஆடுகட்கு — ஆடு (மாடு) மார ணம் — மரிக்க — கெடும் — அழிவு — நாமுண்டாம்.

86 — 95 — 20 = 201. 20 — 86 — 95 = 201.
95 — 86 — 20 = 201. 55 — 69 — 0 = 124.
86 — 68 — 20 = 171. 55 — 69 — 258 = 382.
20. 86. 90. 95. 124. 132. 171. 191. 201. 342. 382.
409.

கக்ஷபுடம்:— அஜமாரணம் — அஜநாசம்:—

95 — 86 — 20 (= 201) — 55 — 69 — 0 (= 124).

4 - எருமை மாரணம் 5 - பசுமாரணம்.

328. இருபத்து நால்பதி னாரெண்பத்தேழும்
எருமைக்கு நாசம் ஏன்ற பசு நாசம்
ஒருபத்து நாலும் நூற்றறு பத்தேழும்
உரு முப்பத்தாறு முடனென்று சாற்றிடே.

பாடபேதம்

1. இருபத்தினாலு — இருபத்தினாலும் — இருபத்துநாலு. பதினாறு மெண்பத் தேழும் - பதினாலெழுபத்தேழு — பதினா லெண்பத் தேழ் — பதினாலெண்பத்தேழுங்.

2. எருமைக்கு நாசமா மேன்ற — எருமைக்கினேசமா மென்ற — கருநாசமா மென்ற — மிருக நாசமா மென்ற — மிருகநாச மென்ற — மிருகநாசம் மென்ற.

3. நூற்றிருபத் தேழு — நூற்றுப்பத் தேழு — நூற்றறு பத்தேழு — முரு முப்பத் — முரிமுப்பத் — முறுமுப்பத் — முளி முப்பத் — முனிமுப்பத் — முநமுப்பத் — முட னேறு — சாற்றே — சாற்றவே — சாற்றுகவே.

குறிப்புரை

இம்மந்திரம்: எருமை, பசு, ஆகியவற்றின் மரிப்பு வினையேவல் கட்குரிய இலக்கங்களை உணர்த்துகின்றது.

நாசம் = அழிவு - மாரணம் - மரிப்புவினை. ஏன்றல் = ஏற்றல் - இயலல் - தகுதியாதல். உரு - கரு. சாற்றல் சொல்லுதல்.

4. எருமை நாசம் :— 24 — 16 — 87 - கக்ஷபுடம்.

6. பசு நாசம் :— 14 — 167 — 36 —

இலக்கவேறுபாடு

4. எருமை - எருமைக்கு நாசம் - மாரணம் - மரிக்க - நாசமுண்டாகும்:-

24 — 16 — 87 = 127.　16 — 24 — 87 = 127.
87 — 24 — 16 = 127.　24 — 14 — 17 = 55.
24 — 14 — 77 = 115.
16. 24. 55. 87. 115. 127. 115. 227. 232.

கக்ஷபுடம் : மகிஷ்சி மாரணம்:—

24 — 16 — 87 (= 127).

5. பசு மாரணம் - மரிக்க - நாசம்:—
14 — 167 — 36 = 217.　14 — 36 — 167 = 217.
167 — 36 — 14 = 217.　117 — 36 — 0 = 153.
14 — 127 — 36 = 177.
14. 36. 153. 167. 177. 217. 319.

கக்ஷபுடம்:—

14 — 167 — 36 (= 217) — 14 — 165 — 36 (= 215)
ஏதது கோ மாரணம் பவேது ||

6 - விஷநாசம். (2) விலங்கு மாரணவகையின் தொகை - 6
7 - மாரணகன்மப் பிரயோக விரியின் தொகை - 14.

329. சாற்றும் விடநாசந் தாங்கிய ஐம்பதும்
ஏற்றும் அறுபத்தே ழெண்பத்து நாலாகும்
தோன்றும் வன்மிருக நாசவகை ஆறாம்
போற்றும் மாரணம் பன்னான்காய்ப் புக்கதே.

பாடபேதம்

1. விடநாகந். வன்பது - வன்பதும்.

2. ஏற்றவெண் பத்தே ழெண்பத்தி னாலாங்கு - ஏற்றெண்பத்தேழ் எண்பத்து நாலுங் - ஏற்றெண்பத்தேழுமெண்பத்து நான்குஞ் - சேற்றெண்பத்தேழு சேற்றெண்பத்தேழ் - ஏற்ற வெண்பத்தே ழெண்பத்து நாலாங்கு.

3. தேற்று வனமிருக மாரணஞ் சொல்லில் - தோற்று வன் மிருக நாசனஞ் சாற்றில் - தோன்றுவன மிருக

மாரணஞ் சொல்லில் - தோற்றிய வன்மிருக நாசனஞ் சொல்ல - தோற்றிய வனமிருக நாசஞ் சொல்லாறு - மாரணஞ் சொல்ல.

4. போற்றிய மாரணம் - ஆற்றுமாண் பதினாலாய்ப் - ஆற்று மெண்பதி னாலாய்ப்-ஆற்றுமான பதினாலாய்ப்-வாற்றுமான.

குறிப்புரை

இம்மந்திரம்; விஷமாரணத்திற்குரிய இலக்கத்தையும், விருக மரிப்பு வினையேவல் வகையின் தொகையையும், மரிப்பு. வினையேவல் விரியின் (மொத்தத்) தொகையையும் உணர்த்து கின்றது:

விடம் = விஷம் - நஞ்சு. வன்மிருகம் - வன்மை இயற்கை யடை. நாசம் - மாரணகருமம். போற்றுதல் - சொல்லுதல்.

6. விடமாரணம்:— 50 — 67 — 84 — கக்ஷபுடம்.

இலக்கவேறுபாடு

6. விஷமாரணம் - விஷநாசம் - விஷநாசனம் — விஷநாகம் – பாம்பு விஷமரிக்க - பாம்பு முதலிய விஷ ஜந்துக் களின் நாசம் - விஷத்துக்கு நாசமுண்டம்:—

50 — 67 — 84 = 201. 84 — 67 — 50 = 201.
50 — 67 — 77 = 194. 50 — 87 — 84 = 221.
50. 67. 84. 194. 221. 345.

கக்ஷபுடம்: ஸர்ப்பாதி விஷநாசம்:- 50 - 67 - 84 (= 201)

விலங்கு மாரண கன்மப் பிரயோகத்தின் வகை-6.

அவையாவன:

1. கரி மாரணம்.
2. பரி மாரணம்.
3. மறி மாரணம்.
4. எருமை மாரணம்.
5. பசு மாரணம்.
6. விடமாரணம் என்பனவாம்.

மேற்கோள்

கம்புகண்டி கலாலாபே ஷட்விதம் மிருக மாரணம்.

— ககஷபுடதந்த்ரம்.

மரிப்பு வினையேவல் விரியின் தொகை — 14 அவை முன்னர் உரைக்கப்பட்ட சத்துருமாரண கன்மப் பிரயோக வகையின் தொகை — 8-ம், மிருக மாரண கன்மப் பிரயோக வகையின் தொகை — 6ம் ஆகப் 14. ஆகும்.

மாரண வினையேவலின் விரி - 14

அவையாவன:

1. சத்துருமாரணம்.
2. கருமாரணம்.
3. குழவி மாரணம்.
4. சேனை மாரணம்.
5. மனைவி மாரணம்.
6. கண் மாரணம்
7. பகைவர் மாரணம்.
8. சத்துரு நாசம்.
9. கரி மாரணம்.
10. பரி மாரணம்.
11. மறி மாரணம்.
12. எருமை மாரணம்.
13. பசு மாரணம்.
14. விஷநாசம்.

என்பனவாம்.

இவற்றுள், 1-7-8ஆம் எண்ணிட்டுள்ள ஏவல்வினைகளின் வேறுபாடு துலங்கவில்லை. பசு - எருமை - மறி - 3ம் சேர்த்து ஒரு தொடராக முந்நிரை என்றும் உரைக்கப்படும். நிரை = பசு — எருமை - ஆடு. பசு = எருது - மிருகம் - பிராணி.

முந்நிரையும் உடையேன் அமுது ஆம் பசுத்தான்
இன்னது என — ஏல அருளிச் செயப் பெற்றால்

— பெரிய. 3713.

மந்திரம் - 39

8. மாரண கன்மப் பிரயோக மந்திரம்

ஓம் நமோ ருத்ராய அமுகம் பச பச மதமத தாடய தாடய நாசய நாசய ஓம் லோகித முகே ஸ்வாஹா । ஓம் ஹநஹந தஹதஹ ஸ்வாஹா ஓம் ‖.

பிரதி பேதம்

1. ஓம் ரம் க்லீம் க்லீம் ஸஹஸ்ர ஜ்வாலி நீ நம : க்ஷும் ஆம் க்லீம் சிவாய ஹ்ரீம் கமகம் பம் ஸம் கோபி ஜநபம் (கம்) ‖.
2. ஓம் சிவாய ஹ்ரீம் கம்கம் பம் ஸம் கோபிஜநபம் ஓம் ரம் க்லீம் க்லீம் ஸஹஸ்ர ஜ்வாலிநீ மமாம் (நம :) க்ஷேம் ஆம் க்லீம் ஓம் ‖ .
3. ஸர்வ மாரணத்தின் மந்திரம்:— ஓம் க்ஷும் க்லீம் ஸ ஹ ஸ ஹ (ஸஹஸ்ர) ஹள (ஹ்ரீம்) ஹ்ரீம் ஸ்ரீம் ஜ்வல ஜ்வல சூலிநீ நம: ஓம் ‖.
4. ஓம் ஹ்ரீம் ஹ்ரீம் அம் க்ஷும் சிவாய ஹ்ரீம் க்ரோம் (வசம் பம் சம்) கோ மாரய மாரய ஜம் க்லீம் ஸள: ஸ்வாஹா ஓம் ‖ .
5. ஓம் ரம் க்லீம் க்லீம் ஸ்வாஹா (ஸஹ) ஸ்ர ஜ்வாலிநீ மமாம் டம் ஆம் க்லீம் சிவாய ஸ்வாஹா ஹரீம் கம் கம் வம் ஸம் கோபி ஜந வம் சுவாஹா ‖.
6. மாரண மந்திரம் தியாநம்:— ஓம் ட்சிம் க்லீம் ஸஹஸ்ர பபலாநீ (ஜ்வாலிநீ) நம மாம் ஹ்ரீம் மாம் நம ஷம் அம் ஆம் க்ஷும் க்லீம் சிவாய ஹ்ரீம் கம்கம் வம்ஸம் கோபீ ஜெந வபஹாய (கோபீஜந வல்ல பாய) நமம வணே (மாரணே) கட்ட கட்டங் தாட தாடங் மர (மு) த (ம்ருத) மாரண மாரண ஜம் க்லீம் ஸ்வாஹா ‖.
7. மாரண மந்திரம்:— ஓம் ஷம் க்லீம் ஸஹஸ்ர ஜ்வா லிநி நம மாங் ஸ்ரீம் மாங் ஸ்ரீம் ஆங்கிசங் சிவாய

ஹரீம் கம்கம் பேமஸ்த கோபி செனகஸ்த ஸ்ர்பாய நகமண கடகட தாடன தாடன மிறுத்த மானாய ஐம் க்லீம் ஸெம் கம் கணபதே வர வரதே சறு(ரு) வலோக நாதா சருவ ஸ்ரீ (ஸ்த்ரீ) புருஷ வசங்க ராயா அப்பதவசமாக ஆம் ஐம் ஹ்ரீம் (க்லீம் ஸம் ஸம் (ஸெளம்) தேவ தத்தரைக் கொண்டு வருக ஈசான பெலாபாய சுவாஹம் ||.

ள சத (லட்சம்) — செபித்துத் தியானிக்க. கறுத்ததிரு மேனி காண்பது நீலம் — திருக்கை இரண்டினிற் சரபஞ்ச (சேர்பஞ்ச) பானு (பாணம்) — கருப்புச் சிலையுங் கடந் துடனேந்தி வருத் (ந்) தியழைக்கின்ற வாறிது தானே (செய்.) சக்கரம்பிற (ப்புற) வட்டத்தில் ஐங்காயம் பூசி, ராத்திரி காலத்திலே திருவிளக்கேற்றி நினைத்தகருமத்தின், படியே மண்ணாலே ரூபமெடுத்து, சக்கரத்தை விளக்கிலே வெதுப்பி, தெற்குமுக மாயிருந்து, புவனை செபம்பண்ணி. வெள்ளிக்கிழமை நாள் முதல் சாமத்தில் விடியும் வேளையில் அர்ச்சித்து, ஸ்ரீபுருஷனுக்குத் தன்மனையுள்ளே வெதுப்பி வைக்கவும். ஆனை குதிரை அரசனுக்கு ஐயன்கோயிலிலே வைக்கவும். பெலி கொடுக்கவும் கடுகு பூசவும் சுவடி — 8.

8. மிருகமாரண வகைக்கு மந்திரம்:— ஓம் க்ஷும் க்ஷும் க்லீம் ஸஹஸ்ரஜ்வாலிநீ நம : மாமத்துரும் ஹ்ரீம ஆம் க்ஷும் சிவாய ஹ்ரீம் ஆம் வம் சம் ஜோபி ஜணவே வாலஹாய (கோபீஜ நவல்லபாய) நதவே மண கட்டந கட்டந த்ரதித மாருதம் ஐம் க்லீம் ஸெளம் சுவா : ||

9. ஓம் நமோ ருத்ராய ஹமுகம் சறாஹா (சுவாஹா) | முகம்சிறா அணற்ற பசபசதி பூசய திராசய திரோடய திரோடய நாசய நாசய பசுராஞ்ஞா பல நடங் ஓம் லோகதமுகீ சுவாஹா | ஓம் அகந அகந (ஹநஹந) தெகந தெகந தஹதஹ சுவாஹா ||. ஓம் விநாயகன் திருவுள்ளம் முற்றும். சுவடி — 16.

10. பிறையே உக்கிறம் (பிரயோகசக்கரம்) 15-க்கு(?) மந்திரம்:— ஓம் ட்சீம் க்லீம் சக்கிர சுவாலி

நம:— ||. 15—க்கு ஏகமந்திரம். ஓம் ஸ்ரீயும் க்லீம் ஓம் விசற்வசுவாவரி நங்மங் றியும் (ஹ்ரீம்) அங் ஸங் (ஹம்ஸம்) சிவாய ஹ்ரீம் கங் தங் கமகமண (கம்கம்கண) கடு கடு முட்டி ஐயும் க்லீம் சுவா ஹம் ||. ஆக 6—க்கு மந்திரம் தியானம்: யிறியது யிசானு இருப்பது ஈசானம் — செய். 332. கறுப்புந் தேவதைகையிற்சூலக் கபாலம். கையில் நெருப்பாய் நினைத்து, தலையோட்டில் மசான கரியினாலே சக்கரமெழுதி சுடுகாட்டிற் புதைப்பது. ஐங்காயம் பூசி, வெதுப்பி, வேப்பம் விரையரைத்துப் பூசவும். மாரணம் முற்றும். சுவடி — 8

11. ஓம் ட்சிம் ஸஹஸ்ர பாதாய (பாஹாய) நம: ஸ்ரீம் ஹ்ரீம் ஆம் க்லீம் சிவாய ஹ்ரீம் க்கம் க்கம் ப்பம் சம் கோப ஜாக்ஷ ப்பாலாபய நக மாரண கடு தாடய ப்ராமய ஐம் க்லீம் ஸ்வாஹா ||

12. சத்துரு மிருக மாரணங்களின் மந்திரம்:— இது பிரத்யக்ஷமாகப் பைரவஸ்வ ரூபமே:

ஓம் க்லீம் ட்சிம் ஸஹஸ்ரஜ் வாலஜ்வாலிநீ நம: (ஸ்ரீ.) ஹ்ரீம் ஆம் க்லீம் சிவாய ஹ்ரீம் க்ரம க்ரம க்கம் (ஹம்) ஸம் க்ரோம் அம் க்கபலா: பயநக மாரண கட்ட கட்ட தாட தாட ப்ராம் ஐம் க்லீம் ஸ்வாஹா ||.

இம் மந்திரமானது அவ்வியாஜ பாந்தலம் என்னும் பெயரையுடையது. இதை முறையே சூலத்திடை வெளியின் நடுவில் எழுதுக.

13. சத்துருக்களுடையவும், மிருகங்களுடையவும் மாரண மந்திரம்:—

ஓம் க்லீம் ட்சீம் ஸஹஸ்ரஜ் ஜ்வாலஜ ஜ்வாலி நீநம: ஸ்ரீம் ஹ்ரீம் ஆம் க்லீம் சிவாய ஹ்ரீம் க்ரும் பம் ஸம் க்ரோம் அம் கபலா: பயநக மாரணத கட்ட தாட தாட ப்ராம் ப்ராம் ஐங் க்லீம் ஸ்வாஹா=. இந்த மந்திரமானது அவ்வியாஜ பாந்தவம் எனப்படும். இதைக் கிரமமாய் சூலத்தின் நடுவில் எழுதவும்.

14. மாரணம்:- ஓம் ட்சிம் க்லீம் ஸவ (ஸௌம்) இவால்ர் நம (ஸஹஸ்ரஜ் வாலா நம) மாட ஹ்ரீம் ஆம் க்ஷம் சிவாய ஹ்ரீம் க்ரீம் வம் ஸம் ஜோம் பிஜேநபம் வலாஹாய (கோபீஜந வல்லயபா) நம: ||.

15. சத்துருக்களுடையவும், மிருகங்களுடையவும் மாரண (மந்திர)த்தைச் சொல்லுகிறேன்;

ஓம் க்லீம் ட்சிம் ஸஹஸ்ர ஜல வாலிநீ (ஜ்வாலிநீ) நம: I ஸ்ரீம் ஹ்ரீம் ஆம் க்லீம் சிவாய ஹ்ரீம் க்ரமக்ரம வம் ஸம் க்ரீரம் (க்ரோம்) அம் கபலா: பயநக மாரணத கட்ட கட்ட தாட தாட ஜம் க்லீம் ஸ்வாஹா ||.

16. சத்ரு மிருக மாரணங்களின் மந்திரம்: 2-க்கும் ஒருவித மந்திரம்:

ஓம் க்லீம் ட்சிம் ஸஹஸ்ரஜ்வால ஜா (ஜ்வா) லிநீ நம: ஸ்ரீ. ஹ்ரீம் ஆம் க்லீம் சிவாய ஹ்ரீம் க்ரம வம் ஸம் க்ரோம் அம் கபலா: பயநக மாரணத கட்ட தாட தாட ப்ராம் ப்ராம் ஜம் க்லீம் ஸ்வாஹா ||.

17. மாரண மந்திரம்:- ஓம் ஹ்ரீம் ரம் ரம் ரம் க்கேம் க்கேம் பைரவி புவநேசுவரீ மஹாமாரிகே மாரய மாரய ரிபும் ஸ்வாஹா ஓம் ||.

18. மாரண மந்திரம்:- ஓம் ட்சிம் க்ரீம் ஸஹஸ்ர பபாலவீ (ஸஹஸ்ர ஜ்வாலிநீ) நமமாம் ஹ்ரீம் மமாம் நம ஷம் அம் ஆம் க்ஷம் க்லீம் சிவாய ஹ்ரீம் கம் கம் வம் ஸம் கோபீ ஜெநவபஹாய (வல்லபாய) நம்ம வமண கட்ட கட்டங் தாட தாடங் முத (ம்ருத) மாரண மாரண ஜம் க்லீம் ஸ்வாஹா ||.

19. ஓம் க்லீம் ட்சிம் ஸஹஸ்ர பாதாய நம: ஸ்ரீ ஹரீம் ஆம் க்லீம் சிவாய ஹ்ரீம் க்கம் க்கம் ப்பம் சம் (ப்பம சும்) கோப ஜாட்ச ப்பாலபய நக மாரண கடு தாட ப்ராமய ஜம் க்லீம் ஸ்வாஹா. ||

20. ஓம் க்லீம் ட்சிம் ஸஹஸ்ர பதாய நம: மாரணப் ஹ்ரீம் ஆம் மாரகம் சிவாய ஹ்ரீம் க்கம் க்கம் ப்பம் சம்

கோப ஜாக்ஷப்பாலா பநக்கம் மாரணம் கடு கடு தாடய தாடய ப்ராமய ப்ராமய ஐம் க்லீம் ஸ்வாஹா.||

21. ஓம் க்லீம் ட்சிம் ஸஹஸ்ர ஜ்வாலஜ் ஜ்வாலிநீ நம: ஸ்ரீ ஹ்ரீம் ஆம் க்லீம் சிவாய ஹ்ரீம் க்ரம க்ரம க்கம் ஸம் க்ரோம் அம் க்க பலா: பயநக மாரண கட்ட கட்ட தாட தாட ப்ராம் ப்ராம் ஐம் க்லீம் ஸ்வாஹா ||.

22. ஓம் க்லீம் ட்சிம் ஸஹஸ்ர ஜ்வால ஜ்வாலிநீ நம: ஸ்ரீம் ஹ்ரீம் ஆம் க்லீம் சிவாய ஹ்ரீம் க்ரம க்ரம க்கம் ஸம் க்ரோம் அம் க்கபலா: பயநக மாரண கட்ட கட்ட தாட தாட ப்ராம் ப்ராம் ஐம் க்லீம் ஸ்வாஹா ||.

23. ஓம் க்லீம் ட்சிம் ஸஹஸ்ர ஜ்வால ஜ்வாலிநீ நம: ஸ்ரீ• ஹ்ரீம் ஆம் க்லீம் சிவாய ஹ்ரீம் க்ரம க்ரம க்கம் ஸம் க்ரோம் அம் கபலாபய நகம் மாரணம் மாரணம் (மாரய மாரய) கட்ட கட்ட தாட தாட (தாடய தாடய) ப்ராமய ப்ராமய ஐம் க்லீம் ஸ்வாஹா ||.

சத்ரு, விலங்குகள் ஆகியவற்றின் மாரண கன்மத்திற்குரிய இம்மந்திரமானது கண்கூடாக வைரவக் கடவுளின் சொரூபமே யாகும். அவ்வியாஜ பாந்தவம் என்னும் பெயரினையுடைய இம்மந்திரத்தை முறையே சூலத்தின் நடுவில் வரைக.

24. மாரணங்களுக்கு மந்திரம் :-

ஓம் க்ஷம் க்ஷம் க்லீம் ஸஹஹ (ஸ ஹ ஸ் ர) ஸ்ரீ ஜ்வாலிநீ நமஹா மாமயிரும் ஹ்ரீம் ஆம் க்ஷம் சிவாய ஹ்ரீம் க்றம் (க்ரோம்) வம் ஸம் ஜேம்பீ ஜேணவே வாலஹாயந்த வெமண கட்டணத்ரு தித மாருதம் ஐம் க்லீம் ஸௌம் சுவாஹா ||.

குறிப்புரை

இம் மந்திரம் ; வகையான் 2 – ஆகவும், விரியான் 14 – ஆகவும் உள்ள மாரண கன்மப் பிரயோகட்கு உரிய மந்திர

மாகும். இதற்கு அதி தெய்வம் வீரபத்திரக் கடவுள் – வைரவர். இதன் தந்திரம் வரும் மந்திரத்துட் சொல்லப்படும்.

மேற்கோள்

சத்ரு ம்ருகயோர் மாரண மந்த்ர:

சத்ரோ ம்ருகஸ்யச சிவே சுருணு மந்த்ரந்து மாரண மந்த்ரம் । ஏகம்வராரோஹே ஸாட்சாத் பைரவாத்மகம்॥
ப்ரணவம் க்லீம் புந: ட்சிஞ்ச ஸஹஸ்ர பதமுத்தரேது । நம: பதம் புநர் மார்ணம் மாயாம் பாசாந்து மாரகம்॥ சிவாயச புநர் மாயாம் க்கபீஜத்துவய முத்தரேது ।
ப்பம் சம் பதம் கோபஜாக்ஷப் பாலா பநகம் பதம் ॥
ததச்ச மாரண பதம் கடுத்து வந்துவ முதாஹரேது ।
தாடயப்ராமய த்வந்த்வம் வாக்பவம் காமராஜகம் ॥.
ஹவ்ய வாஹந வதூ பேதம் ஸாக்ஷா தவ்யாஜ பாட (பாந்த) வம் ।

ஓம் க்லீம் ட்சீம் ஸஹஸ்ர பாதாய நம: ஸ்ரீம் ஹ்ரீம் ஆம் க்லீம் சிவாய ॥.

ஹ்ரீம் க்கம் க்கம் ப்பம் சம் கோபஜாக்ஷ ப்பாலாபய நக மாரணம் ।

கடு தாடய ப்ராமய ஐம் க்லீம் ஸ்வாஹா ॥
மந்த்ர மேதம்ஸாம மார்க்காத் சூலகர்ப்பேசு ஸம் விகேது ॥.
கக்ஷபுடதந்த்ரம்.

சத்ரோ ர்மந்த்ரஸ்ய சசிவே சுருணு மந்த்ரந்து மாரணம் மந்த்ரமேகம்।

வராரோ ஹேஸாட்சிச் ஸ்ரீ பைரவாத்மகம் ॥.
ப்ரவணம் க்லீம் புந: ட்சிஞ்ச ஸஹஸ்ர பதமுத்தரேது ।
ஜ்வாஜ்ஜல பதம் ப்ரோக்த்வா பாலிநீ பதமுத்த ரேது ॥
நம: பத புநர் மார்ணம் மாயாம் பாசாந்து மாரகம் ।
சிவாயச புநர் மாயாம் க்ரமயுக்மம் ஸமுத்தரேது ॥.
க்கம்ஸம் பதம் க்ரோவீ பதம் உத்தரேத் சிருஷ்டி பீஜ (க) ம்।
புநச்ச கபலா : ப்ரோச்ய ததோ பய நகம் பதம் ॥.
ததோ மாரணத் வந்த்வஞ் சோக்த்வா கட்டத் வந்த்வமுதாஹரேது ।

தாடயுக்மம் ப்ராமயாயுக்மம் வாக்பவம் காமராஜகம் ॥.
ஹவ்ய வாஹ்ந வதுரபேதம் ஸாக்ஷா தவ்யாஜ பாந்நவம் ।
மந்த்ரமேதம் ஸாம மார்க்கச் சூலகர்ப் பேசு ஸம்ஸிகேது ॥.

இதுகாறும் கூறிவந்த முறைமையின்படி இம் மந்திரத்துக்குத் தோற்றுவாய் காணப்படவில்லை. ஆயினும் இம் மந்திரம் ஈண்டு இருத்தல் இன்றியமையாததாகும். வருஞ் செய்யுளில் புக்கவாறெல்லாம் பொருந்திய மந்திரம் என்று இம்மந்திரத்தை அநுவதித் (வழிமொழிந்) துக் கூறியிருத்தலும் நோக்கத்தக்கதாகும்.

இம்மந்திரங்களிற் பலவாறாகப் பயின்று வந்துள்ள கடு கடு கடு - கட்ட கட்ட கட்ட - கட கட - என்றற் றொடக்கத்தன சிதைந்த தமிழாகிய பாகதச் சொற்களாகும்.

8 - மாரண கரும மந்திரத்தின் தந்திரம்.

330. புக்கவா றெல்லாம் பொருந்திய மந்திரம்
தக்கவா றெல்லாம் உரைக்குந் தலையோட்டில்
ஒக்க மயானக் கரியால் தோட்டெழுதிச்
சிக்கெ னச்சுடு காட்டிற்சே ரிராவே.

பாடபேதம்

1. புக்கவற் றெல்லாம் - புக்கவர்ரெல்லாம் - புக்கவ ரெல்லாம்.

2. தக்கவற் .றெல்லாம் - தக்கவரெல்லாம் - தலையோட்டின் - ஓட்டி.

3. யொக்க – லொக்க. மயானைக்கரி – ஒக்கயானைக்கரி கரியுரைத்தோட்டெழுதிச் – தோடெழுதி. ஒக்கு மசானக் கரையில்.

4. சுடுகட்டிற் (சிக்கெனக்காட்டிற்). சேருமிராவிலே - சேருமிராவே – சேரிராவே.

குறிப்புரை

இம்மந்திரம்; மரிப்புவினையேவலுக்குரிய மந்திரத்தை, இயந்திரத்தில் வரையுந் தந்திரத்தினை யுணர்த்துகின்றது.

மந்திரம் – மேலே சொல்லப்பட்ட மாரணகன்மப் பிரயோக மந்திரம். தலை ஓடு – மாண்டாரின் மண்டை ஓடு. மயானம் – சுடுகாடு. தோடு – பனையோலை. இரும்பனம் போந்தைத்தோடும் – பொருந. 143. தக்கவாறு – ஏற்ற பெற்றியாக. கரி – ஈமவிறகி (சிதையின்)ன் கரி. ஓடு – மண்டையோடு. என்னோட்டெழுத்தோவிது – பாரத வெண். வாசுதேவன் தூது. 16. மண்ணோட்டினை நீக்கு தற்குத்தலையோடு என்றார். சிக்கென = உறுதியாக – விரைவாக. சிக்கெனப் பிடித்தேன் -திருவாசகம். 539. அக்கமுங்காசுஞ். சிக்கெனத்தேடு – கொன்றைவேந்தன்.

இரவில் இடுகாட்டிற் சென்று மண்டையோட்டிலேனும் பனை ஓலையிலேனும் ஏற்ற பெற்றியாக இம்மந்திரத்தை ஈமச்சிதையின் கரியால் முறைப்படி வரைந்து விதிப்படி வழிபடுக என்பதாம். இக்கன்மத்துக்குச் சிறப்புடைமை பற்றி ஓட்டினை முற்கூறினார்.

மேற்கோள் – ஒப்புமைப் பகுதி

உச்சியம் போதில் ஒளிவன்னி மூலையிற்
பச்சோலையிற் பஞ்ச காயத்தைப் பாரித்து
முச்சது ரத்தின் முதுகாட்டில் வைத்திட
அச்சமற மேலோர் மாரணம் வேண்டிலே!

— திருமந்திரம். 1000

கடைக் கொள்ளி வாங்கி மசித்து மையை - விள்ளி எழுதி

— திருமுறை 11 .2:2

தலையோடு, மரப்பலகை, பட்டாடை. பூர்ஜபத்திரம், நாக பத்திரம் ஆகிய இவற்றுள் ஒன்றிலே இயந்திர மந்திரங்களை மயானக் கரியால் எழுதி ஏற்ற இடத்தில் வைத்திடுக

— கக்ஷபுடதந்திரம்.

தலையோட்டில் மசான கரியினாலே சக்கரமெழுதி சுடுகாட்டிற் புதைப்பது. ஐங்காயம் பூசி வெதுப்பி வேப்பம் விரையரைத்துப் பூசவும். மாரணம் முற்றும். நட்சத்திர பீசம். அ. ப. கா. ரோ பூ. உ. ரே.

ஆ (க) உயிள-க்கு என்பதாம். வட்டத்தில் உ. தர்ப்பணத்துக்கு மந்திரம்:- ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் ஸ்ரீம் அறிறீயும் (ஹ்ரீயும்) ஓம் அறிறீயும் (ஹ்ரீம்) புவனாபதியே நம: || எந்திர ராசே! எந்திர ராசே! எந்திராணீ! எந்திராணீ! ஓம் இ(எ)ந்திரப் பிராணாய சிவாஹா (சுவாஹா) எந்திரப் பிராணாய சிவாஹம் (ஸ்வாஹா) உ.

துபிஷேறணாயா சிவாஹம் (ஸ்வாஹா). உ அன்பத்தோரட்சரமறியவும்: அ – ஆ அம் அ. க ... ங. ச ... ஞ. ட ... ண. த ... ந. ப. ... ம. ய. ர. ல. வ. ஷ. ஸ. ஹ. ள. க்ஷ. உ புவனேசுவரி சதகம் முற்றும். — சுவடி. 8.

இதுவும் அது

331. இராவெட்டு சாமம் ஈசான திக்கிலே
பராவிய பேய்கள் கணங்கள் பசாசு
குரோதிகள் ஆயுக் குறையவேன் றேத்திப்
புரோகித னோடும் பொருந்தி இருக்கவே

பாடபேதம்

1. வெட்டுச்சாமம் – வெட்டு நாளும் ஈசானத் ஈசாந திக்கில். திக்கிற்.
2. பிராவிய - பிறாவிய – விராவிய– பிசாசு கணங்கட்குக் - பிசாசு கணங்கள் - கணங்கள் பசாசுக் – பிசாசு கணங்கட் – பேய்கள்பசாசுகணங்கள் – பிராவிட்ட பேய்கள் பிசாசு - கணங்களுக்கு.
3. நோயு குறைய வென்றிப் — றேற்றிப் — றெற்றிப் — றெறிப் — (றெண்ணிப்).
4. புரோகிதனோடு — புரோகிதரோடு.

குறிப்புரை

இம்மந்திரம்: மாரண கன்மப் பிரயோகத்திற்குரிய தந்திரத்தை உணர்த்துகின்றது.

சாமம் = யாமம் — இரவு (பிங்) — நள்ளிரவு. ஈசான திக்கு — வடகிழக்கு. பராவிய = பரவியுள்ள — சூழ்ந்துள்ள. கணங்கள் — பூதகணங்கள். (1) பேய்க்கணம். (2) பூதகணம் (3) பசாசகணம். இவை 3- ம் 18- க்கணங்களில் உள்ளனவற்றி னின்றும் வேறானவை. கணம் = இனம் — கூட்டம். குரோதம் = செற்றம் — பகைமை. குரோதிகள் - பகைவர். ஆயு = ஆயுள் — ஆயுசு — வாழ்நாள். புரோகிதன் = தந்திர — சடங்கு வினைகளைப்புரியும் ஆசிரியன் — தந்திரகலைவல்லோன். இரா இரவு.

இந்த மரிப்புவினையேவலைப் புரோகிதனோடு பொருந்தி நள்ளிரவில் மயானத்தில் வடகிழக்குத் திசையிலிருந்து இறைவியைத் தியானித்து, பகைவரின் வாணாள் அழிக என்று சங்கற்பித்து வழிபாடு செய்க என்பதாம்.

மேற்கோள்

பேய்க்கணஞ் சூழச் சூழ.. ஆடும் இடந்திருவாலங்காடே.
—திருமுறை —11 2: 8.

பூதங் காப்பப் பொலிகளந் தழீஇ — புறநா. 369 : 17.
கூனும் பசாசு குறட் பேய்க்கு — (135).
மாயன வாசினி (காடு கிழாள்) ஆகிய துர்க்கா பரமேசுவரியை பேய்க்கணம், பூதகணம், பசாசகணங்கள் சூழ்ந்து பராவி நிற்பனவாகும். — தக்க 51. 54. 55. 80
மந்திரானுட்டானம் புரிதல், வேதங்கள் எல்லாவற்றையும் ஓதி உணர்தல், கன்மங்களை விரைந்து செய்யும் ஆற்றல் பொறி யடக்கம், காமவெகுளி மயக்கலோப மோக முதலிய குற்றங் களின்மை ... சாபா நுக்கிரக ஆற்றல் ஆகிய இவைகள் யாவும் அமையப் பெற்றவனே புரோகிதனாவான்
— சுக்கிரநீதி. 2:78-80.

ஆரபேதர்த்த ராத்ரேது ஸமாபநமதாபிவா ॥ இந்த மரிப்பு

வினையேவலின் தந்திரத்தினை நள்ளிரவில் தொடங்குதல் வேண்டும். அல்லது முடித்தல் வேண்டும்—கக்ஷபுடதந்த்ரம். என்பனவும் ஈண்டு நோக்கத்தக்கன.

பேய், பூத, பசாச கணங்கள் சுடலையில் இறைவனைச் சூழ்ந்து ஆடிப் பாடிப் பராவி நிற்குமாற்றைக் காரைக் காற்பேயார் அருளிய மூத்த திருப்பதிகங்களிற் கண்டு கொள்க.

8 – மாரண கன்மப் பிரயோகத்திற்குரிய திக்கும், தியானத் திருவுருவமும்

332. இருப்பது ஈசானத் திக்கினை நோக்கி
ஒருப்படு மேனி யுருக்கறுப் பாகும்
தரிப்பது சூல கபாலங் கைகளில்
நெருப்பது நயனம் நினைந்துகொள் நீயே.

பாடபேதம்

1. இருப்பது வீசானத் — இருப்பதீ சானத் — இருப்பது ஈசான. திக்கிலே.

2. ஒருப்பட்டு — ஒருபட்ட — உருப்பட. உறவு கறுப்ப தாம் — உறுக் கறுப்பாகந் — கறுப்பாகத். ஒறுப்படு மெ(ண்)ணி உருவு கருப்பதுத்.

3. கபாலந்தான் — கபாலங்கள். கையீல்.

4. நெருப்பு நயனம். நீ நினைந்து கொள்ளே — நினைத் துக் கொள் நீயே — நினைந்து கொள்வாயே — கொள்ளுநீயே — கொள்ளுவாயே.

குறிப்புரை

இம்மந்திரம்; மரிப்பு வினையேவலுக்குரிய திசையையும், இறைவியின் சொருபத்தியான முறைமையையும் உணர்த்து கின்றது.

ஈசானதிக்கு - வடகிழக்காகிய கோணத்திசை. ஒருப்படு = ஒருப்பாடு - உள்ளம் ஒன்றுபடுகை. மேனி = திருமேனி - திரு



மாரண கன்மத் தியானத் திருவுருவம்

செய்யுள்: 332

வுருவம். மெய்யம்மையே திருமேனி வழிபடா நிற்க - முப்போதுந் திருமேனி தீண்டுவார் - தேவாரம். 7619. 2626. உரு=குரு - நிறம். வினைபயன் மெய் உரு என்ற நான்கே - தொல். 1222. கருப்பு = கருமை - கருநிறம். கருப்புஞ் சிவப்பும் வெகுளிப் பொருள - நிறத்துரு உணர்த்தற்கும் உரிய என்ப - தொல். 855 - 56. தரிப்பு=தரித்தல் - ஏந்துதல். சூலம் - முத்தலைப் படைக் கலம். வடிவேறு திரிசூலம் தோன்றுந் தோன்றும் - தேவாரம். 6422; பிறை முடிக் கண்ணிப் பெரியோன் ஏந்திய - அறைவாய்ச் சூலத்து அருநெறி கவர்க்கும் - சிலப். 11. 72 - 73. கபாலம் - தலையோடு (திவா). நெருப்பது - நெருப்பு. நயனம் - கண். நெருப்பு நயனம் - நெற்றிக்கண் நினைந்து கொள் - தியானிப் பாயாக.

மாரண கன்மத்திற்கேற்ற திசை வடகிழக்கு ஆகும் தியானம்: கருமை நிறத்தையும் சூலமும் கபாலமும் பொருந்திய கைகளையும், நெற்றிற் பொருந்திய செந்தீக் கண்ணையும் உடையவராக இறைவியை தியானிக்க என்பதாம்.

சூலம், கபாலம் ஆகியவை இரண்டும் முறையே வலக் கரத்தும், இடக் கரத்தும் உள்ளன என்க.

மேற்கோள் - ஒப்புமைப் பகுதி

இந்த மரிப்பு வினையேவலில் வடகிழக்கு முகமாயேனும், தென்மேற்கு முகமாயேனும் முறைப்படியிருந்து மந்திர தந்திர யந்திர பூசை முதலியனவற்றை விதிப்படி செய்தல் வேண்டும். காரிநாளும், காரிஓரையும் நள்ளிரவும், முதுகாடும் இக்கன்மத் திற்குச் சிறந்த காலமும் இடமும் ஆகும் ||.

தியானம்: எல்லாப் புவனங்கட்கும் அன்னையாயும், கருணைக்கு இருப்பிடமாயும், உலகினை இயக்குபவராயும், உலக்கை கலப்பை தலையோடு சூலம் ஆகியவற்றைத் தாங்கிய 4-திருக்கைகளையும் மாற்றாருடைய குடர்மாலையைக் கவ்விய வாயையும் உடையவராய் புவனையைத் தியானித்தல் வேண்டும்.

நீல மலைக்கு ஒப்பான ஒளி, குகைபோன்ற வயிறு, மாற்றாரை மென்று தின்னும் வாய், மின்னல் முடி, கனற்

கண்கள், தலையோடுகளால் ஆகிய மாலையை அணிந்துள்ள மார்பு ஆகியவற்றைப் பொருந்தியிருப்பவராகத் தியானித்துத் தொடங்குக ||.

வரம்பு மீறியவர்களாய்ப் பெரிதும் ஒறுக்கத்தக்க கொடியவர்களின் விஷயத்தில்தான் இந்த மாரண கன்மப் பிரயோகத்தைச் செய்தல் வேண்டும். இங்கனம் செய்யின் தப்பாது சித்திக்கும் ||. — ககஷபுடதந்திரம்.

கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனோடு நேர்.

அரசன், கொடியவர்களைக் கொலையான் ஒறுத்துத் தக்கோரைக் காத்தல், உழவன் களையைக் களைந்து பைங்கூழைக் காத்ததனோடு ஒக்கும் என்றவாறு.

கொடியவர் - என்றது, தீக்கொளுவுவார், நஞ்சிடுவார் கருவிற் கொல்வார், கள்வர், ஆறலைப்பார், சூறைகொள்வார், பிறனில் விழைவார் என்றிவர் முதலாயினாரை - திருக்குறள். 550. பரிமேல்.

கருவினஞ் சாதி தம்மால் காமரார் உயிரைக் கொள்வோர்
வெருவரச் சூறை கொள்வோர் மேவியா றலைப்போர் கள்வர்
உருவளர் பிறனில் வேட்போர் உவர்முத லோரைக் கோறல்
பருவரு பாவம் அன்று பயிர்க்களை களைதல் போலாம்.
— விநாயகபு.

தீயன் வந்த போது சுடுதியால் தீமையோரை
நஞ்சம் அன்ன வரைநலிந் தால் அது
வஞ்சம் அன்று மனுவழக் காதலால் - கிட்கிந்தை. 5.

என்பனவும் ஈண்டுக் கருத்தத் தக்கன.

ஆக எண்வினை யேவல்களின் மொத்தத்தொகை - 323.
மந்திரங்களின் மொத்தத் தொகை - 39.

3 - ஆம் தந்திரம்: பொதுவியல்
16 - ஆம் அதிகாரம் தந்திரப் பொது.
எண் வினையேவல்கள்.

333. கொள்ளும் வசியமுங் கூறிய மோகனம்
தள்ளிய தம்பனம் தாங்கும் உச் சாடணம்
அள்ளிய வாரானை ஆனவித் தேடணை
துள்ளிய பேதனம் தொன்மா ரணமே

பாடபேதம்

1. வசியங்.
2. உச்சாடனங்
3. எள்ளிய வாகருணை - வாகருனை - வாரனை - வரானை - வானை. வித்தேடனை - விரேடனை.
4. தோன்று மாரணமே - தோன்றியமா - பேதந் தோன்றுமா.

குறிப்புரை

இம்மந்திரம்; இதுகாறும் சொல்லப்பட்ட எண்வினை யேவல்களின் பெயர்களைத் தொகுத்து உணர்த்துகின்றது.

கொள்ளுதல் - மேற்கோடல். தள்ளல் - தடுத்தல். தாங்கு = தாக்கு - விரைவு - வேகம். அள்ளுதல் = செறிதல் (திவா) - நெருங்குதல். (சிவக. 614) வாரானை = வருகை - வரவழைத்தல் - ஆகர்ஷணம். மாற்றரிய முத்தமே வாரானை - வச்சணந்தி. செய். 8. வித்தேடணை = வித்வேஷணம் - பகைப்பு வினை. துள்ளிய - மிக்க. துள்ளுதல் - மிகுதல்; அறிஞர்கள் மகிழ்ச்சி துள்ள - திருவானைக்காப். நைமிசப். 28. எண்வினையேவல்களின் வகைகளுள், தொகையான் மிக்கது இந்தப்பேதன கன்மமாகலான் துள்ளிய பேதனம் என்றார். பேதனவினை விரிவின் தொகை - 126. ஆதல் கண்டு கொள்க. தொன்மை - பழமை.

இந்நூலிற் கிளந்து கூறுவதற்காக மேற்கொள்ளப்பட்டவை: (1) வசியம் (2) மோகனம் (3) தம்பனம் (4) உச்சாடணம்

(5) ஆகர்ஷணம் (6) வித்வேஷணம் (7) பேதனம் (8) மாரணம் என்னும் பெயரினையுடைய எண்வகை வினைகள் என்பதாம்.

முன்னர் உரைக்கப்பட்டனவாகிய மந்திரங்கட்கும், யந்திரங் கட்கும், அட்டகன்மத் தந்திரங்கட்கும் பொதுவாயுள்ள பொருள்களைப் பற்றிக் கூறப்படுதலினாலே இது பொதுவியல் எனப் பெயர் பெற்றது.

எண் வினையேவல் விரியின் தொகை — 320

334. மாரண மீறாய் வசிய முதலான
காரண கன்மங் கலந்த வகையெட்டுந்
தோரண மாகத் தொகையொற்றிப் பார்த்திட
ஏரண முந்நூற் றிருபதாய்ச் சார்ந்ததே.

பாடபேதம்

1. முதலாய - முதலாங்.
2. தாரண கன்மங் - காரண முன்னூற்றிருபதாய்ச் சார்ந்ததே. எட்டு - எட்டுக்குந்.
3. தோரணையாகத் தொகை யேற்றிப் - யெற்றிப். பார்த்திடிற்.
4. யேரண - வேரண-றா (ர) ணை - றாரணை. முன்னூற் றிருபான்.

குறிப்புரை

இம் மந்திரம்; இந்நூலுள் இதுகாறும் எடுத்துச் சொல் லப்பட்டனவாயுள்ள எண்வகை வினையேவல் விரியின் தொகையினை உணர்த்தின்றது.

ஈறு — முடிவு. ஈறாய் முதலான - என்றது அந்தாதி - அந்தம் ஆதியாக இயைந்து நிற்கும் மங்கல வழக்குப் பற்றி. ஈறாய் முதல் ஒன்றாய் எட்டுத் திசை தானாய் — வேறா யுடனானான் - தேவாரம். 109. அந்தம் ஆதி என்மனார்

புலவர் - சிவ – போ. 1. வசியம் முதலாய், மாரணம் முடிவா கச்சொல்லப்பட்டுள்ள எண் வகைக் கன்மங்கள் என்க.

காரணம் = கருவி - நோக்கம். கன்மம் = கருமம் – செய் தொழில் – தந்திரம். தோரணம் = தோரணை - தோராயம் - முறை - ஒழுங்கு – உத்தேசம். தொகை = கூட்டுத் தொகை - பெருக்கம் விரிவு. ஒற்றி = சேர்த்து – எண்ணி. ஒற்றுதல் = தீர்மானித்தல் – முடித்தல். நாள் ஒற்றித் தேய்ந்த விரல் – திருக்குறள். 1261. ஒன்று நினைந்து ஒற்றி – அகநானூறு. 5: 20

பாடபேதம்

ஏற்றி = கூட்டி – பெருக்கி. எற்றி = எண்ணி. எற்றுதல் - எண்ணுதல். எற்றம் நினைவுந் துணிவும் ஆகும் – தொல். 820 ஏரணம் = எண் – இலக்கம் – கணக்கு. ஏரணங் காண் என்பர் எண்ணர். ஏரணம் உருவம் யோகம் இசைக் கணக்கிரதஞ் சாலந் – தாரணம் மறமே சந்தம் தம்பம் நீர் நிலம் உலோகம் - மாரணம் பொருளென்றின்ன மான நூல் யாவும்வாரி – வாரணங் கொண்ட தந்தோ வழி வழிப் பெயரும் மாள — முதுஞ் செய்யுட்கள்.

பாடபேதம்

தாரணை = உறுதி – நிலைத்திருக்கை.

வசிய கன்மம் முதலாக மாரணகன்மம் முடிவாக வுள்ள எண் வினையேவல்களின் மொத்தத் தொகை – 320 என்பதாம்.

மேற்கோள்

விம் சோத்தர திரிசதக பிரயோக விதிரீரிதா l

இந்நூலில் 320 - வகையான வினையேவல்கள் சொல்லப் பட்டுள்ளன.

— கக்ஷபுடதந்த்ரம்.

திரிம் சோத்தர திரிசதக பிரயோக விதிரீரிதா ||
ஸர்வே விம்சதி சதத்ரயம் சுலோகா: ||

— ஸஹஸ்ர நாமம்.

என்பனவும் கண்டு நோக்கத் தக்கன,

என் வினையேவல்களின் மொத்தத் தொகை - 320.

1. வசியம்.	வகை–6.	விரி. 6
2. மோகனம்	– 5.	– 5
3. தம்பனம்	– 7.	– 47
4. உச்சாடனம்	– 8.	– 73
5. ஆகர்ஷணம்	– 7.	– 31
6. வித்வேஷணம்	– 3.	– 21
7. பேதனம்	– 7.	– 126
8. மாரணம்	- 2.	- 14

ஆகத் தொகை — 8. வகை — 45. விரியின் தொகை – 323.

நிறைவு பெற்று முடிந்து – முற்றி நிற்கும் தலைமை எண்ணாம் சிறப்புப் பற்றி முந்நூற்றிருபதாய்ச் சார்ந்ததே – என்றார். திருமந்திரம் – 300–3000. என்னுந் தொகைப் பெயர்களுக்கும் இங்ஙனமே கொள்க.

17-ஆம் அதிகாரம் - தியானப் பொது.

என்வினையேவல் இயந்திரமும், சொருபத்தியானமும்.

335. சார்ந்த இலக்கமும் சாற்றிய வீசமும்
சேர்ந்த வெழுத்தும் செறிந்தவிச் சக்கரம்
ஆர்ந்த புவனை அறியுந் திருமேனி
ஓர்ந்தங் கிருப்ப துரைக்கலு மாமே.

பாடபேதம்

1. சாத்திய - சத்திய. பீசமும் - விசாமும் - பீஜமும் - விசாரமும் - ராசியும்.
2. சேர்ந்தெழுபத்துஞ் - சேர்ந்தெழுபத்துஞ் - சேர்ந்த வெழுபத்துஞ் - சேர்ந்தறுபத்தும் - சேர்ந்தறுபத்துஞ். சேர்ந்தவிச் - சேரிந்தவிச்,
3. புவனையை,

4. ஓர்ந்தாங்கிருப்ப - ஓர்ந்தங்கிருப்பது உரைக்கவு * துரைக்கவு.

முடிவு: சக்கரம் 70-ம் தெரிய வேண்டும். (?)

குறிப்புரை

இம்மந்திரம்; இதுகாறும் எடுத்துரைக்கப்பட்ட எண் வினையேவல்கட்கும் உரிய இயந்திரத்தின் இயல்பினையும் அவற்றிற்குரிய இறைவியின் திருவுருவத் தியானத்திற்குத் தோற்றுவாயையும் உணர்த்துகின்றது.

இலக்கம் - எண்வினையேவல்கட்கும் ஏற்றனவாக முன்னர்க் கிளந்து கூறப்பட்ட எண்கள். வீசம் = பீசம் - வித்தெழுத்துக்கள் - பீஜாக்ஷரம். எழுத்து - எழுத்துக்களானியன்ற ஏனைய மந்திர எழுத்துக்கள். சக்கரம் - புவனாபதி சக்கரம். ஆர்தல் - தங்குதல் (திவாகரம்). ஓர்தல் = ஓர்த்தல் - நினைத்தல் - தியானிததல். அந்தணர் வேள்வி ஓர்க்கும்மே ஒருமுகம் - திருமுருகு. 96. செறிதல் - நெருங்குதல். திருமேனி - திருவுருவம். மேல் அடுத்த இலக்கமும் அக்கரந்தானும் - அடுத்திடு வீசம் அறை பதினாறும் - இனிச் சொல்லுவோமே (-செய். 3) என்றும், நல்லதோர் வீசமும் நாடும் இலக்கமும் - சொல்லுங் கிரியையும் சூழ் மந்திரங்களும் (செய். 4) என்றும் நிறுத்த முறையானே, இதுகாறும் எண் வினையேவல்கட்கும் உரிய எண்ணும், எழுத்தும், பீசமும், தந்திரமும், மந்திரமும், யந்திரமும் ஆகியவற்றை எடுத்துக்கூறி முடித்த ஆசிரியர் திருமூலதேவர் அவற்றிற்குரிய இறைவியின் சொரூபத்தியானங்களை அடுத்து வருந்திருமந்திரங்களில் உரைக் கின்றார்.

எண்வினையேவல்கட்கும் உரிய இறைவியின் சொருபத்தியானம்:- நிறம்.

336. உரைக்கில் வசியம் ஒளிதிகழ் செம்மை
புரைக்கினு மோகனம் பொன்னிற மாகும்
நிரைக்கிலுந் தம்பனம் நீண்டவிப் பச்சை
யூரைக்கில்உச் சாடனம் ஓர் பஞ்ச வண்ணமே.

பாட பேதம்

1. உரைக்கலும் - உரைக்கவும் - உரைக்கிலும் - உரைக்கும்.

2. புரைக்கவு - உரைக்கினு - உரைக்கிலு - உரைக்கவு - உரைக்கலு - உரைக்கிலும்.

3. நிரைக்கலுந் - நிரைக்கவுந் - நிரைகினுந்.

4. உரைக்கு முச்சாடண மஞ்சுவகையே. வர்ணமே - வன்னமே.

குறிப்புரை

இம்மந்திரம்:- வசியம், மோகனம், தம்பனம், உச்சாடனம் ஆகிய இக்கன்மங்கட்குரிய இறைவி திருமேனியின் நிறங்களை உணர்த்துகின்றது.

திகழ்தல் - விளங்குதல். புரை = உயர்வு - மறைப்பு - மயக்கம், நிரை = வரிசை - முறை. பஞ்சவண்ணம் - ஐவண்ணம். அவை: (1) பொன்மை, (2) வெண்மை, (3) செம்மை, (4) கருமை, (5) பசுமை, ஆகிய ஐம் பூதங்களின் நிறங்களாகும். வண்ணம் = வர்ணம்-நிறம். ஐவணமாம் பகழியுடை அடல்மதனன்-தேவராம்.

(1) வசியம்: காணுந் திருமேனி செம்மைசெம் பட்டுடை-67.
(2) மோகனம்: வடிவிலே பொன்மை வகுத்த. தியானமே.-76.
(3) தம்பனம்; ஒளி பெற்ற சத்திதான் ஓவியம் பச்சை - 127
(4) உச்சாடனம்: தாமாந்தியனமும் சத்திநிறஞ் சித்திரம்.-186

என்று முன்னர்க் கூறியிருந்தலையும் ஈண்டு நினைவு கூர்க.

இறைவியின் திருவுருவத்தை வசியகன்மப் பிரயோகத்திற் செந்நிறமாகவும், மோகன கன்மப் பிரயோகத்திற் பொன்னிறமாகவும், தம்பனகன்மப் பிரயோகத்திற் பச்சை நிறமாகவும், உச்சாடன கன்மப் பிரயோகத்திற் சித்திர வர்ணமாகவும் தியானிக்க என்பதாம்.

சித்திர வர்ணம் - பஞ்ச வர்ணம். சித்திரம் - பலவித நிறம். பஞ்சவர்ணக்கிளி-பஞ்சகல்யாணிக் குதிரை - பஞ்சவர்ண

நாதர் (மூக்கிச் சரம் 'உறையூர் இறைவன் திருநாமம்) என்பன் வும் அறிக. ஏனைய கன்மங்களுக்குரிய திருமேனியின் நிறம் வரும் மந்திரத்திற் சொல்லப்படும்.

இதுவும் அது

337. வண்ணங் கருணைக்கு வாய்த்தநிறம் நீலம்
திண்ணவித் தேடணை சேர்ந்த பவளமாம்
பண்ணின்ற பேதனம் பார்க்கிற் பளிங்கொக்கும்
உண்ணின்ற மாரணம் ஓதுங் கறுப்பே,

பாடபேதம்

1. வன்னம். வாய்ந்தநிறம் — வாய்த்தமணிநீலந் — வாய்ந்தமணிநீலந்
2. வித்தேடனை. [செய்ய].
3. பண்ணினற் பேதனம் — பண்ணினாற் பேதனம் — பண்ணினார் பேதனம்.
4. உண்ணிறை — முன்னின்ற. கருப்பதே — கறுப்பதே.

குறிப்புரை

இம்மந்திரம்; ஆகர்ஷணம், வித்வேஷணம், பேதனம், மாரணம் ஆகிய இக்கருமங்கட்குரிய இறைவி திருவுருவத்தின் நிறங்களை உணர்த்துகின்றது.

வண்ணம் = வர்ணம் — நிறம். கருணை — ஆகர்ஷண கன்மம். திண்மை — வலிமை. வித்தேடணை — வித்வேஷண கன்மம். பவளம் — பவளத்தின் நிறத்தை ஒத்த செம்மை நிறம். பண்ணுதல் — செய்தல். பேதனம் பேதனகன்மம் - பளிங்கு - பளிங்கின் நிறத்தை ஒத்த வெண்மை. மாரணம் மாரணகன்மம்.

5. ஆகர்ஷணம்: கருத்துந் திருமேனி காண்பது நீலம் - 217
6. வித்வேஷணம்: நாடுந்திசையங்கி நன்மேனிதான் அங்கி — 242

7. பேதனம்: வெளிப்பட்ட மேனியும் வெண்மைய
தாகும் — 320.

8. மாரணம்: ஒருப்படு மேனி யுருக்கறுப்பாகும் — 332 என்று முன்னர்க் கூறப்பட்டவையும் ஈண்டு நிவைவு கூரத் தக்கன.

இறைவியின் திருமேனியை ஆகர்ஷண வினையேவலில் நீலநிறமாகவும், வித்வேஷண வினையேவலில் பவள நிற மாகவும், பேதன கன்மப்பிரயோகத்திற் பளிங்குநிறமாகவும், மாரணகன்மப் பிரயோகத்திற் கறுப்பு நிறமாகயும் தியானிக்க என்பதாம்.

புவனாபதியின் திருவுறுவத் தியானம்
பொது.

338. கறுப்பற்ற செம்மேனிக் கண்ணொரு மூன்றாம்
குறிப்புற்ற செஞ்சடைக் கொண்ட மதியம்
உறுப்புற்ற திண்புயம் ஒன்றிய நாலாம்
குறிப்புற்ற பாசாங் குசமும் இருகையே,

பாடபேதம்

1. [கறுப்பற்ற — கருப்பற்ற-] கருப்புற்ற. செம்மேனி — செஞ்சடைக். மூன்றாகுங்-மூன்றாகில் — மூன்றும்.
2. உறுப்புற்ற திண்புயம் ஒன்றிய நாலாங்.
3. குறிப்புற்ற செஞ்சடைக் கொண்ட மதியம் — சடை கொண்ட.
4. பாசாங்குச மிருகையே — பாசாங்குசம் மிருகையே, [சுவடி -2ல் இம் மூலபாடத்திற் குறிக்கப்பட்டுள்ள 2-3 ஆம் அடிகள் முறையே 3-2 ஆம் அடிகளாகக் காணப் படுகின்றன]

குறிப்புரை

இம் மந்திரம்; எண்வினையேவல்கட்கும் பொதுவாயுள்ள புவனாபதியின் திருவுருவத்தியானத்தினை உணர்த்துகின்றது.

படம்—9

செம்மை நிறம்



புவனாபதியின் சொரூப தியானத் திருவுருவம் (பொது)

செய்யுள்: 338

கறுப்புற்ற செம்மேனி —சினப்பண்பினைக் குறிக்குஞ் செந் நிறம். மேனி-நிறம். கறுப்புஞ்சிவப்பும் வெகுளிப் பொருள—தொல் காப்பியம். கண் மூன்று நெற்றிக்கண்ணுடன் பொருந்தியுள்ள மூன்று கண்கள். குறிப்பு—கருத்து. இறைவனுடைய செஞ்சடை யானது ஞானத்தைக் குறிப்பதாகலான் குறிப்புற்ற செஞ்சடை என்றார். உறுப்பு = அங்கம் — அவயவம் — திண்மை—வலிமை. புயம் = தோள் — கை. தோள்களின் திண்மையைத் திரு வாசத்தில் வரும் திருத்தோள் நோக்கத் திருப்பதிகத்திலும், புய வகுப்புக்களிலுங் கண்டு கொள்க. குறிப்புற்ற பாசாங்குசம் — ஆணவக்களிற்றினைப் பிணித்து அடக்கும் குறிப்பினையுணர்த்து வன வாகிய பாசமும் அங்குசமும் என்க. கண்ணில் ஆணவவெங்-கரிபிணித்து அடக்கக் கரிசனேற்கு இருகையும் ஆக்கும்-அண்ணலை தணிகைப் புராணம். உரனென்னுந் தோட்டியால் ஓரைந்துங் காப்பான் — திருக்குறள். என்பனவும் உணர்க

இளஞாயிறு போலுஞ் செம் மேனியையும், ஞாயிறு தீ திங்களாகிய மூன்று கண்களையும், இளம் பிறை பொருந்திய செஞ்சடைக் கற்றையும், அங்குசம் பாசம் ஆகிய படைக்கலங் களும் அபயம் வரதம் ஆகிய முத்திரைகளும் பொருந்தியுள்ள நான்கு திருக்கைகளையும் உடையவராயும், பாங்கிமாரெண்மரும் புடை சூழ்ந்து பணிபுரிந்து நிற்கத் தாமரையாசனத்தில் தியானிக்க வீற்றிருப்பவராயும் புவனாபதியைத் தியானிக்க என்பதாம்.

இத்திருவுருத்தியானம், மேலும் வருமாறு பற்றி சண்டுத் தொகுத்து விளக்கி வரையப் பட்டது. முக்கண், செஞ்சடை, மதியம் முதலிய அங்கங்கள் இறைவனுக்கும் அங்குச பாசங்கள் இறைவிக்கும் உரிய சிறப்படையாளங்களாகும். எனவே அம்மையப்பராயுள்ள, தொன்மைக் கோலமே புவனாபதியாரின் திருவுருவம் என்பதனைக் கண்டு கொள்க. புயம் நான்கு, பாசாங்குசமும் இருகையே என்றதனால் ஏனைய இருகைகளும் அபயவரத முத்திரைகளைப் பொருந்தியன என்பது தானே பெறப்படும். மேலும் இவ்வாறே கண்டு கொள்க. அங்குச பாசப் படைக்கலங்கள் மேல்பாலும், அபயவரத முத்திரைகள் கீழ்பாலும் உள்ள வலக்கைகளிலும், இடக்கைகளிலும் முறையே

அமைந்துள்ளன என்க. இஃது எண்வினையேவல்கட்கும் பொது வாயுள்ள புவனாபதியின் மூலசொருபத் தியானமாகும். இனி, அவ்வக்கன்மங்கட்கும் உரிய சிறப்புத் திருவுருவத்தியானங்கள் வருந்திரு மந்திரங்களிற் சொல்லப்படும்.

மேற்கோள்

சடையிலே திங்களைத் தாங்கிய அம்மை
— திருமந்திரம். 300:76.

செய்ய திருமேனி செம்பட்டுடை தானும்
கையங் குசபாச மபய வரதம்
மெய்யணி கலனிரத் தினமா மேனி
துய்ய முடியவயவத்தின் தோற்றமே. — 3000 : 1316.

[- திருமந்திரம். தந் - 4. அதி - 12. புவனாபதி
சக்கரம் - 10]

துளங்கொளி ஞாயிறுந் திங்களுங் கண்கள்
வளங்கொளி யங்கியும் மற்றைக்கண் நெற்றி - 2684.

சதுர்ப்பாகு ஸ மந்விதா - 4 கைகளையுடையவள் -
லலிதா - 1000:— 7.

ராகஸ்வருப பாசாட்யா - இச்சாஸ்வருபமான பாசக் கயிற்றையுடையவள் — 8.

க்ரோதாகாராங்கு சோஜ்வலா - குரோதஸ் வருபமான அங்குசத்தைத் தாங்கிய கையையுடையவள் — 9.

என்பன காண்க.

பாசம், அங்குசம் ஆகிய இவற்றுக்கு அதிதேவதைகள் முறையே அசுவாருடையும், சம்பத்கரியும் ஆவர். கைகளினாலே குறிக்கப்படும் முத்திரைகள் பலவுள்ளன. அவற்றுள் அபய முத்திரையானது: அச்சம் துன்பம் முதலியவற்றினின்றும் உயிர்களைக் காத்தலையும், வரத முத்திரையானது, வேண்டிய சித்திபுத்திகள் எல்லாவற்றையும் கொடுத்தலையும் உணர்த்துவன வாகும். அபயப் பிரதாம்பிகை என்னும் இறைவியின் திருப் பெயருங் காண்க. [அபயம் - பயமின்மை பிரதம் = கொடுத்தல் - வரதம்] திருமயிலாடுதுறை இறைவியின் திருப்பெயராகிய இது அவையாம்பிகை என மருவி வழங்குவதும் ஈண்டு அறியத்தக்கது.

அபயமும் வரதமும் உபயமும் உடைய அணங்கே - மீனாட்சி - பிள்ளைத்.

உமையொருபாகன் தியானத் திருவுருவம்

நீலமேனி வாலிழை பாகத்து
ஒருவன் இருதாள் நிழற்கீழ்
மூவகை உலகும் முகிழ்த்தன முறையே — ஐங்குறுநூறு 1.

பெண்ணுரு ஒருதிறன் ஆகின்று அவ்வுருத்
தன்னுள் அடக்கிக் கரக்கினுங்கரக்கும் — புறநானூறு 1.

அருவருக்கும் உலகவாழ் வடங்கநீத்தோர்க் கானந்தப்
பெருவாழ்வாம் ஆடல்காட்ட
மருவருக்கன் மதிவளிவான் யமானனன்றீநீர் மண்ணெனு
மெண் வகையுறுப்பின் வடிவுகொண்ட
ஒருவனுக்கும் ஒருத்திக்கும் உருவொன்றால் அவ்வுருவை
யிஃதொருத்த னென்கோ ஒருத்தியென்கோ
இருவருக்கும் உரித்தாக வொருவரெ ரென்றோர் இயற்
சொலிலதெனின்யான் மற்றென் சொல்கேனே.
— சிதம்பரச் செய்யுட் கோவை. 54.

தெய்வத் தாமரைச் செவ்வியின் மலர்ந்து
வாடாப் புதுமலர்த் தோடெனச் சிவந்து
சிலம்புங் கழலும் அலம்பப் புனைந்து
கூற்றின் ஆற்றல் மாற்றிப் போற்றாது
வலம்புரி நெடுமால் ஏன மாகி நிலம்புக்கு

ஆற்றலின் அகழத் தோற்றாது நிமிர்ந்து
பக்தி அடியவர் பச்சிலை இடினும்
முத்தி கொடுத்து முன்னின் றருளித்
திகழ்ந்துளது ஒருபால் திருவடி அகஞ்சேந்து
மறுவில் கற்பகத் துறுதளிர் வாங்கி

நெய்யில் தோய்த்த செவ்வித் தாகி
நூபுரங் கிடப்பினும் நொந்து தேவர்
மடவரல் மகளிர் வணங்குபு வீழ்த்த
சின்னப் பன்மலர் தீண்டிச் சிவந்து
பஞ்சியும் அனிச்சமும் எஞ்ச எஞ்சாத்

திருவொடும் பொலியும் ஒருபால் திருவடி
நீலப் புள்ளி வாளுகிர் வேங்கைத்
தோலின் கலிங்கம் மேல்விரித் தசைத்து
நச்செயிற் றரவக் கச்சையாப் புறுத்துப்
பொலிந்துள தொருபால் திருவிடை இலங்கொளி

அரத்த ஆடை விரித்து மீதுறீஇ
இரங்குமணி மேகலை ஒருங்குடன் சாத்திய
மருங்கிற் றாகும் ஒருபால் திருவிடை
செங்கண் அரவும் பைங்கண் ஆமையும்
கேழற் கோடும் வீழ்திரள் அக்கும்

நுடங்கு நூலும் இடங்கொண்டு புனைந்து
தவளநீ றணிந்ததோர் பவளவெற் பென்ன
ஒளியுடன் திகழும் ஒருபால் ஆகம்
வாரும் வடமும் ஏர்பெறப் புனைந்து
செஞ்சாந் தணிந்து குங்குமம் எழுதிப்

பொற்றா மரையின் முற்றா முகிழென
உலகேழ் ஈன்றும் நிலையில் தளரா
முலையுடன் பொலியும் ஒருபால் ஆகம்
அயில்வாய் அரவம் வயின்வயின் அணிந்து
மூவிலை வேலும் பூவாய் மழுவும்

தமருகப் பறையும் அமர்தரத் தாங்கிச்
சிறந்துள தொருபால் திருக்கரம் செறிந்த
சூடகம் விளங்கிய ஆடகக் கழங்குடன்
நொம்மென் பந்தும் அம்மென் கிள்ளையும்
தரித்தே திகழும் ஒருபால் திருக்கரம்

இரவியும் எரியும் விரவிய வெம்மையின்
ஒருபால் விளங்குந் திருநெடு நாட்டம்
நவ்வி மானின் செவ்வித் தாகிப்
பாலிற் கிடந்த நீலம் போன்று
குண்டுநீர்க் குவளையிற் குளிர்ந்துநிறம் பயின்று

எம்மனோர்க் கடுத்த வெம்மைநோய்க் கிரங்கி
உலகேழ் புரக்கும் ஒருபால் நாட்டம்
நொச்சிப் பூவும் பச்சை மத்தமும்
கொன்றைப் போது மென்றுணர்த் தும்பையும்
கங்கை யாறும் பைங்கட் டலையும்

அரவும் மதியமும் விரவித் தொடுத்துச்
சூடா மாலை சூடிப் பீடுகெழு
நெருப்பில் திரித்தனைய உருக்கிளர் சடிலமொடு
நான்முகங் கரந்த பால்நிற அன்னம்
காணா வண்ணங் கருத்தையுங் கடந்து

சேணிகந் துளதே ஒருபால் திருமுடி பேணிய
கடவுட் கற்பின் மடவரல் மகளிர்
கற்பக வனத்துப் பொற்பூ வாங்கிக்
கைவைத்துப் புனைந்த தெய்வ மாலை
நீலக் குழல்மிசை வளைஇமேல் நிவந்து

வண்டுந் தேனுங் கிண்டுபு திளைப்பத்
திருவொடும் பொலியும் ஒருபால் திருமுடி
இனையவண் ணத்து நினைவருங் காட்சி
இருவயின் உருவும் ஒருவயிற் றாகி
வலப்பால் நாட்டம் இடப்பால் நோக்க

வாணுதல் பாகம் நாணுதல் செய்ய
வலப்பால் திருக்கரம் இடப்பால் வனமுலை
தைவந்து வருட மெய்ம்மயிர் பொடித்தாங்கு
உலகம் ஏழும் பன்முறை ஈன்று
மருதிடங் கொண்ட ஒருதனிக் தடவுள் நின்

திருவடி பரவுதும் யாமே நெடுநாள்
இறந்தும் பிறந்தும் இளைத்தனம் மறந்தும்
சிறைக்கருப் பாசயஞ் சேரா
மறித்தும் புகாஅ வாழ்வுபெறற் பொருட்டே.

— திருமுறை. 11, 28. 1.

தோலுந் துகிலுங் குழையுஞ் சுருள் தோடும்
பால் வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமுந் தொக்க வளையும் உடைத்தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ.

— திருவாசகம். 232.

ஒருமை பெண்மையுடையன் சடையன்

— தேவாரம். 5.

உண்ணாமுலை உமையா ளொடும் உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான் — 97

பெண் ஆண் என நின்ற பெருமான் — 905

ஆணும் பெண்ணுமாய் அடியார்க்கருள் நல்கி — 908

பெண்ணார்திரு மேனிப் பெருமான் — 922

பெண்காட்டும் உருவானும்பிறை காட்டும் சடையானும்

— 1982.

பெண்ணியல் உருவினர் — 3701.

பெண்ணுரு ஆணுரு அல்லாப்பிரம புரநகர்மேய அண்ணல்

— 2177

கற்றார் பயில்கடல் நாகைக்கா ரோணத்தெங் கண்ணுதலே
விற்றாங் கியகரம் வேல்நெடுங் கண்ணி வியன்கரமே
நற்றாள் நெடுஞ்சிலை நாண்வலித்தகரம் நின்கரமே
செற்றார் புரஞ்செற்ற சேவகம் என்னைகொல்
செப்புமினே — 5152

பெண்ணுடல் பெற்ற சென்னியம் பிறையோன்—கல்லாடம்.
இருசாயல் ஒருருவாய் எவ்வுயிர்க்குந்தாய்தந்தை
யாமேயென்னும்
மருவாருங் கொடிமாடச் செங்குன்றூர் நின்றவன்றாள்
வணக்கஞ்செய்வாம். — திருச்செங்கோட்டுப்புராணம்.

என்பனவும், பிறவுங் காண்க. இவற்றால், எல்லாவுலகங்கட்கும் அம்மையப்பராயுள்ள மாதிருக்கும் பாதியனுடைய தொன்மைக் கோலமே புவனாபதியின் திருவுருவம் என்தும், புத்தியும்

முத்தியுமாகிய எல்லாப் பேறுகளையும் பெறுவதற்குச் சாதன மாகவுள்ளது இவ்வுருவின் தியானமென்பதும் இனிது புலனாகும். புவனாபதியை ஆண்பாலாகவும், பெண்பாலாகவும் வைத்துப் போற்றப் பெற்றிருத்தலும் இவ்விரு திறவியல்புகளும் அமைந் துள்ளமை பற்றியேயாம்.

மேற்கோள்

புவனாபதியாம் - அருந்தவச் செல்வியை - திருமந்திரம் 75.
புகுந்தறிவான் புவனாபதி அண்ணல் - 397.
புவனாபதி அம்மை அருந்தவப் பெண்பிள்ளை - 1150.
பொய்யிலன் மெய்யன் புவனாபதி எந்தை - 1996.
பொங்கிநின்றான் புவனாபதிதானே - 2837.
பொங்கிநின்றான் புவனாபதி புண்ணியன் - 3021.
புவனா பதிமிகு புண்ணியன் எந்தை - 3039.

என்பனவும், பிறவுங் கண்டுகொள்க.

இறைவனுக்கு வடிவேறு திரிசூலமும் படைமலிந்த மழுவாளும் போல (தே. 6422-6423) இறைவிக்குப் பாசமும் அங்குசமும் சிறப்பாயுரிய படைக்கலங்களாகும். விளங்கும் மழுச்சூலம் ஏந்தும் - கையனே - தேவாரம். 6279. கங்கையும் பனிவெண்திங்களும் விரைத்த கடுக்கையந் தொங்கலும்அரவும் - தங்குபொற்சடையும் முக்கணும் தாதைதாணு என்றுணர்த்த மென்மலர்க்கை - அங்குச பாசம் அணிந்து வெற்புயிர்த்த ஆரணங்கு அன்னை என்றுணர்த்தி - திருப்பேரூர்ப் புராணம்.

எண்வினை யேவல்கட்கு முரிய இறைவியின் சிறப்புத் தியானம்

339. இருகை வசியமே யாகரு ணைக்கு
மருவு கருப்புவில் மாண்பஞ்ச பாணம்
பொருவது மோகனம் போந்தம் பனமும்
தருவ திருகையிற் சக்கரஞ் சங்குமே.

பாட பேதம்

1. வசியமுமேயாகரு - வசியமாகரு.
2. மருவுங். மாபஞ்ச - மலர்ப் பஞ்ச.
3. போந்ததம் பனமுந் - பேதனந்தம் பனந் - தம்பணந்
4. திருப திருகையிற். சங்கே.

குறிப்புரை

இம்மந்திரம்; வசியம், ஆகர்ஷணம்; மோகனந், தம்பனம்; ஆகிய கன்மங்கட்குரிய திருவுருவத்தியானத்தை உணர்த்து கின்றது.

வசியம் = வசியகன்மப் பிரயோகம் - வசிப்பு வினையேவல். ஆகருணை = ஆகர்ஷணம் - அழைப்பு வினை. மருவல் - பொருந்துதல். கருப்பு வில் - கரும்பாகிய வில். மாண் - பெருமை. பஞ்ச பாணம் - ஐம்மலர்களாகிய அம்பு. அவை: (1) தாமரை (2) அசோகு (3) மா (4) மல்லிகை (5) கருங் குவளை மலர்கள் என்பன. பொருவுதல்-சமமாதல். மோகனம் = மோகன கன்மம் - மயர்ப்புவினை. தம்பனம் = தம்பனகன்மம் - கட்டுவினை - தடைவினை. இருகை - நான்கு திருக்கைகளில் மேலேயுள்ளனவாகிய இரண்டு கைகளில் வலப்பால் பஞ்ச பாணமும், சக்கரமும், இடப்பால் கருப்பு வில்லும், சங்கும் உள்ளன என்க. எனவே கீழேயுள்ள இருகைகளும் மேற் சொல்லியவாறு அபய வரத முத்திரைகளைப் பொருந்தியுள்ளன என்க. இவ்வாறே மேல்வருவனவற்றிலும், கண்டு கொள்க.

வசியம், ஆகர்ஷணம் ஆகிய கன்மப்பிரயோகங்களில் ஐம் மலர்க்கணையும் கரும்பு வில்லும்; மோகனந், தம்பனம் ஆகிய கன்மப் பிரயோகங்களில் சக்கரமும் சங்கும் பொருந்திய திருக் கைகளையுடையவராகப் புவனாபதியைத் தியானிக்க என்பதாம்.

மேற்கோள்

(1) வசியம்: காணுந் திருமேனி செம்மைசெம் பட்டுடை
பூணு மலரம்பு பொற் கரும்புவிற்கை
— திருமந்திரம், 300-67.

(2) ஆகர்ஷணம்: கருத்துந் திருமேனி காண்பது நீலம் திருக்
கையிரண்டினிற் சேர்பஞ்ச பாணம்-கருப்புச்
சிலையுங் கலந்துடன் ஏந்தி — 217.

தாளணி நூபுரஞ் செம்பட்டுத் தானுடை
வாரணி கொங்கை மலர்க்கன்னல் வாளிவில்
ஏரணி அங்குச பாசம் எழில் முடி
காரணி மாமணிக் குண்டலக் காதிக்கே - திருமந்திரம்.
1049.

பஞ்சபாணம்:—
நினைக்கும் அரவிந்தம் நீள் பசலை மாம்பூ
அனைத்துணர்வும் நீக்கும் அசோகு - வனத்திலுறும்
முல்லை கிடைகாட்டும் மாதே முழுநீலம்
கொல்லுமதன் அன்பின் குணம் —இரத்தினச்சுருக்கம்.

மநோ ரூபேட்சு கோதண்டா - மனமாகிற செங்கரும்பு வில்லினை யேந்திய கையை உடையவர்
--லலிதாஸஹஸ்ர நாமம். 10

பஞ்ச தன்மாத்ர ஸாயகா - சுவையொளியூறோசை நாற்ற மென்னும் ஐந்து தன் மாத்திரை (நுண்பூதங்) களாகிய அம்புகளை உடையவர் — என்பனவும் அறிக.

கரும்பு வில்லுக்கும், ஐம் மலர்க்கணைக்கும் அதிதேவதைகள் முறையே மந்த்ரிணீ தேவியும், தண்டநாதா என்கிற வாராகி தேவியுமாவர். அன்றியும்; "இச்சா சக்தி மயம்
பாசம் அங்குசம் ஞாநரூபிணம் ।
க்ரியா சக்தி மயே பாண தநுசீ ததத் உஜ்வலம் ॥.
சப்தாதி தந்மாத்ரா: பஞ்சபுஷ்ப பாணா: ।
மந இட்சுதநு: । வசியோ பாண :। ராக: பாச: ।
த்வேஷ: அங்குச : ॥ — பாவ நோப நிடதம்

என்பன வற்றாலும் பாசம், அங்குசம், கரும்புவில், ஐம் மலர்க்கணை ஆகியவற்றின் தத்துவத்தை உணர்க.

இதுவும் அது

340. சங்கை யெழியத் தருவதுச் சாடனம்
பங்கயஞ் செங்கையிற் பாசங் கடகம்வாள்
வெங்கண்வித் தேடனை வெண்டலை முசலம்
அங்கது பேதம் அபய வரதமே,

பாடபேதம்

1. சாடணம்.

2. பங்கையஞ் செங் — பங்கைய செங் — பங்கயச் செங் செங்கையிற் பாசங் கட்கம் வாள் — செங்கையிற் பற்றிய வாள் கடகம் — செங்கையிற் பற்றிய வாள் கட்கம் — செங்கையிற் பற்றிய வாள் கடம்.

3. வெங்கண்வித்து வேடணை — வெங்கன வித்தேடணை — வெங்கன வித்தேடனை. வெண்டலை முசலமாம் — வெண்ட முயலமானு — வெண்டல — வேண்ட. முசலமாம் முயல.

4. பேதனம் - பேதன வரதபை யங்களே — பேதன வரத பயங்களே - பேதன வரதபயமே - பேதனம் அபைய வரதமே - அபயவரமே.

குறிப்புரை

இம்மந்திரம்; உச்சாடனம், வித்வேஷணம், பேதனம் ஆகிய கன்மங்கட்குரிய திருவுருவத் தியானத்தை உணர்த்து கின்றது.

சங்கை = ஐயம் - அச்சம். உச்சாடனம் = உச்சாடனகன்மம் விடை வினை - போக்குவினை. பங்கயம் — தாமரைமலர். கடகம் = வட்டம் - கேடகம். வாள் - வாட் படை - கத்தி. வெங்கண்—கொடுமை. வித்தேடணை = வித் வேஷணகன்மம் - பகைப்பு வினையேவல் - வித்துவேடம் - விரோதம்.வெண்டலை = தலையோடு - மண்டையோடு (பிங்) வெண்மை — களங்கமின்மை முசலம் - உலக்கை. பேதம் - பேதன கன்மம் பேதம் = பேதனம் - வேற்றுமை - வேறாக்கல். அபயம் = பயமின்மை - அபயமுத்திரைக்கை. வரதம் = வரங்களைக் கொடுத்தல் - (வரம் - வேண்டும் பொருள். தம் - தருதல்) வரத முத்திரைக்கை. இம் முத்திரைகள் இரண்டும் முறையே கீழேயுள்ள வலமும் இடமாகிய திருக்கைகளின் குறிப்பினவாகும். மேலேயுள்ள கைகளில் பங்கயம், கடகம், வெண்டலை என்பன

வலப்பாலிலும் பாசம், வாள், முலசம் என்பன இடப்பாலிலும் உள்ளன என்க.

உச்சாடன கன்மப் பிரயோகத்தில் தாமரை மலரும், பாசமும்; வித்வேஷண கன்மப் பிரயோகத்தில் கடகமும் வாளும்; பேதனகன்மப் பிரயோகத்தில் வெண்டலையும் முசலமும்; எல்லாக் கன்மங்களிலும் வரத அபயமுத்திரைகளும் அமைந்த திருக்கைகளையுடையவராகப் புவனாபதியைத் தியானிக்க என்பதாம்.

மேற்கோள்

உலக்கை கலப்பை ஒளிவிடும் வாள் கடகாழி சங்கம்
வலக்கை இடக்கையில் வைத்த வராகி — வராகிமாலை.
ஆன வராக முகத்தி பதத்தினள்
ஈனவர் ஆகம் இடிக்கும் முசலத்தோடு
ஏனை உழுபடை ஏந்திய வெண்ணகை — திருமந்திரம் 1072

இதுவுமது

341. பயங்கத்து மாரணம் பற்று மிருகை
புயங்கத்துச் சூலங் கபாலம் பொருந்தும்
வயங்கத் துயிலும் வடிவுக் கிசையும்
பயங்கெட் டிருப்பதும் பதுமா சனமே.

பாடபேதம்

1. பயங்கற்று. பாற்று - பாறு - பாறிரு - பாரிரு - பாரிறு - பரிறு.
2. புயங்கற்றுச் – பியங்கத்துச் – சூலம் – சூல.
3. வுயங்கத் - தயங்கத். வடிவு திசையும் – வடிவுந் திசையும்.
4. டிருக்கும்– டிருப்பது. பதுமவாசனமே - பத்மாசனமே - பத்ராசனமே,

குறிப்புரை

இம்மந்திரம்; மாரணகன்மத்தின் திருவுருவத் தியானத்தை உணர்த்துகின்றது.

பயங்கம் = பயங்கரம் - பயத்தைச் செய்வது. மாரணம் - மரிப்பு வினையேவல். கபாலம் — தலையோடு. (கம் - தலை) புயங்கம் - புயமாகிய அங்கம். புயம் — கை. அங்கம் - உறுப்பு. சூலம் - முத்தலைப் படைக்கலம். மேலேயுள்ள இரு கைகளில் சூலம் வலப்பாலும், கபாலம் இடப்பாலும் அமைந்து நிற்கக் கீழேயுள்ள இருகரங்களும் அபயவரத முத்திரைகளைப் பொருந்தியுள்ளன என்க. வயங்குதல் - விளங்குதல். துயில் - மரணம். துயிலும் வடிவு - மாரண கன்மத்தியானத் திருவுருவம். இசைதல் = இயைதல்-பொருந்துதல். பயங்கெட்டு - பயங்கெட. இருப்பது - இருத்தல். பதுமாசனம் = பத்மாசனம் - தாமரையாகிய ஆசனம். ஆசனம்-இருக்கை. இஃது எண்வகை ஆசனங்களில் ஒன்று.

மாரணகன்மப் பிரயோகத்தில் சூலப் படைக்கலத்தையும், கபாலத்தையும் ஏந்திய திருக்கைகளையுடையவராயும், தாமரையாசனத்தில் வீற்றிருப்பவராயும் புவனாபதியைத்தியானிக்க என்பதாம்.

மேற்கோள்

சூலங் கபாலங்கை ஏந்திய சூலிக்கு நாலாங்கரமுள
நாக பாசாங்குசம் — திருமந்திரம். 1081.

ஓரணை யப்பதம் ஊருவின் மேலேறிட்
டார வலித்ததன் மேல்வைத் தழகுறச்
சீர்திகழ் கைகள் அதனைத்தன் மேல்வைக்கப்
பார்திகழ் பத்மா சனமென லாமே

— திருமந்திரம் 559.

சீரணிசிருக்குமணிவடஞ் சங்குதிகிரி சூலப்படை இலைவேற்
போரணிபாசம் அங்குசங் கழைவில் பூங்கணை வேறு வேறணியா
ஆரணன் மாயன் அரன் இபமுகத்தன் அனங்கனென்றிவர்
தொழிற்கெல்லாம்

காரணமாதல் தெளித்தருள் கொழிக்குங் கன்னியையுன்னி
யேத்தெடுப்பாம் — திருத்தணிகைப் புராணம்

என்பனவும் ஈண்டுக் கருதத் தக்கன.

இறைவியின் அட்ட கன்மத் தியானத் திருவுருவம்.

பொது

342. ஆசனந் தாமரை அங்கையுந் தாமரை
மூசிய கொங்கையும் முகிழ்ந்த தாமரை
வாச முகமும் மலர்ந்தசெந்தாமரை
கோசங்கொள் கோயில் கொண்டதா மரையே

பாடபேதம்

1. ஆசநந்.
2. மூசகி. கொங்கை முகிழ்ந்த - கொங்கை முகிழுந் - கொங்கை முகிழிளந் - கொங்கை முகிழ்த்த.
3. வாசமுகமலர் தாமரை மாமதி - வாசமுரமம்.
4. கோசமுறு கோயில் - கோசமுறுங்கோயிற் - கோச முருகுங்கொண்டதா - கொண்டதுந் தாமரையே - கொண்டது தாமரையே - கொள்தாமரையே.

குறிப்புரை

இம்மந்திரம்; எண்வினையேவல் கட்கும் பொதுவாயுள்ள தியானத் திருவுருவத்தினை உணர்த்துகின்றது.

ஆசனம் = இருக்கை - இருத்தல். தாமரை - தாமரை மலர். அங்கை = அகங்கை - உள்ளங்கை. மூசுதல் = மொய்த்தல் - நெருங்குதல் (புறம்) - முகிழ்த்தல் - அரும்புதல். வாசம் - தெய்வ நறுமணம். கோசங்கொள் கோயில் = பொற்கோயில். கோசம் = புத்தகம் - ஞானம் - பொன். இரண்மயகோசம் = ஞானாகாயம் - சிற்றம்பலம் - உள்ளக் கமலம். இரண்யம் = பொன் - ஞானம். - கோயிற்புராணம்

புவனாபதியாரின் இருக்கையும் இருக்கைகளும், கொங் கைகளும், முகமும், வீற்றிருக்குங் கோயிலும் ஆகிய இவை யனைத்தும் தாமரை என்பதாம்.

மேற்கோள்

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை — தேவாரம்.
பூவெனப் படுவது பொறிவாழ் பூவே
— நால்வர் நான்மணிமாலை.

திருமுகம்கமலம் இணைவிழிகமலம் செய்யவாய்கமலம்
நித்திலந்தாழ்
வருமுலைகமலம் துணைக்கரங்கமலம் வலம்புரிஉந்தி பொற்கமலம்
பெருகியஅல்குல் மணித்தடம்கமலம் பிடிநடைத்தாள்களும்
கமலம்
உருவவட் கவ்வாறாதலின் அன்றே உயர்ந்தது பூவினுவிட்
கமலம். — தணிகைப். களவுப் – 43.

18. ஆம் அதிகாரம் – இயந்திரப்போது.

புவனாபதி சக்கரத்தின் சொரூபம்

343. தாமரையாகும் பதினா றறைகளும்
தாமரை யல்லி தரித்த அறுகோணம்
தாமரை யாசனந் தையல் இருப்பது
தாமரை யெட்டிற் சத்தியங் கெண்மரே.

பாடபேதம்

1. பதினாலறைகளுந் – பதினாறரைகளுந்.
2. தாமரைவல்லிதரித்த – தாமரைவல்லித்தரித்த – தாமரை வல்லவித மிதனறுகோணந்.
3.
4. தாமரையங் கெட்டின்மேற் சத்தியங்கெண்மரே - தாமரையெட்டின்மேற் சத்தியங்கெண்மரே - தாமரை யெட்டின்மேற் சத்தியிருப்பளே - யெட்டின்மேற் சத்தியெண்மரே.

முடிவு; சத்தியின் தோழியர் எண்மர்.

குறிப்புரை

இம்மந்திரம்; இயந்திரத்தில் இறைவியைத் தியானிக்கும் முறைமையை உணர்த்துகின்றது.

அறை பதினாறு - இயந்திரத்தில் உள்ள அறைகள் 16 அல்லி – அகவிதழ். அறுகோணம் - 16 அறைகளின் நடுவில் உள்ள அறுகோணச் சக்கரம். தாமரை ஆசனம் - தாமரை மலராகிய ஆசனம். தையல் = அழகு - பெண் - புவனேசுவரி. இருப்பது - இருத்தல். தாமரை எட்டு - தாமரைப்பூவின் புறவிதழ் 8. சக்தி எண்மர் - அனங்க குசுமை முதலான பாங்கிமார் எண்மர். 3-4 ஆம் அடிகளில் உள்ள தாமரை என்பன ஆகுபெயரான் முறையே அவற்றின் பொகுட்டையும், புறவிதழையும் குறித்தன. முன்னர் அல்லி என்றதனானே புல்லி - புறவிதழ் என்பது பெறப்படும்.

16. அறைகளுடன் பொருந்திய இந்தப் புவனாபதி சக்கரமானது, செந்தாமரைப் பூவைப்போன்றது. அதன் நடுவணுள்ள அறுகோண சக்கரமானது, அத்தாமரையின் அகவிதழ்களாம். அதன் மத்தியில் உள்ள பொன்மையான பொகுட்டானது புவனாபதியின் இருக்கை (ஆசனம்) ஆகும். அந்தத் தாமரை மலரின் புறவிதழ்கள் எட்டிலும் புவனாபதியின் தோழியர் எண்மரும் சூழ்ந்து நிறை ஏவல்கேட்டுப் பணிபுரிந்திருப்பர் என்பதாம்.

சத்தி எண்மரின் பெயரும், அவர்புரியும் பணிகளும் பிறவும் வருந்திருமந்திரங்களில் வைத்து விளக்கப்படும்.

மேற்கோள்

பூரித்த பூவிதழ் எட்டினுக் குள்ளேயோர்
ஆரியத்தாளுண்டு அங்கெண்மர் கன்னியர்

— திருமந்திரம். 1084.

பச்சை இவளுக்குப் பாங்கிமார் ஆறெட்டு கொச்சையார் எண்மர்கள் கூடி வருதலால் — 1394

[கொச்சை = கொஞ்சல் - திருந்தாமொழி - மழலைமொழி]

எழுதிடுஞ் சத்திகள் எண்மர்தம் பீசம்

— புவனைகலை ஞானம் 67.

நாட்டும் இத யந்தானும் நாபியினில் அடியாய்
ஞாலமுதல் தத்துவத்தால் எண்விரல்நா ளத்தாய்
மூட்டுமோ கினிசுத்த வித்தைமலர் எட்டாய்
முழுஇதழ் எட்டு அக்கரங்கள் முறைமையினின் உடைத்தாய்க்
காட்டுகம லாசனமேல் ஈசர்சதா சிவமும்
கலாமூர்த்தம் ஆம் இவற்றின் கண்ஆகுஞ் சத்தி
வீட்டை அருள் சிவன்மூர்த்தி மானாகிச் சத்தி
மேலாகி நிற்பன் இந்த விளைவு அறிந்து போற்றே

— சிவஞானசித்தியார். 300

என்பதனால் புவனாபதியார் வீற்றிருந்தருளும் தாமரை யாசனத்தின் இயல்பினையும், கோசங்கொள் கோயிலின் சொருபத்தினையும் உணர்ந்துகொள்க. இந்தத் தாமரையானது, நாளம் முதலாக மேல் நோக்கித் தோன்றும் உலகத்துப் பதுமம் போலாது, கண் முதலாகக் கீழ் நோக்கித் தோன்றியதோர் தெய்வத்தாமரை என்க.

தெய்வத் தாமரைச் செவ்வியின் மலர்ந்து

திரு முறை 11-28-1. என்பதும் உணர்க.

19-ம் அதிகாரம் — அஷ்டசத்திகள்.

சத்தி எண்மரின் பெயர்

344. அங்கெண்ம ராவர் அனங்க குசுமையும்
அங்க மேகலை அனங்க மதனையும்
அங்கமத னாதுரை அனங்க ரேகை
அங்க வேகினி அனங்காங் குசையே

பாடபேதம்

1. அங்கெண்ம ராகு மணங்க குசுமையுந் - அங்கெண் மராகு மணங்குஞ்சுமையுந்— அங்கெண்மாகு மணங் சுமையுந் - அங்கெண்மராகும் மணங்கும் சுவையும்.

2. தங்கணங்க மேகலை தாங்கணங்கள் மாலினியு — தங்க மேகலை தாழ்ந்தங்க மாலினி — தங்குமேகலை தாழ்ந்தங்க மாலினி — தங்கிய மேகலை தாழ்ந்தங்க மாலினி — தங்குமேகலை தாங்கணங்க மதனா — தங் கணங்க மேகலை தாங்கணங்கமாதுனியு அனங்க மேகலையு மனங்கனதளியும்.

3. மங்குமதனா துரியனங்க வேகினி — அங்குமதனா துரி யனங்கவேகி— மங்குமனங்க மனகங்கரிய— மங்கு மனங்க மனங்காங்கனியனங்க வேகினி — வேதினி — அனங்கமதனா துரியனங்கவேயதின் — ஓங்கவேதி னியங்கனங்க ரேகை.

4. அங்கனங்கரேகை அறிந்தனங்காங்குசையே — யனிந் தனங்காங்குசையே — யனங்கரேகா யனங்காங்குசையே — யங்கனங்கரேகையணி (னி)ந்தனங் காங்குசையே — அனங்கரேகை அனங்கா குசையே — யனங்கரேகா யனகாங் குசையே.

சுவடி : 9 தங்கனங்க மேதலை தாழ்ந்தனங்காது...ளியும்
அங்கி மனங்க மதனாதுரி,
யனங்கவேகினி அனங்க ரேகை,
அறிந்தனங் காங்குசையே.

முடிவு: சத்தியின் தோழிகள் எண்மர்.

குறிப்பு:- இச்செய்யுள் வடிவந்தெரியாவண்ணம் பாட பேதத்திற் காணுமாறு சுவடிகளிற் பெரிதும் பிழைகள் மலிந்து காணப்பட்டது. ஒருவாறு ஊகத்தால் அமைத்துக் கொள்ளப் பட்டதே மேற்குறிக்கப்பட்டுள்ள மூலபாடமாகும்.

குறிப்புரை

இம்மந்திரம்; புவனாபதியைச் சூழவிருக்கும் பாங்கிமார் எண்மருடைய பெயர்களையும் உணர்த்துகின்றது. மேல்சத்தியங் கெண்மரே — என்றராதலின், அவ்வெண்மரையும் இம்மந்தி ரத்தில் ஆசிரியர் திருமூல தேவர் விளக்கியருள்கின்றார் என்க.

1. அனங்க குசுமை 2. அனங்க மேகலை 3. அனங்க மதனை 4. அனங்க மதனாதுரை 5. அனங்கரேகை 6. அனங்க வேகினி 7. அனங்காங்குசை 8. அனங்க மாலினி என்னும் பெயரினையுடைய தோழிமார் எண்மரும் அந்தத்தாமரை மலரின் புறவிதழ் எட்டிலும் சூழ இருக்கும் அஷ்டசத்திகளாவர் என்பதாம்.

அனங்க மாலினியையுங்கூட்டி 8 எனத் தொகை கண்டது, அடுத்து வருஞ்செய்யுளை நோக்கி என்க. அனங்க என்பதனை ஏனையவற்றுடனுங் கூட்டியுரைத்துக் கொள்க.

இந்தச் சத்தியர் எண்மரும் குப்த யோகினியர் எனப்பெயர் பெறுவர். நாற்பத்து முக்கோண இயந்திரமாகிய ஸ்ரீசக்கரத்தில் உள்ள ஆவரணங்கள் 9. அவற்றுள் 3-ஆம் ஆவரணம் ஸர்வஸம் க்ஷோபண சக்ரம் எனப்படும். அஃது எட்டிதழ்க் கமலவடிவா யுள்ளது. அந்தத் தாமரை இதழ்கள் எட்டிலும் இவ்வெண்மரும் உள்ளனர் என்க.

மேற்கோள்

காமக் ரோத லோப மோஹ மத மாத்ஸர்ய புண்ய பாபமயாப்ராஹ்ம்யாத்யஷ்ட சக்தய: || (1) வசந, (2) தா ந. (3) கமந. (4) விஸர்க்க, (4) ஆநந்த, (6) ஹாந, (7) உபாதாந (8) உபேக்ஷாக்ய புத்தய: அநங்ககுசு மாத்யஷ்=டௌ || பி-ம். அநங்ககுசுமாதி சக்தயோஷ் டௌ

—பாவநோப நிடதம்.

என்பனவும் ஈண்டு நோக்கத்தக்கன.

அங்க என்பன 3-ம் அநங்க என்பதன் விகாரம் குசுமா — குசுமை. மேகலா — மேகலை. மதநா — மதனை. மதநாதுரா — மதனாதுரை. ரேகா — ரேகை. இவை 5-ம் ஆரியமொழியின் ஆகாரஈறு, ஐகார ஈறான வடமொழியாக்கங்கள்.

அஷ்டசத்திகளின் தியானத் திருவுருவம்

345. அனங்கமா லினியோ டாய எண்மரும்
புனைந்தங்கு சத்தியைப் பூசித்துப் போற்றி
நனந்தங்கு நாற்புயம் நற்பா சாங்குசம்
இனைந்தங் கிருகையில் இருப்ப தினியே.

பாடபேதம்

1. மாலினியோடாகிய — மாலினியோடாகிய யேனை மரும் — அனங்கமாலினியாகிய.

2. சத்தியைபூசித்துப். பூசித்துப்போற்றார் — பூசித்துப் பொன்னை [புனைந்து புவனையைப் பூசித்துப் போற்றி — ஊகம்].

3. நனைந்தங்கு — நினைந்தங்கு — கனைந்தங்கினாற்புய மபயவரதமும் — நாற்புய — நல்லபாசாங்குசம்.

4. இணைந்தங் - இனைந்தகை - நினைந்தங்கை - நினைந்தங்கிருகையில் பாசாங்குசமே - இருப்பதினையே இணைந்தகையேந்தி.

முடிவு: தோழியர் எண்மரின் தியானம்.

குறிப்புரை

இம்மந்திரம்; அனங்க குசுமை முதலான அஷ்டசத்திகளின் தியானத் திருவுருவத்தினை உணர்த்துகின்றது.

புனைந்து = அலங்கரித்து — பூமாலைபுனைந்து அலங் கரித்து சத்தியை — புவனாபதியை. நன = நனவு — அகற்சி. நனை = பூவரும்பு — தேன் (பாடபேதம்). புயம் - கைகள் பாசாங்குசம் - பாசமும் அங்குசமும். உம்மைத் தொகை. இனைந்து = வருந்தி - இரங்கி. இருகை – கீழேயுள்ளனவாகிய இரண்டு கைகள். இருப்பது - இருக்கும் பொருள்கள். இனி - மேற்சொல்லப்படும்.

அனங்ககுசுமை முதலாக, அனங்கமாலினியீறாக எடுத்துச் சொல்லப்பட்ட சத்தியர் எண்மரும் புவனா பதியைப் புனைந்தும், பூசித்தும், போற்றியும் சூழ்ந்து நிற்பர். அவர்களுக்குரிய கைகள் நான்கனுள், மேலேயுள்ள கைகள் இரண்டனுள் இடப்பால் பாசமும், வலப்பால் அங்குசமும் அமைந்துள்ளனவாம். கீழேயுள்ள கைகளில் ஏந்தியிருக்கும் பொருள்கள் இனிக்கூறப்படும் என்பதாம். அவற்றை அடுத்து வரும்மந்திரத்திற்காண்க.

இதுவும் அது

346. இனியிரு கையில் இருப்பது வட்டில்
தனியால வட்டம் தாம்பூலம் சத்திரம்
புனைசா மரங்கிளி மாலை புடவை
தனியிவர் எண்மருந் தவங்கேட்பதுவே.

பாடபேதம்

தலைப்பு: தோழியர் எண்மரின் கைகளில் இருப்பவை.

1. இனியது கையில் இருப்பது - இனிய திருகையிருப்பது வட்டிலத்
2. வட்டமுந், தாம்பூல சத்திப்.
3. புனைசாய மாங்கிளி-வனைசாய மாங்கிளி. புடைவை. பிடவை. [புனை சாமரங் - வனைசாமரங் - மூல பாடம் ஊகம்].
4. தனியே யிவர்கள்.

குறிப்புரை

இம் மந்திரம்; அஷ்டசத்திகளின் தியானத்திருவுருவத்தினை உணர்த்து முகத்தால், அவர்களின் ஏனையிருகைகளினும் அமைந்துள்ள பொருள்களை உணர்த்துகின்றது.

இனி - முன்னர் உரைக்கப்பட்ட 4-கைகளில் மேலேயுள்ள 2 கைகளிலும் இருக்கும் பாசாங்குசங்கள் தவிர-இனி என்க. இருகையில் - கீழேயுள்ள 2 கைகளிலும். இருப்பது = இருத்தல் - இருக்கும் பொருள்கள் (1) வட்டில் = படிக்கம் - தம்பலம் உமிழுங்கலம். இஃது எண்கோணவடிவாய் எள்ளுப்பூப் போன்றிருக்கும். (2) ஆல வட்டம் = தால விருந்தம் - விசிறி (3) தாம்பூலம் - வெற்றிலைக்காளாஞ்சி. (4) சத்திரம் - குடை (வெண்கொற்றக்குடை). (5) சாமரம் = வெண்சாமரம் - கவரி (6) கிளி - பச்சைக்கிளி - பஞ்சவர்ணக்கிளி. (7) மாலை - பூமாலை. (8) புடவை ஆகிய இவை 8-ம் சத்தியர் எண்மரின்

கீழேயுள்ள 2 கைகளிலும் ஏந்தியிருக்கும் பொருள்களாகும். புனை = பொலிவு - அழகு. வனைதல் - அலங்கரித்தல். தனி = தனிமை - ஒப்பில்லாத. இவர் எண்மர் - மேலே சொல்லப் பட்ட அனங்ககுசுமை முதலான எண்மர். கேட்பது = கேட்டல் - செய்யவேண்டும் பணி யாது? என்று வினவுவது. தவம் - கிரியை இறைவிக்குச் செய்யும் திருத்தொண்டினையேயாகும்.

அனங்ககுசுமை முதலான சத்தியர் எண்மரும், முறையே வட்டில் முதலான எண்வகை மங்கலப் பொருள்களையும் ஏந்திய இரு கைகளையுடையவராய்ப், புவனாபதியைப் புடைசூழ்ந்து, அவர் தம் ஆணையை நோக்கிய வண்ணம் நிற்பர் என்பதாம்.

மேற்கோள்

மின்வட்டச் சுடராழி வேங்கடக்கோன் தான் உமிழும்
பொன்வட்டில் பிடித்துடனே புகப்பெறுவேன் ஆவேனோ.
— திவ்யப்பிரபந்தம். 679.

ஏறுமால் யானையே சிவிகையந்தளகம் ஈச்சோப்பி வட்டில்
மாறிவாழ் உடம்பினார் படுவதோர் நடலைக்கு மயங்கினாயே.
— தேவாரம். 2330.

எண்சதுரமாகச் செய்வித்துக் கொடுத்த படிக்கம் ஒன்று.
— சாசனம்.

தாங்கிய கையவை தார்கிளி ஞானமாய்
ஏந்து கரங்கள் எடுத்தமர் பாசமே. — திருமந்திரம். 1382.

அவஸ்த்தாத்ரயாணாம் ஏகீகரணம் தாம்பூலம் ||.
— அதர்வணவேத - பாவநோபநிடதம்.

தவம்முயல்வோர் மலர் பறிப்ப. — தேவாரம்.

செய்தனவே தவமாக்கும் - என்பனவும், பிறவுங்காண்க.

எண்சத்தியரும், அவர் கரத்தில் உள்ள பொருள்களும்

1. அனங்க குசுமா தேவி - வட்டில் = படிக்கம்.
2. அனங்க மேகலா தேவி - ஆலவட்டம் = விசிறி.

3. அனங்க மதனா தேவி - தாம்பூலம் = வெற்றிலைக் காளாஞ்சி.

4. அனங்க மதனா துராதேவி - சத்திரம் = (வெண் கொற்றக்) குடை.

5. அனங்க ரேகா தேவி - சாமரம் = வெண்சாமரம் கவரி.

6. அனங்க வேகிநீ தேவி - கிளி - பஞ்சவர்ணக்கிளி.

7. அனங்காங்குசா தேவி - பூமாலை.

8. அனங்க மாலிநீ தேவி - புடவை என்பனவாகும்.

தவங் கேட்பதுவே - கேட்பது தவமே என்பது, கூடும் அன்பினிற் கும்பிட லேயன்றி - வீடும் வேண்டா விறலின் விளங்கினார். — பெரிய 143 என்னுந் திருவாக்கினை ஞாபகஞ் செய்கின்றது.

கச்சும் ஒள்வாளுங் கட்டியஉடையர் கதிர்முடி சுடர் விடக் கவரியுங் குடையும் - பிச்சமும் பிறவும் பெண்ணணங் காய பிறைநுத லவர்தமைப் பெரியவர்பேணப் - பச்சமும் வலியுங் கருதிய அரக்கன் பருவரை யெடுத்ததிண் டோள் களையடர் வித்து - அச்சமும் அருளுங்கொடுத்த எம் அடிகள் அச்சிறு பாக்கமதாட்சிகொண்டாரே.

என்னுந் திருவாக்குமீண்டுக் கருதத்தக்கது.

— தேவாரம், 838.

இதுவும் அது

347. கேட்பது சத்தி கிளக்கும் பெரும்புகழ்
தாட்பது பூமுடி சத்தி யிருபதம்
சேட்படுகின்ற சிவசத்தி மேனியைக்
கோட்படக் காட்டுங் குருபரன் கோலமே.

பாட பேதம்

1. கிளைக்கும்.

2. தார்ப்பது - தாற்பது - நாற்பது. யிருப்பதம் - யிருப் பதமும் - யிருபாதஞ்.

3. கேட்படு கின்ற. சிவமூத்தி.

4. கட்டுங். குரவன்.

குறிப்புரை

இம் மந்திரம்; சத்தி யெண்மரின் செயலினையும், அவர் தம் சொருபத்தையும் உணர்த்துகின்றது.

கேட்பது = கேட்டல் - கேள்வி - செவியாற் கேட்கப் படுவது. கிளத்தல் - சொல்லுதல். கிளவி - சொல் கிளக்கும் - வேதாகமங்களில் விதந்து கூறப்படும். பெரும்புகழ் = சீர்த்தி - மிக்கபுகழ். சீர்த்தி மிகுபுகழ் - தொல். சத்தி = புவனை - புவனாபதி. தாட்பது பூ முடிசத்தி இருபதம் - முடிதாழ்ப்பது சத்தி இருபதப்பூ என்க. தம்முடைய முடிகளிலே சூடிடும் மலர் புவனாபதியின் இரண்டாகிய திருவடித் தாமரை மலர் களேயாம். தாட்பது = தாழ்ப்பது - தாழ்த்தல் -- தாழ்தல் - விரும்புதல் - தங்குதல் வணங்குதல். தாழ்ப்பது என்பது, திகட சக்கரம் (-கந்தபு-காப்பு) என்புழிப் போலத்தாட்பது என நின்றது. தாழுதல் வேண்டுஞ் சென்னி — கந்தபு சேண் = ஆகாயம் - ஞானாகாயம்; என்றது சுத்தமாயைக்கும் அப் பாற்பட்ட சிற்றம்பலத்தையென்க. சேட்படுகின்ற சிவசத்தி — சித்தமுஞ் செல்லாச் சேட்சியன் காண்க — திருவாசகம் 3 : 41. கோட்படக் காட்டல் — ஞானமுத்திரையால் உளங்கொள உணர்த்துதல். உணர்வரிய மெய்ஞ் ஞானம், உரையால் உணர்த் தலாகாமையின் இறைவன் மோனமுத்திரையால் உணர்த்தி யதைக் கருதிக் காட்டும் என்றார். குருபரன் : (1) குரு (2) பர குரு (3) பரா பர (பரமேஷ்டி) குரு என மூவகை என்பர். கோலம் = திருவுருவம் — காரணம் பற்றி மேற்கொண்டருளும். அருளுருவம். குருபரன் கோலம் — ஞானாசிரியரின் திருவுருவம்

பாடபேதம் : கிளைத்தல் — முடிவுபெறாமல் மேலோங்கி வளர்தல்.

மேற்கோள்

அந்தமில் புகழாள் மலைமாதொடும் ஆதிப்பிரான்
—தேவாரம் 2812

அற்றமில் புகழாள் உமை நங்கை — 7849

எல்லையில் புகழாள் உமை நங்கை — 7852

எண்ணில் தொல்புகழாள் உமை நங்கை — 7854

அந்தமில் புகழாள் உமை நங்கை — 7855

பரந்த தொல்புகழாள் உமை நங்கை — 7856

குறியறி விப்பான் குருபரன் ஆமே — திருமந்திரம் 119

குருவாய் வருஞ்சத்தி கோன் — 2481

கோல முடைய குருபரன் அல்லது — 348

குருபரன் காட்டுங் குறியை அறிந்து — 353

அருபரத் தொருவன் அவனியில் வந்து
குருபரன் ஆகி அருளிய பெருமையை — திருவாசகம்

குமரகுருபர முருக குகனே — திருப்புகழ்

முப்பது மாறாறு முப்பதும் வேறான முத்திரையாமோனம் அடைவேனோ

இருந்தபடி இருந்து காட்டிச் — சொல்லாமற் சொன்னரை
— திருவிளையாடல்

நீர் அடையும் முத்தி—இம்முறையாமென நால்வர்க்கு
இருவிரற்சின் முத்திரையால் இயம்பி
— திருவாவடுதுறைப் புராணம்

மார்பொடுவிளங்க ஒரு கை — திருமுருகு

ஞானங் காட்டுவர் நன்னெறி காட்டுவர் — தேவாரம் 5486

கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலம் நீடி — பெரிய புராயணம்

கழற் சேவடி கை தொழக் — கோலத்தாய்

— தேவாரம் 2803

கோவார் கோலங் கொண்ட கொள்கையும்

— திருவாசகம் 2 : 72

மறையோர் கோலங் காட்டியருளலும் — 3 : 93

20 - ஆம் அதிகாரம் - புவனாபதியின் தியான சொரூபம்

புவனாபதியின் திருவுருவம் குருபரன் கோலமே.

348. கோல முடைய குருபரன் அல்லது
ஞால மதனில் நயந்தறி வாரில்லை
சீல முடைசிவ சத்தியைக் காண்பவர்
காலம் ஒழியக் கருத்துணர்ந் தாரே.

பாடபேதம்

1. குரவன்.
2. சீலமுடைய சிவசத்தி காண்பவர் — சீலமுடைய சிவ சத்தியைக் காண்பது — சீலமுடைய சிவசத்தி காண்ப தோர் — சீலமுடைய சிவசத்தி காண்பதேன்.
3. ஆலமமரும் அருட்சத்தியல்லது — அருள் சத்தியல்லது — சீலமுடைய சிவசத்தியைக் காண்பவர் — சீல முடைய சிவசத்தியைக் கண்டபின்.
4. காலமுடைய கருத்துணர்ந்தோரே - கருத்துணர்ந் தோரெச்சமதே. தோரே.

இம்மந்திரம்; புவனாபதியின் திருவுருவும் குருபரன் கோலமே என்பதனை உணர்த்துகின்றது.

கோலம் = அழகு - அருட்டிருமேனி. குருபரன் - ஞானாசிரியன். ஞாலம் - உலகம். நயத்தல் = விரும்புதல் - அன்புறல். அறிவார் = அறிவிப்பவர் - உணர்த்துபவர். சீலம் = நிலை - சுபாவம் - சொரூபவியல்பு - சௌலப்பியம் - சுலபமா (எளிதா) ந்தன்மை. அதாவது; மிகவும் உயர்ந்தவன், மிகவும்

இழிந்தவனுக்கு இரங்கி வந்து எளியவனாதல் அருபரத்தொருவன் அவனியல்-வந்து குருபரனாகி அருளிய பெருமையை-திருவாசகம். 4: 75-76. ஆதியை அமரர் தொழுதேத்துஞ் - சீலந்தான் பெரிதும் உடையானை - தேவாரம். 7848. (ஈடு 6 10 : 10) சிவசத்தி - எல்லா வுலகுயிர்கட்கும் அப்பனும் அம்மையுமாயுள்ள புவனாபதி. காண்டல் = உணர்தல் - வழிபடுதல் - தியானித்தல். காலம் ஒழிய = காலதத்துவம் இல்லையாக - பிறப்பிறப் பில்லையாக கருத்து = கருதப்பட்டது - கருதப்படும் பொருள் - தியேயப்பொருள் - சிவம். சிவஏகோத்தியேய:| ஸர்வமந்யத் பரித்யஜ்ய | இதி அதர்வ சிகாஸமாப்த: || - அதர்வ சிகையின் முடிவு.

இறைவனே குருவாய் வந்து உணர்த்துவதன்றிப் பிறரில்லை சிவசத்தி சொரூபமாகிய புவனாபதியின் திருவுருவம் குருபரன் கோலமே. அப்பரம் பொருளைத் தியானித்து உணர்ந்தவரே தத்துவ மிறந்தஅத்து விதமுத்திப் பேற்றை அடைவர் என்பதாம்.

மேற்கோள்

மூவாப் பசுபாசம் மாற்றியே முத்திப்பால்
யாவையும் நல்குங் குருபரன் அன்புற்றே
— திருமந்திரம். 1577.
சுத்த சிவன் குருவாய் வந்து — 1578.
கூறு சமயக் குருபரன் நானென்றும். — 2758.
கூடிய கோலங் குருபரன் கொண்டாட — 2760.
குரவனாய் எங்கணுங் கூத்துகந் தானே. — 2761.
குருவுரு வன்றிக் குனிக்கும் உருவம்
அருவுரு வாவதும் அந்த வுருவே
திரிபுரை யாகித் திகழ்தரு வாளும்
உருவரு வாகும் உமையவள் தானே. — 2762.
திருவழி யாவது சிற்றம் பலத்தே
குருவடி வுள்ளாக் குனிக்கும் உருவே —
சீய குரு நந்தி திரு அம் பலத்திலே
ஆயுறு மேனியை யாரும் அறிகிலர்,

தீயுறு செம்மை வெளுப்பொடு மத்தன்மை
ஆயுறு மேனி அணை புகலாமே — 2802,
குரு வன்றி யாவர்க்குங் கூட வொண்ணாதே — 2840.
அஞ்சன மேனி அரிவை யோர் பாகத்தன்
அஞ்சோ டிருபத்து மூன்றுள ஆகமம்
அஞ்சலி கூப்பி அறுபத் தறுவரும்
அஞ்சா முகத்தில் அரும்பொருள் கேட்டதே — 57.
ஆகமங்கள் எங்கே அறுசமயந் தானெங்கே
யோகங்கள் எங்கே உணர்வெங்கே - பாகத்து
அருள் வடிவுந் தானுமாய் ஆண்டிலனேல் அந்தப்
பெருவடிவை யாரறிவார் பேசு.
— திருக்களிற்றுப்படியார். —6

ஆரணம் ஆகமங்கள் அருளினால் உருவு கொண்டு
காரணன் அருளா னாகில் கதிப்பவர் இல்லை யாகும்
நாரணன் முதலாயுள்ள சுரர்நரர் நாகர்க் கெல்லாம்
சீரணி குருசந்தானச் செய்தியும் சென்றிடாவே - சித்தி. 66
சத்தியுஞ் சிவமும் ஆய தன்மை இவ் வுலகம் எல்லாம்
ஒத்தொவ்வா ஆணும் பெண்ணும் உணர்குண குணியும் ஆகி
வைத்தனன் அவளால் வந்த ஆக்கமிவ் வாழ்க்கை எல்லாம்
இத்தையும் அறியார் பீட லிங்கத்தின் இயம்பும் ஓரார் - 89.
சிவஞ்சத்தி தன்னை ஈன்றும் சத்திதான் சிவத்தை ஈன்றும்
உவந்திரு வரும்புணர்ந்திங் குலகுயிர் எல்லாம் ஈன்றும்
பவன்பிரம சாரி யாகும் பான்மொழி கன்னியாகும்
தவந்தரு ஞானத் தோர்க்கித் தன்மைதான் தெரியும்
அன்றே. — 167·

மதிநுதல் மங்கையோடும் வடபாலிருந்து மறைஓதும்
எங்கள் பரமன். — தேவாரம். 2391.

கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி இங்கு
நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச் செங்கமலப் பொற்
பாதம் தந்தருளும் சேவகனை. — திருவாசகம். 171.
(குழலியுடன் குருவுருவாய் எழுந்தருளி அருளும் சேவகன்
என்க.)

பந்தணை விரலியும் நீயும் நின் அடியார்
பழங்குடில் தொறும் எழுந்தருளிய பரனே. — 373.
கனகசபை மேவும் எனது குருநாதன் — திருப்புகழ்.
அத்திருமன்றுள் ஆடும் ஐயர் இங்கு என்னையாள
இத்திரு மேனி கொண்டார் - கடவுண் மாமுனிவர்
ஞானக் கூத்தன் ஓர்உருவு கொடு குறுகி —

என்பனவும் பிறவுங் காண்க.

இவற்றால், கோலம் உடைய குருபரனுடைய கோலம் உமையொரு பாகராயிருக்கும் புவனாபதியாரின் தொன்மைக் கோலமாதலை உற்றுணர்ந்து கொள்க.

சுவாநுபவம் அருளல்

திருமூலதேவர் புவனாபதியைப் போற்றியமை.

349. உணர்ந்து கொண் டேனுயிர் உள்நின்ற சத்தியைப்
புணர்ந்து கொண் டேன்புவ னாபதி யாரை
இணங்குகின் றேனெங்கள் ஈசன்ற னோடே
வணங்குகின் றேன்நந்தி வாய்த்த வடியையே.

பாட பேதம்

1. உணர்ந்து கொண் டேனுடலுண்ணின்ற - உணர்ந்து கண்டேயுடல். உடலுன்னி நற்சத்தியை - உணர்ந்து மது கண்டேயுடலுண்ணின்ற சத்தியை - சத்தியே.
2. புணர்ந்து கொண்டேன்சிவன் புத்தியினாலே - உணர்ந்து கொண்டேனென் புத்தியினாலே - உணர்ந்து கொண்டேன் புத்தியினாலே - உணர்ந்து கொண்டேனென்.
3. ஈசன்றன்னோடே.
4. உணங்குகின்றேனந்தி. வாய்த்த வடிவே - வாய்த்த வடியே - வகுத்த வடிவே - வகுத்த வடியே - வரத்த வடியே.

குறிப்புரை

இம்மந்திரம்; ஆசிரியர் திருமூல தேவநாயனார் புவனா பதியாரைப் போற்றி உபாசித்தமையை உணர்த்துகின்றது.

உயிருள் நின்ற - உயிர்க்குயிராய் நின்ற. சத்தி - புவநேசுவரி. புணர்தல் = இரண்டறக்கலத்தல் - அத்துவிதமாதல். இணக்கம் - இசைவு. ஈசன் - இறைவன் - நந்தி = சிவபெருமான் - நந்தியெம் பெருமான் - வாய்த்தல் = பெறுதல் - மாட்சிமை (-திவா). அடி - திருவடி.

உயிர்க்குயிராயுள்ள இறைவியை உணர்ந்தேன். புவனா பதியாருடன் அத்துவிதமானேன். எங்கள் இறைவனோடு இயைந்தேன். எமது முதற் பெருங்குரவராகிய நந்தியெம் பெருமானுடைய பெருமை பொருந்திய திருவடிகளை வணங்கு கின்றேன் என்பதாம்.

யான் பெற்றபேறு பெறுக இவ்வையகம் - என்னுங் கருணையினால் சுவாநுபவம் அருளிய தனானே, நீவிரும் புவனா பதியாரை உணர்ந்து, புணர்ந்து, இணங்கி, வணங்கி உய்மின் என்றவாறாம்.

மேற்கோள் - ஒப்புமைப் பகுதி

நந்தியை நாளும் வணங்கப் படுமவர்
புந்தியி னுள்ளே புகுந்து நின்றானே — திருமந்திரம். 27

உயிர்க்குயிராய் நிற்றல் ஒண்ஞான பூசை — 1444.

ஆவிக் கமலத்தின் அப்புறத் தின்புற
மேவித் திரியும் விரிசடை நந்தியை 1842.

உரைசேரும் எண்பத்து நான்கு நூறாயிரமாம் யோனிபேதம்
நிரைசேரப் படைத்து அவற்றின் உயிர்க்குயிராய்
அங்கங்கே நின்றான் கோயில் — தேவாரம் — 1419.

ஆன்மாவின் இடமதாகி — உசிர்ப் பெனும் உணர்வும்
வள்ளார் — 4603

உள்ளமாய் உள்ளத்தே நின்றாய் போற்றி — 6570.

ஊனாகி உயிராகி அதனுள் நின்ற உணர்வாகிப்
பிற அனைத்தும் நீயாய் நின்றாய் — 6864.

மாற்கரிய செம்பதத் தோன் தேவியாகி வல்வினையேன்
எனது ஆவிக்கு ஆவியாகி ... நின்ற ... உமையாள்
— கந்தபு - சுருக்கம்.

புவனாபதி

இருந்தவக் காரணங் கேளிந்திரனே
பொருந்திய செல்வப் புவனாபதியாம்
அருந்தவச் செல்வியைச் சேவித் தடியேன்
பரிந்துடன் வந்தனன் பத்தியினாலே.
— திருமந்திரம். 75.

புகுந்தறி வான் புவனாபதி அண்ணல் — 397.

அருள் பெற்ற வாசொல்ல வாரீர் மனிதர்
பொருள் பெற்ற சிந்தைப் புவனா பதியார்
மருளுற்ற சிந்தையை மாற்றி அருமைப்
பொருளுற்ற சேவடி போற்றுவன் யானே. — 1071.

போற்றியென் பேன் புவனாபதி அம்மை யென்
ஆற்றலுள் நிற்கும் அருந்தவப் பெண்பிள்ளை — 1150.

உணர்ந்தொழிந் தேனவ னாமெங்கள் ஈசனைப்
புணர்ந்தொழிந்தேன்புவனாபதி யாரை — 1250.

தந்திரம் - 4. அதிகாரம் - 12. புவனாபதிசக்கரம்.
செய்யுள். 1307 — 1318.

பூவைப் புவனா பதியைப்பின் பூசியே. — 1314.

பூசிக்கும் போது புவனா பதிதன்னை . . .
தியானமது செய்யே. — 1315.

பொய்யிலன் மெய்யன் புவனா பதியெந்தை — 1996.

எம்மிறை - பொங்கிநின்றான் புவனாபதி தானே. — 2837.

பொங்கி நின்றான் புவனாபதி புண்ணியன் — 3021.

புவனா பதி மிகு புண்ணியன் எந்தை
அவனே உலகில் அடர்பெரும் பாகன் — 3039.

என்பனவும் பிறவுங்காண்க. இவற்றுள், ஆண்பாலாகவும், பெண் பாலாகவும் வைத்துப் போற்றப் பெற்றிருத்தலினாலே, மாதொரு கூறனாயிருக்குங் குருபரனது தொன்மைக் கோலமே புவனாபதியின் திருவுருவம் என்பதனை உணர்ந்து கொள்க.

21-ம் அதிகாரம் – புவனாபதி சக்கரத்தின் சொரூபம்.

350. அடி நிலம் நீரங்கி ஆடிடும் வாயு
முடிநின்ற வாகாயம் முற்றிய சத்திகள்
இடை நின்ற சக்கரம் வீசம் இலக்கம்
வடிவென்று சொல்லி வகுத்த படியே

பாடபேதம்

1. அடியினீரங்கி. ஆடியவாய.
2. முடிகின்ற வாகாசம் – வாகாசமுட்டிய. சத்தி – சத்திகள் — சத்திக்.
3. இடை நின்ற – விடைநின்ற – கிடைநின்ற. சக்கர பீஜ மிலக்கம் - சக்கரம் பீச - சத்திக்கரம் வீச – சத்திக்கரம் பீச - சத்திக்காம் பீச.
4. வகுத்த படிவமே.

குறிப்புரை

இம்மந்திரம்; இந்தப் புவனாபதி சக்கரத்தை உலகின் உருவமாகத் தியானிக்குமாறு உணர்த்துகின்றது.

அடி = முதல் - திருவடி. அங்கி = அக்நி = தேயு. ஆடுதல் = அசைதல் - இயங்குதல். முடி - உச்சி. முற்றுதல் - தங்குதல் - மதுரைக் காஞ்சி. சூழவிருத்தல். சத்திகள் - அஷ்டசத்திகள். இடை = இடம் - நடு - நடுவிடம் சக்கரம் = வட்டம் – உலகம் - இயந்திரம். வீசம் = மந்திர மூல எழுத்துகள் - பீஜாக்ஷரங்கள் இலக்கம் – எண் வினையேவல்களுக்கு முரிய எண்கள். படி = பூமி - உருவம் - ஒப்பு - விதம்.

பொதுவியல்பில் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய ஐம்பெரும் பூதங்களிலும், அவற்றானியன்ற புவனங்களிலும் விரவியிருக்கும் இறைவிக்கு, இந்த இயந்திரமும் அம்முறைமையில் திருமேனியாகும் என்பதாம்

இதனானே இவ்வியந்திரம் புவனாபதி சக்கரம் என்னும் பெயரினைப் பெற்றதென்க.

மேற்கோள்

உரம் அடி மேதினி உந்தியில் அப்பாம்
விரவிய தன் முலை மேலைக்கீழ் அங்கி
கருமுலை மீமிசை கைக்கீழிற் காலாம்
விரவிய கந்தரம் மேல வெளியாகுமே.

— திருமந்திரம். 1974.

தெய்வச் சுடரங்கி ஞாயிறுந் திங்களும்
வையம் புனல் அனல் மாருதம் வானகம்
சைவப் பெரும்பதி தாங்கிய பல்லுயர்
ஐவர்க் கிடமிடை யாறங்க மாமே

— திருமந்திரம். 2004.

பரந்துஞ் சுருங்கியும் பார் புனல் தேயு
நிரந்த வளியொடு ஞாயிறு திங்கள்
அரந்த அரனெறி யாவது வாகித்
தரந்த விசும்பொன்று தாங்கிநின்றானே — 2458.

நிலம் நீர் தீவளி விசும்போடு ஐந்துங்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின் — தொல். 1589.

உலகமே உருவ மாக யோனிகள் உறுப்பதாக
இலகுபேரிச்சா ஞானக்கிரியையுட் கரணமாக
அலகிலா உயிர்ப்பு லன்கட் கறிவினையாக்கி ஐந்து
நலமிகு தொழில்க ளோடும் நாடகம் நடிப்பன் நாதன்

— சித்தி. 237.

நின்றது சக்கரம் நீளும் புவியெல்லாம்

— திருமந்திரம். 948.

வித்தாம் செகமய மாக வரை கீறி
நத்தார் கலைகள் பதினாறும் நாட்டி — 991.

அண்ட முதலாய் அவனி பரியந்தம்
கண்டதொன் றில்லைக் கனங்குழையல்லது — 1210.

ஞாலம தாக விரிந்தது சக்கரம் — 1259.

புவனாபதி சக்கரம் — புவனபதி மூல மந்திர வித்தை.

ககராதி ... அ (ஹ) கராதி .. சகராதி ...
ககராதி மூவித்தை
— திருமந்திரம் - 300-2. 3000-1307.

புவனங்களின் தொகை - 3. சுவர்க்க மத்திய பாதாளம் - பூலோக புவலோகம் சுவலோகம் - திரிபுவனம். வகை - 7 - 14 - 21. சப்தலோகம் சதுர்த்தச புவனம் என்றும் சொல்லப்படும். விரி - 224 புவனங்கள்.

பூலோக புவலோக சுவலோகமாய்-தேவாரம். 7172.
மும்மைப் புவனங்களின் மிக்கதன்றே அம்மூதூர்.
-பெரிய. 979.

பூத்தவ ளேபுவ னம்பதி னான்கையும் - அபிராமி. 13.

மூவேழ் அடுக்கிய உலகம்-
முப்புர மாவது மும்மல காரியம். - திருமந்திரம். 343.
மேதினி - ஒத்திரு நூற்றிருபான் நான்கு - 2184.

என்பனவும் பிறவும் 343 ஆம் திருமந்திரக் குறிப்பும் காண்க.

இவை அண்டத்தும் பிண்டத்தும் ஒப்ப உள்ளனவாம். இந்தப் புவனங்கட்கெல்லாம் அதிபதி புவனாபதியார். அவர் தம் மூலமந்திர வித்தையில் அமைந்துள்ள 3-கண்டங்களும் புவனங்களின் தொகையினைக் குறிக்கும். சக்தி சிவாத்மக சொரூபமான ஏகாக்ஷரம் நீங்கலாகவுள்ள பீசங்கள் - 14ம் வகையினைக் குறிக்கும். அக்கர இலக்க நூலின் முறைப்படி 3 - கண்டங்களிலும் முதலில் நிற்கும் க — ஹ — ச — என்பன 3-ம் முறையே 2 - 2 - 4. ஆகிய எண்களைக் குறிக்கும் முறைமையில் அவை - 224 புவனங்களின் விரிவைக் குறிக்கும்.

மந்திர பீசாக்கரங்கள் - 15. இவ்விலக்கத்தைக் கடபயாதி வாக்கியக் கணன முறைப்படி அவரோகக்கிரமமாக - பின்முன்னாகக் காண எல்லா மந்திரங்களுக்கும் எல்லாச் சொற்பிரபஞ்சங்களுக்கும் மூலமாய் நிற்கும் 51 வர்ணாத்து வாவைக் குறிக்கும். வாசக வாச்சிய சம்பந்தத்தால் இந்த 15 - எழுத்து வித்தையானது சொல்லும் பொருளுமாயுள்ள இருகூற்று உலகிற்கும் மூலமாயிருக்கும தத்துவக் குறிப்பினையும் ஓர்ந்து உணர்நது கொள்க. விரிக்கிற் பெருகும்.

இதுவும் அது

351. படிபதி னாறறை பற்றிய தேதேர்
அடிமதி யாதித்தன் ஆகும் உருளை
வடிவிலி வேதம் வகுத்த புரவி
கடவிய பாகனுங் காணான் முகனுமே.

பாடபேதம்

1. படிபதினாற் பாறிய தேகுரு - படிபதி நாற்பாதியதே குரு - படிபதி நாற்பாதியதே குரு - படிபதினாற் பாதியதே குரு - பாடியதே குரு - பற்றிய தேரு - பற்றியதேரும்.
2. மடிமதி - வடிமதி. ஆகுமுருளை.
3. வடிவிலே.
4. கடுகிய. கரநான் - கானான். முகனே.

குறிப்புரை

இம்மந்திரம்; இவ்வியந்திரத்தினைத் தேரின் உருவமாகத் தியானிக்குமாறு உணர்த்துகின்றது.

படி - பூமி. பதினாறு அறை - இயந்திரத்தில் உள்ள 16 - அறைகள். பற்றியதே - பொருந்தியுள்ள இயந்திரமே தேர் - தேராகும். அடி = அடிநிலை - ஆதாரம். மதி = திங்கள் - நிறைமதி. ஆதித்தன் - ஞாயிறு. உருளை - உருள் - தேரின்

சில்லு - சக்கரம். வேதம் நான்கும் எழுதாக்கிளவியாதலால் வடிவிலி வேதம் என்றார். வகுத்தல் = கூறுபடுத்தல் - அமைத்தல் புரவி - குதிரை. கடவுதல் - செலுத்துதல். பாகன் = தேர்ப்பாகன் - சாரதி. காண் - முன்னிலையசை யிடைச்சொல். நான்முகன் - பிரமதேவன்.

16 - அறைகளைக் கொண்ட புவனாபதி சக்கரமாகிய ஆழிக்கு ஞாயிறும், திங்களும் உருளைகள் ஆகும். மறைகள் நாலும் குதிரைகள் ஆகும். இயக்கும் வலவன் நான்முகக்கடவுளாவன் என்பதாம்.

இறைவி இனிது வீற்றிருக்கும் இயல்பு பற்றியும், இயங்குமியல்பு பற்றியும், புவனாபதி சக்கரம் என்னும் பெயர் ஒப்புமைபற்றியும் இச்சக்கரத்தைத் தேராகக் கூறினார். சக்கரம் = வட்டம் - தேர் - தேரின் உருளை - பூமி.

வேதப் புரவிகளுடன் இயைபுடைமை பற்றி நான்முகன் பாகனாயினான்.

மேற்கோள்

கல்லால் நிழற் கீழாயிடர் காவாயென வானோர்
எல்லாம் ஒரு தேராய் அயன் மறைபூட்டி நின்றுய்ப்ப
— தேவாரம். 113

அந்தகனை அயிற்சூலத் தழுத்திக் கொண்டார் அருமறையைத் தேர்க்குதிரை யாக்கிக் கொண்டார்
... தந்திரமந்திரத்தரா யருளிக்கொண்டார் — 7187.

தேர்முன் நின்ற திசைமுகன் காண - வானோராகிய தேரில் நான்மறைக் கடும்பரி பூட்டி தேர்முன்னின்ற திசைமுகன் காணும்படி — சிலப். 6: 44. அடியார்க்.

ஆதி அந்தணன் அறிந்து பரிகொளுவ
வேதமா பூண்ட வையத்தேர் ஊர்ந்து
— நான்முகனாகிய பாகன்

கொளுமாறறிந்து செலவினைக் கொளுவ, வேதங்களாகிய குதிரைகள் பூண்ட தேரையேறி
— பரிபாடல். 5: 22 - 24. பரிமேல்.

எழுதாத புத்தகத் தேட்டின் பொருளைத்
தெருளாத கன்னி தெளிந்திருந் தோத
— திருமந்திரம். 2885.

சக்ரராஜ ரதாரூட ஸர்வாயுத பரிஷ்க்ருதா
— ஸ்ரீசக்ரமாகிய தேரில் இருக்கும் படியான எல்லாப் படைக்கலங்களினாலும் அணிசெய்யப்பட்டவர்.
— லலிதா ஸஹஸ்ர நாமம். 68

கேய சக்ர ரதா ரூட மந்த்ரிணீ பரிஸேவிதா —
கேய சக்ரம் என்னுந் தேரில் இவர்ந்திருக்கும் மந்திரிணீ தேவியால் வழிபடப்பட்டவர். ||
கேயம் = பிரசித்தம் - சிறப்பு. — 69.

கிரி சக்ர ரதா ரூட தண்ட நாத புரஸ்க்ருதா — கிரிசக்ரம் என்னுந்தேரில் இவர்ந்திருக்கும் தண்டநாதை (வராகி) யை. முன்னிட்டிருப்பவர். || — 70.

சக்ர ராஜ ரதோ யத்ரதத்ரகேய ரதோத்தம: |
யத்ர கேய: ரதஸ் தத்ர கிரி சக்ர ரதோத்தம: ||
ஏதத் ரதத்ரயம் தத்ரத்ரை லோக்யமிவ ஜங்கமம். ||
என்பனவும் காண்க.

இதுவும் அது

352. நான்முகன்றாதையும் நாடாத சத்தியை
வான்முகம் நாடி வகுத்தவிச் சக்கரம்
ஊன்முக மாகி உதித்தே முலகத்தைப்
பான்முக மாகிப் பறந்திடும் எட்டிலே.

பாடபேதம்

1. றாதையு. நாட்டாத. சத்தியே. நான்முக நாதையு
2. வான்முகநாடி.
3. ஊன்முகமாகியுதித் தெழுமுலகைப் - ஊன்முகமாக வுதித் தெழுலோகத்தைப் - மாகியுதித் தெழு மூலத்தைப்.
4. மாகப். பரக்கும் - பரந்தெழும் - பரந்தெ (தி) டும்.

குறிப்புரை

இம்மந்திரம்; இப்புவனாபதியந்திரத்தின் இயல்பினை உணர்த்துகின்று.

நான்முகன் - பிரமன். தாதை - திருமால். உம்மை உயர்வு சிறப்பு. நாடுதல் = விரும்புதல் - ஆராய்தல். நாடி நாரணன் நான்முகன் இந்திரன் தேடியுந்திரிந்துங் காண - வல்லரோ - தேவாரம். வான்முகம் = மேலாகிய இடம் - வீட்டுலகம். நாடி - விரும்பி. வகுத்தல் = நியமித்தல் - விதித்தல். வகுத்தான் வகுத்த வகையல்லால் - திருக்குறள். 377. இச்சக்கரம் - இந்தப்புவனாபதி சக்கரம். ஊன்முகம் ஆகி - காமியப்பயன்களையும் அளிப்பதாகி. அவை எண்வகைக்கன் மசித்திகளும், அட்டமாசிதித்களும் முதலியன. ஞானசித்தியாகிய முத்திப்பயனை நோக்க இவை இழிந்தனவாதல்பற்றி ஊன்முகம் எனப்பட்டன. வேண்டார்கள் கன்மம் விமலனுக்காட்பட்டோர்- வேண்டார்கள் கன்ம மதி லிச்சையற்றபேர் - வேண்டார்கள் கன்மம் மிகுசிவயோகிகள் - வேண்டார்கள் கன்மம் மிகுதி யோராய்ந்தே- திருமந்திரம். 1008. என்பது மறிக. எனவே இந்தப் புவனாபதி சக்கரமானது, புத்தியையும் முத்தியையும் அளிக்கும் என்ப தாயிற்று. ககராதிவித்தை காமிய முத்தியே - 2. யாவர்க்கும் எட்டா இயந்திர ராசனை - நீ வைத்துச் சேமி நினைந்தது தருமே — 1318. என்பனவும் ஈண்டு நோக்கத் தக்கன. பால் = பகுதி - பான்மை - திக்கு. எட்டு = எண்வினை யேவல் - அட்டகன்மப் பிரயோகம், தொகைக்குறிப்புமொழி.

பெருங்கடவுளர் மூவராலும் உணர்தற்கரிய சிவசத்தி சொரூபமாயும், வீடுபேற்றுக்குச் சாதனமாயும் உள்ள இந்தச் சக்கரமானது, எல்லாப் புவனங்களிலும் இயங்கி எல்லாக் காமியப்பயன்களையும் அளிக்க வல்லது என்பதாம்.

இறைவியின் வடிவமே யாவும் எனல்

353. எட்டுக் குணமும் இசைந்த கரணமும்
பட்டவிப் பூதமும் பாடும் அவத்தையும்
கட்டிய வாயுவும் காணுமா தாரமும்
ஒட்டிய சத்தி உருவது தானே.

பாடபேதம்

1. இசைத்த. கரமும்.
2.
3. கட்டியலாயுவுங்.
4. ஒட்டியச் சத்தி. யுருவது வாமே - யுருவதுமாமே.

குறிப்புரை

இம் மந்திரம் ; எல்லாப் பொருள்களும் இறைவியின் வடிவம் என்பதனை உணர்த்துகின்றது.

எண்வகைக் குணங்களும், எண்வகை வினைகளும், ஐம்பெரும் பூதங்களும், ஐம்பெருந் தொழில்களும், பத்து வாயுக்களும், ஆறு ஆதாரங்களும் ஆகிய யாவும் இறைவியின் உருவமே என்பதாம்.

என்றது அவற்றுக் கெல்லாம் மூலமாய், அவற்றுள் விரவி இயக்கி நிற்றல் பற்றி யென்க. ஸர்வம் சக்தி மயம் ஜகது. || என்னுஞ் சுருதியும் நோக்குக.

குணம் - 8: (1) தன்வயத்தனதல் (2) தூயவுடம்பினனாதல் (3) இயற்கையுணர்வினனாதல் (4) முற்றுமுணர்தல் (5) இயல்பாகவே பாசங்களின் நீங்குதல் (6) பேரருளுடைமை (7) முடிவிலாற்றலுடைமை (8) வரம்பிலின்பமுடைமை. இவை யெட்டும் உபதேச கலையால் எய்தப் பெறும் ஞானசித்திகளாம்.

கரணம் = செயல் - கன்மம், அவை வசியம் முதலான அஷ்ட கன்ம சித்திகளும், அணிமாமுதலான அட்டமாயோக சித்திகளுமாம். இவையிரண்டும் முறையே தந்திர கலையாலும், மந்திர கலையாலும் எய்தப் பெறும் கிரியா சித்திகளும், யோக சித்திகளும் ஆகும்.

படுதல் - தோன்றுதல். பூதம் - நிலமுதலாகிய ஐம் பெரும் பூதங்கள். பாடும் அவத்தை - படும் என்பது நீட்டம் பெற்றது. படுதல் - உண்டாதல். அவத்தை - நிலை. கட்டியவாயு -

பிராணாயாமம் ஆதாரம் - மூலாதராமுதலாகிய 6 - ஆதாரங்கள். ஆதாரம் = இடம் - சார்ந்திருக்குமிடம். ஒட்டுதல் - பொருந்துதல். ஒட்டு - மறைவு.

22 - ஆம் அதிகாரம் - சக்கரபூசை

இயந்திரத்தை வரைதற்குரிய பொருள்கள்.

354. உருவது வாக உரைத்த சக்கரம்
குருபரன் காட்டுங் குறியை யறிந்து
கருதிய கன்மத்தைக் காட்டிட வேண்டி
வரைவது பட்டோலை வான்செம்பு பொன்னாமே.

பாடபேதம்

1. உரைத்த விச்சக்கரங்.
2.
3. கருமத்தை. கட்டிட
4. பொன்னே - பொன்னுமே.

குறிப்புரை

இம்மந்திரம்; இவ்வியந்திரத்தினை வரைவதற்குரிய பொருள்களை உணர்த்துகின்றது.

குருபரன் - செய். 348. குறிப்புரை பார்க்க. காட்டுதல் - உணர்த்துதல். குறி = குறிப்பு - குறிக்கோள் - கருத்து. குறியறிவிப்பான் குரவன் ஆமே. - திருமந். 119. கருதல் = குறித்தல் - நினைத்தல்: கன்மம் = கருமம் - செயல் - அட்ட கன்மம். வேண்டார்கள் கன்மம் ஆய்ந்தே. - திருமந். 1008. காட்டிடல் = காணுதல் - செய்தல் - தோற்றுவித்தல். முனைவன் கண்டது முதனூலாகும். - தொல். வேண்டி - விரும்பி. வரைவது = வரைதல் - எழுதுதல்; வரை-எழுத்து. வான் = பெருமை - வலிமை. வான்செம்பு - களிம்பு நீங்கிய செம்பு. பட்டோலை - பட்டும் ஓலையும். ஓலை - பனையிதழ்; பட்டையும் ஓலையும் எனினும் அமையும். இப்பொருளில்

பட்டு — பட்டை என்பதன் விகாரம். பட்டை = மரவுரி — பூர்ச்சரப் பட்டை.

இறைவியின் சொரூபமாகச் சொல்லப் பட்ட இந்தச் சக்கரத்தை, அறிவன் செவியறிவுறுத்தியருளிய மந்திரம், தந்திரம், பாவனை முதலியவற்றை நன்கு தெளிந்தபின்னர், எண்ணியகன்மத்தைக் காணவேண்டி வரையத்தக்க பொருள்கள் பட்டும், ஓலையும், செம்பும், பொன்னும் ஆகும் என்பதாம்.

மேற்கோள்

சாற்றிய அக்கர சக்கர மேனியைப் போற்றும் பொன்
செம் பொன் எழிற்பட வெள்ளியில் வரைந்தபின்
— திருமந்திரம். 300:71.

சாதங் கெடச் செம்பில் சட்கோணந் தானிடே.
— 3000–:1311.

கண்டிடு சக்கரம் வெள்ளி பொன் செம்பிடை
— 1323.

ஏய்ந்த மரவுரி தன்னில் எழுதிய — 1366.

என்பனவும் திருமந்திரம்; செய்யுள். 997 – 1002ம் காண்க.

புவனாபதியின் பூசனைக்குரிய பொருள்கள்

354. பொன்னொத்த மேனிப் புவனையின் பூசைக்கு
வன்னத்துக் கேற்ற மலர்கந்த தூபமும்
பன்னொத்த வேதத்திற் பாடும் பதினாறுங்
கன்னிக்கு வைக்குங் கருத்தது வாமே.

பாடபேதம்

1. பொன்னொக்கு. மேனியைப் புவனையைப் பூசிக்க மேனிப் புவனையைப் பூசிக்கும்.

2. மலர்க்கந்த — மலர்க்கெந்த — மலர்க்கெந்த — மலர்க் கொத்த.

3. பன்னொத்த வெந்திரம்பாடும் பதினாறும்-பன்னொத் தவோ (தோ) த்திரம் — வோத்திர — மந்திரம் — தந்திரம்.

4. கருத்தது தன்னிலே — ததுதானே — ததுவாகுமே.

குறிப்புரை

இம்மந்திரம்; புவனாபதியின் பூசனைக்குரிய பொருள்களைத் தொகுத்து உணர்த்துகின்றது.

பொன்னொத்தமேனி என்றது, எண்வினைகட்கும் மூலமாயுள்ள புவனாபதித் திருமேனியின் பொது நிறம் ஆகும். பொன் — செம்பொன் மேனி — நிறம். வன்னம் = வர்ணம் - நிறம். என்றது முன்னர் எண்வினையேவல்கட்கும் உரியனவாகத் தனித்தனியே விதந்து கூறபட்ட திருமேனியின் நிறங்களை. ஏற்ற மலர் கந்தம்—ஏற்ற மலரும், ஏற்ற கந்தமும் என்க. ஏற்றல் = இயலல்—பொருந்துதல். கந்தம்=நாற்றம்—நறுமணப் பொருள்கள் — சந்தனம் முதலியன. எனவே அட்டகன்மப் பிரயோகங்கட்குச் சொல்லப்பட்டுள்ள இறைவி திருமேனியின் நிறத்தினை ஒத்துள்ள நறுமணப் பூக்களும், நறுமணப் பொருள்களும் என்க. கந்தம் — அஷ்ட கந்தம் எனினும் அமையும். தூபம் — நறுமணப்புகை. தூபங் கூறவே இனம்பற்றித் தீபமுங் கொள்ளப்படும். பன்னொத்தவேதம் — பண்ணிசைந்த வேதம். பன்னல் = ஆராய்தல் — சொல்லுதல். பனுவல் = பாட்டு — இசைப்பாட்டு. ஒத்தல் — இசைதல். வேதம் — சிவாகமம் (நீலகண்ட பாடியம்), பாடும் = படுதல்—சொல்லப்படுதல். பதினாறு—16 வகையாகவுள்ள உபசாரங்கள்; வடநூலார் சோடசோபசாரம் என்பர். உபசாரம் = தொண்டு செய்தல். கன்னி — இறைவி.

எண்வினையேவல்கட்குரிய தியானத் திருமேனிகளின் நிறங்களுக்கு ஒத்துள்ளனவாகிய மலர், மாலை, கந்தம் முதலியவற்றாலும், தூப தீபங்களினாலும், 16-வகைப்பட்ட உபசாரங்களினாலும் புவனையைப் பூசித்துப்போற்றி வழிபடுக என்பதாம்,

உபசாரம்: 16-ஆவன.

சோடச உபசாரமாவன: (1) பாத்யம் (2) ஆசமனம் (3) அர்க்கியம் (4) கந்தம் (5) பூ (6) நிவேதனம் (7) புகை (8) விளக்கு (9) ஆராத்திரிகம் (10) கண்ணாடி (11) குடை (12) சாமரம் (13) ஆலவட்டம் (14) நிருத்தம் (15) கீதம் (16) வாத்தியம் என்பனவாம்.

— தத்துவப் பிரகாசம். செய்.79. உரை.

மேற்கோள்

அஞ்சமு தாம்உபசாரம் எட்டெட்டொடும்
அஞ்சலி யோடுங் கலந்தர்ச்சித் தார்களே.

— திருமந்திரம்: 1827.

திருமந்திரம்: செய்யுள். 1004-1005. 1295. 1368-ம் பிறவுங் காண்க.

அஷ்டகந்தம்: கர்ப்பூராகரு கஸ்தூரி ரோசநம் குங்குமம் சிலா||.
சந்தநம் தேவதாருஞ்சேத் அஷ்டகந்தா நுலேபநம் ||

புவனாபதி சக்கரத்தின் இயல்பு.

356. அதுவாங் கருத்தாகும் அச்சிவ சத்தி
பொதுவாம் புகழும் புகல்மந் திரமும்
அதுவா மிலக்கம் அக்கர சக்கரம்
பொதுவாம் பிராணப் பதிட்டையும் போற்றிடே.

பாடபேதம்

1. அதுவாங் கருத்தும் அவள் சத்திசக்கரம் — அதுகருத் தாமவள் சத்திசக்கரம் — அவன்சத்தி—அவள் சத்திச் சக்கரம் — அதுவாங் கருத்தாமவள் சிவசத்தி.
2. போமந்திரமும்.
3. மிலக்கமுமக்கர — மிலக்கமுமாக்கர — அக்கரஞ் — அக்கரச்.
4. பிராணப் பிரதிட்டையும்-பிரதிஷ்டையும். போற்றே.

குறிப்புரை.

இம் மந்திரம்; இந்தப் புவனாபதி சக்கரத்தின் இயல்பினையும், பிராணப் பிரதிட்டை மந்திரத்துக்குத் தோற்றுவாயையும் உணர்த்துகின்றது.

சிவசத்தி — சிவமும் சத்தியுமாகிய தன்மையினையுடைய புவனாபதி. பொதுவாம் — எண்வினையேவல்கட்கும் பொதுவாகும். புகழ் — புவனாபதியினுடைய மெய்மை சேர்ந்த கீர்த்தியும், பிரதாபமும் புகழும். இறைவன் — பொருள்சேர் புகழ் புரிந்தார் மாட்டு — இறைமைக் குணங்கள் இலராயினாரை உடையரெனக்கருதி, அறவில்லார் கூறுகின்ற புகழ்கள் பொருள்சேராவாகலின், அவை முற்றுமுடைய இறைவன் புகழே பெருள்சேர் புகழ் எனப்பட்டது. — திருக்குறள். 5. பரிமேல். புகல் = புகலல் — விரும்புதல் — சொல்லுதல் — அன்புடன் செபித்தல். மந்திரம் — மூலமந்திரம், எண்வினை யேவல் மந்திரம் முதலியன. இலக்கம் அக்கரம் — எண்வினை யேவல்கட்கும் உரிய எண்ணும் எழுத்தும். அக்கரம் — மந்திர மூலஎழுத்து — பீசாட்சரம். சக்கரம் — புவனாபதி சக்கரம். பிராணப் பதிட்டை — பிராணப் பிரதிட்டை மந்திரம். பதிட்டை — பிரதிட்டை — பதியவைத்தல். போற்றுதல் = விரும்புதல் — செபித்தல்.

இந்தப் புவனாபதியின் மூலயந்திரமும், அதற்குரிய மூல மந்திரமும், அதன் கண் வரையப்படும் எண்ணும் எழுத்தும், பிராணப் பிரதிட்டை மந்திரமும் ஆகியவை எண்வினை யேவல்கட்கும் பொதுவாகவுள்ளவை என்பதாம்.

மேற்கோள்

பூசிக்கும் போது புவனா பதிதன்னை
ஆசற்றகத்தினில் ஆவா கனம் பண்ணிப்
பேசிய பிராணப் பிரதிட்டை செய்து
தேசுற் றிடவே தியானமது செய்ய — திருமந்திரம் 1315.

பரனை யானாப் பரிவினாற் பதிட்டை செய்து
திருவிளை 36 : 29

பாசமதகற்றி லிங்கப்பதிட்டையும்
—சீகாளத் – பு. கண்ணி. 149.

மந்திரம் - 40

23 - ஆம் அதிகாரம் - பொது மந்திரம்.

பிராணப் பிரதிட்டை மந்திரம்.

ஓம் அஸ்யஸ்ரீபிராணப் பிரதிஷ்ட்டா மஹாமந்த்ரஸ்ய ப்ரஹ்ம விஷ்ணுருத்ரஸ்ய ரிஷய: ரிக்யசுஸ்ஸாமாதர்வாணீ சந்தாம்சி ஸகல ஜகத் சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரகாரிணீ ப்ராண சக்தி: பராதேவதா ஆம் - பீஜம் | ஹ்ரீம் - சத்தி: | க்ரோம் - கீலகம் | ப்ராணப்ரதிஷ்டாபநே ஜபே விநியோக :॥.

நியாசம்

ஓம் ஆம் - அங்குஷ்டாப்யாம் நம : | ஓம் ஹ்ரீம் - தர்ஜநீப்யாம் நம : | ஓம் க்ரோம் - மத்யமாப்யாம் நம : | ஓம் ஆம் - அநாமிகாப்யாம் நம : | ஓம் ஹ்ரீம் - கநிஷ்டி காப்யாம் நம : | ஓம்க்ரோம் - கரதலகரப்ரஷ்டாப்யாம் நம: | ஓம் ஆம் - ஹ்ருதயாய நம : | ஓம் ஹ்ரீம் - சிரஸேஸ் வாஹா | ஓம்க்ரோம் சிகாயை வஷடு | ஓம் ஆம் - கவ சாயஹூம் | ஓம் ஹ்ரீம் நேத்ரத்ரயாய வௌஷடு | ஓம் க்ரோம் - அஸ்த்ராயபட் | ஓம் ஆம் ஹ்ரீம் க்ரோம் பூர்ப்பு வஸ்வரோமிதி - திக்பந்த : ॥.

தியானம்

ரக்தாம்போதிஸ்த்த போதோல்லஸதருண ஸரோஜாதி ரூடா கராப்ஜை : | பாசங் கோதண்டமிட் சூத்பவமணி குணமப்யங்குசம் பஞ்ச பாணாந் ॥. பிப்ராணா சிருக்கபாலம்த்ரி நயநலசிதா பீந. வட்சோரு ஹாட்யா | தேவீ பாலார்க்க வர்ணாபவது சுககரீ ப்ராணசக்தி: பராந :॥.

லம் - இத்யாதி பஞ்சபூஜா |

மந்திரம்

ஓம் ஆம் ஹ்ரீம் க்ரோம் | க்ரோம் ஹ்ரீம் ஆம் | யரல வசஷஸஹ | ஹம்ஸஸ்ஸோஹம் | ஸோஹம்ஸ : | புவநா (தி)

பதிர் தேவதா 1 அஸ்யாம் யந்த்ரே சிவப்ராண இஹஸ்த்தித: | ஸர்வேந்த்ரியாணி | வாங்மநஸ்த்துவக் சட்சு சுரோத்ர சிஹ்வாக் ராண | வாக் பாத பாணி பாயூ பஸ்த்தாக்யாநி 1 ப்ராணாபா நவ்யாநோதாநஸமா நாச்சாகத்ய | அஸ்மிந்யந்த்ரே சுகம் சிரம் திஷ்ட்டந்துஸ் வாஹா ||. ஹ்ரீம் ஓம் ஹம்ஸ : ||

[இதிப்ராணப்ரதிஷ்ட் டாம் க்ருத்வா | யந்த்ரம் ஸம்ஸ்ப்ருசம் ஜபேது]

அசுநீதே புநரஸ்மாசு சட்சு: | புந : ப்ராணமிஹநோ தேகி போகம் 1 ஜ்யோக்பச்யேம சூர்ய முச்சரந்த மநுமதே ம்ருடயாநஸ்வஸ்தி ||

[கர்ப்பாதாநாதி பஞ்சதச ஸம்ஸ்காரார்த்தம் பஞ்சதசவாரம்ப்ரணவ ஜபம்க்ருத்வா] ஆவாகிதோபவ | ஸந்நி தோபவ | ஸந்நிருத்தோபவ | அவகுண்டிதோபவ | சுப்ரீதோபவ | சுப்ரஸந்நோபவ | சுமுகோபவ | வரதோ பவ | ப்ரசீதப்ரசீத | தேவிஸர்வஜகந் நாதேயாவத் பூஜாவ ஸாநகம் | தாவத்வம் ப்ரீதிபாவேநயந்த்ரே ஸ்மிந் ஸந்நிதிர்ப்பவ || [இதிப்ராணப்ரதிஷ்ட்டா].

பிரதிபேதம்

1. ஓம் ப்ராணப்ரதிஷ்ட்டா மந்த்ரஸ்ய | ப்ரஹ்மா விஷ்ணு ருத்ரஸ்ய ரிஷியா | ஜகத் சகத்ரயாச ஸாமாதர் வாணி (ரிக்ய சுஸ்ஸாமாதர்வாணி) சிருதாமகசி ஜேபித் சிருஷ்காரணி ப்திண (ப்ராண) சக்தி தேவதா | மம் பீஜம் - உ ...

2. ஓம் ப்ராணப்ரதிஷ்டா மந்த்ரஸ்ய ப்ரஹ்மா விஷ்ணு ருத்ரஸ்ய ரிஷியா | ஜகத்த்ரயாசு (யசு) ஸாமாதர் வாணி | சிருதாமக சிஜேகத் சிருஷ்டி காரணிப்ராண சக்திதேவதாம (ம்) பீஜ ம (ந்) த்ராம சக்தி 1 ப்ராணப்ரதிஷ்டாம நே விநியோ கஹாம் ||

ஓம் அம் - கம் க்ம் கம் கம் - ஙம் - ஆம் - பிருதிவீயப் தேஜ வாயுவா காசாத்மநே - இருதயாய நம: || ஓம் இம் - சம்

ச்சம் ஜம் ஞம் - ஈம் சப்தஸ் பரிச ரூபரஸ கந்தாத்ம நே - சிரஸேஸ்வாஹா l. ஓம் உம் - டம் ட்டம் டம் டம் - ணம் - ஊம் - சுரோத்ரத்வக் சட்சு சிஹ்வாக்ராணாத்ம நே [வாக்ராண ப்ராணாத் மநே l சிகாயை வௌஷடு l. ஓம் ஏம் - தம் த்தம் தம் தம் - நம் - ஐம் - வாக் பாத பாணி பாயுர்ரு பஸ்த்தாத் மநே - நேத்ரத்ர யாய வௌஷடு (?) l. [கவசாய ஹ்ரஉம்] [ஓம் ஓம் பம் ப்பம் பம் பம் - மம் - ஔம் - பஞ்சப் ப்ராணாத்மநே நேத்ரத்ரயாய வௌஷடு.] ஓம் அம் - யம் ரம் லம் வம் சம் ஷம் ஸம் ஹம் ளம் க்ஷம் அ: - மநோ புத்யஹங் காரசித்தாதி [ஸர்வாத்மநே] ஜோசதாத்ம நே - அஸ்த்ராய ப்பட் ||.

அம்ரஷ்ய நத்ரப்ராண இஹம்ப்ரா அம்ரஷ்ய சிவ இஹ ஸ்த்திதம் அக சத்ர (ஆகச்ச) வித சகஸ்த்ர பதிஷ்ட்டை யுக்த்தேம மமாரட்சு ஸ்வாஹா ஓம் ||.

3. ஓம் ப்ராணப்ரதிஷ்டா மஹாமந்த்ரஸ்ய ப்ரஹ்ம விஷ்ணு ருத்ர இருடி :| இருக்யசுஸ்ஸாமா நிச் சந்தாம் சிப்ராணசக்தி பரா தேவதா | ஆம் பீசம் | ஹ்ரீம் சக்தி : | க்ரோம் கீலகம் | ப்ராணப்ரதிஷ்டா யாம் விநியோக || ஏவம் கராங்கந்யாஸ : | பூர்ப்புவஸ்வ ரோமிதி திக்பந்த : ||

த்யாநம் - ரக்தாம் ப்ராணசக்தி: பராந : || [லம் இத்யாதி பஞ்சபூஜா]

ஓம் ஆம் ஹ்ரீம் க்ரோம் | யரலவசஷஸ (ஹ) ஹோம் (ஸோஹம்) ஹம்ஸ (ஹம்ஸஸ் ஸோஹம் ஸோஹம் ஹம்ஸ :) | ஓம் ரேக்ராம் ஹ்ரீம் ஆம் | புவநா (தி) பதிம்தேவா ப்ராண இஹப்ராணா : | ஓம் ஆம் ஹ்ரீம் க்ரோம் | யரலவசஷ ஸ (ஹ) ஹோம் ஹம்ஸ: [ஹம்ஸஸ் ஸோஹம் ஸோஹம்:] ஹம்ஸ:] க்ரோம் ஹ்ரீம் ஆம் | புவநா(தி)பதி: தேவதா சிவ இஹஸ்த்தித: | ஓம் ஆம் ஹ்ரீம் க்ரோம் | யரலவச ஷ ஸ (ஸ) ஹோம் ஹம்ஸ: [ஹம்ஸ;ஸோ ஹம் ஸோஹம் ஹம்ஸ:] க்ரோம் ஹ்ரீம் ஆம் | புவநா(தி)பதி: தேவதா ஸர்வேந்த்ரியாணி | வாங் மநச்சட்சு சுரோக்ர சிஸ்வாக்

ராணா | ப்ராண இஹ ஆகத்ய | அஸ்மிந்யந்த்ரே சுகம் சிரம் திஷ்டந்துஸ்வாஹா || ஹ்ரீம் ஓம் ஹம்ஸ: | (இதிப் ராணப்ரதிஷ்டாம் க்ருத்வா ||

யந்த்ரம் ஸம்ஸ்ப்ருசம் ஜபேத் | அசுநீதே – ஸ்வஸ்தி ||

4. ஓம் ஐம் ஹ்ரீம் ஸ்ரீம் | ஐம் க்லீம் ஸௌ: | புவநே சுவரீ கலாப்யோ நம: || கஏஈலஹ்ரீம் | ஹஸக ஹலஹ்ரீம் | ஸகலஹ்ரீம் ||

அஸ்யஸ்ரீ ப்ராணப்ரதிஷ்டா மஹா மந்த்ரஸ்ய | ப்ரஹ்ம விஷ்ணு ருத்ரா ரிஷய: | இருக் யசுஸ் ஸாமாநிச்சந்தாம்சி | ப்ராண சக்திப் பராதேவதா | ஆம் பீஜம் | ஹ்ரீம் சக்தி: | க்ரோம கீலகம் | ப்ராணப்ரதிஷ்டாயாம் விநியோக: || பீஜா தித்வி ராவ்ருத்யாந்யாஸாதயம் | பூர்ப்புவஸ்வ ரோமிதி திக்பந்த. ||

தியாநம் – ரக்தாம் – பராந: ஏவம்த்யாத்வா | லம் இத்யாதி பஞ்ச பூஜா ||.

மூலம்: | ஓம் ஆம் ஹ்ரீம் க்ரோம் | யம் ரம் லம் வம் சம் ஷம் ஸம் ஹம் | ஹோம் ஹம் ஸ: | க்ரோம் ஹ்ரீம் ஆம் | ஸ்ரீபுவநேசுவரீ தேவீ ப்ராண இஹப்ராணா: | ஓம் ஆம் ஹ்ரீம் க்ரோம் யம் ரம் லம் வம் சம் ஷம் ஸம் ஹம் , ஹோம் ஹம் ஸ: | க்ரோம் ஹ்ரீம் ஆம் | ஸ்ரீபுவநேசுவரீ தேவீ ஜீவ இஹஸ்த்தித: | ஓம் ஆம் ஹ்ரீம் க்ரோம் | யம் ரம் லம் வம் சம் ஷம் ஸம் ஹம் | ஹோம் ஹம் ஸ: | க்ரோம் ஹ்ரீம் ஆம் | புவநேசுவரீ தேவீ ஸர்வேந்த்ரியாணி வாங்மநச் சட்சு சுரோத்ர சிஹ்வாக்ராணாப்ராணா இஹாகத் யாஸ்மிந் யந்த்ரே (பிம்பே கும்பேஸ்த்தம்பே) சுகம் சிரம் திஷ்ட்டந்து ஸ்வாஹா || ஹ்ரீம் ஓம் ஹம்ஸ: | (இதிப்ராணப் ரதிஷ்டாம் க்ருத்வா |)

அசுநீதே புநரஸ்மாசுசட்சு: | புந : ப்ராணமிஹநோ தேஹி | போகம்மே பச்யேம சூர்ய முச்சரந்தமநுமதே ம்ருட யாநஸ்வஸ்த்தி ||. ஆவாஹிதாபவ | ஸந்நிதாபவ | ஸந் நிருத்தபவ | அவகுண்டிதாபவ | சுப்ரஸந்நாபவ | வர

தாபவ | ப்ரசீதப்ரசீத | புவநேசிஜகத் வந்த்யே யாவத் பூஜாவ ஸாநகம் | தாவத்வம் பரீதி பாவேந ஸ்வஸ்த்திதா பவ சாம்பவீ ||. (இதியந்த்ரம் தர்ப்ப கூர்ச்சேந ஸம்ஸ் ப்ருசம் ஜபம் க்ருத்வா |)

இம்மந்திரம்: யந்திரம், விக்கிரகம் முதலான எல்லா மூர்த்திகட்கும், எல்லா கன்ம இயந்திரங்கட்கும் பொது வாகவுள்ள பிராணப் பிரதிஷ்டா மந்திரமாகும். பொதுவாம் பிராணப் பதிட்டையும் போற்றே (– 355) ; என்று ஆசிரியர் தாமே அருளியிருத்தலும் நோக்கத் தக்கது. இம்மந்திரம் சுவடிகளிற் பெரிதும் பிழையுற்றுக்]காணப்படுகின்றது. சில சுவடி களில் காணப்படவுமில்லை.

24 – ஆம் அதிகாரம் : யந்திர மந்திரதந்திரப் பொது. பூசை, செபம், ஓமம், தர்ப்பணம்.

357. போற்றும் பதிட்டையும் ஓமமும் ஆயிரம்
ஏற்றுஞ் செபமும் இசைந்தநூறாயிரம்
ஏற்ற கருமங்கள் எட்டுக்குந் தானொக்கும்
ஆற்றிய சக்கரம் ஆய்ந்துகொள் வீரே.

பாடபேதம்

1. பிரதிட்டையும் - பிரதிஷ்டையும் - பிரிதிட்டையும்.
2. சபமும் – ஜபமும் – ஜெபமும் – சிவமும். ஏற்ற.
3. ஏற்குங் கருமங்கள் - ஏற்றகருமம்.
4. ஆற்றிய சத்தமாயறிந்து – ஆரிய சத்தமாயறிந்து – ஆற்றிய சத்திதமாயறிந்து – ஆற்றிய சந்தித மாயறிந்து - சத்யமாயறிந்து கொள்ளீரே - கொள்ளுவீரே.

குறிப்புரை

இம்மந்திரம்; எண்வினை ஏவல்கட்கும் உரிய பிராணப் பதிட்டைமந்திரம், மூலமந்திரம் ஆகியவற்றின் செப உருத் தொகையையும், ஓம அவியின் தொகையையும் உணர்த்து கின்றது.

போற்றுதல் = விரும்புதல் - புகழ்தல் - வணங்குதல் - பேணுதல் - ஈட்டுதல். பதிட்டை = பிராணப் பிரதிட்டை - பதியச் செய்தல் - நிலைபெறச்செய்தல் - பிராணப் பிரதிட்டை மந்திரம். ஓமம். அவிசொரிந்து செந்தீவேட்டல். ஏற்றுஞ்செபம் மந்திரஉருவேற்றிக் கணிக்குஞ்செபத்தின் தொகை. கருமங்கள்— எட்டு - மேற் சொல்லப்பட்ட வசியம். முதலான அஷ்டகன் மங்கள். சக்கரம் - புவனாபதி சக்கரம். ஆற்றல் = வலிமை - செய்தல் - தாங்குதல். ஆய்தல் - ஆராய்தல்.

இந்த இயந்திரத்தில் இறைவி விளங்கித் தோன்றி நிலைத்து நின்று சாதகனுக்குப் பயனளித்தற் பொருட்டுச் செய்யப் படும் பிராணப்பதிட்டை மந்திர செபஉருவின் தொகை - 1000. ஓமத்தின் அளவும் 1000. மூலமந்திர செபஉருவின் தொகை – நூறாயிரமாம். இவை எண் வினையேவல் கட்கும் பொதுவாகவுரியன என்பதாம்.

செபம், ஓமம், தர்ப்பணம், பூப்பலி (அர்ச்சனை) அமுதவுண்டி ஆகிய இவை ஐந்தும் பூசைக்கு அங்கங்கள். பூசை அங்கி (சிவஞானபாடியம் - உதாரண வெண்பா - 59 பார்க்க) இந்த ஐந்தையும் வடநூலார் புரச்சரண பஞ்சாங்கம் என்பர்- மந்திரயந்திர தேவதைகளின் சித்திப்பொருட்டு இவற்றை அவ்வற்றிற்கு விதிக்கப்பட்டுள்ள கணக்கின் வண்ணம் செய்து முடித்தபின்னரே அவைபயன்றரும். இன்றேல் பயன்றராவாம்.

(1) நாமமந்திர அர்ச்சனை - கோடி. (2) மூலமந்திர செபஉரு - பத்துலட்சம். (3) ஓமம் - லட்சம். (4) தர்ப்பணம் . பதினாயிரம். (5) போசனம் - ஆயிரமும் செய்தல் வேண்டும் என்பர். சகஸ்ரபோசனம் என்னும் வழக்கும் நோக்கத்தக்கது. இவ்வாறு செய்தல் பொதுவிதி. இனி அவ்வம்மந்திரங்கட்குத் தனித்தனியேயுரிய சிறப்புவிதிகளும் உள்ளன. இச்செய்யுளிற் சொல்லப்பட்டிருத்தல் சிறப்புவிதி பற்றியதாமென்க.

மேற்கோள்

முடித்த இம்மந்திரம் மூலமதாகும் |.

திருமந்திரம் — 300 : 3.

நண்ணிய பஞ்சாங்கம் நண்ணுஞ் செபமும் — 1007.

நாமமோர் ஆயிரம் ஓதுமின் நாதனை
ஏமமோர் ஆயிரத் துள்ளே இசைவீர்காள் !
ஓமம் ஓர் ஆயிரம் ஓதவல்லாரவர்
காமமோர் ஆயிரங் கண்டொழிந் தாரே — 2987.

தச்சிது வாகச் சமைத்தஇம் மந்திரம்
அர்ச்சனை ஆயிரம் ஆயிரஞ் சிந்தியே — 1369.
[ஆயிரம் ஆயிரம் - பத்துலட்சம்]

பூவ னூர்ப்புனி தன் திரு நாமந்தான்
நாவில் நூறுநூறாயிரம் நண்ணினார்
பாவமாயின பாறிப் பறையவே
தேவர் கோவினுஞ் செல்வர்கள் ஆவரே
[நூறுநூறாயிரம் - கோடி] — தேவாரம். 5880.

சுஸங்க்யாஸபலா பூஜா ஸங்க்யாஹீநாது நிஷ்ப்பலா | பக்ஷத்ரயம் சிதேந்த்ரியஸ்த்ரி ஷவணஸ்நாயீ நக்தஞ்சரு போசீ பூசய்யோ பூக்த்வா | ப்ரதிதிநம் மூலமந்த்ரஸஹஸ்ரகம் | தசாம் சதோப்ரஹ்மாங்காநிச ஜப்த்வா | வந்ஹாவபி தசாம்சம் சுகுயாது | வ்ரதாரம் பாவஸாநாயோஸ்த்ரிதி நம் பஞ்ச கவ்ம்யபிபேது || — அகோரசிவாசாரியர் கிரியாக்ர மஜ் யோதிகை. மந்த்ரசித்யர்த்தம் பஞ்ச சத்வாரிம்சத்திநாநி திரிகாலஸ்நாந சருபோஜந பூசயந ஜபஹவநய ஜநாநி நியமம் விதத்யாது | த்ரிஷவணஸ்நாயீ — த்ரி காலஸ்நாநவாந் | நக்தம் — நத்தகாலே || — நிர்மலமணிகுரு வித — அஸ்ப் புடார்த்தப்ரகா சிகாயாம்ப்ரபை வியாக்யாநம் என்பனவும், பிறவும் ஈண்டுக் கருதத்தக்கன.

இயந்திர பூசையின் தந்திரம்.

358. கொள்ளும் இடக்கையிற் கோட்டிய சக்கரம்
உள்ளி வலக்கையால் மூடியோர் பூசாத்தி
எள்ளில் பதிட்டை இருபத்து நாலுருத்
தள்ளி வலக்கைத் தானிக்குஞ் சத்தியே.

பாடபேதம்

1. கொள்ளில். கொட்டிய.
2. உள்ளில் — உள்ளும். வலக்கையில் — மூடியே பூச்சாத்தி.
3. எள்ளும். பிரதிட்டை — பிரதிஷ்டை — பிரிதிட்டை — நாலுரு.
4. தள்ளில் — தள்ளும் — வலக்கையிற் றானிக்குஞ் — கையிற்றியானிக்குஞ் — சானிக்குஞ் — றள்ளுமா சத்தியே.

குறிப்புரை

இம் மந்திரம்; இயந்திர வழிபாட்டின் தந்திரத்தினை உணர்த்துகின்றது.

கை — அகங்கை. கோட்டுதல் — வளைத்தல். உள்ளுதல் — தியானித்தல். ஓர்பூ — ஒருபூவை. எள்ளல் — இகழ்தல். பதிட்டை — பிராணப் பிரதிட்டை மந்திரம். உருத்தள்ளி — உரு எண்ணி செபித்து. தாளித்தல் — சானித்தல் = தியானித்தல். கோதண்டஞ் சானிக்கில் சிவ — போதம். உதாரண வெண்பா. 59 சத்தி — புவனை. தள்ளி — என்றதனால் கண்மணிமாலையாற் கணித்தல் பெறப்படும்.

இடது உள்ளங்கையில் ஒரு மலரினை வைத்து அதனை வலது கையால் மூடி, புவனாபதி சக்கரத்திறைவியைத் தியானித்துப் பிராணப் பிரதிட்டை மந்திரத்தை 24-உரு எண்ணிச் செபித்து இயந்திரத்திற் சாத்துக என்பதாம்.

இத்தந்திரம்: பிராணப் பிரதிட்டா மந்திர செபஸமர்ப்பணம் எனப்படும்; மூல மந்திர செப ஸமர்ப்பணம் வருந் திருமந்திரத்துட் சொல்லப்படும்:

மேற்கோள்

நெக்கிளார்வ மிகப் பெரு கிந்நினைந்
தக்கு மாலைகொ டங்கையில் எண்ணுவார்
தக்க வானவ ராத்தகு விப்பது
நக்கன் நாமம் நமச்சி வாயவே — தேவாரம் 3322.

என்பது மறிக.

மூலமந்திர செபதாக விதி.

359. சக்தியின் மூலம் இருபத்து நான்குரு
மொய்த்த வலக்கையால் மூடியோர் பூச்சாத்தி
இத்தை மாதேவ ரெம்பிரான் கைக்கொடுக்க
அத்தை அவர்கை யாகத் தருவதே.

பாடபேதம்

1. இருபது — இருபாது. நாலுரு.
2. மொய்ந்திடக்கையால் — மொய்த்த விடக்கையில் — விடக்கையால் — மொய்த்த வடக்கையால் — விடக்கை — ஒத்த விடக்கையால் — மூடியே பூசாத்தி.
3. இற்றை மகாதேவ ரெம்பெருமான் கைக் கொடுக்கு — கை கொடுக்க — மகாதேவ எம்பெரு மான் கொடுக்க - மகதேவ எம்பெருமான் கொடுக்க - மஹாதேவயெம் - மக தெய்வஎம் - மகதேவ்யெம் - மகதெய்வரெம். (மாதேவரெம் பிரான் - ஊகம்)
4. அத்தை யவன் கையிலாகத் - அத்தையவர் கையிலாகத் - அத்தையலார் கையிலாக்கித் - அத்தயலார் கையி லாக்கித் - அத்தையவன் கையிலாக்கத். தரவே - தருகவே.

குறிப்புரை

இம் மந்திரம்; மூல மந்திர செப உருவின் பயனை இயந் திரத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவிக்கு அளிக்கும் முறைமை யினை உணர்த்துகின்றது.

சக்தியின் மூலம் - புவனாபதியின் மூல மந்திரம் என்றது முன்னர் உபதேசிக்கப்பட்ட காதி பஞ்சதசாட்சரீ வித்தையை. ககராதி மூவித்தை காமிய முத்தியே (2) முடித்த இம்மந்திரம் மூலமதாகும். (3) என்பனவற்றையும் நோக்குக. உரு — மந்திர செபத்தின் எண்ணிக்கை. மொய்த்தல் — நெருங்க. இத்தை =

இதை — இதனை. இத்தை விளைவித்தல் மலம் — உண்மை விளக்கம். 50 அத்தை = அதனை. கையாக — கையின் கண்ணதாக.

இடது அகங்கையில் ஓர் மலரை எடுத்து வைத்துக் கொண்டு, அதனை வலக்கையில் மூடி கண்மணி மாலையி னாலே மூலமந்திரத்தை 24 உருக்கணித்துப்பின்பு அம்மலரை வலக்கையிற் கொண்டு அருக்கிய நீருடன் அம்மலரை புவனா பதியினுடைய வரதத்திருக்கையில் தத்தஞ் செய்க, அங்ஙனம் தத்தஞ் செய்யுங்கால் செபம், கன்மம், ஆன்மா ஆகிய இந்த மூன்றினையும் இறைவனிடத்தில் ஒப்புவித்ததாகப்பாவிக்க என்பதாம்.

இங்ஙனம் செய்யுந் தந்திரமானது, ஜபதாநம் எனப்படும்.

மேற்கோள்

ஜப தாந விதி:

ஹஸ்தே புஷ்பம் கிருகித்வா | ஹ்ருத் ஸம்பூசித அக்ஷ மாலாயாம்.

மூல மந்த்ரம். அஷ்டோத்தர சதம் ஜப்த்வா | அஸ்த்ர கவச இருதய மந்த்ரை : இருதய கவச அஸ்த்ர மந்த்ரைஸ்ஸம்புடீ கிருத்ய | அஸ்த்ர ரட்சிதம் கவசாவ குண்டிதம் தட்சிண ஹஸ்தே கிருகீத் வா | ஸார்க்ய ஜல ஜபம் உத்பவ முத்ரயா பூமிஷ்ட்ட ஜாநு: ||

ஜபஸமர்ப்பணம்

ஓம் ஹாம் குஹ்யாதி குஹ்ய கோப்த்வாத்வம் கிருஹாணாஸ்மத்கிருதம் ஜபம் |

சித்திர்ப்பவதுமே யேநத்வத்ப்ரஸாதாத் துவயிஸ்த்திதே ||

கர்ம ஸமர்ப்பணம்

ஓம் ஹாம் யத்கிஞ்சித் கர்ம ஹே தேவ ஸதாசுகிருதா துஷ்கிருதம் |

தந்மே சிவபதஸ்த்ஸ்ய பும் க்ஷ்வ க்ஷபய சங்கர ||

ஆத்ம ஸமர்ப்பணம்

ஓஹாம் சிவோதாதா சிவோ போக்தா சிவஸ்ஸர்வ மிதம்
ஜகதுசிவொயஜதி ஸர்வத்ரயச் சிவஸ்ஸோஹ மேவது ||
இதி ஸகிருதா சுலோகத்ர யேண ஜபம் கர்ம ததாத்ம
நம க்ர மேண சிவஸ்ய வரத ஹஸ்தே நிவேத யேது ||
— அகோர சிவாசாரியர் பத்ததி.

உடல் பொருள் ஆவி உதகத்தாற்கொண்டு
— திருமந்திரம். 1778.

கூடும் உடல் பொருள் ஆவி குறிக் கொண்டு — 1783.
கொண்டான் — உயிர் பொருள் காயக் குழாத்தினை
— 1784.

அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமுன்
குன்றே அனையாய் எனை ஆட்கொண்டபோதே
கொண்டிலையோ. — திருவாசகம். 500.

25 - ஆம் அதிகாரம்: எண்வினையேவல் இழைகள். எண்வினையேவல் இயந்திரங்களுக்கேற்ற நூல் இழைகளின் எண்ணிக்கை.

360. தருவர வக்கர சக்கர சத்தி
பருவ முதிராத பாலிகை கன்னி
இருவின நூலால் ஏற்கும் வினைக்கு
மருவிய கருமம் வகைவகை தானே.

பாடபேதம்

1. தருகிற - தருவா - கருவா. சக்கரசத்தியைப் - சக்கரஸ்த் திதியை.
2. பாலகை.
3. இருவினை. நூலால் ஒத்தல் வினைக்கு — நூலால் ஒத்தல் விளக்கு - இருவினை நூலால் ஒத்தகல் விக்கு - நூலாலேற்றல் வினைக்கு — நூலாலேற்றல்

விளக்கு - நூல்கால் ஒத்தல் வினைக்கு - நூலாலோதகல்
விளக்கு – ஏற்ற வினைக்கு - ஏற்றிடும் வினைக்கு.

4. கன்மம் – கன்மமும்.

குறிப்புரை

இது முதல் மூன்று மந்திரங்கள் முன்னர் நிறுத்த முறை யானே எண்வினையேவல் இயந்திரங்களுக்கேற்ற நூல் இழை களின் எண்ணிக்கையை உணர்த்துகின்றன.

இந்த இழைகள், இயந்திரத்தைச் சுருட்டிச் சுற்றிப் பிணித்தற்கு உரியனவாகும், தருவரம் - வரங்களைத் தரு கின்ற. வரம் - வேண்டும் பொருள். அக்கரம் = அட்சரம் - மூல மந்திர எழுத்துக்கள். பாலிகை - கன்னி - மணம் புணராத இளம் பெண்டிர் - குமரி - இருபெயரொட்டு. இருவுதல் = இழைத்தல் - நூற்றல். ஏற்றல் - பொருந்துதல். மருவுதல் - அணுகுதல் (திவா). கருமம் - அஷ்டகன்மம். கருமங்கட்கேற்ற நூல் இழைகளின் விவரம் வரும் மந்திரங்களிற் சொல்லப்படும். வகை = விதம் - தன்மை - கூறுபாடு - திறம்.

இதுகாறுஞ் சொல்லப்பட்டனவாயுள்ள அட்டகன்மப் பிரயோகங்கட்கு உரிய இயந்திரங்களை விதிப்படி வழி பாடாற்றி முற்றிய பின்னர், அந்த இயந்திரங்களைக் கன்னிப் பெண்களால் நூற்கப்பட்ட நூல் இழைகளினாலே அவ்வக் கருமங்கட்குச் சொல்லப்படும் அளவின் படிக்குச் சுற்றிக் கட்டுதல் வேண்டும் என்பதாம்.

மேற்கோள்

பருத்திப் பெண்டின் பனுவல் அன்ன — புறம். 125.
பஞ்சிதன் சொல்லாப் பனுவல் இழையாகச்
செஞ்சொற் புலவனே சேயிழையா — எஞ்சாத
கையேவா யாகக் கதிரே மதியாக
மையிலா நூன்முடியு மாறு. — நன்னூல் 24.

கன்மங்களும், நூலிழைகளின் எண்ணிக்கையும்.

361. வகையாகும் வசியம் ஆகருணைக்குத்
தொகையா மிரண்டிழை சொற்ற மோகனம்
பகையாகும் ஏடனை பற்றுநூல் மூன்றாம்
புகையாகுந் தம்பனம் போக்குநால் நூல்தானே.

பாடபேதம்

1. வகைதான் வசியமும் - வசியம் ஆகருணைக்கு - கருணைக்குந்.
2. தொகையாயிரண்டிழை - தொகைதானி ரண்டிழை.
3. ஏடணைக்குப் பற்றுநூல் மூன்றாம் – ஏடணைபாறு நான் மூன்றாம் — ஏடணை பாரு நான் மூன்றாம் – ஏடணைபானு நான் மூன்றாம் — ஏடனை பத்து நூல் மூன்றான.
4. புகையாந்தம் பனத்துக்குப் போக்கு நூல் நான்கே — புகையாந்தம் பணத்துக்கு போக்கு நூல் நான்கே — புகையாந்தம் பனத்துக்குப் போக்குநூல் நாலே — புகையாகுந் தம்பனம் போக்கு நூல்காணே.

முடிவு: (1) வசியம் — 2. (2) ஆகருஷணம் — 2. (3) மோகனம்-4. (4) ஏடனை — 3. (5) தம் பனம் — 5. (6) உச்சாடனம் — 4. (7) பேதனம் — 5. (8) மாரணம் — 6.

குறிப்புரை

இம்மந்திரம்; வசியம், மோகனம், தம்பனம், உச்சாடனம், ஆகர்ஷணம், வித்வேஷணம் ஆகிய 6 — வினையேவல்கட்கும் உரிய நூலிழைகளின் எண்ணிக்கையை உணர்த்துகின்றது.

வசியம் — வசிப்புவினையேவல். ஆகருணை — அழைப்பு வினையேவல். இழை = இழைத்தல் — நூல். மோகனம் — மயர்ப்புவினை. ஏடணை — வித்வேஷணம். பகையாகும். என்றது ஏடணை — என்னுஞ்சொல்லின் பொருளை விளக்கிய

வாறு பற்று — பற்றுதல். புகை — புகுதல் புகுதி-புகுந்தகருமம். தம்பனம் = தடைவினை — கட்டுவினை, போக்கு=போக்குதல் — உச்சாடனம் — விடைவினை. தம்பனம் போக்கு — தம்பனத்துக்கும், போக்குக்கும் என்க.

வசியத்துக்கும் ஆகர்ஷணத்துக்கும் இழை —2.

மோகனத்துக்கும், வித்வேஷணத்துக்கும் இழை — 3. தம்பணத்துக்கும், உச்சாடனத்துக்கும் இழை — 4 என்பதாம்,

ஏனைய பேதனமாரணகன்மங்கட்குரிய இழைகளின் விவரம் வரும் மந்திரத்துட் சொல்லப்படும்.

இதுவும் அது

362. நூலஞ்சு பேதனம் ஆறிழை மாரணம்
காலொன்றைக் கட்டி கருத்தொக்கச் சூழ்ந்தபின்
பாலொன்று மென்மொழிப் பங்கயச்சத்திக்கு
சேலொன்று மோமங்கள் செய்மந்திரமே.

பாட பேதம்

1. நாலஞ்சு பேதனம். ஆரிழை. மாறாளங் — மாறான்.
2. காலொக்கக் குழைந்தபின்.
3. பால்கொண்ட. பங்கயஞ்சத்திக்குச் — பயகயஞ் சத்திகுச் — மென்மொழியைகஞ் சத்திக்கு — சத்திக்.
4. சேலொன்று மோகங்கள் — சொல்லெ(லொ)ன்று ஓமங்கள் — கேலொன்று. செய்யமந்திரங்களே — செயமந்திரங்களே — செய்தமங்களே — சொல்லேர் பேதனம் ஆகருஷணம் மாரணம் ஆகும்.

குறிப்புரை

இம்மந்திரம்; பேதனம், மாரணம் ஆகிய கருமங்கட்குரிய நூலிழைகளின் எண்ணிக்கையையும், அவற்றின் தந்திரத்தையும் உணர்த்துகின்றது.

நூல்அஞ்சு — ஐந்திழையாகியநூல். பேதனம் = பேதன கன்மம் — வேறுபடுத்தும் வினையேவல். மாரணம் = மாரண கன்மம் — மரிப்பு வினையேவல். கால் = அளவு — நூலின் — தலைப்புகள் இரண்டும். ''கவண் கால்'' (- நன் சூ. 210. மயிலை) என்பதுங் காண்க. ஒன்ற = பொருந்த. சூழ்தல் — சுற்றுதல். சூழ்ந்து கட்டியபின் என்க. பால் ஒன்றும் — பால் போலும். மென்மை — இனிமை. பங்கயசத்தி — புவனாபதி சக்கரத்திறைவி. தாமரையாகும் பதினாறறைகளும் (343) என்பது மறிக; உள்ளக் கமலத்தில் உயிர்க்குயிராயுறையும் சத்தி எனினும் அமையும். வேள்வித்தீயில் சொரியப்படும் நெய், சமிதை, பொரி, பால், தேன், கரும்பு, அவிசு முதலாகிய ஆகுதிப் பொருள்களின் வேறுபாடு பற்றி ஓமங்கள் எனப்பன்மை கூறினர். சேல் ஒன்றும் = செயல் ஒன்றும் - தந்திர வினை பொருந்திய.

பேதனத்து இழை -5ம், மாரணத்துக்கு இழை -6ம் ஆகும். சொல்லப்பட்ட இந்த எண்ணின் அளவுப்படியே இழை நூல்களின் இரண்டு தலைப்புகளும் சமமாகப் பொருந்தக்கொண்டு சுற்றிக்கட்டி ஓமஞ்செய்க என்பதாம். ஓமம் தர்ப்பணம் ஆகியவற்றின் தந்திரம் வரும் மந்திரத்துட் கூறப்படும்.

மேற்கோள் ஒப்புமைப்பகுதி

பான்மொழி பாகன் பராபரன் தானாகும்

— திருமந்திரம் 1825.

பாலொத்த மென்மொழியாள் பங்கனைப் பாங்காய ஆலத்தின் கீழானை நான்கண்ட தாரூரே.

— தேவாரம் 4345.

பாலன மென்மொழியாள் பாவையொடும் உடனே
கோலமதுருவாகி

— தேவாரம் 8094.

என்பனவும் நோக்குக.

எண்வினையேவல்களும், அவற்றிற்குரிய நூலிழைகளின் எண்ணிக்கையும்:

1.	வசியம்	இழை –	2	கக்ஷபுடத்தின்படி	1 – 5
2.	மோகனம்	—	3	—	4
3.	தம்பனம்	—	4	—	4 – 1
4.	உச்சாடனம்	—	4	—	4
5.	ஆகர்ஷணம்	—	2	—	2
6.	வித்வேஷணம்	—	3	—	3
7.	பேதனம்	—	5	—	5
8.	மாரணம்	—	6	—	6

26-ம் அதிகாரம் : மந்திரம் வந்தமரபு
ஓமமும், தர்ப்பணமும்:

373. மந்திரங் கொண்டு மதிக்கின்ற ஓமமுந்
தந்திரந் தர்ப்பணஞ் சாற்றுமந் திரமும்
நந்தியெம் நாதன் நவையற ஓதினன்
பைந்தொடி மேனிப் பயனிது தானே.

பாடபேதம்

1. மதிக் குனர்வோர்களுஞ் – மதிக் குரைவோர்களுஞ் – மதிகுறைவோருக்கு மதிக் குறைவோர்களுஞ் – மதிக் குறைவோர்க்குஞ் – மதிக்குரைவோருக்கு – மதிக் குறைவோர்க்கு – மதிக்கின்ற வர்க்குச் – மதிக்கின்ற பேர்க்குச் – (வழிபடுவோர்குச்) ஓமமுஞ்.

2. சுந்தரத் தற்பணஞ் – சுந்திரந்தானும் – (சுந்தரநாதன்) சுந்தரமாகச் – (சுந்தரவாகமஞ்) - (சொல்லியமந்திரம்) சொல்லுமந்திரமும்.

3. நந்தியென்னாதன் – யெந்நாதன். நாவாரவோதினன் – நன்மையாயோதினன் - நாதன்னோன் வ (மை) யாலோதினன் – ஓதின.

4. மேனிபயனதுகானே,

குறிப்புரை

இம்மந்திரம்; புவனாபதி சக்கரபூசைக்கு அங்கமாயுள்ள ஓமம், தர்ப்பணம் ஆகியவற்றின் மந்திரங்களின் முறைமையினை உணர்த்துகின்றது.

மந்திரங்கொண்டு - மந்திரத்தால் - மதித்தல் = கடைதல் - வரையறுத்தல் எண்ணுதல். ஓமம் - செந்தீவழிபாடு. தர்ப்பணம் - தண்ணீரை மந்திரம் ஓதிச் இறைத்துச் செய்யும் வழிபாடு. மந்திரம் - உரையையும்; தந்திரம் - உடம்பையும் சிறப்பாகக் கொண்டு செய்யப்படும் வழிபாடு களாகும். நந்திஎம் நாதன் - எம் நாதனாகிய திரு நந்தி தேவர். நாதன் - தலைவன். நவை - குற்றம்; அவை ஐயம், திரிபு, அறியாமை என்பன. ஓதினன் - உபதேசித்தருளினார். இதுதானே = இதுவே - இந்த மந்திரமே.

புவனாபதி சக்கரத்தின் பூசை முறைமையையும், அப் பூசனைக்கு அங்கமாயுள்ள ஓமம் தர்ப்பணம் ஆகியவற்றின் மந்திர தந்திரங்களையும் எமது குரவராகிய நந்தி யெம்பெருமான், திருக்கயிலையில் அடியேனுக்கு விளங்க உபதேசித் தருளினார். புவனாபதியின் திருவருளைப் பெறுவதற்குச் சாதனமாகவுள்ளது இந்த மந்திரமே என்பதாம்.

ஓமமும், தர்ப்பணமும் ஆகியவற்குரிய மந்திரங்களையும், தந்திரங்களையும் ஓதினன் என்க. மந்திரங்கொண்டு வழிபடுவோர்க்குச் - சுந்தர நாதன் சொல்லிய மந்திரம் - என்பது துடிசைகிழார் - அ. சிதம்பரனார் கொண்ட பாடம். இப்பாடம் கிடைத்துள்ள சுவடிகளில் இல்லை. திருமந்திரம் - மூலம் கழகப்பதிப்பு. மூலர் வரலாறு பார்க்க.

மேற்கோள்

மிக்க புவனையைப் பூசித்து நந்தி விளம்புமிந்தச்
சக்கரம் பெற்றுத் திருமூல தேவன் இத் தாரணியில்
திக்கு மனைத்தும் விளையாடினன் அட்ட சித்தியுமே.

— புவனை கலைஞானம். 71

என்பதும் ஈண்டு நோக்கத் தக்கது. நாரண னந்தி நமக்குரைத்தானே (- 367) என்று பின்னர் வருவதுங் காண்க.

திருமூலனுடைய உடலிற் புகுமுன், சுந்தரநாதர் தம் இயற்பெயருடன் விளங்குங் காலத்திற் செய்த தமிழ் நூலாகிய மந்திரம் முந்நூறு என்ற நூலின் சிறப்புப் பாயிரச் செய்யுளில்;

மந்திரங் கொண்டு வழிபடு வோர்க்குச்
சுந்தர நாதன் சொல்லிய மந்திரம்.

என்று கூறப்பட்டிருப்பதாலும் (சுந்தரநாதன் என்பது திருமூலருடைய இயற்பெயர் என்பதனை) அறியலாம். [- திருமந்திரம். திருப்பனந்தாள் ஸ்ரீ - காசி மடத்து வெளியீடு - திருமந்திர வரலாறு பக்கம் - 15 - 16,] என்பனவும் ஈண்டுக் கருதத்தக்கன.

புவனாபதி சக்கர பூசையின் பயன்

364. பயன்றான் அறியலாம் பற்றற் றிருந்தால்
நயந்தான் மிகவுண்டாம் நந்தி அருளால்
உயர்ந்தார் உரைத்தது ஓதிய பின்னை
நயந்தால் பிறர்க்கிது நன்மையுண்டாகுமே.

பாடபேதம்

1. பயந்தானறியலாம்.
2. நயந்தானறியலாம் நந்தியருளாலே.
3. உயர்ந்தா னுரைத்ததும் - உயர்ந்தானுரைத்து உயர்ந் தானுரைத்த தோதிய - ஓர்ந்தாருரைத்ததும்
4. நயந்தார். நன்மையுமாகுமே - நன்மையுமாமே - நன்மையுண்டாமே

குறிப்புரை

இம்மந்திரம்; இந்தப் புவனாபதியந்திர பூசையின் பேற்றினையும், இதனைத் தக்கவருக்கு உபதேசிக்கும் முறைமையினையும், உணர்த்துகின்றது. பயன் - முதலிற் சொல்லப்பட்ட

காமிய முத்திப் பயன்கள், ககராதி வித்தை காமிய முத்தியே (2). பற்று = பெற்றதன் மேலுள்ள விருப்பம் (சீவக) - அகப்பற்றும் புறப்பற்றும் ஆகிய யான், எனது என்னும் பற்றுக் கள். நயம் = நன்மை - இன்பம். நந்தி – நந்தியெம் பெருமான், உயர்ந்தார் = அறிஞர் - மேலோர் - ஆசிரியர். உரைத்தது – உபதேசிக்கப்பட்டதாகிய இம்மந்திரத்தை. ஓதியபின்னை – விதிப்படி செபித்து, புரச்சரவிதிகளைச்செய்து முடித்து. சித்திபெற்ற பின்பு - இது – இதனை. பிறர்க்கு – தகுதியுடைய வருக்கு. நயந்தால் - அன்புடன் அருளினால். நயம் = நயன் — அன்பு அருள் (கலித்) — நன்மை அறம் — புண்ணியப் பயன். நந்தி = சிவபெருமான் — நந்தியெம்பெருமான்.

அவாவினை அறுத்தவரே இம்மந்திரம் சித்திக்கப் பெற்று இறைவியின் திருவருளைப் பெறுவர். அவருக்கே நந்தியெம் பெருமான் அருளால் நன்மையுண்டாகும். உபதேச பரம் பரையில் வைத்துச், செவியறிவுத்தப் பெற்று வந்துள்ள இம் மந்திரத்தை, அம்மரபில் தக்கவருக்கு உபதேசித்தல் நன்று என்பதாம்.

மேற்கோள் ஒப்புமைப் பகுதி.

வீடு காதலிப் பவர்கட்கு ஈசன்
புண்டரிகத்தாள் சேரும் பரிசினைப்பு கலலுற்றாம்.

— சித்தியார். 4.

திருவருள் கொடுத்து மற்றிச்சிவப்பிரகாச நன்னூல்
விரிவது தெளியுமாற்றால் விளம்பிய ஏது நோக்கிப்
பெருகிய உவமை நான்கின் பெற்றியில் நிறுவிப்பின்முன்
தருமலைவு ஒழியக் கொள்வோன் தன்மையிற் சாற்றலாமே.
பெருநூற் பொருளைப் பின்முன் மலைவற
அருளுடன் கொள்பவர்க்கு அறைக என்றது.

— சிவப்பிரகாசம் — கொளு. 100.

சமயாசாரமும் சந்தான ஆசாரமும் உண்டாய் வந்தானொரு நன்மாணாக்கனுக்கு, நல்லாசிரியரானார் திருவடி தீக்ஷை (திருவருள்) வைத்து, இந்தத் தந்திரகலையாகிய நல்ல மந்திர

நூலிலே தொகுத்தும் வகுத்தும் விரித்தும் சொல்லப்பட்டுள்ள அஷ்டகன்மசித்திகளின் மெய்ப் பொருளைக் கசடறக் கற்று முன்னொடு பின் மலைவு இல்லாமல் உளங்கொளத்தக்க பரிபக்குவம் நோக்கி, யான்பெற்ற பேறு பெறுக இவ்வையகம் (மந் – 85) என்னும் அருளால் முறைப்படி உபதேசித்தருள்க என்றபடி.

குருவருளின் இன்றியமையாமை.

365. நன்மையுண் டாமெங்கள் நாதன் உரைத்தது
தின்மையின் றாகத் தெளிவிக்கும் நாதனைத்
தன்மையுண் டாகத் தனித்தனி நாடிப்போய்ப்
பொன்மையுண் டாகப் புகழ்ந்துகொள் வோர்க்கே.

பாடபேதம்

1. நாதனருளை
2. தின்மையுண்டாகத். தெளிவித்த–தெளிவிக்க. நாதனை.
3. நன்மையுண் டாக நயந்தது நாடிப்.
4. பெண்மையுண் — பொய்மையுண் — பொய்மையுண் — மொய்ம்மையுண் — மெய்ம்மையுண் — மெய்மையுண். கொள்ளுவோர்க்கே — கொள்வார்க்கே.

குறிப்புரை

இம்மந்திரம்; இந்த நூலிற் சொல்லப்பட்டனவாயுள்ள மந்திர தந்திர யந்திரங்களின் சித்தியை எய்துவதற்கு வேண்டும் குருவருளின் இன்றியமையாமையை உணர்த்துகின்றது.

எங்கள் நாதன் — எமது குரவராகிய திருநந்திதேவர். தின்மை = தீமை — குற்றம். அவை- ஐயந்திரிபு அறியாமை என்பன. தெளிவிக்கும் நாதன் — மந்திரம், யந்திரம். தந்திரம்' தியானம் முதலியவற்றின் வாய்மைகளை விளக்கி உபதேசிக்கும் குரவன். தன்மையுண்டாக — சித்தியாதற்பொருட்டு. நாடி — ஆராய்ந்து. பொன்மை = பொன்னும் ஞானமும் — புத்தியும்

முத்தியும். பொன்னுமெய்ப் பொருளுந் தருவானைப் போக முந்திருவும் புணர்ப்பானை — தேவாரம். 7827. தனித்தனி நாடிப்போய்-என்றதனால் ஞானகுருவின் அருமை புலனாகும்.

நந்தியெம் பெருமானால், எமக்கு உபதேசிக்கப்பட்ட இந்த மந்திர தந்திர இயந்திரங்களின் இயல்புகளைக் கசடறச் செவியறிவுறுத்தும் நல்லாசிரியர் உறையும் இடத்தை நாடிச்சென்று விதிப்படி வழிபட்டு அவர்தம் அருளைப் பெற்றவருக்கு எல்லா நலன்களும் உண்டாகும் என்பதாம்.

இறைவியின் இயல்பு.

366. கொள்ளுவார் கொள்ளுங் குருவின் அருளாலே
உள்ளுவார் உள்ளும் உடனின்ற சத்தியைத்
தெள்ளுவார் வாலை புவனை திரிபுரை
கள்ளுவார் பூங்கோதை காரணி பேரே.

பாட பேதம்

1. கொள்ளுபார். அருளாலும்.
2. தள்ளுவா ருள்ள முடனின்றருத்தலை. சத்தியை உடனிறை.
3. தெள்ளுவர் வாலையினி (ய) திரிபுரை - உள்ளுவார் வாலை – புள்ளுவார் வாலை.
4. பூந்தோகை. பெயரே, தள்ளுவார் இங்கெங் கெத்தனாயேரே. சுவடியெண் : 3,20-ல் இம்மந்திரம் இல்லை.

குறிப்புரை

இந்மந்திரம்; இறைவியின் திறத்தினை உணர்த்துகின்றது.

உள்ளுவார் உள்ளும், உடனும் நின்ற சத்தி என்க. உள்ளும் – உள்ளத்தின் கண்ணும். உள்ளம் என்றது, ஈண்டு உயிரை. ஓர்த்து உள்ளம் உள்ளது உணரின் - திருக்குறள் 357. உடன் நின்ற என்றதனாலே வேறாயும். ஒன்றாய்த் தானாயும் நிற்றல்

பெறப்படும். தானாய் - வேறாய் உடன் ஆனான் - தேவாரம் 109. உள்குவார் உள்கிற் றெல்லாம் உடனிருந் தறிதி - தேவாரம். 4886. நினையுமா நினையே - திருவிசைப்பா. என்னுந் திருவாக்குகளும் ஈண்டுக் கருதத்தக்கன. கள்ளுவார் பூங்கோதை - தேன் பிலிற்றும் மலர்மாலைகள் = தேன்-கருமை. வார்தல் - ஒழுகுதல் - நீறாதல். பூ=மலர் - அழகு. கோதை = மாலை - கூந்தல். காரணி = இறைவி - எல்லா வற்றுக்கும் மூலகாரணமாயுள்ளவர்.

நல்லாசிரியரின் திருவருளாலே உபதேசம் பெற்று இறைவியைத் தியானித்தல் வேண்டும். யாண்டும் நீக்கமற நிறைந்து நிற்கும் சிவசத்தி பேதங்களின் திருப்பெயர்கள் வாலை, புவனை, திரிபுரை என்பனவாம்.

மேற்கோள்

காரண மந்திரம் ஓதுங் கமலத்து — திருமந்திரம் 1088.
ஆதி யனாதி அகாரணி காரணி — 1114.
கண்டங் கிருந்தவர் காரணி காணுமே — 1388.

காரணி சத்திகள் ஐம்பத் திரண்டெனக்
காரணி கன்னிகள் ஐம்பத் திருவாராய்க்
காரணி சக்கரத் துள்ளே கரந்தெங்கும்
காரணி தன்னரு ளாகி நின்றாளே. — 1389.

வாலை - புவனை - திரிபுரை.

வைத்தார் புவனை திரிபுரை மந்திரம்
— திருமந்திரம் 300 - 373.

வாலை புவனை வடிவுள நாயகி
ஆலை திரிபுரை அமர்ந்திடுஞ் சாமளை
கோலைய மான கோமளை யாமளை
பாளையப் பஞ்ச தசாக்கரி பூசையே
— திருமூலர்பூசாவிதி - 41 : 1.

வாலை புவனை வடிவு திரிபுரை
காலையும் மாலையும் கட்டுச்சி நேரமும்
ஆலையந் தன்னில் அறிவால் அறிந்தக்கால்
மேலைத் தலைவனை வெல்லலு மாமே

— மந்திரம் – 300. தனிச் – 2

வாலை புவனை திரிபுரை மூன்றுமிவ் வையகத்தில்
காலையும் மாலையும் உச்சியு மாகவெக் காலத்துமே
ஆலைய மெய்தி வராகிதன் பாதத்தை அன்பிலுன்னி

மாலயன் தேவர் முதலான பேர்களும் வாழ்த்துவரே — வராகிமாலை. 6. என்பனவும், திருமந்திரம்- 3000. தந்திரம் – 4 அதிகாரம். 4 சத்தி. பேதம் – திரிபுரை சக்கரம் என்னுந் தலைப்பில் உள்ளனவுங் காண்க.

சத்தி பேதம் எண்ணிறந்தன. யாவும் சத்தியின் சொரூபமே. அளவிறந்த சத்தி பேதங்களுள் குணரூபத்தால் சிறப்பாயுள்ள சத்திகள் –3. அவை: வாலை, புவனை. திரிபுரை என்பன. இந்த 3-சத்திகட்கும் 3–சக்கரங்கள் உண்டு. பொன்முதலாயுள்ள 5–வகை உலோகங்களில் சிற்ப சாத்திரயந்திர விதான அளவின்படி சக்கரம் அமைத்து, இஷ்டமான சத்தியை அவ் வியந்திரத்தில் தாபித்து, கல்பமுறைப்படி பூசிப்பின் சித்தி, புத்தி, முத்தி ஆகிய எல்லாப் பேறுகளும் உண்டாகும். என்பது வாமமதத்தின் சித்தாந்தம் (முடிபு).

— தத்துவ நிஜாநுபோக சாரம்.

மந்திரம்வந்த வழிமுறை

367. காரணி பேரொடு கண்ணுதல் அண்ணலைப்
பூரண மாகப் புரைதோன்றும் போக்கிற்கு
ஆரண வேதம் அறியாத சத்தியை
நாரண னந்தி நமக்குரைத் தானே.

பாடபேதம்

1. காதணி பேரொரு. அண்ணலை.
2. போக்கில் – போக்கிற்று-போற்றினால் – பொத்தினசல்.

மாகவுரைத் தென்றும் போற்றினால் – மாகவுரைத் தொன்றும் பொத்தினால் – மாகப் புரைதோன்றும் போக்கிற்று.

3. ஆரண பேதன மறியா தொருத்தியை - ஆரணவேத மறியா வொருத்தியை – ஆரண பேத மறியா வொருத்தியை – ஆரண வேத மதி (றி) யாத சத்தியை – ஆரண பேதன மன்றியா தொருத்தியை - வாரண பேதன மறியா வொருத்தியை.

4. நாரண நந்தி – நாரணன் நந்தி = நமக்குரைத் தனனே – நமக்குரைத்தாரே.

குறிப்புரை

இம்மந்திரம்; இந்தப் புவனாபதியின் மந்திரம், தந்திரம், யந்திரம் முதலியன கிடைக்கப் பெற்ற முறைமையை உணர்த்து கின்றது.

காரணி பேரொடு கண்ணுதல் அண்ணல் – புவனாபதி. காரணி = எல்லாவுலகங்கட்கும் மூலகாரணமாயுள்ளவள் – புவனை. கண்ணுதல் அண்ணல் = சிவபெருமான் பதி. காரணி பெயருடன் கூடிய அண்ணல் எனவே புவனாபதி என்பதாயிற்று. பூரணம் = பூர்த்தி - நிறைவு. புரை = மறைவு – இரகசியம் – பெருமை. புரையோய் புரையின்று - பரிபா 20 : 72. கூறுபாடு – புரை விடுத்துரைமோ – சீவக. 1732. போக்குதல் = உணர்த்துதல் – புரிய வேண்டுவயாவையும் விதிமுறை போக்கி. உபதேசகா. சிவவிரத. 319. ஆரணம் – வேதத்தின் ஞானபாகை (திவாகரம்) சத்தி - சிவசத்தி. நாரணன் நந்தி – நாராயணனை ஒரு கூற்றில் உடைய நந்தி – சிவபெருமான். என்றது சங்கர நாராயண மூர்த்தியை. அரிஅர்த்தர் என்பர். இறைவனோடு குருவுக்கு வேற்றுமை கருதலாகாமையின், தம்முடைய குரவ ராகிய நந்தியெம்பெருமானை இவ்வாறு கூறினார். குருவே சிவமெனக் கூறினன் நந்தி — குருவே சிவமென்பது குறித் தோரார் — குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும் — குருவேயுரை யுணர்வற்றதோர் கோவே — திருமந்திரம். 1581. உரைத் தான் — உணர்த்தியருளினார்.

பாசஞானத்தினாலும் பசுஞானத்தினாலும் அறியப்படாத தாயும், திருவருள் ஞானத்தால் மட்டும் உணரப்படுவதாயும் உள்ள சிவசத்தியின் உண்மையியல்பினை (சொருபலக்ஷணத்தை) நந்தியெம் பெருமான் நமக்கு உணர்த்தியருளினார் என்பதாம்.

மேற்கோள் - ஒப்புமைப் பகுதி.

நாரணன் நந்தி.

காரணி மந்திரம் ஓதுங் கமலத்துப்
பூரண கும்ப விரேசம் பொருந்திய
நாரண னந்தி நடுவங் குரை செய்த
ஆரண வேதநூல் அந்தமும் ஆமே

— திருமந்திரம் 1088.

மாதொரு பாலும் மாலொரு பாலும் மகிழ்கின்ற
நாதனென் றேத்தும் நம்பரன் வைகும் நகர்போலும்

— தேவாரம். 1048.

அரியலால் தேவியில்லை ஐயன்ஐயாறனார்க்கே — 4556.
பிறைதங்கு சடையானை வலத்தே வைத்துப் பிரமனைத்
தன் உந்தியிலே தோற்றுவித்து-திவ்யப்பிரபந்தம் 1168

என்பனவும் காண்க தமது குரவராகிய நந்தியெம்பெருமானுடைய அருளால், புவனாபதியின் திருவருளைப் பூரணமாகப் பெற்ற பெருமிதந் தோன்ற, நமக்கு உரைத்தான் என்றருளினர்.

இறுமாந் திருப்பன் கொலோ - ஈசன் பல்கணத் தெண்
ணப்பட்டுச் சிறுமானேந்தி தன்சேவடிக் கீழ்ச்சென்றங்
— கிறுமாந்திருப்பன் கொலோ. — தேவாரம் 4250.

நாம் ஆர்க்கும் குடி அல்லோம் — 7205.

எண் குணத்துளோமே. — 7214.

எங்கும் யாம் ஒருவர்க்கும் எளியோம் அல்லோம்
யாவர்க்கும் மேலானோம் என்று இறுமாப்பு எய்தி -.
திரிந்திடுவர் சிவஞானச் செய்தி உடையோரே.

— சித்தி. 322

27 – ஆம் அதிகாரம்: குருவருள்
குருவருள் பெற்றார் எளிதில் உணர்வர்

368. உரைத்த பரப்பெலாம் ஓதவும் வேண்டா
குருத்துவ மாகிய கூத்த னருள்பெற்று
ஒருக்கியைம் பூத முடன் கரணாதி
வருத்தி மனத்தினில் மரிக்கவல் லார்க்கே.

பாடபேதம்

1. உரைப்பரப்பெல்லாம் - உரைத்தவுரைப்பெல்லாம். ஓதவேண்டா – வேண்டாங்.
2. குருத்தவ. கூற்ற. பெற்றால்.
3. ஒருக்கிய பூதமுடன் – ஒருத்தியைம் பூதத்துடன் – ஒருத்தி பூதமுடன் - ஒருக்கி பூதமுடன் – ஒருத்திக்கு பூதமுடன். கரணாலும்.
4. வருந்தி. மனத்தில். மனாற்றிலாக்கவல்லாரே - மனாற்றில் சகவல்லாரே (மனத்திலாக்கவல்லரே) - மனத்தில் மறிக்க வல்லாரே – மதிக்க வல்லார்க்கே – மதிக்க வல்லாரே

குறிப்புரை

இம்மந்திரம்; இந்நூலுட் சொல்லப்பட்ட புவனாபதியின் உபாசனையானது, குருவின் அருளால் உணரத்தக்கதாகும் என்பதனை உணர்த்துகின்றது.

பரப்பு - விரிவு எல்லாம் - மந்திரம், தந்திரம், யந்திரம், தியானம் முதலிய எல்லாவற்றையும். ஓதல் – எடுத்துச் சொல்லுதல். குருத்துவம் ஆகிய-குருவின் கோலமாயுள்ள. கூத்தன் – கூத்தப்பிரான். அருள் = திருவருள் – உபதேசம். ஒருக்கல் = அடக்குதல் - ஒற்றுமையாக்கல் – சித்தம் ஒருக்கிச் சிவாய நம என்று இருக்கின் அல்லால் - தேவாரம் 5075. ஐம் பூதம்-நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம். என்றது, ஈண்டு அவற்றிற்கு முதற்காரணமாயுள்ள சூக்கும பூதங்களை

அவையாவன: நாற்றம், சுவை, ஒளி, ஊறு, ஓசை என்பன. இவை பஞ்சதன்மாத் திரைகள் என்றும், ஐம்புலன்கள் என்றுஞ் சொல்லப்படும். கரணாதி = கரணம் ஆதி - கரணம் முதலான. கரணம் = செயல் - செய்தற்குக் கருவி - இந்திரியம் - உடல் - அந்தக் (உட்) கரணம் (மனம், புத்தி, சித்தம் அகங்காரம் ஆகிய -4). மரித்தல் = ஸ்மரித்தல் - நினைத்தல் - தியானித்தல் இதன் அருமை தோன்றவல்லார்க்கு என்றார்.

குருவின் உபதேசத்தைப் பெற்றுப், பூதம் பொறி புலன் கரணம் முதலியவற்றை அடக்கி, அவை ஒரு நெறியுறுமாறு ஊனில் உயிர்ப்பினை ஒடுக்கி, உள்ளக் கமலத்தின் கண்ணே உமையொரு பாகனைத் தியானிப்பவருக்கு ஒன்றும் ஓத வேண்டா என்பதாம்.

மேற்கோள் ஒப்புமைப் பகுதி.

ஏதும் பலமா மியந்திரா சன்னடி
ஓதிக் குருவின் உபதேசம் உட்கொண்டு
நீதங்கும் அங்க நியாசந் தனைப்பண்ணிச்
சாதங் கெடச் செம்பிற் சட்கோணந் தானிடே
— திருமந்திரம் (புவனாபதி சக்கரம்) 1311.

குருபரன் நான் என்றும் ..தெற்குத் திருவம் பலத்துளே.
விளங்கி நின்றானே — 2758.
கூடிய கோலங் குருபரன் கொண்டு ஆட — 2760.
அரதன மன்றினில் மாணிக்கக் கூத்தன்
குரவனாய் எங்கணுங் கூத்துகந் தானே — 2761.
குருவுரு வன்றிக் குனிக்கும் உருவம் — 2762.
திருவழி யாவது சிற்றம் பலத்தே
குருவடி வுள்ளாக் குனிக்கும் உருவே — 2763.
அத்திரு மன்றுளாடும் ஐயரிங் கென்னை ஆள
இத்திரு மேனி கொண்டார்
— திருவாதவூரடிகள் புராணம்.
பரந்த ஐம்புலன்கள் வாய்ப்பாலே போகாமே...
நால் அந்தக் கரணமும் ஒரு நெறியாய்ச் - சித்திக்கே
உய்த்திட்டு — தேவாரம். 1365.

ஐம்புலன் நாலாம் அந்தக் கரணம் முக்குணம் இருவளி
ஒருங்கிய வானோர் — 1382.
புவிமுதல் ஐம்பூதமாய்ப் புலனைந்தாய் நிலனைந்தாய்க்
கரணம் நான்காய் — 1389.

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்று சொல்லப்பட்ட தன்மாத்திரைகளின் கூறுபாடாவன: பூதங்கட்கு முதலாகிய அவை தாம் 5-ம், அவற்றின் கட்டோன்றிய அப்பூதங்கள் 5-ம் — திருக்குறள். 27. பரிமேல்.

பண்டைநற் றவத்தாற் றோன்றிப் பரமனைப் பத்தி
பண்ணுந் தொண்டரைத் தானே தூய கதியினில்
தொகுப்பன் மார்க்கர்.
கண்டநூல் ஓதி வீடு காதலிப் பவர்க்கே ஈசன்
புண்டரி கத்தாள் சேரும் பரிசினைப் புகலல் உற்றாம்
— சிவ - சித்தி. சுப. 4.

என்பனவும், பிறவுங் காண்க. எனவே, முற்செய்தவ முதிர்ச்சியினாலே தோன்றி வீடுகாதலிக்குந் தொண்டராகிய சாமுசித்தரை இறைவன், விஞ்ஞானா கலர் பிரளயாகலர்களைப்போல நூல்வழியானன்றித் தானே பரகதியிற் சேர்ப்பனாகலின், அவர்கட்கு நூலுபதேசம் வேண்டாம் என்பதாயிற்று. ஆகவே, பிராகிருதர் கொளுத்தினுங் கொள்ளும் அறிவும், ஆற்றலும், காதலும் இலராகலான் அவர்கட்கும் நூல் உபதேசம் வேண்டமையின். மந்ததர முதலிய சத்திநிபாத முடையவராய் நூலின் நெறியான் வீடு பெற விரும்பிநிற்கும் வைநயிகராயினார்க்கே இம்மந்திர நூல் உரியதென்க.

28 - ஆம் அதிகாரம்: புவனாபதியந்திர மந்திர தந்திரம் உபாசனைகள். புவனாபதி யந்திர மந்திரங்களின் பெருமை

369. வல்லார் வகுத்த வியந்திர மந்திரம்
நல்லார் நயந்தெங்கள் நாதனருள் பெற்றார்
கல்லார் பிறபொருள் காணார் கருத்தினிற்
செல்லார் செகத்திற் சினந்தணிந்தாரே.

பாடபோதம்

1. வகுத்தவில் வியந்திரம்.
2. நாதரருள் பெற்றார் - நாதனருல் பெற்றால் - நல்லார் நயனத்தெங்கள் நாதனருள் பெற்றார் - நல்லார் நயனத்தெங்கள் குருவருள் பெற்றால் - எல்லார் நயனத்தெங் குருநாதனருள் பெற்றால் — குரு நாதனருள் பெற்றால் — நயனத்தெங் குருவருள் பெற்றால்.
3. பிறர்பொருள். கருத்தின்றி — கருத்தின்றிச்.
4. சொல்லார். செகத்தினிற் — ஜெகத்திற்.

குறிப்புரை

இம்மந்திரம்; இந்தப் புவனாபதியந்திரம், மந்திரம் ஆகியவற்றின் பெருமையை உணர்த்துகின்றது.

வல்லார் = வித்தகர் — பிரம்மவித்தையாயுள்ள இந்த மூலவித்தையை உணர்ந்தவர் என்றபடி. வகுத்தல் — வகைப் படுத்திக் கூறுதல். வகுத்த யந்திரமும், வகுத்த மந்திரமும். என்க. இயந்திரவகைகளாவன: மூலயந்திரமாகி பூசைச் சக்கரமும் எண்வினை யேவற்சக்கரங் களுமாம். மந்திரவகைகளாவன: ஸ்ரீவித்தையாகிய மூல மந்திரமும், எண்வினையே யேவல்கட்குரிய பொதுமந்திரங்களும், சிறப்பு மந்திரங்களும், பிராணப் பிரதிட்டை மந்திரமுமாம். சித்தி, புத்தி முத்தியாகிய மும்மைப்பயன் களையும் பெறுதற்கு ஏற்றவாறு வகுத்துக் கூறப்பட்டயந்திரமந்திரம் எனினும் அமையும். இயந்திரம் — புவனாபதிசக்கரம். மந்திரம் — காதி பஞ்சதசாட்சரீவித்தை. நயத்தல் — விரும்புதல். நாதன் = குருநாதன் — என்றது, நந்தியெம் பெருமானை. அருள் பெற்றார் = அருளைப் பெற்றவர் — அருளால் அடையப் பெற்றவர். பிறபொருள் — வேறாயுள்ளயந்திர மந்திர தந்திர வித்தைகளை கல்லார் = கற்கமாட்டார் — கேளார். கருத்தினிற்காணார் — மனத்தில் அவற்றைக் கருதுதலுஞ் செய்யார். காணல் = கருதுதல் — குறித்தல் (பிங்கலம்). செகத்தில் செல்லார் — உலகிற்பிறவார்.

பெற்றார் உலகிற்பிரியாப் பெருநெறி பெற்றார் உலகிற் — பிறவாப் பெரும்பயன் — திருமந்திரம். 3000 -132. சினம் — வெகுளி. பிறவிக்குக் காரணமாயுள்ள மூவகைக்குற்றங்களுள் நடுவணுள்ள சினத்தைக் கூறவே முதலிலும் முடிவிலும் உள்ளனவாகிய காமமும், மயக்கமும் கொள்ளப்படும். காமம் வெகுளி மயக்கமும் இவைகடிந்து — திருமந்திரம் 2436 — மூன்றுள குற்றம் முழுதும் நலிவன — . . . மூன்றினை நீங்கினர் நீக்கினர் — 2435. காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றின் நாமம் கெடக் கெடும் நோய். — திறக்குறள். 360. தணிதல் = தணத்தல் - நீங்குதல்.

வித்தகரால் வகுத்துக் கூறப்பட்டனவாயுள்ள இந்தப் புவனாபதியின்யந்திர மந்திர தந்திரங்களின் முறைமைகளை, விரும்பிக் குருவின் திருவருளாற் பெற்ற தவத்தினர் பிறவித்தை களைக்கல்லார். அவற்றை மனத்திலும் எண்ணார். உலகிற் பிறவார். பிறவிப் பிணிக்கு மூலமாயுள்ள முக் குற்றங்களும் கெடப்பெற்றவராவர் என்பதாம்.

புவனாபதியின் உபாசனையால் எய்தும் பயன்

370. தணிந்தவிச் சத்தியைத் சாதித்த பின்னை
அணிந்தகன் மாதி அடைவுகள் எல்லாம்
துணிந்துதன் னுள்நின்ற சோதியை நாடிப்
பணிந்திருந் தவர்க்குப் பரகதி யாமே.

பாடபேதம்

1. சத்தியை சாதித்த பின்னர்.
2. எல்லாமும் — யாவும்.
3. துணிந்து தன்னுள் நிறை — துணிந்தனுள் நின்ற — துன்ந்த தன்னுள் நின்ற — துணிந்த தன்னுள் நிறை — துணிந்தனனுள் நிறை — துணிந்தனனுள் நின்ற — துணிந்தனனுள்ளுறை — துணிந்தன்பினுள் நின்ற — துணிந்தன்பினுள் நிறை — துணிந்தன்பினுள்ளுறை நாடி.

4. தார்த்கு — தாற்குப் — தாற்கு தார்க்குப்பராபரந் தானே — பரத்தி தானே — தாமே — யாகுமே

குறிப்புரை

இம் மந்திரம்; இந்தப் புவனாபதி மந்திர யந்திர வழி பாட்டால், எய்தும் சித்தியை உணர்த்துகின்றது.

சத்தி — புவனாபதி. சாதித்தல் — மந்திர சித்தி பெறுதல் தாம் சாதித்த மந்திரத்தை நாவிடத்தே வழுத்துவராயின் — வழுத்துதல் — அபிமந்திரித்தல் — சிலப். 16 : 172. அடியார்க் உரை. சாதனம் — பயிற்சி — சித்தி தன்னுறு படைகளுஞ் சாதனம் செய்வோன் — கந்தபு. சாதனை — காரியஞ் சாதிக் கை — விடாப் பயிற்சி. தவமார் சாதனை — பெருங். மகத 4:79 அணிந்த கன்மாதி அடைவுகள் — விளங்கக் கூறப்பட்ட எண்வினையேவல் முதலான முறைமைகள். அணிதல் — அலங்கரித்தல். கன்மாதி — கன்மம் ஆதி. கன்மம் = கருமம் — அட்டகன்மங்கள் — தந்திரம். ஆதி — என்றது ஏனைய மந்திர யந்திரங்களை. இதனானே அட்டமாசித்திகளும், எண்குணங் களும் கொள்ளப்படும். அடைவு = முறை — ஒழுங்கு, துணிதல்- சிந்தித்துத் தெளிதல். தன்னுள் நின்ற சோதி — உயிருள் ஒளியாய் நிற்கும் பரம் பொருளை. நாடி — திருவடி ஞானத் தினாலே, தன்னறிவின் கண்ணே ஆராய்ந்து அறிந்து ஞானக் கண்ணினிற் சிந்தைநாடி — சிவ — போதம். சூ - 9. பணிந்து இருந்தவர்க்கு—அவ்விறை பணியாகிய அருள்நெறியில் வழுவாது அடங்கி. அம்முதல்வனோடு ஒற்றுமைப் பட்டு அத்து விதமா யிருப்பவருக்கு. பரகதி — பரமுத்தி (பரம் — மேன்மை).

முன்னர்ச் சொல்லியவாறு எண்வினையேவல்களின் மந்திர தந்திர யந்திர உபாசனைகளின் முறைகள் யாவற்றையும் குருவருளால் நன்கு தெளிந்து, இப்புவனாபதியைப் புறத்தே கும்பம், விம்பம், தம்பம், யந்திரம் ஆகியவற்றில் பூசை, செபம், ஓமம், தர்ப்பணம், அர்ச்சனை, போசனம் முதலியவற்றைப் புரச்சரண விதியின் வண்ணம் செய்து முடித்துச் சித்தி பெற்ற பின்னர், அறிவின் ஒளியா(ஞானச்சுடரா)யும் ஆனந்த மயமாயும் அகத்தே அமர்ந்திருக்கும் புவனாபதியைப் புறத்தே பூசித்தவாறு

போல அவ்வகத்தின் கண்ணும் உள்ளத்தாமரையிடம் பூசைத் தானமாகவும், உந்தியிடம் ஓமத்தானமாகவும், நெற்றி நடு புருவத்திடையாதிய விந்துவிடம் தியானத் தானமாகவும் கொண்டு, விதிப்படி வேண்டும் பொருள்கள் எல்லாவற்றையும் பாவனையாற் கற்பித்துக் கொண்டு, பூசித்தும், ஓமித்தும், தியானித்தும் சமாதியில் நிற்பவருக்குப் பரமுத்தி கிட்டும் என்பதாம்.

இறைவனை அறிவில் ஒளியாய் அறிதல் யோகபூசையும் அறிவில் ஆனந்த மயமாயுணர்தல் ஞான பூசையும் ஆகும். ககராதி மூவித்தை காமிய முத்தியே (2) என்று முதற்கண் நிறுத்த முறையானே இதுகாறும் காமியப் பயனை விரித்துக் கூறி முடித்த ஆசிரியர் திருமூலதேவ நாயனார், அடுத்து நின்ற முத்திப்பயனை எய்துவதற்குரிய உபாயத்தை ஈண்டு உபதேசித்தருளினார் என்க.

மேற்கோள் ஒப்புமைப்பகுதி

பூசிக்கும் போது புவனா பதிதன்னை
ஆசற் றகத்தினில் ஆவா கனம் பண்ணி
பேசிய பிராணப் பதிட்டையுஞ் செய்து
தேசுற் றிடவே தியானமது செய்யே.
— திருமந்திரம் (புவனாபதி சக்கரம்). 1315,

சேவிப்ப தன்முன் தேவியையுத் வாகத்தாற்
பாவித் திதய கமலம் பதிவித் தங்
கியாவர்க்கும் எட்டா இயந்திர ராசனை
நீவைத்துச் சேமி நினைந்தது தருமே. — 1318.

என்பனவும் பிறவுங் காண்க:

இதுவும் அது

371\. பரந்த பரப்பெல்லாம் பங்கய மாகக்
கரந் தெங்கும் உள்நின்ற கன்னியை நாடில்
வரந்தரும் வல்வினை யெல்லாம் ஒழியும்
உரந்தரும் மந்திரம் ஓதவல் லவர்க்கே.

பாட பேதம்

1. பங்கய மாக்க.
2. தெங்கு முன்னின்ற கண்டதோர் சத்தி — முன்னின்று கண்டதோர் சத்தி — முன்னின்று கண்டதோர் சத்தி — முன்னின்ற கண்டதோர் சத்தி நாடில்.
3. ஒழிய.
4. வரந்தரு மந்திரம். வல்லார்க்கே — வல்லாற்கே — வல்லவற்கே.

குறிப்புரை

இம் மந்திரம்; புவனாபதியின் தியானம், மந்திர செபம் ஆகியவற்றின் பயனை உணர்த்துகின்றது.

பரந்த பரப்பு எல்லாம் விரிந்த உலகம் எங்கணும் 4-வகைத் தோற்றம், 7-வகைப் பிறப்பு, 84-லட்சம் யோனி பேதங்களாயும்; ஐம்பெரும் பூதங்கள், ஞாயிறு, திங்கள், உயிர்கள் ஆகிய 8-வகைப் பொருள்களாயும், தத்துவம், புவனம், வன்னம், பதம், மந்திரம், கலை ஆகிய 6-அத்துவாக்களாயும் விரிந்துள்ள பொருள்கள். அவை: சடமும், சித்தும், சடசித்தும்; சொல்லும், பொருளுமாயுள்ள உலகங்கள் ஆகும். பங்கயம் ஆக பங்கயத்தினிடமாக. பங்கயம் = உள்ளக் கமலம் - நெஞ்சத் தாமரை. கரந்து = மறைந்து. உள் — உள்ளும். கன்னி - புவனை. நாடுதல் - அடிஞானத்தாலே ஆன்மாவின் அறிவின் கண்ணே தியானித்தல். வரம் = வேண்டும் பொருள்கள். அவை சித்தி புத்தி முத்திப் பயன்கள். வல்வினை - மூலகன்மம். எல்லாம் — என்றதனாலே ஐவகை மலங்களும் பெறப்படும். உரம் - ஞானம். உரன் என்னுந் தோட்டியால் - திருக்குறள் 24. நந்தி - உரனாகி, ஆகமம் ஓங்கி நின்றானே - திருமந்திரம் 61. உரத்தின் வளம் பெருக்கி - நன்னூல் 24. கன்னியை நாடில், அவர் வரந் தருவார். மந்திரம் ஓதவல்லார்க்கு வல்வினையெல்லாம் ஒழியும் என்க.

பல்வேறு திறங்களாக விரிந்துள்ள உயிர்ப் பொருள், உயிரில் பொருள்களாகிய எல்லாவற்றின் அகத்தும், புறத்து

மாகிய யாண்டும் மறைந்து, அவற்றையெல்லாம் அறிவித்தும், அசைவித்தும் நிற்கும் இறைவியைத் தியானித்து, வீடு பயக்கும் மெய்யுணர்விற்குச் சாதனமாயுள்ள அவருடைய மூலமந்திரமாகிய ஸ்ரீவித்தையை இடையறாமற் கணிப்பவருக்குப் புவனாபதியார் அவருக்கு வேண்டும் பொருள்கள் எல்லா வற்றையும் அருள்வார். கொடியவினைகளும் ஒழியும். வீடுபேறு முண்டாம் என்பதாம்.

இந்த இரண்டு திருமந்திரங்களினாலும், புவனாபதியின் தியானம், மூலவித்யாமந்திர செபம் ஆகியவற்றால் எய்தும் பயன்கள் கூறப்பட்டன. அவை பாச நீக்கமும், வீடுபேறும் என்க. கன்மாதி - என்றதனாலே கிரியா பூசையும், சோதி - என்றதனாலே யோக பூசையும், நாடி — என்றதனாலே ஞான பூசையுங் குறிப்பித்தவாறாம். அகப்பூசை — அந்தரி யாகம் எனவும் படும். இதனால் ஆன்மசுத்தி எய்தும்.

மேற்கோள்

ஊனக்கண் பாசம் உணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி
உராத்துனைத் தேர்த்தெனப் பாசம் ஒருவ
தண் நிழலாம் பல்விதிஎ ண்ணும் அஞ்செழுத்தே
— சிவ-போ. சூ. 9.

அஞ்செழுத்தால் உள்ளம் அரனுடைமை கண்டரனை
அஞ்செழுத்தால் அர்ச்சித் திதயத்தில்
— அஞ்செழுத்தால்

குண்டலியிற் செய்தோமம் கோதண்டஞ் சானிக்கில்
அண்டனாஞ் சேடனாம் அங்கு. — உதாரணம் 59.

அவனே தானே ஆகிய அந்நெறி
ஏகன் ஆகி இறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை இன்றே — சூ 10.

அந்தரியாகந்தன்னை முத்திசாதனமாய்
அறைந்திடுவர் அது.
தானும் ஆன்மசுத்தியாகும் — சிவ-சித்தி 301

சிந்தும் வல்வினை செல்வமும் மல்குமால்
நந்தி நாமம் நமச்சிவாயவே. — தேவாரம் 3325

பத்திக்குவித்துப் பணிந்துற்றுப் பற்றலே
— திருமந்திரம் 2506.

[பணிந்திருத்தல் — அயரா அன்பாற் பற்றி அடங்கி அத்துவிதமாயிருத்தல்]

உயிர்க்குயிராய் நிற்றல் ஒண்ஞான பூசை
உயிர்க்கொளி நோக்கல் உயர்யோக பூசை
உயிர்ப்பெறும் ஆவா கனம்புறப் பூசை — 1444.
ஆய்ந்த கிரியையோர் அருச்சனை தப்பாதோர். — 1447
உறைந்ததோர் ஒளியதாக்கி ஒடுங்கிடின் யோகபூசை
— ஞானபூசாவிதி 14

என்னை அறிவென்றான் என்னறிவில் ஆனந்தந் தன்னைச் சிவமென்றான். சிவபோகசாரம். 26.

என்பனவும் ஈண்டு நோக்கத் தக்கன.

புவனாபதி சக்கரம்

372. ஓதிய சக்கரத் துண்ணின்ற சத்தியைச்
சோதியென் றுள்ளே தொழுதுடன் நோக்கவே
ஆதியும் அந்தமும் ஆய்நின்ற சோதியைப்
பூதமைந் தாகப் புனைந்து வைத்தாரே.

பாட பேதம்

1. துள் நின்ற — துண்ணிறை — துள் நிறை சத்தியை — சத்தியே.
2. தொழுதிட நோக்கி — தொழுதுடனோக்கினால் — தொழுதுடனோக்கி — தொழுதிடனோக்கி — தொழுதிடனோக்கினால்.
3. ஆய் நிறை. சோதியை — சோதியே.
4. வைத்தனரே.

குறிப்புரை

இம்மந்திரம்; புவனாபதி சக்கரத்தின் சொரூபத்தினை உணர்த்துகின்றது.

சக்கரம்-6 ஆதாரச் சக்கரங்களும், அவற்றுக்கு அப்பாற்பட்ட துவாத சாந்தத் தலத்துள்ள சக்கரமும். ஆதி = முதல் — தோற்றம் — அந்தம் = முடிவு — ஒடுக்கம். இனி, மூலாதாரமும், துவாதசாந்தமும் எனினுமாம். புனைதல் = அமைத்தல் — வரைதல். படை பண்ணிப் புனையவும் — கலித்தொகை 17. புனையா ஓவியங் கடுப்ப — நெடுநல். 147.

எல்லாவுலகங்களின் தோற்றத்துக்கும், ஒடுக்கத்துக்கும் காரணமாய் அவையெல்லாவற்றின்கண்ணும், அகத்தேயுள்ள ஆதாரச் சக்கரங்களிலும், யாண்டும் நீக்கமற நிறைந்துள்ள இறைவனைப் புறத்தேயுங்கண்டு வணங்கிப் போற்றி உய்யும் வண்ணம் நிலம் முதலான ஐம்பூதங்களின் சொரூபமாயுள்ள இந்தப் புவனாபதி சக்கரத்தை வரைந்து அமைத்தனர் என்பதாம்.

புவனங்கள் யாவும் ஐம்பூதங்களின் மயக்கமாகலான். அப்பெயரினைப் பெற்று நிற்கும் இச்சக்கரமும் அவ்வியல்பால் நிற்கும் முறைமையை உணர்க. இதனால் புவனாபதி சக்கரம் என்னும் பெயர்க் காரணம் உணர்த்தியவாறு, எனவே உலகின் உருவமாய் உள்ளது இச்சக்கரம் என்பது புலனாகும்.

(சக்கரம் = வட்டம் — இயந்திரம் — உலகம்)

மேற்கோள் — ஒப்புமைப் பகுதி

நின்றது சக்கரம் நீளும் புவியெல்லாம்—திருமந்திரம். 948.
மேல்வரு சக்கர மாய் வரும் ஞாலமே. 1258.
ஞாலம தாக விரிந்தது சக்கரம். 1259.
ஆதியும் அந்தமும் ஆகிநின் றாளே, 1218.
இரண்டோ டிரண்டு மூவிரண்டை யிரண்டா றிரண்டு
மீமிசையெண்

இரண்டோ ் டிரண்டு கொண்டிருந்த இதழ்ப்பங்கயங்கள்
கடந்து போய்
இருந்த குளத்தின் மேலோரா யிரந்தோட்டமல கமலமிசை
இருந்த சோதி தனைக்கண்டெம் எண்ணம் முடிப்போ
மெனவெழுந்து

— பிரபுலிங்க லீலை. 6 - விமலை கதி. 23

[(1) மூலாதாரச் சக்கரத் தாமரையிதழ் — 4 (2) சுவா திட்டானம் —6. (3) மணிபூரகம் —10. (4) அநாகதம் —12. (5) விசுத்தி—16. (6) ஆக்ஞை—2. (7) துவாதசாந்தப் பெருவெளி (பிரமரந்திரம்)—1000 இதழ்கள்]

நாலும் இருமூன்றும் ஈரைந்தும் ஈராறும்
கோலி மேல் நின்ற குறிகள் பதினாறும்
மூலங்கண் டாங்கே முடிந்த முதலிரண்டும்
காலங்கண் டானடி காணலு மாமே

— திருமந்திரம். 1704.

என்பனவும், பிறவுங் காண்க.

29. ஆம் அதிகாரம். பயன், புவனாபதி மந்திரமும் பயனும்.

373. வைத்தார் புவனை திரிபுரை மந்திரம்
ஒத்தபனிரண்டுடன் மூன்றெழுத் தாகும்.
முத்தி முதலும் முடிவிலா வானந்தம்
பத்தித் தலையிற் பன்னிரண்டாதியே.

பாடபேதம்

1. புவனை திருபுரை மந்திரம் — புவனை திருமூலர் மந்திரம் — புவனை திருமூலமந்திரம்.
2. ஒத்த பதினாலுடன் மூன்றெழுத்தாகும் — ஒத்தபதினாலுடன் மூன்றெழுத்தாக — ஒத்தபதினாறுடன் மூன்றெழுத்தாகும்.
3. முத்த முதலு — முற்றி முதலு. முடிவுமில்லானந்தம் முடிவுமிலாவானந்தம்

4. பத்தித்தலைதன்னில் பன்னிரண்டாதியே.
பத்தித் தலைதன்னில் பண்ணிய விதியே. — பற்றிற் றலை தன்னிற் பன்னிரண்டாதியே.

முடிவு:- சுவடியெண்:- 10 புவநேசுவர்யைநம — புவநாபதயேநம.

-. 3. கடபட [கட்சபுடம்] முடிந்தது. சிவ குருவே துணை.

-. 3. 16.க க்ஷபுடமுடிந்தது. திருமூலதேவர் திருவடிவாழ்க

குறிப்புரை

இம்மந்திரம் புவனாபதி மந்திரத்தினையும், அதன்பயனையும் உணர்த்துகின்றது.

புவனைதிரிபுரை — புவனையாகியதிரிபுரை. புவனை — எல்லாப்புவனங் கட்கும் இறைவியாயுள்ளவர். திரிபுரை — மூன்றுபுரங்கட்கும் முதல்வி. திரிபுரம் — முப்புரம் — திரி — மூன்று. புரம் = தலைநகர் — உலகம் — புவனம். 3 — புரங்களாவன: (1) சித்தமாயை (2) அசுத்தமாயை (3) சுத்தா சுத்த (மிசிர) மாயை ஆகியவற்றின் காரியமாயுள்ள மூன்றுலங்கள். முப்புரமாவது மும்மல காரியம் — திருமந்திரம். 843. புவனாபதி மந்திரத்தில் உள்ள 3 — கண்டங்களும் இவற்றை உணர்த்துவனவாகும். ஒத்தல் — பொருந்துதல் — ஒன்றாதல்; புவனங்கள் மூன்றினுக்கும் பொருளாய் நின்ற திக்கன்காண் — தேவாரம். 7105. மும்மைப்புவனங்களின் மிக்கதன்3றயம் மூதூர் பெரியபுராணம். 979 என்பன காண்க. புவனங்களின் தொகை 7 8 14-21-224 முதலியன வாகச் சொல்லப் படுவனவெல்லாம் இந்த மூன்றனுள் அடங்கு வனவாகும். முடிவிலா ஆனந்தமாகிய முத்திக்கும் முதல் ஆம் என்க. முடிவிலா ஆனந்த முத்தி - பரமுத்தி. ஏனைப்பதமுத்திகளான் வரும் இன்பங்கள் முடிவுடையன வாகலான் இது முடிவிலாவானந்தம் எனப்பட்டது. பிறிதின் இயைபு நீக்கியவிசேடணம் முதல் = மூலம் - காரணம் - முதற்காரணம் - மூலகாரணம். முடிவிலா ஆனந்த முத்திக்கும் முதல் எனவே முடிவுள்ள

முத்திகளான ஏனைப் பதமுத்திகளுக்கும், சித்திகளுக்கும், புத்திகளுக்கும் இம்மந்திரமே மூலகாரணமாகும் என்பது பெறப்படும். ஆதலின் பிரித்துக் கூட்டியுரைக்கப்பட்ட உம்மை யானது, உயர்வு சிறப்புடன் எச்சவும்மையுமாம். முத்தி முதல் - முத்திக்கு முதல்; நான்காம் வேற்றுமைத் தொகை. முதல் ஆம் என ஆக்கம் வருவித்துமுடிக்க. பத்தித்தலை = தலையன்பு - அயராவன்பு. எழுத்து - மந்திரவித்தெழுத்துக்கள் பன்னிரண்டு எழுத்தாவன: (1) ககராதி யோர் 4-ம்; (2) அகராதியோர் 5-ம்; (3) சகராதியோர் 3-ம் ஆகும் அவை; (1) க, ஏ, ஈ, ல, (2) ஹ, ஸ, க, ஹ, ல; (3) ஸ, க, ல. என்பன ஒத்த மூன்று எழுத்து ஒன்றாய், மூன்று கண்டங்களின் முடிவிலும் நிற்கும் எழுத்து-அது ஹ்ரீம் என்பது. ஆகமூலமந்திரத்துள்ள எழுத்துக்களின் தொகை 15 ஆகலான் இம்மந்திரம் பஞ்சதசாட்சரீ எனப்படும். (பஞ்சதசம் 15. அட்சரம் - எழுத்து) பன்னி ரண்டு, ஆதி-ககராதி.

இவ்வாறாக இந்தப் புவனாபதியின் மந்திரமானது 4-ம் 5-ம், 3-ம் ஆகிய பீசங்களைப் பெற்று நிற்கும் 3- கண்டங்களையும் 12- எழுத்துக்களையும் உடையதாய்நிற்க அம் மூன்று கண்டங் களின் முடிவினும் புவனையின் மந்திர மூல எழுத்தாகிய ஏகாட்சரம் எனப்படும் சத்திப் பிரணவமானது பொருந்திப் 15_ பீசங்கள் அமையப்பெற்று இருத்தலினாலே இவற்றை விளக்க வேண்டியும், ஒத்த மூன்றெழுத்தாகிய ஏகாட்சரத்தின் தனிப் பெருஞ் சிறப்பினை உணர்த்த வேண்டியும் இடையே உடன் என்னும் மூன்றாவதன் உருபிடைச் சொல்லினைப் புணர்த்திப் பிரித்து ஓதினார். மூலமந்திரமாகலான் உள்ளவாறே எழுத்துக் களைக் கூறாமல், முதலிற் கூறியவாறே அவற்றின் தொகையை மட்டும் முடிவினுங் கூறினார்.

இம்மூலமந்திரமானது முதல் திருமந்திரத்திலேயே சொல்லப் பட்டதேனும் அதன் கண்ணுள்ள 3- கண்டங்களின் முடிவிலும் புவனையின் பீசம் அமைந்திருத்தல் ஆண்டுப் பெறப் படாமையின் அதனைப் புலப்படுத்தவேண்டி, முடிந்தது முடித்தல் என்னுந் தந்திர உத்திபற்றி ஈண்டு இம்மந்திர முடிவிற் கூறியருளினார் என்க. முடிந்தது முடித்தல் - முன்னர் வெவ்வேறாக முடிந்ததைப் புலப்பட வேண்டிப் பின்னர்த் தொகுத்து முடித்தல் மற்றும்

உள்ளன வாகிய இம் மூலமந்திரத்தின் இயல்புகளையெல்லாம் முதல் திருமந்திரச் செய்யுளின் குறிப்புரையில் கண்டு கொள்க.

இந்தப் புவனாபதியின் மூலமந்திரமானது. 15-பீசங்களை உடையது. இஃது இதுகாறும் விரித்துச் சொல்லப்பட்டன வாயுள்ள கன்மசித்திகளைத் தருவதுடன், யோக சித்திகளைத் அயராவன்பிற் கணிப்பின் ஞானசித்தியாகிய பரமுத்தியையும் அளிக்கும் என்பதாம்.

மேற்கோள் - ஒப்புமைப்பகுதி.

பாதி பராபரை பண்ணிரண் டாதியே
— திருமந்திரம் 1124.

ஏனைப் பதினைந்தும் விந்துவும் நாதமும் — 988.

ககராதி மூவித்தை காமிய முத்தியே — 2.

மாலைப் பஞ்ச தசாட்சரி பூசையே
— திருமூலர்பூசாவிதி. 41 : 1

வட்ட மென்முலை யாள் உமை பங்கனார்
எட்டும் ஒன்றும் இரண்டுமூன் றாயினார்
— தேவாரம். 5650.

அஞ்சும் அஞ்சுமோர் ஓரஞ்சும் ஆயவன் — 6106

முத்தி முழுமுதல் உத்திரகோச மங்கை வள்ளல்
திருவாசகம் — 293

உலப்பிலா ஆனந்தமாய தேன் — 544

அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன் — 395

முடிவிலா இன்பமான - அன்பினை
— பெரியபுராணம். 751

என்பனவும், பிறவுங் காண்க.

இச்செய்யுளின் முடிவில் நிற்கும் ஆதி என்னுஞ் சொல் லானது, ககராதி - என்னும் அடைமொழி பெற்று நின்ற இந்நூல் முதற் செய்யுளின் முதற் சொல்லோடு அந்தாதி யாய் மண்டலித்துச் சொல்லானும், பொருளானும் ஒன்றி

முடிந்து நிற்கும் முறைமையினை உணர்க. இவ்வாறே திருமூலர் உபதேசத் திருமந்திரம் முப்பதிலுங் கண்டு கொள்க.

3-ஆம் தந்திரம் பொதுவியல் முற்றிற்று.

ஆகமொத்தம்: தந்திரம் - 3. இயல் - 3. அதிகாரம் - 29. செய்யுள் - 373. கன்மங்களின் தொகை - 8. வகை - 45 விரி - 323. மூலவித்தையுள்பட மந்திரங்களின் தொகை - 40.

திருமூல தேவநாயனார் திருவாய் மலர்ந்தருளிய தந்திர
கலைப் பகுதியாகிய திருமந்திர மாலை மூந்நூறு:
மூலமும் குறிப்புரையும்
முற்றுப் பெற்றன.

செய்யுள் முதற் குறிப்பகராதி

அ

அகராத்திருமுடி 256
அகாரமாம் 205
அங்கெண்மராவர் 872
அஞ்சாமற்சத்துரு 371
அஞ்சும்பதினாறும் 732
அஞ்செட்டு 683
அடிநிலம் 887
அடுத்தவியத்திரத் 266
அடைந்தது சுக்கிலம் 342
அடைவிலே 253
அடைவிலே மோகனம் 312
அதுவாங்கருத்தாகும் 898
அதுவாந்திறமை 316
அமர்ந்த ஐம்பத்தஞ்சு 427
அய்யாறுபன்னஞ் 726
அய்ந்நான்கு 261
அறிகின்ற 184
அறிந்ததோர் மந்திரம் 600
அறிந்தவியந்திரம் 348
அறுபதுதேர்படு 430
அறுபதெழுப 767
அறுபத்துமூன்றுடன் 773
அறையிலேமந்திரம் 366
அனங்கமாலினி 874
அனைத்துநூற்றாறும் 492

ஆ

ஆக்கியமந்திரம் 780
ஆகாகுன்மம் 456
ஆகியதெண்பதும் 331
ஆகும்அறை 224
ஆசனந்தாமரை 869
ஆடாநரிவாய்க் 389
ஆதியாய் 216
ஆமானை 644
ஆலையிற்சாறு 681
ஆற்றும்சத்துரு 592
ஆறாயசேனை 487
ஆறுகுளநீர் 333
ஆறுநீர்போக 505
ஆறுநீர்வற் 697
ஆறும்பதினேழும் 730
ஆறும்வலக்கை 260
ஆறுமிருகா 583
ஆறெட்டிருபத்தே 694
ஆறெட்டுத்தொண்ணூ 452
ஆறெட்டுப்பன்னேழு 822
ஆறேழுபத்தஞ் 735
ஆனதியானம் 571
ஆனது 214
ஆனைஅனந்தன் 239

இ

இட்டதுருவத் 222
இட்டபதினாறில் 181
இடமதறிந்தவ் 500
இடுவதுமுப்பத்தைஞ் 460
இடுவதுருவத் 219
இடுவதுயந்திரம் 358
இடும்பெயர் 177
இடுவதுஎழுபத்தைஞ் 709
இடுவதுசேனை 804
இதுவாமியந்திரம் 609
இயந்திரந்தன்னை 341
இயம்பிருபத்தைஞ் 676
இயம்பும்உலகம் 303
இரட்டித்தவைம்பது 429
இரண்டாறு 631
இரண்டுதாரம் 713
இரண்டெழு 746
இராவெட்டு 844
இருக்குமுலையெழா 344

இருகைவசியமே 863
இருபத்துநால் 890
இருக்குமிராசா 552
இருந்தமூலாதாரத் 263
இருப்பத்து 832
இருப்பது ஈசானம் 846
இரும்புவேகாதே 353
இலக்கத்துட் 210
இலக்கம்உலக 620
இலக்கம்பதினஞ் 762
இலக்கம்பதினேழ் 465
இலக்கிந்திரன் 235
இலக்கம்பதினைஞ்சு 441
இலக்மியானை 386
இறுதியாம் 211
இனியது கேளாய் 830
இனிய பதினெட் 542
இனியிருகையில் 876

உ

உக்கரித்தபித்தம் 459
உச்சாடனஞ்சூலை 448
உடனைம்பத்தெட்டும் 376
உடையுமரக்கலம் 695
உணர்ந்துகொண்டேன் 884
உருவதுவாக 895
உரைக்கில்வசியம் 853
உரைத்தஉப்புண்டாம் 692
உரைத்தபரப்பெலாம் 925
உரைத்தபிராமி 233
உரைத்தஎருமை 582
உரைப்பது 248
உரைப்பெண்ணான்கு 439
உரைப்பேன்உலகர் 304
உரைப்பேன்கருணை 540
உரைப்போம் 671
உலகிற்சலபேதனத் 700
உற்றவனம் 789
உறுவதுநூற்றிரண் 370

எ

எட்டாம்பகை 828
எட்டியசொல்வெல் 626
எட்டியவெண்பத் 328
எட்டிலக்க 208
எட்டுக்குணமும் 893
எட்டுஞ்சலவா 596
எட்டுதிசையும் 269
எட்டுநாற்பத் 774
எட்டும்பதினாறும் 782
எண்ணியமந்திரம் 397
எண்பத்துமூன்றும் 740
எண்வகையாக 413
எழுபத்தெட்டெண்பத்தேழ் 416
எழுபத்துநாலும் 628
எழுபதும்முப்பத்தைஞ் 557
என்பதுமுப்பத்தைஞ் 373
என்றுதனதானியம் 323
என்னுந்தொண்ணூற் 698
என்னும்தொண்ணூற்றாறும் 321
என்னும்புருடர் 708
என்னுமதுமாதந் 630
என்னேயுலக 751

ஏ

ஏகுவதெண்பத்தைஞ் 490
ஏடணைதன்னில் 619
ஏழஞ்சறுபத் 388
ஏழிரண்டு 801
ஏற்றதுலோக 274

ஐ

ஐந்துகரத்தனை 1
ஐம்பத்திரண்டு 793
ஐம்பத்துமூன்றும் 516

ஒ

ஒத்தமுலை 760
ஒருமந்திரந்தனை 653
ஒருமந்திரந்தன்னை 484
ஒளிபெறுசத்தி 405
ஒன்பதிற்றாறும் 330
ஒன்றியநூற்றுநால் 463
ஒன்றியமந்திரம் 551
ஒன்றுமரமறா 361
ஒன்றுமாரோக்கியம் 729

ஓ

ஓங்காரஞ்சத்துரு 295
ஓடுமே யானை 513
ஓதிடுபேதனம் 811
ஓதியசக்கரத் 934
ஓதியமந்திரம்உள்ளே 498
ஓதிய மந்திரம் ஒக்க 446

க

ககராதி 86
கட்டுவதன்முன் 227
கருதவல்லார்க்கு 408
கருதார் 191
கருதியமந்திரம் 689
கருத்துந்திருமேனி 658
கலமாயசத்துருத் 378
கறுப்புற்ற செம்மேனி 856

கா

காணாதிருபத்தேழ் 471
காணுந்திருமேனி 291
காணுமிருப 673
காரணவசியம் 183
காரணிபேரொடு 922

கி

கிடாயுமரமும் 368
கிடாய்வெல்ல 646

கீ

கீர் திரை 190

கு

குலையதிற் 262
குறுகறுபத்தைந்தும் 716

கூ

கூடும் பதினெட்டும் 546
கூறுகின்றேன் 175
கூறுநூற்றொன்றும் 691

கெ

கெடும்லச்சை 741
கெடுமேபசுப் 795

கே

கேட்பதுசத்தி 878
கேதுடன் 243
கேத்திரத்தின் 252

கொ

கொடிபுகை 241
கொடுப்பதறை 218
கொண்டகீற்று 176
கொண்டது மாதர் 279
கொண்ட தோர்மந்திரம் 509
கொண்ட பின் 654
கொள்ளுமிடக் கையிற் 906
கொள்ளுமிம் மந்திரம் 403
கொள்ளும் வசியமும் 849
கொள்ளுவார் 920

கோ

கோயிலிலாகும் 614
கோயிலிலிட்டு 759
கோலமுடைய 881

ச

சக்கரந்தன்னை 611
சங்கையெழியத் 865
சத்தியின் மூலம் 908
சத்துருமோகனஞ் 307
சனியாகும் ஓரை 406
சனிவடகும்பம் 264

சா

சாமானியந்தன்னை 536
சார்ந்தவிலக்கமும் 852
சாற்றியவக்கர 301
சாற்றிற்பதினெட்டு 791
சாற்றும் விடநாசம் 833
சாற்றுவதெண்பது 721

சு

சுகம் யோக 494
சுருங்கு பெருந்தாது 786

சூ

சூழ்ந்த இடைவெளி 228
சூழ்ந்தது மந்திரஞ் 477

செ

செகத் தாலைச் 678
செப்பிய நூற்றொன்றும் 462

சே

சேருமே மந்திரம் 606
சேரும் பிரணவம் 232

சொ

சொல்லிய 180
சொல்லிய மந்திரம் 338, 524
சொல்லிற் பதினெட்டும் 723
சொல்லுந் திசையும் 170
சொல்லுமது 623
சொல்லுமைம்பத் 414
சொன்னவ சூரி 450

த

தட்டுற நாலாறு 737
தணிந்த விச்சத்தியை 929
தம்பனம் சாற்றில் 318
தரிக்கும் புனங்களிற் 398
தரிப்பது மாசாத்தான் 349
தருகார் 188
தருவர வக்கர 910
தனிவட கும்பம் 251
தன்னும் சகாரம் 264

தா

தாமரையாகும் 870
தானத்திருந்து 612
தானாம்பதினைஞ் 803
தானியமெத்தத் 674, 690
தானே அறுபதும் 579
தானே சீர் கெடும் 748
தானேழ்பத்திரண்டும் 418
தான்கிடாயேறு 249

தி

தியானிக்கும் திக்கு 313
திரண்டவிலக்கங்கள் 422
திரண்டெண்பத்தொன்றும் 489
திறமாகுநேரம் 315

தீ

தீண்டாதமந்திரம் 816
தீருமன்பத்தாறும் 454
தீர்கிரி 192

து

துலங்கும் புலி 512
துளங்குநிலத் 320
துற்றயிராவதம் 238
தெருளாதிருக்க 769
தெளியிலச்சை 719
தொடர்பித்தரோகம் 491

ந

நன்மையுண்டாம் 919
நாடியபின் 555
நாடிய மந்திரம் 426
நாடும் உலக 634
நாடுஞ்செட்டுண்டாம் 711
நாடும்தனதானியம் 680
நாடும்திசை 666
நாட்டியதொன்றை 382
நாட்டுக்கு நன்மையாம் 714
நாதனருளினன் 817
நாலஞ்சிருபத் 738
நாலெட்டு முப்பத் 771
நாற்பதினாலும் 392
நாற்பது தன்னுடன் 749
நாற்பதும் நாற்பத் 343
நான்கெட்டும் 360
நான்முகன் 892

நி

நில்லாப்பயிரில் 514
நிறைந்தது 258
நிற்கும்இலக்க 225
நின்றலோக 641
நின்றவிடம்யோக 517

நூ

நூலஞ்சுபேதனம் 913
நூற்றஞ்சறுபதும் 545
ற்றாறுமுப்பத்து நாலும் 376
நூற்றாறிருபத்து 706

நே

நேராதறுபதும் 743

நோ

நோக்கியதம்பனம் 409
நோய்தருபல் 470

ப

பகர்வது நூற்றாறும் 501
பகையிலராகப் 825
படிபதினாறறை 890
படியிற்பதித்தது 757
படைத்தலோகா 559
பட்டவாறெல்லாம் 819
பட்டவிம்மந்திரம் 326
பதிப்பதுமாதர் 480
பதினைஞ்சிருபத் 733
பதினாறும் முந்நூறும் 781
பயங்கத்து 867
பயன்றானறியலாம் 917
பரந்தபரப்பெல்லாம் 931
பரிகளும்ஓடா 390
பரிவார் 193
பரிவுறும் 196
பற்றியமந்திரம் 799

பா

பாடுவதேவது 369
பாடெழுபத்து 763
பாட்டுண்டெழுபதும் 717
பாம்புவரும் 580
பார்க்கும்பிராணப் 299
பார்த்திடுமந்திரம் 567

பி

பிடிக்கும் விருகங்கள் 385
பிறந்தவழிநடை 437
பிறிந்துபிணங்க 784
பின்னையுலகம் 668
பீர்விரை 187

பு

புகழ்ந்தன்பத்தாறும் 594
புக்கவாறெல்லாம் 342
புதைக்கின்றசுக்கிலம் 351
புதைத்த நிலத்தம்பம் 327
புதைத்தபின் சத்துரு 485
புலிக்குமணியில் 525
புழுவும் புகையும் 526
பூசைபலியும் 510
பெருக்கும் பதினைந்தும் 765

பே

பேசியநேரம் 293
பேசிய மந்திரம் 435
பேசும் ஒருநூற் 589
பொருந்து தர்ப்பணம் 538
பொன்னொத்தமேனி 896
போற்றிய வைம்பதும் 503
போற்றுமையைந்தும் 305
போற்றும் பதிட்டை 904

ம

மந்திரங்கொண்டு 915
மந்திரஞ்சாற்றி 809
மந்திரம்ஒன்றாம் 289
மந்திரம்வேறு 575
மந்திரம் வைத்தபின் 563
மரத்திலே வைத்த 705
மற்றப் பதினேழும் 824

மா

மாதின் பெயரால் 270
மாரணஞ்சத்துரு 821
மாரணமீறாய் 850

மீ

மீனென்றுரைக்கும் 245

மு

முடித்தவிம் 168
முடியவே 745
முத்துஞ்சொரிமழை 339
முயலும்பகைவர் 590
முறியவிழுவது 665
முறிவது 656
முற்றியவாறு 664

மூ

மூன்றெட்டும் 806

மெ

மெழுகிட்டபின்னை 569

மொ

மொழியும் பதினாறும் 467

வ

வகையாகும் வசியம 912
வகையொன்றி நின்ற 334
வசியமாச்சத்துரு 280
வண்ணம் கருணைக் 855
வந்தவைம்பத்தொன் 587
வயிற்றுநோய் 473
வருமேநினைத்தன 554
வரைபார் 186
வல்லார் வகுத்த 927
வல்லூறு 246
வளநூற் 577

வா

வாங்குமில் 257
வாத்துவந் 172
வாயுவின்மேலே 537
வாருமுச்சாடனம் 411

வி

விளம்புவதைம்பதும் 643

வீ

வீரன்றன் கோயிலில் 615
வீர்பிரி 194

வெ

வெட்டுங்கிடாயுடன் 363
வெல்லும்படைக்கு 625
வெளிப்பட்டமேனி 819

வே

வேகாமலக்கினியும் 354
வேண்டியமந்திரம் 703

வை

வைக்கும் பட்டடை 383
வைத்தபின் 230
வைத்தார் எழுத்தும் 273
வைத்தார் புவனை 936
வைத்துரைத்தான் 254
வைப்பாகு மக்கினித் 359
வையா உச்சாடனம் 527

—— o ——